[illegible]

[illegible]

ரோமர், 2

[illegible]

[illegible]

ரோமர், 2

டேவிட் ரோப்பர்

13. பெருந்துக்கத்தில் இருந்து வெற்றிக்கு (3:21-24அ)
14. "மூன்று சிறிய வார்த்தைகள்" (3:24ஆ-26)
15. "தயவுசெய்து என்னைக் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்யள்!" (3:27-31)
16. தேவனுடைய திகைப்புக்குரிய "கணக்குவைக்கும் ஏற்பாடுகள்" (4:1-3, 5)
17. நீதிமானாக்கப்படுதலின் இரண்டு முறைமைகள் (4:4-8)
18. "தகப்பனாகிய ஆபிரகாம்" (4:9-17அ)
19. ஆபிரகாமின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல் (4:17ஆ-25)
20. உங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்க மூன்று சத்தியங்கள் (5:1-8)
21. கடந்த, நிகழ், மற்றும் எதிர் காலத்தில் இரட்சிப்பு (5:6-11)
22. ஒரே மனுஷனாலே" (5:12-21க்கு ஒரு முன்னுரை)
23. ரோமர் 5:12-17ஐப் பற்றிய ஓர படிப்பு: இரண்டு "ஆதாம்கள்"
24. தெளிவற்ற வேதவசனமும் "தெளிவான" சத்தியங்களும் (ரோமர் 5:18-21 மற்றும் 5:12-21ன் முடிவுரை பற்றிய படிப்பு)
25. "தேவனுடைய இரங்கல் பத்தி" (6:1-4)
26. கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனை வாழ்வது எவ்வாறு ? (6:5-14)
படிப்பு உதவிகள்

13

பெருந்துக்கத்தில் இருந்து வெற்றிக்கு

[3:21-24அ]

ரோமருக்கு எழுதிய நிருபம், 1 என்ற நமது முந்திய புத்தகத்தில் உள்ள இந்த நிருபத்திற்கான நமது வரைகுறிப்பில், "உபதேசரீதியானவை" என்ற தலைப்பின்கீழ், நாம் "ஆக்கினைத் தீர்ப்பு," "நீதிமானாக்கப்படுதல்," "பரிசுத்தமாக்கப்படுதல்," மற்றும் "மகிமைப்படுத்தப்படுதல்" என்பவற்றைக் கொண்டிருக்கிறோம். R. C. பெல் என்பவர், "கிறிஸ்தவம் என்பதை ஒரு பேராலயம் என்று நினைத்தால், ஆக்கினைத்தீர்ப்பு (1:18-3:20) என்பது அந்தக் கட்டிடம் உள்ள இடத்தைச் சுத்தம் செய்தல் என்பதாக உள்ளது; நீதி மானாக்கப்படுதல் (3:21-5[:21]) என்பது அந்தக் கட்டிடத்திற்குத் தேவையான ஆழமான மற்றும் திடமான அஸ்திபாரம் என்பதாக உள்ளது; பரிசுத்தமாக்கப் படுதல் (6, 7 அதிகாரங்கள்) என்பது அந்தக் கட்டிடத்தின் மேல்கட்டுமானமாக உள்ளது; மற்றும் மகிமைப்படுத்தப்படுதல் (8ம் அதிகாரம்) என்பது அந்தக் கட்டிடத்தின் கோபுரமாக உள்ளது" என்று எழுதினார்.[1] நாம் கட்டிடத்திற்கான இடத்தைச் சுத்தம் செய்து ("ஆக்கினைத்தீர்ப்பு") அஸ்திபாரத்தை ("நீதிமானாக்கப்படுதல்") இடத் தொடங்கத் தயாராயிருக்கிறோம்.

1:18-3:20ல், பவுல் "யூதர் கிரேக்கர் யாவரும் பாவத்திற்குட்பட்டவர்கள்," அதாவது, "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்று குற்றம்சுமத்தியிருந்தார் (3:9, 10). இந்த இடம் வரையிலும், இது இருள் மற்றும் துயரத்தின் வண்ணங்கள் மேலோங்கியுள்ள, மனஅழுத்தம் தரும் சித்தரிப்பாக இருந்துள்ளது. பின்பு, 3:21ல், நாம் "இப்படியிருக்க ..." என்ற வார்த்தைகளுக்கு வருகிறோம்.[2] நமது படிப்பானது துன்பத்தில் இருந்து வெற்றியை நோக்கி நகருகிறது.[3]

"நீதிமானாக்கப்படுதல்" மீதான பகுதி இரண்டரை அதிகாரங்களில் கூறி முடிக்கப்படுகிறது (3:21-5:21). இந்தப் பாடமும் இதற்கு அடுத்த பாடமும் 3:21-26ஐ - இது கிரேக்க மொழியில் ஒருநீளமான வாக்கியமாகும்[4] - ஆய்வுசெய்யும். லியோன் மோரிஸ் என்பவர் இவ்வசனப்பகுதியை, "எழுதப்பட்டவற்றிலேயே சாத்தியக்கூறான வகையில் மிகவும் முக்கியமான ஒற்றைப்பத்தி" என்றழைத்தார்.[5] விளக்கவுரையாளர் ஒருவர், "வேதாகமம் பலவசனங்களை ஒன்றுகூட்டி, மிகப்பல ... இறையியல் கருத்துக்களை ஒன்றுகூட்டிக் கொண்டுவருதல் என்பது மிகவும் அரிதாகவே உள்ளது" என்று எழுதினார்,[6] மற்றும் இன்னொருவர், 3:21-26ல், நாம் "கிறிஸ்தவ விசுவாசத்தின் சொற்பொருள் விளக்கத்தை" கண்டறிகிறோம் என்று கருத்துத் தெரிவித்தார்.[7]

இவ்வசனங்களைப் புரிந்துகொள்வதில் நமக்கு உதவுவதற்கு, நாம்

திறவுகோல் சொற்றொடர்கள் சிலவற்றைப் படிப்போம். “நீதி” என்பது ஒரு மையச் சொல்விளக்கமாக உள்ளது (வசனங்கள் 21, 22, 25, 26). நமது தற்போதய பாடம் அந்த வார்த்தையைச் சுற்றிச் சுழலுகிறது.

நீதி அறிவிக்கப்பட்டது (3:21-23)

1:16, 17ல், பவுல் தேவனுடைய நீதி மனிதகுலம் தேவனுடன் சரியானதொரு உறவுமுறையை மகிழ்வுடன் அனுபவிப்பதற்கு அவரது கிருபையான ஏற்பாடு - என்ற ஆய்வுக்கருத்தை அறிமுகப்படுத்தினார். பவுல் அந்தச் சிந்தனையை உடனடியாக விரித்துரைப்பதற்கு மாறாக, மனிதகுலத்திற்குத் தேவனுடைய நீதி *தேவை* என்ற நீளமான கலந்துரையாடலைக் கொண்டு தமக்குத்தாமே இடையிட்டார். இருப்பினும், கடைசியில், அவர் தமது மூல கலந்துரையாடலுக்குத் திரும்பத் தயாராயிருந்தார்: “இப்படியிருக்க, ... தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது ...” (3:21).[8]

இவ்விதமாக இந்த நிருபத்தினூடான நமது பயணம், தூரத்தில் உள்ள ஒரு நகரத்தைச் சுட்டிக்காண்பித்து, “*அங்கு* நான் உங்களை அழைத்துச் செல்வேன்” என்று கூறும் வழிகாட்டியைப் பின்பற்றுதலுக்கு ஒப்பிடப்படலாம். பின்பு அவர், நமது அடைவிடம் சென்று சேர்வதில் நாம் சோர்வடையும் வரையிலும், நம்மை ஒரு காட்டினூடாகவும், அபாயம் நிறைந்த பள்ளத்தாக்குகளினூடாகவும் வழிநடத்திச் செல்லுகிறார். சற்றுகாலத்திற்குப் பின்பு, நாம் ஒரு இலைகள் அடர்ந்த இடத்தினூடே வெளிவருகிறோம் - அங்கே, நமது கண்களுக்கு முன்பாக, அந்த நகரம் தனது சகலமகிமையிலும் ஜொலிக்கிறது! அதுபோலவே, பவுல் கடைசியாக நம்மை தேவனுடைய நீதி என்ற ஆச்சரியமான ஆய்வுக்கருத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தார்.

அவரது நீதி புகழ்ந்துரைக்கப்பட்டது (வசனம் 21)

நமது வேதவசனப்பகுதிகள் முதல் மூன்று வசனங்களில் இருந்து, நாம் தேவனுடைய நீதிபற்றிப் பலசத்தியங்களைக் கற்றுக்கொள்கிறோம். இந்த நீதி அறியச்செய்யப்பட்டுள்ளது என்பது ஒரு சத்தியமாகும். நாம், “இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல், தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது” என்று வாசிக்கிறோம் (வசனம் 21). இவ்வசனத்தை நாம் “செரிக்கக்கூடிய, கடிக்கும் அளவுக்கான துண்டுகளாக” உடைக்கும்படிக்கு செறிவான அர்த்தங்கள் பொதியப்பட்டதாக உள்ளது.

21ம் வசனம், “இப்படியிருக்க நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி ...” என்று தொடங்குகிறது. NASB வேதாகமத்தில் இங்கு நியாயப்பிரமாணம் என்பதற்குரிய "Law" என்ற வார்த்தையின் தொடக்க எழுத்து பெரிய "L" ஆக உள்ளது, ஏனென்றால் பவுல் இன்னமும் யூதர்களையே தமது முதன்மையான கண்ணோக்கில் கொண்டிருந்தார். இந்த வசனத்தில் “நியாயப்பிரமாணம்” என்பது குறிப்பாக மோசேயின் நியாயப்பிரமாணத்தையே குறிக்கிறது. இருப்பினும், மூலவசனத்தில் அவ்வாறின்றி, "apart from law"[9] என்று மட்டுமே உள்ளது, எனவே பவுல் ஒரு பொதுவான கொள்கையையும் அறிவித்துக் கொண்டிருந்தார். முந்திய பகுதியின் முடிவில், அவர் “எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியையினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை”[10] என்று கூறியிருந்தார் (3:20). விஷயம் அப்படியிருப்பதால், இரட்சிப்பு என்பது நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுதல் என்பதைத் தவிர வேறு ஏதோ ஒன்றினால் வருவதாக

இருக்க வேண்டும்.

21ம் வசனத்தின் அடுத்த பகுதியைக் கூட்டும்போது, நாம் "இப்படியிருக்க நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது" என்று வாசிக்கிறோம். முன்பே கலந்துரையாடியபடி, "நீதி" என்பது தேவனுக்கு நடைமுறைப்படுத்தப்படும்போது, அது "நீதியை, முற்றான நீதியை" மாத்திரம் குறிக்கிறது. அது மனிதர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும்போது, "(கர்த்தரிடத்தில்) நேராக நிற்குதல், சுமத்தப்பட்ட நீதி" என்பது ஒரு அர்த்த மாக உள்ளது. 3:21ல் "தேவநீதி" என்ற சொற்றொடர், தேவனுடைய சொந்த இயல்பையோ அல்லது அநீதியான மக்களுக்கு நீதியைச் சுமத்துவதற்கான அவரது ஏற்பாட்டையோ குறிக்கக்கூடும். இவ்வசனத்தில் பவுல் "நீதி" என்ற சொல்லை, பிந்திய கருத்தில் பயன்படுத்தினார் என்று நான் நம்புகிறேன்.

எனது தர்க்கம் பின்வருமாறு: 1:17ல் பவுல் சுவிசேஷத்தினால் "தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது" என்று கூறினார். அவ்வசனத்தில் "நீதி" என்பது அனேகமாக மனிதகுலத்தை "நேராக நிற்கச் செய்வதற்காக" வழங்கும் தேவனு டைய திட்டத்தைக் குறிக்கிறது எனலாம். தேவனுடன் "நேராக நிற்குதல்" எவ்வாறு சாதிக்கப்படலாம் என்பதை உடனடியாக நமக்குக் கூறுவதற்குப் பதிலாக, பவுல் முதலில் அவருக்கு மனிதகுலம் செய்த "தவறான செய்கைகளை" எழுதினார் (1:18ஐக் காணவும்). இந்த இக்கட்டான நிலைக்கு "என்ன செய்யப்பட முடியும்?" என்பதே இயல்பான பதிலாக இருக்கும். அந்தக் கேள்விக்குப் பவுல், ரோமர் 3:21ல் பதில் தரத்தொடங்கினார், அதில் அவர் மனிதகுலத் திற்குத் *தேவன்* என்ன செய்தார் என்பதை விளக்கினார். 3:21ம் வசனம், 1:17ல் வசனத்தின் தொடராக உள்ளது - இவ்விரு வசனங்களிலும் "நீதி" என்பது ஒரே விஷயத்தை அர்த்தப்படுத்துகிறது - என்று நான் நம்புகிறேன். CJB வேதாகமம், 3:21ல் உள்ள "நீதி" என்ற சொல்லை "தேவன் தமது பார்வையில் மக்களை நேரானவர்களாக ஏற்படுத்தும் வழி" என்பதாக மொழிபெயர்த்துள்ளது.

அதேவேளையில், தேவனுடைய சொந்த நீதியின் இயல்பானது செயல் முறையின் பகுதியாக உள்ளது என்ற உண்மை பற்றிய கண்ணோக்கை நாம் இழந்துவிடக்கூடாது. 3:25, 26ல், பவுல் "அவருடைய [தேவனுடைய] நீதியை"ப் பற்றிப் பேசியபோது, அவர் தேவனுடைய பண்பையே தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பது தெளிவு. 21ல் இருந்து 26 வரையுள்ள வசனப்பகுதியில் "நீதி" என்பதன் அர்த்தங்கள் ஒன்றின்மீதொன்று கவிகிறதாகக் காணப்படுகிறது. ஜான் R. W. ஸ்டாட் என்பவர் இவ்வசனப்பகுதியில், "தேவனுடைய (அல்லது தேவனிடத்தில் இருந்து வருகிற) நீதி என்பது அவரது நீதியின் பண்பு, அவரது இரட்சிக்கும் முதற்செயல் மற்றும் அவருக்கு முன்பாக நீதிமான்களாக [நாம்] நிற்பதற்கு அவரது கொடை ஆகியவை ஒன்றிணைந்த விஷயமாக உள்ளது" என்று எழுதினார்.[11] நீதியான தேவன் அநீதியுள்ளவர்களுக்கு நீதியை அடையும் வழியை அளிக்கிறார்.

"இப்படியிருக்க நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப் பட்டிருக்கிறது" என்பதை இவ்வசனத்தின் அடுத்த "கடிக்கும் துண்டு" கூட்டுகிறது. "வெளியாக்கப்பட்டிருக்கிறது" என்பது " 'காணக்கூடியதாக்குதல், தெளிவாக்குதல் ...' அறியச்செய்தல்" என்று அர்த்தப்படுகிற *phaneroo* என்பதிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.[12] கடந்தகாலத்தில், அநீதியுள்ளவர்களைத் தேவன் எவ்வாறு நீதியாக எண்ணினார் என்பது தெளிவற்றதாக இருந்தது; இப்போது அது

அறியச்செய்யப்பட்டுள்ளது. (உண்மையில், பவுல் தேவனுடைய திட்டத்திற்குப் பழக்கமற்றவர்களுக்கு அதை வெளிப்படுத்தவிருந்தார்.)

இப்போது நாம் இவ்வசனத்தை, "இப்படியிருக்க நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது" என்று வாசித்து முடிக்கிறோம். "நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும்" என்பது பழைய ஏற்பாடு முழுவதையும் குறிப்பிடும் பொதுவான வழியாக இருந்தது (மத்தேயு 7:12; 11:13; 22:40 ஆகியவற்றைக் காணவும்). மீட்பு என்பது "நியாயப்பிரமாணமில்லாமல்" வரக்கூடியதாக இருக்கலாம் (ரோமர் 3:21), ஆனால் அதற்கு நியாயப்பிரமாணத்தில் ஆதாரம் எதுவும் இல்லை என்று அது அர்த்தப்படுத்துவது இல்லை. மனிதகுலத்தை நீதியுள்ளவர்களாகக் கணக்கிடத் தேவனுடைய திட்டமானது ஒரு தெய்வீகமான பிற்சிந்தனையாக இருந்ததில்லை என்பதைத் தமது வாசகர்கள் அறிய வேண்டும் என்று பவுல் விரும்பினார்.

நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் எதைக்குறித்துச் சாட்சியிடுகின்றன? இது அடுத்த வசனத்தில் கலந்துரையாடப்படுகிற "விசுவாசத்தினால் பலிக்கும் தேவநீதி" என்பதைப் பற்றியதாகும். தனிநபர் ஒருவர் தமது விசுவாசத்தினால் நீதிமானென்று எண்ணப்படுதல் என்ற கொள்கையானது நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசனம் ஆகிய இரண்டிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ரோமர் 4ல் குறிப்பிடப்பட்டுள்ள பவுலின் மாபெரும் உதாரணமான ஆபிரகாம், (பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களான) நியாயப்பிரமாணத்தில் இருந்து வந்துள்ளது. ரோமர் 1:17ல் பவுலின் மாபெரும் வசனமானது (ஆபகூக் 2:4 என்ற) தீர்க்கதரிசனங்களில் இருந்து மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் விசுவாசத்திற்கு ஏராளமான உதாரணங்கள் நிறைந்துள்ளன (எபிரெயர் 11ஐக் காணவும்).

அவரது நீதி "விளக்கப்பட்டது" (வசனங்கள் 22அ, ஆ)

22அ வசனம் "விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதி" பற்றிப் பேசுகிறது. பவுலின் விவாதத்தைக் கவனமாகப் பின்பற்றுங்கள். நியாயப்பிரமாணத்தைப் பரிபூரணமாகக் கைக்கொள்ளுவதினால் நாம் இரட்சிக்கப்பட முடியாது என்றால், எந்த அடிப்படையில் நாம் இரட்சிக்கப்பட முடியும்? 1:16, 17ல் அப்போஸ்தலரின் தொடக்கக்கூற்றைப் பற்றித் திரும்பவும் சிந்தியுங்கள்:

> கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் *விசுவாசிக்கிறவனெவனோ* அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. ''விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்'' என்று எழுதியிருக்கிறபடி *விசுவாசத்தினால்* உண்டாகும் தேவநீதி *விசுவாசத்திற்கென்று* அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது.

நம்பிக்கை/விசுவாசம் என்பதன்மீதான வலியுறுத்தம் 3:22ல் எதிரொலிக்கப்பட்டுள்ளது: ''அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே. விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும். …" "இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசம்" என்ற சொற்றொடர் "இயேசுகிறிஸ்து*வின்* விசுவாசம்" என்று மொழிபெயர்க்கப்படக்கூடும் (KJV

வேதாகமத்தில் காணவும்).[13] [இதனால் சிலர்] இது, இயேசுகிறிஸ்து பூமிக்கு வந்து மனிதகுலத்திற்காக மரித்ததில் அவருடைய விசுவாசம் நிறைந்த தன்மையை இது குறிப்பிடுகிறது என்று நினைக்கின்றனர் (CJB வேதாகமத்தைக் காணவும்), ஆனால் பெரும்பான்மையான எழுத்தாளர்களும் மொழிபெயர்ப்பாளர்களும், இந்தச் சொற்றொடர் இயேசுவின்மீதுள்ள விசுவாசத்தைக் குறிக்கிறது என்றே நம்புகின்றனர் (NKJV; NIV; RSV ஆகியவற்றைக் காணவும்). இருப்பினும், "விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள் மேலும்" என்ற வார்த்தைகளில் தனிப்பட்ட விசுவாசமே கண்ணோக்கில் உள்ளது என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்கின்றனர் (வசனம் 22ஆ). "விசுவாசிக்கிற" என்ற வார்த்தை தொடர்ந்து நடைபெறும் செயலைச் சுட்டிக்காண்பிக்கும் வகையில் நிகழ்கால வினைச்சொல்லாக உள்ளது, CJB வேதாகமத்தில் "to all who continue trusting" ("தொடர்ந்து விசுவாசிக்கிற யாவருக்கும்") என்றுள்ளது.

நீதி என்பது நம்பிக்கை/விசுவாசம் என்பதன் அடிப்படையில் உள்ளது என்பதே நீதியைப் பற்றிய இரண்டாவது சத்தியமாக உள்ளது. நம்பிக்கை/ விசுவாசம் என்பது நமது வசனப்பகுதியின் திறவுகோல் வார்த்தையாக உள்ளது. 4ம் அதிகாரத்தில் பவுல் தேவன் *எப்போதும்* மக்களை நம்பிக்கை/விசுவாசம் என்பதன் அடிப்படையிலேயே ஆசீர்வதித்துள்ளார் என்பதை வலியுறுத்தினார்.

"நம்புதல்" மற்றும் "நம்பிக்கை/விசுவாசம்" என்ற வார்த்தைகளைப் பற்றி நாம் முன்பே கலந்துரையாடி இருக்கிறோம். இந்த நிருபத்தில் முதல் தடவையாக இந்த 22ம் வசனத்தில் விசுவாசம் என்பது குறிப்பாகக் *கிறிஸ்துவுடன்* இணைக்கப்பட்டுள்ளது என்பதே இவ்வசனம் பற்றிய தனிச்சிறப்பு ஆகும். "பவுல், விசுவாசத்தைப் பொதுவான சொற்றொடர்களில் குறிப்பிடவோ அல்லது அதை தேவனுடைய ஆளுகையின்மீது பொதுவான நம்பிக்கை வைத்தல் என்று காணவோ இல்லை; அவர் விசுவாசத்தை, பாவிகளுக்காக மரிக்க பூமிக்கு வந்த ஒருவருடன் தொடர்பு படுத்தினார்."[14] இயேசுவின்மீதுள்ள நமது விசுவாசத்தை விளக்கப்படுத்துவதற்கு *நம்பிக்கை வைத்தல்* என்பது ஒரு நல்ல சொற்றொடராக உள்ளது: நமது இரட்சிப்பைக்குறித்து, நாம் நம்மீதும் நமது திறமைகள் மற்றும் நற்தன்மை ஆகியவற்றின்மீதும் நம்பிக்கை வைப்பதை ஒழித்து, இயேசுவின்மீதும் அவர் நமக்காகச் செய்துள்ளவற்றின்மீதும் நம்பிக்கை வைக்க வருகிறோம்.

அவரது நீதி நீட்டிக்கப்பட்டது (வசனங்கள் 22இ, 23)

அது நம்மை 22ம் வசனத்தின் முடிவுக்குக் கொண்டுவருகிறது: "வித்தியாசமே இல்லை." தகுதிப்படுத்தும் இந்தச் சொற்றொடர் எதைக் குறிப்பிடுகிறது? வசனங்கள் 21ல் இருந்து 26 வரையிலும் ஒரே தொடர் வாக்கியமாக இருப்பதால் இதற்கான பதில் தெளிவற்றதாக உள்ளது. சில மொழிபெயர்ப்பாளர்கள் இந்த வாக்கியத்தை உடைத்து, "வித்தியாசமே இல்லை" என்பது முந்தியசொற்றொடரான "விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள் மேலும்" என்பதைக் குறிப்பிடச்செய்கின்றனர் (NEB; NLT ஆகிய வேதாகமங்களில் காணவும்). அது, "வித்தியாசமே இல்லை" என்ற சொற்றொடர், இரட்சிக்கப்பட்ட எல்லாரும் - யூதராயினும் கிரேக்கராயினும் - ஒரே அடிப்படையிலேயே இரட்சிக்கப்படுவார்கள் என்று அர்த்தப்படும்படியாக்கும். இது நிச்சயமாகவே வேதாகம அடிப்படையிலான சத்தியமாக உள்ளது (கலாத்தியர் 3:26-28ஐக் காணவும்). J. D. தாமஸ் என்பவர், "பல்வேறு வகைப்பட்ட மக்களிடத்தில் தேவன்

பல்வேறு வகைகளில் செயல்படுவதால், மனிதன் எந்தக் கலாச்சாரத்தின்கீழ் இருந்தாலும் அவன் இரட்சிக்கப்பட முடியும் என்ற கருத்தைப் பற்றிக்கொண்டுள்ள இறையியல் கோட்பாடானது ரோமருக்கு எழுதிய நிருபத்தின் செய்தியைப் புரிந்துகொள்வதில்லை"[15] என்று எழுதினார்.

மற்ற மொழிபெயர்ப்புகள், "வித்தியாசமே இல்லை" என்ற சொற்றொடர் பின்வரும் சொற்றொடரான: "எல்லாரும் *பாவம் செய்து*" (வசனம் 23அ) என்பதற்கு நடைமுறைப்படுத்தப்படும்படி இந்த வாக்கியத்தை உடைக்கின்றன (NKJV; NIV; RSV ஆகிய வேதாகமங்களில் காணவும்). முந்திய இரு அதிகாரங்களிலும் பவுல் யூதர்கள் புறஜாதிகள் ஆகிய இருசாராருமே பாவிகளாயிருந்தனர் என்று அறிவித்திருந்தபடியால், "வித்தியாசமே இல்லை" என்பது பெரும்பாலும் 23ம் வசனத்தில் விளக்கப்பட்டுள்ளபடி, பாவத்தின் இயல்பைக் குறிப்பிடுவதாக இருக்கலாம்.

அடுத்ததாக, நாம் மிகவும் அடிக்கடி மேற்கோள் காண்பிக்கப்படுகிற 3:23ம் வசனத்திற்கு வருகிறோம்: "எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமை யற்றவர்களாகி." இவ்வசனமானது, 1:18-3:20ன் தொகுப்புரையாக, மனித துன்பத்தின் சுருக்கவுரையாக உள்ளது. இது அர்த்தம் பொதிந்ததாகும்.

"எல்லாரும் பாவஞ்செய்து ..." (வசனம் 23அ). ரோமருக்கு எழுதிய நிருபத்தின் முதல் எட்டு அதிகாரங்களில் "பாவம்" என்பதன் வடிவங்கள் ஐம்பதுக்கும் அதிகமான முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன, எனவே இவ்வார்த்தை எதை அர்த்தப்படுத்துகிறது என்று புரிந்துகொள்ளுதல் முக்கியமானதாக உள்ளது. "பாவஞ்செய்து" என்பது, "இலக்கைத் தவறவிடுதல்" என்று அர்த்தப்படும் *hamartano* என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[16] இது *hamartia* என்பதன் ஒரு வடிவமாக, ஒழுக்கரீதியான மற்றும் ஆவிக்குரிய வகையிலான தோல்விக்கு "மிகவும் புரிந்துகொள்ளப்படக்கூடிய சொற்றொடராக" உள்ளது.[17] இந்தச் சொற்றொடர் கிரேக்கர்களால், வில்லாளி ஒருவர் தமது இலக்கை தவறவிடுதலைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.[18] நாம் காணப்போகிறபடி, தேவனும் நமது வாழ்விற்கான அவருடைய சித்தமுமே நமது ஆவிக்குரிய இலக்காக இருக்கின்றன(ர்). அந்த இலக்கை நாம் யாவருமே தவறவிட்டுவிட்டோம் என்ற கருத்தைப் பவுல் நிலைநாட்டியிருந்தார் (1:18-3:20). 3:23ல் "பாவம் செய்து" என்பது கடந்தகால வினைச்சொல்லில் உள்ளது. முதன்முறை பாவம்செய்யும் ஒரு நபர், இரட்சிப்புத் தேவைப்படுகிற பாவியாகிறார்.

ரோமருக்கு எழுதிய நிருபத்தில், "மீறுதல்" என்பது "பாவம்" என்ற சொல்லுக்கு அதே பொருளைத் தரும் இன்னொரு சொல்லாக உள்ளது (கலாத்தியர் 3:19; 1 தீமோத்தேயு 2:14; எபிரெயர் 2:2; 9:15 ஆகிய வசனங்களைக் காணவும்). "மீறுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள ஒரு கிரேக்க வார்த்தை, *parabaino* என்ற கூட்டுவார்த்தையாகும் (*baino* ["நான் போகிறேன்"] கூட்டல் *para* ["பக்கமாக"]). இது "அத்துமீறிச்செல்வதற்கு ... பக்கமாகச் செல்லுதல்" என்று அர்த்தப்படுகிறது.[19] பெயர்ச்சொல் வடிவம், ரோமர் 4:15ல் "மீறுதல்" என்றும் 5:14ல் "குற்றம்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மீறுதல் என்பதற்கான ஆங்கில வார்த்தையான "transgress" என்பது "கடந்து அடியெடுத்து வைத்தல்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது.[20] தரையில் வரையப்பட்ட கோட்டை ஒருவர் தாண்டிச் செல்லுதல் பற்றி நினைத்துப்பாருங்கள். பின்பு அந்தக் கோடானது தேவன் நமது பாதுகாப்பிற்காகக் கொடுத்துள்ள எல்லைக்கோடுகள்

மற்றும் கட்டுப்பாடுகள் என்பதை நினைத்துப்பாருங்கள்.[21]

"பாவம்" என்பதற்கு ரோமருக்கு எழுதிய நிருபத்தில் காணப்படும் இன்னொரு சொற்றொடர், "அக்கிரமங்கள்" என்பதாகும் (4:7). "அக்கிரமங்கள்" என்பது, "கிரமம்" (சட்டம்) என்பதற்கான (nomos என்ற) வார்த்தையுடன் எதிர் மறைச்சொல்லான "அ" (a) என்பதைச் சேர்த்துள்ள வார்த்தையின் பன்மை வடிவமான anomia என்பதில் இருந்து மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையாகும். இந்த வார்த்தை தேவனுடைய சித்தத்திற்கு மதிப்பளிக்காத மனிதரைச் சித்தரிக்கிறது.

"எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களாகி ..." (3:23). "அற்றவர்களாகி" என்பது "பின்னால் உள்ள ... குறைவுபடுகிற" என்று அர்த்தப்படுகிற husterero என்ற வார்த்தையில் இருந்து வருகிறது.[22] *இது ஒரு ஓட்டயப்பந்தயத்தில் பின்னால் விழுந்துபோகிற ஒரு ஓட்டவீரரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட முடியும். நாம் ஒரு வில்லாளியின் ஒப்புவமையைப் பயன்படுத்தினால், அது அவரது அம்பானது இலக்கைத் தொடாமல் அதற்கு இந்தப்புறத்திலேயே விழுந்து, "குறியைத் தவற விடுதலை" குறிக்கக்கூடும்*[23]. *"குறைவுபடுதல்" என்ற சொற்றொடர் இந்தக் கருத்தைத் தருகிறது.*[24] *"அற்றவர்களாகி" என்பது கிரேக்க மொழியில் நிகழ்கால வினைச்சொல்லில் உள்ளது, இது தொடர்ந்து நடைபெறும் செயலைச் சுட்டிக்காண்பிக்கிறது. நாம் கடந்தகாலத்தில் பாவம் செய்திருந்ததால் பாவிகளானது மாத்திரமின்றி, அன்றாடம் தொடர்ந்து பாவம் செய்கிறோம்!*

நாம் எந்த "இலக்கில் குறைவுபடுகிறோம்"? "எல்லாரும் பாவம் செய்து தேவமகிமை யற்றவர்கள் *ஆகி" (வசனம் 23). "தேவமகிமை" [doxa] என்பது முதலாவதாக மற்றும் முதன்முதலாவதாக, பயபக்திக்குரிய அவரது சொந்தப் பிரசன்னத்தின் விளக்கமாக உள்ளது; ஆனால் அந்த மகிமையைத் தேவன் தமது மக்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறார் என்று வேதாகமம் போதிக்கிறது (8:18; 9:23 ஆகிய வசனங்களைக் காணவும்). மேலும் வேதாகமம் இந்த பூமியில் தேவனை மகிமைப்படுத்துதலே நமது நோக்கமாகும் என்றும் அறிவிக்கிறது (4:20; 11:36; ஏசாயா 43:7; மத்தேயு 5:16 ஆகியவற்றைக் காணவும்). "தேவமகிமை" என்ற வார்த்தையை ஒரே ஒரு சொற்றொடரில் விளக்கப்படுத்துதலைக் கடினமானது என்று மொழி பெயர்ப்பாளர்கள் கண்டறியுமளவுக்கு அதில் மிகவும் அதிகமான கருத்துக்கள் பொதியப்பட்டுள்ளன. NEB வேதாகமத்தில் "the divine splendor" என்றுள்ளது. TEV வேதாகமத்தில் "God's saving presence" என்றுள்ளது. பிலிப்ஸ்ஸின் பொழிப்புரை வேதாகமத்தில் நாம் "the beauty of God's plan" என்றுள்ள அதே வேளையில் NLT வேதாகமத்தில் "God's glorious standard" என்றுள்ளது.*

"தேவமகிமை" என்பதில் மிகவும் வலிவார்ந்த கருத்தாக இருப்பது அவரது சொந்த மகிமை என்றோ அல்லது நம்மை நோக்கங் கொண்டுள்ள மகிமை என்றோ, எவ்வாறு நாம் எடுத்துக்கொண்டாலும், நாம் அதில் "குறைவுபடுகிறோம்." அவரது சொந்த மகிமை குறித்து, நாம் அந்த மகிமையைக் கண்ணோக்கியிருப்பதால், நாம் எவ்வளவு துன்மார்க்கராக இருக்கிறோம் என்பதைக் காண்கிறோம் (3:10-18). அவர் நமக்குத்தர நோக்கங்கொண்டுள்ள மகிமை குறித்து, நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ, அதிலிருந்து நாம் எவ்வளவு தூரம் குறைவு பட்டிருக்கிறோம்!

ஒருவேளை, இந்த வேளையில், யாரேனும் ஒருவர், "நிச்சயமாகவே நீங்கள் என்னைக் குறிப்பிடவில்லை என்று நினைக்கிறேன்!" என்று கூறலாம். 3:23ல் உள்ள சிறு வார்த்தையாகிய "all" ("எல்லாரும்") என்பதே மிகவும் தனிச்சிறந்த சொல்விளக்கமாக இருக்கலாம்: "எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமை யற்றவர்களாகி." "எல்லாரும்" என்பது தேவனுக்கு முன்பாகக் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய நிலையில் உள்ள ஆண், பெண், பையன், சிறுமி ஒவ்வொருவரையும் உள்ளடக்குகிறது. இங்கு எழுதப்பட்டுள்ளது என்ன என்று நீங்கள் வாசிக்க முடியுமென்றால், இது *உங்களையும்* உள்ளடக்குகிறது.

"பாவம்" என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடர்கள் நினைவில் உள்ளனவா? ஒன்று குறைவுபடுதலைப் பற்றிப் பேசுகிறது; இன்னொன்று தூரமாகச் செல்லுதல் பற்றி வலியுறுத்துகிறது. நம்மில் யாரேனும், நாம் செய்ய வேண்டியவற்றில் ஒருக்காலும் தவறியிருந்ததில்லை அல்லது நாம் செய்யக் கூடாதவற்றை ஒருக்காலும் செய்திருக்கவில்லை என்று கூறமுடியுமா? நாம் யாவருமே பாவிகள் என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டுமே. சிலர் இயேசுவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்ட பாவிகளாக இருக்கிறோம், அதே வேளையில் மற்றவர்கள் இரட்சிக்கப்படாத பாவிகளாக இருக்கின்றனர் - ஆனால் எல்லாரும் பாவிகளாக இருக்கிறோம்!

சிலவேளைகளில் மக்கள், "ஆனால் நான் அறிந்துள்ள பயங்கரமான மக்கள் சிலரைக் காட்டிலும் நான் மிகவும் மேன்மையாக இருக்கிறேன். இது நான் பாவியல்ல என்று நிச்சயமாகவே நிரூபிக்கிறது" என்று மறுப்புரை தெரிவிக்கின்றனர். தேவமகிமை என்ற நமது "இலக்கை" தூரத்தில் உள்ள ஒரு கண்டத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள். நீங்களும் நானும் சமுத்திரத்தின் கரையில் நின்றுகொண்டு அந்த கண்டத்தை நோக்கி [சமுத்திரத்திற்குள்] குதித்தால், அனேகமாக நீங்கள் என்னைக் காட்டிலும் அதிக தூரம் குதிப்பீர்கள், ஆனால் நம்மில் எவரும் ஒரே குதியில், தூரத்தில் உள்ள அந்தக் கண்டத்தைச் சென்று சேரமாட்டோம். அதற்குப்பதிலாக, நாம் இருவருமே தண்ணீருக்குள் அலைவாடி, பரிதாபமான வகையில் நமது இலக்கைத் தவறவிட்டவர்களாக இருப்போம். அதுபோலவே, நாம் எவ்வளவு நல்லவர்களாக இருப்பதாக நாம் நினைத்தாலும், இன்னமும் நாம் தேவனுடைய மகிமையிலிருந்து அளவிட முடியாத தூரத்திலேயே இருக்கிறோம்.

மனிதகுலத்திற்குப் பொதுவான குறிப்புக்காரணி ஒன்றுள்ளது. அது நாட்டினமோ, மக்களினமோ, அல்லது ஒரேமாதிரியான கலாச்சாரங்களோ அல்ல. தேவனுக்கு முன்பாக நமது தகுதியற்றதன்மை என்பதே நம் யாவருக்கும் பொதுவான விஷயமாக உள்ளது![25] நாம் யாவரும் பாவிகளாயிருக்கிறோம்!

ஒரு உள்ளூர் சபைக்குழுமம் தான் கூடிவரும் இடத்தின் முன்பாகத் தனது தகவல் பலகையைக் கொண்டிருந்தது. அந்தக் கட்டிடத்தைக் கடந்து செல்பவர்களின் நினைவுக்காக, ஒவ்வொரு வாரமும் பிரசங்கியார் அந்தப் பலகையின்மீது சிந்தனைக்குரிய சில வரிகளை எழுதிவைப்பார். ஒரு வாரம் அவர் பின்வரும் சிந்தனையை அதில் ஒட்டிவைத்தார்: "இந்த சபை பாவிகளுக்கு மாத்திரமே உரியது." ஒரு சில நாட்களுக்குப் பின்னர், அவர் அஞ்சல்மூலமாக பெயரற்ற ஒரு கடிதத்தைப் பெற்றார். அந்தக் கடிதத்தில், "இந்த சபை பாவிகளுக்கு மாத்திரமே உரியது என்று அறிந்து நான் அதிர்ச்சியடைந்தேன். இந்த சபையில் நான் இருபத்தைந்து ஆண்டுகளாக உறுப்பினனாக இருந்துவருகிறேன். நான் என்னு டையதல்லாத இடத்தில் இருந்தேன் என்றும் நான் இங்கு ஏற்றுக்கொள்ளப்படுவ

தில்லை என்றும் நான் ஒருக்காலும் உணர்ந்திருக்கவில்லை'' என்று எழுதப்பட்டிருந்தது. அடுத்த வாரத்தில், பிரசங்கியார் பின்வரும் செய்தியை தகவல் பலகையில் ஒட்டிவைத்தார்: "எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமை யற்றவர்களாகி" (ரோமர் 3:23).[26]

கடந்தகாலத்தில் நன்கு அறியப்பட்டிருந்த ஒரு சுவிசேஷ ஊழியர், தாம் அடுத்துச் செல்லவிருந்த நகரத்தின் மேயருக்குக் கடிதம் எழுதுவதை வழக்க மாகக் கொண்டிருந்தார். அவர் அந்த அலுவலரை, ஆவிக்குரிய பிரச்சனைகள் கொண்டிருக்கும் மக்கள், உதவு மற்றும் ஜெபம் தேவைப்படும் மக்கள் ஆகியவர்களின் பட்டியலைத் தரும்படிக் கேட்பார். ஒரு சந்தர்ப்பத்தில், அவர் ஒரு நகரத்தின் தொலைபேசி எண்களின் புத்தகம் ஒன்றைப் பெற்றுத் திகைப் படைந்தார்![27] *அந்தப் புத்தகத்தை அனுப்பிவைத்த அலுவலர், சிலர் அறியாத பின்வரும் கருத்தை அறிந்திருந்தார்: "*எல்லாரும்* பாவஞ்செய்து தேவமகிமை யற்றவர்களாகி"!*

1:18-3:20 நிலைநாட்டப்பட்டிள்ளபடி, நாம் யாவரும் *பாவிகளா யிருக்கிறோம், நம்மைநாமே இரட்சிக்கத் திராணியற்றவர்களாயிருக்கிறோம். இதற்கான முதல்செயலை,* தேவனே *மேற்கொள்ள வேண்டியிருந்தது. "... தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது, ... தேவநீதியே ... விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள் மேலும் அது பலிக்கும்" என்பதற்கு நாம் எவ்வளவு நன்றிநிறைந்தவர்களாயிருக்க வேண்டும் (ரோமர் 3:21, 22)! தேவநீதி எல்லா ருக்கும் தேவைப்படுகிறது - எனவே அது எல்லாருக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது - என்பது ஆச்சரியமான இன்னொரு சத்தியமாக உள்ளது.*

நீதி அளிக்கப்பட்டது (3:24அ)

நீதியுள்ள ஒரு தேவன், தெளிவாகவும் முற்றிலுமாகவும் அநீதியானவர் களை நீதியானவர்கள் என்று நினைத்தல் எவ்வாறு சாத்தியமாகும்? 24ம் வசனத்தில் நாம் மனிதகுலத்திற்கான ஆவிக்குரிய வகையில் தேவனுடைய அளிப்புகளின் ரகசியத்திற்குக் கடந்துசெல்லுகிறோம்: அநீதியான மக்களை நீதி யானவர்கள் என்று தேவனால் அறிவிக்க முடிந்தது எவ்வாறு? இருவார்த்தைகள் முக்கியத்துவப்படுத்துவதன்மூலம் நாம் இந்த வலிவார்ந்த பாடக்கருத்தைப் பற்றிய கலந்துரையாடலைத் தொங்குகிறோம்.

அவரது நீதி அனுபவித்து உணரப்பட்டது: "நீதிமானாக்கப்படுதல்"

நாம் 22ம் வசனத்தின் முடிவுப்பகுதியையும் 23ம் வசனத்தையும், 22ம் வசனத்தில் முன்வைக்கப்பட்ட சிந்தனையை இன்னும் முன்னேறிய வகையில் தரும் 24ம் வசனத்தின் கருத்தைச் சிதைக்காமல் இடைக்கோடுகளினுள் வரும் சொற்றொடர் என்று நினைக்கலாம்: "விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியே ... விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும் ... அவருடைய கிருபையைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.'' "நீதிமான்களாக்கப்படுதல்" என்பதே (இது, dikaioo என்ற வார்த்தையில் இருந்து வந்துள்ளது) நாம் முக்கியத்துவப்படுத்த விரும்பும் முதல் வார்த்தையாக உள்ளது. 3:21-5:21 வசனப்பகுதியை "நீதிமான்களாக்குதல்" என்று நாம் குறிப்பிட்டு உள்ளதால், இந்த வார்த்தையின் அர்த்தத்தைத் தெரிந்துகொள்வது நமக்கு அவசியமாகிறது.

"நீதி" மற்றும் "நீதியாக்குதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைகள் "நீதி" மற்றும் "நீதிமானான" என்ற வார்த்தைகளின் குடும்பத்தில் (*dikai*) அங்கமாக உள்ளன. இருப்பினும், ரோமருக்கு எழுதிய நிருபத்தின் 24ம் வசனத்தில் குறிப்பிட்ட இவ்வடிவம் (*dikaioo*) முதன்முதலாக அடங்கியுள்ளது. புதிய ஏற்பாட்டில் *dikaioo* என்ற வார்த்தையின் பயன்பாட்டுடன் "நாம் ஏறக்குறைய எல்லா வேளைகளிலும் ஒரு சட்டப்பூர்வமான தொடர்பைக் கண்டறிகிறோம்."[28] பவுல் இந்த நிருபத்தில் அடிக்கடி நீதிமன்ற அறையின் மொழி நடையைப் பயன்படுத்தினார், மற்றும் அந்த ஒப்புவமை இவ்விடத்திலும் காணப்படுகிறது. "நீதிமானாக்கப்படுதல்" என்பதற்கு பிலிப்ஸ் என்பவரின் வேதாகமத்தில் "freely acquitted" என்றுள்ளது.

"நீதிமானாக்கப்படுதல்" என்பது நாம் "நீதிமான்கள் *ஆக்கப்பட்டோம்*" என்று அர்த்தப்படுவது இல்லை, ஆனால் அதற்கு மாறாக, தேவனால் நாம் "நீதிமான்கள் என்று *அறிவிக்கப்பட்டோம்*" என்று அர்த்தப்படுகிறது.[29] நாம் நீதிமான்களாக இருப்பவர்கள் "என்பது போல" அவர் நம்மை நடத்துகிறார். சில பிரசங்கியார்களும் போதகர்களும் இதை விளக்குவதற்கு வார்த்தைகளின் மீதான விளையாட்டு ஒன்றைப் பயன்படுத்துகின்றனர்: "It is *just* as *if I'd* never sinned." (இந்த ஆங்கில வாக்கியத்தை வேகமாக உச்சரித்தால், இது "just-if-ied என்பது never sinned" என்பது போன்று ஒலிக்கக்கூடும்.)

நான் பிரசங்கிக்கத் தொடங்கியபோது வெளியிட்ட சபைச்செய்திகள் பற்றிய அறிக்கையைப் பற்றி நினைக்காமல், என்னால் "நீதிமானாக்கப்படுதல்" என்ற வார்த்தையை வாசிக்க இயலாது. அச்சக உலகத்தில், "justify" என்பது தாளின் பக்கத்தில் வரிகளை அவற்றின் வலது புறத்தில் நிரவலாக்குதல் என்று அர்த்தப்படுகிறது. நீங்கள் வாசித்துக்கொண்டிருக்கும் இந்தப் புத்தகத் திற்கு, வலதுபுற ஓரத்தில் இவ்வாறு நிரவலாக்க ஒரு கணணித்திட்ட அமைவு பயன்படுத்தப்பட்டது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பக்கத்தின் வலதுபுற ஓரங்களை நானே நிரவலாக்க வேண்டியிருந்தது. முதலில் நான் விஷயங்களைத் தட்டச்சு செய்துவிட்டு பின்பு அது நிரவலாவதற்குப் போதிய அளவு (////) என்ற குறியீட்டைக் கூட்டுவதுண்டு. பின்பு நான் ஒவ்வொரு வரியிலும் கூடுதல் இடங்கள் எந்தெந்த வார்த்தைகளுக்கு இடையில் விடலாம் என்று குறிப்பிடுவதுண்டு. எவ்வளவு கூடுதல் இடங்கள் உண்டோ அவ்வளவு /// என்ற குறியீடு வரியின் இறுதியில் இருந்தன. கடைசியில், நான் அந்தப் பக்கத்தை மறு படியும் தட்டச்சு செய்து, தேவையான இடைவெளிகளை வரியின் இடைப்பகுதி களில் விட்டு, வரியானது நிரவலாகும்படி அமைப்பதுண்டு. வரிகள் *உண்மையில்* நிரவலாக இருப்பதில்லை, ஆனால் "justfication" என்ற செயல் மூலமாக அவை நிரவலாக இருப்பது போன்று காணப்பட்டன.

அவரது நீதி விளக்கப்படுத்தப்பட்டது: "கிருபை"

நீங்களும் நானும் பாவிகளாயிருப்பதால், நம்மை நாமே ஒருக்காலும் "நீதிமான்கள் ஆக்க" முடியாது. விஷயம் அப்படியென்றால் இது எவ்வாறு நடக்க முடியும்? நமது வசனப்பகுதி, "இலவசமாய் அவருடைய கிருபையினாலே" என்று தொடர்கிறது (வசனம் 24அ). "இலவசமாய்" என்பது நீதிமானாக்கப்படுதலின் *நடைப்பாங்காக* இருக்கையில், "அவருடைய கிருபையாலே" என்பது *வழிமுறையாயுள்ளது.* "இலவசமாய்" என்பது "கொடை" என்பதற்கான (*dorea* என்ற) கிரேக்க வார்த்தையில்

இருந்து தரவழைக்கப்பட்ட தனிக்கிரேக்க வார்த்தையான dorean என்பதில் இருந்து வருகிறது. Dorean என்பது "கொடை என்ற பாங்கில்" என்று அர்த்தப்படுகிறது.[30] *"விலையின்றி இலவசமாய்" அல்லது "இலவசமாய்" என்பது எளிய மொழிபெயர்ப்பாக இருக்கும்.*[31]

"கிருபை" (charis) என்ற வார்த்தையை நாம் இதற்கு முன்பு ரோமர் 1:5, 7ல் பார்த்திருக்கிறோம்; ஆனால் நாம் கிருபையினால் இரட்சிக்கப்படுகிறோம் என்ற மாபெரும் சத்தியம் இவ்விடத்தில்தான் நமக்கு முதன்முறையாகத் தரப்புகிறது (எபேசியர் 2:8ஐக் காணவும்). "கிருபை" என்பது ரோமருக்கு எழுதிய நிருபத்தின் இன்னொரு திறவுகோல் வார்த்தையாகும், இது குறைந்தபட்சம் இருபது இடங்களிலாவது இந்நிருபத்தில் காணப்படுகிறது. "அகம் மகிழ்தல்" என்று அர்த்தப்படும் ஒரு வினைச்சொல்தான் charis என்பதன் வேராக உள்ளது.[32] *பவுலுக்கு, charis என்பது தன்னிலேயே "ஒரு மையக் கருத்தாக" உள்ளது. இது "இலவசமாய்க் கொடுத்தல் என்ற அடிப்படைச் சிந்தனை கொண்டுள்ளது."*[33] *"கிருபை" என்பது "தகுதியற்றவர்களுக்கு தரப்படும் ஈவு" மற்றும் "ஈட்டப்படாதது" என்று விளக்கப்பட்டுள்ளது.*

நான் டெக்சாஸ் மாகாணத்தின் அபிலேனில் உள்ள அபிலேன் கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்த சில நாட்களில், ஆக்லஹாமாவில் உள்ள டெர்ரெல் என்ற இடத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் பிரசங்கிக்கத் தொடங்கினேன். எனது பணி ஒப்புவிப்பைக் காத்துக்கொள்வதற்காக ஒவ்வொரு வாரக்கடைசியிலும் நான் என் சகமாணவர் ஒருவருடன் பயணம் செய்தேன். நாங்கள் திரும்பவும் திங்கள்கிழமை அதிகாலை நேரத்தில் அபிலேனுக்குத் திரும்புவதுண்டு - மற்றும் எனக்கு திங்கள் காலை 8:00 மணிக்குத் தட்டச்சு வகுப்பு இருந்தது. அது தட்டச்சுசெய்வதில் தொடக்கநிலையில் உள்ளவர்களுக்கான வகுப்பாகக் கருதப்பட்டது, ஆனால் அந்த வகுப்பில் தொடக்கநிலைத் தட்டச்சர்கள் இருவர் மாத்திரமே இருந்தனர். அவர்களில் நான் ஒருவனாக இருந்தேன். கொஞ்சம் தூக்கமே கொண்டு பணிமும்முரமாயிருந்த வாரக்கடைசிக்குப் பின்னர், மிகப்பலத் தவறுகள் இல்லாமல் தட்டச்சு செய்தல் என்பது எனக்குச் சாத்தியம் இல்லாதது என்று நான் கண்டறிந்தேன். அந்தப் பருவத்தின் முடிவில், எனது முயற்சியில் இருந்து தவறுகள் கழிக்கப்பட்ட பின்னர், இன்னமும் நான், "நிமிடத்திற்கு பூஜ்யம் வார்த்தைகள்" தட்டச்சுச் செய்துகொண்டிருந்தேன்! இதற்கு அந்த ஆசிரியர் எனக்கு நான்காம் நிலை மதிப்பெண் கொடுத்தார், இது ஒன்று மாத்திரமே நான் பள்ளியில் பெற்ற ஒரே ஒரு நான்காம் நிலை மதிப்பெண் ஆகும்; ஆனால் அந்தப் பயிற்சியில் நான் தேறியது பற்றி நான் மெய் சிலிர்த்தேன்! அந்த நான்காம் நிலை மதிப்பெண் என்பது - கிருபையால் தரப்பட்ட - ஒரு கொடையாகும், ஏனெனில் அதை உறுதியாகவே நான் ஈட்டவில்லை அல்லது அதற்கு நான் தகுதி யானவனாக இருக்கவில்லை.[34]

நம் பாவங்களுக்காக மரிக்கும்படி, தேவன் தம்முடைய சொந்த குமாரனை அனுப்பியது என்பது தேவனுடைய கிருபையின் மிகவும் ஆச்சரியமான விளக்கமாக உள்ளது (3:25). இரட்சிப்பு என்பது இலவசமானதாக இருக்கலாம், ஆனால் அதனால் இரட்சிப்பு என்பது மலிவானது என்று அர்த்தப்படுவ தில்லை;[35] *அது தேவனுக்கு அவரது குமாரன் என்ற கிரயமாயிற்று! "கிருபை" [grace] என்பதை விளக்குவதற்குச் சிலர் பின்வரும் எழுத்து விவரிப்பைப் பயன்படுத்துகின்றனர்:*

G - od's
R - iches
A - t
C - hrist's
E - xpense

நாம் "*இலவசமாய் அவருடைய கிருபையினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறோம்*" என்று பவுல் கூறியபோது, செயல்விளைவில் அவர், வலியுறுத்தத்திற்காக மீண்டும் கூறுதலைப் பயன்படுத்தினார்; நாம் கருத்தைத் தவறவிடுதலை அவர் விரும்பவில்லை: "நீதிமானாக்கப்படுதல் இலவசம், *இலவசம்*, **இலவசம்**!" பாவம்நிறைந்த மனிதர்கள் என்ற வகையில் நாம் நமது இரட்சிப்பை ஈட்ட முடியாது. தேவன் முன்வைத்துள்ள நிபந்தனைகளை நாம் நிறைவேற்றும்போதுகூட, அவரை நாம் கடமையாற்றும் நிலையின்கீழ் வைப்பதில்லை. தேவன் நமக்கு ஒன்றும் கடன்பட்டவரல்ல. நாம் கிருபையினால் இரட்சிக்கப்படுகிறோம் அல்லது இரட்சிக்கப்படுவதே இல்லை!

இரட்சிக்கப்படுவதற்கு நாம் செய்யும்படி தேவன் கட்டளையிட்ட எதுவும் "அவரது கிருபையினால்" இரட்சிக்கப்படுதல் என்ற விஷயத்தினால் ஒதுக்கிவைக்கப்படுவதில்லை என்பதை நான் கூடுதலாகக் கூறத்தேவையுண்டா (நடபடிகள் 2:36-38ஐக் காணவும்)? ஒரு கொடையானது ஏற்கப்பட வேண்டும். ஜிம்மி ஆலென் என்பவர், "கொடை ஒன்று ஏற்கப்படுவதற்கு முன்பு அது அளிப்பாக இருக்கிறது. அது ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன் அது கொடையாக இருக்கிறது. அதை ஏற்றுக்கொள்வதற்கு செய்ய வேண்டிய யாவும் நிபந்தனைகளாக உள்ளன. உண்மையில், எந்த வட்டாரத்திலும் நிபந்தனையற்ற கொடை என்று ஒன்றுமேயில்லை" என்று எழுதினார்.[36]

இருந்தபோதிலும், அந்த உண்மையைப் புரிந்துகொள்ளுதல் என்பது பின்வரும் ஆச்சரியமான சத்தியத்தில் இருந்து எவ்வகையிலும் விலகிச் செல்வதாக இருப்பதில்லை: "நாம் இலவசமாய் அவரது கிருபையால் நீதிமான்களாக்கப்படுகிறோம்"! பிலிப் யான்ஸி என்பவர், "ஒருதுளி தண்ணீர் சூரியனுடைய முழு உருவத்தையும் அடக்கியிருப்பதுபோன்று, கிருபை என்ற வார்த்தை சுவிசேஷத்தின் சாராம்சம் முழுவதையும் அடக்கியிருக்கிறது" என்று எழுதினார்.[37] "ஆச்சரியமான கிருபை" என்ற பாடல் இயற்றி இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் அது உலகத்தின் மிகப்புகழ் பெற்ற பாடல்களில் ஒன்றாக உள்ளது:

> ஆச்சரியமான கிருபை! எத்துணை இனிமையாய் ஒலிக்கிறது!
> அது என்னைப்போன்ற பாவியை மீட்டது!
> ஒரு காலத்தில் நான் இழந்துபோகப்பட்டிருந்தேன்,
> இப்போது கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறேன்;
> பார்வையற்றிருந்தேன், ஆனால் இப்போது நான் காண்கிறேன்.[38]

முடிவுரை

ரோமர் 3:24ன் பொக்கிஷங்களை நாம் இன்னும் முழுவதுமாக காலிசெய்து விடவில்லை. நமது அடுத்த பாடத்தில் நாம் 24ம் வசனத்தை முடித்துவிட்டு, பின்பு 25 மற்றும் 26ம் வசனங்களைப் படிப்போம்.

இந்த முன்வைப்புரையை நாம் முடிப்பதற்கு, நமது வேதவசனப்பகுதியின் தொடக்கமாக உள்ள வார்த்தைகளுக்குத் திரும்ப விரும்புகிறேன்: "இப்படியிருக்க ..." (வசனம் 21அ). D. மார்ட்டின் லாயிட் - ஜோன்ஸ் என்பவர், "வேதவசனம் முழுவதிலும் 'இப்படியிருக்க' என்ற இந்த வார்த்தைகளைக் காட்டிலும் அதிகம் ஆச்சரியம்நிறைந்த வார்த்தைகள் வேறு எதுவும் இல்லை" என்று கூறினார்.[39] இந்த வார்த்தைகளைப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள், கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பவர்களின் நிலைமையைக் கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களின் நிலைமையுடன் வேறுபடுத்தி ஒப்பிடுவதற்குப் பயன்படுத்தினர்.[40] எடுத்துக்காட்டாக, எபேசியர் 2ம் அதிகாரத்தில் நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்,

> ... அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள் (வசனங்கள் 12, 13).

உங்களில் பலர் உங்கள் சொந்த, "ஆனால் இப்பொழுது" அனுபவத்தைக் கொண்டிருந்து இருப்பீர்கள்.[41] தேவனுடைய கிருபையினால் நீங்கள் இயேசுவின் இரத்தத்தைக் கொண்டு நீதிமான்களாக்கப்பட்டு இருக்கிறீர்கள். ஆவிக்குரிய வகையில், நீங்கள் பெருந்துக்கத்தில் இருந்து வெற்றிக்கு நகர்ந்திருக்கிறீர்கள். உங்களில் இன்னும் சிலர் "அந்த வேளை" சூழ்நிலையில் இருக்கிறீர்கள். ஒருவேளை நீங்கள் இயேசுவில் விசுவாசமோ நம்பிக்கையோ கொள்ளாதிருக்கலாம், அல்லது ஒருவேளை நீங்கள் அவரது சித்தத்திற்கு அன்பின் கீழ்ப்படிதலுடன் உங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தாமல் இருக்கலாம் (மாற்கு 16:16; நடபடிகள் 2:38; ரோமர் 6:3, 4). உங்கள் ஆவிக்குரிய தேவை எதுவாக இருந்தாலும், நீங்கள் தேவனுடைய அன்பு மற்றும் இரக்கம் ஆகியவற்றிற்குப் பதில்செயல் செய்ய வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். இன்றே, நீங்கள் "அந்த வேளையில்" இருந்து "ஆனால் இப்பொழுது" என்பதற்கு நகர்ந்துவர முடியும்!

பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

இந்தப் பாடமும் இதற்கு அடுத்த பாடமும் ஒரே பாடத்தின் முதல் மற்றும் இரண்டாம் பாகங்களாக உள்ளன. இவ்விரு முன்வைப்புரைகளையும் நீங்கள் ஒன்றாக்க விரும்பினால், பின்வரும் எளிய வரைகுறிப்பைப் பயன்படுத்த முடியும்: நீதி அறிவிக்கப்படுதல் (வசனங்கள் 21-23); நீதி கலந்துரையாடப்படுதல் (வசனங்கள் 24, 25அ); நீதி தற்காக்கப்படுதல் (வசனங்கள் 25ஆ, 26). "ஆனால் இப்பொழுது"

என்பது இந்த முன்வைப்புரைக்கான இன்னொரு தலைப்பாக உள்ளது.

குறிப்புகள்

[1]R. C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 29. [2]கிரேக்க வசனத்தில் "now [*nuri*] but [*de*]" என்றுள்ளது. [3]இந்தப் பாடத்தின் தலைப்பு Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 177 என்ற புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல்விளக்கமாகும். [4]சுலப மான வாசிப்புக்கு KJV வேதாகமத்தில் காணவும், பெரும்பான்மையான நவீன மொழி பெயர்ப்புகள் இவ்வாக்கியத்தைப் பல வாக்கியங்களாக உடைக்கின்றன. NASB மொழி பெயர்ப்பாளர்கள் இதை இரு வாக்கியங்களாக ஏற்படுத்தினர். [தமிழ் வேதாகமத்தில் இது மூன்று வாக்கியங்களாக உள்ளது] ஆனால் மூலமொழியில் இது ஒரே வாக்கிய மாக இருந்தது என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். [5]Morris, 173. [6]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 125. [7]James R. Edwards, *Romans,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1992), 97. [8]ரோமர் 1:17ம் வசனம், சுவிசேஷம் பிரங்கிக்கப்படுதலில் தேவனுடைய நீதியின் வெளிப்பாட்டை *நிகழ்கால* வினையை ("வெளிப்படுத்தப்படுகிறது") பயன்படுத்துகிறது. ரோமர் 3:21 *கடந்தகால* வினையை ("வெளியாக்கப்பட்டிருக்கிறது") பயன்படுத்துகிறது, இது இயேசுவின் மரணத்தில் (இது ஒரு கடந்தகால நிகழ்ச்சியாகும்) தேவனுடைய நீதியின் வெளிப்பாட்டைக் குறிக்கிறது. [9]என்னிடம் உள்ள NASB வேதாகமப் பிரதியில் இந்த அர்த்தம் ஒரு விளக்கக் குறிப்பாகத் தரப்பட்டுள்ளது. NEBஐக் காணவும். [10]*The Interlinear Greek-English New Testament,* 580.

[11]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World*, The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 109. (Emphasis mine.) [12]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 390. [13]கிரேக்க வசனத்தில் "இயேசுகிறிஸ்து" என்பதற்கான வார்த்தைகள், "இயேசுகிறிஸ்துவின்" (பொருட்செறிவான) அல்லது "இயேசுகிறிஸ்துவில்" (கருத்துச் செறிவான) என்று மொழிபெயர்க்கக்கூடிய வகையில் ஆறாம் வேற்றுமைத் தொகையில் உள்ளது. இவ்வசனப்பகுதியில் இது பொருட்செறிவாகவோ அல்லது கருத்துச்செறிவாகவோ இருக்கலாம். [14]Morris, 175-76. [15]J. D. Thomas, *Romans,* The Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1965), 27. [16]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 17. [17]Vine, 576. [18]D. Stuart Briscoe, *Mastering the New Testament: Romans,* The Communicator's Commentary Series (Dallas: Word Publishing, 1982), 89. [19]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph Henry Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 478. [20]*American Heritage Dictionary,* 4th ed. (2002), s.v. "transgress."

[21]பின்வருவது ஒரு எளிய காட்சிச்செயல்விளக்கமாக இருக்க முடியும். பூமியில் அல்லது தரையில் உண்மையான அல்லது கற்பனையான கோடு ஒன்றை வரையுங்கள், பின்பு அதைத் தாண்டி அடி எடுத்து வையுங்கள். [22]*The Analytical Greek Lexicon, 420.* [23]Briscoe, *89.* [24]*The Analytical Greek Lexicon, 420.* [25]Edwards, 102. [26]Adapted from John T. Carroll and James R. Carroll, *Preaching the Hard Sayings of Jesus* (Peabody, Mass.: Hendrickson Publishers, 1996), 17. [27]Paul Lee Tan, *Encyclopedia of 7,700 Illustrations* (Rockville, Md.: Assurance Publishers, 1979), 1287. [28]G. Schrenk, "*dikaioo,*" in Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 175. [29]ஸ்டாட் என்பவர்,

உண்மையிலேயே தேவன் நம்மை நீதிமான்களாக்குகிறாரா (இது கத்தோலிக்க மார்க்கத்தின் நிலைப்பாடு ஆகும்) அல்லது அவர் நம்மை நீதிமான்கள் என்று நினைக்கிறாரா (இது சீரமைப்பாளர்களின் நிலைப்பாடு ஆகும்) என்பது பற்றிப் பதினாறாம் நூற்றாண்டில் நடைபெற்ற ஒரு பட்டிமன்றம் குறித்துக் கூறினார் (Stott, 127). [30]Morris, 178.

[31]J. D. Thomas, Class Notes, *Romans*, Abilene Christian College (1955). [32]H. Conzelmann, "*charis*," in Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans, Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 1298-1301. [33]Ibid., 1304. (Emphasis mine.) [34]*மற்றவர்களால் உங்களுக்கு நீட்டிக்கப்பட்ட "கிருபை" பற்றிய உங்கள் சொந்த விவரிப்பைப் பயன்படுத்துங்கள்.* [35]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 523. [36]Jimmy Allen, *Survey of Romans*, 4th ed., rev. (Searcy, Ark.: By the author, 1973), 55. [37]Philip Yancey, *What's So Amazing About Grace? (*Grand Rapids, Mich.: Zondervan, 1997), 13. [38]John Newton, "Amazing Grace," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [39]D. Martyn Lloyd-Jones, *Romans: Atonement and Justification* (3:20-4:25) (London: Banner of Truth Trust, 1970), 25. [40]*ரோமர் 6:21, 22; 7:5, 6; 16:25-27; கலாத்தியர் 4:8, 9; எபேசியர் 5:8; கொலோசெயர் 1:21, 22* [*"ஆயினும் ... இப்போது"*]; *3:7, 8; எபிரெயர் 12:26; 1 பேதுரு 2:10; 2:25.* [41]Moo, 135.

14

“மூன்று சிறிய வார்த்தைகள்”

[3:24ஆ–26]

1930ம் ஆண்டில், பெர்ட் கால்மர் மற்றும் ஹாரி ரூபி என்பவர்கள், “மூன்று சிறிய வார்த்தைகள்” என்ற தலைப்பில் ஒரு பாடலை எழுதினர்.[1] அந்தப்பாடல் பின்வருமாறு தொடங்குகிறது,

மூன்று சிறிய வார்த்தைகள்,
ஓ! அந்த ஆச்சரியமான சொற்றொடருக்காக
நான் எதைக் கொடுப்பேன்!
அந்த மூன்று சிறிய வார்த்தைகளைக் கேட்பதற்காக,
எனது எஞ்சியுள்ள நாட்களை
வாழ்வது மாத்திரமே நான் செய்வதாகும்.

“நான் உன்னை நேசிக்கிறேன்” என்பவையே அந்த “மூன்று சிறிய வார்த்தைகளாக” இருந்தன. நாம் தற்போது ரோமர் 3:21-26 வசனப்பகுதியைப் படித்துக்கொண்டிருக்கிறோம். இந்த வசனங்களில், நாம் தேவன் உங்களை நேசிக்கிறார் என்று கூறுகிற “மூன்று சிறிய வார்த்தைகளின்” வடிவங்களைக் கண்டறிகிறோம்.

இந்த “மூன்று சிறிய வார்த்தைகள்,” சட்டத்தின் நீதிமன்றம், அடிமைச் சந்தை மற்றும் பலிபீடம் ஆகியவற்றினின்று எடுத்தாளப்படுகிற ஒப்புவமைகளாக உள்ளன. இவற்றில் இரு வார்த்தைகளை பேச்சு உருவகம் என்று நாம் நினைக்காத அளவுக்கு வெகுகாலமாய் கிறிஸ்தவச் சொல்லாக்கத்தின் பகுதியாக இருந்துள்ளன: “நீதிமானாக்குதல்” மற்றும் “மீட்பு” என்பவை. மூன்றாவது வார்த்தை அவ்வளவு பழக்கமானது அல்ல: “கிருபாதாரபலி.” இல்லை, நாம் நேர்மையாக இருப்போமாக; அந்த மூன்றாவது வார்த்தை பழக்கமானதே அல்ல. இருந்தபோதிலும், அது மிகவும் தனிச்சிறப்புடையதாக இருக்கிறது.

முந்திய பாடத்தில், நாம் “நீதிமானாக்குதல்” என்ற வார்த்தைகளைப் பற்றிப் பேசினோம். இந்தப் பாடத்தில் நாம் 26ம் வசனம் வரை படித்து முடிக்கையில் “மீட்பு” மற்றும் “கிருபாதாரபலி” என்ற வார்த்தைகளைப் பற்றிப் படித்திருப்போம்.

நீதி கலந்துரையாடப்பட்டது (3:24ஆ, 25அ)

நாம், “தேவநீதியைக் குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிட்டன [அறியச்செய்தன]” (3:21) என்று முன்னதாகக் குறிப்பிட்டோம். இந்த “நீதி” என்பது, மக்கள் நீதிமான்களாக இராத போதிலும் அவர்களை நீதிமான்கள் என்று நினைப்பதற்கான தேவனுடைய திட்டமாயுள்ளது. நாம் இந்த நீதியை “இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினால்” நமக்கு

உரியதாக்குகிறோம்; இது "விசுவாசிக்கிற எல்லாருக்கும்" உரியதாகும் (3:22அ). எல்லாரும் அவரது நீதி தேவைப்படுகிற நிலையில் இருக்கிறோம்: "வித்தியாசமே இல்லை. எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி" (3:22ஆ, 23). தேவனுடைய நீதியை உரியதாக்கிக் கொண்டவர்கள் "இலவசமாய் அவருடைய கிருபையினாலே ... நீதிமான்களாக்கப்படுகிறார்கள் [தேவனால் 'குற்றமற்றவர்' என்று அறிவிக்கப்படுகிறார்கள்] என்று பேசப்படுகின்றனர்" (3:24அ).

மீட்பு

அது நம்மை நமது "மூன்று சிறிய வார்த்தைகளில்" இரண்டாவது வார்த்தைக்குக் கொண்டுவந்து சேர்க்கிறது: "மீட்பு." நாம், "கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு" கிருபையினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறோம் (வசனம் 24ஆ).

"மீட்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (apolutrosis என்ற) வார்த்தையானது, "மீட்கும் பொருள்" என்பதற்கான (lutrosis என்ற) வார்த்தையின் பலப்படுத்தப்பட்ட வடிவமாக உள்ளது, இது கிறிஸ்துவினு டைய மரணத்தின் தனிச்சிறப்பை விவரிக்கப் பல்வேறு வடிவங்களில் பயன்படுத்தப்பட்ட வார்த்தையாக உள்ளது (மத்தேயு 20:28; 1 தீமோத்தேயு 2:6 ஆகிய வசனங்களைக் காணவும்). Apolutrosis என்பது "பொதுவாக, கைதி யொருவரை விடுதலை செய்வதற்கு, அவரைப் பிடித்து வைத்துள்ளவர்களுக்குச் செலுத்தும் மீட்புக்கிரயம் அல்லது ஒரு அடிமையை அவனது எஜமானரிடத்தி லிருந்து விடுவிக்கச் செலுத்தும் கிரயம் என்பதற்குப் பயன்படுத்தப்பட்டது."[2] ரோமர் 3:9ல், பவுல் "யூதர் கிரேக்கர் யாவரும் பாவத்திற்குட்பட்டவர்கள்" என்று எழுதியபோது, பாவத்தை ஒரு கொடுமையான எஜமான் என்ற வகையில் அவர் சித்தரித்திருந்தார். அந்தக் கொடுமைக்காரனிடத்தில் இருந்து மனிதகுலம் எவ்வாறு விடுவிக்கப்பட முடியும்? கிறிஸ்து நமக்காக "மீட்கும்பொருளாக" வேண்டியிருந்தது.

நம்மில் சிலர், செய்தித்தாள்களின் தலைப்புச் செய்திகளில் அறிவிக்கப் பட்ட மீட்கும் பொருளைப் பற்றி நினைவுவைத்திருக்கிறோம்.[3] 1932ல், சார்லஸ் லின்ட்பெர்க் என்ற கவனிக்கத்தக்க விமான ஓட்டுநரும் அவரது மனைவியும், கடத்தப்பட்ட தங்கள் மகனை மீட்கும் முயற்சியாக 50,000 டாலர்களை (ஏறக்குறைய 24 லட்சம் ரூபாய்கள்) செலுத்தினர். 1963ல், பாடகரும் நடிகரு மான ஃபிராங்க் சினாட்ரா என்பவர் தமது மகன் ஃபிராங் Jr. என்பவரைத் திரும்பப் பெறுவதற்கு 240,000 டாலர்களை (ஏறக்குறைய ஒருகோடியே பதினைந்து லட்சத்து இருபதாயிரம் ரூபாய்கள்) செலுத்தினார். இயேசு செலுத்த வேண்டியிருந்த கிரயத்துடன் ஒப்பிடப்படுகையில் இந்த மீட்கும் பொருள் யாவும் மிகவும் மங்கலாகின்றன. 25ம் வசனத்தைச் சற்றே உற்றுநோக்கிய நிலையில், நாம் இயேசு சிலுவையில் சிந்திய இரத்தமே *அந்த மீட்கும் பொருளாக இருந்தது என்பதைக் காண்கிறோம்.*

இந்த நிருபத்தில் முதன்முறையாக, நீதிமான்களாக்கப்படுதல் இயேசுவின் இரத்தத்துடன் பிணைக்கப்படுவதை 25ம் வசனத்தில் நாம் காண்போம், ஆனால் அதுவே கடைசிமுறையாக இருக்காது. 5:9ல், பவுல் நாம் "அவருடைய இரத்தத்தால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்" என்று கூறினார். பேதுருகூட, "அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்

குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்கள்" என்று உறுதிப்படுத்தினார் (1 பேதுரு 1:18, 19). பாவத்திற்குள் நுழைவதற்குப் பலவழிகள் உள்ளன, ஆனால் அதிலிருந்து *வெளியேறுவதற்கு* ஒரே ஒருவழிதான் உள்ளது: இயேசுவின் இரத்தத்தின் மூலம் என்பதே அவ்வழியாகும். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" என்று எழுதினார் (எபிரெயர் 9:22). R. C. பெல் என்பவர், "மீட்பில் மேலோங்கியுள்ள நிறம் இரத்த [சிகப்பு நிறம்] ஆகும்" என்று எழுதினார்.[4]

சிலர் (அவர்கள் கூறுகிறபடி) "இரத்தமயமான மார்க்கம்" என்ற கருத்தினால் எதிர்த்து விலக்கப்பட்டு இருக்கின்றனர். அவர்கள், இரத்தம் என்ற வார்த்தையை சபையின் பாடல் புத்தகங்களில் இருந்து நீக்க விரும்புகின்றனர்; அவர்கள் "இரத்தத்தினால் கழுவப்படுதல்" என்பது போன்ற பழம்பெரும் கீர்த்தனைகளை இகழ்கின்றனர். "இயேசுவின் இரத்தம்" இயேசுவின் மரணத்திற்கு ஒரு metonymy[5]யாக [ஆகுபெயராக] உள்ளது - இது இயேசு நமது பாவங்களின் குற்றத்தைத் தம்மீதே சுமந்தார் என்பது போன்றதாகும். பின்வரும் சொற்றொடர்கள் யாவையும் இயேசுவுக்கு நடைமுறைப்படுத்தப்படும்போது ஒரேவிதமான மீட்பின் செயலையே குறிக்கின்றன: "இரத்தம்," "சிலுவை," "சிலுவையிலறைதல்," "பாடுகள்," "மரணம்."

இரத்தத்தின் மூலமாக ஏற்படும் இம்மீட்பு "கிறிஸ்து*வுக்குள்*" உள்ளது (வசனம் 24ஆ). "கிறிஸ்துவுக்குள்" என்பது பவுலுக்குப் பிரியமான சொற்றொடர்களில் ஒன்றாக இருந்தது. (இதை அவர் 169 முறைகள் பயன்படுத்தினார்![6]) இது, ஒரு கிறிஸ்தவர் தமது எஜமானருடன் கொண்டுள்ள நெருங்கிய, அந்நியோன்னியமான உறவைக் குறிக்கிறது. ரோமர் 6:3ல் நாம் "கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்" என்று நாம் வாசிப்போம்.

நாம், "மீட்பு" என்ற வார்த்தையைப் பற்றிய கலந்துரையாடலை விட்டுச் செல்வதற்குமுன்பு, பல ஆண்டுகளுக்கு முன்பே கல்வியாளர்கள் "மீட்கும் பொருள் யாரிடம் செலுத்தப்பட்டது?" என்ற கேள்வியின்மீது விவாதித்திருந்தனர் என்பதை நான் குறிப்பிடுவது அவசியமாயிருக்கிறது. சட்டப்படி, பேச்சு உருவகம் ஒன்று, பலகருத்துக்களை அல்ல ஆனால் ஒரு கருத்தைத் தெளிவாக்கப் பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக, இயேசு "வாசலாக" இருக்கிறார் (யோவான் 10:9), ஆனால் அது, அவர் முளைகளின்மீது அலைவாடுகிறார் என்று அர்த்தப்படுவதில்லை. "மீட்கும் பொருள் யாரிடம் செலுத்தப்பட்டது?" என்று கேட்பது, உருவகத்தை மிகவும் வலியுறுத்துவதாக உள்ளது. விளையாட்டு வீரர் ஒருவர் "குழுவின் நன்மைக்காகத் தம்மையே தியாகம் செய்தார்" என்று நாம் கூறும்போது, "அவர் எந்தக்கடவுளுக்குத் தன்னைப் பலியாகக் கொடுத்தார்?" என்று கேட்பதில்லை. [இவ்விடத்தில் ஆங்கில மொழியில் உள்ள sacrifice என்ற வார்த்தை தியாகம் மற்றும் பலி ஆகிய இரு அர்த்தங்களையும் குறிக்க பயன்படுகிறது] நீங்களும் நானும் பாவத்தில் அடிமைப்பட்டுக் கிடந்தோம், நம்மைநாமே விடுவிக்க வழியெதுவும் இல்லாதிருந்தோம், நமது சுதந்திரத்தைப் பெற்றுத்தர இயேசு *மரிக்க* வேண்டியிருந்தது என்பதே மீட்கும்பொருள் ஒப்புவமை பற்றிய கருத்தாக உள்ளது!

கிருபாதாரபலி

(ஆங்கிலத்தில்) 24ம் வசனம் "Christ Jesus" என்ற வார்த்தைகளுடன் முடிகிறது. பவுல் "அவரையே ஏற்படுத்தினார்"[7] (வசனம் 26) என்று கூறியபோது

அவர் இன்னமும் இயேசுவையே குறிப்பிட்டார்.

> *சிலுவையில் அறைதல் என்பது தேவனுடைய அன்பின் வெளியரங்க மான செயல்விளக்கமாயிருந்தது. இயேசுவின் நாட்களில் இருந்த "ரகசிய மதக்குழுக்கள்" பெயரறியாத்தன்மை மற்றும் ரகசியம் ஆகியவற்றைச் சார்ந்திருந்தன, ஆனால் சுவிசேஷமானது "ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல" (நடபடிகள் 26:26). கிறிஸ்து வெளியரங்கமான ஊழியத்தை மேற்கொண்டார் (லூக்கா 2:31); அவர் சிலுவையில் அறையப்பட்டது அலுவலகரீதியான வெளியரங்கமான நடவடிக்கையாயிருந்தது; சுவிசேஷ மானது வெளியரங்கமான அறிவித்தலினாலேயே பரப்பப்பட்டது.*[8]

அது நம்மை பழக்கமற்ற வார்த்தைகளுக்கு, நமது சிந்தனைக்கு அறைகூவல் விடுக்கும், துன்மார்க்கரைத் தேவன் எவ்வாறு நீதிமானாக்க முடியும் என்பது பற்றி இருதயத்தில் ஆழப்பதியச் செல்லும் வார்த்தைக்குக் கொண்டுவருகிறது: "கிருபாதாரபலி" என்ற வார்த்தை. கிறிஸ்துவைக் குறிப்பிட்டுப் பவுல், "கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் *கிருபாதாரபலியாக* அவரையே ஏற்படுத்தினார்" (வசனம் 26) என்று கூறினார். NASB வேதாகமத்தில் "propitiation" ("கிருபாதாரபலி") என்ற வார்த்தை பின்வரும் எழுச்சியான வசனப்பகுதிகளில் காணப்படுகிறது:[9]

> *... அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதருக்கு ஒப்பாகவேண்டியிருந்தது (எபிரெயர் 2:17).*
>
> நம்முடைய பாவங்களை *நிவிர்த்தி* செய்கிற *கிருபாதாரபலி* அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார் (1 யோவான் 2:2).
>
> நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற *கிருபாதாரபலி*யாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது (1 யோவான் 4:10).

"கிருபாதாரபலி" என்பது குறிப்பிட்ட மதவட்டாரங்களில் பிரபல மான வார்த்தையாக இருப்பதில்லை. இது சராசரி நபருக்குப் பழக்கமற்ற தாக உள்ளது என்பதே சிலர் இதை நமது மார்க்கச் சொல்அகராதி யிலிருந்து நீக்க விரும்புவதற்கான காரணமாக இருக்கிறது.[10] வேதாகமரீதி யான சொல்லாக்கத்தில் போதிய அனுபவமற்றவர்களுடன் தெளிவாகச் செய்தித் தொடர்பு கொள்ளுதலின் முக்கியத்துவத்தை நான் ஒப்புக்கொள்கிறேன்; நமது செய்தியை வேண்டுமென்றே தெளிவற்றதாக்குதல் என்பது அர்த்தமற்றதாக உள்ளது. இருப்பினும், சில இறையியல் சொற்றொடர்கள், நாம் அவற்றை நீக்க இயலாத அளவுக்கு மிகவும் அர்த்தம் நிறையப்பெற்றுள்ளன. "கிருபாதாரபலி" என்பது அத்தகைய சொற்றொடராக உள்ளது.

"கிருபாதாரபலி" என்ற சொற்றொடர் மறைமுகமாக உணர்த்தும் விஷயத்தைப் பற்றிப் பலர் சங்கடம் அடைதல் என்பது இந்தச் சொல் பிரபலமாகாதிருப்பதற்கு இன்னொரு காரணமாகும்: இது தேவனுடைய *கோபத்தை* அமைதிப்படுத்துதலின் அவசியத்தை மறைமுகமாக உணர்த்துகிறது. "கிருபாதாரபலி" என்பதற்கு ஆங்கில வார்த்தையான "propitiation" என்பது "சினம்தணிக்கும் சில விஷயம், [விசேஷமாக] கடவுளுக்குச் செலுத்தப்படும் சினம்தணிக்கும் பலி" என்று விளக்கப்படுகிறது.[11] "கிருபாதாரபலி" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள (*hilasterion*) என்ற கிரேக்க வார்த்தை "சில வேளைகளில் சலனமடையும் புத்திகொண்ட கடவுள்களின் கோபத்தை அமைதிப்படுத்தும் நோக்கம்" கொண்டிருந்த பலிகள் போன்ற, "மதக்குழு நடவடிக்கைகளை" குறிப்பதற்குப் புறதெய்வ வணக்கத்தார்களால் பயன்படுத்தப்பட்டது.[12] உண்மையான தேவன், புறசமயத்தைச் சேர்ந்த பொய்த்தேவர்களுடன் வரிசையில் நிறுத்தப்பட இயலாது (மற்றும் அவ்வாறு செய்யக்கூடாது) என்று விளக்கவுரையாளர்களும் மொழிபெயர்ப்பாளர்களும் மறுப்புரை தெரிவிக்கின்றனர்.

அவர்கள் (செப்துவஜிந்த், அல்லது LXX எனப்படும்) பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பானது, *hilasterion* என்ற வார்த்தையை, "கிருபாசனத்தை" (உடன்படிக்கைப் பெட்டியின் மூடியை) குறிப்பதற்கு அடிக்கடி பயன்படுத்துவதைச் சுட்டிக்காண்பிக்கின்றனர் - மற்றும் எபிரெயர் 9:5ல் *hilasterion* என்பது கிருபாசனத்தையே குறிக்கிறது என்பது தெளிவு. கிருபாசனம் என்பது, ஆண்டுக்கு ஒருமுறை, பாவநிவிர்த்தி நாளில், பிரதான ஆசாரியர், மக்களின் பாவங்களுக்காக மிருகங்களின் இரத்தத்தை எடுத்துச் சென்று தெளிக்கும் இடமாக இருந்தது (எபிரெயர் 9:7; லேவியராகமம் 16:14-16 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும்). மறுப்புரையாளர்கள் இவ்விதமாக, "பாவநிவிர்த்தி" (அல்லது அதைப் போன்ற ஒன்று) *hilasterion* என்பதன் சிறந்த மொழிபெயர்ப்பாக இருக்கும் என்று வலியுறுத்துகின்றனர்.

Hilasterion என்பது கிருபாசனத்தைக்[13] குறித்துள்ளதா இல்லையா என்ற கேள்வி தகுதியற்றதாகக் காணப்படுகிறது, இதை டக்ளஸ் J. மூ. என்பவர் பின்வருமாறு சுட்டிக்காண்பித்துள்ளார்: "பழைய ஏற்பாட்டை சுமாராக வாசித்தலே, பாவநிவிர்த்தி நாளின் சடங்கு, பாவங்களுக்கு விமோசனம் (நிவிர்த்தி) மற்றும் தேவனுடைய கோபத்தை திருப்புதல் (கிருபாதாரபலி) என்பவற்றை உள்ளடக்கிற்று என்பதைத் தெளிவாக்குகிறது."[14] F. F. புரூஸ் என்பவர் பின்வருமாறு விளக்கம் அளித்தார்:

> சந்தர்ப்பப்பொருள் அதிகாரம் அளிக்கும் என்றால், விலக்கிவைக்கும் தெய்வீக கோபத்தை, *hilastērion* என்பதன் அர்த்தத்தில் இருந்து நீக்கிப்போடக் காரணம் எதுவும் இல்லை. மற்றும் சந்தர்ப்பப்பொருள், ரோமர் 3:25ல் *hilasterion* என்பதன் அர்த்தத்தில் விலக்கிவைக்கும் தெய்வீக கோபத்தை உள்ளடக்குதல் என்பதற்கு அதிகாரம் அளிக்கிறது. பவுல் ஏற்கனவே 1:18ல் "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோத மாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" என்று கூறியிருந்தார்; பின்பு எப்படி இந்த "கோபம்" நீக்கப்பட வேண்டியதாக

> *இருக்கிறது? தேவன் கிறிஸ்துவுக்குள் அளித்துள்ள hilastērion என்பது அவபக்தி அநியாயம் உள்ளவர்களின் குற்றத்தை மாத்திரமல்ல, ஆனால் அதே வேளையில் ஒழுக்கரீதியான உலகில் இப்படிப்பட்ட எண்ணப்போக்குகள் மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றின் பின்தொடர்ச்சியாக உள்ள தெய்வீக தண்டனையையும் விலக்குகிறது.*[15]

"கிருபாதாரபலி" என்ற வார்த்தையின் பயன்பாடு தேவனை புறதெய்வ வணக்கக் கடவுள்களின் தரத்தில் வைக்கிறது என்ற மறுப்புரை பற்றிய விஷயம் என்ன? ஜான் ஸ்டாட் என்பவர், "கிருபாதாரபலி" என்பது பற்றி "புறதெய்வ மற்றும் கிறிஸ்தவக் கண்ணோட்டத்திற்கு இடையில் வேறுபாடுகளை மிகைப்படுத்துதல் என்பது கடினமானதாக இருக்கும்" என்று சுட்டிக்காண்பித்தார்.[16]

- புறதெய்வ வணக்கத்தாரின் கடவுள்கள் "உணர்வு நிலை மற்றும் பொருத்தங்கள் ஆகியவற்றிற்கு உட்பட்ட மோசமான குணங்களுடையவையாகவும், சலனபுத்தியுடையவைகளாகவும்" இருந்தன. "தேவனுடைய கோபம் துன்மார்க்கர்மீது அமைவுறுகிறது. தேவனுடைய கோபத்தைப்பற்றி, கொள்கை அமைவற்றது, முன்னுரைக்க இயலாதது, அல்லது கட்டுப்படுத்த முடியாதது என்று எதுவும் இல்லை; அது துன்மார்க்கத்தால் மாத்திரமே எழுப்பப்படுவதாக உள்ளது" என்பதே கிறிஸ்தவக் கண்ணோட்டமாகும்.
- புறதெய்வ வணக்கத்தில், *மனிதர்கள்* தங்கள் தெய்வங்களின் கோபத்தை அமைதிப்படுத்த முயற்சி செய்கின்றனர். பாவம் நிறைந்த மக்கள் தேவனது கோபத்தை அமைதிப்படுத்த இயலாது என்பதைக் கிறிஸ்தவர்கள் புரிந்துகொண்டுள்ளனர். இதற்கான முதல் தூண்டல் பணியைத் *தேவன்தாமே* ஏற்படுத்த வேண்டியிருந்தது.
- புறதெய்வ வணக்கத்தாரின் பலிகள், நிலத்தில் விளைந்தவற்றின் பலிகளையும், மிருகங்களையும் மற்றும் (சில வேளைகளில்) மனித பலிகளையும் உள்ளடக்கியிருந்தன - இவை அவர்களின் கடவுள்களை சாந்தப்படுத்தலாம் அல்லது சாந்தப்படுத்தாமல் போகலாம். தேவனுடைய *சொந்த குமாரனே* நமது கிருபாதாரபலியின் ஆதாரமூல மாக இருக்கிறார் - இந்த பலி சந்தேகமின்றி அவரது கோபத்தைத் திருப்திப் படுத்துகிறது![17]

கடைசியான ஒரு மறுப்புப்பற்றி ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டும்: யாரேனும் ஒருவர், "தேவன் *தம்மையே* சாந்தப்படுத்திக்கொள்ள தாமே ஒரு பலியை அளித்தல் என்பதை நினைத்துப் பார்த்தல் நகைப்புக்கு உரியதாக இருக்கிறது" என்று சொல்லக்கூடும். பாவம் நிறைந்த மனிதருக்கு எதிரான தேவகோபம் (1:18) திருப்திப்படுத்தப்பட *வேண்டும்,* இல்லையென்றால் இரட்சிப்பின் நம்பிக்கை எதுவும் இராது என்று மாத்திரம் பதில் அளிக்கவே நான் விரும்புகிறேன். இருப்பினும், பாவம் நிறைந்த ஆண்களும்

பெண்களும் தேவனுடைய கோபத்தைத் தணிப்பதற்குப் பலிசெலுத்த ஒன்றும் கொண்டிருப்பதில்லை (3:10, 23). விஷயம் அப்படியிருக்கையில், தேவனைத் தவிர வேறுயார் அந்த பலியைச் செலுத்த முடியுமா?

அந்த பலி எதுவாக இருந்தது? [தமிழ் வேதாகமத்தில்] 26ம் வசனம் தொடர்ந்து இவ்வாறு கூறுகிறது: "கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதாரபலியாக அவரையே ஏற்படுத்தினார்."[18] இயேசு சிலுவையின்மீது தமது இரத்தத்தைச் சிந்த வேண்டியிருந்தது.

கிருபாதாரபலி பற்றிய வேதாகமரீதியான போதனையை நாம் எவ்வாறு தொகுத்துரைக்கலாம்? தேவன் ஒரு பரிசுத்தமான தேவனாக இருக்கிறார் (லேவியராகமம் 11:44); பரிசுத்தமான தேவன் என்ற வகையில் அவர் பாவத்தை முகம்பார்க்க இயலாது. தேவன் ஒரு நீதியுள்ள தேவனாக இருக்கிறார்; "நீதி செய்கிற தேவன்" (ஏசாயா 30:18) என்ற வகையில், அவர் பாவத்தையும் கீழ்ப்படியாமையையும் தண்டித்தாக *வேண்டும்*. பரிசுத்தமும் நீதியும் உள்ள தேவன் என்ற வகையில், அவர் பாவம்நிறைந்த மனிதகுலத்தை நித்திய நரகத் திற்கு அனுப்ப எல்லா உரிமையும் கொண்டுள்ளார். நீதிசெய்தல் என்பது செயல்விளக்கப்பட்டாக *வேண்டும்*; பாவம் தண்டிக்கப்பட்டாக *வேண்டும்*; துன்மார்க்கத்திற்கு எதிரான தேவகோபம் திருப்திப்படுத்தப்பட்டாக *வேண்டும்*. அதே வேளையில், தேவன் அன்பின் தேவனாக இருக்கிறார் (1 யோவான் 4:16); மற்றும் அன்பின் தேவன் என்ற வகையில், ஒருவரும் கெட்டுப்போகக்கூடாது என்று அவர் விரும்புகிறார் (2 பேதுரு 3:9). சாத்தியமற்றதாகக் காணப்படக்கூடிய இந்த இக்கட்டான நிலைக்குத் தேவனுடைய தீர்வு என்னவாக இருந்தது? அவர் நமது பாவங்களுக்குத் தண்டனை அனுபவிக்கத் தமது சொந்த குமாரனையே அனுப்பினார்.

> நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழி தப்பித்திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ [தேவன்] நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் [இயேசு] மேல் விழப்பண்ணினார் (ஏசாயா 53:6).

> ... கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து (1 கொரிந்தியர் 15:3).

இந்தத்தீர்வு "கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும்" என்ற சொற்றொடரில் குறிப்பாக உணர்த்தப்படுகிறது. இது 5ம் அதிகாரத்தில் விரித்துரைக்கப்படுகிறது:

> அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே (வசனங்கள் 6-9).

மீண்டுமாக, 8ம் அதிகாரத்தில், பவுல் தேவன் "தம்முடைய சொந்தக்

குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர்'' என்று உறுதிப்படுத்தினார் (வசனம் 32).

ஆண்டுகளினூடே பிரசங்கியார்கள், தேவன் ஒரே வேளையில் தமது நீதி யையும் அன்பையும் எவ்வாறு வெளிக்காண்பிக்க இயலும் என்று விவரிக்கப் போராடியுள்ளனர்.[19] பின்வரும் கதையானது வலிமைவாய்ந்த, ஞானமிக்க ஒரு தலைவனைப் பற்றியதாகும்:

> அவன் தனது மேன்மையான உடல் பலத்தினால் மாத்திரமல்ல, ஆனால் தனது முற்றான நியாயம் மற்றும் பட்சபாதமின்மை ஆகியவற்றினாலும் ஆளுகைசெய்தான். திருட்டுக்கள் பல நடந்தபோது அவன், திருடன் பிடிபட்டால் மலைஜாதி சவுக்கடியாளரைக் கொண்டு அவனை [திருடனை] பத்து சவுக்கடிகளால் தண்டிப்பதாக அறிவித்திருந்தான். திருட்டுக்கள் தொடர்ந்து நடைபெற்றுவருகையில், [தலைவன்] சவுக்கடிகளின் எண்ணிக்கையை நாற்பதாக்கினான், இதைச் சகிக்கக்கூடிய அளவுக்குப் பலம் அவன் ஒருவனுக்கே இருந்தது என்பதை ஒவ்வொருவரும் அறிந்திருந்தனர். அவர்கள் பயங்கர உணர்வடையும்படியாக, அந்தத்தலைவனின் வயதான தாய்தான் திருடியாக இருந்தாள், அறிவிக்கப்பட்டிருந்த தண்டனையை உண்மையிலேயே அவளுக்கு அவன் தருவானா இல்லையா என்பது பற்றிய யூகங்கள் உடனடியாகத் தொடங்கின. அவன் தனது அன்பைத் திருப்திப் படுத்த அவளை மன்னித்து விட்டுவிடுவானா அல்லது அவளுக்கு நிச்சய மாகவே மரணத்தைக் கொண்டுவரக்கூடிய அந்தத் தண்டனையைக் கொடுத்துத் தனது சட்டத்தைத் திருப்திப்படுத்துவானா? அந்தத் தலைவன் தனது நேர்மைக்கு உண்மையாயிருக்க, தனது தாய்க்கு நாற்பது சவுக்கடிகள் தரப்படவேண்டும் என்று தீர்ப்பளித்தான். ஆனால் தனது தாய்மீதான தனது அன்புக்கு உண்மையாயிருக்க, அவளது முதுகின்மீது சவுக்கடி விழுவதற்கு முன்னதாக அவளது நோஞ்சையான உடலை அவன் தனது உடலால் மூடி, அவளுக்குக் குறித்திருந்த சவுக்கடிகளைத் தானே தன்மீது வாங்கிக்கொண்டான்.[20]

தேவன் நமக்குச் செய்துள்ளவற்றை விளக்கியுரைக்க எந்த விவரிப்பும் போதுமானதாக இருப்பது இல்லை. "கிருபாதாரபலி" என்ற வார்த்தையானது, இயேசுவின் பலி தேவனுடைய கோபத்தைத் *திருப்திப்படுத்தியது* என்று அறிவிக்கிறது, இவ்விதமாக இது நமது இரட்சிப்பைச் சாத்தியமாக்கிற்று என்பதுடன் இந்த வார்த்தை பற்றிய நமது அறிவில் நாம் நிறைவடைய வேண்டும்.

இந்த ஆச்சரியமான கொடையை நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்கிறோம்? மீண்டுமாகப் பவுல், இதை நாம் ''விசுவாசத்தின்மூலம்'' செய்கிறோம் என்று வலியுறுத்தினார்: "கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதாரபலியாக அவரையே ஏற்படுத்தினார்" (ரோமர் 3:26).

நீதி தற்காக்கப்பட்டது (3:25, 26)

25ம் வசனத்தில் நீதியுள்ள ஒருவர் (பரிசுத்தமான ஒரு தேவன்), நீதியற்றவர் (தேவபக்தியற்ற மனிதர்)களை "நீதியானவர்கள்" என்று எவ்வாறு அறிவிக்க முடியும் என்ற முரண்பாடுபோலத் தோன்றும் மெய்யுரைக்கு நாம் திரும்புகிறோம். கிரேக்க

வசனத்தில், 21ம் வசனத்தில் தொடங்கும் வாக்கியமானது 26ம் வசனம் வரையில் தொடருகிறது, ஆனால் NASB மொழிபெயர்ப்பாளர்கள், 25ம் வசனத்தின் நடுவில், "through faith" என்பதற்குப்பின்னால் ஒரு புள்ளி வைத்துள்ளனர். இங்கு அவர்கள் ("This was" என்ற) இரு வார்த்தைகளை இடைச்செருகினர். பின்பு வசனப்பகுதிக்குத் திரும்பினர்: "இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும்" (வசனம் 25ஆ). உண்மையில் இந்த வாக்கியம் தொடர்கிறது என்பதை மனதில் வைத்துக்கொள்ளவும்: "கிருபாதாரபலியாக அவரையே ஏற்படுத்தினார்." இது தேவனுடைய கோபத்தை திருப்திப்படுத்திற்று மற்றும் அதே வேளையில், தேவனுடைய நீதியைச் செயல்விளக்கப்படுத்திற்று.

நீதி செயல்விளக்கப்படுத்தப்பட்டது

இவ்வசனப்பகுதியில் தேவனுடைய "நீதி" என்பது அவரது நீதியுள்ள இயல்பைக் குறிக்கிறது. "செயல்விளக்கப்படுத்துதல்" என்பது [இது தமிழ் வேதாகமத்தில் "காண்பிக்கும்பொருட்டாக" என்று இருக்கிறது] "முன்பாக ... காண்பித்தல்," "நிருபணம்"[21] என்று அர்த்தப்படும் கூட்டுச்சொல்லிலிருந்து வந்துள்ளது. இப்படிப்பட்டதொரு வெளிப்படையான அறிவித்தல், தேவனை சோதனைக்குட்படுத்தும் துடுக்குத்தனம் கொண்டவர்களின் பயனுக்கானதாக இருந்தது (3:4ஆ வைக் காணவும்).

இப்படிப்பட்ட செயல்விளக்கம் ஏன் அவசியமாயிருந்தது? பவுல், "தேவன் பொறுமையாயிருந்த"[22] - "முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம்பொறுத்துக்கொண்டதைக் குறித்துத் தம்முடைய நீதியைக் காண் பிக்கும்பொருட்டாகவும்" என்று உரைத்தார் (வசனம் 25). "முற்காலத்தில் நடந்த பாவங்கள்" என்பவை பழைய ஏற்பாட்டு யுகத்தில் செய்யப்பட்ட பாவங்களாக உள்ளன[23] (KJV வேதாகமம் சுட்டிக்காண்பிக்கிறபடி). தேவன் அந்தப் பாவங்களை *மன்னித்தார்* என்று இவ்வசனப்பகுதி கூறுவதில்லை என்பதைக் கவனியுங்கள். மாறாக வசனப்பகுதியானது, அவர் அவற்றை "பொறுத்துக் கொண்டார்" என்று கூறுகிறது (நடபடிகள் 17:30 உடன் ஒப்பிடவும்). CJB வேதாகமம் இவ்வசனத்தை, "He had passed over [with neither punishment nor remission] the sins people had committed in the past" என்று விரிவாக்கம் செய்துள்ளது.

பவுல், "எல்லாரும் பாவஞ்செய்து" எல்லாரும் "தேவமகிமையற்றவர்களாகி" இருப்பதை நிலைநாட்டியிருந்தார் (3:23). இது ஆபிரகாம், தாவீது (அதிகாரம் 4ஐக் காணவும்), மற்றும் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடத்தக்கவர்களான மற்ற எல்லாரையும் அவசியமாகவே உள்ளடக்கியது. பழைய ஏற்பாட்டில் தேவன் இஸ்ரவேல் நியாயாதிபதிகளிடத்தில், அவர்கள் நீதிமான்களை நியாயந்தீர்த்து துன்மார்க்கரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க வேண்டும் என்று திரும்பத்திரும்பக் கூறிக்கொண்டிருந்தார் (உபாகமம் 25:1ஐக் காணவும்); அவர்கள் எதிரானவற்றைச் செய்தபோது அவர்களை அவர் சிட்சித்தார் (நீதிமொழிகள் 17:15; ஏசாயா 5:23). அவரது சொந்த நீதியைக்குறித்து அவர், "நான் துன்மார்க் கனை நீதிமான் என்று தீர்க்கமாட்டேன்" என்று கூறினார் (யாத்திராகமம் 23:7). விஷயம் அப்படியிருக்கையில், அவர் ஆபிரகாம், தாவீது இன்னும் மற்றவர் களின் பாவங்களைக் காணாதிருக்கக்கூடுவது எப்படி? ரோமருக்கு எழுதிய நிருபத்தின் அடுத்த அதிகாரத்தில் உள்ள சொற்றொடராக்கங்களைக் கடனாகப் பெற்று எடுத்துக்கூறுவதென்றால், நீதியுள்ள தேவன் எவ்வாறு "பாவியை நீதி

மானாக்குகிறவர்" (4:5) என்று குறிப்பிடப்பட முடியும்?

பழைய ஏற்பாட்டுக் காலங்களில், தேவன் தம்மீது நம்பிக்கை வைத்து இருந்தவர்களால் "செய்யப்பட்ட ... பாவங்களை" காணாமல் விட்டு*விட வில்லை* என்பதே இதற்குப்பதிலாக உள்ளது. மாறாக, அவர் ஒரு நாளில் தமது குமாரன், தம் இரத்தத்தைப் பாவங்களுக்கு - இயேசுவின் பிறப்பிற்கு முன்னால் இருந்த விசுவாசிகளின் பாவங்களுக்கும் அவரது மரணத்திற்குப் பின்னால் வாழும் விசுவாசிகளின் பாவங்களுக்கும் - கிருபாதாரபலியாகக் கொடுப்பார் என்று முன் எதிர்பார்த்திருந்தார். பழைய ஏற்பாடு மன்னிப்பைப் பற்றிப் பேசுகிறது (எடுத்துக்காட்டாக, யாத்திராகமம் 34:7; லேவியராகமம் 4:20, 26, 31, 35 ஆகிய வசனங்களைக் காணவும்); ஆனால் அது ஒரு தற்காலிக மன்னிப்பாக இருந்தது, அது சிலுவையில் இயேசுவின் மரணத்தைச் சார்ந்திருந்தது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் [பழைய ஏற்பாட்டின்] காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்தி செய்யும்பொருட்டு அவர் [இயேசு] மரணமடைந்து" என்று எழுதினார் (எபிரெயர் 9:15). இந்த சத்தியம் சிலவேளைகளில் பின்வருமாறு விளக்கியுரைக்கப்படுகிறது: "இயேசு சிலுவையில் மரித்தபோது, அவரது இரத்தம் *முன்னோக்கி,* (சிலுவைக்குப்பின்னான காலத்தில் வாழ்பவர்களுக்கு) மாத்திரமல்ல, ஆனால் *பின்னோக்கியும்* (சிலுவைக்குமுன்னான காலத்தில் வாழ்ந்தவர்களுக்கும்) பாய்ந்தது."

பழைய ஏற்பாட்டில் தேவன் பாவத்தை எவ்வாறு கையாண்டார் என்பதை பலவழிகளில் விளக்க நாம் முயற்சி செய்யலாம். எடுத்துக்காட்டாக, நான் எனது குடும்பத்தாருடன் உணவகம் ஒன்றில் உணவருந்த சென்ற நிகழ்ச்சி பற்றிய ஒப்பீடு ஒன்றை இவ்விடத்தில் ஆலோசனையாகக் கூறுவேன். உணவு உண்ட பின்பு அதற்கான ரசீதைக் கேட்டபோது, உணவக வேலையாள், அறையின் மற்றொருபகுதியில் அமர்ந்திருந்த எங்கள் நண்பர்களைச் சுட்டிக்காண்பித்து, "ரசீதிற்கான பணம் அவர்களால் செலுத்தப்பட்டுவிட்டது" என்று கூறினார். உண்மையில் ரசீதிற்குப்பணம், (*பிற்பாடு* எனது நண்பர் தமது ரசீது மற்றும் எனது ரசீது ஆகியவற்றிற்குச் செலுத்தும்வரையில்) "செலுத்தப்பட்டிருக்காது"; ஆனால் அந்த வேலையாள், ரசீதிற்குப் பணம் *செலுத்தப்பட்டுவிடும்* என்ற நம்பிக்கை கொண்டிருந்தார், எனவே அது "முழுமையாகச் செலுத்தப்பட்டதாக" அவர் கருதினார்.

தேவன் காலத்திற்குள் - நிகழ்ச்சிகளின் வரிசைத்தொடருக்குள் - நம்மைப்போல் கண்ணோக்கிக்கொண்டிருப்பதில்லை என்பது, ஒருவேளை அதிகம் துல்லியமான விளக்கமாக இருக்கலாம் (2 பேதுரு 3:8ஐக் காணவும்). தேவனுடைய கண்ணோக்கில் இருந்து பார்க்கையில், படைப்பிற்கு முன்னதாகவே, அவரது குமாரன் சிலுவையில் அறையப்படுதல் என்பது நிறைவேற்றப்பட்ட நிகழ்வாக இருந்தது (ஆதியாகமம் 3:15; எபேசியர் 3:11 ஆகியவற்றைக் காணவும்). நாம் ரோமர் 8ம் அதிகாரத்தை அடைகையில் இதை இன்னும் முழுமையாகக் கலந்துரையாடி தேவனின் முன்னறிவு பற்றிய கருத்துடன் போராடுவோம். D. ஸ்டுவார்ட் பிரிஸ்கோ என்பவர் நாள்வரிசை பற்றிய தேவனுடைய கருத்துநோக்கைப் பற்றிப் பின்வரும் விவரிப்பைக் கொடுத்தார்:

... விஷயங்களைக் காணத் தேவனுடைய வழியில், காலத்தில் நடப்பது போன்று நிகழ்வுகள் வரிசைத் தொடரில் நடப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக அவைகள் நித்தியத்திற்கும் நிலவுவதால் அவைகள் எப்போதும் நிகழ்கால நிலையில் நிலவுகின்றன. ... கிறிஸ்துவின் சிலுவை என்பது காலம் மற்றும் இடம் ஆகியவற்றின் நிகழ்வாக இருக்கையில், மிகவும் முக்கிய மாக அது, எப்போதும் தகுதிவாய்ந்த மற்றும் பயனளிக்கக்கூடிய நித்திய நிகழ்வாக உள்ளது.[24]

இயேசு சிலுவைக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்களுக்காக மாத்திரம் மரிக்கவில்லை; அவர் தமது மரணத்திற்குப் பிந்தியகாலத்தில் வாழ்பவர்களுக்காகவும் மரித்தார். இவ்விதமாகப் பவுல், "இக்காலத்திலே தமது [தேவனுடைய] நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும்" என்று தொடர்ந்தார் (வசனம் 25இ). இரத்தமானது "இந்த நிகழ்காலத்தில்" பாவத்தை இன்னமும் சுத்திகரிக்கிறது என்பது பற்றி நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்!

நீதி விளக்கப்பட்டது

அது நம்மைத் தொகுப்புரைக் கூற்றுக்குக் கொண்டு வருகிறது: "தாம் [தேவன்] நீதியுள்ளவரும், ... நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி" (வசனம் 25ஆ). ஜான் பென்கெல் என்பவர், இந்த வார்த்தைகளில், நாம் "சுவிசேஷத்தின் மிகவும் மேன்மையான, முரண்பாடுபோலத் தோன்றும் மெய்யுரையை" கண்டறிகிறோம் என்று கூறினார்.[25] *தேவன், ஒரேவேளையில் எப்படி "நீதியுள்ளவராக" (பாவத்தைத் தண்டிப்பவராக) மற்றும் "நீதிமானாக்குகிறவராக" (பாவிகளை இரட்சிப்பவராக) சாத்தியமான வகையில் இருக்க முடியும்? நாம் கண்டுள்ளபடி, சிலுவை இதைச் சாத்தியமாக்குகிறது. ஜேம்ஸ் R. எட்வர்டு என்பவர், "கிறிஸ்துவின் சிலுவையானது தேவனுடைய நீதி மற்றும் அன்பு ஆகிய இரண்டையும் போதுமான அளவுக்கு விளக்கப்படுத்திற்று, மற்றும் அது இவ்விரண்டையும் சமரசப்படுத்துவதில்லை" என்று எழுதினார்.*[26] *ஜான் மெக்ஆர்தர் என்பவர், "[தேவனுடைய] நீதியினிமித்தம், எந்தப்பாவமும் எக்காலத்திலும் தண்டிக்கப்படாமல் போவதில்லை; இருப்பினும் அவரது கிருபையினிமித்தம், எந்தப் பாவமும் மன்னிப்பிற்கு அப்பால் இருப்பதில்லை" என்று முடிவுசெய்தார்.*[27]

என்ன ஒரு அற்புதமான சத்தியம்: இயேசு, பாவத்திற்கான தண்டனையைத் தம்மீது ஏற்றுக்கொள்ள மரித்தார்! அது நம்மைப் பின்வரும் கேள்வியுடன் விடுகிறது: இயேசு எல்லா மக்களுக்காகவும் மரித்தார் என்றால் (ஆம் அவர் அவ்வாறே மரித்தார்; ரோமர் 6:10; 1 பேதுரு 3:18 ஆகியவற்றைக் காணவும்), பின்பு ஏன் எல்லாரும் இரட்சிக்கப்படுவதில்லை? ஏனென்றால் இரட்சிப்பின் கொடையானது ஏற்றுக்கொள்ளப்படவோ அல்லது புறக்கணிக்கப்படவோ முடியும். இந்தப் பாடத்திற்கான நமது வேதவசனப்பகுதி, தேவன் "இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாக" இருக்கிறார் என்ற சத்தியத்தைக் கொண்டு முடிகிறது (ரோமர் 3:25ஆ).

இரட்சிக்கும் விசுவாசம் என்பது வெறும் மனநிலை உயருதலாக அல்லது செத்த விசுவாசமாக இருப்பதில்லை (யாக்கோபு 2:26ஐக் காணவும்) என்பதை நான் மீண்டும்

வலியுறுத்துகிறேன்; மாறாக, அது ஜீவனுள்ள, செயல்துடிப்புள்ள, கீழ்ப்படிதலுள்ள விசுவாசமாக உள்ளது (ரோமர் 1:5; 16:26 ஆகியவற்றைக் காணவும்). மெக்ஆர்தர் என்பவர் கூறிய பின்வரும் கூற்றை ஆழ்ந்து சிந்தியுங்கள்:

> புதிய ஏற்பாடு போதிக்கிறதான, இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள இரட்சிக்கும் விசுவாசம் என்பது, அவரைப்பற்றிய குறிப்பிட்ட சத்தியங்களின் எளிய உறுதிப்பாட்டைவிட மிகவும் அதிகமானதாக உள்ளது. அவரைப் பற்றிய பல உண்மைகளை அசுத்த ஆவிகள்கூட ஒப்புக்கொண்டன [மாற்கு 5:7; நடபடிகள் 16:17 ஆகிய வசனங்களைக் காணவும்] ... . இரட்சிக்கும் விசுவாசம் என்பது ஒருவர் தம்மை முற்றிலுமாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதலுக்கு உள்ளாக்குதலாக இருக்கிறது ... .[28]

அதே வேளையில், இந்த விசுவாசம் முதலாவதாக மற்றும் மிகமுந்தியதான *விசுவாசமாக* உள்ளது என்பதை நான் மீண்டும் அடிக்கோடிடுவேன். நான் செய்ய முடியாத பல விஷயங்கள் இருக்கலாம், ஆனால் என்னால் விசுவாசிக்க *முடியும்* - எனவே உங்களாலும் அது முடியும். அது, தேவனுடைய இரட்சிப்பு எல்லாருக்கும் கிடைக்கிறது என்றே அர்த்தப்படுத்துகிறது!

முடிவுரை

தேவனுடைய திட்டத்தில் விசுவாசத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கப் பவுல் ஏறக்குறையத் தயாராக இருந்தார் (ரோமர் 4), ஆனால் அவர் திரும்பவும் முதலாவது யூதர்களின் மறுப்புரையை முன்னெதிர்பார்த்தார் (ரோமர் 3:27-31). 3ம் அதிகாரத்தின் கடைசி வசனங்களை நாம் நமது அடுத்த பாடத்தில் படித்து முடிப்போம்.

இந்தப் பாடமும் இதற்கு முந்திய பாடமும், மனிதகுலத்தை இரட்சிப்பதற்கான தேவனுடைய திட்டத்தின் இருதயம் போன்ற மையப் பகுதியில் உள்ள பின்வரும் மூன்று வார்த்தைகளைச் சித்தரித்தன: "நீதிமானாக்குதல்," "மீட்பு" மற்றும் "கிருபாதாரபலி." கடினமான இறையியல் கருத்துக்கள் சிலவற்றை, விசேஷமாக கிருபாதாரபலியுடன் தொடர்புடைய சில இறையியல் கருத்துக்களை நாம் கலந்துரையாடியிருக்கிறோம். இரட்சிக்கப்பட இப்படிப்பட்ட விஷயங்கள் எல்லாவற்றையும் முழுவதுமாக நாம் அறிந்திருக்க வேண்டும் என்பது அவசியமாக உள்ளதா? எனது முன்வாசற்கதவில் உள்ள பூட்டு எவ்வாறு வேலைசெய்கிறது என்ற நுட்பத்தை நான் புரிந்துகொள்ளல் என்பதைக் காட்டிலும் அதிகமாக இது அவசியமாக இருப்பதில்லை. நான், பூட்டின் செயல்நுட்பத்தைப் பற்றிப் புரிந்துகொண்டிருப்பதில்லை, ஆனால் பூட்டில் சரியான சாவியை நுழைத்து கதவைத்திறப்பது எப்படி என்று நான் அறிந்திருக்கிறேன். உங்கள் பாவங்களுக்காக இயேசு மரித்தார் என்பதை நீங்கள் புரிந்துகொண்டு, அவர்மீதும் அவரது பலியீன்மீதும் நம்பிக்கை வைத்தலே உங்கள் இரட்சிப்பிற்கான "திறவுகோலாக" [சாவியாக] உள்ளது. உங்கள் வாழ்வை அவருக்கு நீங்கள் இன்னமும் கொடுக்காது இருந்தால், நீங்கள் இன்றே, கர்த்தரிடம் விசுவாசம் கொண்டு அவருக்கு உங்களைக் கீழ்ப்படுத்த வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன் (நடபடிகள் 2:36-38, 41, 47).

பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

நீங்கள் முந்திய பாடத்தையும் இந்தப்பாடத்தையும் ஒன்றாக்கி உங்கள் சிந்தனைகளை "மூன்று சிறிய வார்த்தைகள்" என்ற கருத்தின்மீது மையப் படுத்தக்கூடும்.

குறிப்புகள்

[1]Bert Kalmar, "Three Litttle Words," ©1930, Warner Bros.; ©1958, Edwin H. Morris & Co., MPL Communications. [2]John MacArthur, *Romans 1-8*, The MacArthur New Testament Commentary (Chicago: Moody Press, 1991), 208-9. [3]Fritz Ridenour, ed., *How to Be a Christian Without Being Religious* (Glendale, Calif.: Regal Books, G/L Publications, 1967), 27. *உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குத் தக்க வகையில் இதைத் தழுவியமைத்துக்கொள்ளுங்கள். ஒருவேளை நீங்கள் வாழும் இடத்தில், குழந்தையை/ஒரு நபரைக் கடத்திவைத்துக் கொண்டு அவரை விடுவிக்கப் பணம் கேட்கும் நிகழ்ச்சி தலைப்புச் செய்தியாக இருக்கலாம்.* [4]Quoted in R. C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 31. [5]Metonymy *என்பது, ஒருவிஷயம் அதற்கு நெருங்கிய தொடர்புடைய இன்னொரு விஷயத்திற்குப் பதிலாக நிற்றலில் பேச்சுருவகமாக உள்ளது. உதாரணமாக, அமெரிக்காவில் ஒருவர், "வெள்ளை மாளிகை" சிலவற்றைச் செய்தது என்று கூறுகிறபோது, அவர் உண்மையில் ஜனாதிபதியையே குறிக்கிறார்.* [6]John A. Mackay, *God's Order: The Ephesian Letter and This Present Time* (New York: Macmillan Co., 1953), 97. [7]*"ஏற்படுத்தினார்" என்பது "முன்பாக வைத்தல்" என்று அர்த்தப்படுகிற* (*tithimi* [*அமைத்தல் அல்லது வைத்தல்*] *என்ற) வார்த்தையுடன் pro* [*"முன்பாக"*], *என்பதைக் கூட்டிப்பெற்ற* (*protithimi என்ற) கூட்டுச்சொல்லில் இருந்து வந்துள்ளது.* (W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 564.) [8]Adapted from James R. Edwards, *Romans*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1992), 104. [9]*இவ்வசனங்கள் ரோமர் 3:25ல்* "propitiation" [*கிருபாதாரபலி*] *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தையைப் பயன்படுத்துவதில்லை, ஆனால் இவைகள் அதே குடும்பத்தின் வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றன.* [10]*யாரேனும் ஒருவர் ஏதாவது ஒரு புதிய முயற்சியில் களம் இறங்கும்போது, அவர் சில தனிப்பட்ட சொற்றொடர்களைக் கற்றாக வேண்டும். வாசிக்க ... அல்லது பண்ணைத்தொழில் செய்ய ... அல்லது ஒரு காரை ஓட்ட ... அல்லது ஒரு கணணியைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்ளுதல் பற்றி நினைத்துப்பாருங்கள். இதே விஷயம் மார்க்கத்திலும் உண்மையாக உள்ளது.*

[11]*American Heritage Dictionary*, 4th ed. (2002), s.v. "propitiation." [12]F. Büschel, "*hilastērion*," in Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 364. [13]*அந்தக் கேள்வி பின்வரும் புத்தகங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளது: The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 181-82; John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 113-14. [14]Douglas J. Moo, *Romans*, The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 133. [15]F. F. Bruce, *The Letter of Paul to the Romans*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 100. [16]Stott, 115. [17]*இந்தப்பகுதி ஸ்டாட் என்பவரின் புத்தகத்தில் 115ம் பக்கத்தில்*

இருந்து தழுவப்பட்டுள்ளது. [18]"கிறிஸ்து இயேசுவின் இரத்தம்" என்பது "கிருபாதாரபலி" என்பதற்குப் பின்னாலா அல்லது "விசுவாசம்" என்பதற்குப் பின்னாலா, எதற்குப்பின்னால் இடப்பட வேண்டும் என்பது பற்றிக் கேள்விகள் சில உள்ளன. இவ்விரு இடுதல்களிலும் விளைகிற கூற்றானது வேதாகமத்தின் வேறிடங்களிலுள்ள போதனைக்குச் சீர்பொருத்தம் உள்ளதாக இருக்கிறது, எனவே இது நம்மைக் கவலைப்படுத்தக்கூடிய கேள்வியாக இருப்பதில்லை. [19]பழங்கால இலக்கியக்கதையொன்று, ஸ்பார்ட்டாவின் பண்டைய அரசரான லைக்கர்கஸ் என்பவரின் மகன் சட்டத்தை மீறியதால் பார்வையற்றுப்போகும் தண்டனை பெறவேண்டியிருந்தது பற்றிக் கூறுகிறது. அந்த இளவரசனின் ஒரு கண் பறிக்கப்பட்டது, ஆனால் அரசர் தனது மகனைச் சட்டத்தின் முழுத் தண்டனையில் இருந்து காப்பாற்றுவதற்காகத் தமது கண்களில் ஒன்றைக் கொடுத்தார். (James Burton Coffman, *Commentary on Romans* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1973], 134.) ஒருவேளை நீங்கள், உங்கள் உரையைக் கேட்பவர்கள் நன்கு அறிந்த இன்னொரு கதையை இங்கு பகிர்ந்துகொள்ள முடியும். [20]MacArthur, 117-18.

[21]*En* ("in") plus *deiknumi* ("to show"). (Vine, 153.) [22]கிரேக்க வசனத்தில், "தேவன் பொறுமையாயிருந்த" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைகள் 26ம் வசனத்தின் தொடக்கத்தில் உள்ளன, ஆனால் அவை 25ம் வசனத்தின் முடிவில் உள்ள சிந்தனையை மாற்றியமைக்கின்றன, எனவே NASB மொழிபெயர்ப்பாளர்கள் 25ம் வசனத்தில் இவ்வார்த்தைகளை இடைச்செருகினர். [23]சிலர், "முற்காலத்தில் செய்த பாவங்கள்" என்பவை, தனிநபர்கள் கிறிஸ்தவர்களாவதற்கு முன்னர் அவர்களால் செய்யப்பட்ட பாவங்களைக் குறிக்கிறது என்று நினைக்கின்றனர். இருப்பினும், இவ்வசனப்பகுதியில், நேர்மாறான ஒப்பீடு என்பது *அப்பொழுதுக்கும்* (கிறிஸ்துவுக்கு முன்பு), *இப்பொழுதுக்கும்* (கிறிஸ்துவின் வருகைக்குப் பின்பு) இடையிலானதாகக் காணப்படுகிறது. [24]D. Stuart Briscoe, *Mastering the New Testament: Romans,* The Communicator's Commentary Series (Dallas: Word Publishing, 1982), 94. [25]Quoted in William Barclay, *The Letter to the Romans*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 59. [26]Edwards, 106. [27]MacArthur, 218. [28]Ibid., 205.

15

"தயவுசெய்து என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள்!"

(3:27-31)

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நான் - பேசப்பட்ட மற்றும் எழுதப் பட்ட - வார்த்தைகளைக் கொண்டு சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு முயற்சிசெய்துகொண்டிருக்கிறேன், சிலவேளைகளில் நான் ஏறக்குறைய சலிப்படைந்திருக்கிறேன். நான் அர்த்தப்படுத்துவது என்ன என்பதை மிகச்சரியாகக் கூறுவதென்பது கடினமாக இருக்கிறது. ஒவ்வொரு வார்த் தையும் பல்வகையான அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியும். மேலும், மக்கள் அடிக்கடி கவனமாக கேட்பது (அல்லது வாசிப்பது) இல்லை, ஒரு சிலர் "புகைப்படத்துவ நினைவுகளை" கொண்டுள்ளனர். மக்கள் எனது கூற்றுக்களில் தாங்கள் "நினைவில் வைத்திருப்பவற்றை" மேற்கோள் காண்பித்தலை நான் கேள்விப்பட்டிருக்கிறேன், அது நான் உண்மையில் கூறியவற்றுடன் சிறிதளவே ஒத்துப்போவதாக உள்ளது.

தவறாகப் புரிந்துகொள்ளுதல் என்பது எதுபோன்றிருந்தது என்பதைப் பவுல் அறிந்திருந்தார் - அவர் தவறாகக்குறிப்பிடப்பட்டும் இருந்தார் (3:8ஐக் காணவும்). சிலவேளைகளில் அவர் தமது எழுத்துக்களில், தம்மைத் தற்காத்துக்கொள்ளவோ அல்லது தாம் அர்த்தப்படுத்தியது என்ன அல்லது அர்த்தப்படுத்தாதது என்ன என்பதை விளக்குவதற்காகவோ சற்றே தாமதித்தார். நாம் ஒரு விளக்க வசனப்பகுதிக்கு வந்திருக்கிறோம்: ரோமர் 3:27-31. நீதிமானாக்கப்படுதல் என்ற பாடக்கருத் திற்குப் பவுல், சிந்தனையைத் தூண்டும் அறிமுகம் ஒன்றைக் கொடுத்திருந்தார். நீதிமானாக்கப்படுதல் என்பது விசுவாசத்தின்மூலமாக இருந்தது என்று அவர் வலியுறுத்தியிருந்தார் (3:22, 25, 26), மற்றும் அவர் விசுவாசத்தின் தனிச்சிறப்புகள் பற்றிய விரிவானதொரு கலந்துரையாடலுக்குத் தயாராக இருந்தார் (அதிகாரம் 4). இருப்பினும், அவர் அந்தக் கலந்துரையாடலைத் தொடங்குவதற்கு முன்னர் தாம் கூறியிருந்த மூன்று விஷயங்கள் தொடர்பாகத் தெளிவுபடுத்தச் சற்றே தாமதித்தார்.

3:27-31ல் பவுலின் குறிப்புரைகள் பொதுவான நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டுள்ளன, ஆனால் அவைகள் விசேஷமாக யூதர்களுக்கு அறிவுறுத்துவதாக இருந்தன. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற தமது போதனைக்கு யூதர்களே மிகவும் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள் என்பதை

அவர் புரிந்துகொண்டிருந்தார். மேலும், அவர் தம்மை யாரேனும் தவறாகப் புரிந்துகொண்டு இருந்தால் அல்லது தவறாகப் பிரதிநிதித்துவப்படுத்தினால், அவ்வாறு செய்பவர், அனேகமாக யூதராகவே இருப்பார் என்பதையும் அறிந் திருந்தார். இந்த நிருபம் முழுவதிலும், அவர் தமது சகநாட்டவருக்கு விசேஷித்த கவனத்தைக் கொடுத்திருந்தார்.

நமது இந்தப்பாடத்தை, நான் "தயவுசெய்து என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள்!" என்று அழைக்கிறேன். வசனப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட விஷயங்களைப் பற்றி நாம் படிக்கையில், பவுல் எதைக்கூறினார் மற்றும் அவர் எதைக்கூறவில்லை என்பவற்றை வலியுறுத்த நான் விரும்புகிறேன்.

"விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்பது மேன்மைபாராட்டலை உள்ளடக்காதிருக்கிறது" என்று *நான் கூறுகிறேன் (3:27, 28)*

பவுல் கூறியது என்ன

3ம் அதிகாரம் ஒரு கேள்வி - மற்றும் - பதில் என்ற வடிவமைப்புடன் தொடங்குகிறது. 27ம் வசனத்தில் பவுல் அந்த வடிவமைப்பிற்குத் திரும்பினார்: இப்படியிருக்க, "மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே. எந்தப்பிர மாணத்தினாலே? கிரியாப்பிரமாணத்தினாலேயா? அல்ல; விசுவாசப்பிரமா ணத்தினாலேயே. ஆதலால் மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில் லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்" (வசனங்கள் 27, 28). விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற போதனை, சுயசாதனைகள் பற்றி மேன்மை பாராட்ட இடமளிக்கவில்லை என்பதே பவுல் தெளிவாக்க விரும்பிய முதல் விஷயமாயிருந்தது.

"மேன்மைபாராட்டல்" என்பது, "மேன்மைபாராட்டும் செயல்" என்பதைக் குறிக்கிற kauchesis என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அகராதியானது "மேன்மைபாராட்டல்" என்பதை பின்வருமாறு விவரிக்கிறது: "ஒருவர் தம்மைப் பேச்சில் மகிமைப்படுத்திக்கொள்ளுதல்; ... மிக அதிகமான பெருமையுடன் பேசுதல்."[1] மேன்மைபாராட்டல் என்பது பொதுவாக, ஒருவர் தமது சுய சாதனைகள், திறமைகள், அல்லது உடைமைகள் பற்றித் தற்பெருமை கொண்டிருத்தலை உள்ளடக்கியிருக்கிறது. யோவான், "உலகத்திலுள்ளவைகள்" பற்றி எழுதியபோது அவர், "ஜீவனத்தின் பெருமை" என்பதை அதில் உள்ளடக்கினார் (1 யோவான் 2:16). 1 யோவான் 2:16ன் "ஜீவனத்தின் பெருமை"யை பீட்டர்ஸன் என்பவர் "முக்கியமானவராகத் தோன்ற விரும்புதல்" என்று தரவழைத்துள்ளார் (MSG).

ஒருவர், முக்கியமான சிலவிஷயங்களில் தாம் பங்கு கொண்டுள்ளதாக நினைக்கும்போது, மேன்மைபாராட்டுதல் அல்லது பெருமைபாராட்டுதல் என்பது "இயல்பானதாக" உள்ளது. ரோமர் 2:17 மற்றும் 2:23 வசனங்கள், யூதர்கள் தேவனைக்குறித்தும் நியாயப்பிரமாணத்தைக் குறித்தும் மேன்மை பாராட்டினர் என்று நமக்குக் கூறுகின்றன. அதாவது, அவர்கள் தேவனுக்குப் பிரியமானவர் களாக இருந்ததாகவும் தங்களுக்கு - தங்களுக்கு மாத்திரமே - மோசேயின்

நியாயப்பிரமாணம் தரப்பட்டிருந்தது என்றும் மேன்மை பாராட்டினர். இது மேன்மைபாராட்டுதல் என்பது யூதர்களுக்கு மட்டும் உரிய நடைமுறையாக இருந்தது என்று அர்த்தப்படுவதில்லை. பல்வேறுபட்ட கிரேக்க வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன, ஆனால் புறஜாதியாரைப் பவுல், "துராகிருதம் பண்ணுகிறவர்கள்" மற்றும் "அகந்தையுள்ளவர்கள்" என்று அழைத்தபோது (வசனம் 30) ஒரேவகையான கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவைபோன்ற வார்த்தைகளை நாம், நீண்ட காலத்திற்கு முன்பு இருந்த பவுலின் வாசகர்களுக்கு மாத்திரம் நடைமுறைப்படுத்தி முடித்துவிட இயலாது. "நம் அளவுக்குச் செய்கை செய்திராதவர்கள்" அல்லது நமது ஒழுக்கத்தர அளவை அளவுக்கு ஒழுக்கக்கோட்பாடுகள் கொண்டிராதவர்களைக் காட்டிலும் *நாம்* மேன்மை யானவர்கள் என்று உணருதல் எவ்வளவு சுலபமாயிருக்கிறது! நாம் எவ்வளவு அடிக்கடி நமது நற்செயல்களை மேட்டிமையாலும் - சிலவேளைகளில் மேன்மைபாராட்டுதலினாலும் - நாசமாக்கி விடுகிறோம்!

"மேன்மைபாராட்டுதல்" பற்றிப் பவுல், "அது நீக்கப்பட்டதே" என்று வலியுறுத்தினார் (வசனம் 27அ). "அது நீக்கப்பட்டதே" என்பது "வெளியேற்றி மூடுதல்" என்று அர்த்தப்படும் (*ekkleio* என்ற) கிரேக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [அனுமதியின்றி] உட்புகும் ஒருவரை வெளியிலேயே நிறுத்துவதற்காகக் கதவொன்றை அறைந்து மூடுதல் பற்றிச் சிந்தியுங்கள். இங்கு ஆவ்ரிஸ்ட் என்ற கடந்தகால வினைச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வார்த்தைகள், "மேன்மைபாராட்டுதல் என்பது ஒரேயடியாக நீக்கப்பட்டுள்ளது?" என்று அர்த்தப்படுகின்றன.[2]

மேன்மைபாராட்டுதல் என்பது எதன் அடிப்படையில் நீக்கப்பட்டது? "கிரியைப்பிரமாணத்தின்" அடிப்படையிலேயா (வசனம் 27ஆ)? அல்லவே. மக்கள் தங்கள் கிரியைகளின் அடிப்படையில் இரட்சிக்கப்படுகின்றனர் என்று போதிக்கும் போதனை நிலைப்பாடு எதுவும், மேன்மைபாராட்டுதலை *ஊக்கம் இழக்கச் செய்வதற்குப்*பதிலாக அதை *ஊக்குவிப்பதாக* உள்ளது. சுயதிருப்தி என்பது சுயத்தை மேன்மைப்படுத்துதலுக்கு வழிநடத்துகிறது, இது சுயத்தைப் பாராட்டுதலுக்கு வழிநடத்துகிறது.[3] ஜிம் மெக்கைகன் என்பவர், "கிரியைகளின் எந்தப்பிரமாணமும் இரக்கத்திற்குப் பதிலாகத் தகுதியை வலியுறுத்துகிறது, இது நிறைவுக்குப் பதிலாக வீண்தன்மையை விளைவிக்கிறது, புகலிடத்திற்குப் பதிலாக கோபத்தைக் கொண்டுவருகிறது" என்று எழுதினார்.[4]

நாம் கிரியைகளின் அடிப்படையில் அல்ல, ஆனால் அதற்கு மாறாக, "விசுவாசத்தின்" அடிப்படையில் இரட்சிக்கப்படுவதால் மேன்மைபாராட்டுதல் விலக்கப்பட்டுள்ளது (வசனம் 27இ) - நாம் செய்துள்ளவற்றினால் அல்ல ஆனால் தேவன் நமக்காகச் செய்துள்ளவற்றினாலேயே நாம் இரட்சிக்கப்படுகிறோம். பிலிப்ஸின் மொழிபெயர்ப்பில், "the whole matter is now on a different plane - believing instead of achieving" ("இப்போது முழுவிஷயமும் சாதித்தல் என்பதற்குப் பதிலாக விசுவாசித்தல் என்ற மாறுபட்டதொரு தளத்தில் இருக்கிறது") என்றுள்ளது.

கிரியைகளின் அடிப்படையில் இரட்சிப்பு என்பது *கீழிருந்து* (நமது சுயமுயற்சிகளில் இருந்து) இரட்சிப்பைத் தேடுதலாக இருக்கையில், விசுவா சத்தின் அடிப்படையில் இரட்சிப்பு என்பது *மேலிருந்து* (தேவனிடத்தில் இருந்து) இரட்சிப்பைத் தேடுதலாக உள்ளது.[5] கிரியைகளினால் இரட்சிப்பு என்பது சுயத்தை மையமாகக் கொண்டிருக்கையில், விசுவாசத்தினால் இரட்சிப்பு

என்பது தேவனை மையமாகக் கொண்டிருக்கிறது. மூழ்குவதில் இருந்து ஒரு மனிதன் காக்கப்பட்டிருந்தால், - அவன் *தான்* செய்துள்ளவை பற்றி - தன்னைக் காப்பாற்றியவர்மீது எப்படி நம்பிக்கை கொண்டிருந்தார் என்பது பற்றி மேன்மை பாராட்டிக் கொண்டிருப்பானா?[6] இல்லை, அவனைக் காப்பாற்றியவரையே அவனது வார்த்தைகள் துதிக்கும்.

பவுல் தமது கலந்துரையாடலைத் தொடருகையில், 21 முதல் 26 வரையான வசனங்களில் தாம் போதித்திருந்தவற்றை அவர் மறுபடியும் வலியுறுத்தினார்: "ஆதலால், [நாம்[7]] மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் ['தேவனுடன் நேராக்கப்படுகிறான்'; NCV] என்று தீர்க்கிறோம்[8]" (வசனம் 28). "இல்லாமல்" என்பது "இருந்து வித்தியாசமான" அல்லது "நீங்கலாய்" என்று அர்த்தப்படுகிற *choris* என்பதன் மொழிபெயர்ப்பாக உள்ளது.[9] AB வேதாகமத்தில் "independent of and distinctly apart from" என்றுள்ளது.

28ம் வசனத்தில் கிரேக்க வசனப்பகுதியானது "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல்"[10] என்றுள்ளது - இதில் நியாயப்பிரமாணம் என்ற வார்த்தைக்கு முன்பாகத் திட்டவட்டச் சுட்டுச்சொல் எதுவுமில்லை - ஆனால் பவுல் தமது சிந்தையில் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருந்தார் என்பது சந்தர்ப்பப்பொருளில் இருந்து தெளிவாகிறது. இருப்பினும், பொதுவான ஒரு கொள்கை மீண்டும் மறைமுகமாய்க் குறிப்பிடப்படுகிறது: நாம் *எந்தப்*பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதாலும் இரட்சிக்கப்பட முடியாது - ஏனென்றால் நம்மால் *எந்தப்*பிரமாணத்தையும் பரிபூரணமாகக் கடைப்பிடிக்க இயலாது.

27 மற்றும் 28ம் வசனங்களில் பவுலின் நிலைப்பாடு தெளிவாக உள்ளது: கிருபையினால் இரட்சிப்பு என்பது சுயசாதனைகள் பற்றி மேன்மை பாராட்டுவதற்கு இடம் அளிப்பதில்லை. அவர் இதற்கு முன்பு எபேசு நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" என்று எழுதியிருந்தார் (எபேசியர் 2:8, 9). அவர் கொரிந்தியர்களுக்கு எழுதியபோது, "மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக" என்று கூறினார் (1 கொரிந்தியர் 1:30). கலாத்தியர்களுக்கு அவர், "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக" என்று கூறினார் (கலாத்தியர் 6:14அ; பிலிப்பியர் 3:3ஐக் காணவும்).

டிவைட் மூடி என்பவர் ஒருமுறை, மேன்மைபாராட்டுதல் என்பது விளக்கப்பட்டதால் தாம் எவ்வளவு மகிழ்ச்சியாய் இருந்தார் என்பது பற்றிக் கூறினார்:

> ஒரு மனிதன் பரலோகம் செல்லத் தானே தனக்கு வழியை ஏற்படுத்திக்கொள்ள முடியுமென்றால், அதன் முடிவைப்பற்றி நீங்கள் ஒருக்காலும் கேள்விப்படமாட்டீர்கள். ஒரு மனிதன் மற்றவர்களைவிட சற்று அதிகமாக முன்னேறவும், சில லட்சரூபாய்களைச் சேர்த்து வைக்கவும் முடிந்தது என்றால், அவன் சுயசம்பாத்தியம் செய்வதாகத் தன்னைத் தானே

பெருமைபாராட்டிக் கொள்வதைக் கேட்பீர்கள். நான் களைப்படையும் அளவுக்கு இவ்விதமான பேச்சுக்களைக் கேட்டிருக்கிறேன். நித்தியத்தை அடைவதற்கு தானே கிரியை செய்ததாக எவரொருவரும் அங்கே மேன்மை பாராட்டுவதை நாம் ஒருக்காலும் கேள்விப்பட மாட்டோம் என்பது பற்றி நான் மகிழ்வடைகிறேன்![11]

பவுல் முன்பே எடுத்துரைத்திருந்தபடி, 27 மற்றும் 28ம் வசனங்களில் அவரது குறிக்கோள் தெளிவாக உள்ளது - மற்றும் அதன்மீதான பொதுவான ஒப்புமையும் தெளிவாக உள்ளது. இருப்பினும், பவுலின் சொற்றொடராக்கம் பற்றிச் சில கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. எடுத்துக்காட்டாக, 27ம் வசனத்தில், அவர் "பிரமாணம்" என்ற வார்த்தையைக் கொண்டு எதை அர்த்தப்படுத்தினார்? "எந்தப் பிரமாணத்தினாலே? கிரியாப்பிரமாணத்தினாலேயே? அல்ல; விசுவாசப்*பிரமாணத்தினாலேயே.*" நமது படிப்புகளில் நாம் "பிரமாணம்" என்ற வார்த்தையை அடிக்கடி கண்டிருக்கிறோம். பவுல் மோசேயின் பிரமாணத்தைக் குறிப்பிட்டாரா அல்லது பொதுவான பிரமாணத்தைக் குறிப்பிட்டாரா என்பதே முதன்மையான கேள்வியாக இருந்துள்ளது. இருப்பினும், அவர் இவ்வார்த்தையை சிலவேளைகளில் ஒரு துணைக்கருத்திலும் பயன்படுத்தினார். (இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் "பிரமாணம் [*Nomos*] என்ற வார்த்தை பற்றிய படிப்பு" என்பதில் காணவும்.) 27ம் வசனத்தில் பவுல் அனேகமாக, *nomos* என்ற வார்த்தையை "கொள்கை" என்று அர்த்தப்படும் துணைக்கருத்திலேயே பயன்படுத்தினார் எனலாம்: "மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே. எந்த [கொள்கையினாலே]? கிரியையினால் [நீதிமானாக்கப்படும் கொள்கையினாலா]? அல்ல; விசுவாசத்தினால் [நீதிமானாக்கப்படும் கொள்கையினாலேயே]."

பவுல் எதைக் கூறவில்லை

நாம் நமது கிரியைகளினால் இரட்சிக்கப்படவில்லை, ஆனால் அதற்கு மாறாக, இயேசுவின்மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதால், நீங்களும் நானும் மேன்மை பாராட்ட ஒன்றையும் கொண்டிருப்பதில்லை என்பதே ரோமர் 3:27, 28ல் பவுலின் முதன்மை செய்தியாக உள்ளது. பழைய பாடல் ஒன்றின் வார்த்தைகளில், "இயேசுவின் இரத்தம் மற்றும் நீதி என்பவற்றைவிடக் குறைவான ஏதொன்றிலும் எனது நம்பிக்கை கட்டப்பட்டிருப்பதில்லை" என்று காண்கிறோம்.[12] இந்த சத்தியத்தைப் பற்றிய கண்ணோக்கைத் தவறவிட வேண்டாம். இதை நான் விரித்துரைக்கும் முன்னதாக, 3:27, 28ல் பவுல் எதைக்*கூறவில்லை* என்பதை ஆழ்ந்து சிந்திக்கும் பக்கச்சாலையொன்றில் நாம் பயணம் செய்தல் அவசியமாக உள்ளது: நாம் விசுவாசத்தால் இரட்சிக்கப்படுகிறோம் என்று அவர் *கூறினார்*, ஆனால் நாம் விசுவாசத்தால் *மாத்திரமே* இரட்சிக்கப்படுகிறோம் என்று அவர் *கூறவில்லை.*

குறிப்பிடத்தக்க சீர்திருத்தவாதியான மார்ட்டின் லூத்தர் என்பவர் (1483-1546) தனது ஜெர்மன் மொழிபெயர்ப்பு வேதாகமத்தில் இந்த 28ம் வசனத்தில் "மாத்திரம்" என்ற வார்த்தையை இடைச்செருகி இவ்வசனம், ஒரு நபர் "விசுவாசத்தால் *மாத்திரம்*" நீதிமானாக்கப்படுகிறார் என்று போதிக்கும்படியாக

இதைச் சீரழித்துப்போட்டார்.[13] லூத்தர் ஒரு பாதிரியாராக இருந்து பிற்பாடு கத்தோலிக்க சபையின் மதிமயக்கத்தில் இருந்து நீங்கியவர் ஆவார். அவர் தாம் அறிந்திருந்த "கிரியைகளினால் இரட்சிப்பு" என்ற முறைமைக்கு எதிராகச் செயல்படுவதில், அதிகமாக செயல்புரிந்து, கிரியைகள் என்பதையே முற்றிலும் நீக்கிப்போட அவர் முயற்சி செய்தார். ரோமர் 3:28ல் "மாத்திரம்" என்ற வார்த்தை கூட்டப்பட்டதானது இவ்வசனத்தை யாக்கோபு 2:24க்கு நேரெதிரானதாக ஆக்கிற்று, ஆனால் லூத்தர் அந்தப் பிரச்சனையை, யாக்கோபின் புத்தகம் தகுதி யற்றதாக, "வைக்கோல்போன்ற நிருபமாக" இருந்தது என்று அறிவித்ததன்மூலம் தீர்த்துவைத்தார்.[14]

லூத்தருடைய இந்தத் துடுக்குத்தனமான கூட்டுதலை எத்தனை விளக்கவுரையாளர்கள் புகழ்ந்துரைத்து இருக்கின்றனர் என்பது பற்றி நான் வெகுவாக ஆச்சரியம் அடைந்தேன்.[15] நீண்ட நாட்களுக்கு முன்பே "விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிப்பு" என்பது "சுவிசேஷத்துவக் கிறிஸ்தவம்" என்று அழைக்கப்படுவதன் முதன்மைப் போதனையானதால் நான் திகைப் படையக்கூடாது என்று யூகிக்கிறேன்.

கத்தோலிக்கரல்லாத யாவருமே அடக்குமுறை மதமுறைமையின் விலங்குகளை முறித்தமைக்கு லூத்தர் என்பவருக்குக் கடன்பட்டுள்ளனர். லூத்தரின் வேதவசனங்களின் ஜெர்மானிய மொழிபெயர்ப்பு ஒரு மாபெரும் சாதனையாக இருந்தது, அது ஒரு மாபெரும் சேவையாக இருந்தது - ஆனால் அவர் "மாத்திரம்" என்ற வார்த்தையைக் கூட்டியதால் *தவறானவராக இருந்தார்* என்று கூற நான் தயங்குவதில்லை. விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிப்பு உண்டாகும் என்று *அவர்* நம்பினார் என்று *அவர்* கூற விரும்பினால் அது வேறு விஷயமாக உள்ளது. ஏவுதல் பெற்ற வேதவசனங்களில் அதை உட்செருகி, *தேவன்* அதைக் கூறுவது போன்று ஏற்படுத்துதல் என்பது முற்றிலும் வேறு விஷயமாக உள்ளது.

முதலிடத்தில், வேதாகமம் [அதில்] ஒரு வார்த்தையைக் கூட்டுவதைக் கண்டனம் செய்கிறதால் (உபாகமம் 4:2; நீதிமொழிகள் 30:6; வெளிப்படுத்தின விசேஷம் 22:18, 19 ஆகியவற்றைக் காணவும்) லூத்தர் தவறானவராக இருந்தார். இரண்டாமிடத்தில், வேதாகமத்தில் ஒருவர் ஒருமுறை எதையாவது கூட்டிவிட்டார் என்றால், நிறுத்த இடம் எதுவும் இல்லை என்பதால் லூத்தர் தவறானவராக இருந்தார். லூத்தரைப் பின்பற்றுபவர்கள், *தாங்கள்* முக்கிய மற்றது என்று விதிக்கிற வேதாகம நிபந்தனை எதையும் "அத்தியாவசியமற்றது" என்று பெயரிடுவதற்காக "மாத்திரம்" (அல்லது "மட்டும்") என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளனர்.

நான் வசிக்கும் இடத்தில், "மாத்திரம்" மற்றும் "மட்டும்" என்ற வார்த்தைகள், இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியம் என்ற கருத்தை நீக்கிப்போட முயற்சித்தலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிலரால் அடையப்பட்டுள்ள முடிவுகளின்படி, கிருபையின் அர்த்தத்தைப் பேதுரு புரிந்துகொண்டிருந்தால், "நாங்கள் என்னசெய்யவேண்டும்?" என்று பாவிகள் கேட்டபோது (நடபடிகள் 2:37) அவர் மாறுபட்ட பதிலை கொடுத்திருப்பார். அவர், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" (வசனம் 38) என்பதற்குப் பதிலாக, "இரட்சிப்பு என்பது விசுவாசத்தினால் மாத்திரமே உண்டாகிறது. இயேசுவை நீங்கள் விசுவாசித்து தேவனுடைய பாவமன்னிப்பை மகிழ்வுடன் அனுபவியுங்கள்" என்று

கூறியிருக்க வேண்டும் என்பதாக அவர்கள் நம்புகின்றனர். சவுல்/பவுல் என்பவர், "ஆண்டவரே நான் என்ன செய்ய வேண்டும்?" (நடபடிகள் 22:10) என்று கேட்ட சந்தர்ப்பத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். ஏவுதல் பெற்ற பிரசங்கியாரான அனனியா, லூத்தரின் சிந்தனையைப் பகிர்ந்து கொண்டிருந்தால், அவர் "நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம்பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்று கூறியிருக்கமாட்டார் (வசனம் 16). அதற்குப்பதிலாக, அவர் "இயேசுவின்மீது நீ உன் நம்பிக்கையை வை" என்று மாத்திரம் கூறியிருப்பார்.

J. W. மெக்கார்வீ என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> ரோமாபுரியின் (கிரியைகளினால் மனிதர்கள் நீதிமான்களாக்கப் படுகின்றனர் என்ற) தவறுடன் போராடியதில் லூத்தர், இன்னொரு தவறுக்குள் விழுந்து போனார், ஏனெனில் மனந்திரும்புதல், விசுவாசத்தினால் நீதிமானாக்கப் படுதலுக்கு வழிமுறையாக இருக்கிறதே ஒழிய, இவ்விரண்டிலுமே [நம் சுய] *தகுதி* என்பது எதுவும் இருப்பதில்லை. *பாவநிவாரண பலியான கிறிஸ்துவின் இரத்தம்,* நாம் நீதிமான்களாக்கப்படுதலுக்குத் தகுதிவாய்ந்த காரணமாக உள்ளது, மற்றும் விசுவாசம், மனந்திரும்புதல், ஞானஸ்நானம் முதலியவற்றினால் நாம் கிறிஸ்துவின் இரத்தத்தை நமக்கு ஏற்புடையதாக்கிக் கொள்கிறோம். நமது பகுதியில் இந்த செயல்கள் நம்மை நீதிமான்களாகத் *தகுதிப்படுத்துவதில்லை,* ஆனால் அவைகள் கிறிஸ்துவினால் விதிக்கப்பட்ட *நிபந்தனைகளாக* உள்ளன, அவற்றை நிறைவேற்றும்போது அவர் தமது இரத்தத்தின் பலன்களை நமக்கு அருளுகிறார்; அதாவது, நம்மை நீதிமான்களாக்குகிறார்.[16]

விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவதை நான் நம்புகிறேன். *நான்,* பரிபூரண மான கீழ்ப்படிதலின் அடிப்படையில் இன்றி, விசுவாசத்தின் அடிப்படையில் இரட்சிக்கப்பட்டதற்காகத் *தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.* அதே வேளையில், எனது கர்த்தரால் விதிக்கப்பட்ட எந்த நிபந்தனைபற்றியும் கேள்வி எழுப்பவோ அல்லது அதை இகழ்ந்துரைக்கவோ எனக்கு எந்த உரிமையும் இல்லை. அவ்வாறு செய்தல் என்பது, விசுவாசத்தின் வெளிப்பாடாக இராமல், நம்பிக்கைக் குறைவின் வெளிப்பாடாக உள்ளது.

"விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்பது சகிப்புத்தன்மையற்ற நிலையை நீக்கிப்போட வேண்டும் என்று *நான்* கூறுகிறேன்" (3:29, 30)

பவுல் என்ன கூறினார்

28ம் வசனத்தில் பவுல், "மனுஷன் *நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில் லாமல்* விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான்" என்று வலியுறுத்தினார். இப்படிப்பட்ட கூற்றானது ஒரு யூதனுடைய மனதைப் புண்படுத்தியிருக்கும். ஒரு யூதன், தான் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருத்தல், தன்னை விசேஷித்தவனாக்கியது என்றும் - இது தன்னை ஒரு புறஜாதியானைக் காட்டிலும் சிறந்தவன் (மிகவும் சிறந்தவன் என்று) ஆக்கியதென்பதுமான -

நம்பிக்கையை விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டு இருந்தான்.

1:18-3:20ல், பவுல் யூதரும் புறஜாதியாரும் ஒரேவிதமான பாவங்களைச் செய்திருந்தனர் என்று காண்பித்ததின்மூலம் அவர்கள் இருசாராரையும் ஒரே மட்டத்தில் வைத்திருந்தார். இப்பொழுது அவர், ஒரே தகப்பனை அவர்கள் கொண்டிருந்தார்கள் என்பதைக் குறிப்பிடுவதினால், அவர்களை ஒரே நடையிலும் வைத்தார். அவர், "தேவன் யூதருக்கு மாத்திரமா தேவன்?" என்று கேட்டார் (3:29அ). சில யூதர்கள் அவ்வாறு நினைத்தனர். தொடர்ந்து பவுல், "புறஜாதிகளுக்கும் தேவனல்லவா?" என்றார் (வசனம் 29ஆ). பெரும்பான்மை யான யூதர்கள் தயக்கத்துடன், ''ஆம்'' என்று பதில் அளித்திருப்பார்கள். அழுத்திக் கேட்கப்பட்டால் அவர்கள், தேவன் புறஜாதியாரைப் படைத்தவராக, ஆட்சிசெய்பவராக, மற்றும் நியாயாதிபதியாக இருந்தார் என்பதை ஒப்புக்கொள்வார்கள் (சங்கீதம் 96:10; எரேமியா 10:7ஐக் காணவும்) - ஆனால் அவர்கள், புறஜாதியாருக்கு அவர் *இரட்சகராக* இருந்தார் என்பதை ஒப்புக்கொள்வதைக் கடினமானதாகக் கண்டனர்.

பவுல் தமது சொந்தக் கேள்விக்குத் தாமே பதில் அளித்தார்: "ஆம், புற ஜாதிகளுக்கும் அவர் தேவன்தான், ... தேவன் ஒருவரே" (ரோமர் 3:29இ, 30). பவுலின் முடிவு யூதத்துவத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியில் இருந்த - ஒரு தெய்வக்கோட்பாடு[17] என்ற - சத்தியத்தின் அடிப்படையில் அமைந் திருந்தது, ஒரு வசனப்பகுதி ஒவ்வொரு யூதருக்கும் நன்கு பழக்கமானதாக இருந்தது. பக்தியுள்ள யூதர்கள் ஒவ்வொரு நாளும், "இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" (உபாகமம் 6:4) என்று தொடங்கும், ஷேம்மா[18] என்ற ஜெபத்தை மனப்பாடமாக ஒப்புவித்தனர். ஒரே ஒரு தேவன் மாத்திரமே இருக்கிறார் என்றால், அவர் யூதர்கள் மற்றும் புறஜாதியார் என்ற இருசாராருக்கும் தேவனாக இருக்க வேண்டும். புறஜாதியார் ஒரு தனிப்பட்ட தேவனைக் கொண்டிருந்தால், அப்போது *இரண்டு* தேவர்கள் இருப்பார்கள் - இது எந்த ஒரு யூதருக்கும் ஏற்றுக்கொள்ளப்பட இயலாத முடிவாகும்.

தேவன் புறஜாதியாருக்கும் தேவனாக இருந்தால், அவர்களும் மனிதகுலத்தை மீட்பதற்கான தேவனுடைய திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது இயல்பானதாகும். பவுலின் அறிமுகக்கூற்றில், அவர் "முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் [புறஜாதியாரிலும்] விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது [சுவிசேஷம்] தேவபெலனாயிருக்கிறது" என்று கூறியிருந்தார் (ரோமர் 1:16). இப்போது அவர், அந்த சத்தியத்தை மறுபடியும் வலியுறுத்தினார். இங்கு அவரது கூற்று தனது முழுமைத்துவத்தில் உள்ளது: "ஆம், புறஜாதிகளுக்கும் அவர் தேவன்தான். விருத்தசேதனமுள்ளவர்களை [யூதர்களை] விசுவாசத்தினாலும், விருத்தசேதனமில்லாதவர்களை[19] [புறஜாதியார்களை] விசுவாசத்தின் மூலமாயும்[20] நீதிமான்களாக்குகிற தேவன் ஒருவரே" (3:29இ, 30).

F. F. புரூஸ் என்பவரின் கூற்றுப்படி, "யூதர்களுக்கும் புறஜாதியார்களுக்கும் இடையில் இருந்த பிளவு, பழங்கால உலகில் இணைப்பு ஏற்படுத்த இயலாத மிகப்பெரிய பிளவாயிருந்தது''[21] - ஆனால் அந்தப் பிரிவில், இயேசுவின் சிலுவையினால் இணைப்பு ஏற்படுத்தப்பட்டது. எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் பின்வருமாறு கூறினார்,

> எப்படியெனில், அவரே [கிறிஸ்துவே] நம்முடைய சமாதான காரணராகி,

இருதிறத்தாரையும் [யூதர்களையும் புறஜாதியாரையும்] ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரை [மோசேயின் நியாயப்பிரமாணத்தை]த் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம் சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீர மாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார் (எபேசியர் 2:14-16).

புரூஸ் என்பவர், "[ரோமர் 3:29, 30ல்] பவுலின் விவாதம், அவரது நாட்களில் இருந்த சூழ்நிலைகளில் போன்றே, நமது தற்காலத்தியப் பிரிவினைகளின் வெளிச்சத்திலும் மதிப்புடையதாகவே உள்ளது; கிழக்கு மேற்கு, கறுப்பு வெள்ளை என்பவற்றிற்கு இடையில் வித்தியாசமே இல்லை, ஏனெனில் எல்லாருமே தேவனுடைய இலவசமான கிருபை தேவைப்படுபவர்களாக, ஒரே நிபந்தனைகளின்கீழ் அதைப் பெற்றுக்கொள்பவர்களாக இருக்கிறோம்" என்று கூற முன்சென்றார்.[22] கிறிஸ்தவமானது, பல்வேறு இனங்களையும், பல்வேறு சமூகத்தரங்களையும், பல் வேறு பொருளாதாரச் சூழ்நிலைகளையும் பல்வேறு கல்விப்பின்னணிகளையும் - மற்றும் பல்வேறு ஜாதிகளையும்கூட - சேர்ந்த ஆண்களையும் பெண்களையும், சிறுவர்களையும் சிறுமிகளையும், ஒன்றுகூட்டக்கூடிய தனது திறனில் தனிச்சிறப்புமிக்கதாக உள்ளது, அது இவர்களை, தமது கிருபையினால் தங்களை இரட்சித்தவரை ஒன்றுகூடி ஆராதிக்கவும் துதிக்கவும் இவ்வாறு ஒன்றுகூட்டுகிறது.

டாம் ரைட் என்பவர், ரோமர் 3:29, 30ன் செய்தி "எளிமையாக உள்ளது: இயேசுவில் விசுவாசம் கொண்டுள்ள யாவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர் மற்றும் அவர்கள் ஒரே மேஜையை சுற்றி உணவைப் பகிர்ந்துகொள்ளுபவர்களாகவும் இருக்க வேண்டும்" என்று கூறினார்.[23] ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருத்தல் என்பது பற்றி ஹால்ஃபோர்டு லுயுகாக் என்பவரின் பின்வரும் குறிப்புகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்:

நமது செயல்பாடுகளில், நாம் மக்களை ஒரே குடும்பமாக நடத்தத் தவறினால், நாம் உண்மையில் ஒரே தேவனில் விசுவாசம் கொள்வ தில்லை … . யூதராயினும் அல்லது புறஜாதியாராயினும், அவர்களின் விசுவாசத்தின் அடிப்படையில் அவர்களைத் தேவன் ஒரேவிதமாகவே நடத்துகிறார் என்று பவுல் கூறுகிறார். தேவன் நிறக்குருடாயிருக்கிறார். அவரிடத்தில் பட்சபாதம் இல்லை. சிலரைத் தாழ்ந்தவர்கள் என்று விலக்கிவைக்கும் வேலிகளை அவர் அருவருக்கிறார். நாம் சிலருடன் தீண்டாமைக்கொள்கைகள் கொண்டிருந்தால், நாம் ஒரே தேவனில் விசுவாசம் கொள்பவர்கள் அல்ல. மனிதகுலத்தின் ஒருமைத்தன்மையை நாம் நமது செயல்களினால் மறுதலித்தால், நாம் உண்மையில் பலதெய்வ வணக்கத்தாராகவே இருக்கிறோம்.[24]

பவுல் எதைக் கூறவில்லை

ஒருவேளை, நான் பவுல் ரோமர் 3:29, 30ல் எதைக்கூறவில்லை என்பதன்மீதான ஒரு குறிப்பைக் கூடுதலாகக் கூறவேண்டியிருக்கலாம்: யூதர்கள்

யூதர்களாயிருப்பதை விட்டொழித்தனர் என்றோ அல்லது புறஜாதியார்கள் புறஜாதியாராயிருப்பதை விட்டொழித்தனர் என்றோ அவர் கூறவில்லை. மாறாக, இரட்சிப்பைப் பொறுத்தமட்டில் இப்படிப்பட்ட வித்தியாசங்கள் முக்கியமற்றவையாயிருந்தன என்றே அவர் வலியுறுத்தினார். எல்லாரும் ஒரே அடிப்படையில்தான் இரட்சிக்கப்படுகின்றனர்.

ரோமர் 3:29, 30ம் கலாத்தியர் 3:26-28ம், சிலுவையானது எல்லா வித்தியாசங்களையும் நீக்கிப்போட்டது என்று போதிப்பதாக சிலர் வாதிப்பதாலேயே நான் இதைக் கூறுகிறேன். குறிப்பாக, அவர்கள் கணவர் தமது மனைவிக்குத் தலையாக இருக்கிறார் என்ற புதிய ஏற்பாட்டுப் போதனையையும் (எபேசியர் 5:23ஐக் காணவும்), சபையில் பொது ஆராதனை உட்பட (1 தீமோத்தேயு 2:8; 1 கொரிந்தியர் 14:34ஐக் காணவும்) ஆண் நடத்துவத்துவம் வலியுறுத்தப்படுதல் பற்றிய புதிய ஏற்பாட்டு வலியுறுத்தத்தையும் (1 தீமோத்தேயு 3:2ஐக் காணவும்) ஓரங்கட்ட முயற்சி செய்கின்றனர். ஆண்கள் மற்றும் பெண்கள் யாவரும் ஒரேவகையில்தான் இரட்சிக்கப்படுகின்றனர், மற்றும் தேவனுடைய பார்வையில் யாவரும் சமமாகவே உள்ளனர். இது, அவர்கள் ஆண்களாகவும் பெண்களாகவும் இருத்தலை விட்டொழித்தனர் மற்றும் ஆண்கள் பெண்கள் ஆகியவர்களிடத்தில் இருந்து தேவன் எதை எதிர்பார்க்கிறார் என்பது பற்றிய வேதாகமபோதனைக்கு இனியும் கீழ்ப்பட்டவர்கள் அல்ல என்று கூறுவதில் இருந்து தொலைவில் உள்ளது.

"விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்பது தேவன் கூறுவதைச் செய்வதன் அவசியத்தை நீக்கிப்போடுகிறது என்று நான் கூறவில்லை" (3:31)

பவுல் கூறியது என்ன

"மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான்" என்று பவுல் கூறியிருந்தார் (ரோமர் 3:28). தேவன் புறஜாதியாரை (நியாயப்பிரமாணம் இன்றி) இரட்சிக்கும் அதே அடிப்படையில் யூதரை (நியாயப்பிரமாணத்துடன்) இரட்சிப்பார் என்று வலியுறுத்தி இருந்தார் (வசனங்கள் 29, 30). பவுல் இப்படிப்பட்ட கூற்றுக்களை ஏற்படுத்தியிருந்த நிலையில், தம்மை விமர்சிப்பவர்கள் தம்மீது, "நியாயப்பிரமாணத்திற்கு எதிரானவன்" ("antinomianism") என்று குற்றம்சாட்டுவார்கள் என்பதை அறிந்திருந்தார். இந்தப்பெரிய வார்த்தை பின்வரும் இரு கிரேக்கவார்த்தைகளின் அடிப்படையில் அமைந்ததாகும்: *anti* ("எதிராக") மற்றும் *nomos* ("நியாயப்பிரமாணம்"). நியாயப்பிரமாணத்திற்கு எதிரானவர்கள், "சட்டப்பூர்வமாகக் கேட்கப்படுபவைகள்" அல்லது ஒழுக்கநீதியான கட்டுப்பாடுகளை நம்பவில்லை.[25] ஆகையால், பவுல் தாம் விசுவாசித்தாலும் இல்லையென்றாலும் நியாயப்பிரமாணத்திற்கு ஒரு மதிப்பு இருந்தது என்று உரைத்து இப்பகுதியை முடித்தார். அவர் "அப்படியானால் [நாம்[26]] விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா?" என்று கேட்பதன்மூலம் தொடங்கினார் (வசனம் 31அ).

"அவமாக்குதல்" என்பது "செயலற்றதாகக் குறைத்தல்" என்று அர்த்தப்படுகிற (*kata* ["கீழ்"] என்ற வார்த்தையுடன் *argos* ["செயலற்றது"]) என்ற வார்த்தையை இணைத்துப் பெற்ற (*katargeo*) கூட்டுவார்த்தையாக உள்ளது.[27]

KJV வேதாகமத்தில் "make void" என்றுள்ளது; "destroy" ["அழித்தல்"] என்பது நேரடியான மொழிபெயர்ப்பாக உள்ளது.[28] *Nomos* என்பதற்கு முன்பாகத் திட்டவட்டமான சுட்டுச்சொல் எதுவும் இல்லை, ஆனால் பவுல் குறிப்பாக யூதத்துவ எதிர்ப்புரைகளை முன்னெதிர் நோக்கியிருந்தார். ஆகவே, நாம் முதலில் அவரது கேள்வி அந்த நிலைப்பாட்டில் இருந்து எவ்வாறு கண்ணோக்கப்பட்டது என்று ஆழ்ந்து சிந்திப்போம்: "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற போதனை மோசேயின் நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறதா?"

மீண்டுமாகப் பவுல், அதிர்ச்சியூட்டும் தொனியுடன் பதில் அளித்தார்: "அப்படியல்ல!" (வசனம் 31ஆ). "நியாயப்பிரமாணத்தை நிலை நிறுத்துகிறோமே" (வசனம் 31இ) என்று கூறினார். "நிலைநிறுத்துதல்" என்ற வார்த்தை, "நிற்கச்செய்தல்" என்று அர்த்தப்படுகிற *histemi* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது.[29] *Nomos* என்பதற்கு முன்பாகத் திட்டவட்டமான சுட்டுச்சொல் எதுவும் இல்லாத நிலையில் இவ்விடத்தில் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் மீதே கவனக்குவிப்பு இருந்தது. இவ்விடத்தில் பவுல் இந்தச் சிந்தனையை விரிவாக்கவில்லை, ஆனால் பிந்திய அதிகாரங்களில் அவர் நியாயப்பிரமாணம் செய்யக்கூடிய மற்றும் செய்யக்கூடாத விஷயங்கள் பற்றி அதிகமாய்க் கூறினார். கிறிஸ்து வந்து நமது பாவங்களுக்காக மரித்தார் என்ற உண்மையானது, நியாயப்பிரமாணத்தை "நிலைநாட்டிய" வகையில் மோசேயின் நியாயப்பிரமாணத்தை *நிறைவேற்றியது*. கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில், நியாயப்பிரமாணம் "நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு ... நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது" என்று பவுல் கூறினார் (கலாத்தியர் 3:24) - அது அந்த நோக்கத்தை நிறைவேற்றியது.

அடுத்ததாக நாம் இவ்வேத வசனப்பகுதியை நேரடியாகக் கண்ணோக்குவோம்: "அப்படியானால் விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல, நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே." இங்கு வலுவார்ந்த அடிச்செய்தியொன்று இருப்பதாகக் காணப்படுகிறது: நாம் கிரியைகளுக்குப் பதிலாக விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகிறோம் என்ற உண்மை, இனியும் நாம் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிதல் பற்றி அக்கறைகொள்ளத் தேவையில்லை என்று அர்த்தமாகிறதா?[30] இது நாம் விரும்பும் எவ்வழியிலும் வாழ நாம் சுதந்தரமாயிருக்கிறோம், அதாவது தேவபக்தியுள்ள வாழ்வை வாழ்தல் என்பது இனியும் அவசியமில்லை என்று அர்த்தப்படுகிறதா? இதற்கு "அப்படியல்ல" என்பதே பவுலின் உடன்பாடு ஏற்படுத்தப்பட இயலாத பதிலாக உள்ளது. "நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே" என்று அவர் கூறினார். அதாவது, "நாம் நியாயப்பிரமாணத்தின் மதிப்பை நிலைநாட்டுகிறோம், அதாவது தேவன் இன்னமும் பிரமாணங்களைக் கொண்டுள்ளார், அவற்றிற்குக் கீழ்ப்படியும்படி நாம் இன்னமும் எதிர்பார்க்கப்படுகிறோம்."

நாம் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தலின் அடிப்படையில் அல்ல, விசுவாசத்தின் அடிப்படையிலேயே இரட்சிக்கப்படுகிறோம் என்று பவுல் பலமாக எடுத்துரைத்தபடியால், விசுவாசத்தின் அடிப்படையில் நீதிமானாக்கப்படுதல் என்ற போதனை எவ்வாறு "நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறது"? முதலிடத்தில், இரட்சிக்கும் விசுவாசம் என்பது கீழ்ப்படிதலுள்ள விசுவாசமாக உள்ளது. விசுவாசி, தேவனுடைய பிரமாணத்

திற்குக் கீழ்ப்படிதல் பற்றி அக்கறையாக இருக்கிறார்; அவிசுவாசி அவ்வாறு அக்கறை கொண்டிருப்பதில்லை. இரண்டாமிடத்தில், விசுவாசியானவர் தேவன் தனக்குச் செய்திருப்பவற்றைப் புரிந்துகொள்கிறார், தேவன் செய்திருப்பவற்றை *மதிக்கிறார்*, எனவே அவர் தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய *விருப்பமாக இருக்கிறார்*. "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்" (1 யோவான் 4:19); "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்" (1 யோவான் 5:3அ).

மெக்கைகன் என்பவர் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதன் அடிப்படையில் இரட்சிப்பு கிடைக்கிறது என்று நம்புகிறவர்கள் அல்ல, ஆனால் அதற்கு மாறாக, விசுவாசத்தின் அடிப்படையில் இரட்சிப்பு கிடைக்கிறது என்று நம்புகிறவர்களே நியாயப்பிரமாணத்தை மதிக்கின்றனர் என்ற கருத்தை ஏற்படுத்தினார். அவர் தாம், "சட்டரீதியானவர்கள்" (நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதன் அடிப்படையில் இரட்சிப்பு கிடைக்கிறது என்று நம்புகிறவர்கள்) என்றும் "விசுவாசி" என்றும் பெயரிட்ட தனிநபர்களுக்கு இடையில் ஒரு வேறுபாட்டைத் தரவழைத்தார்:

> ஒருபுறத்தில், சட்டரீதியானவர்கள் கீழ்ப்படிதல் உள்ள வாழ்வை நியாயப்பிரமாணத்திற்கு அளித்து அது நியாயப்பிரமாணத்தின் கேட்புகளைத் திருப்திப்படுத்தும் என்று நினைக்கின்றனர். ஆனால் ஒரு மனிதனின் கீழ்ப்படிதல் என்பது எப்போதுமே பூரணமற்றதாக இருப்பதால், அது நியாயப்பிரமாணத்தின் உயர்வான பரிசுத்தத்தை இலேசாக நினைக்கிறது. அது நியாயப்பிரமாணம் தனது கேட்புகளைவிட குறைவானவற்றில் திருப்தியடையும்படி நியாயப்பிர மாணத்தை வற்புறுத்துகிறது. இதற்கு மறுபுறத்தில் விசுவாசியானவர், தான் செய்யக்கூடுவதெல்லாம், நியாயப்பிரமாணம் அவசியப்படுகிறதைவிடக் குறைவானதாகவே இருக்கிறதாக அறிக்கையிடுகிறார். நியாயப்பிரமாணத்திடம் செயல்விளைவில் அவர், "நான் வருந்துகிறேன், என்னால் அளிக்க இயன்ற மிகச்சிறப்பான செயல், உனது நீதியையும் பரிசுத்த கேட்புகளையும் திருப்திப்படுத்த ஏறக்குறையப் போதுமானதாக இருப்பதில்லை. நான் ஒரு பதிலியை அழைத்தாக வேண்டும்: இயேசு கிறிஸ்து" என்று கூறுகிறார். சட்டரீதியானவரல்ல ஆனால் விசுவாசியே நியாயப்பிரமாணத்தை உயர்வான தூய்மையின் பீடத்தின்மீது வைக்கிறார்.[31]

பவுல் எதைக் கூறவில்லை

ரோமர் 3:31 வசனம், மோசேயின் நியாயப்பிரமாணம் இன்றைய நாட்களில் இன்னமும் அமுலில் உள்ளது - குறைந்தபட்சம் அது யூதர்களுக்கு மாத்திரம், அனேகமாக யாவருக்கும் அமுலில் உள்ளது என்று போதிக்கிறது எனச் சிலர் நம்புகின்றனர் என்பது இவ்வசனத்திற்கான விளக்கங்கள் மற்றும் ஒருசில மொழிபெயர்ப்புகள் ஆகியவற்றில் இருந்து வெளிப்படையாகத் தெரிகிறது. பல எழுத்தாளர்கள், பழைய உடன்படிக்கை (பழைய ஏற்பாடு) மற்றும் புதிய உடன்படிக்கை (புதிய ஏற்பாடு) ஆகியவற்றிற்கு இடையில் உள்ள உறவுபற்றி ஒருக்காலும் போராடியதில்லை என்பதும் தெளிவாக உள்ளது. எனது ஆராய்ச்சியில், நான் அவ்வப்போது தேவன் பழைய

ஏற்பாட்டின் “சடங்காச்சாரமான பிரமாணத்தை” நீக்கிப்போட்டார், ஆனால் அதன் “ஒழுக்கக்கோட்பாட்டை” நீக்கவில்லை என்ற ஆலோசனையை அடிக்கடி எதிர்கொள்வதுண்டு. அது உண்மையாயிருந்தால், “சடங்காச்சாரமானது” என்ன மற்றும் “ஒழுக்கரீதியானது” என்ன என்று கூறத் தகுதிவாய்ந்தவர் யார்?

ரோமருக்கு நிருபத்தை எழுதியதில், பவுல் நியாயப்பிரமாணம் நீக்கப்படுதல் பற்றி மறைமுகமாக மாத்திரமே பேசினார்.[32] நாம் - பழைய ஏற்பாட்டுப் பிரமாணமோ அல்லது புதிய ஏற்பாட்டுக் கட்டளைகளோ அல்லது வேறு எந்த சட்ட ஏற்பாட்டையோ - நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதால் இரட்சிக்கப்படுவதில்லை என்று காண்பித்தலே அவரது நோக்கமாக இருந்தது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் கூறவிருந்ததில் எந்த நியாயப்பிரமாணம் என்பது ஒரு முக்கிய காரணியாக இருக்கவில்லை. இருப்பினும், மற்ற சந்தர்ப்பங்களில் அவர் இதைப் பற்றி எழுதியிருந்தார். பவுல் எபேசியர் 2:14, 15அ வில், கிறிஸ்து “[யூதருக்கும் புறஜாதியாருக்கும் இடையில்] பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை [அதாவது, மோசேயின் நியாயப்பிரமாணத்தை]த் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து” என்று கூறினார். கலாத்தியர் 3:24, நியாயப்பிரமாணம் “நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு ... நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது” என்று உரைக்கிறது; மற்றும் வசனம் 25, “விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்கு [மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு]க் கீழானவர்களல்லவே” என்று கூடுதலாகக் கூறுகிறது. கள்ளப்போதகர்கள், பழைய ஏற்பாட்டு - விருத்தசேதனம் முதலான - பிரமாணங்களைக் கிறிஸ்தவர்கள்மீது கட்ட முயற்சிசெய்தபோது, அதைப் பவுல் பலமாகவும் தீர்மானமாகவும் எதிர்த்துச் செயல்பட்டார் (நடபடிகள் 15:1, 2அ; கலாத்தியர் 5:2 ஆகியவற்றைக் காணவும்).

நாம் இவ்விஷயத்தைப் பற்றிப் பிற்பாடு அதிகம் முழுமையாகக் கலந்துரையாடுவோம். இப்போது நாம் இவ்வளவு கூறமுடியும்: 3:31ல், பவுல் மோசேயின் நியாயப்பிரமாணம் இன்றைய நாட்களில் இன்னமும் கட்டுப்படுத்துகிறது என்று கூறவில்லை.

முடிவுரை

ரோமர் 3:27-31 வசனப்பகுதியானது, விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற பவுலின் பாடக்கருத்திற்கான முன்னுரைக்கும் (3:21-26) அடுத்த அதிகாரத்தில் அந்தப்பாடக்கருத்தின்மீதான அவரது கலந்துரையாடலுக்கும் இடையில் ஒரு பாலமாகப் பணியாற்றுகிறது. 4ம் அதிகாரத்தில், பவுல் மேன்மைபாராட்டுதல் ஒழிக்கப்பட்டது என்ற உண்மையையும் (3:27ஐ 4:2 உடன் ஒப்பிடவும்), யூதர்கள் புறஜாதியார் என்ற இருசாராரும் ஒரே அடிப்படையிலேயே நீதிமான்களாக்கப்படுகின்றனர் என்பதையும் (3:29ஐ 4:11, 12, 16 உடன் ஒப்பிடவும்) திரும்பவும் தொட்டார்.

நாம் ரோமர் 3:27-31ஐ விட்டுக் கடந்து செல்வதற்கு முன்பு, பவுல் தவறாகப் புரிந்துகொள்ளப்படாதிருத்தல் அவருக்கு முக்கியத்துவமாய் இருந்தது என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன். அவர் தமது வாசகர்கள், விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுதல் குறித்துப் பின்வரும் மூன்று கொள்கைகளைப்

புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினார்:

- அது பாவிளைத் தாழ்மைப்படுத்துகிறது - மற்றும் மேன்மை பாராட்டுதலை நீக்கிப் போடுகிறது.
- அது விசுவாசிகளை ஒன்றிணைக்கிறது - மற்றும் வேறுபாடு காண்பதை ஊக்கங்கெடச் செய்கிறது.
- அது நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறது - மற்றும் கீழ்ப்படிதலை உற்சாகப்படுத்துகிறது.[33]

விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் மீதான பவுலின் போதனையை நாம் படிக்கையில், நீங்கள் அதை உங்களுக்குச் சொந்த நடைமுறைப்படுத்துவீர்கள் என்று நான் நம்புகிறேன். நீங்கள் இழந்துபோகப்பட்டிருந்தால், அது தேவனுடைய தவறல்ல என்பது இந்நேரம் உங்களுக்குத் தெளிவாகியிருக்க வேண்டும். உங்கள் இரட்சிப்பை உறுதிப்படுத்த அவரால் செய்ய முடிந்த யாவற்றையும் அவர் செய்திருக்கிறார். அவர் தமது குமாரனை அனுப்பியதோடு நின்றுவிடவில்லை, ஆனால் அவர் கிறிஸ்துவின் பலியைப் பற்றி நமக்குக் கூறுகிற வார்த்தையையும் நமக்குக் கொடுத்து அதிலிருந்து நாம் எவ்வாறு பயனடைய முடியும் என்பதையும் நமக்கு அறிவித்திருக்கிறார். எஞ்சியது உங்களைப் பொறுத்ததாக உள்ளது. மாற்கு 16:16; நடபடிகள் 2:38 ஆகிய வசனங்களில் விளக்கப்பட்டுள்ளபடி, நீங்கள் இன்னமும் இயேசுவின்மீது உங்கள் நம்பிக்கையை வைக்காமலும் அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படியாமலும் இருந்தால், இன்றே நீங்கள் அதைச் செய்யும்படிக்கு உங்களுக்காக நான் ஜெபிக்கிறேன்.

குறிப்புகள்

[1]*American Heritage Dictionary*, 4th ed. (2002), s.v. "boast." [2]Adapted from William Hendriksen, *Exposition of Paul's Epistle to the Romans*, New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1981), 135. [3]இந்தச்சொல்விளக்கங்கள் பின்வரும் புத்தகத்தில் இருந்து எடுத்தாளப்பட்டுள்ளன: John MacArthur, *Romans 1-8,* The MacArthur New Testament Commentary (Chicago: Moody Press, 1991), 220. [4]Adapted from Jim McGuiggan, *The Book of Romans*, Looking Into the Bible Series (Lubbock, Tex.: Montex Publishing Co., 1982), 137. [5]Adapted from Hendricksen, 135. [6]இந்த சித்தரிப்பு Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, Vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 524 என்ற புத்தகம் உட்பட அநேக புத்தகங்களில் காணப்படுகிறது. [7]இவ்விடத்தில், பவுல் "நாம்" என்ற வார்த்தையை, ஏவுதல் பெற்றுப் பேசியவர்கள் மற்றும் எழுதியவர்கள் எல்லாரையும் குறிக்கப் பயன்படுத்தியிருக்கலாம் - அல்லது அவர் 3:8ல் செய்தது போன்று "நாம்" என்பதை ஒரு "தலையங்கக்" கருத்தில் தம்மை மாத்திரம் குறிப்பதற்குப் பயன்படுத்தியிருக்கலாம். [8]"தீர்க்கிறோம்" என்பது, "எண்ணிப்பார்த்தல், கணக்கிடுதல்" என்று அர்த்தப்படுகிற *logizomai* என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (*The Analytical Greek Lexicon* [London: Samuel Bagster & Sons, 1971], 249). இது 4ம் அதிகாரத்தில் ஒரு திறவுகோல் வார்த்தையாக உள்ளது; இதை நாம் அந்த சந்தர்ப்பப்பொருளில் கலந்துரையாடுவோம். [9]Ibid., 440. [10]*The Interlinear Greek-English New Testament: The Nestle Greek Text with a New Literal English Translation by Alfred Marshall* (London: Samuel Bagster & Sons, 1958), 612.

[11]Adapted from David F. Burgess, comp., *Encyclopedia of Sermon Illustrations* (St. Louis:

Concordia Publishing House, 1988), 211. [12]Edward Mote, "My Hope Is Built on Nothing Less," *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [13]John David Stewart, *A Study of Major Religious Beliefs in America*, The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1962), 32. [14]இந்தக்கூற்று, 1522ல் லூத்தரின் புதிய ஏற்பாட்டு ஜெர்மன் மொழிபெயர்ப்புக்கு அவரால் எழுதப்பட்ட முன்னுரையில் காணப்படுகிறது. [15]இவர்களில் பலர், இவ்வசனத்தில் "மாத்திரம்" என்பதை (அல்லது அதைப் போன்றதை) முன்னதாகவே மற்றவர்கள் கூட்டியிருந்தனர் என்று குறிப்பிட்டனர். நான் எது மகள்களுக்கு, யாரேனும் சிலர் சிலவற்றைச் செய்திருந்தனர் என்ற உண்மையானது அதை சரியானதாக்கிவிடுவதில்லை என்று போதித்தேன். [16]J. W. MacGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* (Cincinnati: Standard Publishing, n.d.), 323. [17]"ஒருதெய்வக்கோட்பாடு (Monotheism) என்பது ஒரு தேவன் மாத்திரமே இருக்கிறார் என்ற நம்பிக்கையைக் குறிக்கிறது: "ஒரே" அல்லது "ஒரு" (*mono*) + "தேவன்" (*theos*). [18]"ஷேம்மா" என்பது "கேள்" என்பதற்கான எபிரெய வார்த்தையாகும், உபாகமம் 6:4 இவ்வார்த்தையைக் கொண்டுதான் தொடங்குகிறது. [19]மூல வசனத்தில் "விருத்தசேதனம்" மற்றும் "விருத்தசேதனமில்லாமை" என்றே நேரடியாக உள்ளது. [20]யூதர்கள் "விசுவாசத்தினால் [*ek*]" நீதிமான்களாக்கப்படும் வேளையில், புறஜாதிகள் "விசுவாசத்தின் மூலமாக [*dia*]" நீதிமான்களாக்கப்படுகின்றனர் என்று வசனப்பகுதி கூறுகிறது. மாறுபட்ட இரண்டு கிரேக்க முன்னிடைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதன் தனிச்சிறப்பைக் கண்டறியச் சிலர் முயற்சி செய்துள்ளனர், ஆனால் பவுல் அனேகமாக (பெரும்பாலான எழுத்தாளர்கள் செய்வதுபோன்று), பல் வகைத்தன்மைக்காகவே ஒருபொருட் பல சொற்களைப் பயன்படுத்தியிருக்கலாம்.

[21]F. F. Bruce, *The Letter of Paul to the Romans*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 95. [22]Ibid., 95-96. [23]N.Tom Wright, *New Tasks for a Renewed Church* (London: Hodder and Stoughton, 1992), 168. [24]Adapted from Halford E. Luccock, *Preaching Values in the Epistles of Paul,* vol. 1, *Romans and First Corinthians* (New York: Harper & Brothers, 1959), 37-38. [25]யோவானின் நிருபங்களில், நியாயப்பிரமாணத்திற்கு எதிரானகொள்கை என்பது அவர் வெளிப்படுத்திய தவறுகளில் ஒன்றாக இருந்தது (எடுத்துக்காட்டாக, 1 யோவான் 3:4, 10; 5:2, 3 ஆகியவற்றைக் காணவும்). [26]3:8 மற்றும் 3:28ல் போலவே, இங்கு பவுல் "நாம்" என்ற வார்த்தையை பன்மையில் அல்லது "தலையங்கக்" கருத்தில் பயன்படுத்தியிருக்கலாம். [27]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 3. [28]*The Interlinear Greek-English New Testament,* 612. [29]Vine, 207. [30]பார்க்ளே என்பவர் மொழிபெயர்த்த வேதாகமத்தில், "Do we then through faith completely cancel out all law?" என்றுள்ளது (William Barclay, *The Letter to the Romans,* rev. ed., The Daily Study Bible Series [Philadelphia: Westminster Press, 1975], 60.

[31]Adapted from McGuiggan, 139. [32]அவர் இவ்விஷயத்தை நேரடியாக எடுத்துரைக்கவில்லை என்றாலும் - 7:1-6 பற்றிய நமது கலந்துரையாடலில் நாம் காணப்போகிறபடி - அதன்மீதான தமது சிந்தனை பற்றிய பலத்த குறிப்புகளைக் கொடுத்தார். [33]Adapted from John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World*, The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 121.

16

தேவனுடைய திகைப்புக்குரிய "கணக்குவைக்கும் ஏற்பாடுகள்"

(4:1-3, 5)

நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற பவுலின் கலந்துரையாடலின் இருதயம் போன்ற மையப்பகுதியைக் கொண்டுள்ள ரோமர் 4ம் அதிகாரத்தின் படிப்பு ஒன்றைத் தொடங்கத் தயாராக இருக்கிறோம். இந்தப்பாடம் இந்த அதிகாரத்தின் தொடக்கத்தில் உள்ள ஒருசில வசனங்களில் மையங்கொண்டுள்ளது மற்றும் இதுவே இவ்வதிகாரத்திற்கு அறிமுகமாகவும் பயன்படும்.

நான், "எண்ணப்பட்டது" என்ற வார்த்தைக்குச் சிறப்புக்கவனம் கொடுக்க விரும்புகிறேன்: "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" (வசனம் 3ஆ). "அது எண்ணப்பட்டது" என்பது, *logizomai* என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பவுல் *logizomai* என்பதை (பல்வேறு வடிவங்களில்) நான்காம் அதிகாரத்தில் பதினோரு முறைகள் பயன்படுத்தினார். இந்த அதிகாரத்தில் 8ம் வசனம் தவிர மற்ற இடங்களில் இவ்வார்த்தையை NASB வேதாகமம், எப்போதுமே "credits" அல்லது "credited" என்றே மொழிபெயர்க்கிறது, 8ம் வசனத்தில் இது "take into account" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[1] *Lego* ("நான் கூறுகிறேன்") என்பதே *logizomai* என்பதன் வேராக உள்ளது, இந்தச் சொற்றொடர் *logos* ("வார்த்தை") என்பதுடன் தொடர்புடையதாக உள்ளது. இது பவுலின் நாட்களில் பல்வேறு அர்த்தங்களைக் கொண்டிருந்தது,[2] ஆனால் "எண்ணுதல், கணக்கிடுதல், … கணக்கெடுத்தல்" என்பதே இதன் அடிப்படை அர்த்தமாக இருந்தது.[3]

Logizomai என்பது கணக்காளருடைய வார்த்தையாக இருந்தது. அவ்வாறே இதை ரோமர் 4ல் பவுல் பயன்படுத்தினார் என்று பெரும்பான்மையான எழுத்தாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர். ஜான் R. W. ஸ்டாட் என்பவர், "இது 'வரவுவைத்தல்' அல்லது 'கணக்கிடுதல்' என்பதை அர்த்தப்படுத்துகிறது, இது நிதி சார்ந்த அல்லது வணிகரீதியான சந்தர்ப்பப்பொருளில் பயன்படுத்தப்பட்டபோது, சிலவற்றைச் சிலரின் கணக்கில் இடுதல் என்பதைக் குறிப்பிடுகிறது" என்று எழுதினார்.[4] இவ்விதமாக CJB வேதாகமம், 3ம் வசனத்தைப் பின்வருமாறு மொழிபெயர்க்கிறது: "[Abraham] put his trust in God, and it was *credited to his account* as righteousness." நான் இப்பாடத்தை, "தேவனுடைய திகைப்புக்குரிய 'கணக்கு

வைக்கும் ஏற்பாடுகள்’ ” என்று அழைக்கிறேன். E. D. பர்ட்டன் என்பவர், ரோமர் 4ல், நாம் “மாபெரும் கணக்காளருடைய கணக்கிடும் அறையில்” இருக்கிறோம் என்று கருத்துத் தெரிவித்தார்.[5]

“தேவனுடைய திகைப்புக்குரிய ‘கணக்குவைக்கும் ஏற்பாடுகள்’ ” என்ன என்பதை உங்களுக்கு நான் அறிவிக்க முடிய வேண்டும் என்பதற்காக நான் ஜெபிக்கிறேன். இது உங்களுக்கு உங்கள் கிறிஸ்தவ வாழ்வில் புதிய கண்ணோக்கங்களைக் கொடுத்து வேதனைப்படும் இருதயத்திற்குச் சந்தோஷத்தைக் கொண்டுவர முடியும்.

“ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான்” (4:1-3)

பயபக்தியான ஒரு உதாரணம் (வசனம் 1)

நான்காம் அதிகாரம், “அப்படியானால் ... என்று சொல்லுவோம் ... ?” என்கிறது. “அப்படியானால்” என்பது 3:21-26ல் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்பது பற்றிப் பவுலின் அறிமுகத்தைக் குறிப்பிடுகிறது. “அப்படியானால், நம்முடைய தகப்பனாகிய[6] ஆபிரகாம் மாம்சத்தின்படி[7] என்னத்தைக் கண்டடைந்தான் என்று சொல்லுவோம்?” (4:1). 4ம் அதிகாரத்தில் பவுலின் குறிப்புரை யூத வாசகர்களைநோக்கி முதன்மையாக திருப்பப்பட்டது. யூதர்கள், ஆபிரகாமை மாம்சப்பிரகாரமான தங்களுடைய “முற்பிதா” என்று பெருமையுடன் குறிப்பிட்டனர் (லூக்கா 3:8; 16:24, 30; யோவான் 8:39, 53, 56; நடபடிகள் 7:2 ஆகியவற்றைக் காணவும்).[8]

மூல வசனத்தில், ‘‘நம்முடைய தகப்பனாகிய’’ என்பதை உடனடியாகத் தொடர்ந்து “மாம்சத்தின்படி” என்பது வருகிறது,[9] மற்றும் NASBயும் பெரும்பான்மையான பிற மொழிபெயர்ப்புகளும் இதை இவ்வாறே இடுகின்றன. இந்த நிலைப்பாட்டில், இது ஆபிரகாம் யூதமக்களினத்தின் “மாம்சப் பிரகாரமான” முன்னோராக இருந்தார் என்பதைக் குறிப்பிடுகிறது. இருப்பினும், சிலர் “மாம்சத்தின்படி” என்பது “கண்டடைந்தான்” என்பதை மாற்றியமைக்க வேண்டும் என்று நம்புகின்றனர் (ASV வேதாகமத்தில் காணவும்), ஆனால் இது மிகக் குறைவான சாத்தியக்கூறையே கொண்டுள்ளது. இது செயல்விளைவில் பவுலை, “அப்படியானால் நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் மாம்சத்தின் படியான கிரியைகளைச் [அதாவது, தகுதியான செயல்களை] செய்வதினால் நீதிமானாக்கப்படுதல்பற்றி என்னத்தைக் கண்டடைந்தான்?” என்று கேட்கச் செய்தது.

பவுல் அனேகமாக, விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற தமது கலந்துரையாடலில் ஆபிரகாமை அறிமுகப்படுத்துவதற்குப் பல காரணங்களைக் கொண்டிருக்கலாம். முதலாமிடத்தில், ஒரு போதகர் ஒரு கொள்கையை முன்வைத்துள்ளபின்பு, அந்தக் கொள்கைக்கு உறுதியான உதாரணம் ஒன்றைக் கொடுத்தல் என்பது ஒரு நல்ல கருத்தாக இருக்கிறது. விவரிப்புகள் என்பவை சத்தியத்தை ஒளியூட்டும் ஜன்னல்கள் என்று அழைக்கப்பட்டுள்ளன.

ஆபிரகாமை அந்த உதாரணமாகப் பயன்படுத்த வேண்டியது ஏன்? பழைய ஏற்பாட்டின் நாயகர்கள் எத்தனைபேரை வேண்டுமானாலும் பவுல் பயன்படுத்தியிருக்கலாம் (எபிரெயர் 11ஐக் காணவும்). ஆபிரகாமை ஏன் பயன்படுத்த வேண்டும்? யூதர்கள் “பிதாவாகிய ஆபிரகாம்” மீது விசேஷித்த பிரியம் கொண்டிருந்தனர். வேறு எவரும் அவர்களால் இதைவிட அதிகமாக மதிக்கப்பட்டதில்லை. வணக்கத்திற்குரிய இந்த முன்னோர் விசுவாசத்தின் அடிப்படையில் நீதிமானாக்கப்பட்டார் என்று பவுல் நிரூபிக்க

முடியுமென்றால், யூதர்களிடம் அவர் தமது விஷயத்தை நிலைநாட்ட அது அதிக தொலைவு செல்லும்.

பவுல் இன்னொரு காரணத்திற்காகவும் ஆபிரகாமைத் தேர்ந்து கொண்டிருக்கலாம். தமது *செயல்கள்* மூலம் இரட்சிக்கப்படப் போதுமான அளவு *நல்லவராயிருந்த* ஒருவர் பற்றிய உதாரணத்தைத் தரும்படி யூதர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டால், ஆபிரகாம்தான் அனேகமாக அவர்களின் முதல் தேர்வாயிருப்பார்.

> யூதத்துவத்தில் ஆபிரகாமின் முக்கியத்துவத்தை மிகையாக மதிப்பிடுதல் என்பது கடினமாயிருக்கும். அவர், விக்கிரகாராதனை செய்துவந்த மக்களின் மத்தியில் உண்மையான ஒரே தேவனை ஆராதித்த நாயகராயிருந்தார். அவர், தேவனுடைய கட்டளைகள் தமக்குக் கொடுக்கப்படுவதற்கு முன்பே அவற்றிற்குக் கீழ்ப்படிந்திருந்தார் என்று நம்பப்படுகிறது. ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோருடன் அவர் தேவனுக்கு எதிராகப் பாவம் செய்திராதவராகக் கருதப்பட்டார்.[10]

ஆகையால், ஆபிரகாம் தமது *கிரியைகளுக்குப்* பதிலாக தமது *விசுவாசத்தின்* அடிப்படையில் நீதிமானாக்கப்பட்டார் என்று யூதர்களை பவுல் இணங்கவைக்க முடியுமென்றால், அந்த அப்போஸ்தலர், "கிரியைகளினால் நீதிமானாக்கப்படுதல்" என்ற அவர்களுடைய "மிகப் பலத்த" விவாதங்களை ஒன்றுமில்லாததாக்கிவிடுவார்!

ஏற்புடைய ஒரு உற்றுநோக்குதல் (வசனம் 2)

பவுல், ஆபிரகாமுடைய வாழ்வை ஆராய்ந்துபார்க்கத் தயாராக இருந்தார். "ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டானாகில் மேன்மைபாராட்ட அவனுக்கு ஏதுவுண்டு" (4:2அ). விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுதல் "மேன்மை பாராட்டுதலை நீக்கிப்போட்டது" என்று சற்று முன்புதான் கூறியிருந்தார் (3:27ஐக் காணவும்). தமது கிரியைகள் நிமித்தம் மேன்மைபாராட்ட ஒருவரால் கூடுமென்றால், அந்த ஒருவர் ஆபிரகாமாகத்தான் இருக்க முடியும் என்று அவர் தமது சகயூதர்களுடன் ஒப்புக்கொள்வார். ஆபிரகாம் குறிப்பிடத்தக்க ஒரு தனிநபராயிருந்தார். அவர் ஒருவரே, தேவனாலேயே, "என் தாசன்" (ஏசாயா 41:8) என்றும், "உம்முடைய சிநேகிதன்" (2 நாளாகமம் 20:7), "தேவனுடைய சிநேகிதன்" (யாக்கோபு 2:23) என்றும் குறிப்பிடப்பட்டவராக இருக்கிறார். ஆபிரகாம், கிரியைகளின் அடிப்படையில் நீதிமானாக்கப்பட்டிருப்பார் என்றால், நிச்சயமாகவே அவர் மேன்மைபாராட்டச் சிலவற்றை கொண்டிருப்பார். இதைக் கூறியபின்பு பவுல், "ஆகிலும் தேவனுக்கு முன்பாக மேன்மைபாராட்ட ஏதுமில்லை" என்று உடனடியாகக்கூடக் கூறினார் (ரோமர் 4:2ஆ).

"ஆகிலும் தேவனுக்கு முன்பாக" என்பது எதை அர்த்தப்படுத்தியது என்பதைப்பற்றி எழுத்தாளர்கள் போராடுகின்றனர். மூலவசனத்தில் "not [*ou*] with [*pros*] God [*Theou*]" என்றுள்ளது.[11] ஒருவேளை, நேரெதிர்க்கருத்து ஒன்று இவ்விடத்தில் தரப்பட நோக்கம் இருக்கலாம்: *மக்களைப்*பொறுத்த வரையில், ஆபிரகாம் மேன்மைபாராட்டிக்கொள்ளச் சிலவற்றைச் செய்திருந்தார்; ஆனால் *தேவனைப்* பொறுத்த வரையில், அவர் [ஆபிரகாம்] மேன்மைபாராட்டக் காரணம் எதையும் கொண்டிருக்கவில்லை.[12] NLT வேதாகமத்தில், "From God's

point of view Abraham had no basis at all for pride'' என்றுள்ளது.

நாம் எவ்வளவு நல்லவர்களாயிருந்தாலும், எவ்வளவுதான் நற்கிரியைகளை நாம் செய்தாலும் நம்மால் தேவனை ஒருக்காலும் நமக்குக் கடனாளியாக்க முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ளுதல் அவசியமாக உள்ளது. ஆபிரகாம் பூரணப்பட்டவராக இருந்திருப்பினும் (அவர் அவ்வாறு இருக்கவில்லை), அவர் "தேவனுடைய கண்ணோக்கில் இருந்து'' மேன்மைபாராட்ட ஒன்றையும் கொண்டிருக்க மாட்டார். லூக்கா 17:10ஐ நினைவில் வைத்துக்கொள்ளவும்: "அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு: 'நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள்.' "

இன்றியமையாத கொள்கை (வசனம் 3)

ஆபிரகாம், "நீதிமானாக்கப்பட்ட" தனிநபராக இருந்தார் என்பதைப்பற்றி எவரொருவரும் சந்தேகப்படுவதில்லை. அவர் எதன் அடிப்படையில் நீதிமானாக்கப்பட்டார்? என்பதே கேள்வியாக இருந்தது. தேவன் ஆபிரகாமின் கிரியைகளைக் கண்ணோக்கி, "உன்னை இரட்சிக்க அது போதுமானது'' என்று கூறவில்லை என்றால், பின்பு அவர் எந்த அடிப்படையில் பிதாவாகிய ஆபிரகாமை நீதிமானாக்கினார்? நன்கு அறியப்பட்ட வசனப்பகுதியொன்றைப் பவுல் மேற்கோளாகக் காண்பித்தார்: "வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது?[13] ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது'' (4:3). இந்த மேற்கோள் ஆதியாகமம் 15:6ல் இருந்து வருகிறது. இவ்வசனத்தை ரோமர் 4ல் பவுல் பலமுறைகள் குறிப்பிட்டார் (வசனங்கள் 3, 9, 22, 23). இந்த அதிகாரம் ஆதியாகமம் 15:6ன் விளக்கவுரை என்று நினைக்கப்படலாம்.

ஆதியாகமம் 15ன் பின்னணி பவுலின் வாசகர்களுக்கு நன்கு பழக்கப்பட்டதாக இருந்தது. அந்த வரலாற்றை நான் மறுகண்ணோட்டம் இடுவோமாக. ஆபிரகாம் எழுபத்தைந்து வயதுடையவராக ஆரானில் இருந்தபோது (ஆதியாகமம் 12:4), அவரிடம் தேவன், ''நான் உன்னைப் பெரிய ஜாதியாக்[குவேன்]'' என்று கூறியிருந்தார் (12:2அ). அவர் கானான் நாட்டிற்குச்சென்று சேர்ந்தபோது, அவரிடம் கர்த்தர், "உன் சந்ததிக்கு இந்தச் தேசத்தைக் கொடுப்பேன்'' என்று கூறினார் (12:7அ). இந்த வாக்குத்தத்தங்கள், ஆபிரகாமும் அவரது மனைவி சாராளும் குறைந்தபட்சம் ஒரு பிள்ளையையாவது பெறுவார்கள் என்று முன்அனுமானித்தன. இருப்பினும், ஆண்டுகள் கடந்துசென்றன, ஆபிரகாமும் சாராளும் பிள்ளையற்றவர்களாகவே இருந்தனர். ஒருகூற்றின்படி, "அவர்கள் இன்னும் இளமையாகிக்கொண்டிருக்கவில்லை.'' ஆபிரகாம், தேவனுடைய வாக்குத்தத்தம் எவ்வாறு செயல்படுத்தப்படும் என்று வியப்படையத்தொடங்கினார் (15:2, 3ஐக் காணவும்).[14]

ஆபிரகாமுக்கு ஏறக்குறைய எண்பத்தி ஐந்து வயதானபோது (ஆதியாகமம் 16:16ஐக் காணவும்), அவருக்குத் தேவன் கூடுதலான உறுதிப்பாட்டைக் கொடுத்தார். ஒரு இரவில் தேவன், ஆபிரகாமை விண்மீன்களின் கீழ் நடைபோட அழைத்துச்சென்றார். ஆபிரகாமிடத்தில் தேவன், "நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு''

என்று கூறினார் (15:5அ). அவர் ஆபிரகாமுக்குப் பின்வரும் உத்தரவாதத்தைக் கொடுத்தார்: "உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும்" (15:5ஆ). மனிதக் கண்ணோக்கில் இருந்து பார்க்கையில், இது நிறைவேற்றப்படச் சாத்தியமற்ற ஒரு வாக்குத்தத்தமாக இருப்பதாகத் தோன்றியது. அந்த இடர்ப்பாடான கணத்தில், ஆபிரகாம் "கர்த்தரை விசுவாசித்தான்; அதை அவர் [கர்த்தர்] அவனுக்கு நீதியாக எண்ணினார்" (15:6).

*ஆதியாகமம் 15:6ஐப் பற்றிய இரு உண்மைகளை நான் புரிந்துகொள்ளுதல் அவசியமாக உள்ளது. முதலாவது, நாம் இது ஆபிரகாம் கர்த்தரில் விசுவாசம் கொண்ட முதன்முறையாக இருந்தது என்று நினைக்கக்கூடாது. பல ஆண்டுகளுக்கு முன்னர், கல்தேயரின் ஊர் என்ற நகரத்தில் தேவன் ஆபிரகாமுக்குத் தரிசனமாகி[15] (நடபடிகள் 7:2; ஆதியாகமம் 15:7; நெகேமியா 9:7ஐக் காணவும்), "நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா" என்றார் (நடபடிகள் 7:3). ஆரானில், அவருக்குத் தேவன் மறுபடியும் தரிசனமாகி, அதே அறிவுறுத்துதல்களைத் திரும்பக் கொடுத்தார் (ஆதியாகமம் 12:1; வசனம் 4ஐக் காணவும்). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்" என்று கூறினார் (எபிரெயர் 11:8). அதே எழுத்தாளர் தொடர்ந்து, "*விசுவாசத்தினாலே* அவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து" என்று கூறினார் (வசனம் 9அ). ஆபிரகாமுடைய வாழ்வு முழுவதுமே அவர் தேவன்மீது கொண்டிருந்த விசுவாசத்தின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது. ரோமர் 1ல், பவுலின் வார்த்தைகளைக் கடனாகப்பெறுவதென்றால், இந்த முற்பிதாவினுடைய வாழ்வு, "தொடக்க முதல் இறுதி வரை விசுவாசத்தினாலேயே" அமைந்திருந்தது (வசனம் 17). இவ்வாறு ஆதியாகமம் 15:6, ஆபிரகாமின் விசுவாசத்தினுடைய தொடக்கத்திற்குக் குறிப்பாயிருக்கவில்லை.*

இரண்டாவது, ஆதியாகமம் 15:6, ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டதின் தொடக்கத்தைப் பற்றிப் பேசுகிறது - அதாவது, (சிலர் கூறுகிறபடி) அவர் "இரட்சிக்கப்பட்ட" இடம் - என்று நாம் நினைக்கக்கூடாது. ஆபிரகாமைத் தேவன் தமது பிள்ளையென்று கருதியிராவிட்டால், அவர் முன்னதாகவே அவ்வளவு ஆச்சரியமான வாக்குத்தத்தங்களை நிச்சயமாகக் கொடுத்திருக்க மாட்டார். ஆபிரகாம் மெல்கிசேதேக்கைச் சந்தித்தபோது, அந்த அரசர், "வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக" என்று கூறினார் (ஆதியாகமம் 14:19). இதற்குச் சற்றுப்பின்பு, தேவன்தாமே ஆபிரகாமிடம், "ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்" என்று கூறினார் (15:1). ஆதியாகமம் 15:6க்கு முன்பாகவே ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டிருந்தார் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

இந்த விஷயங்கள் உண்மையாக இருக்கும் பட்சத்தில், ஆபிரகாம் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டதை நிரூபிக்கப் பவுல் ஆதியாகமம் 15:6ஐ ஏன் பயன்படுத்தினார்? இங்கு நான்கு காரணங்கள் உள்ளன:

(1) ஏவுதல்பெற்ற எழுத்தாளர்கள், ஆதியாகமம் 15:6க்கு முன்னரே இருந்த

ஆபிரகாமின் விசுவாசம் பற்றிப் பின்பு பேசினாலும், ஆபிரகாம் விசுவாசித்தார் என்று வேதாகமத்தில் இவ்விடத்தில்தான் முதன்முறையாகக் கூறப்படுகிறது. (உண்மையில், "நம்புதல்," "நம்பிக்கை," அல்லது "விசுவாசம்" என்ற வார்த்தையை யாரேனும் ஒருவரைப்பற்றி வேதாகமம் இங்குதான் முதன்முறையாகப் பயன்படுத்துகிறது.[16])

(2) ஆபிரகாம் இந்த வேளைக்கு முன்பாகவே நீதிமானாக/நீதிமானாக்கப்பட்டு இருந்தார் என்பது தெளிவு என்றாலும், அவரைக்குறிப்பிட "நீதிமான்" என்ற வார்த்தையை வேதாகமம் இங்குதான் முதன்முறையாகப் பயன்படுத்துகிறது.

(3) ஆபிரகாம் தமது *விசுவாசத்தின்* அடிப்படையில் நீதிமானாக்கப்பட்டார் என்று இவ்வசனம் குறிப்பாக எடுத்துரைக்கிறது.

(4) நாள்வரிசை முறைமைப்படி, இந்தக்கூற்று, ஆபிரகாம் விருத்தசேதனம் செய்யப்படுவதற்கு பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு (ஆதியாகமம் 16:1, 16; 17:1, 9, 24 ஆகியவற்றைக் காணவும்) மற்றும் மோசே நியாயப்பிர மாணத்தைக் கொடுப்பதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் முன்பு (கலாத்தியர் 3:16, 17ஐக் காணவும்) ஏற்படுத்தப்பட்டிருந்தது.

ஆதியாகமம் 15:6 ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தைப்பற்றி எழுதப் பட்டிருந்தது என்றாலும், *ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள், இதை ஆபிரகாமின் வாழ்வுபற்றி ஏற்புடைய ஒரு தொகுப்புரையாகவே கண்டனர்.* கலாத் தியர் 3:6-9ல், பவுல் இவ்வசனத்தை ஆதியாகமம் 12ல் ஆபிரகாமுக்கு முன்னரே கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்துடன் பிணைத்தார். ரோமர் 4ன் பிற்பகுதியில், நட்சத்திரக்கூட்டம் தெரிந்த அந்த இரவில் ஆபிரகாம் தேவ னுடன் சஞ்சரித்துக்கொண்டிருந்த அவ்வேளைக்குப் பதினான்கு ஆண்டுகள் பின்பு, அவருக்கு ஒரு மகன் தரப்படுவார் என்று அளிக்கப்பட்ட வாக்குத்தத்தத்துடன் தொடர்புடையவகையில் பவுல் ஆதியாகமம் 15:6ஐப் பயன்படுத்தினார் (ரோமர் 4:18-22). யாக்கோபு 2:21-24ல், யாக்கோபு ஆதியாகமம் 15:6ஐ, ஆபிரகாம் தமது மகனைப் பலிபீடத்தின்மீது அளித்த நிகழ்ச்சியுடன் பிணைத்தார்.

ரோமர் 4ல், ஆதியாகமம் 15:6ஐப் பயன்படுத்துவதைப் பவுல் தேர்ந்து கொண்டதற்கு, மேலே பட்டியலிடப்பட்டுள்ளவற்றில் மூன்றாவதானது முக்கியகாரணமாக இருக்கிறது. இவ்வசனம், ஆபிரகாம் தம்முடைய விசுவாசத்தின் அடிப்படையிலேயே நீதிமானாக்கப்பட்டார் என்று குறிப்பாக எடுத்துரைக்கிறது - *மற்றும் இது கிரியைகளைப் பற்றி ஒன்றும் கூறவே இல்லை.* சில யூதத்துவப் போதகர்கள், *ஆபிரகாம் தமது கிரியைகளின் அடிப்படையில் நீதிமா னாக்கப்பட்டிருந்தார்* என்ற தங்களுடைய போதனைக்குப் பொருந்தும்வகையில் ஆதியாகமம் 15:6ஐப் பயன்படுத்த முயற்சிசெய்துள்ளனர். அவர்கள் இவ்வசனத்தை, "ஆபிரகாம் தேவனிடத்தில் *விசுவாசம்* நிறைந்தவராயிருந்தார், அது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது" என்று கூறும்படி மாற்றியமைக்கின்றனர் - ஆனால் இவ்வசனம் அவ்வாறு கூறுவதில்லை. இது, "அவன் கர்த்தரை *விசுவாசித்தான்,* அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்" என்று கூறுகிறது.

ஆபிரகாம் தமது காலத்தில் வாழ்ந்த மக்கள் யாவரிலும் மிகச்சிறந்தவராக இருந்தபடியால் அவரைத் தேவன் தேர்ந்துகொண்டார் என்று யூதர்கள் வலியுறுத்தினர் - இதற்கு நான் கருத்து வேறுபடுவதில்லை. அவர்கள், உண்மையான

தேவனுடைய வெளிச்சத்தில் ஆபிரகாம் நடந்தார், அதேவேளையில் எஞ்சிய உலகம் புறதெய்வ வணக்கம் என்ற இருளில் தடுமாறிற்று என்று குறிப்பிட்டனர் - இது உண்மையாக இருக்கிறது. தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது மனிதப்பகுத்தறிவிற்கு எதிரானதாக இருந்த வேளையிலும், அவருக்கு கீழ்ப்படிதல் என்பதற்கு உதாரண மாக அவரை அவர்கள் பற்றி உயர்த்தினர் - அவ்வாறு செய்ததில், அவர்கள் சரியானவர்களாகவே இருந்தனர். இவைகள் எல்லாவற்றிலுமே, அவர்கள் சரியானவர்களாய் இருந்தனர். ஆபிரகாம் மனித நற்தன்மையின் அடிப்படையில் *நீதிமானாக்கப்பட்டார்* என்று கூறியபோதுதான் அவர்கள் தவறாகச் சென்றனர். விஷயம் *அதுவல்ல* என்று பவுல் அறிவித்தார். மாறாக, "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தார், அது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது."

"அது அவருக்கு [நீதியாக] எண்ணப்பட்டது" (4:3, 5)

ஆச்சரியமான சத்தியம் ஒன்று அறிவிக்கப்பட்டது

அது நம்மை, ஆபிரகாமுக்கு - மற்றும் நமக்கு - "தேவனுடைய கணக்கிடும் ஏற்பாட்டிடம்" கொண்டு வருகிறது. இன்றைய நாட்களில், நான் வாழும் இடத்தில், கணக்கிடுதலில் பெரும்பான்மையும் கணணிகளில் செய்யப்படுகிறது; ஆனால் நான் ஒரு பையனாக இருந்தகாலத்தில், பேரேடு என்று அழைக்கப்படுகிற புத்தகங்களில் கணக்கிடுதல் செய்யப்பட்டது. வர்த்தக உரிமையாளர்கள் இந்தப் பேரேடுகளை "புத்தகங்கள்" என்று குறிப்பிட்டனர். "புத்தகங்களில் தகவல்களை பதிந்துவைத்தல்," "புத்தகங்களைப் பராமரித்தல்" அல்லது "புத்தகப்பணி" என்று அழைக்கப்பட்டது. பேரேட்டில், செலவுகளுக்கு (வெளிச்செல்லும் பணம்) "பற்று" என்ற பத்தியும், வரவுகளுக்கு (உள்வரும் பணம்) "வரவு" என்ற பத்தியும் இருந்தன. இவ்விரு பத்திகளிலும் உள்ள தொகை சமமாயிருக்கும்படி செய்தல் ("புத்தகத்தை நேர்ப்படுத்துதல்") புத்தகப் பராமரிப்பாளர்களின் பொறுப்புகளில் ஒன்றாக இருந்தது.

நான் அபிலேன் கிறிஸ்தவக் கல்லூரியில் (இப்போது பல்கலைக் கழகம்) ரோமருக்கு எழுதிய நிருபம் பற்றிய J. D. தாமஸ் அவர்களின் வகுப்பில் படித்தேன் என்பதை நான் முன்னரே குறிப்பிட்டிருந்தேன்.[17] ரோமர் 4ஐ சகோதரர் தாமஸ் கலந்துரையாடுகையில், அவர் கரும்பலகையின் பக்கம் திரும்பினார். அவர் ஒரு பெரிய செவ்வகத்தை வரைந்து, அதன் உச்சியில் "தேவனுடைய பேரேடு" என்றெழுதினார். பின்பு அவர் [அச்செவ்வகத்தினுள்] இடது புறத்தில் "பற்று" என்று ஒரு பத்தியையும் வலது புறத்தில் "வரவு" என்ற ஒரு பத்தியையும் உருவாக்கினார். "பற்று" என்ற பத்தியில், அவர் "**பாவம்**" என்ற வார்த்தையை எழுதி, ஆபிரகாமின் வாழ்வில் பாவம் என்பது பற்றிப் பேசுகையில் அதில் X குறிகளை இடத்தொடங்கினார்.

ஆபிரகாம் நல்லவராக இருந்தார், ஆயினும் அவர் இன்னமும் பாவம் செய்தார். பல யூதர்கள் ஆபிரகாமின் பாவங்களைக் காணாது விடுகின்றனர் (அல்லது அதற்குச் சாக்குப்போக்கு கூறுகின்றனர்), ஆனால் அவரது வாழ்வைப்பற்றிய மேலோட்டமான படிப்புக்கூட பூரணமற்றதன்மை களை வெளிப்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, பயத்தின் காரணமாக, ஆபிரகாம் இருமுறை சாராளைப்பற்றி அரசர்களிடத்தில் "விட்டுவிடுதல் என்ற விஷயத்தினால் பொய் கூறினார்" (ஆதியாகமம் 12:10-20; 20:1-18).

ஆகார் கடுமையாக நடத்தப்பட அனுமதித்ததில் ஆபிரகாம் தவறானவராக இருந்தார் என்று பலர் நினைக்கின்றனர் (ஆதியாகமம் 16:6-14). பிந்திய ஒரு பாடத்தில் நாம் காணப்போகிறபடி, ஆபிரகாமின் விசுவாசம்கூட பூரணத்திற்குக் குறைவானதாகவே இருந்தது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், ஆபிரகாம் மனிதராக இருந்தார் மற்றும் எல்லா மனிதர்களையும்போன்றே அவரும் போராடினார்.

இந்த வேளையில், சகோதரர் தாமஸ், ஆபிரகாமின் பேரேட்டில் "பற்று" என்ற பக்கத்தில் பாவங்களை ("X" களை) "கூட்டியிருந்தார்." பின்பு அவர் "வரவு" என்ற பத்தியின் பக்கம் திரும்பினார். "ஆபிரகாம் நல்ல செயல்களையும் செய்திருந்தார், அவற்றைப்பற்றித் தேவன் அறிந்திருந்தார்" என்று அவர் கூறினார். அந்தப்பத்தியில் அவர் இரண்டு "X" களை இட்டார். இருப்பினும், அவர் ஆபிரகாமின் வாழ்க்கையில் இருந்த எந்த அளவு நற்செயலும் அவர் செய்திருந்த பாவங்களை "சாமானப்படுத்த" இயலாது என்று வலியுறுத்தினார். "சூழ்நிலையானது நம்பிக்கையற்றதாக காணப்பட்டது" என்று அவர் கூறினார்.

பின்பு சகோதரர் தாமஸ், *logizomai* என்பதன் அர்த்தத்தை எங்களுக்கு நினைவூட்டினார். பலகையில் "**விசுவாசம்**" என்ற வார்த்தையைக் கூட்டிய அவர், "தேவன் வரவு பத்தியில் '**விசுவாசம்**' என்பதை எழுதி, ஆபிரகாம் அதை மாத்திரம் கொண்டிருந்தால் போதும் என்பது போன்று, அதை நீதியாக *எண்ணினார்.*" பின்பு "புத்தகங்கள் நேராக்கப்படும்படி" அவர் "வரவு" பத்தியின் அடிப்பகுதியில் "X" ஐக் கூட்டினார்.

தேவனுடைய பேரேடு	
கடன்	***பற்று***
பாவம் X X X X X X	***விசுவாசம்*** X X X X X X
X X X X X X X X X X X	X X X X X X X X X X X

சகோதரர் தாமஸ் தமது வரைபடத்தில் இருந்த குறைபாட்டிற்கு வருத்தம் தெரிவித்தார்; எந்த ஒரு விவரிப்பும் பூரணப்பட்டதல்ல. "ஆனால், ஆபிரகாமிடம் பூரணமான கீழ்ப்படிதலை தேவன் எதிர்பார்க்கவில்லை. (அவர் [ஆபிரகாம்] அதைக் கொண்டிருக்கவும் இல்லை), ஆனால்," "அவரது *விசுவாசத்தையே* கண்ணோக்கினார். அவர் ஆபிரகாமின் விசுவாசத்தைக் கண்டபோது, 'அது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது.' அவர் *விசுவாசத்தை* நீதியாக எண்ணினார்" என்று அவர் கூறினார். சற்றே நிதானித்தபின்பு அவர், "அதே அடிப்படையில்தான் அவர் உங்களையும் என்னையும் இரட்சிக்கிறார்" என்று கூடுதலாகக் கூறினார்.

இந்த சத்தியத்தை முதன்முறையாகக் கேள்விப்படும்போது மக்கள், நிம்மதிப்பெருமூச்சு விடுவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் தேவனுடைய நீதியை மாத்திரம் அறிந்தவர்களாக "பரலோகம் செல்லப் போதுமானவற்றைச் செய்தல்" பற்றி பயம்நிறைந்தவர்களாக இருந்தனர் என்பது தெளிவு. சகோதரர் தாமஸின் வகுப்பில் இவ்வகையான பதில்செயல் எதுவும்

செய்யப்பட்டதாக எனக்கு நினைவில் இல்லை. கர்த்தரைப் பிரியப்படுத்த "போதுமானதைச் செய்தல்" பற்றி முன்பு கவலை கொண்டிருந்ததாக எதையும் நான் நினைவுகொள்ளவில்லை. "பூரணத்துவ இயலின் சாபம்" என்று யாரோ ஒருவர் அழைத்துள்ள விஷயத்தினால் ஒருவர் துன்புறுகையில், நான் இருக்க வேண்டியபிரகாரம் இருந்ததில்லை என்பதை அறிந்திருந்தேன். இருந்த போதிலும், எனது பெற்றோரும் மற்றவர்களும் எனக்கு, அன்பின் தேவனைப் பற்றிப் போதித்திருந்தனர். (நான் ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் பற்றிப் படிக்கும் வகுப்பில் இருந்தபோது, நான் பலவிஷயங்களை அறியாதிருந்தது மட்டுமின்றி, இளைஞனாகவும் உற்சாகம் மிகுந்தவனாகவும், எனது கர்த்தருக்காக மாபெரும் செயல்களைச் செய்யத் தயாராகவும்கூட இருந்தேன் என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும். நான் ஏன் கவலைப்பட வேண்டும்?)

சகோதரர் தாமஸ் தமது வரைபடத்தை வரைந்தபோது, நான் உணர்ந்ததாக நினைவுபடுத்திக்கொள்ளும் விஷயம், புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ளுதல் மற்றும் கூடுதல் அறிவுக்கூர்மையை ஆதாயப்படுத்திக் கொள்ளுதல் என்ற வகையில் ஆர்வத்திற்குரியதாக, உணர்வெழுச்சியின் தொடுதல் கொண்டதாக இருந்தது. ஒருவேளை நான் சற்றே சந்தேகம் உடையவனாகவும் இருந்தேன். எனது மனம் தகவல்களை ஆராய்ந்து பார்த்து, வசனத்தைப் பற்றி நான் முன்பு கற்றிருந்தவற்றிற்கு எதிராக அதைப் பரிசோதனை செய்தது (நடபடிகள் 17:11). படிப்படியாக, ரோமர் 4ல் பவுலின் போதனையின் தனிச்சிறப்பில் மூழ்கலாயிற்று. தொடர்ந்து வந்த ஆண்டுகளில், இந்த மாபெரும் அதிகாரம் பற்றிய எனது மதிப்பு தொடர்ந்து வளர்ந்துள்ளது.

நான் பட்டம்பெற்று முழுநேரம் பிரசங்கிக்கத் தொடங்கியபோது, கிறிஸ்துவுக்குள்ளான எனது சகோதரர் சகோதரிகள் பலருக்கு ரோமர் 4ன் சத்தியங்கள் தேவையாயிருந்தன என்பது விரைவிலேயே தெளிவாயிற்று. ஒரு உறுப்பினர், "நீங்கள் பரலோகம் செல்லப் போதுமானவற்றைச் செய் திருக்கும் வேளை பற்றி எவ்வாறு அறிவீர்கள்?" என்று கேட்பது அசாரணமான தாக இருந்ததில்லை. "நீங்கள் இரட்சிக்கப்பட்டு இருக்கிறீர்களா?" என்ற கேள்விக்கு, "நான் அவ்வாறே நம்புகிறேன்" என்ற நிச்சயமற்ற வாக்கியமே பொதுவான பதிலாயிருந்தது. வேதாகம வகுப்பின் போதகர்களில் சிலர், யோவானின் "துடுக்குத்தனமான" கூற்றுடன் போராடுகின்றனர்: "உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும் ... இவைகளை எழுதி யிருக்கிறேன்" (1 யோவான் 5:13). அவர்கள் பவுல் இவ்வளவு தைரியமாய் இருக்க முடிந்தது பற்றி வியப்படைந்தனர்: "இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்" (2 தீமோத்தேயு 4:8அ).

பவுலின் போதனை எனக்குத் தனிப்பட்டவகையில் எவ்வளவு முக்கியத்துவம் உள்ளதாகிறது என்பதையும் நான் படிப்படியாக அறிந்திருக்கிறேன். எனது தேவனுக்கு முன்பாக எனது செயல்கள் எவ்வாறு குறைவுள்ளவையாக உள்ளன என்பதைப் பற்றி நான் அதிகம் அதிகம் உணர்வுள்ளவனாக வளருகிறேன். மற்றும், காலம் கடந்து செல்லுகையில், ஒருகாலத்தில் நான் சக்தியின் வற்றாத ஆதாரமூலமென்று நினைத்த விஷயம் மறைந்தொழிந்துள்ளது. நாளுக்குநாள், நான் தேவன் எனது பூரணமற்ற, போதுமானதற்ற, எப்போதுமே தவறுள்ள செயல்களைப் பார்ப்பதில்லை - ஆனால் எனது *விசுவாசத்தையே* அவர்

பார்க்கிறார் என்ற உண்மையை அதிகம் அதிகமாக மதிக்கிறேன். தேவனுக்கு நன்றி!

ஆழ்ந்தறியப்பட்ட ஒரு தீவிரமான கேள்வி

இது கிரியைகள் தேவையில்லை என்று அர்த்தப்படுகிறதா? பவுல் ஆதியாகமம் 15:6ஐ மேற்கோள் காட்டியபோது, அவர் ஆபிரகாமின் கிரியைகள் முக்கிய மற்றவையாக இருந்தன என்று போதிக்க நோக்கம் கொண்டிருந்தாரா? இல்லவே இல்லை. சற்று நேரத்திற்கு முன்பு, நான் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் ஆதியாகமம் 15:6ஐ ஆபிரகாமுடைய வாழ்வின் தொகுப்புரையாகக் கருதினர் என்று குறிப்பிட்டேன். அவர்கள் பயன்படுத்திய உதாரணங்களைப் பாருங்கள். கலாத்தியர் 3:6-9ல், பவுல் இவ்வசனத்தை ஆதியாகமம் 12ல் உள்ள தேவனுடைய வசனத்துடன் பிணைத்தார், அங்கு தேவன் ஆபிரகாமைக் கானானுக்குச் செல் லும்படி திரும்பவும் அழைத்தார். அந்த அழைப்பைப் பற்றி, எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், ''விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தர மாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்'' என்று கூறினார் (எபிரெயர் 11:8). ஆபிரகாம் *கீழ்ப்படியாமல் இருந்திருந்தால்* என்ன ஆகியிருக்கும்? அது அவர் விசுவாசிக்க*வில்லை* என்று அர்த்தமாகியிருக்காதா?

ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் இவ்வசனத்தின் தோற்றக்காலச் சந்தர்ப்பப்பொருளைத் தம் சிந்தையில் முதன்மையாகக் கொண்டிருந்தார் (4:10ஐக் காணவும்), ஆனால் அவர் பதினான்கு ஆண்டுகளுக்குப் பின்பு ஒரு மகன் பிறப்பான் என்ற குறிப்பான வாக்குத்தத்தத்தையும் உள்ளடக்கினார் (4:19ஐக் காணவும்). ஆபிரகாம் ஒரு மகனைப் பெறுவார் என்ற உத்தரவாதம் அளிக்கப்பட்டது - ஆனால் கடைசியில் ஈசாக்கு பிறந்தபோது, அது கன்னிப்பெண்ணிடத்தில் இருந்து பிறந்த பிறப்பாக இருக்கவில்லை. ஆபிரகாம் "தேவன்மீது விசுவாசம்'' மாத்திரம் கொண்டவராக, அந்த வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படும் வகையில் சாராளுடன் திருமண உறவுகொள்ள மறுத்திருந் தால் என்னவாகியிருக்கும்? மீண்டுமாக, அவ்வகையான செயல்பாடு (அல்லது செயலற்றதன்மை) விசுவாசத்தையல்ல, அவிசுவாசத்தையே செயல்விளக்கப்படுத்தியிருக்கும்.

பல ஆண்டுகளுக்குப் பின்பு, தேவன் ஆபிரகாமுடைய மகன் ஈசாக்கைத் தமக்குப் பலியிடும்படி அறிவுறுத்திய நிகழ்ச்சி, யாக்கோபு பயன்படுத்திய உதாரணமாக இருந்தது.[18] பின்வருமாறு யாக்கோபு எழுதினார்,

> நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலி பீடத்தின்மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதி மானாக்கப்பட்டான்? விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. "அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" (யாக்கோபு 2:21-23அ).

அந்த நிகழ்ச்சியைப்பற்றி, எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் பின்வரு

மாறு எழுதினார்,

> *மேலும் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான். "ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப்பட்டிருந்ததே"; இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்றவன், மரித்தோரிலிருந்துமெழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறாரென்றெண்ணி, தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்; மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான் (எபிரெயர் 11:17-19).*

ஆபிரகாம் தமது மகனைப் பலியிடவேண்டும் என்ற கட்டளையைத் தேவன் கொடுத்தபோது, அவர் (ஆபிரகாம்) அதை மறுத்திருந்தால் என்னவாகியிருக்கும்? அப்படிப்பட்ட முடிவானது, "மரித்தோரிலிருந்துமெழுப்ப வல்லவராயிருக்கிற" தேவன்மீது கொண்டுள்ள மறைமுகமான நம்பிக்கைக்குப் பதிலாக விசுவாசக்குறைவை வெளிப்படுத்தியிருக்கும் என்பது தெளிவல்லவா?

ஆபிரகாமுடைய கிரியைகளின் முக்கியத்துவம், ஆதியாகமம் 26ல் ஈசாக்குக்குத் தேவனுடைய வார்த்தைகளில் காணப்படுகிறது:

> *"... உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு நான் இட்ட ஆணையை நிறைவேற்றுவேன். ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, என் விதி களையும், என் கற்பனைகளையும், என் நியமங்களையும், என் பிரமாணங் களையும் கைக்கொண்டபடியினால், நான் உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணி, உன் சந்ததிக்கு இந்தத் தேசங்கள் யாவையும் தருவேன்; உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதி களும் ஆசீர்வதிக்கப்படும்" (வசனங்கள் 3-5).*

ஆம், ஆபிரகாமின் கிரியைகள் முக்கியமானவைகளாக இருந்தன. ஆபிரகாம் வாழ்ந்த காலம் மற்றும் அவர் எந்த சூழ்நிலைகளின்கீழ் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார் என்பதை ஒருவர் ஆழ்ந்து சிந்திக்கும்போது, அவர் முழு இருதயத்துடன் கர்த்தருடைய கட்டளைகளுக்குப் பதில்செயல்செய்தது என்பது திகைப்புக்குரியதாகவும், அதிர்ச்சியளிப்பதாகவும்கூட இருக்கிறது. இருப்பினும், பின்வரும் இரு திறவுகோல் உண்மைகளின் பார்வையை மறக்கவேண்டாம்: (1) ஆபிரகாமின் கிரியைகளைப் பற்றி நாம் பேசுகையில், நாம் "தகுதிப்படுத்தும் கிரியைகள்" பற்றியல்ல, ஆனால் "விசுவாசத்துடன் கீழ்ப்படிதல்" பற்றியே பேசுகிறோம். (2) ஆபிரகாமின் கிரியைகள் குறிப்பிடத்தக்கவைகளாக இருந்தபோதிலும், அவை பூரணப்பட்டவைகளாக இருந்ததில்லை. அவர் இன்னமும் "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு" இரட்சிக்கப்பட வேண்டியவராக இருந்தார் (எபேசியர் 2:8ஐஅவைக் காணவும்). இவ்வாறு வேதவசனங்கள், "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" என்று வலியுறுத்தின (ரோமர் 4:3).

ஆச்சரியமான சத்தியம் சொந்தமாக்கப்பட்டது

ஆபிரகாம் மாத்திரம் தமது விசுவாசத்தின் அடிப்படையில் இரட்சிக்கப் படவில்லை, ஆனால் நீங்களும் நானும்கூட அதே அடிப்படையில்தான்

இரட்சிக்கப்படுகிறோம் என்பதைப் பின்வரும் பாடங்களில் நாம் காண்போம். நாம் "தேவனுடைய திகைப்புக்குரிய 'கணக்கிடும் ஏற்பாடு' " என்பதில் இருந்தும் பயனடைகிறோம் (4:5ஐக் காணவும்). பவுல், ''அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது, அவனுக்காக [ஆபிரகாமுக்காக] மாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும்'' என்று எழுதினார் (4:23, 24). இந்த சத்தியத்தை நாம் புரிந்துகொண்டவுடன், இது நமது வாழ்வில் பிரதானமான செயல்தாக்கம் கொண்டிருக்க வேண்டும்.

(1) *இது நம்மை நம்பிக்கையால் நிரப்ப வேண்டும்.* ஒப்புக்கொடுத்தல் அற்ற மற்றும் அரைமனது கொண்ட கிறிஸ்தவர்கள், கர்த்தருக்கு "போதுமான வற்றைச் செய்தல்'' பற்றிக் கவலைப்படுவதில்லை. இதற்கு நேர்மாறாக, மனச்சாட்சியின் உணர்வுகொண்ட ஒவ்வொரு கிறிஸ்தவரும் தமது தகுதி யின்மை என்பதை உணர்ந்து, தாம் இருக்கவேண்டிய முறையில் இருந்து எவ்வளவு குறைவுபட்டுள்ளார் என்பதைப் புரிந்துகொள்கிறார். தேவன் கீழ்ப்படிதலைக் கேட்கிறபோது, அவர் *பூரணமான* கீழ்ப்படிதலைக் கேட்ப தில்லை என்பது ஆச்சரியமானதாக இருப்பதில்லையா? அவர் நம்மிடத்தில், நாம் நம்மால் இயன்ற அளவுக்கு மிகச்சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார், ஆனால் கீழ்ப்படிதலுக்குப்பின்னால் உள்ள நமது நோக்கம்தான் - அதாவது நமது *விசுவாசம்*தான் - அவரது மாபெரும் அக்கறைக்குரியதாக உள்ளது. வில்லியம் பார்க்ளே என்பவர், "தேவன் நமக்கு அளித்துள்ள அன்பை பூரண மான நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ளுதல்" என்பதைக் கற்றுக்கொள்வது அவசியமானதாக இருக்கையில், "தேவனுடைய அன்பை ஈட்டுவதற்காக" சிலர் போராடி "போராட்டத்தில் தோல்வியடைதல்" பற்றி எழுதினார்.[19]

(2) *இது நமக்குள் அன்பை உட்செலுத்த வேண்டும்.* நம்மீது அதிகமாய் அன்புகூருபவர்மீது நாம் அன்பு செலுத்தாது இருப்பது எப்படி (1 யோவான் 4:19)? நாம் ''விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு'' இருக்கிறோம் என்பதைப் புரிந்துகொண்டவுடன் ''தேவன் நமக்குச் செய்துள்ளது பற்றி திகைப்புணர்வினால் மூழ்கடிக்கப்பட்டு, [நமது] ஆராதனையில் அந்தத் திகைப்புணர்வு வெளிச்சிந்துகிறது.''[20] ஆராதனை என்பது நிறைவேற்றப்பட வேண்டிய கடமையாக இனியும் இராது, ஆனால் அது மகிழ்வுடன் அனுபவிக்கப்பட வேண்டிய ஒரு சிலாக்கியமாக இருக்கும். "ஆச்சரியமான கிருபை" என்பது போன்ற பாடல்கள் ஒரு புதிய அர்த்தத்தைக் கொடுப்பவைகளாயிருக்கும்!

(3) *இது நம்மைச் செயல்படும்படி அசைக்க வேண்டும்.* சிலர், "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்" பற்றி நாம் போதித்தால், மக்கள் கிரியை செய்ய வேண்டிய அவசியமில்லை, கீழ்ப்படிய வேண்டிய அவசியம் இல்லை என்று முடிவுசெய்துவிடுவார்கள் என்பதாகக் கவலைப்படுகின்றனர். நமது அடுத்தபாடத்தில் நாம் காணப்போகிறபடி, "விசுவாசத்தினால் நீதிமா னாக்கப்படுதல்" என்ற உபதேசம் - தக்கவகையில் புரிந்துகொள்ளப்படும்போது - குறைவானதல்ல, ஆனால் *மாபெரும்* முயற்சியை விளைவிக்கிறது. கிறிஸ்து எனக்காக தமது எல்லாவற்றையும் கொடுத்தார்; நான் என்னுடைய எல்லா வற்றையும் அர்ப்பணிக்காது எவ்வாறு இருக்க முடியும்?

முடிவுரை

தேவனுடைய "கணக்கிடும் ஏற்பாடு" உண்மையிலேயே திகைப்புக்கு உரியதாக இருப்பதில்லையா? நீங்கள் அவ்வாறே நினைக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன். தொடர்ந்து வரும் பாடத்தில் நாம் இதைப் பற்றித் தொடர்ந்து கலந்துரையாடுவோம்.

ரோமர் 4ல் பவுலின் போதனை, பல ஆண்டுகளுக்கு முன்பு சகோதரர் தாமஸ் அவர்களின் வகுப்பில் எனக்குப் புதியதாகத் தோன்றியதுபோல, உங்களுக்குப் புதியதாகத் தோன்றுதல் சாத்தியமா? இதை நீங்கள் உடனடியாக முழுமையும் புரிந்துகொள்ளாவிட்டால், கவலைப்படாதீர்கள். இந்தவரிசைத் தொடரின் முதல் பாடத்தில், ரோமருக்கு எழுதிய நிருபம் கி.பி. 57 அல்லது 58ல் எழுதப்பட்டது என்று நான் கருத்துத் தெரிவித்திருந்தேன். அது இந்த நிருபத்தை, சபை நிலைநாட்டப்பட்டு முப்பது அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்குப் பின்பு எழுதப்பட்டது என்பதாகும். பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் படிக்காமலேயே கிறிஸ்தவர்களாகி மரித்தவர்களின் நிலையைப் பற்றி நினைத்துப்பாருங்கள். நீங்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கும்படி காத்துக்கொள்வதற்கு உங்களை ஊக்குவிக்கக்கூடிய சத்தியங்களைப் பகிர்ந்துகொள்வதில் நான் அக்கறையுள்ளவனாக இருக்கும் அளவுக்கு, ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் புரிந்துகொள்ளாமல் நீங்கள் பரலோகம் செல்ல முடியுமா இல்லையா என்பது பற்றிநான் அக்கறையுள்ளவனாக இருப்பதில்லை.

ஆகாய விமானத்தில் கடலினூடே பறந்து செல்லும் இரு மனிதர்களைப் பற்றிக் கற்பனை செய்துபாருங்கள். ஒரு மனிதர் தெளிவான மனநிலையுடன் - விமானம் மற்றும் விமான ஓட்டி ஆகியோர்மீது நம்பிக்கை கொண்டவராக - இருக்கிறார். அதேவேளையில் இன்னொரு மனிதர் வழிமுழுவதிலும் பயம் அடைந்தவராக இருக்கிறார். இவ்விரு மனிதர்களுமே தாங்கள் சென்று சேரவேண்டிய இடத்திற்குப் பத்திரமாய்ப் போய்ச்சேருகின்றனர்; முதல் மனிதர் விமானப் பயண நேரம் முழுவதையும் மகிழ்வுடன் அனுபவிக்கிறார், ஆனால் அதேவேளையில் அப்பயணம் இரண்டாவது மனிதருக்குச் சித்திரவதையாக உள்ளது. ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் புரிந்துகொள்ளுதல் என்பது "பரலோகப்பயணத்தை" மேற்கொள்ள உங்களுக்கு பெலம் அளிப்பது மாத்திரமல்ல, அது உங்கள் பயணத்தை *மகிழ்வுடன் அனுபவிக்கவும்* உங்களுக்கு உதவும்!

நான் இந்தப் பாடத்தை முடிக்கையில், நீங்கள் ஏற்கனவே கர்த்தருக்கு அன்புடன் பதில்செயல் செய்திராதிருந்தால், உடனே அதைச் செய்யும்படி உங்களை உற்சாகப்படுத்துகிறேன். நீங்கள் விசுவாசத்தின் அடிப்படையில் நீதி மானாக்கப்படுகிறீர்கள், ஆனால் கீழ்ப்படிதலுள்ள விசுவாசமே இரட்சிக்கும் விசுவாசமாக உள்ளது. நீங்களும் இயேசுவின்மீதும் அவர் உங்களுக்காகச் செய்துள்ளவற்றின்மீதும் உண்மையான விசுவாசம் கொண்டிருந்தால், இன்றே உங்கள் விசுவாசத்தைக் கீழ்ப்படிதல் மூலம் வெளிப்படுத்துங்கள்.

குறிப்புகள்

[1]KJV வேதாகமம், 4:3-8ல் இவ்வார்த்தையை மொழிபெயர்க்கப் பின்வரும் மூன்று

சொற்களைப் பயன்படுத்துகிறது: "counted," "reckoned," *மற்றும்* "impute" *(மேலும்,* "imputeth"). [2]*நாம் logizomai என்ற இவ்வார்த்தையை இதற்குமுன்பே ரோமருக்கு எழுதிய நிருபத்தில் எதிர்கொண்டிருக்கிறோம். இது 2:26ல்* "regarded" *("எண்ணப்படும்") என்றும் 3:28ல்* "maintain" *("தீர்க்கிறோம்") என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* [3]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 249. [4]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 125. [5]E. D. Burton, *Galatians: International Critical Commentary* (Edinburgh: T. & T. Clark, 1921), 447. [6]*"தகப்பன்" என்பது propator: pro ("முன்") கூட்டல் pater ("பிதா") என்ற கூட்டுவார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* [7]*"மாம்சம்"* (*sarx*) *என்ற வார்த்தையை நாம் பிந்திய ஒரு அதிகாரத்தின் சந்தர்ப்பப்பொருளில் படிப்போம். இவ்வசனத்தில் sarx என்பதன் அர்த்தமானது, இவ்வாக்கியத்தில் "மாம்சத்தின்படி" என்பது எவ்விடத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதைச் சார்ந்திருக்கிறது.* [8]*நான்காம் அதிகாரத்தின் பிற்பகுதியில், பவுல் ஆபிரகாமை "விசுவாசிக்கிற ... அவர்களுக்கு தகப்பன்* [*pater*]" *என்று அழைத்தார் (வசனம் 11) - அவர்கள் யூதராயிருப்பினும் புறஜாதிகளாயிருப்பினும் அவர்களுக்கு அவர் தகப்பனாயிருக்கிறார் - ஆனால் இவ்வதிகாரத்தின் தொடக்கத்தில், பவுல் யூதர்களுடன் ஆபிரகாம் கொண்டிருந்த மாம்சப்பிரகாரமான உறவுமுறையை மாத்திரம் வலியுறுத்தினார்.* [9]*The Interlinear Greek-English New Testament: The Nestle Greek Text with a New Literal English Translation by Alfred Marshall* (London: Samuel Bagster & Sons, 1958), 612. [10]Adapted from James R. Edwards, *Romans*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1992), 112. A sampling of Jewish quotations on this matter appears in Douglas J. Moo, *Romans*, The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 147.

[11]*The Interlinear Greek-English New Testament,* 612. [12]*ஆபிரகாம் மேன்மை பாராட்டியிருந்தால், அவர் தேவனையல்ல ஆனால் தம்மைத்தாமே மகிமைப்படுத்திக்கொண்டிருப்பார் என்பது இச்சொற்றொடரின், சாத்தியமான இன்னொரு அர்த்தமாக உள்ளது.* [13]*"சொல்லுகிறது" என்ற நிகழ்கால வினையைக் கவனியுங்கள். ஆதியாகமம் 1500 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டிருந்த நிலையிலும்கூட, பவுல் அதை ஜீவனுள்ள புத்தகமாகக் கருதினார் (எபிரெயர் 4:12ஐக் காணவும்). அது அவரது நாட்களிலும்கூட இன்னமும் பேசிக்கொண்டிருந்தது.* [14]*"ஆபிரகாமின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல்" என்ற பாடத்தில், ஆபிரகாமின் விசுவாசம் பற்றிய கலந்துரையாடலைக் காணவும்.* [15]*"ஆபிரகாமின் பயணங்கள்" என்ற வரைபடத்தைக் காணவும்.* [16]*ஆதியாகமம் 15:6க்கு முன்னதாக மற்றவர்கள்கூட விசுவாசம் கொண்டிருந்தனர் (எபிரெயர் 11:4, 5, 7 ஆகியவற்றைக் காணவும்), ஆனால் ஆதியாகமத்தில் இவ்வார்த்தை இங்குதான் முதன்முறையாகக் காணப்படுகிறது.* [17]*இந்தப்பகுதியானது, எனது நினைவுகள் மற்றும் 1955ல்* J. D. *தாமஸ் அவர்களின் வகுப்பில் எடுக்கப்பட்ட ஏராளமான குறிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது.* [18]*உங்கள் உரையைக் கேட்பவர்கள் வேதாகமத்தின் இந்த வரலாற்றிற்குப் பழக்கமற்றவர்களாக இருந்தால், நீங்கள் ஆதியாகமம் 22:1-14ன் சுருக்கமான மறுபார்வையை முன்வைக்க விரும்பலாம். ஆபிரகாம் உண்மையில் ஈசாக்கைப் பலியிடவில்லை (ஆதியாகமம் 22:10ஐக் காணவும்) என்றாலும், அதைச் செய்வதற்கான விருப்பநோக்கம் யாவற்றையும் அவர் கொண்டிருந்தபடியால், எபிரெயருக்கு எழுதிய நிருபம் ஆபிரகாம் "ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்" (எபிரெயர் 11:17) என்றே கூறுகிறது.* [19]William Barclay, *The Letter to the Romans*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 64. [20]Moo, 150.

17

நீதிமானாக்கப்படுதலின் இரண்டு முறைமைகள்

[4:4–8]

அபிலேன் கிறிஸ்தவக் கல்லூரியில் ரோமருக்கு எழுதிய நிருபம் பற்றிய வகுப்பு, 4ம் அதிகாரத்தை அடைந்தபோது, எங்கள் போதகரான J. D. *தாமஸ் அவர்கள், கரும்பலகையில் எழுதத்தொடங்கினார். அவர், "இந்த அதிகாரத்தில் பவுல் நீதிமானாக்கப்படுதலின் இரண்டு முறைமைகளை வேறுபடுத்தி ஒப்பிடுகிறார்" என்று கூறினார்.*[1] *அவர் எழுதுவதை முடித்தபோது, அவரது முயற்சிகள் பின்வருவன போன்று காணப்பட்டன:*

நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமை	**கிருபை/விசுவாசம் முறைமை**
மேன்மைபாராட்டுதல்	*தாழ்மை*
ஈட்டுதல்	*கிரியைகளினால் ஆனதல்ல*
மனிதத் தகுதி	*சுயத்தினால் ஆனதல்ல*
சாதனை	*தேவனுடைய கிருபையை நம்புதல்*
கடன்	*ஒரு கொடை*

அவர் இரண்டாவது பத்தியைத் தட்டிக்காட்டி, "அதை எபேசியர் 2:8, 9 உடன் ஒப்பிட்டுப்பாருங்கள்" என்று கூறினார்.

இந்தப்பாடத்தில் நாம் ரோமர் 4ஐப் பற்றிய நமது படிப்பைத் தொடருகிறோம். இந்த அதிகாரம் பற்றிய நமது கலந்துரையாடலை நாம் முடிக்கும் வேளையில், சகோதரர் தாமஸ் அவர்கள் வேறுபடுத்தி ஒப்பிட்டுக் காட்டியது உங்கள் சிந்தையில் தெளிவாகும் என்று நான் நம்புகிறேன்.

ஒரு கருத்து ஆராயப்படுகிறது (4:4-8)

இரண்டு முறைமைகள் (வசனங்கள் 4, 5)

வசனம் 4ல், பவுல் நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமையைத் தொகுத்துரைத்தார்: "கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபை யென்றெண்ணப்படாமல் [logizomai[2]*], கடனென்றெண்ணப்படும்." சிறிதளவே விளக்கம் தேவை அல்லது விளக்கமே தேவையில்லை என்னும் அளவுக்கு இங்கு எடுத்துரைக்கப்பட்ட கொள்கை மிகவும் தெளிவாக உள்ளது. நீங்கள் யாருக்கேனும் வேலை செய்தால், உங்கள் ஊதியத்தை நீங்கள் ஒரு அன்பளிப்பாகவோ அல்லது கொடையாகவோ கருதுவதில்லை. உங்களை வேலைக்கு அமர்த்தியவர் உங்களுக்கு "தயவு" செய்கிறார் என்று நீங்கள் நினைப்பதில்லை.*

மரியாதைக்காக நீங்கள், "உங்களுக்கு நன்றி" என்று கூறலாம், ஆனால் உண்மையில் அவர் உங்களுக்கு அந்தப்பணத்தைத் தரக் கடன்பட்டுள்ளார் என்றே நீங்கள் நம்புகிறீர்கள்.

ஆங்கில வேதாகமத்தில் (NASB) "favor" என்று ரோமர் 4:4ல் மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, ''கிருபை'' என்பதற்கான *charis* என்ற சொற்றொடராகும் (KJVயில் காணவும்). "What is due" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது, ''சட்டப்பூர்வமாகக் கொடுக்க வேண்டிய,''[3] ஒரு ''கடன்'' என்று அர்த்தப்படும் *opheilema* என்ற வார்த்தையாகும். நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமை என்பது, நாம் *கிருபையினால்* இரட்சிக்கப்படுவதில்லை, ஆனால் அதற்கு மாறாக நமது நற்செயல்கள் தேவனை நமக்கு *கடனாளியாக்குகின்றன* என்று அறிவிக்கிறது.

வசனம் 5ல், பவுல் அந்த முறைமையை கிருபை/விசுவாசம் முறைமையுடன் நேரெதிராக ஒப்பிட்டார்: "ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்.'' "ஒருவன் கிரியை செய்யாமல்" என்ற சொற்றொடருக்குத் தகுதிகள் சில தேவைப்படுகிறது. சந்தர்ப்பப்பொருளில் இருந்து அதை வெளியே எடுத்தால், அது கர்த்தருக்கு ஊழியம் செய்தல் அவசியமற்றது என்று மறைமுகமாய் உணர்த்துவதுபோன்று காணப்படும் - இந்தக் கருத்து மதரீதியான பெரும்பான்மையான எழுத்தாளர்களை அச்சுறுத்துவதாயிருக்கும், இது நிச்சயமாகவே பவுலை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கும். கர்த்தருக்கு ஊழியம் செய்தல் முக்கியத்துவமானதாக இருந்தது என்று பவுல் நம்பினாரா? நிச்சயமாக. ரோமர் 16:12ல் அவர் "கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட" பெர்சியாளை வாழ்த்தினார். பவுல் தமது வாசகர்கள் தங்களுக்குரிய எல்லாவற்றையும் "கர்த்தருடைய ஊழியத்தில்" இடவேண்டும் என்று அவர்களை உற்சாகப்படுத்தினார் (1 கொரிந்தியர் 15:58; கலாத்தியர் 5:6; எபேசியர் 2:10; கொலோசெயர் 1:10; 1 தீமோத்தேயு 5:17; 6:18 ஆகிய வசனங்களைக் காணவும்). பவுல் செய்ததைக் காட்டிலும் அதிகமாக எவரொருவரும் தமது எஜமானருக்காகப் பிரயாசப்பட்டாரா என்பது சந்தேகத்திற்குரியதாகும் (1 கொரிந்தியர் 15:10; 2 கொரிந்தியர் 11:23, 27ஐக் காணவும்).

ஆகவே "ஒருவன் கிரியை செய்யாமல்" என்ற சொற்றொடருக்குச் சிலவிளக்கங்கள் தேவை என்பது தெளிவாக உள்ளது. 4 மற்றும் 5 ஆகிய வசனங்களில் உள்ள இரண்டு சொற்றொடர்களை ஒப்பிட்டுப் பார்த்தலே இதை விளக்குவதற்கு மிகவும் எளிமையான வழிமுறையாக உள்ளது: "கிரியை செய்கிறவனுக்கு" மற்றும் "ஒருவன் கிரியை செய்யாமல்." "கிரியை செய்கிறவன்" (வசனம் 4) என்பவர், ஊதியம் பெறுவதற்காக ''வேலை செய்கிற'' ஒரு வேலையாளாக இருக்கிறார். ''ஒருவன் கிரியை செய்யாமல்'' (வசனம் 5) என்பதில் உள்ளவர் கர்த்தரைத் தனக்குக் கடனாளியாக்குவதற்காக ''கிரியை செய்யாமல்'' ஆனால் அதற்கு மாறாக அன்பையும் மதிப்பையும் காட்டுவதற்காகக் கிரியை செய்கிற விசுவாசியாக இருக்கிறார். லியோன் மோரிஸ் என்பவர், "கிரியை செய்பவர் மற்றும் கிரியை செய்யாது இருப்பவர் ஆகியோருக்கிடையே அல்ல (பவுல் சோம்பேறித்தனத்தை [ஊக்குவிப்பவர்] அல்ல), ஆனால் தனது கிரியையில் நம்பிக்கை வைத்திருப்பவருக்கும் தேவன்மீது நம்பிக்கை வைத்திருப்பவருக்கும் இடையில்தான் நேர்மாறு ஒப்பீடு உள்ளது"

என்று எழுதினார்.[4]

நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமை	கிருபை/விசுவாசம் முறைமை
↑	↑
சுயத்தில் நம்பிக்கை	தேவன்/கிறிஸ்துவில் நம்பிக்கை

இந்தத் தகுதியை மனதில் கொண்டவர்களாக, நாம் 5ம் வசனத்திற்குத் திரும்புகிறோம். இது, "ஒருவன் [தேவனைத் தனக்குக் கடனாளியாக்குவதற்காக] கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால்" (வசனம் 5அ). ஆங்கில வேதாகமத்தில் "ungodly" (இது தமிழில் "பாவி" என்றுள்ளது) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*asebes* என்ற) வார்த்தை, "தேவனிடத்தில் பயபக்திசெலுத்துதலைக் கைவிட்ட" ஒருவனை விவரிக்கும் "பலத்த சொற்றொடராகும்." "முற்றிலுமாக தகுதியற்றவர்களை" தேவன் நீதிமானாக்குகிறார்.[5] தேவன் தம்முடைய குமாரனைக் கிருபாதாரபலியாக ஒப்புக்கொடுத்தபடியால் (ரோமர் 3:26) அவர் இதைச் செய்ய வல்லவராக இருக்கிறார்; "கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்" (5:6ஆ).

ஒருவர் தேவன்மீது (மற்றும் அவரது குமாரன்மீது) தனது நம்பிக்கையை வைக்கும்போது, "அவரது விசுவாசம் நீதியென்று எண்ணப்படுகிறது (*logizomai*)." முந்தியபாடத்தில், நாம் "தேவனுடைய திகைப்புக்குரிய 'கணக்குவைக்கும் ஏற்பாடுகள்' " பற்றிப் பேசினோம். 4:5ல், தேவன் இந்த "கணக்கு வைக்கும் ஏற்பாட்டை" நம்மிடத்தில் பயன்படுத்துகிறார் என்று நமக்கு உறுதியளிக்கப்பட்டது! TEV என்ற வேதாகமத்தில் "it is his faith that God takes into account" என்றுள்ளது.

இரண்டாவது உதாரணம் (வசனங்கள் 6-8)

ரோமர் 4ல் பவுல் கிரியைகளினால் அல்ல ஆனால் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்பட்ட ஒருவருக்கான தமது முதன்மை உதாரணம் என்ற வகையில் ஆபிரகாம்மீது கவனம் செலுத்தினார். இருப்பினும், 6 முதல் 8 வரையுள்ள வசனங்களில், அவர் இரண்டாவது உதாரணம் ஒன்றை உட்செருகினார், இவர் யூதர்களால் வந்தனம் செலுத்தப்பட்ட இன்னொரு தனிநபராயிருந்தார்: தாவீது அரசர். தேவன் "பாவியை நீதிமானாக்குகிறார்" என்று பவுல் அப்போதுதான் கூறியிருந்தார். ஆபிரகாம் "பாவியாக" இருந்தாரா இல்லையா என்பதுபற்றி சில யூதர்களின் மனதில் கேள்வியிருக்கலாம், ஆனால் தாவீதைப்பற்றி அவ்விதமான ஐயப்பாடு எதுவும் இருந்திருக்க முடியாது. ஒரு சில வாரங்களில் தாவீது, பத்துக்கட்டளைகளில் நான்கை மீறியிருந்தார் (2 சாமுவேல் 11; 12; யாத்திராகமம் 20:13, 14, 16, 17). தாவீதின் உதாரணம், விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலின் கொள்கை பழைய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டிருந்தது என்ற உண்மையை மறுவலிவாக்குவது மட்டுமின்றி, அது இந்தக் கொள்கையின்

தொலைவில் சென்றடையும் இயல்பை விவரிப்பதாகவும் இருக்கும்.

பவுல் பின்வருமாறு கூறினார்,

> அந்தப்படி, கிரியைகளில்லாமல் தேவனாலே நீதிமானென்றெண்ணப்படுகிற மனுஷருடைய பாக்கியத்தைக் காண்பிக்கும்பொருட்டு: "எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள்.[6] எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான்" (வசனங்கள் 6-8).[7]

இங்கு மேற்கோள் காட்டப்பட்ட வசனப்பகுதி சங்கீதம் 32:1, 2 ஆகும். பல எழுத்தாளர்கள், 51 மற்றும் 32 ஆகிய சங்கீதங்கள் பத்சேபாளுடன் பவுல் செய்த பாவத்தை[8] எடுத்துரைப்பதாக நம்புகின்றனர் - சங்கீதம் 51ல் தாவீது மன்னிப்பிற்காகக் கதறினார்,[9] சங்கீதம் 32 அவரைத் தேவன் மன்னித்தபின்பு நன்றி நிறைந்த தன்மைக்கான அவரது வெளிப்பாடாக இருந்தது[10] என்கின்றனர்.

சங்கீதம் 32:1, 2ல் தாவீது, "கிரியைகளின்றி தேவன் நீதிமானாக கணக்கிட்ட (*logizomai*) மனிதனின் பாக்கியத்தைப்பற்றி" பேசினார் என்று தாவீது கூறினார் (ரோமர் 4:8). இந்தக் காட்சி அமைவில், "நீதிமானென்றெண்ணப்படுகிற" என்பது மாபெரும் அநீதிமான் என்ற குற்றம் உள்ள ஒருவரை (தாவீதை) தேவன் "நீதிமானென்று கணக்கிட்ட" விஷயம்பற்றிக் குறிப்பிடுகிறது. வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், ரோமர் 4:6ல் தேவனுடைய "நீதிமானென்றெண்ணப்படும்" விஷயமானது தவறு செய்யும் தமது பிள்ளையை அவர் மன்னித்தல் பற்றியதாக உள்ளது.

சங்கீதம் 32:1, 2ல் தாவீது, தேவனுடைய இரக்கத்திற்குத் தமது நன்றியறிதலைக் காண்பித்தார். அவர் தாம் எவ்வளவு நன்றியுள்ளவராக இருந்தார் என்று காண்பிப்பதற்காகச் சொற்றொடர்களைப் பெருக்கம் செய்தார். கிரேக்க மொழியில் இரு வார்த்தைகள் அவரது பாவத்தின் ஏராளத்தன்மையை விவரிக்கின்றன: *anomia* என்பதன் பன்மை வடிவம் (இது "அக்கிரமச்செய்கைகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) மற்றும் *hamartia* ("பாவம்").[11]

கர்த்தருடைய இரக்கத்தின் மகத்துவத்தை மற்ற மூன்று வார்த்தைகள் காண்பிக்கின்றன. முதலாவது, தாவீதின் அக்கிரமச்செய்கைகள் "மன்னிக்கப்" பட்டிருந்தன (*aphienai* என்பதன் ஒரு வடிவம்). ஃபிரான்ஸ் டெலிட்ஸ்க் என்பவர் சங்கீதம் 32:1ல் "மன்னிக்கப்பட்டது" என்பதற்கான வார்த்தையை, "தூக்கி எடுத்துப் புறம்பே போடப்பட்டது" என்று விளக்கப்படுத்தினார்.[12]

இரண்டாவது, தாவீதின் பாவங்கள் "மூடப்பட்டு" இருந்தன. "மூடப்பட்டு" என்று மொழிபெயர்க்கப்பட்ட (*epikalupto* என்ற) வார்த்தை, "மேலே மூடுதல்" என்று அர்த்தப்படும் கூட்டு வார்த்தையாக உள்ளது (*epi* ["மேலே"] கூட்டல் *kalupto* ["மூடுதல்"]). NLT வேதாகமத்தில் இது, "put out of sight" என்றுள்ளது; AB வேதாகமத்தில் இது, "covered up and completely buried" என்றுள்ளது. டெலிட்ஸ்க் என்பவர் "மூடுதல்" என்பதற்கான வார்த்தையை, "பரிசுத்தமான தேவனுக்குக் காணப்படாததாகும்படி மற்றும் அது ஒருக்காலும் நடந்திராதது என்று இருக்கும் அளவுக்கு மூடுதல்" என்று விளக்கினார்.[13]

"எண்ணப்படும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள மூன்றாவது

சொற்றொடரானது பவுலின் விவாதத்திற்கு மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ரோமருக்கு எழுதிய நிருபத்தில் மேற்கோள் காண்பிக்கப்பட்ட வகையில், சங்கீதமானது "எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ" என்று கூறுகிறது. "எண்ணாதிருக்கிறாரோ" என்பது *logizomai* என்பதில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இவ்வார்த்தை இவ்வதிகாரத்தின் எஞ்சிய பகுதியில் "எண்ணப்படும்" அல்லது "எண்ணப்பட்டது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பவுல் தேவனுடைய திகைப்புக்குரிய "கணக்குவைக்கும் ஏற்பாடுகளை" காண இன்னொரு வழிவகையை முன்வைத்தார். 3 மற்றும் 5ம் வசனங்களில் அவர் தேவனுடைய "பேரேட்டை"க் காண்பதற்கு நேர்மறையான வழிவகையை முன்வைத்தார்: தேவன் "பாவிக்கு" நீதியை "பேரேட்டின் வரவு" பக்கத்தில் வரவு வைத்தார். 8ம் வசனத்தில் பவுல் தெய்வீக "பேரேட்டைக்" காண்பதற்கு எதிர்மறையான வழிவகையை முன்வைத்தார்: தேவன் பாவிக்கு அநீதியை "பேரேட்டின்" "பற்று" பக்கத்தில் பதிவு *செய்யவில்லை.* ரோமர் 4:8ல் CJB வேதாகமம், "Blessed is the man whose sin [God] will not reckon against his account" என்றுள்ளது.

இது எவ்வளவு குறிப்பிடத்தக்கதாக உள்ளது என்பதை மதித்தறிவதற்கு, தாவீது செய்திருந்த செயல்களுக்கு அவன் *பெறத்தகுதியாயிருந்தவற்றைப்* பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, அவர் குறைந்தது இரண்டு கணக்குகளுக்காகக் கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டியவராயிருந்தார்: விபசாரம் (உபாகமம் 22:22, 24; யோவான் 8:5ஐக் காணவும்) மற்றும் கொலை (லேவியராகமம் 24:17). இருப்பினும், அவரது பாவம் வெளிப்படுத்தப்பட்டபோது, அவர் நகரத்திற்கு வெளியே இழுத்துச்செல்லப்பட்டு, அவரது உயிரானது முறிந்துபோன உடலிலிருந்து வெளியேறும் வரையிலும் கல்லால் எறியப்படவில்லை. அதற்குப்பதிலாக அவரது பாவம் மன்னிக்கப்பட்டது ... மற்றும் அது மூடப்பட்டது மற்றும் அது அவருக்கு எதிராக எண்ணப்படாதிருந்தது! அவர் தம்மை "பாக்கியவான்" என்று அழைத்துக்கொண்டதில் வியப்பெதுவும் இல்லை!

சங்கீதம் 32:1, 2 வசனப்பகுதியானது தேவன் "கிரியைகளில்லாமல்" நீதியைக் கணக்கிடும் செயலுக்கு ஒரு உதாரணமாக உள்ளதென்று பவுல் கூறினார் (ரோமர் 4:6). தாவீது மன்னிக்கப்படுவதற்கு அவர் ஒன்றும் *செய்யத்* தேவையற்றிருந்தது என்று பவுல் கருத்துத் *தெரிவிக்கவில்லை.* தாவீதின் இருதயம் [அவர் செய்த பாவத்தை நினைத்து] வருத்தத்தினால் நொறுங்க வேண்டியிருந்தது (சங்கீதம் 51:17). அவர் தமது பாவத்தை ஒப்புக்கொண்டு, அதைக் கர்த்தரிடத்தில் அறிக்கையிட வேண்டியிருந்தது (சங்கீதம் 32:5; 51:3, 4 ஆகிய வசனங்களைக் காணவும்). அவர் பாவ மன்னிப்பிற்காக கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டு ஜெபிக்க வேண்டியிருந்தது (சங்கீதம் 51:1, 2, 9; 32:6). தேவனுடைய மன்னிப்பை ஈட்டுவதற்கோ அல்லது அதற்குத் தகுதிப்படுத்திக்கொள்வதற்கோ தாவீது செய்யக்கூடிய "கிரியை" ஒன்றும் இல்லாதிருந்தது என்பதே பவுல் இவ்விடத்தில் *கூறியதாகும்.* அவரைக் கர்த்தர் மன்னித்தபோது, அது கிரியைகளின் அடிப்படையில் இன்றி கிருபையின் அடிப்படையிலேயே இருந்தது.

தாவீதின் உதாரணத்தில் (ரோமர் 4:6-8), பவுல் விசுவாசத்தைக் குறிப்பிடவில்லை; ஆனால் அவரது யூதவாசகர்களில் பெரும்பான்மையானவர்கள் அனேகமாக, சங்கீதம் 32ஐ மனப்பாடமாக அறிந்திருப்பார்கள்.

முதல் இரு வசனங்களை மேற்கோள் காண்பித்த விஷயமானது அந்த சங்கீதம் முழுவதையுமே அவர்கள் நினைவுக்குக் கொண்டுவந்திருக்கும் - அதில் பின்வரும் வார்த்தைகளும் உள்ளடங்கியிருக்கின்றன: "கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும்" (வசனம் 10ஆ).

அக்கறைகள் எடுத்துரைக்கப்பட்டன

நமது வசனப்பகுதியில் பவுலின் அடிப்படைச் செய்தி தெளிவாகக் காணப்படுகிறது: கிறிஸ்தவம் என்பது நியாயப்பிரமாணம்/கிரியைகள் என்ற முறைமையில் *ஆனதல்ல;* அது கிருபை/விசுவாசம் என்ற முறைமை*யிலானது,* கர்த்தர் நம்மைக் காண்கிறபோது, அவர் நமது பூரணமற்ற கீழ்ப்படிதல் மீது கவனம் குவிப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக அவர் நமது விசுவாசத்தையே கண்ணோக்குகிறார். (தேவனுக்கு நன்றி!)

இவ்விடத்தில் போதனை தெளிவாகக் காணப்பட்டபோதிலும், இந்த போதனையின் செயல்விளைவுகளைப்பற்றிக் கணிசமான அளவுக்குக் கருத்து வேறுபாடு உள்ளது. ஒருகடைசி முனையில் உள்ளவர்கள் "பவுலின் போதனை எவ்வகையான கிரியையும் நீக்கிப்போடுகிறது என்பது தெளிவு. குறிப்பாக, அது இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் ஒரு நிபந்தனையாக உள்ளது என்பதை நீக்கிப்போடுகிறது. இரட்சிக்கப்படுவதற்கு நாம் ஏதேனும் *செய்ய வேண்டும்* என்றால், அது நாம் நமது இரட்சிப்பை *ஈட்ட முடியும்* என்று அர்த்தப்படுகிறது" என்று கூறுகின்றனர். இன்னொரு கடைசிமுனையில் உள்ளவர்கள், "தனிநபர்கள் கிரியைகளினால் நீதிமான்களாக்கப்படுவதில்லை என்று நாம் போதித்தால், கர்த்தருக்காக ஊழியம் செய்யும் மக்களை நாம் உற்சாகம் இழக்கச் செய்பவர்கள் ஆவோம்" என்று கூறுகின்றனர். இந்த பதில் செயல்கள் நியாயமானவகையில் சாதாரணமானவைகளாக இருப்பதால், ஒருவேளை அவைகளைப் பற்றி கலந்துரையாட நாம் நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கிரியைகள் எதிர். கீழ்ப்படிதல்

சில காரணங்களுக்காக, ரோமர் 4ஐப் பற்றிச் சில எழுத்தாளர்களின் முதன்மை நடைமுறைச் செயல்பாடு, தேவனுடைய பிள்ளையாகுதல் பற்றி எடுத்துரைக்கிறது. பவுலின் உதாரணங்கள் (ஆபிரகாம் மற்றும் தாவீது ஆகியோர்) ஏற்கனவே தேவனுடைய பிள்ளைகளாக இருந்தனர் என்ற உண்மை இருந்த போதிலும், அவர்கள் இவ்வகை நடைமுறைச் செயல்பாட்டை ஏற்படுத்துகின்றனர்.[14] மனிதரின் இரட்சிப்பிற்கான தேவனுடைய திட்டத்தில் ஞானஸ்நானம் ஒரு பாகமாக இருத்தலை நீக்கிப்போடுதல் என்பதே இந்த எழுத்தாளர்களில் பலருடைய முதன்மை விருப்பமாக உள்ளது என்பது தெளிவு.

நம்மில் சிலரைப்போன்று, ஏவுதல்பெற்ற எழுத்தாளர்கள் மேலோட்டமான "நேர்மாறுகள்" பற்றி அக்கறை கொண்டிருந்ததில்லை என்று நான் முந்திய பாடம் ஒன்றில் குறிப்பிட்டேன். ரோமர் 4ல், பவுல் நாம் கிரியைகளினால் நீதிமானாக்கப்படுவதில்லை என்று வலிவாகப் போதித்தார். அதே வேளையில் நாம் ரோமர் 10ம் அதிகாரத்தை அடைகையில், வாயினால் அறிக்கை செய்தல் (*செய்யப்படும் செயல்*) இரட்சிப்பை விளைவிக்கிறது என்று கூற அவர்

தயங்கவில்லை (வசனம் 10). ரோமர் 6ல் அவர் மனப்பூர்வமாகக் கீழ்ப்படிதல் பற்றிப் பேசினார் (வசனம் 17) (*செய்யப்படும் செயல்*), இதில் ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்படுதலும் உள்ளடங்குகிறது (வசனங்கள் 3-6). அந்தத் தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்ட *பின்பு*, ஒருவர் “புதிய ஜீவனுள்ளவராக” நடந்துகொள்ளும்படிக்கு எழப்பப்படுகிறார், அவர் இனியும் பாவத் திற்கு அடிமையாக இருப்பதில்லை (வசனங்கள் 4, 17, 18; 7:6ஐக் காணவும்). இருப்பினும், இரட்சிப்பின் இவ்விரு அம்சங்களையும் இசைவிக்கப் பவுல் எந்த முயற்சியும் செய்யவில்லை. நாம் கிரியைகளினால் நீதிமானாக்கப்படுவ தில்லை (இரட்சிக்கப்படுவதில்லை) என்பது உண்மையாகவே உள்ளது. இரட்சிக்கப்பட்டிருப்பதற்கு (நீதிமானாக்கப்பட்டிருப்பதற்கு) நாம் தேவ னுக்குக் கீழ்ப்படிய வேண்டும் - இது நமது விசுவாசத்தை அறிக்கையிடுதல் மற்றும் ஞானஸ்நானம் பெறுதல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது - என்பதும் உண்மையாக உள்ளது. இவ்விரு சத்தியங்களையும் முன்வைத்து அதை அப்படியே விட்டுவிடுவதில் பவுல் நிறைவடைந்தார்.

“ஈட்டுதல்” எதிர். “சொந்தமாக்குதல்”

இருந்தபோதிலும், நாம் கிரியைகளினால் இரட்சிக்கப்படுவதில்லை என்ற அப்போஸ்தலரின் செய்தியை, இரட்சிக்கப்படுவதற்கு நாம் சிலவற்றைச் *செய்யவேண்டும்* என்ற வேதாகம உபதேசத்துடன் இசைவிப்பதற்கு, நீங்களும் நானும் அடிக்கடி போராடுகிறோம். எனக்கு உதவிய ஒரு விளக்கத்தை நான் கேள்விப்பட்டேன்; அது ஒருவேளை உங்களுக்கும் உதவலாம்: நாம் நமது இரட்சிப்பை *ஈட்ட* முடியாது, ஆனால் நாம் அதை *சொந்தமாக்கிக்* கொள்ள வேண்டும்.

சிலவற்றை ஈட்டுதல் மற்றும் அதை சொந்தமாக்கிக் கொள்ளுதல் ஆகிய இரண்டிற்கும் இடையில் என்ன வேறுபாடு உள்ளது? ஒரு விவரிப்பு உதவிகரமா யிருக்கலாம்.[15] ஒரு மனிதர் கதவைத் தட்டி, தாம் பசியோடிருப்பதாகக் கூறுகிறார். அந்த வீட்டின் உரிமையாளர், தம்மிடத்தில் வெட்டப்பட வேண்டிய விறகுகள் கொஞ்சம் இருப்பதாகவும், அந்த மனிதர் அதை வெட்டிக்கொடுத்தால், தாம் அவருக்கு உணவளிப்பதாகவும் கூறுகிறார். அம்மனிதர் அந்த விறகை வெட்டித்தருகிறார், அப்போது அவருக்கு உணவளிக்கப்படுகிறது. அம்மனிதர் தமது உணவை *ஈட்டியிருக்கிறார்.* இன்னொரு மனிதர் வேறொரு வீட்டின் கதவைத் தட்டி, தாம் பசியோடிருப்பதாகக் கூறுகிறார். அந்த வீட்டின் உரிமையாளர் “நீங்கள் சரியான வேளையில் வந்திருக்கிறீர்கள். நான் என்னால் மாத்திரம் உண்டுமுடிக்க இயலாத அளவுக்கு, அதிக உணவைத் தயார்செய்திருக்கிறேன். வாருங்கள், வந்து என்னோடு உணவருந்துங்கள்!” என்று பதில் அளிக்கிறார். அம்மனிதர் வீட்டிற்குள் நடந்து சென்று, அவர் உணவு மேஜைமுன் அமர்ந்து, தனக்கு அளிக்கப்பட்ட உணவை மகிழ்வுடன் அனுபவிக்க முடியும். இந்த மனிதர் அந்த உணவை *ஈட்டியிருக்கவில்லை.* இருந்தபோதிலும், அவர் அதைச் *சொந்த மாக்க வேண்டியிருக்கிறது.* அவர் வீட்டிற்குள் செல்லுதல், உணவு மேஜையில் அமருதல், உணவைத் தமது வாய்க்குள் போடுதல் ஆகியவற்றைச் செய்யா திருந்தால் என்னவாகியிருக்கும்? அவர் அந்த உணவினால் கிடைக்கும் சத்தினை பெறாதிருப்பார்.

இரட்சிப்பு என்ற தேவனுடைய கொடையை நம்மால் *ஈட்ட* இயலாது,

ஆனால் அதை நாம் *சொந்தமாக்கிக்கொள்ள* வேண்டும். அதை நாம் *எவ்வாறு* செய்கிறோம்? என்பதே கேள்வியாக உள்ளது. தேவனுடைய கொடைகளில் சிலவற்றை நாம் எவ்வாறு சொந்தமாக்கிக்கொள்கிறோம் என்பது தெளிவாக உள்ளது. உணவு என்ற தேவனுடைய கொடையை உண்பதன்மூலம் நாம் சொந்தமாக்கிக் கொள்கிறோம். காற்று என்ற தேவனுடைய கொடையை சுவாசித்தல்மூலம் நாம் சொந்தமாக்கிக் கொள்கிறோம். இரட்சிப்பு என்ற தேவனுடைய கொடையை நாம் எவ்வாறு சொந்தமாக்கிக் கொள்கிறோம் என்பது இப்போது தெளிவாக இல்லையே. நாம் இதை எவ்வாறு செய்ய வேண்டும் என்று நமக்குக் கூறக்கூடிய ஒருவர், உண்மையில் நம்மை அழைத்தவராகிய தேவன் ஒருவரே - அதை அவர் தமது வசனத்தில் கூறியிருக்கிறார். விசுவாசத்தினால் நாம் இரட்சிப்பைச் சொந்தமாக்கிக் கொள்ள முடியும் என்று தேவனுடைய வசனம் நமக்குக் கூறுகிறது, இந்த விசுவாசம் *கீழ்ப்படிதலில்* வெளிப்படுத்தப்பட வேண்டும்.

தேர்ந்துகொள்ளுதல் எதுவும் இல்லை எதிர். தனிப்பட்டவகையிலான தேர்ந்துகொள்ளுதல்

நான் மீண்டும் ஒரு எதிர்ப்பை முன்னெதிர்பார்க்கிறேன்: "ஆனால், நாம் எதையேனும் *செய்ய வேண்டும்* என்றால், அது *கிரியையாக* உள்ளது. நாம் கிரியைகளினால் இரட்சிக்கப்*படுவதில்லை* என்று பவுல் கூறினாரே." ரோமருக்கு எழுதிய நிருபம் பற்றிய பல விளக்கவுரைகளை நான் கவனமாகப்படித்த பின்பு, "கிரியை" மற்றும் "கிரியைகள்" என்ற சொற்றொடர்கள் பற்றி, மத எழுத்தாளர்கள் பலரின் எண்ணப்போக்கு குறித்து இரு விஷயங்களை நான் நம்பி ஏற்றுக்கொண்டுள்ளேன்.

முதலாவது, "கிரியை" என்ற வார்த்தை சிலரை பதற்றம் அடையச் செய்கிறது என்பதை நான் நம்புகிறேன். "விசுவாசம் ஒரு கிரியை அல்ல" என்று வலியுறுத்தும் அளவுக்குக்கூட, இரட்சிக்கப்பட ஒரு மனிதர் சிலவற்றைச் செய்யவேண்டும் என்பதை மறைமுகமாய் உணர்த்த விளக்கவுரையாளர்கள் மிகவும் அஞ்சுகின்றனர். விசுவாசம் என்பது "தகுதியின் செயலாக" இருப்பதில்லை, ஆனால் ஒருவர் செய்யும் செயல் என்ற கருத்தில், இது ஒரு "செயலாக" அல்லது "கிரியையாக" உள்ளது. சார்லஸ் ஹோட்ஜ் என்பவர், "ஜெபம், மனந்திரும்புதல், தர்மம்கொடுத்தல் அல்லது அவ்வகையான வேறு எந்த செயலையும்போன்றே, விசுவாசம் என்பது ஒரு நடவடிக்கையாக [செயலாக] உள்ளது" என்று எழுதினார்.[16] விசுவாசத்துடன் தொடர்புடைய வகையில் "கிரியை" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதில் இயேசு பிரச்சனை எதையும் கொண்டிருக்கவில்லை. அவர், "அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது" என்று கூறினார் (யோவான் 6:29). NCV வேதாகமம் இவ்வசனப்பகுதியைப் பின்வருமாறு மொழிபெயர்க்கிறது: "The work God wants you to do is this: Believe the One He sent."

"விசுவாசம் என்பது கிரியையல்ல" என்று வலியுறுத்துபவர்கள் விசுவாசத்தைப் பின்வருவது போன்ற உருவகத்துடன் விவரிக்கின்றனர்: "விசுவாசம் என்பது தேவனிடத்தில் வெறும்கையை நீட்டுவதாகும்." இந்த ஒப்புவமையுடன் நான் சண்டையிடுவதில்லை, ஆனால் "கையை நீட்டுதல்" என்பது ஒரு செயலாகும் என்பதை அவர்கள் அறியார்களா? "கையை நீட்டுதல்" என்பது *அதிக* வேலையாக

இல்லாதிருக்கலாம், ஆனால் அது *சிலவற்றைச்* செய்யும் ஒரு கிரியையே ஆகும்.

விசுவாசத்தை ஒருவகையில் பார்க்கையில் அது ஞானஸ்நானத்தைவிட அதிகமான "கிரியையாக" உள்ளது: விசுவாசம் என்பது நீங்கள் *செய்யும்* ஏதோ ஒன்றாக உள்ளது, ஞானஸ்நானம் என்பது *உங்களுக்குச்* செய்யப்படும் ஏதோ ஒன்றாக உள்ளது. விசுவாசித்தலில் பாவியானவர் செயல்படுபவராக இருக்கிறார்; ஞானஸ்நானம் பெறுவதில் அவர் செயல்படுத்தப்படுபவராக இருக்கிறார். டேவிட் லிப்ஸ்கோம்ப் என்பவர் இதன்மீது பின்வருமாறு விளக்கம் அளித்தார்:

> ஞானஸ்நானம் என்பது சிலவேளைகளில், ஞானஸ்நானம் பெறுபவரின் கிரியை என்று அழைக்கப்படுகிறது ... ; ஆனால் ஞானஸ்நானம் என்பது ... விசுவாசம் அல்லது மனந்திரும்புதல் என்பதைக் காட்டிலும், கிரியைகளின் ஒருசில பண்புகளையே கொண்டுள்ளது ... ஞானஸ்நானம் பெறுகிற நபர் தம்மை, ஞானஸ்நானம் கொடுப்பவரின் கைகளில் ஒப்புவிக்கிறார், மற்றும் அவர் சுயத்திற்கு மரித்து கிறிஸ்துவுக்குள் எழுப்பப்படுகிறார் [ரோமர் 6:3-6ஐக் காணவும்] ... ஒரு மனிதர் இறக்கும்போதும் அவரது உடலை அவருடைய நண்பர்கள் எடுத்துச்சென்று அடக்கம்செய்யும்போதும், அந்தச் செயலைப் புதைக்கப்பட்ட மனிதனின் செயல் என்று ஒருவரும் அழைக்க முடியாது.[17]

இரண்டாவது, மதரீதியான எழுத்தாளர்கள், தேவனுடைய கொடையான இரட்சிப்பை மனிதகுலம் சொந்தமாக்கிக்கொள்ளுதலில், "கிரியைகள்" (சிலவற்றைச் செய்தல்) என்பதன் இடத்தை உண்மையில் இறுகப்பற்றவில்லை என்று நான் நம்புகிறேன். சிலர், வில்லியம் டெம்ப்பிள் என்பவரின் பின்வரும் வார்த்தைகளை எதிரொலிக்கின்றனர்: "[என்] பாவம் என்பதே என் இரட்சிப்புக்கு நான் பங்களிக்கக்கூடிய ஒரே விஷயமாக உள்ளது ..."[18] இரட்சிக்கப்படுவதற்கு நாம் கிரியை எதையும் செய்வதில்லை, *ஏனென்றால் நாம் இரட்சிக்கப்பட்டு இருக்கிறோம்* என்று கூறுவதில் பெரும்பான்மையானவர்கள் நிறைவடைகின்றனர் - இது சத்தியத்தின் ஒரு அடிப்படைக்கூறு ஒன்றைக் கொண்ட கூற்றாக உள்ளது, ஆனால் இது எல்லா சத்தியத்தையும் வெளிப்படுத்தத் தவறுகிறது.

இரட்சிப்பு ஒரு *கொடையாக* உள்ளது, அது *ஈட்டப்படவோ* அல்லது அதைப் பெறுவதற்கு ஒருவர் தம்மைத் *தகுதிப்படுத்திக்கொள்ளவோ* இயலாது என்று ஐயப்பாட்டிற்கு இடமற்ற வகையில் உடைக்க இந்த எழுத்தாளர்கள் கொண்டுள்ள விருப்பத்தை நான் பாராட்டுகிறேன். அதேவேளையில், அவர்கள் கடந்தகாலத்தில், கால்வினிஸ்டிக் முன்குறிக்கப்பட்ட கொள்கைக்கும் தனிநபர் ஒவ்வொருவரின் சுயாதீன விருப்பத்திற்கும் இடையிலான போராட்டத்தை மறந்துவிட்டார்களோ என்று நான் ஆச்சரியம் அடைகிறேன்.

முன்குறித்தல் என்ற கொள்கையைப் போதிக்கும் இப்போதகர்கள், தனிநபர்கள் தங்களின் சொந்த இரட்சிப்புக்குச் செய்ய *ஒன்றும் கொண்டிருப்ப தில்லை* என்று போதித்தனர். குறிப்பிட்ட மக்கள் இரட்சிக்கப்படுவார்கள், மற்றவர்கள் இழந்துபோகப்படுவார்கள் என்று தேவன் முன்தீர்மானித்து வைத் திருக்கிறார் என்று அவர்கள் நம்பினர். "தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள்" தங்கள் சொந்த இரட்சிப்புக்கென்று முற்றிலும் எதையும் செய்யவில்லை. அவர்களின் இருதயங்களில் விசுவாசத்தைத் தேவன் ஏதேச்சையாக வைத்து அவர்களுக்கு ஆவிக்குரிய வாழ்வைக் கொடுத்தார் என்பதே நம்பிக்கையாயிருக்கிறது. இதற்கு

மறுபுறத்தில், சுயாதீன விருப்பத்திற்குப் பரிந்துபேசுபவர்கள், ஒவ்வொரு நபரும் "சுயாதீனமுள்ள ஒழுக்க முகவராக" இருக்கிறார் என்று வலியுறுத்துகின்றனர். குறிப்பிட்ட ஒரு நபர், இரட்சிக்கப்படுகிறாரா அல்லது இழந்துபோகப்படுகிறாரா என்பது தேவனால் எடுக்கப்படும் எதேச்சையான முடிவின்படியானதல்ல, ஆனால் சுவிசேஷத்திற்கு, அந்தத் தனிநபர் பதில்செய்தல் அல்லது பதில்செய்யா திருத்தல் என்பதையே சார்ந்துள்ளது (ரோமர் 10:16).

முன்குறித்தல் பற்றி நாம் பின்வரும் பாடங்களில் கலந்துரையாடுவோம். இவ்வேளையில், சுயாதீன விருப்பம் என்பதையே வேதாகமம் போதிக்கிறது என்பதே, "கிறிஸ்தவர்கள்" என்று தங்களை அழைத்துக் கொள்ளுபவர்களில் பெரும்பான்மையானவர்களின் ஒருமுகப்போக்காக உள்ளது என்பதை நாம் கவனிப்போமாக. அதுவே என்னிடம் உள்ள ஒவ்வொரு விளக்கவுரையிலும் உள்ள நிலைப்பாடாகவும் இருக்கிறது. விஷயம் அப்படியிருக்கும்போது, இரட்சிக்கப்பட்டிருப்பதா இல்லையா என்பதைக் கடைசியில் முடிவு செய்வது அந்தந்தத் தனிநபரே என்று ஒப்புக்கொள்வது எழுத்தாளர்களுக்குச் சிரமமா யிருக்க வேண்டியது ஏன்?

- *அவர் சுவிசேஷத்தைக் கேள்விப்பட முடியும் அல்லது அதைப் புறக்கணிக்க முடியும்.*
- *அவர் இயேசுவில் விசுவாசம் கொள்ள முடியும் அல்லது விசுவாசிக்கத் தவற முடியும்.*
- *அவர் கர்த்தருடைய அழைப்பை ஏற்றுக்கொள்ள முடியும் அல்லது புறக்கணிக்க முடியும்.*
- *அவர் தேவனுக்குக் கீழ்ப்படிய முடியும் அல்லது கீழ்ப்படிய மறுக்க முடியும்.*
- *அவர் கிறிஸ்துவைப் பின்பற்ற முடியும் அல்லது புறம்பே திரும்பிப் போக முடியும்.*

ஒருவர் கேள்விப்பட்டு, விசுவாசித்து, ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படிந்து மற்றும் பின்பற்றுகிறார் என்றால், அவர் தமது இரட்சிப்பை ஈட்டியுள்ளார் என்று அது அர்த்தப்படுத்துகிறதா? இல்லவே இல்லை. இருப்பினும், அது அவர் தமது சொந்த இரட்சிப்பில் ஒரு பாகத்தைக் கொண்டிருக்கிறார் என்று அர்த்தப்படுகிறது. அது, தேவன் நமக்குச் செய்துள்ளவற்றுடன் ஒப்பிடுகையில் "ஒன்றுமில்லை" என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அது ஒரு மிகச்சிறிய *பகுதியாகவே உள்ளது - ஆனாலும் அது இன்னமும் ஒரு பகுதியாக உள்ளது. இந்த அளவுக்கு ஒரு தனிநபர் தமது சொந்த இரட்சிப்புக்குப் பங்களிக்கிறார். "பங்களித்தல்" என்ற வார்த்தைகுறித்து நாம் இரட்டை அர்த்தத்தில் பேசாதிருப்போமாக. ஒரு நபர் தேவனுடைய கிருபையை சொந்தமாக்கிக்கொள்ள வேண்டுமென்றால், அவர் சிலவற்றைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்வோமாக (நடபடிகள் 2:37, 38).*

கடமை எதிர். அன்பு

இந்தப்பாடத்தின் பெரும்பகுதி, கீழ்ப்படிதலின் அவசியமானது கிருபைபற்றிய பவுலின் போதனையை ஒன்றுமற்றதாக்குகிறது என்று

நினைப்பவர்களின் கவலைகளை நோக்கங்கொண்டதாக இருந்துள்ளது. நாம் இதை முடிப்பதற்கு முன்னர், "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்" மீதான போதனை, மக்களைக் கர்த்தருக்கென்று ஊழியம் செய்வதிலிருந்து உற்சாகத்தைக் குறைக்கலாம் என்ற கவலைபற்றி நான் ஒரு வார்த்தை கூறவேண்டியது அவசியமாக உள்ளது.

ரோமர் 4ஐப் பற்றி சகோதரர் தாமஸ் என்பவர் கலந்துரையாடுகையிலும், அவர் நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமையை கிருபை/விசுவாசம் முறைமையுடன் நேரெதிராக ஒப்பிடுகையிலும், தக்கவகையில் புரிந்துகொள்ளப்பட்டால், இரண்டாவது விஷயமானது, குறைவானதையல்ல ஆனால் *அதிகமான* ஊழியத்தையே விளைவிக்கும் என்று வலியுறுத்தினார். அவர், மருத்துவத்தாதியாக வேண்டும் என்று விரும்பிய ஒரு இளம்பெண்ணைப்பற்றிய பின்வரும் விவரிப்பு உட்படப் பல விவரிப்புகளைப் பயன்படுத்தினார்:[19]

> ஒரு மருத்துவத்தாதி தனது பயிற்சி முடித்துப் பட்டம் பெற்று, நிமோனியா காய்ச்சலால் மிகவும் சுகவீனப்பட்டிருந்த ஒரு குழந்தையைக் கவனித்துக்கொள்ளும் வேலையைப் பெற்றாள். இங்கு அவளது வேலையானது மனிதத்தகுதிக்குரியதாக, சம்பளத்திற்காகச் செய்யப்படுவதாக, மற்றும் இவ்வளவு வேலைக்கு இவ்வளவு சம்பளம் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையிலானதாக இருந்தது. அவள் இந்த ஏற்பாட்டின்கீழ் தனது ஊதியங்கள் பற்றிப் பெருமைபாராட்டுவது தர்க்கரீதியாகத் தகுதியானதாயிருந்தது, ஏனென்றால் அவள் நன்கு செய்யப்பட்ட வேலைக்கு மதிப்பு [ஊதியம்] பெறத்தகுதி உடையவளாக இருக்கிறாள். அவளுக்குத் தரப்படும் வெகுமதி அல்லது ஊதியம் என்பது கொடை என்ற வகையில் அல்ல ஆனால் அவளுக்குத் தரப்பட வேண்டிய கடன் என்ற வகையிலேயே உள்ளது. ஊதியத்தொகையைத் தீர்மானிப்பதில் கிருபையோ அல்லது அன்போ பயன்படுத்தப்படவில்லை. ஆயினும் பிற்பாடு, அந்தத்தாதி திருமணம் முடித்து, காலாகாலத்தில் அவளும் அவளுடைய கணவரும் தங்களுக்கு சொந்தமாக ஒரு குழந்தையைப் பெறுகின்றனர், அந்தக் குழந்தைக்கு நிமோனியா காய்ச்சல் தொற்றிக் கொள்கிறது, அதற்கு ஒரு சிறந்த மருத்துவத்தாதியின் சேவைகள் தேவைப்படுகிறது. இப்போது அந்தத் தாய்க்கு, அவளது சேவைகளுக்கு ஊதியத்தை உத்தரவாதப்படுத்தும் ஒப்பந்தம் எதுவும் தேவைப்படுவதில்லை - அவள் அடியெடுத்துவைத்து, தான் செய்யத்தகுதி பெற்றுள்ள வேலையைச் செய்கிறாள், இது அவள் தன் குழந்தையின்மீது வைத்துள்ள அன்பு மற்றும் அவளது உறவுமுறை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. அந்தக் குழந்தை துன்புறும்போது அவளும் துன்புறுகிறாள்; அந்தக் குழந்தையின் உடல்நலம் மேம்படும்போது, முழுக்குடும்பமும் மகிழ்கிறது. அவள் அன்பு மற்றும் உறவுமுறை ஆகியவற்றினிமித்தம் மிகவும் நீண்டநேரம் மிகவும் கடினமாகக்கூட வேலைசெய்கிறாள், அவள் ஒருபோதும் கடியாரத்தை கவனிப்பதில்லை. இப்போது அவளது வேலை கிறிஸ்தவரின் "கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தின்" ஊழியத்திற்கு ஒப்பானதாக உள்ளது.[20]

நீங்கள் தேவனுடைய ஆச்சரியமான கிருபை பற்றிய உங்கள் புரிந்துகொள்ளுதலில் வளரும்போது, கர்த்தருக்கான உங்கள் முயற்சிகள் "உங்கள் கடமையைச் செய்தல்" என்பதில் இருந்து படிப்படியாகக் குறைந்து, "அன்பின்

ஊழியம்" என்ற வகையில் படிப்படியாக வளரும் (1 தெசலோனிக்கேயர் 1:3ஐக் காணவும்)!

முடிவுரை

இந்தப் பாடத்தின் தொடக்கத்தில் உள்ள நீதிமானாக்கப்படும் இரு முறைமைகள் பற்றிய வரைபடத்தைத் திரும்பவும் பாருங்கள்: நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமை மற்றும் கிருபை/விசுவாசம் முறைமை.

- முதல் முறைமை, ஒருவர் தாம் செய்துள்ளவை பற்றி *மேன்மை பாராட்டுதலை* ஊக்குவிப்பதாக இருக்கையில் (வசனம் 2), இரண்டாவது முறைமை *தாழ்மையையும்* தேவனைச் சார்ந்திருத்தலையும் ஊக்குவிக்கிறது.
- ஒருவர் தமது இரட்சிப்பை *ஈட்டுதல்* என்பது முதல் முறைமையின் வலியுறுத்தமாக இருக்கும் வேளையில், இரட்சிப்பை ஈட்டுதல் என்பது சாத்தியமற்றது, அது *கிரியைகளின்படியானதல்ல* (அவ்வாறு இருக்க முடியாது) என்று இரண்டாவது முறைமை அறிவிக்கிறது.
- முதலாவது முறைமை *மனிதத் தகுதியின்* அடிப்படையிலானதாக இருக்கும் வேளையில், இரண்டாவது முறைமை, ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் *சுயத்தினால் அல்ல,* ஆனால் கர்த்தரிடத்தில் இருந்து வருகின்றன என்று ஒப்புக்கொள்கிறது.
- முதலாவது முறைமை மனித *சாதனைகளில்* மையங் கொண்டிருக்கையில், இரண்டாவது முறைமை *தேவனுடைய கிருபையை நம்பியிருத்தலை* அடிப்படையாகக் கொண்டுள்ளது.
- முதலாவது முறைமை இரட்சிப்பைத் தேவன் நமக்கு பட்டுள்ள *கடன்* என்று ஆக்க முயற்சி செய்கிற வேளையில் (வசனம் 4), இரண்டாவது முறைமை மீட்பு என்பது கர்த்தரிடத்திலிருந்து வருகிற ஒரு *கொடை* என்று ஒப்புக்கொள்கிறது.

நேர்மாறைக் கவனமாக ஆழ்ந்து சிந்தியுங்கள். பவுல் எந்த முறைமையைப் போதித்தார்? நீங்கள் எந்த முறைமையின்கீழ் இருக்க விரும்புவீர்கள்? எந்த முறைமை *நம்பிக்கையை* அளிக்கிறது?

ஒருமுறை ஒரு சுவிசேஷ ஊழியர், ஒரு பெரிய ஸ்காட்டிஷ் நகரத்தின் சேரிப்பகுதிகளில் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். குடிகாரர்கள், "தெருவாழ் மக்கள்" மற்றும் விபசாரிகள் ஆகியோரிடத்தில் அவர் பேசுகையில், அவர்கள் "தங்களை சாக்கடையிலிருந்து வெளியே இழுத்துக்கொள்ளுமாறு" அவர்களை அவர் ஊக்குவித்தார். வாழ்வை மீண்டும் புதியதாகத் தொடங்குமாறு அவர்களுக்கு அவர் அறைகூவல் விடுத்தார். கும்பலின் முனையில் ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள், அவளது வாழ்வு பாவம் மற்றும் சீரழிவு ஆகியவற்றில் ஆழமாய் ஊறியிருந்தது. சிறந்தவற்றைச் செய்யும்படியான ஊக்கமான புத்திகூறுதல்களை ஒருமணிநேரம் வரையில் கவனித்துக்கேட்டபின்பு, அவளால் இனியும் அதைச் சகிக்க முடியாது இருந்தது. பேச்சாளருக்குக் கேட்கும்படி அவள், "உங்கள் கயிறு என்னை வந்து அடையக்கூடாத அளவு குட்டையாக உள்ளது" என்று சத்தம்போட்டுக்

கூறினாள்.[21] தனது பாவத்தைப்பற்றியும் போதுமற்ற தன்மையைப் பற்றியும் அறிந்துள்ள எந்த ஒரு நபரும், ஒரு நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமையினால் நீட்டப்படும் "கயிறு" எதுவும் பாவத்தில் உள்ள தன்னை வந்தடையவும் தன்னைத் தனது குற்றத்திலிருந்து இழுத்துவிடவும் போதிய நீளமற்றதாக இருப்பதை அறிகிறார். கிருபை/கிரியைகள் முறைமை மாத்திரமே பாவியைச் சென்று சேரக்கூடிய அளவுக்குப் போதிய நீளமுள்ள "கயிறை" கொண்டுள்ளது. கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய அன்பே அந்தக் "கயிறாக" உள்ளது.

குறிப்புகள்

[1]இந்தத் தொடக்க நிகழ்ச்சி எனது நினைவுகள் மற்றும் 1955ல் அபிலேன் கிறிஸ்தவக் கல்லூரியில் J. D. தாமஸ் அவர்களின் வகுப்பறைக் குறிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. [2]4:1-3, 5 உடன் தொடர்புடைய வகையில் *logizomai* என்ற வார்த்தை பற்றிய கலந்துரையாடலைக் காணவும். [3]W. E. Vine, Merrill F. Unger and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 150. [4]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 198. [5]Ibid. [6]"பாக்கியவான்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*makarios* என்ற) வார்த்தை, தேவனிடத்தில் விசுவாசம் நிறைந்த பிள்ளை மாத்திரம் அறியக்கூடிய தனிச்சிறப்பான மகிழ்ச்சியைக் குறிப்பிடுகிறது. இது "சந்தோஷமும் இன்னும் அதிகமானதும்" என்று நினைக்கப்பட்டிருக்கலாம். [7]பவுலைப் பொறுத்தமட்டில் பொதுவானதாக இருந்தவகையில், இவ்விடத்தில் அவர் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் (செப்துவஜிந்த் அல்லது LXX) இருந்து மேற்கோள் காட்டினார். [8]அந்த வரலாறு உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமற்றதாக இருந்தால், நீங்கள் அதை மறு கண்ணோட்டமிட விரும்பலாம். [9]"மன்னிப்பிற்காக மனம்வருந்தும் பாவியின் ஜெபம்" என்பது சங்கீதம் 51க்கு மேல் உள்ள பழங்காலத் தலைப்பாகும். [10]James E. Smith, *The Wisdom Literature and Psalms,* Old Testament Survey Series (Joplin, Mo.: College Press Publishing Co., 1996), 261.

[11]3:23ன்மீதான நமது கலந்துரையாடலில் "பாவம்" என்ற வார்த்தையின்மீதான படிப்பைக் காணவும். "பாவம்" என்பதன் வினைச்சொல் வடிவம் அந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது, அதேவேளையில் அவ்வார்த்தையின் பெயர்ச்சொல் வடிவம் 4:7, 8ல் பயன்படுத்தப்பட்டுள்ளது. [12]C. F. Keil and Franz Delitzsch, "Psalms," *Commentary on the Old Testament*, vol. 5 (Peabody, Mass.: Hendrickson Publishers, 1989), 395. [13]Ibid. "அது ஒருக்காலும் நடந்திராதது போல்" என்ற வார்த்தைகள் தாவீதின் பாவத்தினுடைய குற்ற இயல்பை மாத்திரமே குறிக்கின்றன, அவைகள் அந்தப்பாவத்தின் விளைவைக் குறிப்பிடுவதில்லை (2 சாமுவேல் 12:10ஐக் காணவும்). [14]This thought is expanded in Robertson L. Whiteside, *A New Commentary on Paul's Letter to the Saints at Rome* (Fort Worth, Tex.: Manney Co., 1945), 89-90. [15]இந்த விவரிப்பை நீங்கள் வாழும் பகுதிக்குத் தக்கவாறு (உதாரணமாக, ஒரு மனிதர் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படும் வேலைபற்றி) தழுவியமைத்துக் கொள்ளுங்கள். [16]Charles Hodge, *Commentary on the Epistle to the Romans* (Princeton, N.J.: N.p., 1886; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1968), 109. [17]David Lipscomb, *A Commentary on the New Testament Epistles*, vol. 1, *Romans*, 2d ed., rev. and enl. (Nashville: Gospel Advocate Co., 1943), 82. [18]Quoted in Leslie C. Allen, "Romans," *New International Bible Commentary*, ed. F. F. Bruce (Grand Rapids, Mich.: Zondervan Publishing House,

1979), 1324. [19]*இந்த விவரிப்புகளும், இத்துடன் கூடுதலாக இன்னொரு விவரிப்பும், பின்வரும் புத்தகத்தில் தரப்பட்டுள்ளன:* David Roper, *Jesus Christ and Him Crucified* (Arvada, Colo.: Christian Communications, 1976), 106-8. [20]J. D. Thomas, *Romans,* The Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1965), 33.

[21]Adapted from David F. Burgess, comp., *Encyclopedia of Sermon Illustrations* (St. Louis: Concordia Publishing House, 1988), 125.

18

“தகப்பனாகிய ஆபிரகாம்”

[4:9-17அ]

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டிலும் ஆபிரகாம் ஒரு திறவுகோல் உருவமாக இருக்கிறார். புதிய ஏற்பாட்டில் இவரது பெயர், பவுல் அல்லது பேதுரு ஆகியோருடைய பெயர்களைக் காட்டிலும் மிகவும் அடிக்கடி காணப்படுகிறது![1] *இரண்டு ஏற்பாடுகளிலும் இவர், தேவனுக்குச் சிநேகிதர் என்று குறிப்பிடப்பட்டுள்ளார் (ஏசாயா 41:8; யாக்கோபு 2:23). ஹியூகோ மெக்கார்டு என்பவர், “அவர் [ஆபிரகாம்] தேவனுக்குள் பெருமகிழ்வு அடைந்தபடியால், அவருக்குள் தேவன் பெருமகிழ்வு அடைந்தார்” என்று கூறினார்.*[2]

ரோமர் 4ல், விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலுக்கு ஆபிரகாம் பவுலின் முதன்மை உதாரணமாக இருந்திருக்கிறார். இந்தப்பாடம் 4:9-17அ வரையிலான வசனப்பகுதிகளை மையங்கொண்டிருக்கும். ஆபிரகாமின் தகப்பனார்த்துவம்/பிதாத்துவம் என்பது இவ்வசனப்பகுதியின் ஒரு ஆய்வுக்கருத்தாகும். 12ம் வசனத்தில் இவர், “தகப்பனாகிய ஆபிரகாம்” என்று அழைக்கப்படுகிறார். 16ம் வசனத்தில் பவுல் “நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாம்” என்று பேசினார்; 11ம் வசனத்தில் அவர் [பவுல்] இவரை [ஆபிரகாமை] “விசுவாசிக்கிற யாவருக்கும் ... அவன் தகப்பனாயிருக்கும்படிக்கு” என்று அழைத்தார்.

வசனப்பகுதியை நாம் படிப்பதற்கு முன்னர், ஆபிரகாமின் வாழ்க்கையில் நடந்த முக்கியமான நிகழ்ச்சிகளையும் அவை நடந்த வரிசைக்கிரம முறையையும் நமது நினைவுக்குக் கொண்டுவருவோம். ஆபிரகாமுக்குச் சுமார் அறுபது வயதானபோது, அவரைத் தேவன், கல்தேயரின் ஊர் என்ற நகரில் இருந்து (ஆதியாகமம் 11:31; 15:7) வெளியேறும்படி அழைத்தார். அவரும் அவரது தந்தையான தேராகு என்பவரும், குடும்பத்தில் இருந்த மற்றவர்களும், ஆரானுக்குக் குடிபெயர்ந்தனர். (“ஆபிரகாம் பயணம் செய்த நாடுகள்” என்ற வரைபடத்தைக் காணவும்). தேராகுவின் மரணத்திற்குப் பின்பு (11:32), ஆபிரகாமுக்கு எழுபத்தி ஐந்து வயதானபோது (12:4), அவருக்குத் தேவன் தரிசனமாகிப் பின்வருமாறு கூறினார்,

> *நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும்,*
> *உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு,*
> *நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ.*
> *நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து,*
> *உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்;*
> *நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.*
> *உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன்,*

உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்.
பூமியிலுள்ள வம்சங்களெல்லாம்
உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் (ஆதியாகமம் 12:1ஆ-3).

தேவன் ஆபிரகாமுக்கு, செல்வத்தின் ஆசீர்வாதத்தையும், மக்களின் ஆசீர் வாதத்தையும் மற்றும் பாதுகாப்பின் ஆசீர்வாதத்தையும் கொடுத்தார்; ஆனால் வாக்குத்தத்தத்தின் நோக்கம்தான் நமக்கு மிகவும் ஆர்வமுள்ள விஷயமாக இருக்கிறது: "உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" (கலாத்தியர் 3:8ஐக் காணவும்).

ஆபிரகாம் கானான் நாட்டிற்கு வந்தார்; ஆனால் ஒரு பத்தாண்டு அல்லது அதற்குச் சற்றேறக்குறையச் சமமான காலம் கடந்தபின்புகூட, அவருக்கும் சாராளுக்கும் பிள்ளைகள் பிறக்கவில்லை. அவரது சந்ததிகள் பூமியின் மணலைப்போலவும் (ஆதியாகமம் 13:16) வானத்தின் நட்சத்திரங்களைப்போலவும் (ஆதியாகமம் 15:5) எண்ணிறந்தவையாக இருக்கும் என்று அவருக்குத் தேவன் வாக்களித்திருந்தார். அந்த வேளையில், ஆபிரகாம் "கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்" என்று கூறப்படுகிறது (ஆதியாகமம் 15:6).

இன்னொரு பதினான்கு ஆண்டுகள் கடந்து சென்றன. ஆபிரகாமுக்குத் தொண்ணூற்றொன்பது வயதானபோது, அவருக்குத் தேவன் மீண்டும் தரிசன மாகி, பின்வருமாறு கூறினார்:

... நான் உன்னோடே பண்ணுகிற
என் உடன்படிக்கை என்னவென்றால்,
நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய்.
இனி உன் பேர் ஆபிராம் ("மேன்மையான தகப்பன்")
என்னப்படாமல்,
நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத்
தகப்பனாக ஏற்படுத்தினபடியால்,
உன் பேர் ஆபிரகாம் ("திரளான ஜனக்கூட்டத்தின் தகப்பன்") என்னப்படும்.
உன்னை மிகவும் அதிகமாய்ப் பலுகப்பண்ணி,
உன்னிலே ஜாதிகளை உண்டாக்குவேன்; ...
(ஆதியாகமம் 17:4-6).

அந்த வேளையில், தேவன் விருத்தசேதனச்சடங்கை ஏற்படுத்தினார் (ஆதியா கமம் 17:9-14, 23-27). அது "எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்" என்று தேவன் கூறினார் (வசனம் 11).

நமது அடுத்த பாடத்தில், ஆபிரகாமின் வாழ்வைப்பற்றி நாம் அதிகம் கூறுவோம்; ஆனால் இந்த எடுத்துரைப்புக்கு, நாம் ஒரு கடைசி நிகழ்ச்சியைக் கவனிக்க விரும்புகிறோம். 22ம் அதிகாரத்தில், ஆபிரகாம் தமது விசுவாசத் திற்கு மிகவும் கடினமான சோதனையைச் சந்தித்திருந்த பின்பு,[3] தேவன் ஆபிரகாமுடனான தமது உடன்படிக்கையைப் புதுப்பித்து, "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்று கூறினார் (22:18அ).

வசனப்பகுதியை நாம் பரிசீலனை செய்கையில், இந்த வரிசை முறையைச் சிந்தையில் வைத்துக்கொள்ளுங்கள்.[4] பவுல், நியாயப்பிரமாணம்/கிரியை முறை

மையை கிருபை/விசுவாசம் முறைமையுடன் நேரெதிராக ஒப்பிட்டு, "தேவனுடைய திகைப்புக்குரிய 'கணக்கிடும் ஏற்பாடு' " பற்றித் தொடர்ந்து பேசினார். இருப்பினும், நமது பாடத்தில் "தகப்பனாகிய ஆபிரகாம்" பற்றியே கவனக்குவிப்பு இருக்கும். அவர் *ஏன்* "நம் எல்லாருக்கும் தகப்பனாக" இருக்கிறார் என்று கண்டறிய நாம் விரும்புகிறோம்.

அவர் விருத்தசேதனம் செய்யப்படுவதற்கு முன்பே நீதிமானாக்கப்பட்டதால் அவர் "தகப்பனாகிய ஆபிரகாமாக" இருக்கிறார் (4:9-12)

இரண்டு உண்மைகள் யூதர்கள் எல்லாருடைய இருதயங்களுக்கும் மிகவும் பிரியமானவைகளாக இருந்தன: அவர்கள் விருத்தசேதனம் செய்யப்பட்டிருந்த உண்மையும் அவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருந்த உண்மையும். இவைகள் அவர்களை *யூதர்களாக்கியிருந்தன* மற்றும் அவர்களைத் தேவனுடைய பார்வையில் *விசேஷித்தவர்களாக்கி* இருந்தன. அவர்கள் தாங்கள் நீதிமானாக்கப்படுவதற்கு விருத்தசேதனத்தையும் நியாயப்பிரமாணத்தையும் சார்ந்திருந்தனர்.[5] ரோமர் 2ல் பவுல் முதலாவதாக நியாயப்பிரமாணத்தைப் பற்றிக் கலந்துரையாடி (வசனங்கள் 17-24) பின்பு விருத்தசேதனத்தைப் பற்றிக் கலந்துரையாடினார் (வசனங்கள் 25-29). 4:9-12ல் அவர் அந்த இரு காரணிகளைப் பற்றி மீண்டும் - எதிர்வரிசையில் கலந்துரையாடினார்.

"விருத்தசேதனம் இல்லாதிருக்கையில்"

நமது முந்திய பாடம் பின்வரும் வார்த்தைகளுடன் முடிந்தது:

> அந்தப்படி, கிரியைகளில்லாமல் தேவனாலே நீதிமானென்றெண்ணப்படுகிற மனுஷனுடைய பாக்கியத்தைக் காண்பிக்கும் பொருட்டு:
> "எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ,
> எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ,
> அவர்கள் பாக்கியவான்கள்.
> எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ,
> அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான்" (4:6-8).

அவ்வசனப்பகுதியில், "பாக்கியவான்" என்பது பாவங்கள் மன்னிக்கப்படுதலைக் குறிக்கிறது. பவுல் அடுத்து, "இந்தப் பாக்கியம் விருத்தசேதனமுள்ளவனுக்கு மாத்திரம் வருமோ, விருத்தசேதனமில்லாதவனுக்கும்[6] வருமோ?" என்று கேட்டார் (வசனம் 9அ). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், யூதர்களுக்கு மாத்திரம்தான் பாவங்கள் மன்னிக்கப்படுமா, அல்லது புறஜாதியாருக்கும் மன்னிக்கப்பட முடியுமா? பல யூதர்கள், "அப்படிப்பட்ட ஆசீர்வாதங்கள் யூதர்களுக்கு மாத்திரமே உரியவைகளாக உள்ளன!" என்று பதில் அளித்திருப்பார்கள். இருப்பினும், பவுல் தேவனுடைய கிருபையின் அளிப்புகள் *ஒவ்வொருவருக்கும்* உரியவை என்று நிலைநாட்டுவார்.

முதலில் பவுல் தமது வாசகர்களுக்குத் தமது நிரூபண வசனத்தை நினைவுபடுத்தினார் (ஆதியாகமம் 15:6): "ஆபிரகாமுக்கு விசுவாசம் நீதியாக எண்ணப்பட்டது [*logizomai*] என்று சொல்லுகிறோமே" (ரோமர் 4:9ஆ). பின்பு அவர், "அது [ஆபிரகாமுக்கு நீதி] எப்பொழுது [எந்த

சூழ்நிலையின்கீழ்] அவனுக்கு அப்படி எண்ணப்பட்டது [*logizomai*]? அவன் விருத்தசேதனமுள்ளவனாயிருந்தபோதோ, விருத்தசேதனமில்லாதவனா யிருந்தபோதோ?'' (வசனம் 10அ). இது பெரும்பான்மையான யூதர்கள் ஒருக்காலும் ஆழ்ந்து சிந்தித்திராத கேள்வியாக இருந்தது.

பவுல் தமது சொந்தக் கேள்விக்குத் தாமே பதில் அளித்தார்: ''விருத்தசேதனமுள்ளவனாயிருந்தபோதல்ல, விருத்தசேதனமில்லாதவனா யிருந்தபோதே'' (வசனம் 10ஆ). ஆபிரகாம் விசுவாசத்தினால் நீதிமா னாக்கப்பட்டது பற்றிய கூற்றானது, ஆதியாகமம் 15ல் ஏற்படுத்தப்பட்டது, இது நடந்து குறைந்தபட்சம் பதினான்கு ஆண்டுகளுக்குப்பின்புதான் ஆதியாகமம் 17ல் உள்ள விருத்தசேதனச்சடங்கு ஏற்படுத்துதல் பற்றிய விவரம் நடைபெற்றது.[7] யூத ஆண்கள் ஒரு கருத்தமைவில், விருத்தசேதனம் அவர்களை "யூதர்கள்" ஆக்கிற்று என்று நம்பினர்; அவர்கள் யூதர்களை "விருத்தசேனம்" என்றும் புறஜாதியார்களை "விருத்தசேதனமில்லாமை" என்றும் குறிப்பிட்டனர். இவ்விதமாக, அவர்களின் சொந்த நியாயப்படுத்துதலின்படி ஆபிரகாம் "ஒரு யூதராக" ஆவதற்கு முன்னரே - அதாவது அவர் "ஒருபுறஜாதியாராக" இருந்தபோதே - விசுவாசத்தினால் நீதிமா னாக்கப்பட்டார் என்றாகியது!

அது இன்னொரு கேள்வியை எழுப்புகிறது: பின்பு, ஏன், தேவன் ஆபிரகாமும் அவரது குடும்பத்தில் இருந்த மற்ற ஆண்களும் விருத்தசேதனம் செய்துகொள்ள வேண்டும் என்று கட்டளை இட்டார்? அது இரட்சிக்கப்படுவதற்கு அல்ல என்றால் அந்தச் சடங்கின் நோக்கம் என்னவாக இருந்தது? தொடர்ந்து, பவுல் ''மேலும் விருத்தசேதனமில்லாத காலத்தில் அவன் [ஆபிரகாம்] விசுவாசத்தினாலே அடைந்த நீதிக்கு முத்திரையாக [*sphragis*] விருத்தசேதன மாகிய அடையாளத்தைப் [*semeion*] பெற்றான்" (ரோமர் 4:11அ). இந்தச் சடங்கை ஏற்படுத்தியதில் தேவன் ஆபிரகாமிடம், "... விருத்தசேதனம் பண்ணக்கடவீர்கள். அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்[8]" என்று கூறியிருந்தார் (ஆதியாகமம் 17:11). விருத்தசேதனம் என்பது யூதர்களை இரட்சிப்பதற்காக கொடுக்கப்படவில்லை, ஆனால் ஒரு "அடையாளமாக"வும் ஒரு ''முத்திரை''யாகவும் அவர்களுக்குத் தரப்பட்டிருந்தது: "அவர்களை அடையாளப்படுத்த ஒரு *அடையாளமாக*"வும், "அவர்களை அங்கீகரிக்க ஒரு *முத்திரையாகவும்.*"[9]

இந்த இடத்தில், நாமகரணக்கூட்டங்களின் விளக்கவுரையாளர்கள் பலர், "ஞானஸ்நானமும் அதைப் போன்றதாகவே உள்ளது. அது நமது இரட்சிப்புக்கு ஒன்றும் செய்வதற்கில்லை, ஆனால் அது நாம் நீதிமானாக்கப்பட்டதற்கான ஒரு அடையாளமாகவும் முத்திரையாகவும் மாத்திரமே உள்ளது" என்று கூடுதலாகக் கருத்துத் தெரிவிக்கின்றனர். பவுல் இப்படிப்பட்ட நடைமுறைப்பயன்பாடு எதையும் ஏற்படுத்தியிருக்கவில்லை என்ற உண்மையிருப்பினும்கூட, அவர்கள் இந்தத் தைரிய மான உறுதிப்பாட்டை ஏற்படுத்துகின்றனர். நாமகரணக்கூட்ட விளக்கவுரையாளர் ஒருவர், "ரோமர் 4ல் ஞானஸ்நானம் பற்றி ஏதாவது விஷயம் கூறப்பட்டுள்ளது என்பது ஏற்புடையதாக இருப்பதில்லை ..." என்று ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது.[10] பவுல் (நாம் ஞானஸ்நானப்படுத்தப்படும்போது பெற்றுக்கொள்ளும்; நடபடிகள் 2:38) பரிசுத்த ஆவியானவருடைய வரத்தை ஒரு "முத்திரை" என்று குறிப்பிட்டார் (எபேசியர் 1:13, 14ஐக் காணவும்). நாம் ரோமர் 6ஐப் படிக்கும்போது, ஞானஸ்நானத்தின் நோக்கத்தைப் பற்றிக் கலந்துரையாடுவோம்.

“விசுவாசிக்கிற யாவருக்கும் தகப்பன்”

ஆபிரகாம், “விருத்தசேதனமில்லாதவர்களாய் விசுவாசிக்கிற யாவருக்கும் ... தகப்பனாயிருக்கும்படிக்கு” விருத்தசேதனம் பண்ணப்படுவதற்கு முன்பே விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டார் என்று பவுல் இதை முடித்துவைத்தார் (4:11ஆ). ஆபிரகாம் யூதர்களுக்கு மாம்சப்பிரகாரமான முற்பிதா (*propator*) என்பதைப் பவுல் குறிப்பிட்டிருந்தார் (வசனம் 1); இப்போது அவர் இயேசுவில் விசுவாசம் கொள்கிற புறஜாதியாருக்கு அவர் [ஆபிரகாம்] ஆவிக்குரிய தகப்பனாக (*pater*) இருந்தார் என்று அறிவித்தார். ஆபிரகாமுக்குச் செய்யப்பட்டதுபோன்றே, புறஜாதியார்கள் விசுவாசித்தால், அது “அவர்களுக்கும் நீதியாக (தேவனுடன் நேராக நிற்குதல்) எண்ணப்படும் [*logizomai*]” (வசனம் 11இ). AB வேதாகமம், இது “அவர்களின் கணக்கில் வரவுவைக்கப்படும்” என்று கூறுகிறது. “தேவனுடைய திகைப்புக்குரிய ‘கணக்கு வைக்கும் ஏற்பாடு’ ” எல்லாருக்கும் கிடைக்கிறது!

இது யூதர்களை வெளியே விட்டுவிட்டதா? இல்லை, ஆபிரகாம் இன்னமும் “விருத்தசேதனம் செய்துகொண்டுள்ளவர்களுக்கு [யூதர்களுக்கு] தகப்பனாக [*pater*]” இருந்தார் (வசனம் 12அ). இருப்பினும், யூதர்கள் ஆபிரகாம் “விருத்தசேதனத்தைப் பெற்றவர்களாய் மாத்திரமல்ல, நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் விருத்தசேதனமில்லாத காலத்தில் அடைந்த விசுவாச மாகிய அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாயுமிருக்கிறவர்களுக்குத் தகப்பனாக” இருக்கிறார் என்பதை உணர்ந்தறிய வேண்டியிருந்தது (வசனம் 12ஆ). இயேசு தம்மை விமர்சித்தவர்களிடத்தில், “நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்களே” என்று கூறியிருந்தார் (யோவான் 8:39). குறிப்பாக, அவர்கள் ஆபிரகாம் “விருத்தசேதனமில்லாத காலத்தில்” கொண்டிருந்த *விசுவாசத்தை* தாங்களும் கொண்டிருக்க வேண்டியது அவசியமா யிருந்தது (ரோமர் 4:12அ).

ஆபிரகாம் ஒரு கருத்தில் “யூதர் ஆவதற்கு” பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டார் என்பதே அவர் “விசுவாசிக்கிற எல்லா ருக்கும் தகப்பனாயிருக்கிறார்” (வசனம் 11) என்பதற்குப் பவுலின் முதல் நிரூபணமாக இருந்தது. ஆகையால் நீதிமானாக்கப்படுதல் என்பது ‘‘மாம் சத்தின்படியானதல்லாமல், விசுவாசத்தின்படியானதாக’’ உள்ளது.[11] தேவன் *விருத்தசேதனம் இல்லாத விசுவாசி ஒருவரை*, ஏற்றுக்கொள்வார் மற்றும் அவர் *விருத்தசேதனமுள்ள அவிசுவாசி ஒருவரைப்* புறக்கணிப்பார் என்பது பல யூதர்களுக்கு மிகவும் அதிர்ச்சியூட்டுவதாக ஒலித்திருக்க வேண்டும்.

நீங்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று விரும்பினால், நீங்களும்கூட ‘‘நமது பிதாவாகிய ஆபிரகாமின் விசுவாச அடிச்சுவடுகளைப் பின்பற்றுங்கள்.’’ குறிப்பாக, ஆபிரகாமின் புதிய ஏற்பாட்டுப் பிள்ளை என்ற வகையில் நீங்கள் இயேசுவில் உங்கள் நம்பிக்கையை வைத்து அவரது சித்தத்தைச் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது.

அவர் நியாயப்பிரமாணம் தரப்பட்டதற்கு முன்னதாகவே நீதிமானாக்கப்பட்டதால் அவர் “தகப்பனாகிய ஆபிரகாமாக” இருக்கிறார் (4:13-17அ)

யூதர்களை மற்றவர்களிடத்தில் இருந்து வித்தியாசப்படுத்தின இரண்டாவது விஷயத்தை நோக்கிப் பவுல் தமது கவனத்தைத் திருப்பினார்: மோசேயின் நியாயப்பிரமாணம். F. F. புரூஸ் என்பவரின் கூற்றுப்படி, பவுல் “விருத்தசேதனம் என்பது ஆபிரகாம் தேவனால் நீதிமானாக்கப்படுவதற்கு ஒன்றும் செய்திருக்க வில்லை என்றால், ... நியாயப்பிரமாணம் அதைக்குறித்து இன்னும் குறைவாகவே ஒன்றும் செய்திருக்காது” என்று கூறினார்.[12]

“வாக்குத்தத்தம்”

முதலில் பவுல், ‘‘உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற வாக்குத் தத்தம் ஆபிரகாமுக்காவது மற்றும் சந்ததிக்காவது[13]*’’ என்பதைப் பற்றிக் குறிப்பிட்டார் (4:13அ). ‘‘வாக்குத்தத்தம்’’ என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள (epangelia என்ற) வார்த்தையானது 4:13-21ல் ஒரு திறவுகோல் வார்த்தையாக உள்ளது. இதன் பெயர்ச்சொல் வடிவம் நான்கு முறைகள் காணப்படுகையில் (வசனங்கள் 13, 14, 16, 20), இதன் வினைச்சொல் வடிவம் ஒருமுறை காணப்படுகிறது (வசனம் 21). இவை யாவும், ஆபிரகாமும் அவரது சந்ததிகளும் ‘‘உலகத்தைச் சுதந்தரிப்பார்கள்’’ என்ற ‘‘வாக்குத்தத்தத்தை’’ குறிப்பிடுகின்றன. இந்தப்பகுதி பற்றிய நினைவூட்டுதலில் நான் இதை ‘‘வாக்குத்தத்தம்’’ என்று குறிப்பிடுவேன்.*

ஆபிரகாம் “உலகத்தைச் சுதந்தரிப்பார்” என்பதற்குக் குறிப்பிடத்தக்க வாக்குத்தத்தம் எதுவும் ஆதியாகமத்தில் இருப்பதில்லை,[14] *எனவே இது தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த பல்வேறு வாக்குத்தத்தங்களைத் தொகுத்துரைக்கப் பவுலின் வழிவகையாக இருக்கலாம், ஒருவேளை இவற்றில் ஒன்று இந்த அப்போஸ்தலரின் சிந்தையில் மிகமேலான தாக இருந்திருக்கலாம்: “உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதி களும் ஆசீர்வதிக்கப்படும்” (ஆதியாகமம் 22:18அ; 12:3ஐக் காணவும்). வேறொரு இடத்தில், பவுல் இது மேசியாத்துவ வாக்குத்தத்தமாக இருந்தது என்று சுட்டிக்காண்பித்தார்: “ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே” (கலாத்தியர் 3:16).*

கிறிஸ்துவின் மூலமாக, ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியார் “உலகத்தைச் சுதந்தரிப்பவர்கள்” ஆகின்றனர் (மத்தேயு 5:5ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்). கொரிந்துவில் இருந்த சபைக்கு எழுதிய போது, பவுல் ‘‘எல்லாம் உங்களுடையதே; ... ஜீவனாகிலும், மரணமாகிலும், நிகழ்காரியங்களாகிலும், வருங்காரியங்களாகிலும், எல்லாம் உங்களுடையது” (1 கொரிந்தியர் 3:21ஆ, 22) என்று கூறினார். எல்லாம் “நம்முடையது” என்பது, எல்லாம் தேவனுக் குரியவை, மற்றும் நாம் அவரது பிள்ளைகளாக இருக்கிறோம் என்ற கருத்தில் ஆனதாகும். தேவன் தமது பிள்ளைகளைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்கிறார்

மற்றும் நமக்குத் தேவையானவற்றைக் கொண்டிருக்கிறோம் என்பதை அவர் உறுதிப்படுத்திக்கொள்கிறார்.

> "... என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள். ... முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" (மத்தேயு 6:25-33).

"நியாயப்பிரமாணத்தினால் அல்ல"

> அன்றியும், உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்காவது அவன் சந்ததிக்காவது நியாயப்பிரமாணத்தினால் கிடையாமல் விசுவாசத்தினால் வருகிற நீதியினால் கிடைத்தது. நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்கள் சுதந்தரவாளிகளானால் விசுவாசம் வீணாய்ப்போம், வாக்குத்தத்தமும் அவமாகும். மேலும் நியாயப்பிர மாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது, நியாயப்பிரமாணமில் லாவிட்டால் மீறுதலுமில்லை. ஆதலால், சுதந்தரமானது கிருபையினால் உண்டாகிறதாயிருக்கும்படிக்கு அது விசுவாசத்தினாலே வருகிறது (4:13-16அ).

தேவன் ஆபிரகாமுக்கும் அவரது சந்ததிகளுக்கும் வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார், ஆனால், அது அவர் மோசேக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்ததால் ஏற்பட்டிருக்கவில்லை.[15] பவுல் இது "நியாயப்பிரமாணத்தினால் கிடையாமல்" என்று கூறினார் (4:13ஆ): மோசேக்கு நியாயப்பிரமாணம் "நானூற்று முப்பது ஆண்டுகளுக்குப் பின்பு" கொடுக்கப்பட்டதால் (கலாத்தியர் 3:17), இது நியாயப்பிரமாணத்தினால் கிடைத்ததாக இருந்திருக்க முடியாது. மாறாகப், பவுல் வாக்குத்தத்தமானது "விசுவாசத்தினால் வருகிற நீதியினால் கிடைத்தது" என்று கூறினார் (ரோமர் 4:13இ).

மோசேயின் நியாயப்பிரமாணம் பல நூற்றாண்டுகளுக்குப் பின்பு தரப்பட்டது என்ற உண்மை, வாக்குத்தத்திற்கு நியாயப்பிரமாணம் ஒன்றையும் செய்யவில்லை என்பதற்குப் போதுமான ஆதாரமாக உள்ளது. இருப்பினும் பவுல் இத்துடன் விட்டுவிடவில்லை. அவர் நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமையை கிருபை/விசுவாசம் முறைமையுடன் நேரெதிராக ஒப்பிடத்தொடர்வதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டார். மூலவசனத்தில், 13 மற்றும் 14ம் வசனங்களில் "நியாயப்பிரமாணம்" என்ற வார்த்தைக்கு முன்னதாக ("the" என்ற ஆங்கில வார்த்தைக்கு இணையான) திட்டவட்டச் சுட்டுச்சொல் எதுவும் இருப்பதில்லை. பவுல், மோசேயின் நியாயப்பிரமாணத்தையே தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பதை நாம் அறிவதற்குச் சந்தர்ப்பப்பொருள் அனுமதிக்கிறது, ஆனால் திட்ட வட்டச் சுட்டுச்சொல் இல்லாமை என்பது இவ்விடத்தில் பொதுவான நடைமுறைச் செயல்பாடு ஏற்படுத்தப்படலாம் என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படுதல் என்பது நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தலைச் சார்ந்திருக்கும் என்றால், வாக்குத்தத்தமானது ஒருக்காலும் நிறைவேற்றப்படாததாகவே நிலைத்திருக்கும்,

ஏனென்றால் எவரொருவரும் - ஆபிரகாமும்கூட - நியாயப்பிரமாணத்தை (எந்தப்பிரமாணத்தையும்) பூரணமாகக் கடைப்பிடிக்க இயலாதிருந்தனர். வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றம் கிருபை/விசுவாச முறைமையைச் சார்ந்திருந்தது என்பதே பவுலின் முடிவாக இருந்தது: அது "விசுவாசத்தினால் வருகிற நீதியினால் கிடைத்தது" (வசனம் 13இ).

"நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்கள் சுதந்தரவாளிகளானால் விசுவாசம் வீணாய்ப்போம், வாக்குத்தத்தமும் அவமாகும்" (வசனம் 14). பவுல் "நியாயப்பிர மாணத்தைச் சார்ந்தவர்கள்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியபோது அவர் யூதர்களையே தமது சிந்தையில் முதன்மையாகக் கொண்டிருந்தார் (வசனம் 16ஐக் காணவும்). இருப்பினும், 14ம் வசனத்தில் உள்ள "நியாயப்பிரமாணம்" என்பது மூலவசனத்தில் ஒரு பொதுவான வார்த்தையாக இருந்தபடியால், இந்தக்குறிப்பு நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறையைச் சார்ந்திருக்கும் எவரையும் உள்ளடக்கிற்று. வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது நியாயப்பிரமாணம்/ கிரியைகள் முறைமையைச் சார்ந்திருக்கும் என்றால், இரு விளைவுகள் நடைபெறும்.

முதலாவது, "விசுவாசம் வீணாய்ப்போம்." "வீணாய்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள (*kenos* என்ற) வார்த்தையானது அடிப்படையாக "வெறுமை" என்று அர்த்தப்படுகிறது.[16] AB வேதாகமத்தில் "empty of all meaning" ("எல்லா அர்த்தத்திலும் வெறுமையாக") என்றுள்ளது. நியாயப்பிர மாணம்/கிரியைகள் முறைமையையும் கிருபை/விசுவாசம் முறைமையும் உடனொத்து இருக்க இயலாதவையாகும். நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமையொன்று நிலைநாட்டப்படுமென்றால், கிருபை/விசுவாசம் முறைமையானது நீக்கிப்போடப்படுகிறது (இது எவரொருவரும் நியாயப்பிரமாணத்தைப் பூரணமாகக் கடைப்பிடிக்க இயலாது என்பதால், நாம் அழிவுக்குள்ளாகிறோம் என்று அர்த்தப்படும்).

வாக்குத்தத்தமும் "அவமாகும்" என்பது இரண்டாவது விளைவாக இருக்கும். "அவமாகும்" என்பது "செயலற்றதாகக் குறைத்தல்" (*kata* ["கீழே"] கூட்டல் *argos* ["செயலற்ற தன்மை"]) என்று அர்த்தப்படும் *katargeo* என்ற கூட்டு வார்த்தைகளில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[17] AB வேதாகமத்தில் "annulled and has no power" ("ஒன்றுமற்றதாக்கப்பட்டது மற்றும் வலிவற்றுள்ளது") என்றுள்ளது. ஆபிரகாம் தேவனுடைய பிரமாணங்களைப் பூரணமாகக் கடைப்பிடித்தார் என்பதற்காக அவருக்கு வாக்குத்தத்தம் தரப்படவில்லை, ஆனால் அவர் *விசுவாசம்* கொண்டிருந்தார் என்பதற்காகவே அது அவருக்குத் தரப்பட்டிருந்தது (கலாத்தியர் 3:18ஐக் ஒப்பிடவும்). வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தலைச் சார்ந்திருந்தது என்றால், "அதைப்பற்றி மறந்துவிடுங்கள்" என்று நாம் கூறமுடியும் (மற்றும் நாம் கூறுகிறோம்) - ஏனெனில் அது ஒருக்காலும் நிறைவேற்றப்படப்போவது இல்லை என்று பவுல் கூறினார்.

விஷயம் ஏன் இப்படி இருக்கிறது? ஏனென்றல், நியாயப்பிரமாணம் தேவனுடைய ஆசீர்வாதங்களைக் கொண்டுவருவதற்குப் பதிலாக, "நியாயப்பிரமாணம் கோபாக்கினையை [*orge*] உண்டாக்குகிறது" என்று பவுல் கூறினார் (ரோமர் 4:15அ). 15ம் வசனத்தில் "நியாயப்பிரமாணம்" என்ற வார்த்தைக்கு முன்னதாக ஒரு திட்டவட்டச் சுட்டுச்சொல் உள்ளது, எனவே, பவுல் மோசேயினுடைய நியாயப்பிரமாணம்

என்பது, நியாயப்பிரமாணம்/கிரியைகள் என்ற முறைமையைப் பொறுத்த மட்டில் "விதிக்கு ஒரு விதிவிலக்காக" இருக்கும் என்று கருதியிருந்த யூதர்களை நேரடியாக எதிர்த்து நின்றார்.

''நியாயப்பிரமாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது'' என்று பவுல் கூறியபோது, மோசேயினுடைய நியாயப்பிரமாணம் மதிப்பு எதையும் கொண்டிருக்கவில்லை என்று அவர் கூறவில்லை (7:12ஐக் காணவும்); அது தேவனால் தரப்பட்டதாக இருந்ததே. மாறாக, அவர் நியாயப்பிரமாணத்தை எவரொருவராலும் பூரணமாகக் கடைப்பிடிக்க இயலாதபடியால், முடிவில் நியாயப்பிரமாணம் முழுவதும் கோபாக்கினையை உண்டாக்கும் என்றே அவர் கூறினார். 7ம் அதிகாரத்தின் தொடர்பாக நாம் இதை இன்னும் முழுமையாகக் கலந்துரையாடுவோம். இந்த வேளைக்கு, ''நியாயப்பிரமாணம் என்பது பின்வரும் மூன்று வழிமுறைகளில் கோபாக்கினையைக் கொண்டுவருகிறது'' என்பதை மாத்திரம் நாம் கவனிப்போம்:

- அது பாவம் பற்றிய (பாவம் என்றால் என்ன என்ற) உணர்வைக் கொண்டுவருகிறது (3:20).
- ஒரு கருத்தில், அது பாவத்தை ஊக்குவிக்கிறது (*செய்யக் கூடாது* என்று சொல்லும்போது சில பிள்ளைகளின் பதில்செயல்களைப் பற்றி நினைத்துப் பார்க்கவும்) (5:20அ; 7:5ஐக் காணவும்).
- அது பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறது (உபாகமம் 28:58, 59ஐக் காணவும்).

நியாயப்பிரமாணம் என்பது "பிரச்சனையைக் கண்டுபிடிக்க முடியும், ஆனால் அதற்கு மாற்று அளிக்க இயலாது" என்பதே நியாயப்பிரமாணத்தின் பிரச்சனையாக இருந்தது.[18]

"நியாயப்பிரமாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது" என்று கூறிய பவுல், அத்துடன் வாசகர்களைத் திகைப்பில் ஆழ்த்திய கூற்று ஒன்றையும் கூட்டினார்: "நியாயப்பிரமாணமில்லாவிட்டால் மீறுதலுமில்லை" (4:15ஆ). மீறுதல் [''violation''] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *parabasis* என்ற வார்த்தை, "சட்டவிரோதமாக நடத்தல்'' [''transgression''] என அடிக்கடி மொழிபெயர்க்கப்பட்டு இருக்கிறது.[19] இவ்வார்த்தை நியாயப்பிரமாணத்தை *நேரடியாக மீறுதல்* என்ற கருத்தை மறைமுகமாய்க் குறிப்பிடுகிறது.

ஒருவேளை நாம் பவுலின் சிந்தனையை விரித்துரைத்தால், அவரால் நுழைக்கப்பட்ட கருத்து பற்றி இன்னும் சிறப்பாக புரிந்துகொள்ள முடியும். ஆங்கிலத்திலோ அல்லது கிரேக்க மொழியிலோ, "நியாயப்பிரமாணம்" என்ற வார்த்தைக்கு முன்பாக திட்டவட்டச் சுட்டுச்சொல் இல்லை, எனவே பவுல் பொதுவான பிரமாணம் ஒன்றின் கொள்கையையே இங்கு குறிப்பிட்டார்.

- "நியாயப்பிரமாணமில்லாவிட்டால் மீறுதலுமில்லை." இதிலிருந்து நாம் நியாயப்பிரமாணம் *இருந்ததென்றால்* மீறுதலும் *இருக்கிறது* என்று முடிவுசெய்கிறோம்.
- எல்லா மனிதர்களுமே எழுதப்பட்ட அல்லது எழுதப்படாத பிரமாணம் ஒன்றைக் கொண்டுள்ளனர் - ஆனால் எவரொருவரும்

தாம் கொண்டுள்ள பிரமாணத்தை ஒருக்காலும் பூரணமாகக் கடைப்பிடித்தது இல்லை. நிறைவாக எல்லாருமே பிரமாணத்தை மீறியவர்களாகிறோம்.

- விஷயம் அப்படியிருப்பதால், பிரமாணம் என்பது எல்லாருக்கும் "கோபாக்கினையை" கொண்டுவருகிறது.

வசனம் 16ல் பவுல் பின்வரும் முடிவைக் கட்டியெழுப்பினார்: "ஆதலால் [நியாயப்பிரமாணம் ஆசீர்வாதத்தையல்ல, ஆனால் கோபாக்கினையைக் கொண்டுவருவதால்] … அது [வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்வது] விசுவாசத்தினாலே வருகிறது" நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமை கோபாக்கினையை மாத்திரமே உண்டாக்க முடியும் என்றால், வாக்குத்தத்தம் என்பது கிருபை/விசுவாசம் என்ற முறைமையினால் மாத்திரமே நிறைவேற்றப்பட முடியும். Goodspeed என்பவர் மொழிபெயர்த்த வேதாகமத்தில் இது "That is why it all turns upon faith" என்றுள்ளது.

பவுல், "ஆதலால் சுதந்தரமானது கிருபையினால் [*charis*] உண்டாகிறதாயிருக்கும்படிக்கு, அது விசுவாசத்தினாலே வருகிறது" என்று கூறினார் (வசனம் 16அ). பிலிப்ஸ் மொழிபெயர்ப்பு வேதாகமம் இதை, "a matter of faith on man's part and generosity on God's [part]" என்று தரவமைத்துள்ளது. வாக்குத்தத்தம் என்பது - ஆபிரகாம் செய்திருந்தவற்றிற்காக அல்ல, ஆனால் அவரது விசுவாசத்தின் அடிப்படையில் அவர்மீது - பொழியப்பட்ட *கொடையாக* இருந்தது. யூதர்கள் "இனத்தினால் அல்ல, ஆனால் கிருபையினால் இரட்சிக்கப்பட்டனர்"[20] என்பதை அவர்கள் அறிய வேண்டியிருந்தது (லூக்கா 3:7-9ஐக் காணவும்). நீங்களும் நானும்கூட, நமது இரட்சிப்பு "கிருபையினால் ஆனதாக இருப்பதற்கு அது விசுவாசத்தினாலே வருவதாக இருக்க வேண்டும்" என்பதைப் புரிந்துகொள்வது அவசியமாக உள்ளது!

"அநேக ஜாதிகளுக்குத் தகப்பன்"

> ஆதலால், சுதந்தரமானது கிருபையினால் உண்டாகிறதாயிருக்கும்படிக்கு, அது விசுவாசத்தினாலே வருகிறது; நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்களாகிய சந்ததியாருக்கு மாத்திரமல்ல, நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர்களான எல்லாச் சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும்படிக்கு அப்படி வருகிறது. அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான் (வசனங்கள் 16, 17).

"எல்லாச் சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும்படிக்கு," வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றம், விசுவாசம் மற்றும் கிருபை ஆகியவற்றின் மூலமாக வந்தது (ரோமர் 4:16ஆ). நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமையானது வாக்குத்தத்தத்தை *ஒன்றுமற்றதாக்கும்* (வசனம் 14), ஆனால் கிருபை/விசுவாசம் முறைமையானது அதை *நிச்சயமாக்குகிறது*. "சந்ததியார்" என்பது "விதை"

என்பதற்கான *sperma* என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது வழக்கமாக ஒன்று அல்லது அதற்கு அதிகமான மாம்சப்பிரகாரமான சந்ததி யார்களைக் குறிக்கிறது, ஆனால் இங்கு இந்தச் சொற்றொடர் *ஆவிக்குரிய* சந்ததி யார்களைக் குறிக்கிறது.

"நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்களாகிய சந்ததியாருக்கு [யூதர் களுக்கு] மாத்திரமல்ல, நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர்களான எல்லாச் சந்ததியாருக்கும்" உத்தரவாதம் ஏற்படுத்தப்பட்டது (வசனம் 16இ).[21] உத்தரவாதம் இயேசுவில் நம்பிக்கையை வைத்திருந்த யூதர்களுக்கு மாத்திரமல்ல, ஆனால் "... தகப்பனாகிய ஆபிரகாம் ... அடைந்த விசுவாசமாகிய அடிச்சுவடுகளில் நடந்தவர்களுக்கும்" தரப்பட்டது (வசனம் 12). இவ்வாறு ஆபிரகாம், "நம்மெல்லாருக்கும் [ஆவிக்குரிய] தகப்பன்" ஆனார்; அதாவது, யூதரோ புறஜாதியாரோ யாராயிருப்பினும், விசுவாசம் கொள்கிற யாவருக்கும் அவர் தகப்பன் ஆனார்.

இது ஆபிரகாமுக்குத் தரப்பட்ட வாக்குத்தத்தங்கள் ஒன்றில் முன்னு ரைக்கப்பட்டிருந்தது என்று பவுல் கூறினார்: " 'அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன்' என்று எழுதியிருக்கிறபடி" (வசனம் 17அ). ஆபிரகாமுக்கு தொண்ணூற்றொன்பது வயதானபோது அவருக்குத் தேவன் தரிசனமாகி அவருடன் தமது உடன்படிக்கையைப் புதுப்பித்துக்கொண்டதே இவ்விடத்தில் குறிக்கப்படுகிறது. அந்த வேளையில் தேவன் ஆபிரகாமிடத்தில், "... நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படுத்[துவேன்]" என்று கூறினார் (ஆதியாகமம் 17:5).

ஆபிரகாம் "அநேக மக்களினங்களுக்கு மாம்சப்பிரகாரமான தகப்பனாக" இருந்தார். அவர் தமது மகன் ஈசாக்கு மற்றும் தமது பேரன் யாக்கோபு ஆகியோர் மூலமாக இஸ்ரவேல் மக்களினத்திற்கு "தகப்பனாக" இருந்தார். இன்னொரு மகனான இஸ்மவேல், "அரபியர்களின் சந்ததியை உண்டாக்கியவர் [முன்னோர்] என்று கருதப்படுகிறார்."[22] அவர் கேத்தூராள் என்ற பெயர்கொண்ட இன்னொரு பெண் மூல மாக மற்ற மகன்களைக் கொண்டிருந்தார் (ஆதியாகமம் 25:1-4); இவர்களில் ஒருவர் மீதியானியர்களின் தகப்பனாக இருந்தார். ஆபிரகாமின் பேரன் ஏசாவினுடைய சந்ததியார்கள் ஏதோமியர்கள் ஆயினர் (ஆதியாகமம் 25:30ஐக் காணவும்).

இருப்பினும், ஆவியானவரால் வழிநடத்தப்பட்ட பவுல் ஆதியாகமம் 17:5ல் ஆவிக்குரிய முன்னுரைத்தல் ஒன்று பதியப்பட்டிருந்தது என்று கூறினார்: ஆபிரகாம் "அநேகஜாதிகளுக்கு *ஆவிக்குரிய* தகப்பனாக"வும் இருக்க வேண்டி இருந்தது. பவுல், வார்த்தைகளால் ஒரு விளையாட்டைக் கொண்டிருந்திருக்க வேண்டும். "ஜாதிகள்" என்பதற்கான கிரேக்க வார்த்தை *ethnos* என்பதன் ஒரு வடிவமாக உள்ளது. (இச்சொல்லில் இருந்துதான் நாம் "ethnic" என்ற வார்த்தையைத் தரவழைக்கிறோம்) - "புறஜாதியார்" என்பதற்கு *ethnos* என்பதே கிரேக்கவார்த்தையாகும். ரோமர் 4:17ல் உள்ள மேற்கோளை, "அநேக *புறஜாதி களுக்கு* உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன்" என்று நேரடியான அர்த்தத்தில் தரவழைக்க முடியும்! மெக்கார்டு என்பவர், "நாம் ஆபிரகாமுக்கு இரத்த சம்பந்த மான உறவினர்களாக இல்லாவிட்டாலும்கூட, [இவ்விதமாக] தேவன் உங்களையும் என்னையும் அனுமதித்தார்" என்று அகம் மகிழ்ந்தார்![23]

முடிவுரை

பிள்ளைகள் சிலவேளைகளில் "தகப்பனாகிய ஆபிரகாம்" பற்றிப் பின்வருமாறு பாடுகின்றனர்:

> தகப்பனாகிய ஆபிரகாமுக்குப் பலமகன்கள் இருந்தனர்;
> பலமகன்கள் தகப்பனாகிய ஆபிரகாமைக் கொண்டிருந்தனர்; அவர்களில் ஒருவன் நான்
> நீங்களும் அவ்வாறே,
> எனவே நாம் யாவரும் கர்த்தரைத் துதிப்போமாக![24]

சிறுவர்கள் இப்பாடலில் அடங்கியுள்ள ஆச்சரியமான சத்தியம் இன்னதென்று உணர்ந்தறியாமலேயே இதைப்பாடுவதில் மகிழ்ச்சி அடைகின்றனர்!

நமது பாடத்திற்குரிய வசனப்பகுதியில், நாம் ஆபிரகாமின் பிள்ளைகளாக இருப்பதற்கு விருத்தசேதனம் ஏதொன்றையும் செய்வதில்லை என்று வலியுறுத்தினார் - ஏனெனில் ஆபிரகாம் விருத்தசேதனச்சடங்கு ஏற்படுத்தப்படுவதற்குக் குறைந்தபட்சம் பதினான்கு ஆண்டுகளுக்கு முன்னதாகவே விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டார். மோசேயின் நியாயப்பிரமாணமும் இதற்கு ஒன்றும் செய்வதற்கில்லை, ஏனென்றால் ஆபிரகாம் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்குப் பலநூற்றாண்டுகள் முன்னதாகவே விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டிருந்தார். இல்லை, ஆபிரகாமின் விசுவாசத்துடன் ஒப்பிடக்கூடிய *விசுவாசத்தை* நாம் கொண்டிருக்கையில், அவர் நமது ஆவிக்குரிய தகப்பனாக இருக்கிறார். வேறொரு இடத்தில் பவுல் இதைப் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. ... நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத் தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள் (கலாத்தியர் 3:26-29).

நமது அடுத்தப்பாடத்தில், நாம் ஆபிரகாம் கொண்டிருந்த விசுவாசத்தை இன்னும் நெருக்கமாக ஆராய்வு செய்வோம். இந்தப்பாடத்தை நாம் முடிக்கும் இவ்வேளையில், "ஆபிரகாம் உங்கள் தகப்பனாக *இருக்கிறாரா?*" என்று நான் கேட்கிறேன். அதாவது, ஆபிரகாம் கொண்டிருந்தது போன்ற விசுவாசத்தை நீங்கள் கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் உண்மையிலேயே தேவனை நம்புகிறீர்களா? அவர் வாக்குத்தத்தம் செய்துள்ளவற்றை நிறைவேற்றுவார் என்று நீங்கள் நம்புகிறீர்களா? ஆபிரகாமைப் போலவே நீங்களும் உங்கள் விசுவாசத்தைச் செயலாக்க மனவிருப்பமாக இருக்கிறீர்களா? நீங்கள் இயேசுவில் கொண்டுள்ள விசுவாசத்தை, அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல் மூலம் (லூக்கா 6:46; மத்தேயு 7:21; மாற்கு 16:16 ஆகியவற்றைக் காணவும்) இன்னமும் வெளிப்படுத்தாமல் இருந்தால், *உடனே* அதைச் செய்யும்படி நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

குறிப்புகள்

[1]Jim Townsend, *Romans: Let Justice Roll* (Elgin, Ill.: David C. Cook Publishing Co., 1988), 31. [2]Hugo McCord, discussion of Romans 4:13-25 presented to students at Oklahoma Christian College (now University), n.d., cassette. [3]*இது ஈசாக்கை ஒரு பலிபீடத்தின்மீது பலியிடும்படிக்கு தேவன் ஆபிரகாமுக்குக் கட்டளை இட்டதற்கான ஒரு குறிப்பாகும்.* [4]*ரோமர் 4 மற்றும் கலாத்தியர் 3 ஆகியவற்றிற்கு இடையில் பல ஒற்றுமைகள் உள்ளன. ரோமர் 4 பற்றிய பாடத்தைத் தொடருவதற்கு முன்பு நீங்கள் கலாத்தியர் 3ஐ வாசிக்க விரும்பலாம்.* [5]*விருத்தசேதனம் பற்றிய அவர்களின் எண்ணப்போக்கிற்கு, நடபடிகள் 15:1ல் யூதக்கிறிஸ்தவர்கள் சிலரால் ஏற்படுத்தப்பட்ட விளக்கத்தைக் காணவும்.* [6]*மூல மொழி வசனத்தில் "விருத்தசேதனம்" மற்றும் "விருத்தசேதனம் இல்லாமை" என்ற நேரடி அர்த்தம் வரும் வார்த்தைகளே உள்ளன.* [7]*வேதாகமத்தில் நிகழ்ச்சிகள் நாள்வரிசை முறைப்படியே எப்போதும் அமைக்கப்பட்டிருப்பதில்லை, ஆனால் நிகழ்ச்சிகளின் இவ்வரிசைத்தொடர் தொடர்பாக ஆபிரகாமின் வயதுகள் தரப்பட்டுள்ளன (ஆதியாகமம் 12:4; 16:3, 16; 17:1 ஆகியவற்றைக் காணவும்). ரபீத்துவ நாள்வரிசை முறைமையின்படி, ஆதியாகமம் 15:6 மற்றும் 17ல் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு இடையில் இன்னும் அதிக நாட்கள் - இருபத்தி ஒன்பது ஆண்டுகள் - இருந்ததாகக் கருதப்படுகிறது.* [8]LXXல் *"அடையாளம்" என்பதற்கு இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை ரோமர் 4:11ல் பயன்படுத்தப்பட்டுள்ள அதே வார்த்தையாக உள்ளது.* [9]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World*, The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 129. [10]Douglas J. Moo, *Romans*, The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 154.

[11]Adapted from Richard A. Batey, *The Letter of Paul to the Romans*, The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 60. [12]F. F. Bruce, *The Letter of Paul to the Romans,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 108. [13]*"சந்ததி" என்பது "விதை" என்பதற்கான sperma என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "சந்ததிகள்" என்பது பற்றிய 4:16ன்மீதான குறிப்புகளைக் காணவும்.* [14]*ஆபிரகாமும் அவரது சந்ததியாரும் கானான் நாட்டைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்பது மாத்திரமே ஆபிரகாமுக்குத் தரப்பட்டிருந்த நாடு (உடைமை) பற்றிய ஒரே வாக்குத்தத்தமாக இருந்தது. இந்த வாக்குத்தத்தம் பழைய ஏற்பாட்டுக் காலகட்டத்திலேயே நிறைவேற்றப்பட்டுவிட்டபடியால், இது இனியும் நிறைவேற்றப்படத் தேவையில்லை. ஒரு காலகட்டங்களில், இஸ்ரவேல் ராஜ்யமானது மத்தியதரைக்கடல் பகுதியில் இருந்து ஐப்பிராத்து நதி வரைக்கும் பரவியிருந்தது, (ஆதியாகமம் 15:18; 2 சாமுவேல் 8:3; 1 இராஜாக்கள் 8:65 ஆகிய வசனங்களைக் காணவும்.)* [15]*நியாயப்பிரமாணம் மோசேக்கு வெளிப்படுத்தப்படுவதற்குப் பல நூற்றாண்டுகள் முன்னதாகவே அது ஆபிரகாமுக்கு வெளிப்படுத்தப்பட்டாயிற்று என்று யூத போதகர்கள் வலியுறுத்தினர், ஆனால் பவுல் இதை மறுத்தார்.* [16]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 228. [17]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 3. [18]J. D. Thomas, *Romans*, The Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1965), 34. [19]இவ்வார்த்தை NASB வேதாகமத்தில், *கலாத்தியர் 3:19; 1 தீமோத்தேயு 2:14 மற்றும் எபிரெயர் 2:2; 9:15 ஆகிய வசனங்களில்* "transgression[s]" *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* [20]Dave Miller, sermon presented on the *Truth in Love* television program, Fort Worth, Texas, 23 January 2002.

[21]*இவ்வசனத்தில் "நியாயப்பிரமாணம்"என்ற வார்த்தைக்கு முன்னால் திட்டவட்டமான சுட்டுச்சொல் உள்ளது, எனவே பவுல் யூதர்களைப் பற்றிக் குறிப்பாகப் பேசினார். சிலர் 16ம் வசனம் இரண்டு வகைப்பட்ட இரட்சிப்பு உள்ளதென்று போதிப்பதாக்கவதற்கு*

முயற்சிசெய்துள்ளனர்: யூதர்களுக்கு ஒன்றும் புறஜாதியாருக்கு ஒன்றும். இந்த அதிகாரம் முழுவதையும் வாசித்துவிட்டு இவ்வாறான முடிவை எவரொருவரும் எவ்வாறு எடுக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. இயேசுவின்மீது தங்கள் நம்பிக்கையை வைத்திருந்த யூதர்களையே பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தார். [22]William Baur and Roland K. Harrison, "Ishmael," *The International Standard Bible Encyclopedia*, rev. ed., ed. Geoffrey Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:905. [23]McCord. [24]Author unknown (http://www.kididdles.com/mouseum/f033.html; Internet; accessed 11 November 2004).

19

ஆபிரகாமின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல்

[4:17ஆ-25]

ரோமர் 4ல், "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது (வசனம் 3). நாம் "நமது தகப்பனாகிய ஆபிரகாமின் விசுவாசத்தின் அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாய்" இருக்க வேண்டும் என்று நமக்கு அறைகூவல் விடப்பட்டது (வசனம் 12).[1] நான் இவ்வார்த்தைகளை வாசிக்கையில், தனது தகப்பனுடைய அடிச்சுவடுகளில் தனது பாதங்களைப் பதிக்கத் தனது கால்களை அகட்டிவைத்து நடந்து தனது தந்தையைப் பின்பற்றிய ஒரு சிறு பையனைப் பற்றி நான் நினைத்துப் பார்க்கிறேன். எங்கள் மருமகன் டான் லவ்ஜாய் சமீபத்தில் தனது முதல் "தந்தையர்கள் தினத்தை" கொண்டிருந்தார்.[2] எங்கள் மகள் ஆஞ்சி, அவருக்கு ஒரு வாழ்த்து அட்டையைத் தயாரித்திருந்தாள், அதில் டானின் பெரிய ஷூக்களும், அவற்றிற்குப் பின்னால் அவர்களின் மகன் எலிசாவின் சிறிய ஷூக்களும் சித்தரிக்கப்பட்டிருந்தன. அந்தப்படத்தின் கீழ் இருந்த தலைப்பு, "அப்பா, நான் உங்கள் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறேன்" என்றிருந்தது. டான், "அது இனிமையானதாக - மற்றும், சற்றே அச்சுறுத்தக்கூடியதாக - இருந்தது" என்று கூறினார்.

"ஆபிரகாமின் விசுவாசத்தின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல்" என்பது எதை அர்த்தப்படுத்திற்று? ரோமர் 4ன் கடைசிப்பகுதியில், பவுல் ஆபிரகாமின் விசுவாசத்தினுடைய இயல்பு பற்றிக் கலந்துரையாடினார். ரிச்சர்டு பேட்டி என்பவர், "இங்கு பவுல் தமது எழுத்துக்களில் வேறெவ்விடத்திலும் இல்லாத அளவுக்கு விசுவாச விளக்கம் ஒன்றை முன்வைக்கிறார்.[3] அவரது விளக்கம் கவனக்குறைவாகவோ அல்லது கல்வியியல் வகையிலோ ஏற்படுத்தப்படவில்லை, ஆனால் அது ஆபிரகாமின் விசுவாசத்தின் பண்பு வெளிக்காண்பிக்கப்பட்டதான அவரது பதில்செயல் பற்றிய விவரிப்பாக உள்ளது" என்று எழுதினார்.[4] இந்தப்பாடத்தில் நாம் ஆபிரகாமின் விசுவாசத்தைப் பற்றிப் பவுல் கூறியது என்ன என்று ஆராய்வு செய்வோம். நாம் அதைச் செய்கையில், நீங்களும் நானும் இவ்வகையான விசுவாசத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதைச் சிந்தையில் வைத்துக்கொள்ளுங்கள்.

ஆபிரகாமின் விசுவாசம் (4:17ஆ-22)

தேவனுடைய நபர்த்துவத்தில் விசுவாசம் (வசனம் 17ஆ)

எல்லாவற்றிற்கும் முதலாவதாக, நாம் ஆபிரகாம் தேவனுடைய

நபர்த்துவத்தில் கொண்டிருந்த விசுவாசத்தைக் கவனிப்போமாக. நமது வசனப்பகுதியானது 17ம் வசனத்தின் பிற்பகுதியில் இருந்து தொடங்குகிறது. அது ஒரு வாக்கியத்தின் நடுவில் உள்ளது - எனவே நாம் அவ்வாக்கியத்தின் தொடக்கம் முதல் திரும்பிக் காணவேண்டியுள்ளது:

> ஆதலால், சுதந்தரமானது கிருபையினால் உண்டாகிறதாயிருக்கும் படிக்கு அது விசுவாசத்தினாலே வருகிறது; நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்களாகிய சந்ததியாருக்கு மாத்திரமல்ல, நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர்களான ஆவிக்குரிய எல்லாச் சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமா யிருக்கும்படிக்கு அப்படிவருகிறது (வசனம் 16).

16ம் வசனத்தின் கடைசிக்கூற்றிற்குப் பவுல் ஆவிக்குரிய உறுதிப்பாட்டைக் கொடுத்தபின்பு (வசனம் 17அ வைக் காணவும்), அவர் இந்தப்பாடத்திற்கான வசனப்பகுதியின் முதல் வார்த்தைகளைக் கூட்டினார். ஆபிரகாம் "தான் விசுவாசித்தவருமாய் ... இருக்கிற தேவனுக்கு முன்பாக" நம்மெல்லாருக்கும் தகப்பனாக இருக்கிறார் என்று அவர் [பவுல்] கூறினார் (வசனம் 17). "தேவன்" என்ற வார்த்தையை அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள்; ஆபிரகாம் *தேவனை* விசுவாசித்தார்.

இவ்வசனப்பகுதியானது, தேவனைப்பற்றி ஆபிரகாம் விசுவாசித்த இரண்டு சத்தியங்களைக் குறிப்பிடுகிறது: "மரித்தோரை உயிர்ப்பித்து,[5] இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவன்" (வசனம் 17இ, ஈ). "மரித்தோரை உயிர்ப்பித்து" (வசனம் 17ஆ) என்ற இச்சொற்றொடர், சந்தர்ப்பப்பொருளில், ஆபிரகாம் மற்றும் சாராள் ஆகியோரின் "செத்த" சரீரங்களை (வசனம் 19இ) குறிக்கிறது; தேவன் அவர்களின் சரீரங்களை "உயிர்ப்பித்து" அவர்கள் ஒரு மகனைப் பெறக்கூடியவர்கள் ஆக்குவார். அங்கு, ஆபிரகாமின் வாழ்வில் பிற்பாடு, அவர் தமது மகன் ஈசாக்குவைப் பலியிடும்படி அழைக்கப்பட்டதற்கான குறிப்பும்கூட இருக்கலாம் (ஆதியாகமம் 22). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், ஆபிரகாம் "மரித்தோரிலிருந்து மெழுப்பத் தேவன் வல்லவராயிருக்கிறாரெண்ணி"ய காரணத்தினால் அவர் அந்தச்சோதனையை எதிர்கொள்ள முடிந்தது என்று கூறினார் (எபிரெயர் 11:18ஆ). "மரித்தோரை உயிர்ப்பித்து" என்ற சொற்றொடர் இவ்வதிகாரத்தின் கடைசி வசனத்தில் மீண்டும் எதிர்ப்பார்க்கப்படலாம், அது கிறிஸ்து மரித்தோரில் இருந்து உயிர்த்ததைப்பற்றிப் பேசுகிறது (ரோமர் 4:25).

தேவன் மரித்தோரை உயிர்ப்பிக்க *முடியும்* என்று ஆபிரகாம் விசுவாசித்தது குறிப்பிடத்தக்கதாக உள்ளது. தேவன் ஆபிரகாமுக்குத் தரிசனமாகியிருந்தார்; அதைத்தவிர, ஆபிரகாம் கவனித்திருந்த அற்புதம் என்று நாம் எதையும் அறிவ தில்லை. ஏறக்குறைய நிச்சயமாகவே, அவர் மரித்தோரில் இருந்து உயிர்ப் பிக்கப்பட்ட எவரையும் ஒருக்காலும் கண்டிருந்ததில்லை. இருந்தபோதிலும் ஆபிரகாம், தேவன் தேவனாக இருந்தார் - மற்றும் தேவன் விரும்பினால் அவர் மரித்தோரை உயிர்ப்பிக்க முடியும் - என்று விசுவாசித்தார்!

மீண்டுமாக ஆபிரகாம், "இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற" தேவனில் விசுவாசம் கொண்டார் (வசனம் 17ஈ). இது தேவன் முன்பு இருந்திராத உலகத்தை இருக்க செய்வதற்குப் பேசிய இடமான

ஆதியாகமம் 1ம் அதிகாரத்தைக் குறிப்பதாக இருக்கலாம். சந்தர்ப்பப்பொருளில் இது அனேகமாக, ஆபிரகாமுக்குத் தரப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பற்றிப் பேசுவதாக இருக்கலாம். ஆபிரகாமின் மகன் ஈசாக்கு இருக்கவில்லை, ஆனால் அவரை இருக்கும்படி தேவன் அழைத்தார். தேவன் இல்லாதிருந்த மக்களினம் ஒன்றை (இஸ்ரவேல்) இருக்கும்படி அழைத்தார் (ஆதியாகமம் 12:2; 46:3). தேவன், ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியை (கிறிஸ்தவர்களை)யும்கூடக் குறிப்பிட்டார் மற்றும் கடைசியாக, கிறிஸ்துவின் மூலமாக அவர்களை இருக்கிறவர்களாக அவர் அழைத்தார் (கலாத்தியர் 3:29).

ஆபிரகாமைப் பொறுத்தமட்டில், தேவன் ஏதேனும் கூறினார் என்றால், அது செய்யப்பட்டு முடிந்ததாக இருந்தது. ஏதேனும் ஒரு விஷயம் நடக்கும் என்று தேவன் கூறினார் என்றால், அது - எந்தக் கேள்வியுமின்றி - *நடக்கும்.*

ஆபிரகாமின் விசுவாசம், அவர் *தம்மீது* கொண்டதாயிராமல், *தேவன் மீது* கொண்டதாக இருந்தது. ஆபிரகாமின் விசுவாசம் அவரது *விசுவாசமாகக்கூட* இராமல், அவரது கர்த்தர்மீதானதாயிருந்தது. நம்மில் சிலர் கவனமாயிருக்கவில்லை என்றால், நமது விசுவாசத்தின் பெலமே மிகவும் முக்கியமானதென்று நினைக்கத் தொடங்கும் அளவுக்கு கிரியைகளைச் சார்ந்தவர்களாக இருக்கிறோம். விசுவாசம் “பெலவீனமானதாகவோ” (வசனம் 19) அல்லது “பெலமானதாகவோ” (வசனம் 21) இருக்கலாம், மற்றும் நமது விசுவாசம் வளர வேண்டியது அவசியமாக உள்ளது (வசனம் 21ஐக் காணவும்).[6] இருந்தபோதிலும், நீதிமானாக்கப்படுதலைப் பற்றி, நமது விசுவாசத்தின் அளவோ அல்லது பண்போ நமது விசுவாசத்தின் *கவனக்குவிப்பு அளவுக்கு* முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதில்லை. ஒருவேளை, நான் கூறமுயற்சிப்பதைப் புரிந்துகொள்ள ஒரு விவரிப்பு உங்களுக்கு உதவும்.

நீங்கள் கடந்து செல்ல வேண்டியதான ஒரு ஆழமும் அகலமுமான பிளவு ஒன்றிற்கு நீங்கள் வந்து சேர்ந்திருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். மறுபுறம் சென்று சேர்வதற்கான மூன்று அணுகுமுறைகளை காட்சியில் பாருங்கள். நீங்கள் குறுக்காகக் குதிக்க முயற்சி செய்யலாம்; இது சுயத்தில் கொண்டுள்ள விசுவாசத்தைச் சித்தரிக்கக்கூடும். (நீங்கள் செல்ல முயற்சிக்கிறீர்கள், ஆனால் ஐயோ பாவம், பிளவின் ஆழத்தில் விழுந்துவிடுகிறீர்கள்!) இரண்டாவதாக, பள்ளத்தாக்கின் மேலே உறுதியாகக் கட்டப்பட்டுள்ள நீளமான கயிறு ஒன்றைப் பிடித்து அதில் தொங்கி ஊஞ்சலாடி அதைக் கடக்கும் அணுகுமுறை உள்ளது. நீங்கள் கயிற்றின் ஒரு முனையைப் பற்றிக்கொண்டு குறுக்கே ஊசலாடுகிறீர்கள். இந்த முறையானது இரட்டை விசுவாசக் கவனக்குவிப்பாக உள்ளது: அந்தக் கயிறு உங்களைத் தாங்கும் என்று நீங்கள் நம்புகிறீர்கள் மற்றும் உங்கள்மீதும் - அதாவது, நீங்கள் மறுபுறம் பத்திரமாகச் சென்று சேரும்வரையில் அதைப் பற்றிக்கொள்ள முடியும் என்று நீங்கள் நம்பிக்கையாக இருக்கிறீர்கள்.





நீங்கள் ஆழ்ந்து சிந்திக்கும்படியாக நான் விரும்புகிற மூன்றாவது அணுகு முறை என்பது அந்தப் பிளவினூடே உள்ள ஒரு பாலம் பற்றியதாக இருக்கிறது. பிளவைக் கடக்கும்போது அந்தப்பாலம் உங்களைத் தாங்கிக்கொள்ளும் என்று நீங்கள் நம்புவதால், அதன்குறுக்காக நீங்கள் நடந்து செல்லுகிறீர்கள். உங்களின் விசுவாசம் உங்களைத் தாங்குவதில்லை, ஆனால் அந்தப்பாலமே உங்களைத் தாங்குகிறது. ஒருவேளை நீங்கள் தைரியமாகக் கடந்து செல்லலாம், அல்லது ஒரு வேளை நீங்கள் பதட்டத்துடன் கடந்து செல்லலாம். எவ்வகையிலும், உங்கள் விசுவாசத்தின் அளவோ அல்லது பண்போ உங்களைத் தாங்குவதில்லை, ஆனால் அந்தப்பாலமே உங்களைத் தாங்குகிறது.



ஆபிரகாமின் விசுவாசத்தினுடைய கவனக்குவிப்பு, அவர் தம்மீதே கொண்டிருந்ததில்லை என்று வலியுறுத்தவே நான் விரும்புகிறேன். அவர் தம்மீது கொண்டிருந்த விசுவாசமாகக்கூட இருக்கவில்லை. (நாம் காணப்போகிறபடி, ஆபிரகாமின் விசுவாசமானது பூரணப்பட்டநிலையில் இருந்து தொலைவில் இருந்தது.) மாறாக, ஆபிரகாம் *தேவன்மீது* விசுவாசம் கொண்டிருந்தார் (வசனம் 17ஆ). அதுபோலவே நமது விசுவாசத்தின் கவனக்குவிப்பும் தேவன்மீதே இருக்க வேண்டும். நாம் ஆவிக்குரியவகையில் மரித்தவர்களாக இருக்கும்போதுகூட அவர் நமக்கு ஜீவன் தரமுடியும் (எபேசியர் 2:5). ஒருநாளில் அவர், மரித்த நமது உடல்களுக்குப் புதிய ஜீவனை அளிப்பார். மற்றும் நாம் பாவிகளாயிருக்கும்போதுகூட, அவர் நம்மைக் கண்கொண்டு பார்க்கவும் நமது வாழ்வில் உள்ள ஆற்றல்களைக் காணவும், "இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கவும்" முடியும்.

தேவனுடைய வல்லமையின்மீது விசுவாசம் (வசனங்கள் 18, 19)

ஆபிரகாமின் விசுவாசம் தேவன்மீது நிலைத்திருந்த காரணத்தால், "உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்" (ரோமர் 4:18). இவ்வசனத்தை நாம் முழுவதுமாகப் பார்ப்பதற்கு முன்னர், "நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும் நம்பிக்கையோடே விசுவாசித்தான்" என்ற சொற்றொடர்மீது நாம் சற்று நேரத்தைச் செலவிடுதல் அவசியமாக உள்ளது (வசனம் 18ஆ).

ரோமருக்கு எழுதிய நிருபத்தில் "நம்பிக்கை" என்ற வார்த்தையை இங்குதான் நாம் முதன்முதலாக எதிர்கொள்கிறோம், ஆனால் இதுவே கடைசிமுறையாக இருப்பதில்லை (5:2, 3, 5; 8:20, 24, 25; 12:12; 15:4, 12, 13, 24). "நம்பிக்கை" என்பது *elpis* என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது, இது "தீர்மானமாக பவுலின்[7] வார்த்தையாகும், ... புதிய ஏற்பாட்டின் வேறு எந்தப் புத்தகத்தைக்காட்டிலும் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இவ்வார்த்தை மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது."[8] நம்பிக்கை என்பது விசுவாசத்துடன் நெருங்கிய தொடர்புடையதாகும் (எபிரெயர் 11:6), ஆனால் அவை இரண்டும் ஒன்றல்ல. பவுல் இங்கு எழுதிய நம்பிக்கை என்பது *விருப்பத்தையும் எதிர்பார்ப்பையும்*

ஒன்றிணைக்கிறது; நம்பிக்கை ஏற்பட இவ்விரண்டும் தேவைப்படுகிறது.[9] நான் பத்து லட்சம் ரூபாய் வேண்டும் என்று விரும்பலாம்; ஆனால் அதைப்பெறுவேன் என்று நான் எதிர்பார்ப்பதில்லை என்பதால் அது நம்பிக்கையாக இருப்பது இல்லை. தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி சாவுக்கேதுவான ஊசிபோடப்பட்டு இறப்பதை எதிர்பார்த்திருக்கலாம்; ஆனால் அவர் அதை விரும்புவதில்லை, எனவே அதுவும் நம்பிக்கையாவதில்லை. கிறிஸ்துவுக்குள் நாம் நம்பிக்கை கொண்டவர்களாயிருக்கிறோம்: இது விருப்பமும் எதிர்பார்ப்பும் *ஒன்றுகூடிய* நிலையாகும்.

பவுல், "நம்பிக்கைக்கு மேலான நம்பிக்கையில்" விசுவாசம் வைத்தல் பற்றிப் பேசினார்: *பூமிக்குரிய* கருத்தமைவில் இருந்து பார்க்கையில், ஆபிரகாம் தனக்கு ஒரு மகன் இருப்பான் என்ற நம்பிக்கை இல்லாதிருந்தான். அவர் ஒரு மகன் வேண்டுமென்று *விரும்பினார்,* ஆனால் "சரீரம் செத்துப்போன" நிலையில் (ரோமர் 4:19), அவர் ஒரு மகனை எதிர்பார்க்கப் பூமிக்குரிய வகையில் நியாயம் எதுவும் இல்லாதிருந்தது. இருந்தபோதிலும் *பரலோகத்தின்* கருத்தமைவில் இருந்து பார்க்கையில், அவர் திரளான சந்ததியாரைப் பெறுவார் என்று தேவன் உரைத்திருந்தார், எனவே ஆபிரகாம் ஒரு மகனைப்பெற விரும்பியது மாத்திரமின்றி, அதை *எதிர்பார்த்தும் இருந்தார்.* இவ்வித மாகப் பவுல், "நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்" என்று கூறினார் (வசனம் 18). யூஜீன் பீட்டர்ஸன் என்பவர் இதைப் பின்வருமாறு பொழிப்புரை செய்தார்: "எல்லாம் நம்பிக்கையற்று இருந்தபோது, ஆபிரகாம் இருந்தாலும் விசுவாசித்தார் ..." (MSG).

"உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்கு [ஆவிக்குரிய மற்றும் மாம்சப்பிரகாரமான] தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை [ஆபிரகாம்] நம்பிக்கையோடே விசுவாசித்தான்" (வசனம் 18). இவ்வசனத்தில் உள்ள "அநேக ஜாதிகளுக்குத் தகப்பன்" என்ற குறிப்பு, ஆதியாகமம் 17:4, 5ல் இருந்து வருகையில், மேற்கோளானது ஆதியாகமம் 15:5ல் இருந்து வருகிறது. அங்கு தேவன் ஆபிரகாமிடத்தில், அவரது சந்ததிகள் வானத்தின் நட்சத்திரங்களைப்போலக் கணக்கற்றிருக்கும் என்று கூறியிருந்தார். இந்த வாக்குத்தத்தம் - நிறைவேற்றப்படக்கூடிய வகை எதுவும் காணப்படாதிருந்தும் இது - உண்மையாகும் என்று ஆபிரகாம் நம்பிக்கை கொண்டிருந்தார்.

உலகத்தின் மக்களுக்கு, இவ்வகையான விசுவாசம் தர்க்கப்பொருத்த மற்றதாக, பகுத்தறிவற்றதாக உள்ளது. இப்படிப்பட்ட விஷயமானது, "உண்மைத்தன்மையுடன் தொடர்பற்று" உள்ளது என்று வலியுறுத்துகின்றனர், அது "உண்மைகளை எதிர்கொள்ளத்தவறுவதில்" இருந்து விளைகிறது என்று அவர்கள் கூறுகின்றனர். அடுத்த வசனமானது, இப்படிப்பட்டது ஆபிரகாமின் விஷயத்தில் உண்மையாயிருக்கவில்லை என்று உறுதிப்படுத்துகிறது: "அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை,[10] அவன் ஏறக்குறைய நூறுவயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான்" (4:19). இவ்வசனத்தை ஆராய்வதில் ஒரு சிரமம் இருத்தல் பற்றி நாம் அறிவது அவசிய மாக உள்ளது:

> *"அவன் தன் சரீரம் செத்துப்போனதாக எண்ணினான்" என்று வாசிப்பதா அல்லது "அவன் தன் சொந்த சரீரம் இப்போது செத்துப்போகவில்லை என்பதாக எண்ணினான்" என்று வாசிப்பதா என்பது பற்றி வசனரீதி யான உறுதியற்ற தன்மை உள்ளது. இவ்விரு வாசிப்புகளும், ஒன்று மற்றொன்றை ஒன்றுமற்றதாக்குகிறது, [ஆயினும்] இவ்விரண்டுமே உறுதிப்படுத்தப்பட்டவையாக, ஒவ்வொன்றும் நல்ல கருத்தைக் கொடுப்பதாக உள்ளது என்பது மனதைக்கவரக் கூடியதாகும். ஒன்றின் விஷயத்தில், ஆபிரகாம் தனது உடலைச்செத்ததாக எண்ணவில்லை, ஏனெனில் தேவன் அதன்மூலமாகத் தமது சித்தத்தை நடப்பிப்பார். இன்னொன்றின் விஷயத்தில் அவர் தமது உடலின் இயலாத்தன்மையை முழுமையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அதன்மூலமாய்த் தேவன் தமது சித்தத்தை நடப்பிப்பார் என்ற கருத்தைப்பற்றிக் கொண்டிருந்தார்.[11]*

இவ்வசனத்தை ஒருவர் எவ்வகையில் எடுத்துகொண்டாலும், தொண்ணூற்றொன்பது வயது நிறைந்த ஆபிரகாம் ஒரு மகனைப் பெறுவார் என்று அவரிடத்தில் தேவன் உரைத்தபோது (ஆதியாகமம் 17:1, 16), அவர் பிள்ளைகளுக்குத் தகப்பனாவதைப் பொறுத்தவரையில், தமது சரீரம் "செத்துப்போனது [nekroo என்பதன் ஒரு வடிவம்]" என்ற உண்மையைப் புறக்கணிக்கவில்லை (எபிரெயர் 11:12 உடன் ஒப்பிடவும்). அதுபோலவே அவர் "சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனது [nekroo என்பதன் ஒரு வடிவம்]" என்பதையும் புறக்கணிக்கவில்லை. சாராளின் கர்ப்பம் எப்போதும் "செத்துப்போனதாக" இருந்தது, ஆனால் பிள்ளைகளைப் பெறுதல் என்பதைப் பொறுத்தவரையில், ஆபிரகாமின் சரீரம் "இப்போது" செத்துப்போயிருந்தது. கடந்த நாட்களில் அவரது சரீரம் பிள்ளைகளைப் பெறுதல் என்பதைப் பொறுத்தவரையில் "செத்துப்" போயிருந்ததில்லை (ஆதியாகமம் 16:4அ), ஆனால் இப்போது அது செத்துப்போயிருந்தது.[12]

ஆபிரகாம் "உண்மைகளை" கண்டார்: அவரும் சாராளும் சரீரரீதியாகப் பிள்ளைகளைப் பெறக்கூடாதிருந்தனர். அவர் "உண்மையை" எதிர் கொண்டார்: அவர் சந்ததிகளைப் பெறுவதற்குப் பூமிக்குரிய வழியெதுவும் இருக்கவில்லை. இருந்தபோதிலும், அவர் தாமும் சாராளும் ஒரு மகனைப் பெற்றுக்கொள்வோம் என்றும், தமது சந்ததி நட்சத்திரங்களைப் போலவே எண்ணற்றதாக இருக்கும் என்றும் நம்பினார். ஏன்? ஏனென்றால் சரீரப்பிரகாரமான உண்மைகளே எல்லா உண்மைகளுமாக இருப்பதில்லை என்பதை அவர் உணர்ந்தறிந்தார்; உண்மையில் அவைகள் கிடைக்கிற உண்மைகளில் மிகவும் அற்பமுக்கியத்துவம் உடையவையாகும். மற்றும், அவர் இந்த பூமியின் உண்மைநிலையின் இடத்தைக் கைப்பற்றும் உண்மைநிலையொன்று உள்ளது என்று உணர்ந்தறிந்தார்: அது தேவனுடைய உண்மைநிலையாகும். சரீரப்பிரகாரமான உண்மைகளையும் பூமிக்குரிய உண்மை நிலையையும் ஆபிரகாம் புறக்கணிக்கவில்லை, ஆனால் அவர் அவற்றினால் பயமுறுத்தப்படவோ மட்டுப்படுத்தப்படவோ மறுத்து விட்டார். அவர் சர்வவல்லவராகிய தேவனை விசுவாசித்தார், அந்த தேவன் தாம் கூறியதைச் செய்ய வல்லவராயிருக்கிறார் என்று விசுவாசித்தார் (ரோமர் 4:17; ஆதியாகமம் 17:1; லூக்கா 1:37ஆகியவற்றைக் காணவும்).

நாம் ஆபிரகாமின் விசுவாசத்தினுடைய அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாக இருந்தால், நாம் நம்மைச் சுற்றிமாத்திரமல்ல ஆனால் மேல்நோக்கி - தேவனையும்

- காணவேண்டும். வாழ்வின் பிரச்சனைகளை நாம் புறக்கணித்துவிடலாகாது, ஆனால் அவற்றினால் மூழ்கடிக்கப்படுவதை நாம் மறுத்துவிட முடியும். நாம் ஒரு *வல்லமையுள்ள* தேவனை, அன்புகூருகிற பிதாவைக் கொண்டுள்ளோமே. எரேமியா "உம்மாலே [தேவனாலே] செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை" என்று கூறினார் (எரேமியா 32:17இ). மரியாளிடத்தில் தூதன், "தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை" என்று கூறினார் (லூக்கா 1:37). நாம், "தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்க" கற்றுக்கொள்ள வேண்டும் (2 கொரிந்தியர் 5:7).

தேவனுடைய வாக்குத்தத்தங்களில் விசுவாசம் (வசனங்கள் 20, 21)

ஆபிரகாம் தேவனுடைய வல்லமையின்மீது விசுவாசம் கொண்டதோடு நின்றுவிடவில்லை; அவர் தேவனுடைய வாக்குத்தத்தங்களில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்: "தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல்" (ரோமர் 4:20). "தேவனுடைய வாக்குத்தத்தம்" என்பது ஆபிரகாமும் அவரது சந்ததியார்களும் "உலகத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்" (வசனம் 13) என்பதாகும், இது ஆபிரகாம் ஒரு மகனையும் பல சந்ததிகளையும் பெறுவார் என்பது உட்பட்டிருந்த வாக்குத்தத்தங்களின் "பொதி" ஆகும். அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுதல் என்பது சாத்தியமற்றதாகக் காணப்பட்டாலும், அந்த முற்பிதா "அவிசுவாச மாய்ச் சந்தேகப்படவில்லை." ஆங்கில வேதாகமத்தில் இவ்விடத்தில், "did not waver in unbelief" என்றுள்ளது, இதில் உள்ள "waver" என்ற வார்த்தை, "தயங்குதல்" அல்லது "சந்தேகப்படுதல்" என்று அர்த்தப்படுகிற *diakrino* என்ற கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[13]

ஆபிரகாம் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படுவதற்குப் பதிலாக, "விசுவாசத்தில் வல்லவரானார்" (வசனம் 21ஆ). "வல்லவரானார்" என்பது *endunamoo* (*en* ["யில்"] கூட்டல் *dunamis* ["வல்லமை"]) என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[14] இவ்வசனத்தில் *endunamoo* என்பது செயல்பாட்டு வினையில் உள்ளது,[15] எனவே இது "வல்லவராக்கப்பட்டார்" அல்லது "பலப்படுத்தப்பட்டார்" என்று மொழிபெயர்க்கப்பட முடியும். "விசுவாசத்தில்" என்ற சொற்றொடரானது *te* ("the") *pistei* ("faith") என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது முன்னிடைச்சொல் இல்லாத நான்காம் வேற்றுமை உறுபாக[16] உள்ளது. NASB வேதாகமமும் தரம் வாய்ந்த பெரும்பான்மையான மொழிபெயர்ப்புக்களும், "இல்" ("in") என்ற முன்னிடைச்சொல்லை தருகின்றன, ஆனால் சில மொழிபெயர்ப்புகள், "மூலம்" அல்லது "ஆல்" என்ற வார்த்தைகளைத் தருகின்றன. " 'அவர் விசுவாசத்தில் வல் லவராக்கப் பட்டார்' (அவரது விசுவாசம் வல்லமையோடு வளர்ந்தது) அல்லது 'அவர் விசுவாசத்தின்மூலம் வல்லவராக்கப்பட்டார்' என்பது கிரேக்க மொழியில் புரிந்துகொள்ளப்படலாம்."[17] எவ்வகையிலும் ஆபிரகாம், கர்த்தருக்குள்ளும் அவரது வாக்குத்தத்தங்களுக்குள்ளதுமான தமது உறுதியான நம்பிக்கைகளில் பலமாக வளர்ந்தார். உடல் பயிற்சியானது உடலைப் பலப்படுத்துவது போலவே, ஒருவர் தமது விசுவாசத்தை "பயிற்சிசெய்தல்" (அதைச் சார்ந்திருந்து அதன்படி செயல்படுதல்) என்பது அந்த விசுவாசத்தைப் பெலப்படுத்தும்.

ஆபிரகாம் "தேவனை மகிமைப்படுத்தி [*doxa*] விசுவாசத்தில் வல்ல

வனானான்" (வசனங்கள் 21ஆ, இ). "தேவனை மகிமைப்படுத்துதல்" என்பது கர்த்தருக்கு உரிய மகிமையை அவருக்கு உரித்தாக்குதல் என்பதாக உள்ளது. 1ம் அதிகாரத்தில், பவுல் "அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும் ..." என்ற நடக்கையுள்ள மக்களைப் பற்றி விவரித்திருந்தார் (1:21அ). ஆபிரகாம் அப்படிப்பட்ட நன்றியற்றவர்களைப்போல் இருக்கவில்லை; அவர் கர்த்தரைக் கனப்படுத்தினார். இவ்விஷயத்தில் நீங்களும் நானும் ஆபிரகாமின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல் அவசியமாகும். "அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக" (2 பேதுரு 3:18ஆ).

அது நம்மை 21ம் வசனத்திற்குக் கொண்டுவருகிறது, இது ஆபிரகாமின் விசுவாசத்தைப் பற்றிய தொகுப்புரையாக, அவரது முழுமையான நம்பிக்கையைப் பற்றிய சுருக்கக்கூற்றாக உள்ளது: "தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனான்." "முழுநிச்சயமாய் நம்பி" என்பது *plerophoreo* (*pleos* ["முழுமையான"] கூட்டல் *phoreo* ["சுமக்க"]) என்ற வார்த்தையிலிருந்து வருகிறது.[18] இவ்வசனத்தில் *plerophoreo* என்பது "*நிச்சயத்தை அடைதல்*" என்பதைக் குறிக்கிறது.[19]

தேவன் தாம் வாக்குத்தத்தம் செய்தவற்றை நிறைவேற்ற "வல்லவராக இருந்தார்" என்று ஆபிரகாம் விசுவாசித்தார். அவ்வப்போது, நான் வாக்குறுதியொன்றைக் கொடுத்து அதை நிறைவேற்ற இயலாமல் போனது உண்டு. நான் வாக்குறுதி அளித்தபோது, அதைக் காத்துக்கொள்வதற்கான மனவிருப்பத்தைக் கொண்டிருந்தேன் மற்றும் அதைச் செய்ய என்னால் இயன்ற அளவு மிகச்சிறப்பாக முயற்சிசெய்தேன். இருப்பினும் முடிவில், என்னால் அதைச் செய்ய இயலாது போனது. நமது தேவன் இவ்வாறு இருப்பது இல்லை. அவர் ஒரு வாக்குத்தத்தத்தை ஏற்படுத்தும்போது, அவர் அதை *நிறைவேற்ற வல்லவராக* இருக்கிறார். நமது தேவன் "வல்லவராயிருக்கிறார்" என்பது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் ஒரு ஆய்வுக்கருத்தாக உள்ளது (தானியேல் 3:17; ரோமர் 11:23; 14:4; 2 கொரிந்தியர் 9:8; எபிரெயர் 7:25 ஆகியவற்றைக் காணவும்). "வல்லவர்" என்பது *dunatos* என்ற வார்த்தையில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது, இது "வல்லமை" என்பதற்கான *dunamis* என்ற அதே வார்த்தையின் குடும்பத்தைச் சேர்ந்ததாகும். நமது தேவன் சர்வவல்லவராக, சகலவல்லமையும் நிறைந்தவராக இருக்கிறார்! TEV வேதாகமம், ஆபிரகாம் "தேவன் தாம் வாக்குத்தத்தம் செய்திருந்ததைச் செய்ய வல்லவராயிருக்கிறார் என்பதில் முழுநிச்சயமாய் இருந்தார்" என்று கூறுகிறது.

தேவன் வாக்குத்தத்தம் செய்ததை அவரால் செய்ய*முடியும்* என்று விசுவாசித்ததோடு ஆபிரகாம் நிறுத்திவிடவில்லை; தேவன் அதைச் *செய்வார்* என்றும் அவர் [ஆபிரகாம்] விசுவாசித்தார். தேவன் *உண்மையுள்ளவர்* என்று அவர் விசுவாசித்தார் (உபாகமம் 7:9; 1 கொரிந்தியர் 1:9 ஆகியவற்றைக் காணவும்). பொய்யுரைத்தல் என்பது தேவனால் செய்ய இயலாத ஒரு விஷயமாகும் (தீத்து 1:2; எபிரெயர் 6:18ஐக் காண்க). மக்கள் எப்போதுமே தங்கள் வார்த்தையைக் காப்பாற்றுவதில்லை, ஆனால் தேவன் அதைச்செய்கிறார். அவர் வாக்குத்தத்தம் செய்தது எதுவோ அதை அவர் செய்வார்!

தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்று விசுவாசிப்பது ஆபிரகாமுக்கு எளிதாக இருந்ததா? டொனால் பார்ன்ஹவுஸ் என்பவர்,

ஒவ்வொரு ஆண்டையும் ஒரு மகனைப் பெறாமலேயே கடத்துதல் என்பது ஆபிராமுக்கு (அப்போது அவர் இப்பெயரால் அறியப்பட்டார்) எவ்வளவு இருதய வேதனை தருவதாக இருந்திருக்க வேண்டும் என்பதைப் பின்வருமாறு சித்தரித்தார்:

> செல்வமிக்க வர்த்தகர்களின் ஒட்டகக் கூட்டங்கள் நாட்டிற்குள் வரும்போது, அவர்கள் ஆபிராமின் கிணற்றண்டையில் நிற்பதுண்டு. பயணிகளுக்கு உணவும் விற்கப்பட்டது. மாலைவேளையில் அந்த வர்த்தகர்கள் ஆபிராமுக்கு மரியாதை செலுத்துவதற்காக அவரது கூடாரத் திற்கு வருவதுண்டு. அவர்களின் கேள்விகள் பின்வரும் முறையான வடிவப்படி அமையும். நீர் யார்? உமது வயது என்ன? நீர் இவ்விடத்தில் எவ்வளவு காலம் இருக்கிறீர்? வர்த்தகர் தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டபின்பு, ஆபிராம் தம்மைப் பற்றி அறிமுகம் செய்யும்படியான கட்டாயத்தில் இருப்பார்: ஆபிராம், பலருக்குத் தகப்பன். இது ஒரு நூறுமுறைகள், ஒரு ஆயிரம் முறைகள் நடந்திருக்கலாம், ஒவ்வொரு முறையும் அதற்கு முந்திய முறையைவிட அதிகம் மனவேதனையானதாக இருந்திருக்கும். "ஓ! பலருக்குத் தகப்பன்! பாராட்டுக்கள்! நீங்கள் எத்தனை மகன்களைப் பெற்றிருக்கிறீர்கள்?" ஆபிராம், "ஒன்றுமில்லை" என்று கூறியபோது மிகவும் சிறுமைப்பட்டவராக உணர்ந்திருப்பார். "பலருக்குத் தகப்பன்," ஆனால் ஒருவனுக்குக்கூடத் தகப்பனில்லை. அவர் முற்பிதாவாக இருந்தார்; அவரது வார்த்தை சட்டமாக இருந்தது; அவர் திரளான கால்நடைகளையும் பல வேலைக்காரர்களையும் கொண்டிருந்தார், ஆனால் - அவருக்குப் பிள்ளைகள் இல்லை, அவரது பெயர் "பலருக்குத் தகப்பன்" என்பதாக இருந்தது.[20]

இருந்தபோதிலும், ஆபிரகாம் "தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறை வேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழுநிச்சயமாய் நம்பி" அதில் நிலைத்திருந் தார் (ரோமர் 4:21).

ஒருவேளை நான் ஆபிரகாம் "தேவன் *வாக்குத்தத்தம்பண்ணினதை* ... நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழுநிச்சயமாய் நம்பி" இருந்தார் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியதாயிருக்கும். ஆபிரகாமின் விசுவாச மானது அவர் கற்பனை செய்திருந்த அல்லது கனவுகண்டிருந்த சிலவற்றின் அடிப்படையிலானதாக இருக்கவில்லை: அது தேவன் *கூறியிருந்தவற்றின்* மீது உறுதியாக வேரூன்றி இருந்தது. 10ம் அதிகாரம், "விசுவாசம் கேள்வி யினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்று கூறுகிறது (வசனம் 17; யோவான் 17:20ஆ வைக் காணவும்). நமது விசுவாசம் தேவன்மீது கவனம் குவிப்பதாக இருந்தால் மாத்திரம் போதாது; அது வேதாகமத்தின் அடிப்படையினாலதாகவும் இருக்க வேண்டும்.

இவ்வேளையில் நீங்கள், "நான் ஆபிரகாமைப்போன்று விசுவாசம் கொண்டிருக்க விரும்புகிறேன்! அது ஒருக்காலும் அலைவுபட்டிராத பின்வாங்கிப்போகாத விசுவாசமாக, ஒருக்காலும் சந்தேகப்பட்டிராத பலத்த விசுவாசமாக இருந்தது!" என்று நினைக்கலாம்.[21] ஆபிரகாமின் விசுவாசம் பூரணப்பட்டு இருந்தது என்ற மனப்பதிவை விட்டுச்செல்ல நான் விரும்ப வில்லை. ஆபிரகாமின் விசுவாசம் பூரணப்பட்டதாக இருந்தது. எனவே உங்கள் விசுவாசமும் பூரணப்பட்டதாக இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைத்தால்,

நீங்கள் உங்களுக்குச் சாத்தியமற்ற தர அளவையை அமைக்கிறீர்கள். நீங்கள் இதைச் செய்தால், ஏமாற்றமும் பெரும்வருத்தமும் தவிர வேறு எதையும் எதிர் நோக்க இயலாது.

இல்லை, ஆபிரகாமின் விசுவாசம் பூரணப்பட்டதாக இருக்கவில்லை. அவர் மனிதராக இருந்தார், அது அவர் பூரணப்பட்டவரல்ல மற்றும் அவரது விசுவாசம் பூரணப்பட்டதல்ல என அர்த்தப்படுகிறது. ஆதியாகமம் 15ல், அவருக்குப் பிள்ளைகள் இல்லாதபடியால், அவர் தமது வேலைக்காரன் ஒருவன் தனக்கு வாரிசாக இருக்க வேண்டும் என்று தேவனிடத்தில் ஆலோசனை தெரிவித்தார் (வசனங்கள் 2, 3). ஆதியாகமம் 17ல் தேவன், சாராள் ஒரு மகனைப் பெறுவாள் என்று கூறியபின்பு (வசனங்கள் 15, 16), ஆபிரகாம் தனக்குள்ளே நகைத்துக்கொண்டு, ''நூறுவயதானவனுக்குப் பிள்ளை பிறக்குமோ? தொண்ணூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ?'' என்று தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டார் (வசனம் 17). பின்பு அவர் இஸ்மவேல் தனது வாரிசாக இருப்பதைத் தேவன் அனுமதிக்க வேண்டும் என்று அவரை இணங்கச் செய்ய முயற்சித்தார் (வசனம் 18). மாதங்கள் ஆண்டுகளாகவும், ஆண்டுகள் பத்தாண்டுகளாகவும் மாறுகையில், ஆபிரகாம் "திரளான கூட்டத் திற்கு தகப்பனாவார்" என்ற வாக்குத்தத்தத்துடன் அவர் போராடினார் என்பதே ஒளிவுமறைவற்ற உண்மையாகும்.

பின்பு, ஏன் பவுல், ஆபிரகாம் "தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழுநிச்சயமாய் நம்பி," "அவிசுவாச மாய்ச் சந்தேகப்படாமல்'' இருந்தார் என்று கூறினார் (வசனங்கள் 20, 21)? ஆபிரகாம் அந்த வாக்குத்தத்தம் *எவ்வாறு* நிறைவேறும் என்பது குறித்துப்போராடிய அளவுக்கு அந்த வாக்குத்தத்தத்தை விசுவாசிப்பதில் போராடவில்லை என்பது அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும் ஒருவகை யாக உள்ளது. ஒரு இணைகருத்தைக்கூற முயற்சிக்க என்னை அனுமதியுங்கள். 8ம் அதிகாரத்தில் பவுல் "தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று" கூறினார் (வசனம் 28ஆ). வாழ்வு நம்மை மூழ்கடித்துவிடுவதாக அச்சுறுத்தும் போது, தேவன் அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவது *எவ்வாறு* சாத்தியமாகும்? என்று நாம் திகைப்படையலாம். இருந்தபோதிலும், நாம் அந்த வாக்குத்தத்தத்தை விடாதுபற்றிக்கொண்டு கர்த்தருக்கு உண்மைநிறைந்தவர்களாக நிலைத்திருந்தால், நாம் ''சந்தேகப்படாது'' இருக்கிறோம் என்று கூறப்பட முடியும்.

ஆபிரகாம் தமது விசுவாசம் தமது குறைவுகள், அனுபவித்த கணநேர சந்தேகங்கள் ஆகியவற்றுடன்கூடப் போராடியிருக்கலாம் - ஆனால் அவர் ஒருக்காலும் தமது கண்களைத் தேவனைவிட்டு எடுக்காது இருந்தார். ஆபிரகாமின் விசுவாசக்கவனக்குவிப்பு போன்று அவரது விசுவாசத்தின் தரமும் அளவும் அவ்வளவு முக்கியமல்ல என்பதை நினைவில் வையுங்கள். ஆபிரகாமின் விசுவாசத்தினுடைய அடிச்சுவடுகளை நீங்கள் பின்பற்றுகையில், நீங்களும்கூட கேள்விகளையும் அவ்வப்போது சந்தேகங்களையும்கூட பெறுவீர்கள். அது நடக்கிறபோது, தொடர்ந்து ஜெபியுங்கள், தொடர்ந்து தேவனுடைய வசனத்தை வாசியுங்கள், தொடர்ந்து தேவனுடைய சித்தத்தைச் செய்யுங்கள். ஆபிர காமைப்போலவே தேவனிடம் நெருங்கி நிலைத்திருங்கள், அப்போது நீங்களும் "விசுவாசத்தில் வல்லவராக" வளரமுடியும் (ரோமர் 4:21).

பவுல், ஆபிரகாமின் வாழ்வுபற்றிய தமது ஆராய்வை, ஆதியாகமம் 15:6ஐ மறுபடியும் மேற்கோள் காண்பித்து முடித்தார்: "ஆகையால் அது [ஆபிரகாமின் விசுவாசம்] அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" [*logizomai*] (ரோமர் 4:22). அவரது விசுவாசம் பூரணப்பட்டிருக்கவில்லை, ஆனால் அது அப்பொழுதும் விசுவாசமாகவே இருந்தது. ஏனென்றால் அந்த விசுவாசத்தைத் தேவன் ஆபிரகாமுக்கு நீதியாக எண்ணினார்.

ஆபிரகாமைப் பின்பற்றுபவர்கள் (4:23-25)

பின்பு பவுல் தமது வாசகர்களுக்கு - மற்றும் நமக்கு - நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தினார். "அது அவனுக்கு நீதியாக எண்ணப் பட்டதென்பது [*logizomai*], அவனுக்காக [ஆபிரகாமுக்காக] மாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது" (வசனம் 23). ஆதியாகமம் 15:6, "ஆபிரகாம் மனிதர்களின் நினைவில் வாழவேண்டும் என்பதற்காக ஆபிரகாமுக்கு வெறும் நினைவுச்சின்னமாக மாத்திரம்" எழுதப்படவில்லை.[22] தேவன், மோசேயின் நாட்களில் இருந்த மக்கள் சிலவற்றைக் *கற்றுக்கொள்ள* வேண்டும் என்பதற்காகவே மோசேயைக் கொண்டு இவ்வார்த்தைகளை எழுதுவித்தார் - மற்றும் அவற்றிலிருந்து மக்கள் இன்றும் சிலவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்று பவுல் கூறினார். வரலாற்றை ஒப்புவிப்பதில் பவுல் சிறிதளவே ஆர்வம் கொண்டிருந்தார், ஆனால் அவர் இருதயங்களையும் வாழ்வுகளையும் மாற்றுவதற்கு மாபெரும் ஆர்வம் கொண்டிருந்தார்.

ஆதியாகமம் 15:6 "விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப் [*logizomai*]படுவதற்காக" எழுதப்பட்டிருக்கிறது (4:23). ஆபிரகாமின் விசுவாசத்திற்குச் செய்யப்பட்டதுபோலவே நமது விசுவாசமும் நமக்கு நீதி யாக எண்ணப்படும், ஏனென்றால் நாம் இருவருமே கிருபை/விசுவாசம் என்ற முறைமையின் கீழ் இருக்கிறோம். 22 முதல் 24 வரையுள்ள வசனப்பகுதியில் *logizomai* என்ற வார்த்தையின் மும்முனை பயன்பாடு நமக்கு, "தேவனுடைய திகைப்புக்குரிய கணக்கு வைக்கும் ஏற்பாட்டை" நினைவூட்டுகிறது. CJB வேதாகமத்தில், "But the words ... were written also for us, who will certainly have our account credited too" ["ஆனால் இவ்வார்த்தைகள் ... நிச்சயமாகவே நமது கணக்கில் வரவுவைக்கப்படும்படியாக நமக்காகவும் எழுதப்பட்டுள்ளன"] என்றுள்ளது (வசனம் 23). 25ம் வசனத்தில் AB வேதாகமம், கிறிஸ்து "நமது கணக்கை நேர்செய்து" மரித்தார் என்று குறிப்பிடுகிறது. இது தேவன் தமது "புத்தகப் பராமரிப்பை" எவ்வாறு செய்கிறார் என்பதற்கு ரோமருக்கு எழுதிய நிருபத்தில் வரும் கடைசிக்குறிப்புகளில் ஒன்றாக உள்ளது, ஆனால் இது இந்த நிருபத்தின் எஞ்சிய பகுதிக்கு ஒரு குறிப்புக்கருத்தை அளிக்கிறது.

தேவனுக்குள் விசுவாசம் ...

ஆபிரகாம் எதை விசுவாசித்தார் என்பது பற்றிப் பவுல் பேசியிருந்தார். இப்போது அவர் இந்தக் கலந்துரையாடலை, நீங்களும் நானும் விசுவாசிக்க வேண்டியது என்ன என்பதைப் பற்றிய ஒரு தொகுப்புரையோடு முடித்தார். நாம் விசுவாசிக்கும் விஷயத்திற்கும் ஆபிரகாம் விசுவாசித்த விஷயத்திற்கும் மறை முகமான ஒப்பீடு ஒன்று இங்குள்ளது.

ஆதியாகமம் 15:6 *நமக்காக* எழுதப்பட்டது என்று கூறியுள்ள நிலையில்

பவுல் தாம் யாரைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார் என்பதைக் குறிப்பிட்டார்: "நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும்" (வசனம் 24அ). ஆபிரகாம், "மரித்தோருக்கு ஜீவன்" தரக்கூடிய தேவனில் விசுவாசம் கொண்டிருந்தார் (வசனம் 17) மற்றும் நாமும்கூட அதே வகையான விசுவாசம் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகிறது. இந்த அதிகாரத்தின் முற்பகுதியில் கிறிஸ்துவைக் குறித்து மறைமுகமான குறிப்புகள் ஏற்படுத்தப்பட்டன, ஆனால் இவ்விடத்தில்தான் "இயேசு" என்ற பெயர் முதன்முறையாக வருகிறது.

இயேசுவின் உயிர்த்தெழுதல்தான் நமது விசுவாசத்தின் மையமாக உள்ளது. 1ம் அதிகாரத்தில் பவுல் "இயேசு தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்" என்று கூறினார் (வசனம் 5). 10ம் அதிகாரத்தில் அவர் இரட்சிக்கப்படுவதற்கு நீங்கள், "தேவன் அவரை [இயேசுவை] மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உங்கள் இருதயத்திலே விசுவாசிக்க வேண்டும்" என்று கூறினார் (வசனம் 9). உயிர்த்தெழுதல் இன்றி நாம் "ஜீவனுள்ள நம்பிக்கை" (1 பேதுரு 1:4) பெற்றிருக்க இயலாது மற்றும் நமது விசுவாசம் "வீணாயிருக்கும்" (1 கொரிந்தியர் 15:17).

பின்பு பவுல் இயேசுவைப்பற்றி, "அவர் நம்முடைய பாவங்களுக்காக[23] ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்" என்று கூறினார் (வசனம் 25).[24] இயேசு "ஒப்புக்கொடுக்கப்பட்டார்" என்று பவுல் கூறியபோது, அவர் சிலுவையில் அறையப்படும்படிக்குத் தமது விரோதிகளிடத்தில் "ஒப்புக்கொடுக்கப்பட்டார்" என்பது புரிந்துகொள்ளப்பட்டதாக உள்ளது. இவ்விதமாக NIV வேதாகமத்தில், "He was delivered over to death" ["அவர் மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார்]" என்றுள்ளது.

"ஒப்புக்கொடுக்கப்பட்டு" என்பது *paradidomi* (*para* ["பக்கமாக"] கூட்டல் *didomi* ["கொடுக்க"]) என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தையின் வடிவம் ஒன்று, இயேசுவினுடைய விரோதிகள் அவரை ஒப்புக்கொடுத்ததை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டது, ஆனால் 25ம் வசனம் இயேசுவின் விரோதிகளைக் குறிப்பிடுவதில்லை. "அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும் ..." என்பதைக் கவனியுங்கள். கிறிஸ்துவின் எதிரிகள் "நமது பாவங்களின்மீது" அக்கறை எதுவும் கொண்டிருக்கவில்லை; அவர்கள் வெறுத்த ஒருவரை ஒழித்துக்கட்டுவதே அவர்களின் அக்கறையாக இருந்தது. 25ம் வசனம், நமது பாவங்களுக்காக "கிருபாதாரபலியாக" (3:25) இயேசுவைத் *தேவன்* ஒப்புக்கொடுத்தலைப் பற்றி பேசுகிறது. 8ம் அதிகாரத்தில் தேவனைப்பற்றிப் பவுல் "தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர்" என்று கூறினார் (வசனம் 32அ).

25ம் வசனத்தின் பல பண்பினங்கள் விளக்கவுரையாளர்களுக்குப் புதிராயிருக்கின்றன. இவற்றில் ஒன்று, *dia* என்ற முன்னிடைச்சொல் திரும்பத்திரும்ப வருவதாகும் (NASBயில் இது "because of" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமிழ் வேதாகமத்தில் இது "பாவங்களுக்காக மற்றும் நீதிமான்களாக்கப்படுவதற்காக" என்பதில் உள்ள "காக" என்ற விகுதிச்சொல்லாகும்). "அவர் நம்முடைய பாவங்களுக்*காக*

ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படு*வதற்காக* எழுப்பப் பட்டும் இருக்கிறார்.'' இரு கூற்றுக்களும் இணையாக இருக்க வேண்டும் என்று பவுல் நோக்கங்கொண்டார் என்பது தெளிவு. ''பாவங்கள்'' மற்றும் ''நீதிமானாக்கப்படுதல்'' ஆகியவை ஒரே வகைப்பட்டவையல்ல என்பதே இங்கு பிரச்சனையாக உள்ளது; அவைகள் எதிரானவைகளாக உள்ளன. பவுல் தமது வாசகர்கள் இந்தக்கூற்றினுடைய ஒவ்வொரு பாகத்திலும் உள்ள சிந்தனையை முழுமைப்படுத்தும்படி எதிர்பார்த்தார் என்பது தெளிவு: கிறிஸ்து மரிப்பதற்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்டார். "ஏனென்றால்" நமது பாவங்களின் குற்றத்தை நீக்குவதற்கு அப்படிப்பட்ட விஷயம் தேவையாயிருந்தது, மற்றும் அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார். ''ஏனெனில்'' நாம் நீதிமான்களாக்கப்படுவதற்கு அப்படிப்பட்ட விஷயம் தேவையாயிருந்தது.

25ம் வசனத்தின் கடைசிப்பகுதியில் உள்ள சொற்றொடராக்கம் மற்ற சில விளக்கவுரைகளை அழைக்கிறது: அவர் "நாம் நீதிமான்களாக்கப்படு வதற்காக மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார்.'' விதிப்படி பவுல், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காகக் கிறிஸ்து *மரித்தார்* என்று உரைத்தார். 5:9ல் அவர் ''நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க'' என்று கூறினார் (3:24, 25ஐக் காணவும்). இருப்பினும், இங்கு அவர் நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காகக் கிறிஸ்து *"எழுப்பப்பட்டார்"* என்று கூறினார். உயிர்த்தெழுதலின் காரணமாக, இயேசுவின் மரணம் தேவனுடைய கோபத்தைத் திருப்திப்படுத்திற்று என்று நாம் உறுதியாயிருக்க முடியும் என்பது இயேசுவின் உயிர்த்தெழுதல் நாம் "நீதிமான்களாக்கப்படுவதற்கானதாக" இருந்ததற்கான ஒரு வழியாக உள்ளது. இந்தச்சொற்றொடரில் இன்னும் சில தனிச்சிறப்புகள் இருக்கலாம்.

சில எழுத்தாளர்கள்[25] எபிரெயருக்கு எழுதிய நிருபத்தைக் கவனிக்கும் படி அழைக்கின்றனர், அந்த நிருபம் இயேசுவை நமது பிரதான ஆசாரியர் என்று குறிப்பிடுகிறது (2:17; 3:1; 4:14, 15). எபிரெயர் 9ம் அதிகாரம், பழைய ஏற்பாட்டுப் பிரதான ஆசாரியருக்கும் இயேசுவுக்கும் இடையில் ஒரு இணைவைத் தரவழைக்கிறது. பழைய ஏற்பாட்டில், பிரதான ஆசாரியர் ஆண்டுக்கு ஒருமுறை மிருகங்களின் இரத்தத்தை எடுத்துக்கொண்டு மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பார். இந்த இரத்தத்தை அவர், தேவனுடைய சிங்காசனத்தைப் பிரதி நிதித்துவப்படுத்திய கிருபாசனத்தின் (பேழையின் மூடியின்)மீது தெளிப்பார். இதை அவர், மக்களின் பாவநிவாரணத்திற்காகச் செய்தார். நமது பிரதான ஆசாரியர் என்ற வகையில் இயேசு, பரலோகமாகிய மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தார் (எபிரெயர் 9:24ஐக் காணவும்). மிருகங்களின் இரத்தத்தைக் கொண்டுவருவதற்குப் பதில், அவர் தம் சொந்த இரத்தத்தையே தேவனுடைய அரியணையின் முன்வைத்தார். நமது பாவங்களைப் பரிகரிப்பதற்காக அவர் இதைச் செய்தார் - இதை ஒவ்வொரு ஆண்டும் அவர் செய்யவில்லை, ஆனால் எல்லாக்காலத் திற்கும் ஒரே முறையாக இதைச் செய்தார். பிரதான ஆசாரியத்துவப்பணியை நிறைவேற்றுவதற்கு இயேசு *எழுப்பப்பட வேண்டியதாகவும்* பின்பு அவரது பிதாவினிடத்திற்கு எழுந்தருள வேண்டியதாகவும் இருந்தது. இவ்வாறு, சார்லஸ் ஹோட்ஜ் என்பவர், "நம் நிமித்தம் அவரது நிறைவின் ஏற்றுக்கொள்ளுதலுக்குச் சாட்சியாகவும், அவரது பலியின் தகுதிகளை நடைமுறையில் செயல்படுத்துதலைப் பாதுகாக்கும் அவசியமான ஒரு அடிவைப்பாகவும் இருப்பதுபோன்றே,

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் என்பது நாம் நீதிமானாக்கப்படுதலில்கூட முற்றிலும் அத்தியாவசியமானதாக உள்ளது" என்று எழுதினார்.[26]

கிறிஸ்து "நமது பாவங்களுக்காக" மரித்து நாம் நீதிமான்களாக்கப்படு வதற்காக "எழுப்பப்பட்டார்" என்று பவுல் கூறியபோது, அவர் இயேசுவின் மரணம் நாம் நீதிமான்களாக்கப்படுவதற்கு ஒன்றும் செய்வதற்கில்லை என்றோ அல்லது அவரது உயிர்த்தெழுதல் நமது பாவங்களில் இருந்து நம்மை மன்னிப்பதற்கு ஒன்றும் செய்வதற்கில்லை என்றோ மறைமுகமாய்க் குறிப்பிட நோக்கங்கொண்டிருக்கவில்லை என்பது நிச்சயம். மாறாக, அவர் *இவ்விரண்டுமே* நமது இரட்சிப்பில் இன்றியமையாத பாகத்தை செயல்படுத்துகின்றன என்றே அவர் கூறினார். R. C. பெல் என்பவர், பவுல் இவ்விதமாக "இரட்சிப்பின் கதவு திரும்புவதற்கான இரண்டு கதவுக்கீல்களாக" சிலுவையில் அறையப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைப் பவுல் ஒன்றிணைத்தார் என்று எழுதினார்.[27]

... ஆனால் இயேசுவுக்குள் இல்லை?

ஆபிரகாமின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல் பற்றிய நமது கலந்துரையாடலை முடிக்குமுன்னர், இன்னும் ஒரு விஷயத்தைக் கையாள வேண்டியது நமக்கு அவசியமாயிருக்கிறது. தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குக் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வது அவசியம் இல்லை என்று "நிரூபிக்க" ரோமர் 4ம் அதிரத்தைச் சிலர் பயன்படுத்துகின்றனர்.[28] அவர்கள் "ஆபிரகாம் *தேவனை* விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதி யாக எண்ணினார்" (வசனம் 3; வசனம் 17ஐக் காணவும்) என்பதையும், நாம் ஆபிரகாமுடைய விசுவாசத்தைக் கொண்டிருக்க வேண்டும் (வசனம் 16) என்பதையும் சுட்டிக் காண்பிக்கின்றனர். மற்றும் அவர்கள் நமது விசுவாசத்தைப் பற்றி இந்த அதிகாரம் பேசுகையில், *தேவனில்* விசுவாசம் என்பதுதான் வலியுறுத்தமாக உள்ளது என்று குறிப்பிடுகின்றனர் (வசனங்கள் 5, 24). ஆகையால் அவர்கள் - யூதர்கள் உட்பட - தேவன்மீது விசுவாசம் கொள்ளும் யாவரும், இயேசுவில் விசுவாசம் கொண்டாலும் கொண்டிராதிருந்தாலும் இரட்சிக்கப்படுவார்கள் என்று முடிவு செய்கின்றனர்.

ரோமர் 3:26ல், தேவன் "தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய்" என்று பவுல் தெளிவாகக் கூறினார். இதைப்போன்ற வசனப்பகுதிகள் எண்ணற்றவைகள் உள்ளன, ஆனால் நான் ரோமர் 4க்கான "ஆதார வசனங்களை" கொடுப்பதுடன் எனது குறிப்புரைகளை வரையறைப்படுத்திக்கொள்வேன். முதலாவது, பவுல் இந்த அதிகாரத்தில் யூதர்களிடத்தில், அவர்களுக்கு மிகவும் பிரியமான ஆபிரகாமைப் பற்றி உரைக்கையில், அவர்களுக்கு இசைவிணக்கம் உள்ள "விசுவாச" மொழி நடையைப் பயன்படுத்தினார் என்பதைச் சுட்டிக் காண்பிக்க வேண்டும். டக்ளஸ் J. மூ என்பவர் பவுல் "தேவனை மிக அரிதாகவே நமது விசுவாசத்தின் பொருளாக ஏற்படுத்துகிறார். இவ்விடத்தில் அவர் கிறிஸ்தவ விசுவாசத்தை இயன்றவரையில் ஆபிரகாமின் விசுவாசத்தைப் போலாக்குவதற்கு அவர் இவ்வாறு செய்கிறார்" என்று விளக்கம் அளித்தார்.[29]

இரண்டாவது, தேவனுக்குள் நமது விசுவாசம் குறிப்பிடப்படும்போதுகூட, அவரது குமாரனுக்குள் உள்ள விசுவாசம் விலக்கப்படவில்லை. 5ம் வசனம் நாம் "பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்க" வேண்டும் என்று கூறுகிறது,

ஆனால் நீதிமானாக்கப்படுதல் என்பது இயேசுவின் மரணத்தின் மூலமாக மாத்திரமே சாத்தியமாக்கப்படுகிறது (5:9). 24ம் மற்றும் 25ம் வசனங்களில், "நம்முடைய பாவங்களுக்காக, நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கி[ற] நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பிய ..." தேவன்மீது நமது விசுவாசம் இருக்க வேண்டும் என்று நாம் வாசிக்கிறோம்.

மூன்றாவது, ஆபிரகாம் இயேசுவைப் பற்றி எல்லாவற்றையும் அறிந்திராவிட்டாலும், தமது "சந்ததி" பற்றித் தேவன் அளித்திருந்த வாக்குத்தத்தத்தை அவர் விசுவாசித்தார் (ஆதியாகமம் 22:18; கலாத்தியர் 3:16). செயல்விளைவில் தேவன், ஆபிரகாமுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் (கலாத்தியர் 3:8ஐக் காணவும்), மற்றும் ஆபிரகாம் தமக்குத் தேவன் வெளிப்படுத்தினதை நம்பினார். சிலுவைக்கு இந்தப்பக்கம் வாழ்ந்து ஆனால் இயேசுவைப் பற்றிய தேவனுடைய வெளிப்படுத்துதலை நம்புவதை மறுக்கிற எவரொருவரும் விசுவாசத்தில் முதிர்ந்த மனிதரான ஆபிரகாமைப்பற்றி கூறப்படும் அதே மூச்சில் குறிப்பிடத் தகுதியற்றவர்கள் என்பதே எனது முடிவாக உள்ளது!

> நமது நாட்களில், தேவன் தம்மை நிச்சயமாகவே இயேசுவில் வெளிப்படுத்தினார். ஆபிரகாம் இன்றைய நாட்களில் வாழ்ந்திருந்தால், அவர் கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவன்மீதான விசுவாசம் இன்றி இரட்சிக்கப்பட முடியாது ... கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டுள்ள, குறிப்பாக இந்தத் தேவன் மீது விசுவாசம் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே இரட்சிப்பின் நம்பிக்கையைப் பெற்றுள்ளனர் என்று ... நாம் முடிவு செய்கிறோம்.[30]

முடிவுரை

ஆபிரகாமின் விசுவாசம் திகைப்புக்குரியதாக உள்ளது. அவர் "வாசிக்க ஒரு வேதாகமம் கொண்டிருக்கவில்லை; அவர் தேவனுடைய எளிய வாக்குத்தத்தம் மாத்திரமே பெற்றவராயிருந்தார். அவர் ஒரு விசுவாசி என்ற வகையில் ஏறக்குறைய ஒற்றையாளாக இருந்தார், அவரைச் சுற்றிலும் புறதெய்வ வணக்கம் செய்யும் அவிசுவாசிகள் நிறைந்திருந்தனர். அவர் விசுவாசத்தைப் பற்றிய நீண்டபதிவேடு ஒன்றைப் பின்னோக்கிக் காண இயலாதிருந்தார்; உண்மையில் அவரே அந்த வரலாற்றை எழுத உதவி செய்தவராயிருந்தார். இருப்பினும் ஆபிரகாம் தேவனை விசுவாசித்தார்."[31] R. C. பெல் என்பவர் ஆபிரகாமை, விசுவாசத்தின் "மாதிரி" மனிதர், "அவரது நாட்களில் இருந்தே எல்லா விசுவாசிகளுக்கும் முன்மாதிரி" என்று அழைத்தார்.[32]

ரோமர் 4ல் வெளிப்படுத்தப்பட்டபடியாக ஆபிரகாமின் விசுவாசத்தை நாம் எவ்வாறு தொகுத்து உரைக்க முடியும்? தேவன் சிலவற்றைக் கூறியபோது, அவற்றை ஆபிரகாம் விசுவாசித்தார். அது மனித காரண அறிவிற்கு முரண்பட்டபோதிலும், அதை அவர் விசுவாசித்தார். அது அவரது உணர்வுகளின் ஆதாரத்திற்கு நேர்மாறானதாக இருந்தபோதிலும் அதை அவர் விசுவாசித்தார். ஒருவேளை அவர் தேவன் தமது வார்த்தையை எவ்வாறு செயல்படுத்துவார் என்ற கேள்வியுடன் போராடியிருக்கலாம், ஆனால் அவர் தமது விசுவாசத்தைக் கைவிட மறுத்துவிட்டார். அவர் தமது விசுவாசத்தில் உறுதியாய் நிலைநின்றார் மற்றும் அந்த விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டே தமது வாழ்வை

அமைத்துக் கொண்டார். அந்த விசுவாசத்தைத் தேவன் பார்த்தார், "அது அவருக்கு [ஆபிரகாமுக்கு] நீதியாக எண்ணப்பட்டது" (4:3).

இன்றைய நாட்களில் சிலர் இயேசுவில் விசுவாசம் கொண்டுள்ளதாக உரிமை கோருகின்றனர், ஆனால் அவர்களின் விசுவாசம், ஆபிரகாம் கொண்டிருந்த விசுவாசத்தின் வகையைவிட மிகவும் குறைவானதாக உள்ளது. "மாபெரும் பிளன்டின்" என்ற ஜீன் ஃபிரான்கோயிஸ் கிரேவெலட் என்பவரைப் பற்றிய கதை ஒன்று என் நினைவுக்கு வருகிறது.

> பிளன்டின் என்பவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவரும், இறுகக் கட்டிய கயிற்றின்மீது நடக்கும் ஒரு பிரபலமான மனிதருமாக இருந்தார், இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தார். ஒருமுறை, நயாகரா நீர்வீழ்ச்சிக்கு மேல்புறத்தில் அவர் ஒரு கயிற்றைக் கட்டி, அதில் அந்த அருவியைக் குறுக்காகக் கடந்து நடந்தார். பிளன்டின், அந்த அருவியின் அமெரிக்கப்பகுதிக்கு வந்துசேர்ந்தபோது, ஆயிரக்கணக்கான மக்கள் அவரை உற்சாகப்படுத்திப் பாராட்டினர்.
>
> பிளன்டின் அந்தக்கூட்டத்தினரை அமைதிப்படுத்திவிட்டு, "நான் அந்த இறுகக் கட்டிய கயிற்றின்மீது திரும்பவும் நடந்து அருவியைக் குறுக்காகக் கடக்கப்போகிறேன், ஆனால் இம்முறை நான் யாரையாவது என் தோள்களில் தூக்கிச் செல்லலாம் என்றிருக்கிறேன். நீங்கள் என்னை நம்புகிறீர்களா?" என்று கேட்டார்.
>
> கூட்டமானது, "நாங்கள் நம்புகிறோம்! நாங்கள் நம்புகிறோம்!" என்று உச்சாடனம் செய்தது, ஆனால் பிளன்டின், "அந்த நபராக இருப்பது யார்?" என்று கேட்டபோது, கூட்டம் அமைதியாயிற்று. கடைசியில் ஒரு மனிதர் அடியெடுத்து முன்வந்து, பிளன்டினுடைய தோள்களின்மீது ஏறிக்கொண்டு, அவரை அருவியின் கனடா நாட்டுப் பகுதிக்குக் கொண்டுசெல்ல அனுமதித்தார்.
>
> ஆயிரக்கணக்கான மக்கள் "நாங்கள் நம்புகிறோம்" என்று கூறினர், ஆனால் ஒரே ஒருவர்தான், தாம் நம்பிய விஷயத்திற்காகத் தமது உயிரைக் கொடுத்தார்.[33]

ஆபிரகாமின் விசுவாசம் வெறும் வார்த்தைகளில் வெளிப்படுத்தப் படவில்லை. அவர் தாம் விசுவாசித்த விஷயத்திற்காகத் தமது வாழ்வையே அர்ப்பணித்திருந்தார். அவர் தேவன் கூறியவற்றைச் செய்யத் தம்மையே ஒப்புக்கொடுத்திருந்தார். நீங்கள் ஆபிரகாமினுடைய விசுவாசத்தின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறீர்கள் என்றால், கர்த்தரைப் பிரியப்படுத்த உங்களால் செய்ய முடிந்த எல்லாவற்றிற்கும் உங்களையே நீங்கள் ஒப்புக்கொடுப்பீர்கள். நீங்கள் கிறிஸ்துவையும் அவரது பலியையும் விசுவாசிப்பீர்கள் (1:16). நீங்கள் மனந்திரும்புதல் மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவற்றில் உங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்துவீர்கள் (2:4; 10:9). நீங்கள் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டிருக்க விரும்புவீர்கள் (6:3-6ஐக் காணவும்). தேவனுடைய பிள்ளை என்ற வகையில் நீங்கள் "புதிய ஜீவனுள்ளவர்களாய்" நடக்கக் கடுமையாக முயற்சி செய்வீர்கள் (6:4).

உங்கள் விசுவாசம் எப்போதுமே, ஆபிரகாமுடைய விசுவாசத்தைப் போன்று குறைவுள்ளதாக இருக்கும், மற்றும் உங்கள் கீழ்ப்படிதல் பூரணத்துவத்திற்கும் குறைவானதாக இருக்கும். இருந்தபோதிலும், தேவன்

உங்கள் விசுவாசத்தையும் கண்ணோக்கி, அதை உங்களுக்கு நீதியாக எண்ணுவார் (4:23, 24)!

குறிப்புகள்

[1]*இவ்வார்த்தைகள் குறிப்பாக யூதர்களுக்குக் கூறப்பட்டன, ஆனால் பொதுவான நடைமுறைப்பயன்பாடு ஏற்படுத்தப்படக்கூடும்.* [2]*தந்தையர்கள் தினம் என்பது ஜூன் மாதமூன்றாம் ஞாயிற்றுக்கிழமையாகும், இதில் ஒவ்வொரு ஆண்டும் தந்தையர்கள் கனப்படுத்தப்படுவர், இது அமெரிக்க நாட்டில் தேசீய விடுமுறைநாளாகும்.* [3]*"விசுவாசம் இதுதான்" என்பது பற்றி நன்கு அறியப்பட்ட வசனப்பகுதியை (எபிரெயர் 11:1) கொண்டுள்ள எபிரெயருக்கு எழுதிய நிருபத்தைப் பவுல் எழுதவில்லை என்று இங்கு யூகித்துக்கொள்ள வேண்டும்.* [4]Richard A. Batey, *The Letter of Paul to the Romans*, The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 61. [5]KJV *வேதாகமத்தில்* "quickens" *என்றுள்ளது, இது "உயிர்ப்பித்தல்" என்பதற்கான பழைய ஆங்கில வார்த்தையாகும்.* [6]*விசுவாசம் "அற்பமானதாக" (மத்தேயு 14:31; 16:8) அல்லது "பெரிதானதாக" (மத்தேயு 8:10, 26), "செத்ததாக" (யாக்கோபு 2:17, 26) அல்லது ஜீவனுள்ளதாகவும் இருக்கலாம்.* [7]*"பவுலின்" என்றால், "பவுலுக்கே உரியதான" என்று அர்த்தப்படுகிறது.* [8]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 210. *Elpis என்பதன் வடிவங்கள் புதிய ஏற்பாட்டில் ஐம்பத்து மூன்று முறைகள் காணப்படுகிறது. இதில் முப்பத்தாறு முறைகள் பவுலின் எழுத்துக்களில் உள்ளன.* [9]J. D. Thomas, *Romans*, The Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1965), 37. [10]*"பலவீனம்" என்பது உடல் பலவீனம் போன்றவற்றைக் குறிக்கிறதான astheneo என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ஆனால் இவ்வார்த்தை எவ்வகையான பலவீனத்தையும் குறிக்க பயன்படுத்தப்பட முடியும்.* (Morris, 211, n. 84).

[11]Ibid., 211. [12]*ஆதியாகமம் 25:1-6ம் வசனப்பகுதி, ஆபிரகாம் கேத்தூராள் என்பவள் மூலமாக மகன்களைப் பெற்றார் என்று கூறுகிறது. பிள்ளைகளைப் பெற இயலாத அளவுக்கு ஆபிரகாம் முதியவராக இருந்தார் என்றால், இது எவ்வாறு சாத்தியமாயிற்று? ஒருவேளை விவரங்கள் நாள்வரிசைமுறைப்படி அமையாதிருக்கலாம் மற்றும் ஆபிரகாம் தமது வாழ்வின் முந்தியபகுதியில் கேத்தூராள் மூலமாகப் பிள்ளைகளைப் பெற்றிருக்கலாம். ஒருவேளை, ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றுக்கொள்ளும்படி அவருக்குக் கிடைத்த தெய்வீக ஆசீர்வாதம், பிற்பாடு அவரைப் பிள்ளைகள் பெறக் கூடியவராகும்படி ஆக்கியிருக்கலாம்.* [13]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 92. [14]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 605. [15]*The Analytical Greek Lexicon*, 139. *வாக்கியத்தின் எழுவாய் செயல்படுகையில் (சிலவற்றைச் செய்கையில்: உதாரணமாக, "அவன் சுமந்தான்") "செய்வினை" பயன்படுத்தப்படுகிறது. எழுவாய்மீது சில செயல்கள் செய்யப்படுகையில் (அவருக்குச் சிலசெயல்கள் செய்யப்படுகையில்: உதாரணமாக, "அவன் சுமக்கப்பட்டான்") "செயப்பாட்டுவினை" பயன்படுத்தப்படுகிறது.* [16]*ஒரு வார்த்தையானது "நான்காம் வேற்றுமை உறுபில்" இருக்கையில், அது தனக்கு முன்பாக முன்னிடைச்சொல் ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும். வசனப் பகுதியில் முன்னிடைச்சொல் காணப்படுவதில்லை என்றால், சந்தர்ப்பப்பொருளின் அடிப்படையில் முன்னிடைச்சொல் ஒன்று அளிக்கப்பட வேண்டும்.* [17]Morris, 212. [18]*The Analytical Greek Lexicon*, 328-29, 423-24. [19]G. Delling, *"plērophoreō,"* in Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament*, ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 871. [20]Adapted from Donald Grey Barnhouse, *God's Remedy: Romans 3:21-4:25* (Grand Rapids, Mich.:

Wm. B. Eerdmans Publishing Co., 1954), 311-12. *பார்ன்ஹவுஸ், ஆபிராம் என்பதற்கு ரோமர் 4ன் மீதான நமது படிப்பில் நாம் பயன்படுத்தியுள்ளதில் இருந்து சற்றே மாறுபட்ட அர்த்தத்தைக் கொடுத்தார்.*

[21]Adapted from Charles R. Swindoll, *Coming to Terms with Sin: A Study of Romans* 1-5 (Anaheim, Calif.: Insight for Living, 1999), 74. [22]C. E. B. Cranfield, *Romans: A Shorter Commentary* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 96. [23]*3:23ஐப் பற்றிய நமது கலந்துரையாடலில் நாம் "அக்கிரமம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள ஒரு வார்த்தையைப்பற்றிப் படித்தோம். இங்கு சற்றே மாறுபட்ட வார்த்தையொன்று பயன்படுத்தப்பட்டுள்ளது: paraptomia (இது, pipto* ["*விழ*"] *என்பதில் இருந்து பெறப்பட்டு para என்பதினால் வலுவூட்டப்பட்டுள்ளது). இவ்வார்த்தை, "புறம்பே விழுதல்" என்பதைக் குறிக்கிறது.* [24]*தொடக்ககாலக் கிறிஸ்தவர்களால் பயன்படுத்தப்பட்ட "விசுவாசக்கூற்று" ஒன்றைப் பவுல் பயன்படுத்தினார் என்று பல எழுத்தாளர்கள் ஆலோசனை தெரிவிக்கின்றனர். விஷயம் இதுவா அல்லவா என்பதை நாம் அறிவதில்லை. நாம் அறிய வேண்டியதெல்லாம், ஏவுதல் பெற்ற மனிதர் ஒருவர் இதை எழுதியுள்ளார், ஆகவே இது கர்த்தரிடத்தில் இருந்து வந்ததாக இருக்க வேண்டும் என்பதே.* [25]*எடுத்துக்காட்டாக,* J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* (Cincinnati: Standard Publishing, n.d.), 330. [26]Charles Hodge, *Romans*, The Crossway Classic Commentaries (Wheaton, Ill.: Crossway Books, 1993), 125. [27]R. C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 41. [28]*"கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும்" பவுலின் போதனையைப் "புரட்டுவதற்கு" செல்லக்கூடிய தூரம் பற்றி நான் திகைப்படைகிறேன் (2 பேதுரு 3:15, 16ஐக் காணவும்).* [29]Douglas J. Moo, *Romans*, The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 165. [30]Ibid., 167.

[31]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 526. [32]Bell, 36-37. [33]Adapted from Harold T. Bryson, "Faith," *Illustrating Paul's Letters to the Romans,* comp. James F. Hightower (Nashville: Broadman Press, 1984), 31-32.

20

உங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்க மூன்று சத்தியங்கள்

(5:1-8)

ரோமர் 5ம் அதிகாரமானது பவுலின் சிந்தனையின் படிப்படியான வளர்ச்சியில் எவ்வாறு பொருந்துகிறது என்பதுபற்றி எழுத்தாளர்கள் கருத்து வேறுபடுகின்றனர். சிலர் இந்த அதிகாரம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் மீதான பவுலின் போதனையை உச்சப்படுத்துகிறது என்று நினைக்கிறவேளையில், மற்றவர்கள் இதைப் பின்தொடரும் மற்ற அதிகாரங்களுடன் இடுகின்றனர். இது நீதிமானாக்கப்படுதல் மற்றும் பரிசுத்தமாக்கப்படுதல் என்ற இரண்டு ஆய்வுக்கருத்துகளுக்கு இடையில் ஒரு பாலமாகச் செயல்படுகிறது.

3:21-4:25ல், பவுல் நீதிமானாக்கப்படுதல் என்பது விசுவாசத்தின் அடிப்படையிலேயே அமைகிறது என்பதைக் காண்பிக்க வேதவசனங்களையும் தர்க்கவாதத்தையும் பயன்படுத்தினார். இப்போது, அந்த கொள்கையை நிலைநாட்டியுள்ள நிலையில், நீதிமானாக்கப்பட்டிருத்தலின் ஆசீர்வாதங்களைப் பட்டியலிடுவதற்கு அவர் தயாரானார். வில்லியம் பார்க்ளே என்பவர், ரோமர் 5ம் அதிகாரத்தின் முதல் பகுதியானது, பவுலின் "பாடல் வசனப்பகுதியாக உள்ளது, இதில் அவர் தேவன்மீது தான் கொண்டுள்ள தைரியமான நம்பிக்கையினாலான உள்ளான சந்தோஷத்தை ஏறக்குறையப் பாடுகிறார்" என்று எழுதினார்.[1] R. C. *பெல் என்பவர், "கிறிஸ்தவத்தின் எல்லையற்ற ஆதாரமூலத்தை விளிம்பு வரை நிரம்பிவழியும் நிலையில் கொண்டுள்ள வேறொரு வேதவசனத்தைக் காண்பது மிகவும் அரிது" என்று கூறினார்.*[2]

இந்த மற்றும் இதற்கு அடுத்த பாடங்களில், நாம் 5:1-11ஐப் பற்றிப் படிப்போம். இவ்வசனப்பகுதி பவுல் பல கடினமான சோதனை வேளைகளில் உயிர்பிழைத்திருக்க (2 கொரிந்தியர் 11:23-29ஐக் காணவும்) - அவற்றைச் சகித்திருக்க மாத்திரமல்ல, ஆனால் அவற்றின் மீது வெற்றிகொண்டிருக்க - முடிந்தது எவ்வாறு என்பதை நாம் புரிந்துகொள்ள உதவுகிறது (ரோமர் 8:37ஐக் காணவும்). அவர் எந்த இடர்ப்பாடுகளை எதிர்கொண்டிருந்தாலும், அவர் சமாதானமும் நம்பிக்கையும் கொண்டிருந்தார் (5:1, 2, 4, 5). அவர் தம்மைத் தேவன் அன்புகூர்ந்தார் என்பதை அறிந்திருந்தார் (5:5-9). அவரது விரோதிகள் அவரைக் கொன்று போட்டாலும், அவர் நித்தியத்திற்கும் இரட்சிக்கப்பட்டிருப்பார் - அவர் தேவனுடன் மகிமையில் இருப்பார் என்று அவர் அறிந்திருந்தார் (5:2, 9, 10).

பவுல் தாம் போதித்தவர்களுடன் இந்த உறுதிப்பாட்டைப் பகிர்ந்து கொள்ள விரும்பினார். நாம் போதிக்கிற ஒவ்வொருவரும்கூட ரோமர் 5:1-11ன் சத்தி

யங்களை அறிதல் அவசியமாக உள்ளது. குறிப்பாக, நாம் *நமது பிள்ளைகளின்* சிந்தைகளில் இந்தக் கருத்துக்களைப் பதிய வைத்தல் அவசியமாக உள்ளது.[3] நான் இப்பாடத்தை "உங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்க மூன்று சத்தியங்கள்" என்று அழைக்கிறேன்.

போராட்டம் இல்லாதபோதல்ல, ஆனால் கர்த்தருடைய பிரசன்னத்திலேயே சமாதானம் காணப்படுகிறது (5:1, 2)

"சமாதானத்தைத் தேடுதல் என்பது உலகளாவிய வகையில் மனிதரை ஆட்டிப்படைக்கும் செயலாக உள்ளது,"[4] ஆனால் சமாதானம் என்பது போராட்டம் இல்லாதநிலை என்பதாகப் பெரும்பான்மையானவர்கள் நினைக்கின்றனர். சிலவேளைகளில் அமைதியின் நிலையொன்று அவ்வப்போது நிலவுகிறது, ஆனால் ஒரு விஷயம் உறுதியானதாக உள்ளது: அது விரைவிலேயே சிதறடிக்கப்படும். பாவத்தினால் நோய்ப்பட்ட இந்த உலகத்தில் கொந்தளிப்பு என்பது விதிவிலக்காக அல்ல, ஆனால் விதியாக உள்ளது. நமது பிள்ளைகள், வாழ்வின் உண்மைநிலைக்குத் தயாராக இருக்க வேண்டுமென்றால், உண்மையான சமாதானம் என்பது போராட்டம் இல்லாத நிலையில் அல்ல, ஆனால் கர்த்தருடைய பிரசன்னத்தில்தான் உள்ளது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நாம் சமாதானம் பெற்றுள்ளோம்! (வசனம் 1)

பவுல் 5ம் அதிகாரத்தை "இவ்விதமாக" என்று தொடங்கினார். இந்த அதிகாரத்தில் அவர் கூறவந்த விஷயமானது, நீதிமான்களாக்கப்படுதல் பற்றிய முந்திய கலந்துரையாடலின் அடிப்படையில் அமைந்திருந்தது. "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், ... தேவனிடத்தில் சமாதானம்[5] பெற்றிருக்கிறோம்" (வசனம் 1). நாம் நியாயப்பிரமாணத்தைப் பூரணமாகக் கடைப்பிடிக்க இயலாது என்பதால், நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமையானது சலிப்பையும் சந்தேகத்தையும் உண்டாக்குகிறது. இதற்கு எதிரிடையாக, தேவனுடைய கிருபை/விசுவாசம் முறைமையானது சமாதானத்தை விளைவிக்கிறது.

"தேவனுடன் சமாதானம்" என்ற சொற்றொடர் எண்ண உணர்வையல்ல, ஆனால் மெய்மையான சத்தியத்தைக் குறிக்கிறது: நாம் நீதிமான்களாக்கப்பட்டுள்ளதால், நாம் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டுள்ளோம் (வசனங்கள் 10, 11). நாம் இனியும் தேவனுக்குப் பகைஞரல்ல, ஆனால் அதற்கு மாறாக நாம் அவருக்குச் சிநேகிதர்களாக இருக்கிறோம். "வெறுப்புணர்வுகள் முடிந்து போயின; சமாதான உடன்படிக்கை கையெழுத்தாகியுள்ளது."[6]

நாம் *"தேவனுடன் சமாதானம்"* கொண்டுள்ளதால், "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம்" (பிலிப்பியர் 4:7) என்ற அந்த ஆச்சரியமான உணர்வை நம்மால் மகிழ்வுடன் அனுபவிக்க முடியும். இந்த சமாதானம் என்பது உலகத்தில் எல்லா விஷயமும் [நமக்கு] சரியாக இருத்தல் என்பதைச் சார்ந்தது அல்ல; இது உணர்வுப்பூர்வமான நிறைவைக் காட்டிலும் மேலான விஷயமாக உள்ளது. தேவனுடன் இசைவிணக்கமான உறவுமுறை என்பதே இப்படிப்பட்ட சமாதா

னத்தின் ஆதாரமூலமாக உள்ளது, அந்த உறவுமுறைதான், புறம்பான சூழ்நிலைகள் எப்படியிருப்பினும் திருப்தியின் உணர்வு ஒன்றை உண்டாக்க முடியும் (5:3, 4ஐக் காணவும்). நாம் கிறிஸ்தவர்களாக இருந்து[ம்] தேவசமாதானத்தில் குறைவு இருக்கிறதென்றால், அது ஒருவேளை, நாம் தேவனுடன் சமாதானமா யிருத்தல் என்பது எதனை அர்த்தப்படுத்துகிறது என்பது முழுமையாக மதித்து உணராததாலேயே அவ்வாறு இருக்கலாம்.

நாம் "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய்" தேவனிடத்தில் இந்த சமாதானம் பெற்றிருக்கிறோம் (வசனம் 1ஆ). தேவனுடன் சமாதானம் என்பது இயேசு தமது பிதாவுடன் நம்மை ஒப்புரவாக்குவதற்காக மரித்ததினால் சாத்தியமாயிற்று (வசனங்கள் 6-8, 10, 11). 5:1-11ஐக் கண்ணோட்டமிட்டு, நமது ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவின் "மூலம்" இருக்கின்றன என்று பவுல் எவ்வளவு அடிக்கடி கூறினார் என்பதைக் கவனியுங்கள் (வசனங்கள் 1, 2, 9-11).

நாம் கிருபையில் நிற்கிறோம்! (வசனம் 2)

2ம் வசனம் பவுலின் "மூலமாய்" கூற்றுக்களில் ஒன்றுடன் தொடங்குகிறது: "அவர் [இயேசு] மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால்[7] பெற்று நிலைகொண்டிருந்து ... ."

"பெற்று" என்று தமிழிலும் "our introduction" என்று ஆங்கிலத்திலும் உள்ள சொற்றொடர், "பிரசன்னத்தில் வழிநடத்துதல் அல்லது கொண்டுவருதல்" என்று அர்த்தப்படுகிற *prosagoge* (*pros* ["to"] கூட்டல் *ago* ["to lead"]) என்ற கூட்டு வார்த்தையில் இருந்து வருகிறது.[8] இயேசு நம்மை தேவனுடைய அரியணை அறைக்கு வழிநடத்திச்சென்று, தமது முகத்தில் புன்னகையுடன், "நான் உன்னை எனது சிநேகிதனிடத்தில் அறிமுகம் செய்துவைக்கிறேன்!" என்று கூறுவதுபற்றி நாம் நினைத்துப் பார்க்கலாம்.[9]

"நாம் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை" பெற்றிருக் கிறோம் என்று பவுல் கூறினார். இது, " 'கிருபை' என்ற வார்த்தையைப் பயன்படுத்தும் அசாதாரண வழியாக உள்ளது."[10] கிருபை (*charis*) என்பது நாம் கிறிஸ்தவராகும்போது நமது பாவங்களின் குற்றத்தில் இருந்து நம்மை மீட்கிறது என்று நாம் வழக்கமாக நினைக்கிறோம். இருப்பினும், இவ்விடத்தில், "கிருபை" என்பது, நாம் நீதிமான்களாக்கப்படும்போது நாம் அறிமுகப்படுத்தப்படுகிற "*கிருபையின்நிலை*"[11]யைக் குறிக்கிறது. NEB வேதாகமத்தில், "the sphere of God's grace" என்றிருக்கையில், AB வேதாகமம் இதை "state of God's favor" என்று அழைக்கிறது.

நாம் இரட்சிக்கப்படுவதற்கு மாத்திரமல்ல, ஆனால் இரட்சிக்கப் பட்டவர்களாக *நிலைத்திருப்பதற்கும்* கிருபை தேவைப்படுகிறது. நாம் கிறிஸ்தவர் என்ற வகையில் மகிழ்வுடன் அனுபவிக்கும் *எந்த* ஆசீர்வாதத்தையும் ஈட்டவோ அல்லது அதற்கு நம்மை தகுதியாக்கிக் கொள்ளவோ முடியாது. கிருபையினால்தான் நமது அன்றாட அளிப்புகள் கிடைக்கின்றன. நாம் தொடர்ந்து பாவம் செய்கிறோம், கிருபையினால் நமது பாவங்களுக்கு மன்னிப்பு உள்ளது. கிருபையினாலேயே அன்றாடம் வாழ்விற்குப் பலம் உள்ளது. ஜான் நியூட்டன் என்பவர், "கிருபை என்னை இம்மட்டும் பாதுகாப்பாகக் கொண்டுவந்தது, மற்றும் கிருபை என்னை இல்லத்திற்கு வழி நடத்தும்" என்று

எழுதினார்.[12]

நீதிமானாக்கப்படுதல் நம்மை "நாம் நிலைகொண்டிருக்கிற" [histemi] இந்த ஆச்சரியமான கிருபையின் நிலைக்குள் கொண்டுவருகிறது என்று பவுல் கூறினார். சிலர், "நிலைகொண்டிருந்து" என்ற இச்சொற்றொடர்மூலம் பவுல் கூறநோக்கங்கொண்டு இருந்ததைவிட இதை அதிகமாக்க முயற்சி செய்கின்றனர். அவர்கள், "நாம் நிலைகொண்டிருந்து" என்பது நமது கிருபையின் நிலைப்பாடு நிரந்தரமானதாக உள்ளது, "கிருபையில் இருந்து விழுதல்" சாத்தியமற்றது என்று அர்த்தப்படுத்துவதாக விளக்கம் தருகின்றனர். பவுல், கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில், "கிருபையில் இருந்து விழுந்துபோன" சிலர் பற்றிப் பேசினார் என்ற உண்மையிருப்பினும்கூட (கலாத்தியர் 5:4; 1 கொரிந்தியர் 10:12ஐக் காணவும்), அவர்கள் இந்த விளக்கத்தை வலியுறுத்துகின்றனர்.

"நிலைகொண்டிருத்தல்" என்ற வார்த்தையானது அடிக்கடி உறுதியாய் நிலைநிற்குதலைச் சுட்டிக்காண்பிக்கிறது (எபேசியர் 6:14ஐக் காணவும்). நாம் தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர், சுயாதீனம் உள்ள ஒழுக்க முகவர்களாக இருந்தோம், நாம் அவரது கிருபையினால் இரட்சிக்கப்பட்டுள்ள பின்பும்கூட சுயாதீனமுள்ள ஒழுக்க முகவர்களாகவே நிலைத்திருக்கிறோம். நாம் கிறிஸ்தவராவதற்கு முன்னர் தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொள்ளவோ அல்லது புறக்கணிக்கவோ முடிந்திருக்கும் என்றால், நாம் கிறிஸ்தவரான பின்னரும் அதை ஏற்றுக்கொள்ளவோ அல்லது புறக்கணிக்கவோ முடியுமே. இவ்வாறு பவுல், தீமோத்தேயுவை, "கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு" என்று வேண்டிக்கொண்டார் (2 தீமோத்தேயு 2:1). பேதுரு தமது வாசகர்களிடத்தில் "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் ... வளருங்கள்" என்று கூறினார் (2 பேதுரு 3:18அ).

"நிலைகொண்டிருந்து" என்ற சொற்றொடரை அது கூறுவதற்கு அதிக மாக விளக்கம் தருவதாக ஏற்படுத்த நாம் முயற்சிசெய்யக்கூடாது, ஆனால் அதை குறைவாகக் கூறுவதாகவும் நாம் ஏற்படுத்தக் கூடாது. வார்த்தைகள் முழு உறுதிப்பாடும் தைரியமும் நிறைந்துள்ளன. AB வேதாகமத்தில், "in which we [firmly and safely] stand" *என்றுள்ளது. ரோமர் 8ல் பவுல் "தேவன் நம் பட்சத்திலிருக்கிறார்" என்று வலியுறுத்தினார் (வசனம் 31); அவர் நமது பட்சத்தில் முன்கூட்டியே அனுகூலமான நிலையில் இருக்கிறார்! அவர் நம்மை அழிப்பதற்கல்ல, ஆனால் நம்மை இரட்சிக்கவே விரும்புகிறார். நாம் தேவனுக்கு நமது முதுகைக் காண்பித்துத் திரும்ப முடியும் - கவலைக்குரிய வகையில் சிலர் இவ்வாறு செய்கின்றனர். இருப்பினும், நாம் இயேசுவில் விசுவாசம் கொண்டு அந்த விசுவாசத்தை கீழ்ப்படிதல் மூலமாக வெளிப்படுத்திக்கொண்டிருக்கும் வரையிலும், நாம் "தேவனுடைய தயவைப்பெற்ற நிலையில்" தொடர்ந்து "தேவனுடைய கிருபையின் வட்டாரத்திற்குள்" நிலைநிற்கிறோம்! அது நமது இருதயங்களுக்குச் சமாதானத்தைக் கொண்டுவரவில்லை என்றால், வேறெதுவும் அதைக் கொண்டுவராது!*

நாம் நம்பிக்கையில் சந்தோஷப்படுகிறோம்! (வசனம் 2ஆ)

தேவனுடைய கிருபை மற்றும் அது கொண்டுவரும் சமாதானம் ஆகியவற்றின் விளைவாக, ''தேவமகிமையை அடைவோமென்கிற

நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்" (வசனம் 2ஆ). 5:1-11ல், பவுல் "மேன்மைபாராட்டுகிறோம்" என்று மூன்றுமுறைகள் கூறினார் (வசனங்கள் 2, 4, 11). "மேன்மைபாராட்டுதல்" என்பது நான் வாழும் இடத்தில் சாதாரணமாகப் பயன்பாட்டில் உள்ள வார்த்தையல்ல. NIV வேதாகமம் இவ்வசனங்களில் அதிகம் பழக்கமான "rejoice" ["அகம் மகிழ்தல்"] என்ற வார்த்தையைக் கொண்டுள்ளது.

"மேன்மைபாராட்டுதல்" மற்றும் "அகம்மகிழ்தல்" ஆகியவற்றிற்கான (*kauchaomai* என்ற) கிரேக்க சொற்றொடர், இதற்கு முந்திய இடங்களில் (2:17, 23; 3:27; 4:2) "boast" [தமிழ் வேதாகமத்தில் இவ்விடங்களிலும் "மேன்மைபாராட்டல்" என்றே உள்ளது] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, சில மொழிபெயர்ப்புகள் அந்த வார்த்தையை இவ்விடத்தில் பயன்படுத்துகின்றன (NRSV; CJB; JB). நாம் செய்துள்ளவற்றைக் குறித்து *நாம்* தற்பெருமையாய்ப் பேசிக்கொண்டிருக்கக் கூடாது, ஆனால் *தேவன்* செய்துள்ளவற்றைக் குறித்து நாம் பெருமையாய்ப் பேசுவதில் தவறில்லை (1 கொரிந்தியர் 1:31; கலாத்தியர் 6:4 ஆகியவற்றைக் காணவும்). 5:11ல் பவுல் "நாம் தேவனைப்பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம்" என்று கூறினார். 15:17ல் அவர் "தேவனுக்குரியவைகளைக் குறித்து இயேசுகிறிஸ்துவைக் கொண்டு மேன்மைபாராட்ட இடம்" உள்ளதென்று உரைத்தார். இருந்தபோதிலும், நம்மில் சிலர் "rejoice" என்பதுபோன்ற வார்த்தையை மிகவும் ஆறுதலானதாக உணருகிறோம், எனவே எனது விளக்கங்களில் நான் அந்த வார்த்தையையே பயன்படுத்துவேன்.

நாம் "நம்பிக்கையி"னாலே மேன்மைபாராட்டுகிறோம் என்று பவுல் கூறினார். நம்பிக்கை என்பது முக்கியமானதாக உள்ளது; நம்பிக்கை நம்மை நிலைநிறுத்துகிறது மற்றும் நம்மைத் தொடர்ந்து முன்னேறிச் செல்லும்படி காத்துக்கொள்கிறது (எபிரெயர் 6:19ஐக் காணவும்). ஒருமுறை, ஒரு சிறுபையன் ஒரு மருத்துவமனையின் தீக்காய மையத்தில் இருந்தான். அவனது உடல்முழுவதிலும் ஏற்பட்டிருந்த மூன்றாம் நிலைத் தீக்காயங்களினால் அவன் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான். அவன் காயங்கள் ஆறி சாதாரண நிலை அடைவதை நோக்கிச் சிறிதளவே முன்னேறிக் கொண்டிருந்த வேளையில் ஒருநாள் அவனது அறைக்கு வந்த ஒரு ஆசிரியர், "நீ உனது பள்ளிப்படிப்பு பணியில் மிகவும் பின் தங்கியிருப்பதில் இருந்து உன்னை மீட்பதற்காக நான் அனுப்பப்பட்டுள்ளேன்" என்று கூறினார். அந்தப்பையனின் உடல்நிலை உடனடியாக முன்னேறத் தொடங்கிற்று. அவன், "நான் இறக்கப்போவதாக இருந்திருந்தால், அவர்கள் ஒரு ஆசிரியரை அனுப்பியிருக்க மாட்டார்கள்" என்று கூறினான்.[13] கடைசியில் அவன் நம்பிக்கை பெற்றிருந்தான்!

முந்திய பாடம் ஒன்றில் குறிப்பிடப்பட்டது போன்று, வேதாகம நம்பிக்கை என்பது விருப்பம் நிறைந்த நினைவாக மாத்திரம் அல்ல, ஆனால் விருப்பமும் எதிர்பார்ப்பும் கூடியதாக உள்ளது. பார்க்ளே என்பவர், "கிறிஸ்தவ நம்பிக்கை என்பது, பயந்து நடுங்குகிற, ஒருவேளை தேவனுடைய வாக்குத்தத்தங்கள் உண்மையானவைகளாக இருக்கலாம் என்று தயக்கமான நம்பிக்கை கொண்டிருத்தல் அல்ல. அவைகள் சத்தியத்தைத் தவிர வேறெதுவாகவும் இருக்க முடியாது என்று தைரியமாக எதிர்பார்த்திருத்தலே கிறிஸ்தவ நம்பிக்கையாகும்" என்று எழுதினார்.[14] எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், நமது நம்பிக்கை "நிலையும் உறுதியுமானதாக" உள்ளதென்று கூறினார் (எபிரெயர் 6:19).

தமது சிந்தனையைத் தொடர்ந்த பவுல், "தேவமகிமையில் [*doxa*]" நமது நம்பிக்கை உள்ளது என்று கூறினார் (வசனம் 2ஆ). இது ஒருநாளிலே நாம் தேவமகிமையைக் காண்போம் என்ற நமது நம்பிக்கையைக் குறிக்கலாம் (மாற்கு 13:26; தீத்து 2:13 ஆகியவற்றைக் காணவும்). இது பரலோகத்தில் நாம் அவரது தெய்வீக மகிமையில் பங்கடைவதை அர்த்தப்படுத்தலாம் (RSV; REB; CJB வேதாகமங்களில் காணவும்). ரோமர் 8ல், "கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" என்று பவுல் கூறினார் (வசனம் 17; 8:18; 9:23 ஆகியவற்றைக் காணவும்). இன்னொருபுறத்தில், "தேவமகிமை" என்பது பூமியின்மீது தேவமகிமையைப் பிரதிபலித்தல் பற்றிய நமது நம்பிக்கையைக் கருத்தாகத் தெரிவிக்கலாம். மனிதகுலமானது "தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கும்படி" உண்டாக்கப்பட்டது (1 கொரிந்தியர் 11:7; ஆதியாகமம் 1:26, 27; 9:6; யாக்கோபு 3:9 ஆகியவற்றைக் காணவும்), ஆனால் மனிதகுலமானது "உடைந்துபோன உருவம்" ஆகியுள்ளது. பாவம் நிறைந்த மக்கள், "அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் மற்றும் ஊரும்பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்" (ரோமர் 1:23). இருந்தபோதிலும், கிறிஸ்துவின் மூலமாக, நாம் "தேவன் நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தமது சிந்தையில் கருத்துக்கொண்டுள்ளாரோ, அவ்வாறெல்லாம் ஆக" முடிகிறது (5:2; LB). மேல்கூறப்பட்ட *யாவற்றையும்* "தேவனுடைய கிருபை" சுற்றிச் சூழ்வதற்குச் சாத்தியம் உள்ளது.

5:1-11 வசனப்பகுதி முழுவதிலும், பவுல் நீதிமானாக்கப்படுதல் என்பது கடந்த, நிகழ், மற்றும் எதிர்காலங்களில் ஆசீர்வாதங்களைக் கொண்டு வருவதால், அது அகம்மகிழக் காரணமாகிறது என்பதை வலியுறுத்தினார்:

- கடந்தகாலம்: நாம் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டிருக் கிறோம்!
- நிகழ்காலம்: நாம் தேவனுடைய கிருபையில் நிலைநிற்கிறோம்!
- எதிர்காலம்: நாம் தேவமகிமையின் நம்பிக்கை கொண்டிருக் கிறோம்!

இந்த மாபெரும் ஆசீர்வாதங்களைப் புரிந்துகொள்ளுதல் நமது இருதயங் களுக்குச் சமாதானத்தைக் கொண்டுவரவேண்டும்.

இடர்ப்பாடு உங்களை மேன்மையுள்ளவர்களாக்கு கிறதா அல்லது கசப்புள்ளவர்களாக்குகிறதா என்பதை நீங்களே தீர்மானிக்கிறீர்கள் (5:3-5அ)

"தேவனிடத்தில் சமாதானம்" பெற்றிருத்தல் என்ற பவுலின் வார்த்தைகளை அவரது வாசகர்கள் ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருக்கையில் (வசனம் 1), ஒருவேளை "ஓ, எல்லாம் சரியாக நடக்கும்வரையில், நாம் நிச்சயமாகவே தேவனுடன் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் நம்பிக்கையையும் கொண்டிருக்க முடியும். ஆனால் மோசமான வேளைகள் வரும்போது விஷயம் என்ன?" என்று நினைத்திருக்கலாம். மோசமான வேளைகள் வரும் என்பதைப்

பவுல் புரிந்துகொண்டிருந்தார். அவற்றை அவர்தாமே அனுபவித்திருந்தார். புதிதாக மனமாறியிருந்தவர்களுக்கு அவர் "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்" என்று கூறினார் (நடபடிகள் 14:22). இயேசு தமது சீஷர்களிடத்தில், "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" என்று கூறினார் (யோவான் 16:33). ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்கள், கடினமான வேளைகளை இன்னமும் அனுபவித்திருக்கவில்லை என்றால், அவர்கள் எதிர்காலத்தில் அவற்றை அனுபவிக்க இருந்தனர் (2 தீமோத்தேயு 3:12ஐக் காணவும்).

இடர்ப்பாடு என்பது தவிர்க்க இயலாததாக உள்ளது. விரைவிலேயோ, அல்லது தாமதமாகவோ, நமது பிள்ளைகள் கடுமையாகச் சோதிக்கப் படுவார்கள். வாழ்வின் கடினமான நிதர்சனங்களுக்கு அவர்களை நாம் எவ்வாறு தயார்ப்படுத்த முடியும்? துன்புறுதலின் மதிப்புமீதான புதிய ஏற்பாட்டின் மாபெரும் வேதவசனப்பகுதியான ரோமர் 5:3-5ன் சத்தியங்களை, அவர்கள் மனதில் பதியவைத்தலைக் காட்டிலும் மேன்மையான வழி வேறு எதுவும் இல்லை.[15]

பல ஆண்டுகளுக்கு முன்பு இளைஞராயிருந்த பிரிட்டன் நாட்டுத் தூதர் ஒருவர், சீப்புருத்தீவின் ஆளுநராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார், அப்போது அவர் அரசியலில் கொதிக்கும் சூழ்நிலை ஒன்றில் தாம் இருந்ததைக் கண்டறிந்தார். கவலைப்பட்ட அவரது தந்தையார் அவருக்கு ஆறே ஆறு வார்த்தைகள் கொண்ட தந்தி ஒன்றை ஆனுப்பியிருந்தார்: "இரண்டு கொரிந்தியர் நான்கு, எட்டு மற்றும் ஒன்பது." அந்த இளம் ஆளுநர் வேத வசனப் பகுதியை வாசித்தார்: "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிற தில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை, கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை" (2 கொரிந்தியர் 4:8, 9). தனது தந்தையின் மனநிலைக்கு நிம்மதி அளிப்பதற்காக அந்த இளைஞர் ஐந்து வார்த்தைகளைத் தந்தியில் திருப்பி அனுப்பினார்: "ரோமர் ஐந்து, மூன்று மற்றும் நான்கு." இவ்வசனம் நமது வசனப்பகுதியின் பாக மாக உள்ளது: "அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்" (ரோமர் 5:3, 4).[16]

"உபத்திரவங்கள்" (வசனம் 3)

3ம் வசனம், "அது மாத்திரமல்ல [நாம் நல்வேளைகளில் அகம்மகிழ்வது மாத்திரமல்ல], ஆனால் உபத்திரவங்களிலேயும் மேன்மைபாராட்டுகிறோம்" என்று தொடங்குகிறது [தமிழ் வேதாகமத்தில் இது 4ம் வசனமாக உள்ளது]. "உபத்திரவங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "அழுத்துகிற ஒரு அழுத்தம் என்ற முதன்மை அர்த்தம் தருகிற" *thlipsis* என்பதன் பன்மை வடிவமாக உள்ளது.[17] இது ஒலிவ விதைகளில் இருந்து எண்ணெய் அல்லது திராட்சக் கனிகளில் இருந்து ரசத்தைப் பிழிந்தெடுத்தலை விவரிக்கப் பயன்படுத்தப்பட்ட அதே வகையான வார்த்தையாக இருந்தது. "உபத்திரவங்கள்" என்று வரும் இடத்தில், AB வேதாகமம் "pressure and affliction and hardship" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது. பல விஷயங்கள் கிறிஸ்தவரை

"அழுத்த" கூடும்: "தேவை மற்றும் தொல்லையூட்டும் சூழ்நிலைகள், வருத்தம், துன்புறுத்தப்படுதல், பிரபலமற்றதன்மை, மற்றும் தனிமைப்படுத்தப்படுதல்."[18] உலகவரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில், "உபத்திரவம்" என்ற வார்த்தை மரணத்தின் அச்சுறுத்துதலை உள்ளடக்கியிருந்துள்ளது.

உபத்திரவங்கள் வரும்போது - அவைகள் வரும் - நமது எதிர்ச்செயல் என்னவாக இருக்க வேண்டும்? புலம்புதல் மற்றும் பெருமூச்சுவிடுதல், முணுமுணுத்தல், மற்றும் முறையிடுதல் என்பவையே பொதுவான எதிர்ச்செயல்களாக உள்ளன. நம்மில் சிலர், உபத்திரவங்கள் வெறுமனே சகிக்கப்பட வேண்டியவை என்று நினைக்கிறோம். இருப்பினும், பவுல் நமக்குப் பிரச்சனைகள் வரும்போது நாம் *சந்தோஷப்பட வேண்டும்* என்று கூறினார். சந்தோஷப்படுதல்? அதை நான் சரியாக வாசித்தேனா? ஒரு மனிதர் தனது முகத்தில் பெரிய புன்னகையுடன் இல்லத்திற்கு வந்து தன் மனைவியிடத்தில், "இன்று உண்மையிலேயே எனக்கு ஒரு நல்ல நாளாக இருந்தது! நான் ஒரு கிறிஸ்தவனாக இருப்பதற்காக நாள் முழுவதும் பிறரால் இகழப்பட்டேன், அனேகமாக நான் என் வேலையை இழக்கப்போகிறேன். அது மிக நல்ல விஷயமல்லவா?" என்று கூறுவதாகக் கற்பனை செய்துபாருங்கள்.[19]

நமது வாழ்வில் உபத்திரவம் வந்துள்ளது என்பதற்காக மாத்திரம் நாம் சந்தோஷப்பட வேண்டும் என்று பவுல் கூறவில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். அவர் வேதனையில் சந்தோஷப்படுகிற வேதனையில் மகிழ்வடையும் நிலையைப் பரிந்துரைக்கவில்லை. மாறாக, அவர் தவிர்க்க முடியாத நிகழ்வுகளும் உபத்திரவங்களும் வரும்போது, சந்தோஷப்படுவதற்கு அப்போதும்கூட நாம் காரணங்கள் கொண்டிருக்க வேண்டும் - ஏனென்றால், நம்மை மேன்மையான மக்களாக்கத் தேவன் நமது பிரச்சனைகளைப் பயன்படுத்தக்கூடும். உபத்திரவம் என்பது *கசப்பான* மரமாக இருக்கலாம், ஆனால் அது ஒரு *கனியற்ற* மரமாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை;[20] அது ஆச்சரியமான கனியை உண்டாக்கக்கூடும்.

"பொறுமை" (வசனம் 3)

பவுல் நிகழ்ச்சிகளின் வரிசையொன்றை வரைகுறிப்பிடுவதன்மூலம், நாம் உபத்திரவங்களில் எவ்வாறு அகம்மகிழ முடியும் என்பதை விளக்கினார். அவர், "உபத்திரவம் பொறுமையையும் … உண்டாக்குமென்று நாங்கள் [விசுவாசத்தினால்] அறிந்து"[21] என்று கூறினார் (வசனம் 3). "Perseverance" என்பது *hupomone* என்ற வார்த்தைகளில் இருந்து வருகிறது, இது "[கடினமான சூழ்நிலையின்]கீழ் நிலை நிற்குதல்" என்று அர்த்தப்படுகிறது.[22] இது என்ன நடந்தாலும் - தொடர்ந்து செல்வதற்கு - நிலையாகவும் உறுதியாகவும் நிலைத்து இருத்தலைக் குறிக்கிறது. டேல் ஹார்ட்மேன் என்பவர், இது காலையில் எழுந்து நமது உடைகளை அணிந்துகொண்டு, இன்னும் ஒருநாள் கிறிஸ்துவுக்காக வாழத் தீர்மானம் செய்வதைக் குறிப்பதாகக் கருத்துத் தெரிவித்தார்.[23] அந்த வார்த்தையை பார்க்ளே என்பவர் "fortitude" என்று மொழிபெயர்த்து, இது "செயலற்றவகையில் [வெறுமனே] சகித்துக் கொண்டிருத்தலாக இல்லாமல், ஆனால் வாழ்வின் சோதனைகளையும் உபத்திரவங்களையும் செயல் முனைப்புடன் மேற்கொள்ளுதலாக இருக்கிறது என்று கூறினார்."[24]

சோதனைகளில் இருந்து நேர்மறையான விளைவுகள் தானாகவே

ஏற்படுவதில்லை. பல மக்களுக்கு துன்புறுதல் என்பது சகிப்புத் தன்மையை அல்ல, ஆனால் கசப்புணர்வையும் மனமுறிவையும் உண்டாக்கு கிறது. உபத்திரவத்தை *விசுவாசத்துடன்* நாம் சந்தித்தால் மாத்திரமே அது பொறுமையைக் கொண்டுவரும். நாம் நமது திராணிக்கு மிஞ்சி சோதிக்கப்பட தேவன் அனுமதிக்கமாட்டார் என்று விசுவாசிக்கிறோம் (1 கொரிந்தியர் 10:13). தேவன் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாகவே நடத்துவார் என்று விசுவாசிக்கிறோம் (ரோமர் 8:28). தேவனுடைய உதவியுடன் நம்மை சோதனைகள் மேன்மையான மக்களாக்க முடியும் என்று விசுவாசிக்கிறோம்.

சோதனைகள் *எவ்வாறு* நம்மை மேன்மையானவர்கள் ஆக்க முடியும்? கொள்கை மிகவும் பழக்கமானதாக உள்ளது. ஒரு தசையானது எதிர்க்கப் பட்டாலன்றி, அது பலமாக வளர இயலாது. உலோக மூலகம் நெருப்பினூடே கடந்து சென்றாலன்றி, அது தூய்மையாக்கப்பட்ட உலோகமாக இயலாது. அதுபோலவே (நினைப்பு மகிழ்வற்றதாக இருந்தாலும்), சோதனைகளின்றி நாம் ஆவிக்குரிய வகையில் இருக்கவேண்டிய பிரகாரமாக ஒருக்காலும் இருக்க இயலாது. டேல் ஹார்ட்மேன் என்பவர் ஆக்லஹாமா கிறிஸ்தவக் கல்லூரியிலிருந்து பட்டம்பெற்றபோது, அவரது ஆசிரியரும் அவரது வழிகாட்டியுமான, ஹியூகோ மெக்கார்டு என்பவர், "உங்களைப் பயன் நிறைந்தவராகக் காத்துக்கொள்வதற்குப் போதுமான அளவு சோதனைகளைத் தேவன் உங்களுக்கு அனுப்ப வேண்டும் என்று நான் ஜெபித்துக்கொள்கிறேன்" என்று கூறினார்![25]

"பரீட்சை" (வசனம் 3)

அடுத்ததாகப் பவுல், "பொறுமை பரீட்சையையும் [உண்டாக்குகிறது]" என்று கூறினார் (வசனம் 3). "பரீட்சை" என்பது *dokime* என்ற வார்த்தையில் இருந்து வருகிறது, இது "புதிய ஏற்பாட்டில் சுத்தமாகப் பவுலுக்கே உரிய வார்த்தையாகும் … இது 'சோதித்தல்' [*dokimazo*] என்ற வார்த்தையுடன் தொடர்புடையது, மற்றும் இது சோதிக்கப்படுதலுக்கு நிலைநிற்கும் பண்பாக உள்ளது."[26] தீவிரமான பிரச்சனை எதையும் கொண்டிராத கிறிஸ்தவர் சோதிக்கப்படாத கிறிஸ்தவராக இருக்கிறார். தனக்கு ஏற்படும் சோதனைகளைத் தேவனு டைய உதவியுடன் வெற்றிகரமாகச் சந்தித்திருக்கும் ஒருவர்/ஒருத்தி, ''சோதிக்கப்பட்டவரா[ளா]க''வும் ''நிரூபிக்கப்பட்டவரா[ளா]க''வும் இருக்கிறார்[ள்]. புதிதாய் வேலைக்குத் தேர்ந்துகொள்ளப்பட்டுள்ளவருக்கும் யுத்தத்தினால் சோதிக்கப்பட்ட அனுபவசாலிக்கும் இடையில் வேறுபாடு உள்ளது. கிறிஸ்துவுக்குள் "குழந்தை"யாக இருப்பதற்கும் தேவனுடைய "பக்குவப்பட்ட" பிள்ளையாக இருப்பதற்கும் இடையில் வேறுபாடு உள்ளது (எபிரெயர் 5:13, 14). "பரீட்சிக்கப்பட்ட" ஒரு கிறிஸ்தவர் நம்பிக்கைக்கு உரியவராகவும் சார்ந் திருக்கப்படக் கூடியவராகவும் உள்ளார். அவர் கடந்தகாலத்தில் தம்மை விசுவாசம் நிறைந்தவராகக் காண்பித்திருப்பதால், சகோதரர்கள் அவரைச் சார்ந்திருக்க தயங்கமாட்டார்கள்.

"நம்பிக்கை" (வசனம் 3)

"பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறது" என்று கூறுவதன்மூலம் பவுல் தமது கூற்றுவரிசையை நிறைவுசெய்தார் (வசனம் 3). கர்த்தருக்குள்

விசுவாசத்துடன் நாம் நமது உபத்திரவங்களை சந்திக்கும்போது, நாம் பொறுமையாயிருக்கக் கூடியவர்கள் ஆகிறோம். பொறுமையாயிருப்பதினால் நாம் "பரீட்சையைச் சந்திக்கிறோம்" மற்றும் ஆவிக்குரிய வகையில் பக்குவப்படுகிறோம். இவை யாவும் நம்மை, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிச்சயமானவை என்று நம்பி இணங்கச் செய்கின்றன (2 கொரிந்தியர் 1:20ஐக் காணவும்). தேவன் ஒருபோதும் நம்மை விட்டு விலகுவதும் இல்லை நம்மைக் கைவிடுவதும் இல்லை என்று வாக்குத்தத்தம் செய்தார் (எபிரெயர் 13:5), மற்றும் அவர் அவ்வாறு செய்ததில்லை. தேவன் நமது திராணிக்குமிஞ்சி நாம் சோதிக்கப்பட இடங்கொடுப்பதில்லை என்று வாக்குத்தத்தம் செய்தார் (1 கொரிந்தியர் 10:13), மற்றும் அவர் அவ்வாறு செய்வதில்லை. அவர் நமது வாழ்வில் ஈடுபாடு கொண்டு, சகலத்தையும் நமது நன்மைக்கு ஏதுவாக நடப்பிப்பதாக வாக்குத்தத்தம் செய்தார் (ரோமர் 8:28), மற்றும் அவர் தமது வார்த்தைக்கு உண்மையுள்ளவராக இருக்கிறார். இவ்வாறு தேவனுக்குள்ளும் அவரது வாக்குத்தத்தங்களுக்குள்ளும் நாம் கொண்டுள்ள நம்பிக்கை, *நாளுக்குநாள் வளருகிறது.*

பவுலின் கூற்றுவரிசைத் தொடர் நம்பிக்கையைக் கொண்டு அறிமுகப் படுத்தப்பட்டு (வசனம் 2), நம்பிக்கையைக் கொண்டு முடிகிறது (வசனம் 3). இதை நாம் "உள்ளிணைவுகொண்ட பயன்களின் வட்டம்" என்ற வகையில் நினைக்கலாம்.[27]



பவுல், "அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது" என்று கூடுதலாகக் கூறினார் (வசனம் 5ஆ). "வெட்கப்படுத்தாது" என்பது "வெட்கப்படுத்துதல்" (*aischuno* ["வெட்கம்"] என்பது *kata* என்பதால் பலப்படுத்தப்பட்ட) *kataischuno* என்ற வார்த்தையிலிருந்து வருகிறது. "வெட்கம்" [இது ஆங்கிலத்தில் "disappoint" என்றுள்ளது] என்பது 1:16ல் "வெட்கப்படுத்துதல்" என்பதற்குரிய அதே வேர்வார்த்தையைக் கொண்டுள்ளது. பவுலின் சிந்தனை பல்வேறு வழிகளில் விளக்கியுரைக்கப்பட முடியும். நமது நம்பிக்கை நம்மை ஒருபோதும் சங்கடப்படுத்தாது; அது நம்மைக் கீழாக்க அனுமதிக்காது. நாம் சிலவற்றைப் பெறுவோம் என்று நம்பி எதிர்பார்த்திருந்து அதைப் பெற வில்லை என்று மற்றவர்களிடத்தில் கூறுதல் மிகவும் சங்கடத்திற்கு உரியதாக உள்ளது - ஆனால் ரோமர் 5ல் உள்ள நம்பிக்கை அப்படிப்பட்டதல்ல.

தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளது எதுவோ, அது நடைபெறும். கர்த்தர்மீது நாம் கொண்டுள்ள நமது நம்பிக்கை நம்மைக் கீழாக்காது, ஏனென்றால் கர்த்தர் நம்மைக் கீழாக்கமாட்டார்.

நீங்கள் கொண்டுள்ள நிலைப்பாடு பற்றி நான் அறிவதில்லை. ஒருவேளை நீங்கள் இயல்பாகவே அனைத்திலும் நன்மையே விளையும் என்ற எண்ணப்போக்கு உடையவராக இருக்கலாம். ஒருவேளை நீங்கள் தீமையே விளையும் என்ற எண்ணப்போக்கிற்குச் சாய்ந்தவராக இருக்கலாம், அல்லது நீங்கள் உங்களை உண்மை வாதி என்று அழைக்கலாம். இருப்பினும், ஒரு கிறிஸ்தவர் என்ற வகையில், மிகவும் முக்கியமான விஷயத்தைப் பொறுத்தமட்டில் நீங்கள் "எதிலும் நன்மையே விளையும் என்ற எண்ணப்போக்கு" உடையவராக இருக்கமுடியும்: நீங்கள் எதிர்காலத்திற்காக நம்பிக்கை கொண்டிருக்கவும் நீங்கள் ஏமாற்றம் அடையமாட்டீர்கள் என்று அறியவும் முடியும்.

இதை நீங்கள் அறிவது அவசியமா? ஆம். நீங்கள் யாருக்குப் போதிக்கிறீர்களோ, அவர்கள் இதை அறிய வேண்டுமா? ஆம். உங்கள் பிள்ளைகள் இதை அறிய வேண்டுமா? நிச்சயமாக! அவர்கள் தங்கள் வாழ்வில் இடர்ப்பாடுகளை எதிர்பார்க்கக்கூடும் என்பதை அறிய அனுமதியுங்கள், ஆனால் அவர்கள் இடர்ப்பாடுகளை விசுவாசத்துடன் சந்தித்தால், அவர்களின் பிரச்சனைகள் அவர்களை மேன்மையானவர்களாக்கும், கசப்பானவர்கள் ஆக்காது! அவர்கள் இளம் வயதில் இருக்கும்போதே இதைப் புரிந்துகொள்வார்களா? அனேகமாக மாட்டார்கள் - ஆனால் அதைப் போதியுங்கள் ... மற்றும் அதை உங்கள் வாழ்வில் செயல்விளக்கப்படுத்துங்கள். ஒருநாளில், அது உங்கள் பிள்ளைகள் கர்த்தருடன் தங்கியிருக்கிறார்களா அல்லது அவரை விட்டு விலகியிருக்கிறார்களா என்பதில் வேறுபாட்டை ஏற்படுத்தக்கூடும்.

என்ன நடந்தாலும், பின்வரும் ஆச்சரியமான சத்தியத்தைப் பற்றிக்கொண்டிருங்கள்: தேவன் உங்களை அன்புகூருகிறார்! (5:5ஆ-8)

ஒவ்வொருவரும் அன்புகூரப்பட வேண்டும் என்று விரும்புகிறோம். ஒவ்வொருவரும், அவர்/அவள் யாருக்கேனும் முக்கியமானவராக இருப்பதாக உணர விரும்புகிறோம். "முணுமுணுத்தல் பரீட்சை" என்று அழைக்கப்படும் கதையொன்றுள்ளது. அது குழந்தையாயிருக்கையில் ஊனமுற்றிருந்து, உருவழிந்த நிலையில் இருந்த ஒரு பெண் எழுதிய கதையாகும். இளம்பெண் என்ற வகையில், அவள் எவரொருவரும் தன்னை அன்புசெய்வது சாத்தியமல்ல என்று உணர்ந்தாள். ஒரு பள்ளி ஆண்டின்போது, அவளது ஆசிரியர் அவளுக்கு கேட்டலில் ஒரு எளிய தேர்வைக் கொடுத்தார். கதவருகில் ஒரு மாணவி நின்று கொண்டிருக்கையில், தனது டெஸ்கில் அமர்ந்திருக்கையில் ஆசிரியர் ஒரு சில வார்த்தைகளை முணுமுணுப்பார். பின்பு அந்த மாணவி அவளது டெஸ்க் அருகில் வந்து தான் கேட்டது என்ன என்று கூறவேண்டும். அந்தப்பெண்ணின் முறை வந்தபோது, அவள் கதவருகில் நின்று முணுமுணுத்தலுக்காகக் காத்திருந்தாள். ஆசிரியர் கூறியது இதுதான்: "நீ எனது சிறுபெண்ணாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்." அந்த ஏழு வார்த்தைகள் தனது வாழ்வை மாற்றியதாக அந்தப் பெண்மணி பிற்பாடு எழுதினார்.[28]

உங்களை அன்புசெய்யப் பலரை நீங்கள் பெற்றிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன் (யோவான் 13:34), ஆனால் நீங்கள் அவ்வாறு பெற்றிருந்தாலும் இல்லையென்றாலும், அவ்வாறு செய்கிற ஒருவர் இருக்கிறார் என்பதை நீங்கள் அறியமுடியும்: அவர் கர்த்தர். பவுல் சந்தித்த பல துன்பங்களின் மத்தியிலும் அவர் பின்வரும் ஒரு உண்மையை நம்பி ஏற்றுக்கொண்டிருந்தார்: அவரைத் தேவன் அன்புகூர்ந்தார்! இதுவே அவரது சமாதானத்திற்குக் காரணமாக, அவரது சந்தோஷத்திற்கு ஆதாரமூலமாக மற்றும் அவரது நம்பிக்கைக்கு அஸ்திபாரமாக இருந்தது.

நாம் நீதிமான்களாக்கப்படுவதின் ஆசீர்வாதங்களைப்பற்றிப் பேசியிருக்கிறோம். யாரேனும் ஒருவர், "ஆனால் இந்த ஆசீர்வாதங்கள் என்னுடையவைகளாக இருக்கமுடியும் என்பதற்கு நான் பெற்றுள்ள நிரூபணம் என்ன?" என்று ஆச்சரியப்படலாம். இங்கு உங்களுக்கு நிரூபணம் உள்ளது; இங்கு வாழ்வில் உங்களுக்கு என்ன நடந்தாலும் நீங்கள் பற்றிக்கொண்டிருக்கக்கூடிய உண்மைநிலை உள்ளது: தேவன் உங்கள்மீது *அன்புகூருகிறார்* - மற்றும் அவர் தமது அன்பைத் திரும்பத் திரும்பச் செயல்விளக்கப்படுத்தி இருக்கிறார். 5 முதல் 8 வரை உள்ள வசனங்களில், பவுல் தேவனுடைய அன்பின் இரண்டு வெளிப்பாடுகளைக் குறிப்பிட்டார்.

பரிசுத்த ஆவியானவரின் வரம் (வசனம் 5ஆ)

கிறிஸ்துவுக்குள் நமது நம்பிக்கையைப் பற்றித் தொடர்ந்து பேசியதில் பவுல் "தேவஅன்பு[29] நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது" என்று கூறினார் (வசனம் 5அ, ஆ). ரோமருக்கு எழுதிய நிருபத்தில் தேவஅன்பு என்பது இங்குதான் முதன்முறையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது திகைப்புக்குரிய உண்மையாகும். பவுலின் இந்நிருபம், தேவன் நமக்குக் கிருபையாகச் செய்துள்ள எல்லாவற்றைப் பற்றியும் பேசியுள்ளது, ஆனால் இப்போது இது தேவன் *ஏன்* அவற்றைச் செய்திருக்கிறார் என்று வெளிப்படுத்துகிறது: ஏனென்றால் அவர் நம்மீது *அன்புகூருகிறார்*.

Agape என்பதே அன்பு என்பதற்கான [கிரேக்க] வார்த்தையாகும்: இது நிபந்தனையற்ற அன்பு, அன்புகூரப்படுபவருக்கு மிகச்சிறந்தவற்றை நாடுகிற அன்பு என்பதாக உள்ளது. இந்த அன்பு "நமது இருதயங்களில் ஊற்றப்[30]பட்டிருக்கிறது." "ஊற்றப்படுதல்" என்பது *ekcheo* என்ற கிரேக்க வார்த்தையினுடைய நேரடி மொழிபெயர்ப்பாகும், இவ்வார்த்தை "வெளியே" (*ek*) என்பதுடன் "ஊற்றுதல்" (*cheo*) என்பதை ஒன்றிணைத்துப் பெறப்பட்டுள்ளது.[31] அந்த "ஊற்றப்படுதல்" என்பது, தேவன் தமது அன்பில் கஞ்சத்தனமாக இருப்பதில்லை என்பதை வலியுறுத்துகிறது. பவுல், "வறண்டுகிடக்கும் நாட்டுப்புறத்தில் விழும் பெரும் மழையின் உருவகத்தை" பயன்படுத்தினார்.[32] ஹியூகோ மெக்கார்டு என்பவரின் பின்வரும் நகைச்சுவையான விளக்கத்தை நான் விரும்புகிறேன்: "தேவன் தமது அன்பை ஊற்றும்போது, அவர் ஒரு *பெரிய* வாளியைப் பயன்படுத்தினார்!"[33]

பவுல், இந்த அன்பு "நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே ... நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது" என்று கூறினார் (வசனம் 5ஆ, இ). இந்த நிருபத்தில் கடந்து செல்வதாகப் பரிசுத்த ஆவியானவர் குறிப்பிடப்பட்டுள்ளார் (1:4; 2:29), ஆனால் இதுதான் கிறிஸ்தவர்களின் வாழ்வில் ஆவியானவர் கிரியை செய்வதாகக் கூறப்படும் முதல் குறிப்புரையாகும்.[34] ஒருவர்

நீதிமானாக்கப்படுகிறபோது, அவர் கிறிஸ்துவுக்குள் மாற்றப்படுகிறபோது, அவருடைய வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் பிரவேசிக்கிறார். "எல்லா விசுவாசிகளுக்கும் அவர்களின் மறுபிறப்பின்போது அதாவது அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம்பெறும்போது (நடபடிகள் 2:38 முதல்)"[35] - "பரிசுத்த ஆவியானவர் அருளப்படுகிறார்."[36]

பரிசுத்த ஆவியானவரின் கிரியை ரோமர் 8ம் அதிகாரத்தில் கலந்துரையாடப்படும். இவ்விடத்தில், அவரது செயல்பாட்டின் ஒரு அம்சம் குறிப்பிடப்பட்டுள்ளது: தேவ அன்பு நம் இருதயங்களுக்குள் ஆவியானவர் மூலமாக ஊற்றப்பட்டுள்ளது. இதை ஆவியானவர் *எவ்வாறு* செய்கிறார் என்பதை நாம் போதனரீதியாக எடுத்துரைக்க இயலாது. அவரது அற்புதமற்ற செயல்பாட்டைப் பொறுத்தமட்டில், பரிசுத்த ஆவியானவர் தாம் ஏவிய வசனத்தின் மூலமாகக் கிரியை செய்கிறார் என்பது ஒரு திறவுகோல் வழியாக உள்ளது (எபேசியர் 6:17; 2 பேதுரு 1:21). அவர் கிறிஸ்தவர்களுக்குள்ளாக வாசம்பண்ணுகிறார் என்பதைப் பல வசனப்பகுதிகள் வலியுறுத்துகின்றன (எடுத்துக்காட்டாக, ரோமர் 8:9-11ஐக் காணவும்). மற்றும் பவுல் ரோமர் 8ல், பரிசுத்த ஆவியானவரின் கிரியையை தேவனுடைய அருளிரக்கத்துடன் நெருங்கிப் பிணைத்தபடியால் (வசனங்கள் 26-28), ஆவியானவர் "அருளிரக்கத்துடன்" கிரியை செய்கிறார் என்றும் நாம் கூறலாம். அவர் நமது வாழ்வை ஆசீர்வதிக்கும்படியாக நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துகிறார்.

பின்பு, பவுல் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது என்று கூறியபோது அவர் எதை அர்த்தப்படுத்தினார்? தேவன் தமது அளவற்ற அன்பின் ஆதாரமாக நமக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுகிறார் என்று அவர் அர்த்தப்படுத்தி இருக்கலாம் (நடபடிகள் 2:38; 5:32). பவுலின் கூற்றுப்படி, பரிசுத்த ஆவியானவரின் வரம் நமது புத்திரசுவிகாரத்தின் நிரூபணமாக உள்ளது (கலாத்தியர் 4:6). ஆவியானவர் "நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாக" தரப்பட்டிருக்கிறார் (எபேசியர் 1:14) - இது அந்த சுதந்தரத்திற்கு "முன்விலை" மற்றும் "உத்தரவாதம்" என்ற வகையில் நமக்கு அருளப்பட்டுள்ளது. இவ்வாறாக ரோமர் 5:5ஆ வசனம், "நமக்கு அருளப்பட்டுள்ள பரிசுத்த ஆவியானவரின் [தனிச்சிறப்புப் பற்றிய நமது அறிவின்] மூலமாக நமது இருதயங்களுக்குள் தேவ அன்பு ஊற்றப்பட்டிருக்கிறது" என்று பொழிப்புரை செய்யப்பட முடியும். இந்த விளக்கம் "நம்பிக்கை" பற்றிய பவுலின் வலியுறுத்தத்துடன் பிணைபடும்.

5ம் வசனம் தொடர்ந்து வரும் வசனங்களின் வெளிச்சத்தில் புரிந்து கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது என்பது இன்னொரு சாத்தியக்கூறு ஆகும். தேவன் தமது குமாரனைப் பலியாக ஒப்புக்கொடுத்ததில் தேவனுடைய அன்பின் மிகமேன்மையான உதாரணம் உள்ளது (5:6-8). இதைப்பற்றி நாம் ஆவியானவரால் ஏவப்பட்ட வேதவசனங்களின் மூலமாக அறிகிறோம். ஆகையால் பவுல், "[வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி அவரது அன்பை நாம் அறிகிறவகையில்] நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியானாலே தேவனுடைய அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது" என்று கூற முடிந்தது.

மேலே தரப்பட்டுள்ளது போன்ற விளக்கங்களில் பல விளக்கவுரையாளர்கள் திகைப்படைகின்றனர். "நம்முடைய இருதயங்களில்" என்ற

சொற்றொடர், ஆவியானவரின் பகுதியில் அதிக சுயமான மற்றும் நேரடியான செயல்பாட்டை அவசியப்படுத்துகிறது என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர். அவர்கள், தங்கள் இருதயங்களில் "இதமான உணர்வுகளுடன்" ஆவியானவர் பெருக்கெடுப்பதாக எழுதுகின்றனர்; சிலர் முற்றிலும் பாடல் இசைப்பவர்கள் ஆகின்றனர். நம்மீது தேவன் கொண்டுள்ள அன்பை அறிதல் என்பது இருதயத் திற்கு இதமான உணர்வுகளால் நம்மை நிரப்ப வேண்டும் என்பதை நான் மறுக்கவில்லை - ஆனால் "இதமான உணர்வுகள்" பெருக்கெடுக்காத *வேளைகள் பற்றிய விஷயம் என்ன? அது தேவன் நம்மை இனியும் அன்புகூருவதில்லை என்று அர்த்தப்படுத்துகிறதா? இல்லையே. அது, உணர்வுகள் தடுமாறுகின்றன, அதாவது உணர்வுகள் நமது ஆவிக்குரிய சூழ்நிலைக்கு நம்பகமான அளவுகோல் அல்ல என்று மாத்திரம் அர்த்தப்படுத்துகிறது.*

கிறிஸ்துவின் மரணம் (வசனங்கள் 6-8)

தேவ அன்புக்கு அப்போஸ்தலரின் முதல் உதாரணம் தெளிவற்றதாக இருக்கலாம், ஆனால் இரண்டாவது உதாரணம் அப்படி இருப்பதில்லை. அது வரலாற்றில் குறிப்பிடப்பட்ட ஒரு உண்மையாக உள்ளது: ரோமச் சிலுவையில் கிறிஸ்துவின் மரணம். பவுல் பின்வருமாறு கூறினார்,

> *அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் (வசனம் 6-8).*

இவ்வசனப்பகுதி [ஆங்கிலமொழியில்] "கிறிஸ்து நமக்காக மரித்தார்" என்ற வார்த்தைகளுடன் முடிகிறது. அது "கிறிஸ்து மரித்தார்" என்று மாத்திரம் கூறியிருந்தால், அது கவலைக்குரியதாக இருந்திருக்கும்; ஆனால் அது "கிறிஸ்து நமக்காக *மரித்தார்" என்று கூறுகிறது - மற்றும் அது இரட்சிப்பாக உள்ளது! கிறிஸ்துவின் மரணம் தேவ அன்பின் செயல்விளக்கமாக உள்ளது.* NCV *வேதாகமம், "ஆனால் தேவன் நம்மீதுள்ள தமது அன்பை இவ்வாறு காண்பிக்கிறார்: கிறிஸ்து நமக்காக மரித்தார் ..." (வசனம் 8) என்று கூறுகிறது.*

சிலவேளைகளில், பயங்கரமான விஷயங்கள் ஏன் நடைபெற்றுக் கொண்டிருந்தன என்று புரிந்துகொள்ளுதல் பவுலுக்குக் கடினமானதாக இருந்தி ருக்க வேண்டும். அவர் அவ்வப்போது, சகலமும் நன்மைக்கேதுவாக நடப்பது எப்படி என்று ஆச்சரியம்/திகைப்பு அடைந்திருக்க வேண்டும். இருப்பினும், அவை எல்லாவற்றினூடேயும், அவர் தம்மீது தேவன் கொண்டுள்ள அன்பில் தைரியமாயிருந்தார். அவர் [தேவன்] தமது குமாரனை சிலுவையில் மரிக்கும்படி அனுப்பியதன் மூலம் அந்த அன்பை நிரூபித்திருந்தார்! பவுல், கலாத்தியருக்குத் தமது நிருபத்தை எழுதச்சொல்லுகையில் அவரது குரலில் ஏறக்குறைய ஆச்சரியத்தைக் கேட்க முடியும்: "என்னில் அன்புகூர்ந்து, எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனை ..." (வசனம் 2:20).

நீங்களும் நானும் வாழ்வின் சோதனைகளில் உயிர்பிழைக்க வேண்டும் என்றால், நாம் பின்வரும் சத்தியத்தைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும்:

"கிறிஸ்து *என்மீது* அன்புகூர்ந்து *எனக்காகத்* தம்மையே அர்ப்பணித்தார்." இதை நாம் எல்லாருடனும் பகிர்ந்துகொள்ள வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் திகைப்புக்குரிய இந்தச் சத்தியத்தை நமது பிள்ளைகளுக்கு கற்பிக்க வேண்டும். வாழ்வில் அவர்களுக்கு என்ன நடந்தாலும், அவர்கள் பின்வரும் சத்தியத்தைப் பற்றிக்கொண்டிருக்க முடியும்: தேவன் அவர்கள்மீது *அன்புகூருகிறார்!* அவர்களுக்காக அவர் தமது குமாரனை அனுப்பியபோது வழக்கிட இயலாத நிரூபணத்தைக் கொடுத்தார்!

முடிவுரை

உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் எவ்வகையான பாரம்பரியத்தை விட்டுச் செல்லுவீர்கள்? சிலர் தங்கள் பிள்ளைகளுக்கு பணம் அல்லது சொத்துக்களை விட்டுச்செல்லுதல் பற்றி அக்கறையாயுள்ளனர். "பொருள்கள்" என்பவை தாங்கள் தரக்கூடிய மிகமுக்கியமான பாரம்பரியம் அல்ல என்பதைப் பலர் அறியாதிருக்கின்றனர். ஒரு சவ அடக்கத்தில் பிரசங்கிக்கும்படி என்னிடம் கேட்டுக்கொள்ளப்படும்போது, அடக்கத்திற்கு முன்னர் அந்தக் குடும்பத்தாரைச் சந்திக்க நான் முயற்சி செய்வதுண்டு. இறந்துபோனவரின் பிள்ளைகளிடத்தில் நான், "உங்கள் அம்மாவை [அல்லது அப்பாவை] பற்றி நீங்கள் ஒரு வார்த்தையில் எப்படி விவரிப்பீர்கள்?" என்று கேட்பேன். பொதுவாக நான் "நேர்மையானவர்," "பொறுமையானவர்," மற்றும் "அன்புள்ளவர்" என்பது போன்ற வார்த்தைகளைக் கேட்பதுண்டு. ஒரு மகனோ அல்லது மகளோ, "பணக்காரர்" அல்லது "வெற்றிநிறைந்தவர்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதை நான் ஒருக்காலும் கேள்விப்பட்டதில்லை. நான் இந்தப் பாடத்தில், நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்குப் பாரம்பரியமாக விட்டுச்செல்லக்கூடிய மிகவும் விலைமதிப்புள்ள விஷயங்களாகப் பின்வரும் மூன்று சத்தியங்களை உங்களுக்கு ஆலோசனையாகத் தெரிவித்துள்ளேன்:

- #1 உண்மையான சமாதானம் என்பது போராட்டம் இல்லாத போதல்ல, ஆனால் கர்த்தரின் பிரசன்னத்தில்தான் காணப்படுகிறது.
- #2 இடர்பாடுகள் உங்கள் மேன்மையாக்குகிறதா அல்லது கசப்புள்ளவர்களாக்குகிறதா என்பதை நீங்களே தீர்மானிக்கிறீர்கள்.
- #3 என்ன நடந்தாலும், பின்வரும் ஆச்சரியமான சத்தியத்தைப் பற்றிக் கொண்டிருங்கள்: தேவன் உங்கள்மீது அன்புகூருகிறார்!

நீங்கள் இந்த சத்தியங்களை உங்கள் பிள்ளைகளுக்குப் போதிப்பது மட்டுமின்றி, இவற்றை நீங்களே விசுவாசிக்கிறீர்கள் என்பதை உங்கள் வாழ்வினால் *காண்பிக்கவும்* வேண்டும். நீங்கள் ஒரு கிறிஸ்தவர் ஆகி பின்பு கர்த்தரில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ள கிறிஸ்தவராக *வாழ வேண்டும்.* நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இல்லையென்றால் அல்லது நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக சரியான வகையிலான உதாரணமாயிருக்கத் தவறியிருந்தால், நீங்கள் இன்றைக்கே ஆவிக்குரிய இந்தத் தேவைகளைக் குறித்து அக்கறை கொள்ளும்படி உங்களுக்காக நான் ஜெபிக்கிறேன்!

பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு, ஒருவர் எவ்வாறு கிறிஸ்தவராகிறார் என்பது பற்றிக் கூறுங்கள் (யோவான் 3:16; மாற்கு 16:16). மேலும், தவறு செய்கிற கிறிஸ்தவர் கர்த்தரிடத்தில் எவ்வாறு திரும்பமுடியும் என்பது பற்றியும் கூறுங்கள் (நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9).

இந்தப்பாடத்தின் பிரதானத் தலைப்புகள் உங்கள் உரையைக் கேட்பவர்கள் நினைவில் வைத்துக்கொள்ளக் கூடும்படிக்கு "பழமொழிகளாக" இருக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளன. அவற்றை நீங்கள் அட்டைத் துண்டுகளில் எழுதி, ஒவ்வொரு சத்தியத்தைப் பற்றிப் பேசும்போதும் அந்தந்த அட்டையை காட்சிப்படுத்த விரும்பலாம்.

சமீபத்தில் நான் இந்த எடுத்துரைப்பை, தங்கள் வீடுகளில் பிள்ளைகள் யாரையும் கொண்டிராத முதிர்வயதுக் கிறிஸ்தவப் பெண்களின் குழு ஒன்றிற்குப் பிரசங்கித்தேன். அவர்களுக்கு, நான் அவர்கள் *அறிய வேண்டிய மூன்று சத்தியங்கள் பற்றிப் பேசினேன்.*

இந்தப்பாடம் மாறுபட்ட வழிகளில் அணுகப்பட முடியும். பல எழுத்தாளர்கள் 5:1-11ன் மீதான தங்கள் பாடங்களுக்கு "நீதிமானாக்கப்படுதலின் ஆசீர்வாதங்கள்" என்பது போன்று தலைப்புக் கொடுக்கின்றனர். ஆசீர்வாதங்களின் பட்டியல்கள் மாறுபடுகின்றன; சிலர் இவ்வசனப் பகுதியில் ஒரு டஜன் வரையிலும் ஆசீர்வாதங்களைக் கண்டறிகின்றனர். "மேன்மைபாராட்டுதல்" ("அகம்மகிழ்தல்," "பெருமைபாராட்டுதல்") என்ற வார்த்தை மூன்று வசனங்களில் காணப்படுவதால் (வசனங்கள் 2, 4, 11), அவைகள் பிரதானக்கருத்துக்களுக்குப் பயன்படுத்தப்பட முடியும். "நீங்கள் பெருமைபாராட்ட என்ன இருக்கிறது?" என்பது அப்படிப்பட்ட எடுத்துரைப்புக்குச் சாத்தியமான ஒரு தலைப்பாக இருக்கிறது. "நம்பிக்கை" என்பது திறவுகோல் ஆய்வுக்கருத்தாக உள்ளது (வசனங்கள் 2, 4, 5), எனவே உங்கள் குறிப்புரைகள் அந்தத் தலைப்பை மையங்கொண்டிருக்க முடியும். நீங்கள், "சமாதானம்" பற்றிப் பேசவும் இவ்வசனப்பகுதியைப் பயன்படுத்த முடியும் (வசனம் 1): "... யால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" (இவ்வசனப்பகுதியின் ஆசீர்வாதங்களைப் பட்டியலிடவும்).

"விசுவாசம், நம்பிக்கை, மற்றும் அன்பு" ஆகியவற்றைப் பற்றிப் போதிப்பதற்குக்கூட நீங்கள் 5:1-8ஐப் பயன்படுத்த முடியும். பவுல் அந்த மாபெரும் மூன்று ஆய்வுக்கருத்துக்களை அடிக்கடி ஒன்றிணைத்தார் (1 கொரிந்தியர் 13:13; கலாத்தியர் 5:5, 6; கொலோசெயர் 1:4, 5; 1 தெசலோனிக்கேயர் 1:3 ஆகியவற்றைக் காணவும்). நமது வேதவசனப்பகுதியில் அவர் "விசுவாசத்திலிருந்து" (வசனம் 1) "நம்பிக்கை"க்கும் (வசனங்கள் 2, 4, 5), "அன்புக்கும்" (வசனங்கள் 5, 8) கடந்து சென்றார்.

விருப்பம் இருந்தால், இந்தப்பாடமும் அடுத்த பாடமும், 5:1-11ஐக் கூறி முடிக்கும் ஒரே எடுத்துரைப்பாக ஒன்றிணைக்கப்பட முடியும். "கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய வாழ்வு" என்பது ஒரு அணுகுமுறையாக இருக்க முடியும், அது

பின்வரும் பிரிவுகளைக் கொண்டிருக்கலாம்: "புதிய சிலாக்கியங்கள்" (வசனங்கள் 1, 2), "புதிய எண்ணப்போக்குகள்" (வசனங்கள் 3-5அ), மற்றும் "புதிய உறுதிப்பாடு" (வசனங்கள் 5ஆ-11). "நீங்கள் கிறிஸ்தவராக இருப்பதால் பெறுவது இதுவே" என்பதன்மீதும் நீங்கள் பின்வரும் தலைப்புக்களைப் பயன்படுத்திப் பிரசங்கிக்க முடியும்: "எழுச்சியூட்டும் விளைவுகள்" (வசனங்கள் 1, 2), "ஊக்கமூட்டும் ஆறுதல்" (வசனங்கள் 3-5அ), மற்றும் "நீடித்திருக்கும் உறுதிப்பாடு" (வசனங்கள் 5ஆ-11).

நான் இந்த எடுத்துரைப்பைத் "தனித்து நிற்கும்" பிரசங்கமாகப் பயன்படுத்தும்போது, பிள்ளைகளுக்குப் போதிக்க நான்கு சத்தியங்கள் பற்றி நான் பேசுகிறேன். 1ம் வசனத்தில் "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்" பற்றிய பவுலின் திறப்பு வார்த்தைகளைக் கூறி முதலாவதாக நான் பின்வரும் கருத்தை கூடுதலாக்கிக்கொள்ளுவதுண்டு: "தேவனுடன் உங்கள் உறவுமுறை என்பதைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது வேறு எதுவும் இல்லை."

குறிப்புகள்

[1]William Barclay, *The Letter to the Romans*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 72. [2]R. C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 43. [3]This approach was suggested in a series by Evertt Huffard on "A Spiritual Heritage," presented at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 24-25 April 2004. [4]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World*, The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 139. For a survey of some of the ways the world is seeking "peace," see James Burton Coffman, *Commentary on Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1973), 189-91. [5]*பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள் பலவற்றில், "தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" என்பதற்குப் பதிலாக "சமாதானம் பெற்றிருப்போமாக" என்றுள்ளது. கிரேக்க மொழியில் இவ்விரு வாசிப்புகளுக்கும் இடையில் ஒரே ஒரு எழுத்துத்தான் வேறுபாடாக உள்ளது:* "o" *என்ற நெடிய உயிர் எழுத்துக்குப்பதிலாக* "o" *என்ற குறில் உயிர் எழுத்து. பெரும்பான்மையான மொழிபெயர்ப்பாளர்கள், இதன் சந்தர்ப்பப்பொருளானது ஒரு புத்திமதி என்பதற்குப் பதிலாக ஒரு கூற்றாகவே உள்ளது என்று நினைக்கின்றனர்.* [6]Larry Deason, *"The Righteousness of God": An In-depth Study of Romans*, rev. (Clifton Park, N.Y.: Life Communications, 1989), 134. [7]*சில கிரேக்கக் கையெழுத்துப்பிரதிகளில் "விசுவாசத்தினால்" என்ற வார்த்தை இல்லை, ஆனால் இந்தச் சொற்றொடர் கூறப்படாவிட்டாலும் புரிந்துகொள்ளப் பட்டுள்ளது (வசனம் 3ஐக் காணவும்).* [8]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 7. "Access" *என்பது சாத்தியமான இன்னொரு மொழி பெயர்ப்பாக உள்ளது. அந்த மொழிபெயர்ப்பு பயன்படுத்தப்படுமென்றால், இயேசு அந்த அணுகும்நெறிக்கு வழியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளார் ("வாசல்"; யோவான் 10:9).* [9]*முக்கியமான நபர் யாருக்கேனும் நீங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தால், அதை இவ்விடத்தில் நீங்கள் ஒரு விவரிப்பாகப் பயன்படுத்தலாம்.* [10]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 219.

[11]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago

Press, 1957), 886. (Emphasis mine.) [12]John Newton, "Amazing Grace," *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [13]David Mowday, devotional talk presented at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 7 December 2003. [14]William Barclay, *New Testament Words* (Philadelphia: Westminster Press, 1974), 76. [15]மற்ற இரண்டு வசனப்பகுதிகள், யாக்கோபு 1:2, 3 மற்றும் 1 பேதுரு 1:6, 7 ஆகியவையாகும். [16]Adapted from Paul Lee Tan, *Encyclopedia of 7,700 Illustrations* (Rockville, Md.: Assurance Publishers, 1979), 1508. [17]Vine, 17, 643. [18]Barclay, *Letter to the Romans*, 73. [19]Adapted from Dale Hartman, class on 1 Peter taught at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 11 January 2004. [20]Bell, 44.

[21]KJV மற்றும் தமிழ் வேதாகமங்களில் "perseverance" என்பதற்கு "patience" ["பொறுமை"] என்ற வார்த்தை போடப்பட்டுள்ளது. KJV வேதாகமம், இரண்டு கிரேக்க வார்த்தைகளை "patience" என்ற ஆங்கில வார்த்தையாக மொழிபெயர்த்துள்ளது. *(Makrothumia* என்ற) ஒரு வார்த்தை, கடினமான மக்களைக் குறித்துப் பொறுமையாயிருக்க வேண்டியதைக் குறிப்பிடுகையில் (*hupomone* என்ற) இன்னொரு வார்த்தை (இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது) கடினமான சூழ்நிலைகளின்கீழ் பொறுமையுடன் (சகிப்புத்தன்மையுடன்) இருத்தலைக் குறிக்கிறது. [22]*Hupo* என்றால் "கீழ்" என்று அர்த்தப்படுகிறது, மற்றும் *meno* என்றால் "தங்கியிருக்க" (Vine, 462) அல்லது "நிலைத்திருக்க" என்று அர்த்தப்படுகிறது. நான் "தங்கியிருக்க" என்பதற்குப் பதிலாக "நிலைத்திருக்க" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறேன். [23]Dale Hartman, sermon on "Patience" preached at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 18 January 2004. [24]Barclay, *Letter to the Romans*, 73. [25]Hartman, class, 15 February 2004. [26]Morris, 220, n. 11. [27]Adapted from Jim Townsend, *Romans: Let Justice Roll* (Elgin, Ill.: David C. Cook Publishing Co., 1988), 37. [28]Stott, 142. [29]இது தேவன்மீதான நமது அன்பைக் குறிப்பிடுவதாக இருக்கலாம், ஆனால் பவுல் இவ்விடத்தில், தேவன் நம்மீது கொண்டுள்ள அன்பைப்பற்றியே பேசுகிறார் என்பதைச் சந்தர்ப்பப்பொருள் சுட்டிக்காண்பிக்கிறது (வசனம் 8). [30]KJV வேதாகமத்தில் "shed abroad" என்றுள்ளது.

[31]இதே வார்த்தை நடபடிகள் 2:33ல் பயன்படுத்தப்பட்டுள்ளது, அவ்விடத்தில் இது அப்போஸ்தலர்களுக்குத் தரப்பட்ட அற்புத வரங்களைக் குறிக்கிறது. இவ்விடத்தில், இது ஒவ்வொரு கிறிஸ்தவர்மீதும் பொழியப்படுகிற தேவனுடைய அன்பைக் குறிக்கிறது. [32]James D. G. Dunn, *Romans 1-8,* Word Biblical Commentary, vol. 38 (Dallas: Word Books, 1988), 253. [33]Hugo McCord, discussion of Romans 5 presented to students at Oklahoma Christian College (now University), n.d., cassette. [34]நமது வேதவசனப்பகுதி நீதிமானாக்கப்படுதலின் ஆசீர்வாதங்களைப் பற்றிப் பேசுகிறபோது, அது தேவத்துவத்தில் உள்ள பிதா, குமாரன், மற்றும் பரிசுத்த ஆவியாகிய எல்லாருடைய கிரியைகளைப் பற்றியும் குறிப்பிடுகிறது என்று நீங்கள் இவ்விடத்தில் உரைக்க விரும்பலாம். [35]J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* (Cincinnati: Standard Publishing, n.d.), 331. [36]Coffman, 197.

21

கடந்த, நிகழ், மற்றும் எதிர் காலத்தில் இரட்சிப்பு

(5:6-11)

ஆப்பிரிக்க நாட்டில் மனமாறிய ஒருவர் ஊழியக்காரரிடத்தில், "கிறிஸ்துவின் மரணத்தைப் பற்றிய வரலாறு முதன்முதலாக எனக்கு வாசிக்கப்பட்டபோது, நான் யூதாஸையும் பிலாத்துவையும், யூதர்களையும் போர்ச்சேவகர்களையும் சபித்தேன். ஆனால் கிறிஸ்து *ஏன்* மரித்தார் என்பதை நான் புரிந்துகொண்டபோது, நான் *என்னையே* சபித்துக்கொண்டேன் - ஏனென்றால் *எனது* பாவங்களே அவரைச் சிலுவையில் அறைந்தன" என்று கூறினார்.[1] நமது வேதபாடப்பகுதியில் ரோமர் 5:8 ஒரு திறவுகோல் வசனப்பகுதி யாக உள்ளது: "கிறிஸ்து நமக்காக மரித்தார்." "காக" என்பது, "நமது சார்பாக" அல்லது "நமது இடத்தில்" என்று அர்த்தப்படக்கூடிய *huper* என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[2] இவ்விரு அர்த்தங்களுமே சிலுவையைப் பற்றிய வேதாகம போதனைக்குப் பொருந்துகின்றன. இந்தப்பாடத்தை நாம் முடிப்பதற்கு முன்னர், நீங்கள் "கிறிஸ்து *எனக்காக* மரித்தார்" என்பதைப் புரிந்துகொண்டு உறுதிப்பாட்டுடன் கூறமுடியும் என்று நான் நம்புகிறேன்.

இது ரோமர் 5:1-11ன் அடிப்படையில் அமைந்த இரண்டாவது எடுத்துரைப்பாகும், இதில் பவுல் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலில் இருந்து விளையும் ஆசீர்வாதங்களைக் குறிப்பிட்டார். முந்திய பாடம் இவ்வேதவசனப்பகுதியின் முதல் பாகத்தின்மீதானதாக இருந்தது. இந்தப்பாடம் 6ம் வசனத்தில் இருந்து தொடங்கி இவ்வசனப்பகுதியின் முடிவுவரை செல்லும்.

நான், இந்தப்பாடத்தை "கடந்த, நிகழ், மற்றும் எதிர்காலத்தில் இரட்சிப்பு" என்று அழைக்கிறேன். நாம் கிறிஸ்தவராகிறபோது கடந்தகாலப் பாவங்களில் இருந்து கிடைக்கும் இரட்சிப்பைக் குறிப்பிட, "இரட்சிக்கப்பட்டோம்" என்ற வார்த்தையை நாம் அடிக்கடி பயன்படுத்துகிறோம் (மாற்கு 16:16; ரோமர் 10:9ஐக் காணவும்). சிலவேளைகளில் நாம் இவ்வார்த்தையை நித்தியத்திற்கும் இரட்சிக்கப் பட்டிருத்தலை முன்னெதிர்நோக்குவதில் பயன்படுத்துகிறோம் (1 கொரிந்தியர் 5:5; ரோமர் 13:11ஐக் காணவும்). நாம் அன்றாடம் இரட்சிக்கப்படுகிறோம் என்ற கருத்து ஒன்றும் உள்ளது (1 கொரிந்தியர் 1:18; 2 கொரிந்தியர் 2:15). "இரட்சிப்பு" என்ற வார்த்தையின் இந்த மூன்று பயன்பாடுகள் பின்வருவது போன்று சுருக்கி உரைக்கப்படலாம்:

- கடந்தகாலத்தில் இரட்சிப்பு: பாவத்தின் தண்டனையில் இருந்து இரட்சிப்பு.

- *நிகழ்காலத்தில் இரட்சிப்பு: பாவத்தைச் செயல்படுத்துவதிலிருந்து இரட்சிப்பு.*
- *எதிர்காலத்தில் இரட்சிப்பு: பாவத்தின் பிரசன்னத்திலிருந்து (பரலோகத்தில்) இரட்சிப்பு.*

முந்திய பாடத்தில், நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலில் இருந்து கிடைக்கும் கடந்தகால, நிகழ்கால, மற்றும் எதிர்கால ஆசீர்வாதங்களைப் பற்றிப் பவுல் பேசினார் என்று குறிப்பிட்டோம். கடந்தகாலத்தைப் பொறுத்தமட்டில், நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம் (5:1). நிகழ்காலத்தைப் பொறுத்தமட்டில், நாம் அவரது கிருபையில் நிலைநிற்கிறோம் (வசனம் 2). எதிர் காலத்தைப் பொறுத்தமட்டில், நாம் அவரது மகிமையின் நம்பிக்கையைக் கொண்டிருக்கிறோம் (வசனம் 2). இந்தப்பாடத்தில், நாம் பவுல் திரும்பவும் கடந்த, நிகழ், மற்றும் எதிர்காலங்களைக் குறிப்பிடுவதைக் காண்போம்.

கடந்தகாலத்தில் இரட்சிப்பு (5:6-11)

கடந்தகாலத்தில் இரட்சிப்பு என்பது நமது வேதவசனப்பகுதியில் ஒரு பிரதான வலியுறுத்தமாக உள்ளது: "... நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, ... நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமா னால், ... இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ..." (வசனங்கள் 9-11). நாம் பாவத்தின் சுமை யினால் எடைகீழாக்கப்பட்டிருந்தோம் (ரோமர் 3:23; 6:23அ), ஆனால் நாம் நீதிமான்களாக்கப்பட்டு (5:9) தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டோம் (வசனங்கள் 10, 11). இந்த இரட்சிப்பு இயேசுவின் மூலமாக வருகிறது (வசனம் 11). குறிப்பாக, இது அவரது இரத்தத்தின் மூலமாக (வசனம் 9), அவரது மரணத்தில் சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலமாக உள்ளது (வசனம் 10).

அது நம்மை 6 முதல் 8 வரையுள்ள வசனங்களுக்குக் கொண்டுவரு கிறது. இவ்வசனங்கள் "வேதவசனத்தில் தெய்வீக அன்பின் மிக ஆழமான விவரிப்புகளில் ஒன்றை" முன்னிறுத்துகின்றன.[3]

> *அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக் கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.*

இவ்வசனப்பகுதி கிறிஸ்து இல்லாத நிலையில் மனிதகுலத்தின் ஆவிக் குரிய சூழ்நிலையை விவரித்தலைக் கொண்டு தொடங்குகிறது: "நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே" (வசனம் 6அ). "பெலனற்றவர்களாய்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள asthenes என்ற வார்த்தை, "பெலன்" (sthe-nos) என்பதற்குரிய வார்த்தைக்கு முன்னாக (a என்ற) ஒரு எதிர்மறையைச் சேர்த்துப் பெற்றதாக உள்ளது. இவ்வார்த்தை, "பலவீனமான ... , நோய்ப்பட்ட, நோயுள்ள" என்பதைக் குறிக்கிறது.[4] *இது "மனிதன் நோய்வாய்ப்பட்டவனாக*

- தனது வாழ்வை வீணடிக்கும் பாவத்தின் வியாதியால் வடிவிழந்து பலமிழந்து போனவனாக இருக்கிறான் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது … தேவனுடைய குணமாக்கும் வல்லமையின்றி அவனது பெருந்துன்பம் முடிவை நெருங்கியுள்ளதாக உள்ளது."[5] ஒரு பழைய மூதுரை, "தங்களுக்குத்தாங்களே உதவி செய்துகொள்பவர்களுக்கே தேவன் உதவி செய்கிறார்" என்று கூறுகிறது, ஆனால் ரோமர் 5:6, தங்களுக்குத்தாங்களே உதவிசெய்துகொள்ள *இயலாதவர்களுக்குத்* தேவன் உதவுகிறார் என்று கூறுகிறது. கிறிஸ்து இல்லாத நிலையில், மக்கள் "பெலனற்றவர்களாக," நம்பிக்கையற்றவர்களாக, இழந்துபோகப்பட்டவர்களாக இருக்கின்றனர்.

உலகமானது அந்த பெலனற்ற நிலையில் இருந்தபோது, "குறித்த காலத்தில் கிறிஸ்து … மரித்தார்" (வசனம் 6ஆ). "குறித்தகாலத்தில்" என்பது கிரேக்க மொழியில், "காலத்தில் தீர்மானமான ஒரு குறிப்பை" சுட்டிக் காண்பிக்கும் *kairos* என்ற வார்த்தையிலிருந்து வருகிறது.[6] "குறித்தகாலம்" என்பது "தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றில் சரியான காலம்" என்பதைக் குறிக்கக்கூடும் (கலாத்தியர் 4:4ஐக் காணவும்),[7] அல்லது இது "நாம் மிகவும் பெலனற்றவர்களாகவும் நமக்கு அவர் மிகவும் தேவைப்பட்டவர்களாகவும் இருந்த காலத்தை" அர்த்தப்படுத்தக்கூடும். லியோன் மோரிஸ் என்பவர், "குறித்தகாலம்" என்பது பின்வரும் இரு சிந்தனைகளையும் சூழ்ந்திருக்கலாம் என்று கருத்துத் தெரிவித்தார்: "நாம் பாவிகளாயிருக்கும்போதே அவர் மரித்தார், மற்றும் தேவனுடைய நோக்கத்தில் பொருத்தமான ஒரு காலத்தில் மரித்தார்."[8]

இயேசு யாருக்காக மரித்தார்? கிறிஸ்து "அக்கிரமக்காருக்காக" மரித்தார் (ரோமர் 5:6இ). "அக்கிரமக்காரருக்காக" என்பது கிறிஸ்து இல்லாத நிலையில் நமது ஆவிக்குரிய சூழ்நிலையை விவரிக்கும் இரண்டாவது சொற்றொடராக உள்ளது. "அக்கிரமக்காரர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *asebeia* என்ற கிரேக்க வார்த்தையானது, *sebomai* என்ற வார்த்தையை *a* என்ற முன்குறிப்புச் சொல்லைக் கொண்டு மாற்றிப் பெறப்பட்டதாகும். *Sebomai* என்பது "பயபக்தியுடன் நிற்குதல், … பயபக்தி, ஆராதனை" என்று அர்த்தமாகிறது.[9] இவ்வாறு, *asebeia* என்பது தேவனிடத்தில் பயபக்தியுடன் நில்லாத, அவருக்குப் பயபக்தி செலுத்தாத, அவரை ஆராதிக்க மறுக்கிற மக்களைக் குறிக்கிறது. இது தேவனுடைய நபர்த்துவத்தை மதிக்காத, எதிர்க்கிற குணத்தைக் குறிக்கிறது.[10] நம்மில் சிலர், "அது நிச்சயமாக *என்னைப்* பற்றிய பேச்சாக இருக்க முடியாது!" என்று நினைக்கலாம். இருப்பினும், 6ம் மற்றும் 8ம் வசனங்களின் முடிவுகளுக்கு இடையில் உள்ள இணைகருத்தைக் கவனியுங்கள்: 6ம் வசனம், "கிறிஸ்து *அக்கிரமக்காரருக்காக* மரித்தார்" என்று கூறுகிறது; 8ம் வசனம், "கிறிஸ்து *நமக்காக* மரித்[தார்]" என்று கூறுகிறது! "அக்கிரமக்காரர்" என்பது "நமக்காக" என்பதை சமானமாக்குகிறது!

இயேசு வருவதற்குமுன் மனிதகுலத்தின் ஆவிக்குரிய நிலையை விவரிக்க இன்னும் இரண்டு சொற்றொடர்கள் நமது வேதவசனப் பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ளன. 8ம் வசனம், "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்[தார்]" என்று கூறுகிறது (வசனம் 8அ). "பாவிகள்" என்பது "இலக்கைத் தவறவிடுதல்" என்று அர்த்தப்படுகிற *hamartia* என்ற வார்த்தையிலிருந்து வருகிறது.[11] அந்த வார்த்தை, நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தேவன் நோக்கங் கொண்டிருந்தாரோ, அவ்வாறு இருக்க நாம்

தவறிவிட்டோம் என்பதை அறிவிக்கிறது.

10ம் வசனத்தில் நான்காவது சொற்றொடர் காணப்படுகிறது: "நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், ... அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால்'' (வசனம் 10அ). ''சத்துருக்கள்'' என்ற வார்த்தை, ''வெறுப்பு'' என்பதற்கான echthos என்ற வார்த்தைக்கு உறவுவார்த்தையான echthros என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "சத்துருக்கள் என்பது ஒரு பலத்த வார்த்தையாகும். ... சத்துரு என்பவர் நண்பராயிருக்கக் கொஞ்சங்கூட ஒத்துவராத நபராக இருக்கிறார்; இது எதிர்முகாமில் உள்ள எவரையேனும் அர்த்தப்படுத்துகிறது.''[12] C. S. *லூயிஸ் என்பவர், "நாம் முன்னேற்றப்பட வேண்டிய நிலையில் உள்ள பூரணமற்ற ஜீவிகளாக மாத்திரமல்ல; ஆனால் நமது ஆயுதங்களைக் கீழே போட வேண்டியுள்ள கலகக்காரர்களாகவும் இருக்கிறோம்" என்று கூறினார்.*[13] *நாம் பெலனற்றவர்களாக இருந்தோம் (வசனம் 6), ஆனால் பகைமையானவர்களாக இருந்தோம் (8:7ஐக் காணவும்; கொலோசெயர் 1:21). காயப்பட்ட மிருகம் ஒன்று, தனக்கு உதவி செய்ய வருபவரைக் கடித்துக் கவ்வ முயற்சி செய்வது எனக்கு நினைவுக்கு வருகிறது.*

''பெலனற்றவர்கள்,'' ''அக்கிரமக்காரர்,'' ''பாவிகள்,'' ''சத்துருக்கள்'': இவைகள் புகழக்கூடிய சொற்றொடர்களாக இருப்பது மிகவும் கடினமாகும்! இருந்தபோதிலும், தேவன் இன்னமும் நம்மீது அன்புகூர்ந்து நமக்காக மரிக்கும்படி தமது சொந்த குமாரனை அனுப்பினார். மோரிஸ் என்பவர், "தேவன் நமது பண்பினிமித்தமல்ல, ஆனால் தமது பண்பினிமித்தமாகவே நம்மீது அன்புகூருகிறார்" என்று கூறினார்.[14] *ஜான்* R. W. *ஸ்டாட் என்பவர், "கொடையைக் கொடுக்கிறவருக்கு எவ்வளவு செலவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கு அதைப் பெறுபவர் தகுதியற்றவராக இருக்கிறார், இதில்தான் மாபெரும் அன்பு காணப்பட முடியும். இந்தத் தர அளவைகளினால் அளக்கப்பட்ட வகையில் கிறிஸ்துவுக்குள் தேவ அன்பு முற்றிலும் தனித்துவமானதாக உள்ளது" என்று எழுதினார்.*[15]

தேவ அன்பின் திகைக்கச் செய்யும் இயல்பு 7 மற்றும் 8ம் வசனங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்வசனப்பகுதி, ''நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக[16] *ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான்'' என்று தொடங்குகிறது (வசனம் 7). "நீதிமான் [dikaios]" மற்றும் "நல்லவன் [agathos]'' ஆகியவற்றுக்கு இடையில் வேறுபாடு உள்ளதா இல்லையா என்பது பற்றி - அப்படியே வேறுபாடு இருந்தாலும் அந்த வேறுபாடு என்ன என்பது பற்றி மக்கள் வியப்படைகின்றனர். சிலர் வேறுபாடு இல்லை என்று நினைக்கின்றனர். அவர்கள் தெர்தியு இந்த நிருபத்தை எழுதும்படி அவருக்குக் கூறிக்கொண்டிருந்த பவுல் (16:22ஐக் காணவும்); ஒரு கூற்றை ஏற்படுத்திப் பின்பு அதைத் தகுதிப்படுத்த முயற்சி செய்தார் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர்: "நீதிமானுக்காக (நல்லவனுக்காக) ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத்துணிவான். ... ஆனால். ..."*

இருப்பினும், இவ்விரு சொற்றொடர்களுக்கும் இடையில் சில வித்தியாசங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று பெரும்பான்மையான எழுத்தாளர்கள் நம்புகின்றனர். "நீதிமான்" என்பவர் நீதியுள்ள வாழ்வை வாழ முயற்சிசெய்கிறவராக, ஆனால் குறிப்பாக விரும்பப்படாதவராக இருக்கிறார். சிறுமி ஒருத்தி, "மோசமான எல்லா மனிதர்களையும் நல்லவர்களாக்கும் -

நல்லவர்களாயிருக்கிற எல்லா மனிதர்களையும் மேன்மையானவர்களாக்கும்" என்று ஜெபித்தாள். எல்லா நல்ல மனிதர்களும் (பவுலின் சொற்றொடரைப் பயன்படுத்துவதென்றால், "நீதிமான்களும்") மேன்மையானவர்களாக இருப்பதில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. இவ்வகையான நேர்மாறைப் பவுல் நோக்கங்கொண்டு இருந்திருப்பார் என்றால், "நல்லவன்" என்பது "நல்ல மனிதர்" என்பதை மாத்திரமல்ல, ஆனால் "மேன்மையானவர்" என்பதையும் குறிக்கிறது - அதாவது, விரும்பப்படத்தக்கவர் மற்றும் அன்புகூரப்படத்தக்கவர். அவ்வாறு செய்யும்படி அழைக்கப்பட்டால் நம்மில் பெரும்பான்மையானவர்கள், முதலாவது குணமுடைய ("விரும்பப்படத்தக்கவர்" என்ற) தனிநபராயிருப்பதைக் காட்டிலும் இரண்டாவது குணமுடைய ("அன்புகூரப்படத்தக்கவர்" என்ற) தனி நபராக இருக்க நம்மையே தியாகம் செய்ய மிகவும் மனவிருப்பம் உள்ளவர்களாயிருப்போம்.

இவ்விரு சொற்றொடர்களுக்கும் இடையில் வித்தியாசம் ஏற்படுத்தப்பட வேண்டுமா இல்லையா என்பது முக்கியத்துவமற்றதாக உள்ளது. எவ்வகையிலும் பவுலின் கருத்து ஒன்றாகவே உள்ளது: மக்கள் சிலர் மற்றவர்களுக்காகத் தங்கள் உயிரைக் கொடுக்கின்றனர். இராணுவ சேவையில் உள்ள ஆண்களும் பெண்களும், தங்கள் உயிரைத் தங்கள் குடும்பம், நண்பர்கள், மற்றும் நாட்டிற்காகக் கொடுக்கின்றனர். ஒரு வேளை மற்ற விவரிப்புகள் மனதிற்கு வரலாம்.[17] இருப்பினும், சட்டப்படி மக்கள் தங்கள் இருதயங்களுக்கு "மிகவும் நெருக்கமாக அன்பாக" இருக்கிறவர்களுக்காக மாத்திரமே இறக்க விருப்பமாக உள்ளனர்.

அது நம்மை 8ம் வசனத்திற்குக் கொண்டு வருகிறது: "தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (வசனம் 8ஆ). "தமது அன்பு" என்பது தேவனுக்கே தனித்துவமான அன்பாக உள்ளது - இது மனித அன்புக்கு நேர்மாறானதாக உள்ளது, இது நம்மீது அன்புகூருபவர்களுக்கென்று நாம் ஒதுக்கி வைத்துள்ள அன்பு போன்றதாக உள்ளது. இயேசுவின் மரணத்தில் தேவன் ஒரு விசேஷித்த அன்பைச் செயல்விளக்கப்படுத்தினார். அவர் தமது *சொந்த* குமாரனைக் கையளித்தார் என்பது "அவரது *சொந்த* அன்பாக" இருக்கிறது, ஆனால் அது அதைவிட மேலானதாக உள்ளது. பிதாவும் குமாரனும் ஒன்றாக இருக்கிறார்கள் என்பதால் (யோவான் 10:30ஐக் காணவும்), அவர்களில் ஒருவர் ஒரு செயலைச் செய்கிறபோது, செயல்விளைவில், இன்னொருவரும் அதைச் செய்கிறார். இவ்வாறு, தேவன் தமது குமாரனைக் கையளித்ததில், அவர் தம்மைத்தாமே கையளித்தார்.[18] 8ம் வசனத்தில், "விளங்கப்பண்ணுகிறார்" என்ற வார்த்தையைக் கவனிக்கவும்; இவ்விடத்தில் நிகழ்கால வினைச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளது, தேவன் அன்றாடம் தமது அன்பைத் *தொடர்ந்து* காண்பிக்கிறார் என்பதை வலியுறுத்துகிறது.

நமது அன்பிற்கும் தேவனுடைய அன்பிற்கும் இடையில் உள்ள வலிவான நேர்மாறு, இந்த வசனத்தின் முதற்பகுதியில் காணப்படுகிறது: "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (வசனம் 8). நாம் தேவபக்தியுள்ளவர்களாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரிக்க வில்லை; இல்லை, நாம் "அக்கிரமக்காரராக" இருந்தோம் (வசனம் 6). நாம் இருக்க வேண்டியபிரகாரம் இருந்தபோது அவர் நமக்காக மரிக்க

வில்லை; இல்லை, நாம் "பாவிகளாயிருந்தோம்" (வசனம் 8). நாம் அவருக்குச் சிநேகிதர்களாயிருக்கையில் அவர் நமக்காக மரிக்கவில்லை; இல்லை, நாம் அவருக்குச் "சத்துருக்களாயிருந்தோம்" (வசனம் 10). இது திகைப்புக்குரியது! சார்லஸ் ஸ்பர்ஜன் என்பவர் பின்வருமாறு கூறினார்,

> அதை உரத்துக் கூவுங்கள், அல்லது ஓசையின்றிக் கூறுங்கள்; அதைப் பெரிய எழுத்துக்களில் அச்சிடுங்கள், அல்லது பெரிய கையெழுத்தாக எழுதுங்கள். அதைப் பெருமிதமாய்ப் பேசுங்கள்; அது வேடிக்கையாகப் பேசுவதற்கான விஷயமல்ல. அதைப்பற்றிச் சந்தோஷமாய்ப் பேசுங்கள்; அது வருத்தம் பற்றிய ஆய்வுக்கருத்தல்ல. அதைப்பற்றி உறுதியாகப் பேசுங்கள்; அது வழக்கிட இயலாத உண்மையாக உள்ளது. அதைப்பற்றி மெய்யுறுதிப்பாட்டுடன் பேசுங்கள்; ஏனெனில் மனிதனின் ஆத்துமாவில் இருந்து ஏதேனும் சத்தியம் எழுவதாக இருக்க வேண்டுமென்றால், அது இதுதான். அதை அக்கிரமக்காரர் வாழுமிடங்களில் பேசுங்கள்; அது உங்கள் சொந்த வீடாகவும் உள்ளதே. அதைத் தீய ஒழுக்கம் உள்ளவர்கள் இருக்கும் இடங்களிலும் பேசுங்கள். அதை [சிறைச்சாலையில்] கூறுங்கள்; மரணப்படுக்கையினருகில் அமர்ந்து மென்மையான சிற்றொலியில் அதை வாசியுங்கள் - "அக்கிரமக்காரருக்காகக் கிறிஸ்து மரித்தார்."[19]

இதுபோன்ற அன்பைப் புரிந்துகொள்ளுதல் என்பது நமக்குக் கடினமாக உள்ளது. நீங்கள் என்னிடத்தில், "உங்கள் மனைவிமீது நீங்கள் அன்புகூருகிறீர்களா?" என்று கேட்டால், நான், "நிச்சயமாகவே, நான் அவள்மீது அன்புகூருகிறேன். அவள் இரக்கமும் அன்பும் கொண்டிருக்கிறாள். அவள் ஒரு அழகிய புன்னகைக்குச் சொந்தக்காரியாக இருக்கிறாள். அவள் என்மீது அன்புகூர்ந்து எனக்காகத் தினமும் தியாகங்கள் செய்கிறாள்" என்று பதில் அளிப்பேன். நான் அதுபோன்று பதில் அளித்தால், எனது மனைவியின் மீது நான் அன்புகூருவது ஏன் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். இருப்பினும் நான், "நிச்சயமாகவே, நான் அவள்மீது அன்புகூருகிறேன். அவள் அற்பமானவளாகவும் அழகற்றவளாகவும் இருக்கிறாள், என்னைப் புண்படுத்தக்கூடிய எல்லாவற்றையும் அவள் செய்கிறாள். அவள் என்னை *வெறுக்கிறாள்*" என்று பதில் அளித்தால் எப்படியிருக்கும்? நான் ஏன் அவள்மீது அன்புகூருகிறேன் என்று புரிந்துகொள்வது உங்களுக்குக் கடினமாக இருக்கும், அல்லவா? அப்படியென்றால், நாம் அக்கிரமக்காரரான பாவிகளாக, அவருக்குச் சத்துருக்களாக இருக்கும்போது தேவன் நம்மீது அன்புகூர்ந்தார் என்பது எவ்வளவு திகைப்புக்குரியதாக உள்ளது!

இயேசுவின் இடத்தில் என்னை வைத்தால், நான் எவ்வாறு செயல்படுவேன் என்று என்னை நானே கேட்டுக்கொள்கிறேன். ஆறு லட்சம் யூதர்கள் மற்றும் பிற மக்களினக் குழுக்களை ஒட்டுமொத்தமாகக் கொலைசெய்தல் என்ற படுகொலைக்குப் பொறுப்பாளியான, நாஜிகளின் தலைவன் அடால்ஃப் ஹிட்லர்[20] எனக்கு முன்பாக நிற்பதாகக் கற்பனை செய்துகொள்கிறேன். நானே மரித்தல் அல்லது ஹிட்லரை மரிக்க அனுமதித்தல் என்ற இருதெரிவுகளில் ஒன்றைத் தேர்ந்துகொள்ள வேண்டும் என்று எனக்கு விதிக்கப்பட்டால் எப்படி இருக்கும்? தெரிந்துகொள்ளுதல் என்பது எனக்கு சுலபமாக இருக்கும்; நான் உயிர் வாழ்வைத் தேர்ந்துகொள்வேன்; இருப்பினும், இயேசுவுக்கு இதுபோன்றதொரு

தேர்ந்துகொள்ளுதல் தரப்பட்டபோது, அவர் மரிப்பதைத் தேர்ந்துகொண்டார் (யோவான் 10:18; பிலிப்பியர் 2:5-8ஐக் காணவும்)!

அவர் "நமக்காக மரித்தார்" என்பதால், நாம் இரட்சிக்கப்பட முடியும். இந்தப் பாடத்திற்கான முன்னுரையில் குறிப்பிடப்பட்டதுபோன்று, "நமக்காக" என்பது "நமது சார்பாக" அல்லது "நமது இடத்தில்" என்று அர்த்தப்பட முடியும் (1 கொரிந்தியர் 15:3ஐக் காணவும்). நமது பாவங்களின் குற்றத்தை - மற்றும் அதினால் வரும் தண்டனையை - கிறிஸ்து தம்மீது சுமந்துகொண்டார்; அவர் நமது கிருபாதார பலியானார் (ரோமர் 3:26). இதன் விளைவாக, நாம் இயேசுவில் விசுவாசம் கொண்டு கீழ்ப்படிதலில் நமது விசுவாசத்தை வெளிப்படுத்தும்போது (1:5; 16:26ஐக் காணவும்), தேவன் நமது பாவங்களை மன்னிக்கிறார் மற்றும் நம்மை நீதிமான்களாக எண்ணுகிறார் (4:22-24ஐக் காணவும்). அது "கடந்தகாலத்தில் இரட்சிப்பாக" உள்ளது!

ஆச்சரியமான இந்த ஆவிக்குரிய மாற்றத்தைப் பற்றிப் பவுல் கலந்துரையாடுகையில், அவர் இதற்கு முன் நாம் சந்தித்திராத ஒரு சொற்றொடரை அறிமுகப்படுத்தினார்: "ஒப்புரவாக்கப்படுதல்." நாம் "தேவனுடனே ஒப்புரவாக்கப்பட்டோம்"; "ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின ..." (5:10, 11). நாம் கிறிஸ்தவர்களானபோது, நாம் "நீதிமான்களாக்கப்பட்டோம்" என்று இதற்குமுன்பு பவுல் கூறினார் (வசனம் 1); இப்போது அவர் நாம் ஒப்புரவாக்கப்பட்டோம் என்று கூறினார். "நீதிமான்களாக்கப்படுதல்" மற்றும் "ஒப்புரவாக்கப்படுதல்" என்ற சொற்றொடர்கள் பிரிக்கப்பட இயலாதவைகளாகும். இவ்விரண்டுமே தேவனுடைய பிள்ளைகள் ஆவதைக் குறிக்கின்றன, இருப்பினும் இவை ஒவ்வொன்றும் கர்த்தர் நமக்குச் செய்துள்ளவற்றிற்குக் கூடுதல் உட்கருத்தைத் தருகின்றன.

"ஒப்புரவாக்கப்படுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட *katallasso* என்ற வார்த்தை அடிப்படையில் "மாற்றுதல்" (*allasso* ["மாற்றுதல்"] என்பது *kata* என்பதைக் கொண்டு பெலப்படுத்தப்படுகிறது) என்ற அர்த்தம் கொண்டுள்ளது.[21] இவ்வார்த்தை மக்களுக்குப் பயன்படுத்தப்படும்போது, இது "பகைமையிலிருந்து நட்புறவுக்கு மாற்றுதல்" என்று அர்த்தப்படுகிறது.[22] "Reconcile" என்ற ஆங்கில வார்த்தை, "conciliate" ("யாரேனும் ஒருவரை நண்பராக்கிக்கொள்ள முயற்சிசெய்தல்") என்ற வார்த்தையுடன் "re" ("மீண்டும்") என்ற முன்னிடைச் சொல்லைச் சேர்த்துக்கொள்கிறது. "ஒப்புரவாக்கப்படுதல்" என்பதற்கு, "திரும்பவும் நண்பர்களாக்கிக்கொள்ளுதல்" என்பது ஒரு நல்ல விளக்கமாக உள்ளது. சண்டையிட்டுக் கொண்டுள்ள இரண்டு நண்பர்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். அவர்கள் ஒருவர் மற்றவருடன் பல நாட்களாகப் பேசிக்கொள்ளாதிருக்கின்றனர்; அவர்கள் விலகியிருக்கின்றனர். பின்பு, ஒருநாள், அவர்கள் அமர்ந்து தங்களின் மாறுபாட்டை மாற்றத் தீர்மானிக்கின்றனர். இப்போது அவர்கள் *ஒப்புரவாக்கப்பட்டுள்ளனர்;* அவர்கள் திரும்பவும் நண்பர்களாக உள்ளனர்.

"ஒப்புரவாக்கப்படுதல்" என்ற வார்த்தை, ஒருகாலத்தில் நாம் தேவனுக்குச் சிநேகிதர்களாக இருந்து, ஆனால் பின்பு பாவம் செய்து கர்த்தரைவிட்டுப் புறம்பே சென்ற உண்மையைச் சிந்தைக்குக் கொண்டு வருகிறது. நாம் தேவனைவிட்டு விலகியிருந்தோம். ஏசாயா பின்வருமாறு எழுதினார்,

இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை;
கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை.
உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும்
உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது;
உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு
அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது (ஏசாயா 59:1, 2).

தேவன் தம்மைத் தமது மக்களிடத்தில் இருந்து பிரித்துக்கொள்ளவில்லை, ஆனால் மக்களே பாவத்தின்மூலமாகத் தங்களைத் தேவனிடத்திலிருந்து பிரித்துக்கொண்டனர். பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு தம்பதியர் ஒரு காரில் சாலையில் சென்று கொண்டிருந்தனர். பயணிப்பக்க ஜன்னல் ஓரமாக அமர்ந் திருந்த பெண் ஓட்டும் இருக்கையில் அமர்ந்திருந்த தனது கணவனைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டாள். அவள், "நாம் திருமணமான புதிதில் இந்தக் காரில் பயணம் செய்தபோது ஒருவருக்கொருவர் *மிகவும்* நெருங்கி அமர்ந்திருந்தோம்" என்று கூறினாள். அதற்கு அந்த ஆண், "நான் நகரவில்லையே" என்று கூறினார். நீங்கள் ஒருகாலத்தில் இருந்ததுபோன்று இப்போது தேவனுடன் நெருக்கமாக இல்லை யென்றால், தேவனல்ல, ஆனால் நீங்கள் புறம்பே நகர்ந்தீர்கள் என்றாகிறது.

இது உண்மையாக இருப்பதால், தேவன் மக்களிடத்தில் ஒப்புரவாகுதல் அவசியமல்ல, ஆனால் மக்கள் தேவனிடத்தில் ஒப்புரவாகுதலே அவசியமாக உள்ளது. பவுல், "தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்கிறோம்" என்று எழுதினார் (2 கொரிந்தியர் 5:20ஆ). "ஒப்புரவாகுதலின் உபதேசம்" என்று அழைக்கப்படுகிற சுவிசேஷத் திற்கு (2 கொரிந்தியர் 5:19) நாம் பதில்செயல் செய்ய வேண்டும். நாம் விசுவாசித்துக் கீழ்ப்படிகிறபோது, இரட்சிக்கப்படுகிறவர்களின் கூட்டத்தில் நம்மைத் தேவன் சேர்த்துக் கொள்கிறார் (நடபடிகள் 2:38, 41, 47). நாம் "ஒரே சரீரத்திற்குள் [சபைக்குள்; எபேசியர் 1:22, 23] சிலுவையினால் தேவனுக்கு" ஒப்புரவாக்கப்படுகிறோம் (எபேசியர் 2:16ஆ).

5:11ல் KJV வேதாகமத்தில், "reconciliation" என்பதற்குப் பதிலாக "atonement" என்ற வார்த்தை உள்ளது. சிலவேளைகளில் பிரசங்கியார்கள் "atonement" என்பதை "at-one-ment" என்று எழுதுகின்றனர். இவ்வார்த்தை, ஒருகாலத்தில் விலகியிருந்த இரு நண்பர்கள் இப்போது ஒன்றிணைக்கப்பட்டனர் ("at one") என்ற கருத்தை மறைமுகமாய் உணர்த்துவதாக ஆலோசனை தெரிவிக்கின்றனர். "Reconciliation" என்ற வார்த்தையை நீங்கள் எவ்விதம் விளக்கப்படுத்தினாலும், அவ்வார்த்தை இயேசு மரித்ததால் தேவனுடனான *நட்புறவு* மீளக்கட்டுவிக்கப்பட முடிகிறது என்ற ஆச்சரியமான சத்தியத்தை அறிவிக்கிறது. NCV வேதாகமத்தில் 10 மற்றும் 11ம் வசனங்கள் பின்வருமாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன: "நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவர் தமது குமாரனுடைய மரணத்தின் மூலமாக நம்முடன் நண்பரானார். … அவர் [இயேசு] மூலமாக நாம் இப்போது திரும்பவும் தேவனுடைய நண்பர்களாக இருக்கிறோம்."

நிகழ்காலத்தில் இரட்சிப்பு (5:9, 10)

நாம் கடந்தகாலப் பாவங்களில் இருந்து இரட்சிக்கப்படுதல் மட்டுமின்றி, அன்றாடமும் நமக்கு ஆவிக்குரிய உதவி தேவைப்படுகிறது. நாம் தொடர்ந்து பாவம் செய்கிறோம். நாம் அடிக்கடி பரீட்சைகள் மற்றும் சோதனைகளை எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது. நாம் வாழ்வின் அறைகூவல்களுடன் இன்னமும் போராடிக்கொண்டிருக்கிறோம் (1 யோவான் 1:9; 1 பேதுரு 4:12; மத்தேயு 13:22). நமது வேதவசனப்பகுதியில், "அதிக நிச்சயமாமே" என்ற சொற்றொடரை நாம் இரண்டுமுறை (வசனங்கள் 9, 10) காண்கிறோம். கடந்தகாலப் பாவங்களின் குற்றங்களில் இருந்து நம்மை இரட்சிப்பதற்குத் தேவன் "அதிகமானவற்றை" நமக்காகச் செய்கிறார்; அவர் அன்றாடம் நமக்குத் தொடர்ந்து உதவுகிறார் (எபிரெயர் 13:5, 6). பவுல், "நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" என்று கூறியபோது (வசனம் 10), அவர் "நிகழ்காலத்தில் இரட்சிப்பு" என்பதைத் தமது சிந்தையில் கொண்டிருந்திருப்பார் என்பது உறுதி.

"நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது" என்று பவுல் கூறியபோது, அவர் எதனை அர்த்தப்படுத்தினார்? ஒருவேளை அவர் இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறிப்பிட்டிருக்கலாம்: இயேசு ஜீவனுள்ளவராக இருப்பதால், நாம் தேவன் அவரது பலியை ஏற்றுக்கொண்டார் என்றும் ஆகவே நாம் இரட்சிக்கப்பட முடியும் என்றும் அறிகிறோம். 4ம் அதிகாரத்தில் பவுல், கிறிஸ்து "நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்" என்று வலியுறுத்தினார் (வசனம் 25). AB *வேதாகமத்தில் நமது வேதவசனப்பகுதி, நாம் "அவருடைய [உயிர்த்தெழுதலின்] ஜீவன் மூல மாக [பாவத்தின் ஆளுகையினின்று விடுவிக்கப்பட்டோம்]" என்று கூறுகிறது (5:10ஆ).*

நாம் "அவரது ஜீவனில் பங்குபெறுதல் மூலமாக" இரட்சிக்கப்படுகிறோம் என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது (Goodspeed). *6ம் அதிகாரத்தில் பவுல், "கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் ..." என்று கூறினார் (வசனம் 8; யோவான் 14:19ஐக் காணவும்). கலாத்தியருக்குப் பவுல், "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்று கூறினார் (கலாத்தியர் 2:20அ).*

பல எழுத்தாளர்கள் 5:10ஐ, பிற்பாடு 8:34ல் பவுலின் பின்வரும் கூற்றுடன் பிணைக்கின்றனர்: "கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே." எபிரெயர் 7:25 வசனம், ரோமர் 5:10க்கு ஒரு விளக்கவுரையாகக் கருதப்படுகிறது: "மேலும் தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவரா யிருக்கிறார்."

நாம் பவுலின் கூற்றை எவ்விதமாகக் கண்ணோக்கினாலும்சரி, 5:10ம்

வசனமானது கர்த்தருடைய "இரட்சிப்பின் ஊழியம் சிலுவையில் முடியவில்லை, ஆனால் அதிலிருந்து தொடருகிறது" என்றே அறிவிக்கிறது.[23] இயேசுவின் வசனத்தினுடைய ஒளியில் நாம் நடக்கையில் அவரது இரத்தம் நம்மைத் தொடர்ந்து நமது பாவங்களில் இருந்து கழுவுகிறது (1 யோவான் 1:7; சங்கீதம் 119:105ஐக் காணவும்). நம்மைப் பெலப்படுத்தவும் நமக்கு உதவவும் இயேசு நம்முடன்கூட நிலைத்திருக்கிறார் (மத்தேயு 11:28; 28:20ஆ). அவர் தமது பிதாவின் முன்பாக எப்போதும் நமக்காக வேண்டுதல் செய்கிறார் (எபிரெயர் 7:25; 2:18; 4:14-16ஐக் காணவும்). "அவர் ஜீவிப்பதால்" என்ற தலைப்புக் கொண்ட ஒரு பாடல் இதை நன்கு விளக்கப்படுத்துகிறது. அதன் பல்லவி பின்வரும் வார்த்தைகளைக் கொண்டுள்ளது:

> அவர் ஜீவிப்பதால் நான் நாளைய தினத்தை எதிர்கொள்ள முடியும், அவர் ஜீவிப்பதால் பயம் யாவும் போயிற்று;
> அவர் எதிர்காலத்தைப் பற்றிக்கொண்டுள்ளார் என்று நான் அறிந்திருப்பதாலும்,
> அவர் ஜீவிப்பதாலும் வாழ்வது சாலச்சிறந்ததாகிறது.[24]

நாம் தேவனுக்குச் *சத்துருக்களாயிருந்தபோதே* அவர் நமக்காக இவ்வளவு செய்திருக்கிறார் என்றால், இப்போது நாம் அவருக்குச் *சிநேகிதர்களாக* இருந்தால் அவர் "எவ்வளவு அதிகமாய்" செய்வார் என்பதே பவுலின் விவாதமாக இருந்தது! 8ம் அதிகாரத்தில் அவர் இதேபோன்ற விவாதத்தைப் பயன்படுத்தினார்: "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடுகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" (வசனம் 32). வேறுவார்த்தைகளில் சொல்வதென்றால், தேவன் நமக்குப் பெரியவற்றைச் செய்துள்ளார் என்றால், அவர் நமக்குச் சிறியவற்றையும் செய்யமாட்டாரா? பவுல் 8ம் அதிகாரத்தை வாழ்வு நமக்கு எதைக் கொண்டுவந்தாலும், கர்த்தர் எப்போதும் நம்முடன் *இருந்து* நமக்கு உதவு*வார்* என்ற உறுதிப்பாட்டைக் கொண்டு முடித்தார்:

> உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் (8:35-39).

எதிர்காலத்தில் இரட்சிப்பு (5:9)

நமது வேதவசனப்பகுதியானது கடந்தகாலத்திலும் நிகழ்காலத்திலும் இரட்சிப்பு என்பதைப் பற்றிப் பேசுகிறது; அது எதிர்காலத்தில் இரட்சிப்புப் பற்றியும் குறிப்பிடுகிறது. 9ம் வசனத்தில் நாம், “இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.” “இரட் சிக்கப்படுவது” என்பது எதிர்கால வினைச்சொல்லில் உள்ளதால், இவ்வசனத்தில் உள்ள “கோபாக்கினை” என்பது நியாயத்தீர்ப்பின் நாளில் அநீதியானவர்களுக்கு எதிரான தேவனுடைய கோபமாகும் என்று பெரும்பான்மையானவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். 9ம் வசனம் தேவனுடைய கிருபையின் இரண்டு அம்சங்களை விளக்கப்படுத்துகிறது. அவரது கிருபையினிமித்தம், நாம் பெறத்தகுதி*யற்றவர்களாக* இருந்த போதே அவர் அதை நமக்குக் கொடுத்தார்: அது நீதிமானாக்கப்படுதல். அவரது கிருபையினிமித்தம் நாம் பெற்றுக்கொள்ளத் தகுதியானதை நமக்குக் *கொடாதிருக்கிறார்*: அது கோபம்.

மீண்டுமாகப், பவுல் நாம் “அவராலே - அதாவது, கிறிஸ்துவினாலே - இரட்சிக்கப்பட்டோம்” என்பதை வலியுறுத்தினார். ஆட்டுக்குட்டியானவரின் விலைமதிப்பற்ற இரத்தத்தினால் நாம் கடந்தகாலப் பாவங்களில் இருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறோம், அன்றாடம் இரட்சிக்கப்படுகிறோம், மற்றும் நித்தியத்திற்கும் கடைசியில் இரட்சிக்கப்படுவோம்! வெளிப்படுத்தின விசேஷம் 7ம் அதிகாரம் இரட்சிக்கப்பட்டவர்கள் தேவனுடைய அரியணையைச் சுற்றிலும் இருக்கிற, இருதயத்தை அசைக்கச் செய்யும் காட்சியைச் சித்தரிக்கிறது. அவர்கள் வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிறார்கள். 14ம் வசனமானது, அவர்கள் “தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்” என்று சித்திரிக்கிறது.

பழைய பாடல் ஒன்று பின்வருமாறு அறிவிக்கிறது,

மகாப்பெரிய நாளொன்று வருகிறது,
மகாப்பெரிய நாளொன்று வருகிறது,
பரிசுத்தவான்களும் பாவிகளும் வலது இடது புறமாகப் பிரிக்கப்படும்
மகாப்பெரிய நாளொன்று நெருங்கி வருகிறது;
வரவிருக்கும் அந்த நாளுக்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா?

பிரகாசமான நாளொன்று வருகிறது,
பிரகாசமான நாளொன்று வருகிறது;
ஆனால் அதன் பிரகாசம் கர்த்தரை அன்புகூருபவர்களுக்கு மாத்திரமே
வரும்,
வரவிருக்கும் அந்த நாளுக்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா?

கவலைக்குரிய நாளொன்று வருகிறது,
கவலைக்குரிய நாளொன்று வருகிறது,
அவர் “அகன்றுபோங்கள், உங்களை அறியேன்” என்று கூறும்
அழிவு வார்த்தையைப் பாவிகள் கேட்கவிருக்கும்
கவலைக்குரிய நாளொன்று வருகிறது;

வரவிருக்கும் அந்த நாளுக்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா?[25]

நியாயத்தீர்ப்பின் நாள் உங்களுக்கு "ஒரு பிரகாசமான நாளாக" இருக்குமா? அல்லது "ஒரு கவலைக்குரிய நாளாக" இருக்குமா? அது உங்கள் அங்கிகள் "ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தில் தோய்த்து வெளுக்கப்பட்டதா இல்லையா" என்பதைப் பொறுத்ததாகும்.

முடிவுரை

பவுல் கர்த்தரிடத்தில் இருந்து தாம் கண்டறிந்த சந்தோஷத்தின் தன்முனைப்பான வெளிப்பாட்டில் பேசினார்: "அதுவுமல்லாமல், இப்போது ... தேவனைப்[26] பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம்" (வசனம் 11). பவுலின் [அகம்மகிழ்தல்/மேன்மை பாராட்டுதல்] என்பது அவர் செய்திருந்த எவற்றிற்காகவும் அவர் தமக்குத்தாமே பாராட்டிக்கொண்டதாக இருக்கவில்லை, ஆனால் அவர் தேவனுக்குள் மேன்மை பாராட்டினார். 2 மற்றும் 3ம் வசனங்களில், அவர் தேவன் கிறிஸ்தவர்களுக்குச் *செய்வது* பற்றி அகம் மகிழ்ந்தார், ஆனால் அவரது அகம்மகிழ்தல் என்பது ஆசீர்வாதங்களுடன் மட்டுப்படுத்தப்படவில்லை. அவர் "தேவனுக்குள்ளாகவே" மேன்மைபாராட்டினார்: தேவன் யாராக இருக்கிறார் மற்றும் தேவன் என்னவாக இருக்கிறார் என்பது பற்றி அவர் மேன்மைபாராட்டினார். எனது பெண்கள் சிறுமிகளாக இருந்தபோது, மற்றும் நான் ஒரு பயணத்தில் இருந்து திரும்பி வந்திருந்தபோது, சிலவேளைகளில் அவர்களின் பின்வரும் கேள்வியை நான் எதிர்கொள்வதுண்டு: "நீங்கள் எங்களுக்கு என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள்?" அவர்கள், "நீங்கள் இல்லாமல் நாங்கள் தவித்தோம், அப்பா!" என்றோ அல்லது "அப்பா நீங்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்தது மிகவும் நல்லவிஷயம்!" என்றோ கூறவில்லை, ஆனால் "நீங்கள் எங்களுக்கு என்ன கொண்டு வந்திருக் கிறீர்கள்?" என்றே கேட்டனர். ஆவிக்குரிய வகையில் பேசுவதென்றால், சிலர் பிள்ளைகளின் மனநிலையில் இருந்து ஒருநாளும் வளர்ந்து பக்குவப்படாமலே இருக்கின்றனர்: அவர்களின் பிரதான அக்கறை பரலோகத்தின் பிதாவின்மீதல்ல, பரலோகத்தின் பிதா தங்களுக்கு என்ன செய்யக்கூடும் என்பதாகவே உள்ளது. பவுல் அப்படியில்லை. அவர் "தேவனில்" அகம்மகிழ்ந்தார்.

ரோமர் 5:1-11ன் கலந்துரையாடலைப் பவுல் முடிக்கையில், நமது வேத வசனப்பகுதியில் உள்ள எல்லா ஆசீர்வாதங்களும் "இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய்" உள்ளன என்பதை அவர் மீண்டும் வலியுறுத்தினார் (வசனம் 11ஆ). பிரசங்கியார் ஒருவர் "இழந்துபோகப்பட்டுள்ள" மக்களைப் பற்றிப் பேசியதை நான்கு வயதுச்சிறுமி ஒருத்தி கவனித்துக் கேட்டிருந்தாள். அவள் ஒருநாள், "தேவனே வழிதவறிப்போன மக்கள் இனி ஒருபோதும் வழி தவறிப்போய்விடாதபடிக்கு இல்லத்திற்கு அவர்கள் வழியைக் கண்டறிய உதவும்" என்று ஜெபித்தாள்.[27] பலர் "இல்லந்திரும்ப தங்கள் வழியைக் கண்டறிய" வேண்டியுள்ளது - இருப்பினும் அவர்கள் தெருவின் முகவரியை அல்ல, ஆனால் இயேசுகிறிஸ்துவையே கண்ணோக்க வேண்டியுள்ளது. அவர்மூலமாக மாத்திரமே நாம் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட முடியும்.

இந்தப்பாடத்தில், நாம் கடந்தகாலத்தில் இரட்சிப்பு, நிகழ்காலத்தில் இரட்சிப்பு, மற்றும் எதிர்காலத்தில் இரட்சிப்பு ஆகியவற்றைப் பற்றிப் பேசினோம். நாம் இதை முடிக்கையில், உங்கள் சொந்த வாழ்க்கையை மதிப்பீடு

செய்யுங்கள். உங்கள் விசுவாசம் உங்களை ஞானஸ்நானம் பெற வழிநடத்திய போது உங்கள் பாவங்கள் கழுவப்படுதலினால் கடந்தகால இரட்சிப்பை நீங்கள் அனுபவித்திருக்கிறீர்களா (நடபடிகள் 22:16)? தேவனுடைய வசனத்தின் வெளிச்சத்தில் நடக்கையில், உங்கள் ஆத்துமாவை [இயேசுவின்] இரத்தம் தொடர்ந்து சுத்திகரிக்கும் நிகழ்கால இரட்சிப்பை நீங்கள் மகிழ்வுடன் அனுபவிக்கிறீர்களா? (1 யோவான் 1:7, 9)? அப்படியானால், நீங்கள் உங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தில் தோய்த்து வெளுத்தவர்களாகத் தேவனுடைய அரியணையைச் சுற்றிலும் ஒன்றுகூடும் எதிர்கால இரட்சிப்பின் நம்பிக்கையுடன் வாழமுடியும் (வெளிப்படுத்தின விசேஷம் 7:14). நீங்கள் அந்த நம்பிக்கையைக் கொண்டிராவிட்டால், நீங்கள் இன்றே கர்த்தரிடமாய் வரும்படி (அல்லது திரும்பி வரும்படி) உங்களுக்காக நான் ஜெபிக்கிறேன். நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்: கிறிஸ்து உங்களுக்காக மரித்தார்!

குறிப்புகள்

[1]Adapted from David F. Burgess, comp., *Encyclopedia of Sermon Illustrations* (St. Louis: Concordia Publishing House, 1988), 95. [2]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 222, n. 20. [3]James R. Edwards, *Romans*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1992), 139. [4]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 55. [5]Richard A. Batey, *The Letter of Paul to the Romans*, The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 67-68. [6]G. Delling, *"kairōs,"* in Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 389. *"காலம்" என்பதற்குரிய* ("chronology" *போன்ற வார்த்தைகளில் பயன்படுத்தப்படக்கூடிய chronos என்ற) இன்னொரு வார்த்தை காலகட்டத்தைக் குறிப்பதாக உள்ளது.* [7]This timing is discussed in Jimmy Allen, *Survey of Romans*, 4th ed., rev. (Searcy, Ark.: By the author, 1973), 63. [8]Morris, 222. [9]*The Analytical Greek Lexicon,* 55, 364. [10]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 651.

[11]Ibid., 576. [12]Morris, 225. [13]C. S. Lewis, *The Problem of Pain* (Oxford: N.p., 1940; reprint, New York: Macmillan Publishing Co., 1962), 91. *லூயிஸ் என்பவர் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் தேவநம்பிக்கையற்றவராக இருந்து, பின்னர் தேவன்மீது விசுவாசம் கொண்டவராக ஆனவர்.* [14]Morris, 224. [15]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 144. [16]*கிரேக்க மொழி வேதாகமத்தில், "நல்லவன்" என்ற சொற்றொடரில் "மனிதன்" என்பதற்கான சொல் எதுவும் இல்லை. இந்தச் சொற்றொடர், "நல்ல விஷயம்" என்று அர்த்தப்படக்கூடும். பார்க்ளே என்பவர் மொழிபெயர்த்துள்ள வேதாகமத்தில்,* "good cause" *என்றுள்ளது.* [17]*ஒருவேளை, உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்க மான விவரிப்பு ஒன்றை நீங்கள் இங்கு கூடுதலாகக் கூறலாம். அமெரிக்காவில் இதைக் கேட்பவர்களுக்கு, 1982ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வாஷிங்டன்* DC*யில் ஏற்பட்ட ஃபுளோரிடா 90 விமான விபத்திற்குப்பின்பு மற்றவர்களைக் காப்பாற்ற உதவிசெய்த ஒரு மனிதரைப் பற்றிய விவரிப்பு நல்லதாக உள்ளது. அவர் மற்றவர்களைக் காப்பாற்றினார், ஆனால் அவர்தாமே மூழ்கிப்போனார்.* (Burgess, 34.) [18]Stott, 144. [19]Charles H. Spurgeon,

quoed in Joseph S. Excell, *The Biblical Illustrator* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 364. [20]*உங்கள் உரையைக் கேட்பவர்கள் அறிந்துள்ள தற்காலத் தீவிரவாதியொருவரை இவ்விடத்தில் பதிலியாகப் பயன்படுத்த நீங்கள் விரும்பலாம்.*

[21]*The Analytical Greek Lexicon,* 16, 217. [22]Vine, 513-14. [23]J. D. Thomas, *Romans,* The Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1965), 38. [24]William J. and Gloria Gaither, "Because He Lives," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [25]Will L. Thompson, "There's a Great Day Coming," *Christian Hymns, III,* ed. L. O. Sanderson (Nashville: Gospel Advocate Co., 1966). [26]***2:17****ல் பவுல் யூதர்கள் தேவனுக்குள் மேன்மைபாராட்டினர், ஆனால் அவர்கள் தங்களைத் தேவன் தமது விசேஷித்த மக்களினமாகத் தேர்ந்துகொண்டது பற்றி மேன்மைபாராட்டின அளவுக்குத் தேவன்மீது மேன்மை பாராட்டவில்லை என்று கூறினார். தேவனுக்குள் அவர்களின் மேன்மைபாராட்டுதல் (களிகூறுதல்/அகம் மகிழ்தல்) என்பது சுயத்தை மையமாகக் கொண்டிருந்தது, அதேவேளையில் பவுலின் மேன்மை பாராட்டுதல் தேவனை மையமாகக் கொண்டிருந்தது.* [27]Dale Hartman, sermon on "Spiritual Etiquette" preached at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 4 January 2004.

22

"ஒரே மனுஷனாலே"

(5:12-21க்கு ஒரு முன்னுரை)

ரோமர் 5:12-21 வசனப்பகுதியானது மனிதகுலத்திற்கு ஆதாம் அறிமுகப்படுத்திய பிரச்சனைகள் யாவற்றையும் - மற்றும் அவற்றைவிட அதிக மானவற்றையும் - பற்றிக் கிறிஸ்து பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார் என்று உறுதிப்படுத்துகிறது. J. D. *தாமஸ் என்பவர் இதைப் பின்வருமாறு கூறினார்: "ஆதாமுக்குள் நாம் இழந்தவற்றைக் கிறிஸ்துவுக்குள் ஆதாயப்படுத்திக் கொள்கிறோம் ... கிறிஸ்துவின் மூலமாக நமது ஆதாயமானது ஆதாமுக்குள் நமது இழப்பைவிட மிகவும் அதிகமாக உள்ளது."*[1] *அதுவே ரோமர் 5ன் இறுதிப்பாதி யினுடைய அடிப்படைச் செய்தியாக உள்ளது.*

அதை அப்படியே விட்டுவிட்டு ரோமர் 6ம் அதிகாரத்திற்குச் செல்லும்படி சோதிக்கப்படுதல் இருக்கலாம், ஆனால் குறைந்தபட்சம் பின்வரும் மூன்று காரணங்களுக்காக நாம் ரோமர் 5:12-21ஐப் படிக்காது விட்டுச் சென்றுவிட இயலாது. முதலாவது, ரோமருக்கு எழுதிய நிருபத்தின் எல்லா வசனப்பகுதிகளையும் நாம் நம்மால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகக் கையாள வேண்டியது அவசியமாக உள்ளது. இரண்டாவது, இவ்வசனப்பகுதியில் உள்ள சில சிந்தனைகள் மற்றும் சொற்றொடர்கள், பின்தொடரும் அதிகாரங்களில் விரித்துரைக்கப்படுகின்றன, எனவே பின்னணி என்ற வகையில் நாம் இந்த வசனப்பகுதியைப்பற்றிச் சற்றே புரிந்துகொள்ளுதல் அவசியமாகிறது. மூன்றாவது, இவ்வசனங்களில் பரிசுத்த ஆவியானவர் வலிவார்ந்த சத்தியங்களை உள்ளடக்கினார்.

ரோமர் 5:12-21ஐப் புறக்கணித்து அடுத்த அதிகாரத்திற்குக் கடந்து செல்லும்படிக்கு நான் தூண்டப்படுவதுகூட ஏன் ஏற்படவேண்டும்? ஏனென்றால் இவ்வசனப்பகுதி மிகவும் *கடினமானதாக உள்ளது. மோசஸ்* E. *லார்டு என்பவர் இதை, "இந்த நிருபத்தின் மிகவும் கடினமான வசனப்பகுதிகளில் ஒன்று" என்று அழைத்தார்.*[2] *சிலர் "ரோமர் 5:12-21 முழு வேதாகமத்திலும் மிகவும் கடினமான வசனப்பகுதியாக இருக்கிறது என்று கருதுகின்றனர்" என்று ரிச்சர்டு ரோஜர்ஸ் என்பவர் கூறினார்.*[3] *12ம் வசனம்மீது விளக்கம் அளிக்கையில் டக்ளஸ்* J. *மூ என்பவர் "ஒவ்வொரு வார்த்தையும் - சொல்லப்போனால் ஒவ்வொரு நிறுத்தற்குறியும்! - வலிவார்ந்த நேரெதிர் கருத்திற்குப் பொருளாக இருக்கிறது" என்று குறிப்பிட்டார்.*[4]

பல காரணங்களுக்காக ரோமர் 5:12-21 வசனப்பகுதியானது விளக்கவுரையாளர்களுக்கு அறைகூவல்களை அளிக்கிறது. பவுலின் எழுத்து நடை என்பது ஒரு காரணமாக உள்ளது. அவ்வப்போது அவர் (12ம் வசனத்தின் முடிவைக் காணவும்) ஒரு வாக்கியத்தை முடிக்காதிருந்தார். மேலும், அவர் ஒரு சிந்தனையில் இருந்து இன்னொரு சிந்தனைக்கும் அதிலிருந்து வேறொரு சிந்தனைக்கும் தாவினார்; 12ம் வசனத்தில் தொடங்கிய கூற்று 18ம் வசனம் வரையிலும் முடிவதில்லை. பின்பு, அவர் வினைச்சொற்களையும்

மற்ற திறவுகோல் வார்த்தைகளையும் விட்டுவிட்டார் (எடுத்துக்காட்டாக, 16ம் வசனத்தில் மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டது என்று சுட்டிக்காண்பிக்கும் வகையில் [NASB வேதாகமத்தில்] சாய்வெழுத்துக்களில் உள்ள வார்த்தைகளைக் கவனிக்கவும்). மற்றும், ஆதாமுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையில் ஒரு இணைகருத்தைத் தரவழைத்தல் என்பதே இந்த வசனப் பகுதியைப் பொறுத்தமட்டில் பவுலின் நோக்கமாக இருந்தது. சிலவேளைகளில், அவர் எவ்வாறு அவர்கள் ஒன்றுபோலிருந்தனர் என்று சுட்டிக்காண்பித்தார்; மற்றும் சிலவேளைகளில், ஒப்பீடு என்பதே இருப்பதில்லை.

இந்தப்பகுதியானது பெருமளவில் செறிவாக்கப்பட்டுள்ளது என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது.[5] ஒரு எழுத்தாளர், "இது ஒருவேளை பவுலின் எழுத்துக்கள் எல்லாவற்றிலும் மிகவும் செறிவாக்கப்பட்ட வசனப்பகுதி யாக இருக்கலாம்" என்று குறிப்பிட்டார்.[6] (நான் 5:12-21ஐ வாசிக்கையில், நீண்ட நாட்களுக்கு முன்பு நான் எழுதிய சுருக்கமான பிரசங்கக்குறிப்பு ஒன்றை நான் கண்ணோக்கும்போது என்ன நடைபெறுகிறது என்பது என் நினைவுக்கு வருகிறது. நான், "*அதன்மூலம்* நான் எதை அர்த்தப்படுத்தினேன்? ... அந்தக் கருத்துப்பற்றி நான் என்ன கூறினேன் என்பதைக் குறித்து நான் ஆச்சரியம் அடைகிறேன். ... நான் பயன்படுத்திய 'ஒரு நாய் பற்றிய விவரிப்பு' என்னவாக *இருந்தது?*" என்று நினைக்கிறேன்.) பவுலின் விவாதம் மிகவும் கொஞ்சமான வார்த்தைகளில் தெரிவிக்கப்பட்டதாக இருப்பதால், அவரது சிந்தனைகளைப் புரிந்து கொள்ள இவ்வேத வசனப்பகுதியை விரிவாக்குதல் அவசியமானதாக உள்ளது. தேவைப்படும் வார்த்தைகள் என்ன என்பது பற்றி நாம் உறுதியா யிருக்க இயலாது என்பதே பிரச்சனையாக உள்ளது. இதன் விளைவாக, நாம் "வேதாகமத்தின் பிற பகுதிகளில் இருந்து பெற்றுள்ள உறுதிப்பாடுகளைக்"[7] கொண்டு "கோடிட்ட இடங்களை நிரப்ப" முயற்சிக்கிறோம்.

பவுலின் எழுத்து நடையும் அவரது வார்த்தைகளுக்குத் துணை வார்த்தைகள் இட வேண்டிய அவசியமும் சேர்ந்து, இவ்வேத வசனப்பகுதி பற்றிப் பிரதான மான கருத்துவேறுபாட்டை விளைவித்துள்ளன. உண்மையான போதகர்கள் என்று நான் கருதுகிற, திறமைவாய்ந்த கல்வியாளர்களும்கூட (தீத்து 1:13) பின்வருவனபோன்ற கேள்விகளுக்குப் பதில் அளிப்பதில் கருத்து ஒன்றுபடுவ தில்லை. 12ம் வசனத்தில் உள்ள "மரணம்" என்பது சரீரப்பிரகாரமான மரணமா, ஆவிக்குரிய மரணமா, அல்லது இவ்விரண்டின் கூட்டுக்கருத்தா? 12ம் வசனத்தில் "எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால்" என்பது 3:23ல் உள்ளதுபோன்று தனிப்பட்ட பாவத்தைக் குறிப்பிடுகிறதா, அல்லது இவ்வார்த்தைகள் வேறு எதையாவது அர்த்தப்படுத்தக்கூடுமா? மதிப்புமிக்க எழுத்தாளர்களிடையே நிலவும் இவைபோன்ற கருத்துவேறுபாடுகள், ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் படிக்கத்தொடங்கும் மாணவரை ஊக்கமிழந்துபோகப் பண்ணக்கூடும்.

கடைசியாக, மனிதரால் ஏற்படுத்தப்படுகிற உபதேசங்களைப் பரப்பு கின்றவர்கள், இவ்வசனப்பகுதியில் உள்ள மறைவான அம்சங்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர் என்ற உண்மையினால், ரோமர் 5:12-21ஐ விளக்கப்படுத்தும் நமது முயற்சி சிக்கலாக்கப்படுகிறது. லேர்ரி டீயெஸன் என்பவர், நமது வேதவசனப்பகுதி "வேதாகமம் முழுவதிலுமே மிகவும் தவறாகப் பயன்படுத்தப்பட்ட வசனப்பகுதிகளில் ஒன்றாக இருக்கிறது" என்று கருத்துத் தெரிவித்தார்.[8] எனவே இவ்வசனப்பகுதி எதைப் *போதிக்கிறது* என்பதை

ஆழ்ந்து சிந்திப்பதற்கு முன் இது எதைக் *கூறுவதில்லை* என்பதை வலியுறுத்துதல் அவசியமாயிருக்கும்.

ரோமருக்கு எழுதிய நிருபத்தில் நமது பயணத்தின் இப்பகுதியில் சாலை அறிவிப்புக்குறி ஒன்று வைக்கப்பட்டிருக்கும் என்றால், அதில் "அபாயமான சூழ்நிலைகள்! உங்கள் சொந்தப்பொறுப்பிலேயே தொடர்ந்து செல்ல வேண்டும்!" என்று கூறப்பட்டிருக்கும். இந்தப்பகுதியினூடே நமது பயணமானது சுலப மானதாக இராது. இருப்பினும், இவ்வசனப்பகுதி பற்றிய மூன்று பாடங்களை நீங்கள் முடிக்கும் வேளையில் நீங்கள் ஆதாயப்படுத்திக் கொள்ளவிருக்கும் உட்கண்ணோட்டமானது இந்தக்கல்விப்பயணத்தைத் தகுதிவாய்ந்ததாக்கும் என்று நான் நம்புகிறேன்.

இந்தப் பாடம் ஒரு அஸ்திபாரத்தை இடும். அடுத்த எடுத்துரைப்பில் நாம் நமது படிப்பைத் தொடங்குவோம்.

இவ்வசனப்பகுதி எதைப் *போதிப்பதில்லை*

ரோமர் 5:12-21 எதைப் போதிக்கிறது என்பதைவிட எதைப் *போதிப்பதில்லை* என்பது பற்றி நாம் அதிக நிச்சயமாய்க் கூறக்கூடிய வசனப்பகுதிகளில் ஒன்றாக உள்ளது. இப்படிப்பட்ட கருத்தைக் குறித்துச் சிலர் ஏளனம் செய்கின்றனர். அவர்கள், ''இது எதைப் *போதிக்கிறது* என்பதுபற்றி நீங்கள் நிச்சயமில்லாதிருந்தால், இது எதைப் போ*திப்ப தில்லை* என்பதுபற்றி நீங்கள் எப்படி நிச்சயமாயிருக்க முடியும்?'' என்று அவர்கள் கேட்கின்றனர். இரு மனிதர்கள் பேசிக்கொண்டிருக்கையில், ஒரு பெண்மணி அவ்விடத்தைக் கடந்து நடந்து செல்கிறார். ஒரு மனிதர் இன்னொருவரிடத்தில், ''அந்தப் பெண் யார்? உங்கள் மனைவியா?'' என்று கேட்கிறார். இரண்டாம் மனிதர், ''அவர்கள் யாராக *இருக்கிறார்* என்று எனக்குத் தெரியாது, ஆனால் அவர்கள் யாராக *இருப்பதில்லை* என்று உங்களுக்கு நான் கூறமுடியும். அவர்கள் என் மனை*வியல்ல*'' என்று பதில் அளித்தார். 5:12-21 பற்றிய ஒவ்வொரு விவரம்பற்றியும் நான் நிச்சயம் கொண்டிராதிருக்கலாம், ஆனால் அது குறிப்பிட்ட சில உபதேசங்களைப் *போதிப்பதில்லை* என்பது பற்றி நான் தைரியமாய்க் கூறமுடியும்.

இது நாம் ஆதாமின் பாவத்தைச் சுதந்தரிக்கிறோம் என்று *கூறுவதில்லை*

ஏதோ ஒருவகையில் நாம் ஆதாமின் பாவத்தினுடைய குற்றத்தைச் சுதந்தரிக்கிறோம் என்பது, ''கிறிஸ்தவர்கள்'' என்று தங்களை அழைத்துக்கொள்கிறவர்கள் மத்தியில் பரவலாக உள்ள ஒரு நம்பிக்கையாக உள்ளது. மூன்றாம் நூற்றாண்டில், ஏறக்குறைய பவுலுக்கு இருநூறு ஆண்டு களுக்குப்பின், அலெக்சாந்திரியா நகரின் இறையியலாளரான ஓரிகன் என்பவர், "புதிதாய்ப்பிறந்த பச்சிளங்குழந்தைகள் பாவத்திலிருந்து விடுதலையானவர்களாக" இருப்பதில்லை என்று போதித்தார்.[9] ஐந்தாம் நூற்றாண்டில், அகஸ்டைன் என்பவர் அந்தக் கருத்தை விரிவாக்கிப் பிரபலப்படுத்தினார். கத்தோலிக்கர்கள் இதை "ஜென்மப்பாவம் பற்றிய உபதேசம்" என்று அழைத்தனர். பிற்பாடு, பெரும்பான்மையான புரொட்டஸ்டண்டுகள் இந்தக் கருத்தைத் தழுவிக்கொண்டு, "பேரழிவைச் சுதந்தரித்தல்" அல்லது "பேரழிவை முற்றிலும்

சுதந்தரித்தல்" என்ற சொற்றொடராக்கத்தைத் தேர்ந்துகொண்டனர். அவர்கள் "பச்சிளம் குழந்தைகளின் பேரழிவானநிலை" என்பது பற்றிப் பேசினர், அவர்கள் இந்த "பேரழிவானநிலை" ஆதாமிடத்திலிருந்து சுதந்தரிக்கப்படுவதாக நம்பினர். ஜான் கால்வின் என்பவர், ஆதாம் "நமது இயல்பை மோசம் போக்கி, கறைப்படுத்தி, சீரழித்து, கெடுத்துப்போட்டான்" என்ற கருத்தைப் பராமரித்தார்.[10]

"பேரழிவை முற்றிலும் சுதந்தரித்தல்" என்பது சிலவேளைகளில், "கால்வினீய இறையியல் கொள்கை" என்று அழைக்கப்படும் அளவுக்கு அடிப்படையான கொள்கையாக உள்ளது. மக்கள் இரட்சிக்கப்படுவது எவ்வாறு என்பது பற்றிய கால்வினீயக் கருத்திற்குள் "பேரழிவை முற்றிலும் சுதந்தரித்தல்" என்பது எவ்வாறு பொருந்துகிறது என்பதற்கு ஒரு மேல்கண்ணோட்டம் கீழே தரப்படுகிறது:

- மக்கள் ஆதாமின் பாவத்தின் கறையுடன் பிறந்திருப்ப தாகக் கூறப்படுகிறது; இவ்வாறு அவர்கள் தங்களைத் தாங்களே இரட்சித்துக்கொள்ள எதுவும் செய்ய இயலாதவர் களாக இருக்கின்றனர் ("பேரழிவை முற்றிலும் சுதந்தரித்துக் கொள்ளுதல்").
- மக்களை மறுபடியும் ஜெநிப்பிக்கச்செய்து அவர்களை இரட்சிப்பதற்குத் தேவன் பரிசுத்த ஆவியானவரை அனுப்ப வேண்டும் என்று கால்வினீயக் கொள்கைக்காரர்கள் எதிர் பார்க்கின்றனர் ("பரிசுத்த ஆவியானவரின் நேரடியான செயல்பாடு").
- இரட்சிக்கப்படுவதற்கு மக்கள் ஒன்றும் செய்ய இயலாது என்ற நம்பிக்கை கொண்டநிலையில், கால்வினீயர்கள், இழந்துபோகப்படுவதற்கும் தங்களால் ஒன்றும் செய்ய இயலாது என்றும் கூறுகின்றனர் ("விசுவாசத்தை விட்டு விலகிச்செல்ல இயலாமை").

ஆதாமின் பாவத்தினால் கறைப்பட்ட நிலையில் இறந்துபோகிற (என்று அவர்கள் நம்பிய) குழந்தைகளைப் பற்றிக் கவலைப்படுதல் என்பது "ஜென்மப்பாவம்" என்ற உபதேசத்தின் துணை உற்பத்திக் கருத்துக்களில் ஒன்றாக உள்ளது. "ஜென்மப்பாவத்தை" எதிர்த்து நிற்பதற்கு அவர்கள் குழந்தைகளை "ஞானஸ்நானப்படுத்த" தொடங்கினர். அது ஞானஸ்நானம் பெறாத குழந்தைகளின் பிரச்சனையை இன்னமும் விட்டுவைத்திருந்தது, எனவே அவர்கள் "ஞானஸ்நானம்பெறாது" மரித்துப்போன பச்சிளம் குழந்தைகளுக்கு இனிவரும் உலகத்தில் "இருட்டுஸ்தலம்" என்ற ஒரு இடத்தைக் கண்டுபிடித்தனர்.[11] இது தவறான உபதேசங்கள் எவ்வாறு பெருகுகின்றன என்பதற்கு ஒரு உதாரணமாக உள்ளது.

நாம் "ஜென்மப்பாவம்" என்பது பற்றிய உபதேசத்திற்குத் திரும்பச்செல் வோமாக: மனிதன் எவ்வாறு இப்படிப்பட்ட கருத்தைக் கொண்டுவந்தான்? இந்த உபதேசத்தை முன்மொழிபவர்கள், பாவத்தின் நிரந்தரத்தன்மையையும் தொலைதூரம் சென்றடையும் தன்மையையும் வலியுறுத்தும் (யாத்திராகமம் 20:5 போன்ற) வசனப்பகுதிகளை அல்லது (சங்கீதம் 51:5[12] போன்ற)

மனிதகுலத்தின் பாவம்நிறைந்த தன்மையை உயர்த்திக்காட்டப் பயன்படும் உயர்வுநவிற்சி (மிகைப்படுத்திக்கூறும்) வசனப்பகுதிகளை மேற்கோள்கள் காண்பிக்கின்றனர். இருப்பினும், ரோமர் 5:12-21 அவர்களின் முக்கிய மான ஆதாரவசனங்களாக இருக்கிறது. ஜேம்ஸ் R. எட்வர்ட்ஸ் என்பவர், அவ்வசனப்பகுதியின் 12ம் வசனம் ''ஜென்மப்பாவம் என்ற உபதேசத்தை வளர்க்கக் காரணமான களமாக இருந்துள்ளது'' என்று எழுதினார்.[13]

ஏற்கனவே சுட்டிக்காண்பிக்கப்பட்டபடி, இந்த உபசேதமானது ஒரு வடிவில் அல்லது இன்னொரு வடிவில், கிறிஸ்தவ வட்டாரத்தில் உலகளாவிய வகையில் பெரிதும் ஒப்புக்கொள்ளப்பட்ட உபதேசங்களில் ஒன்றாக உள்ளது. இருந்தபோதிலும், இது ரோமர் 5ல் *போதிக்கப்படவில்லை* என்று நான் தைரிய மாகக் கூறமுடியும். இதைத் தொடங்க, இவ்வசனத்தில் பவுலின் நோக்க மானது, பாவத்தின் இயல்பைப் பற்றிய ஆழமான படிப்பை முன்வைத்தலாக இருக்கவில்லை. பல விளக்கவுரையாளர்கள், பவுல் இப்படிப்பட்ட நோக்கம் கொண்டிருக்கவில்லை என்று ஒத்துக்கொள்கின்றனர்.

- "ரோமர் 5:12-21 வசனப்பகுதி 'ஜென்மப்பாவம்' என்பதைத் தனது கவனக்குவிப்பாகக் கொண்டிருப்பதில்லை ..." (டக்ளஸ் J. மூ).[14]
- "12ம் வசனம் ... பாவத்தின் பிரச்சனையை கோட்பாடு அளவில் கலந்துரையாடுவதில்லை ... இங்கு ஜென்மப்பாவத்தின் உபதேசத்தை மேம்படுத்துதல் என்பது [பவுலின்] நோக்கமாக இருப்பதில்லை" (ஜேம்ஸ் R. எட்வர்ட்ஸ்).[15]
- ''மோசம்போக்கும் இயல்பு அல்லது பாவம்நிறைந்த விருப்பச்சாய்வுகள் பற்றிப் பவுல் ஒன்றும் கூறுவதில்லை; இப்படிப்பட்ட கண்ணோக்குகள் வசனத்திற்குள் [இல்லாத] சிலவற்றை வாசித்தலாக உள்ளன" (லியோன் மோரிஸ்).[16]

மேலும், 12 முதல் 21 வரையிலான வசனங்கள் "பேரழிவை சுதந்தரித்தல்" என்ற உபதேசத்தைப் போதிக்கின்றன என்ற உரிமைகோருதலையும் நான் மறுக் கிறேன், ஏனென்றால் அப்படிப்பட்ட முடிவு வேதாகமத்தின் விளக்கம்பற்றிய அடிப்படைக் கொள்கையொன்றை மீறுகிறது. அந்தக் கொள்கையைப் பின்வருமாறு உரைக்க முடியும்: "ஒரு தெளிவற்ற வசனப்பகுதியை வேறு எந்த இடத்திலாவது உள்ள தெளிவான வசனப்பகுதிக்கு முரண்படும்படி விளக்கம்தரவேண்டாம்." இவ்வசனங்கள் பகுதியாகவோ அல்லது முழுமை யாகவோ, *மிகவும்* தெளிவற்றவைகளாக உள்ளன என்பதை ஏறக்குறைய எல்லாருமே ஒப்புக்கொள்கிறோம். விஷயம் இப்படி இருப்பதால், இவ்வசனப்பகுதியானது, பின்வருவன போன்ற வேதாகமத்தின் தெளிவான போதனைக்கு முரண்படும் வகையில் விளக்கம் தரப்படக்கூடாது:

- பிள்ளைகள் ஆதாமின் பாவத்தினால் மோசம்போக்கப்பட்ட அல்லது கறைப்பட்ட நிலையில் அல்ல, ஆனால் தூய்மையானவை களாகவும் பரிசுத்தமானவைகளாகவும் பிறக்கின்றன (மத்தேயு 18:3; 19:14ஐக் காணவும்).
- ஒவ்வொருவரும் தமது தந்தையின் பாவத்திற்கோ (எசேக்கியேல்

> *18:20) அல்லது நமது தகப்பனாகிய ஆதாமின் பாவத் திற்கோ அல்ல, ஆனால் தத்தமது சொந்தப் பாவத்திற்கே பொறுப்பாளிகளாக உள்ளனர் (எபேசியர் 2:1; கொலோ செயர் 2:13 ஆகியவற்றைக் காணவும்).*

ஆதாமின் பாவமானது நாம் வாழும் இவ்வுலகின்மீது பேரழிவை ஏற்படுத்தும் விளைவு எதையும் கொண்டிருப்பதில்லை என்று நான் ஆலோசனை தெரிவிக்கிறேனா? இல்லவே இல்லை. நாம் ஆதாமின் பாவத்தின் குற்றத்தை *சுதந்தரிக்காவிட்டாலும், அவனது பாவத்தின் தொலைதூரம் சென்றடையும்* விளைவுகளை *நாம் சுதந்தரித்து இருக்கிறோம். 17ம் வசனம்,* JB *வேதாகமத்தில்* "death reigned over everyone as the *consequence* of one man's fall" *("ஒரு மனிதனின் வீழ்ச்சியின் விளைவாக மரணம் எல்லார்மீதும் ஆளுகை செய்கிறது") என்றுள்ளது. "குற்றம்" மற்றும் "விளைவுகள்" என்பவற்றிற்கு இடையிலான வேறுபாடு என்ன? எனது தந்தை கொலைக்குற்றம் செய்திருந்தால், அவரது குற்றம் என்மீது சுமத்தப்படாது; அந்தக் குற்றத்திற்காக நான் விசாரிக்கப்பட மாட்டேன். இருப்பினும், அவரது செயலின் காரணமாக - மனவலி, வேதனை, மற்றும் சிறுமைப்படுத்தப்படுதல் போன்ற - பலவிளைவுகளால் நான் துன்புறுவேன். ஆதாமின் பாவத்தின் குற்றத்தை நாம் சுதந்தரிப்ப தில்லை, இருப்பினும் அவனது செயலின் விளைவுகளால் நாம் நாள்தோறும் துன்புறுகிறோம் என்று நான் மீண்டும் கூறுகிறேன்.*

விளைவுகள் யாவை? 12ம் வசனம் "ஒரே மனுஷனாலே பாவமும் ... உலகத்திலே பிரவேசித்தது" என்று கூறுகிறது. ஏதேன் தோட்டத்தில், துன் மார்க்கத்தின் ஒரே ஒரு பிரதிநிதித்துவம் இருந்ததாகவே ஆதாரம் உள்ளது. சர்ப்பம் (ஆதியாகமம் 3:1) என்பது மாறுவேடத்தில் வந்த சாத்தானாகவோ (வெளிப்படுத்தின விசேஷம் 12:9ஐக் காணவும்) அல்லது சாத்தானுடைய முகவராகவோ இருந்தது. இன்றைய நாட்களில், நாம் "துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் ... போராட்டம்" செய்வதாக நமக்குக் கூறப்படுகிறது (எபேசியர் 6:12). இந்த "பொல்லாத சேனை" எங்கிருந்து வந்தது? ஏதோ ஒரு வகையில், ஆதாமின் கீழ்ப்படியாமை உலகத்தில் பொல்லாத சேனைகள் வெள்ளமெனப் பெருக்கெடுக்க "கதவைத் திறந்து" விட்டதா? எனக்குத் தெரியாது, ஆனால் ஏதோ ஒரு விஷயமானது பூமியில் துன் மார்க்கம் பரவுவதை விசையுடன் தூண்டிவிட்டது.

12ம் வசனம், "பாவத்தினாலே மரணமும் [உலகத்திலே பிரவேசித்தது]" என்று குறிப்பாகக் கூறுகிறது. ஆதாமிடத்தில் தேவன், "ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்" என்று கூறினார் (ஆதியாகமம் 2:17). இந்த எச்சரிக்கை தரப்பட்டிருந்தும்கூட, அவனும் ஏவாளும் அதைப் புசித்தனர் (ஆதியாகமம் 3:6). இதன் விளைவாக, அவர்கள் தோட்டத்தில் இருந்து துரத்தப்பட்டனர் மற்றும் அவர்கள் ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்க இயலாமற்போயிற்று (ஆதியாகமம் 3:24). அது நடைபெற்றபோது, அவர்களின் உடல்கள் சீரழியத்தொடங்கின; அவர்கள் மரிக்கத் தொடங்கினர். மரணத்தின் சாபம் இந்த உலகத்திற்குள் பிரவேசித்தது. மரணத்திற்குமுன் வரக்கூடிய வேதனை மற்றும் உபத்திரவத்தை நினைத்துப்பாருங்கள்; திறந்த கல்லறைகளுக்கு அருகில் சிந்தப்பட்டுள்ள

கண்ணீர்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். மரணத்தைப் பவுல் "சத்துரு" என்று குறிப்பிட்டதில் (1 கொரிந்தியர் 15:26) வியப்பு எதுவுமில்லை. இவை யாவும் ஆதாமின் பாவத்தால் விளைந்தன.

மரணத்தின் வேதனையைவிட மரணத்தை அச்சுறுத்தலாகவும் பலாத்காரப்படுத்துதலாகவும் மிகத்தீவிரமான வகையில் சாத்தான் காலங் களினூடே பயன்படுத்திய விதம் உள்ளது. இயேசுவின் பலியைப்பற்றிப் பேசுகையில் எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் பின்வருமாறு கூறினார்,

> ஆதலால், பிள்ளைகள் [மனிதகுலம் முழுமையும்] மாம்சத் தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் [கிறிஸ்து] அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத் தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார் (எபிரெயர் 2:14, 15).

ஆண்டுகளினூடே மரணம் என்பது பிசாசானவனுடைய "பெரிய குச்சியாக," மக்களைத் தனது ஆணையின்படி செய்ய பலாத்காரப்படுத்தும் ஒரு ஆயுத மாக இருந்துள்ளது. இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூல மாக, சாத்தானுடைய "பெரிய குச்சியை" அவனிடத்தில் இருந்து கர்த்தர் எடுத்துப்போட்டதற்காகத் தேவனுக்கு நன்றி!

இருப்பினும், மாம்சப்பிரகாரமான மரணம் என்பது ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபோது கிழித்துத் திறக்கப்பட்ட பிரச்சனைகளின் பொதியின் மீதான மூடுகையாக மாத்திரமே இருந்தது என்று புரிந்துகொள்ளுங்கள். ஏவாளிடத்தில் தேவன், "நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்" என்று கூறினார் (ஆதியாகமம் 3:16). ஆதாமிடம் அவர் பின்வருமாறு கூறினார்,

> நீ ... புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு
> விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே,
> பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்;
> ... அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; ...
> நீ பூமிக்குத் திரும்புமட்டும்
> உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்;
> நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்
> (ஆதியாகமம் 3:17-19).

சிருஷ்டி முழுவதுமே ஆதாமின் பாவத்தினால் பாதிக்கப்பட்டது (ரோமர் 8:20-22ஐக் காணவும்). பிள்ளை பெறும் வேதனையில் பெண் ஒருத்தி துடிக்கும் ஒவ்வொரு முறையும், வேர்த்து விருவிருக்கும் விவசாயி இன்னொரு களையை வெட்டியெடுக்கும் ஒவ்வொரு முறையும், நாளின் வேலையில் வேலைக்காரர் ஒருவர் கடினமாகப் பாடுபடும் ஒவ்வொரு முறையும், இன்னொரு இயற்கைப் பேரழிவு ஏற்படும் ஒவ்வொரு முறையும், பாவத்தின் தூரம் சென்றடையும் விளைவுகள் பற்றிய கூடுதல் நிரூபணம் ஒன்றை நாம் பெற்றுக்கொள்கிறோம். நாம் பாவம் தொற்றிப்பரவியுள்ள மற்றும் பாவத்தால் சேதப்பட்டுள்ள உலகத்தில்

வாழ்கிறோம். ஆதாமின் பாவம் அவனது சந்ததியார்களுக்குக் கடத்தப்பட்டது என்று வேதாகமம் கூறுவதில்லை, ஆனால் அவனது கீழ்ப்படியாமையின் விளைவுகளால் நாம் அன்றாடம் துன்புறுகிறோம்.

நாம் இந்தத் தலைப்பை விட்டுச் செல்வதற்கு முன், தற்கால விளக்கவுரையாளர்களில் பெரும்பான்மையானவர்கள், ஆதாமின் பாவக்*குற்றம்* ஆத்துமாக்களைக் கறைப்படுத்திய நிலையில் பிள்ளைகள் பிறக்கின்றன என்று இப்போதெல்லாம் போதிப்பதில்லை என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். "முற்றிலுமான பேரழிவைச் சுதந்தரித்தல்" பற்றிய உபதேசத்தை தற்கால ருசிகளுக்கு அதிகம் சுவையாக்குவதற்கு அவர்கள் அதை நீர்த்துப்போகச் செய்துள்ளனர். இப்போது பலர், ஆதாமின் பாவம் எல்லாத் தனிநபர்களுக்குள்ளும், "பாவம்நிறைந்த நாட்டங்களாக" ஆதாமின் "பாவம் நிறைந்த இயல்பில்" இருந்து நாம் சுதந்தரித்துக்கொண்டுள்ள - "பாவத்தை நோக்கிய சாய்தலாக" உள்ளதென்று போதிப்பதைத் தேர்ந்துகொள்கின்றனர். பல எழுத்தாளர்கள், நாம் பாவம் செய்வதற்கு இந்த "பாவம்நிறைந்த இயல்பு"தான் *காரணமாக* உள்ளது என்று தைரியமாகக் கூறுகின்றனர். சிலர், நாம் பாவம் செய்வோம் (அதாவது பாவம் செய்வதிலிருந்து நாம் ஓய்ந்திருக்க இயலாது) என்பது *தவிர்க்க இயலாதது,* ஏனெனில் நாம் "பாவம் நிறைந்த இயல்பை" ஆதாமிடமிருந்து சுதந்தரித்துக் கொண்டுள்ளோம் என்றும்கூட வலியுறுத்துகின்றனர். ஒருசில மொழிபெயர்ப்புகள் இந்த இறையியல் கருத்தைப் பிரதிபலிக்கின்றன. எடுத்துக்காட்டாக, NIV வேதாகமம், "flesh" ("மாம்சம்") (*sarx*) என்ற வார்த்தையை அடிக்கடி, "பாவம்நிறைந்த இயல்பு" என்று மொழி பெயர்க்கிறது (ரோமர் 7:18; 8:4, 5, 8; 13:14). "பாவம்நிறைந்த இயல்பை" கொண்டிருத்தல் என்பது, சிலர் எவ்வாறு பிசாசுத்தனமாகின்றனர் என்பதையும் பிள்ளைகள் ஏன் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிவதில்லை என்பதையும்கூட விளக்குகிறது என்று நமக்குக் கூறப்படுகிறது.

"பேரழிவைச் சுதந்தரித்தல்" பற்றிய திருத்தப்பட்ட இந்தக் கண்ணோட்டத்தில் நான் பிரச்சனைகள் கொண்டுள்ளேன். முதலாவது, இது இன்னமும் முன்பு குறிப்பிடப்பட்ட வேதாகமத்தின் தெளிவான போதனையையும் அத்துடன் கூடுதலாக, தேவன் நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கிற சுயாதீன சித்தம் பற்றிய வேதாகமரீதியான போதனையையும் மீறுகிறது என்று நான் நம்புகிறேன். இரண்டாவது, ஆதாம் தனது "பாவம்நிறைந்த இயல்பை" தனது சந்ததிகளுக்கு எவ்வாறு கடத்த முடியும் என்பதை நான் காண இயலவில்லை. ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பு தான் கொண்டிருந்தவற்றில் சிலவற்றைக் கடத்தினானா? வேறுவார்த்தைகளில் சொல்வதென்றால், அவன் "பாவம்நிறைந்த இயல்பை" கொண்டிருந்ததால் அவன் பாவம் செய்தானா? அப்படியென்றால், ஆதாமைப்படைத்த தேவன், அவனுக்குள் அந்த "பாவம்நிறைந்த இயல்பை" வைத்திருந்தார் என்றாக வேண்டும். ஆகவே ஆதாமின் பாவத்திற்குத் தேவனே பொறுப்பாளியாவார். அந்த முடிவை நாம் நிச்சயமாகவே ஏற்றுக்கொள்ள இயலாது.

ஆதாம் பாவம் செய்யும்*முன்னர்,* அவன் "பாவம்நிறைந்த இயல்பை" கொண்டிருக்கவில்லை என்றால், அவனது "பாவம்நிறைந்த இயல்பு" (இது தற்காலச் சொற்றொடராக்கத் தெரிவாகும்), அவன் தனது சுயாதீனமான சித்தத்தை நடைமுறைப்படுத்தியதால் விளைந்ததாக இருக்க வேண்டும்.

வேறுவார்த்தைகளில் சொல்வதென்றால், அவனது "பாவம்நிறைந்த இயல்பு" பெற்றுக்கொண்ட ஒரு குணமாக இருந்தது. இவ்விதமாக, "பேரழிவைச் சுதந்தரித்துக்கொள்ளுதல்" பற்றி திருத்தப்பட்ட உபதேசத்தின்படி, ஆதாம் தனது சந்ததிகளுக்குத் தான் பெற்றுக்கொண்ட பண்பை விட்டுச்சென்றான் என்றாகிறது - இது அறிவுக்கு ஏற்புடையதல்லாத ஏற்றுக்கொள்ள இயலாத இன்னொரு முடிவாக உள்ளது. நான் ஒரு விபத்திற்குள்ளாகி எனது கை துண்டாகியிருந்தால் (இது கடைசியில் ஏற்பட்டது என்ற வகையில் பெற்றுக்கொண்ட பண்பாக உள்ளது), எனது பிள்ளைகள் ஒரு கையில்லாமல் பிறப்பார்கள் என்று அர்த்தப்படுவதில்லை.

ஆதாம் "பாவம் நிறைந்த இயல்புடன்" படைக்கப்பட்டதால் அவன் பாவம் செய்யவில்லை. அதுபோலவே நாம் "பாவம் நிறைந்த இயல்புடன்" பிறந்ததால் நாம் பாவம் செய்கிறதில்லை. பின்பு, ஏன், அவன் பாவம் செய்தான்? மனித நடக்கையின் ரகசியங்கள் பற்றிய ஒவ்வொன்றையும் அறிந்திருப்பதாக உரிமை கோராமல், ஆதாம் மற்றும் நம்மைக்குறித்த வேதாகம சத்தியங்கள் ஒரு சிலவற்றை மறுஆய்வு செய்ய என்னை அனுமதியுங்கள்:

- ஆதாமின் ஆத்துமா தூய்மையானதாகவும் பரிசுத்தமானதாகவும் தேவனால் படைக்கப்பட்டது. அதுபோலவே, நமது ஆத்துமாக்களும் தூய்மையும் பரிசுத்தமும் உள்ளவைகளாக இருக்கின்றன, ஏனெனில் அவை தேவனிடத்தில் இருந்து வருகின்றன (சகரியா 12:1; பிரசங்கி 12:7ஐக் காணவும்).
- ஆதாம் சுயாதீன சித்தத்துடன் படைக்கப்பட்டான்; அவன் தேவனுக்குக் கீழ்ப்படியவோ அல்லது கீழ்ப்படியாதிருக்கவோ முடிந்திருந்தது. நாமும்கூட கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியாதிருத்தல் என்ற தேவனால் தரப்பட்ட திறனைக் கொண்டுள்ளோம் (உபாகமம் 30:15-20ஐக் காணவும்).
- ஆதாம், தேவசாயலில் படைக்கப்பட்ட ஜீவிக்கும் ஆவியாக இருந்தான், ஆனால் அவன் மாம்சப்பிரகாரமான சரீரம் ஒன்றையும் கொண்டிருந்தான். ஆதாமையும் ஏவாளையும் அவர்களின் மாம்சப் பசியின் மூலமாக ஒருவழியில் சோதனைக்காரன் தாக்கினான் (ஆதியாகமம் 3:6). கணக்கு ஒப்புவிக்க வேண்டிய நிலையில் உள்ள ஒவ்வொரு தனிநபரும், ஆவிக்கும் மாம்சத்திற்கும் இடையில் போராட்டத்தை அனுபவிக்கிறார் (மத்தேயு 26:41; 1 யோவான் 2:16; ரோமர் 7:18, 19 ஆகிய வசனங்களை காணவும்).
- பரதீசில் (ஏதேன் தோட்டத்தில்)கூட, சோதிக்கப்படுதல் நிலவிற்று. பாவத்தால் வியாதிப்பட்ட உலகத்தில், நாம் சோதிக்கப்படுதலால் தொடர்ந்து மோதப்படுகிறோம் (எபிரெயர் 2:18; 4:15ஐக் காணவும்).
- தேர்ந்துகொள்வதற்குச் சுயாதீனம் பெற்றுள்ள ஒருவர் எப்போதுமே சரியான தேர்ந்துகொள்ளுதலை ஏற்படுத்துவார் என்று கூற இயலாது. ஒருவர் சோதிக்கப்பட்டு தவறான தேர்ந்துகொள்ளுதலை ஏற்படுத்தினால், அது பாவமாக உள்ளது. ஆதாம் ஒரு தவறான தேர்ந்துகொள்ளுதலை ஏற்படுத்தினார் - நாமும் அதுபோலவே செய்கிறோம் (ரோமர் 3:23).

- ஆதாம் சுயாதீன சித்தத்தின் செயல்முறையில் தேவனுக்குக் கீழ்ப்படியாதுபோனான். *அவன்* பாவம் செய்திருந்தபடியால் அவன் குற்றவாளி என்று தீர்க்கப்பட்டான். அதுபோலவே, சுயாதீன ஒழுக்கரீதியான மகவர் என்ற வகையில் நாம் பாவம் செய்கிறோம் மற்றும் பிறரின் பாவங்களுக்கல்ல, *நமது* பாவங்களுக்கே நாம் பொறுப்பாளிகளாக இருக்கிறோம்.

ஆவிக்குரிய வகையில், நாம் ஒவ்வொருவரும் ஆதாமைப்போன்று ஒரே அடிப்படை இடத்தில்தான் நமது வாழ்வைத் தொடங்குகிறோம். நம்மைப்போன்றே, அவனும் ஒரு மனிதப்பிறவியாக இருந்தான். அவன் தவறுசெய்யக்கூடியவனாக இருந்தான், நாமும் தவறுசெய்யக் கூடியவர்களாக இருக்கிறோம். விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ, நாம் ஒவ்வொருவரும் அவன் செய்த அதே அடிப்படைத் தவறைச் செய்கிறோம்: நாம் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போகிறோம். நாம் அதைச் செய்யும்போது, ஆதாம் செய்தவற்றிற்கு அல்ல, ஆனால் நாம் செய்துள்ளவற்றிற்கே நாம் பொறுப்பாளிகள் ஆகிறோம். டீயெஸன் என்பவர் இதைப் பின்வருமாறு குறிப்பிட்டார்: “பாவம் நிறைந்த மரபணுக்களினால் அல்ல, ஆனால் பாவம் நிறைந்த சமூகங்களினாலேயே பாவிகள் உண்டாக்கப்படுகின்றனர்! தேர்ந்துகொள்ளுதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றினாலேயே மக்கள் பாவிகளாகின்றனர்.”[17] மீண்டுமாக, நான் ஆதாமின் பாவத்தை நாம் சுதந்தரித்துக்கொண்டு பிறப்பதாக வேதாகமம் *போதிப்பதில்லை* என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

அது உலகளாவிய இரட்சிப்பைப் போதிப்பதில்லை

ரோமர் 5:12-21 வசனப்பகுதியானது, *ஒவ்வொருவரும்* இரட்சிக்கப்படுவார்கள் என்று நம்புகிறவர்களாலும் ஆதாரவசனமாகப் பயன்படுத்தப்படுகிறது. அவர்களின் நிலைப்பாடு சிலவேளைகளில், “அகிலத்துவத்தின் உபதேசம்” என்று அழைக்கப்படுகிறது.

இந்த விவாதம் 18ம் வசனத்தின்மீது மையங்கொண்டுள்ளது: “ஆகையால் ஒரே மீறுதலினாலே [தோட்டத்தில் ஆதாமின் பாவத்தினாலே] எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரேநீதியினாலே [சிலுவையில் கிறிஸ்துவின் மரணத்தினாலே] எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று.” ஆதாமின் பாவம் எல்லாரையும் ஆக்கினைக்குள்ளாக்கிற்று, ஆனால் கிறிஸ்துவின் மரணம் எல்லாருக்கும் இரட்சிக்கப்படும்படி ஆதாமின் பாவத்தினுடைய விளைவுகளைத் திருப்பிப்போட்டது என்பது [அவர்களின்] நம்பிக்கையாக உள்ளது. மீண்டுமாக, நாம் வேதவசனங்களை விளக்கப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதலில் பிரதானமான தவறாக உள்ள, மறைவான வேதவசனப்பகுதிக்குத் திறவுகோல் போதனை நிலைப்பாட்டை அடிப்படையாக அமைத்தலுக்கு உதாரணத்தைக் கொண்டுள்ளோம்.

எல்லாரும் இரட்சிக்கப்*படுவதில்லை* என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. பல வசனப்பகுதிகள் இதற்கு மேற்கோளாகக் காண்பிக்கப்பட முடியும் (மத்தேயு 25:34, 41, 46ஐக் காணவும்), ஆனால் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பவுலின் சொந்தக் கூற்றுகளுக்கு அப்பால் நாம்

கண்ணோக்க வேண்டிய அவசியம் இல்லை. 2ம் அதிகாரத்தில் அவர் "தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாள்" பற்றிப் பேசினார் (வசனம் 5), அதில் அவர் "சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் அநியாயத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கோ உக்கிரகோபாக்கினை வரும்" என்று கூறினார் (வசனம் 8). 12ம் அதிகாரத்தில் அவர் மீண்டும் "தேவனுடைய கோபாக்கினை" பற்றிப் பேசி, பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் காண்பித்தார்: " 'பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற் செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (வசனம் 19).

நமது வசனப்பகுதியில் உள்ள "பல" மற்றும் "எல்லா" என்பது போன்ற வார்த்தைகளைச் சிலர் பற்றிக்கொண்டு, இவ்வசனப்பகுதி சகலருக்கும் இரட்சிப்பு என்று போதிக்காதிருந்தபோதிலும், இழந்துபோகப்படுபவர்களைக் காட்டிலும் மிகவும் அதிகமானவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் எனப் போதிக்கின்றதென்று முடிவு செய்கின்றனர். நாம் யாவரும் அவ்வாறு இருக்க வேண்டும் என்றே விரும்புகிறோம் - ஆனால் இரட்சிக்கப்படுபவர்களைக் காட்டிலும் மிகவும் அதிகமானவர்கள் இழந்துபோகப்படுவர் என்ற இயேசுவின் தெளிவான போதனையை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும் (மத்தேயு 7:13, 14).

5:18ன் அர்த்தத்தை நாம் பிற்பாடு ஒருபாடத்தில் கலந்துரையாடுவோம். இந்த வேளைக்கு, இவ்வசனமானது எல்லாரும் கடைசியில் இரட்சிக்கப் படுவார்கள் என்று *போதிப்பதில்லை* என்பதை மாத்திரம் நான் எளிமையாகக் கூற அனுமதியுங்கள்.

இவ்வசனப்பகுதி எதைப் *போதிக்கிறது*

ஆலோசிக்கப்பட்ட ஒரு கேள்வி

நாம் 5:12-21 வசனப்பகுதி எதைப் *போதிப்பதில்லை* என்பதை வலியுறுத்தியுள்ளோம், ஆனால் நாம் இன்னமும் அது எதைப் *போதிக்கிறது* என்பதைத் தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது. 12ம் வசனத்தில் உள்ள "மரணம்" என்பது உடல்ரீதியான மரணமா, ஆவிக்குரிய மரணமா, அல்லது இவ்விரண்டினுடைய கலவையா என்பதே இவ்வசனப்பகுதிக்கான விளக்கத்தைப் பெரிதும் பாதிக்கும் கேள்வியாக உள்ளது. இந்தக் கேள்விக்கு சுலபமான பதில் எதுவும் இல்லை.

12ம் வசனம் எவ்வாறு வாசிக்கப்படுகிறது என்பது இங்கே தரப்படுகிறது: "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே *மரணமும்* உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று." சந்தர்ப்பப்பொருளில் "மரணம்" என்ற வார்த்தை இங்கு *உடலுக்குரிய* மரணத்தையே குறிக்கிறது என்று சந்தேகமின்றிக் கூறுபவர்களின் விவாதத்தை நான் படித்திருக்கிறேன். அந்த நிலைப்பாட்டின் பலங்கள் சிலவற்றை நாம் இங்கு ஆழமாக யோசித்துப் பார்ப்போம்.

(1) 12ம் வசனத்தின் முதல் பாகம், ஆதியாகமம் 2 மற்றும் 3ம் அதிகாரங்களில் ஆதாம் பாவம் செய்த வரலாற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது, அவ்வேளையில் தேவன் "நீ சாகவே சாவாய்" என்று கூறினார் (2:17; 3:3ஐக் காணவும்). நீங்களும் நானும் பாவத்தின் விளைவு பற்றி

வேதாகமத்தின் நான்காயிரத்திற்கும் கூடுதலான ஆண்டுகளினுடைய போதனை என்ற அனுகூலத்தைக் கொண்டிருக்கிறோம், எனவே நாம் ஆதாமின் பாவம் உடல்ரீதியான மற்றும் ஆவிக்குரிய மரணம் ஆகிய இரண்டையுமே விளைவித்தது என்று புரிந்துகொள்கிறோம். இருப்பினும், ஆதாம் அந்த வார்த்தைகள் *உடலுக்குரிய* மரணத்தை அர்த்தப்படுத்தியதாகவே புரிந்துகொண்டிருப்பான். ஏனென்றால் விலக்கப்பட்ட மரத்தின் கனியை உண்ட நிலையில் அவனால் ஜீவவிருட்சத்தின் கனியை உண்ணமுடியாதிருந்தது (2:9; 3:24). அவனது மாம்சம் நம் மாம்சத்தைப் போலவே அழியத்தொடங்கிற்று.[18]

(2) பவுல், ஆதாம்/கிறிஸ்து ஒப்புவமையை முன்னதாக எழுதிய ஒரு நிருபத்தில் பயன்படுத்தினார் (1 கொரிந்தியர் 15:21, 22, 45-49ஐக் காணவும்). ரோமர் 5:12-21 வசனப்பகுதியானது 1 கொரிந்தியர் 15:22ன் சிந்தனையை எதிரொலிப்பதாகக் காணப்படுகிறது: "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." 1 கொரிந்தியர் 15ல், *உடலின்* உயிர்த்தெழுதலே முக்கிய வலியுறுத்தமாக உள்ளது, எனவே *உடலின்மீது* பாவத்தின் செயல்விளைவானது அதைப்போன்றே ரோமர் 5ல் நமது வசனப்பகுதியிலும் முக்கிய ஆலோசனைக்குரியதாக உள்ளது என்று சொல்வது பொருத்தமானதாக உள்ளது.

(3) இவ்வசனப்பகுதியானது ஒரு மனிதனின் பாவம் மனிதகுலம் முழுவதையும் பாதித்தது என்று தெளிவாகப் போதிக்கிறது. கால்வினீய முடிவுகளை நாம் எண்ணாதிருந்தால், மனிதகுலம் *முழுவதையும்* பாவம் செய்யாத சிறுபிள்ளைகளைக்கூட ஆதாமின் பாவம் எவ்வாறு பாதிக்க முடியும்? அவனது பாவத்தினால், நாம் யாவரும் *உடல்ரீதியாக* மரிக்கிறோம்.

இவ்வசனப்பகுதியில் ''மரணம்'' என்பது *ஆவிக்குரிய* மரணத்தைக் குறிக்கிறது என்று கூறுபவர்களின் வாதங்களையும் நான் ஆழ்ந்து சிந்தித்திருக்கிறேன். இந்த விளக்கமானது இரண்டு பலங்களைக் கொண்டுள்ளது:

(1) இவ்வசனப்பகுதி, "இப்படியாக" என்று தொடங்குகிறது, இது பவுல் இதற்கு முன்னதாகக் கூறியவற்றுடன் இவ்வசனப்பகுதியைப் பிணைக்கிறது. உடல்ரீதியான அக்கறைகளைக் காட்டிலும் ஆவிக்குரிய அக்கறைகள் இந்த முந்திய வசனப்பகுதியின் சந்தர்ப்பப்பொருளுக்கு மேன்மையாகப் பொருந்துகிறது.

(2) இந்த நிலைப்பாடு "எல்லாமனுஷரும் பாவம் செய்தபடியால்" (வசனம் 12) என்பதை 3:23ல் அது கூறும் அதேபொருளை அர்த்தப்படுத்த அனுமதிக்கிறது, மற்றும் "நீதிமானாக்கப்படுதல்" (வசனம் 19) என்பது போன்ற வார்த்தைகள், இதற்கு முந்திய நான்கரை அதிகாரங்களில் பயன்படுத்தப்பட்ட அதே வகையில் பயன்படுத்தப்பட வேண்டியவைகளாக உள்ளன. (ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் சில திறவுகோல் வார்த்தைகளை, வேறுபட்ட சந்தர்ப்பப்பொருளில் வேறுபட்ட விஷயங்களை அர்த்தப்படுத்தப் பயன்படுத்தினார்; ஆனால், விதிப்படி மிகவும் பொதுவான அர்த்தமே தேர்ந்துகொள்ளப்பட வேண்டியதாக உள்ளது.)

கடைசியாக, நான் உடல்ரீதியான மற்றும் ஆவிக்குரிய மரணங்களுக்கு இடையில் ஒன்றைத் தேர்ந்துகொள்ளுதல் என்பது தவறாக இருக்கிறது, அதாவது பவுல், ஆதாமின் பாவத்தினால் உண்டான எந்த ஒரு மற்றும் ஒவ்வொரு தண்டனை மற்றும் விளைவையும் தனது சிந்தையில் கொண்டிருந்தார் என்று வலியுறுத்துபவர்களின் விளக்கங்களையும் வாசித்திருக்கிறேன்.[19] ஜேம்ஸ் D. G. டன் என்பவர், "யூதத்துவ

சிந்தனையின் பரந்த அளவில் ..., 'ஆவிக்குரிய' மற்றும் 'உடலுக்குரிய' மரணத்திற்கு இடையில் வித்தியாசம் இருப்பதாக கருத்து எதுவும் இருப்பதில்லை ... [அவர்கள்] இந்த முழுக்கருத்தையும் படைத்தவரிடத்தில் இருந்து படைப்பு விலகிச்செல்லுதல் என்பதாகப் பண்புபடுத்தியுள்ளனர்" என்று எழுதினார்[20] மோரீஸ் என்பவர், "மரணத்தின் இருவகைகளுக்கும் குறிப்புரையைக் காணுதல் என்பது இவ்விரு வசனப்பகுதியையும் [வசனங்கள் 17, 21] புரிந்துகொள்வதற்கான மிகச்சிறந்த வழியாக இருக்கலாம். உடல்ரீதியான மரணம் என்பதே சிந்தையில் உள்ளது, ஆனால் உடல்ரீதியான மரணம் தன்னிலே மாத்திரம் இருப்பதில்லை; ஆவிக்குரிய மரணத்தின் குறி மற்றும் அடையாளம் போன்றே உடல்ரீதியான மரணமும் உள்ளது" என்று கூறினார்.[21]

ரோஜர்ஸ் என்பவர், இந்த நிருபம் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டபோது, தொடக்கத்தில் அதைப் பெற்றுக்கொண்டவர்கள், அதைத் தங்களுக்கு *வாசித்துக்காட்டப்படுதலைப்* பெற்றுக்கொண்டு இருந்திருப்பார்கள் என்று சுட்டிக்காண்பித்தார்.[22] 5:12-21 ஒரு சில நிமிடங்களில் உரத்து வாசிக்கப்படக்கூடும் என்பதால், அதைக் கவனித்திருப்பவர்கள் அவ்வசனப்பகுதியில் உள்ள பின்வரும் முதன்மை வலியுறுத்தத்தையே தங்கள் சிந்தையில் தக்கவைத்திருப்பார்கள்: மனிதகுலத்திற்கு ஆதாம் அறிமுகப்படுத்திய - மற்றும் அதைவிட அதிகமான எல்லா - பிரச்சனையைப் பற்றியும் கிறிஸ்து அக்கறை எடுத்துக்கொண்டார். எட்வர்ட்ஸ் என்பவரும் இதைப் போன்ற கருத்தையே முன்வைத்தார்.[23] விவரங்களில் அல்ல ஆனால் முழுமையான சித்தரிப்பிலேயே இந்த "அச்சுவேலைப்பாட்டின்" பலம் உள்ளது என்று அவர் குறிப்பிட்டார். விவரங்களை வலியுறுத்திக்கொண்டிருத்தல் என்பது மாதிரி/எதிர்மாதிரி ஒப்பீட்டின் கருத்தைத் தவறவிடுதலாகும் என்று அவர் ஆலோசனை தெரிவித்தார்.

12ம் வசனத்தில் உள்ள "மரணம்" பற்றிய இந்த எல்லா நிலைப் பாடுகளினாலும் நான் மனம் கவரப்பட்டிருக்கிறேன். இந்தக் கண்ணோட் டங்களைப் பற்றிக்கொண்டுள்ள யாவரும், வேதவசனங்களின் வேறு எவ்விடத்தி லாவது உள்ள தெளிவான வசனப்பகுதிகளை மீறாதிருக்கும் வரையிலும், இவற்றில் ஏதாவது ஒன்று தவறாக இருக்கிறது என்று உறுதியாக என்னால் கூற இயலாது. ஒவ்வொரு அணுகுமுறையிலும் பலங்களும் பலவீனங்களும் காணப்படலாம். ஒருவர் எந்த நிலைப்பாட்டை மேற்கொண்டாலும், வெற்றிகொள்ள வேண்டிய கடினமான சூழ்நிலைகள் உள்ளன.

வேதவசனம் ஆராயப்படுதல்

பவுலின் கருத்து பின்வருமாறு நேர்ப்போக்கானதென்று அவர் நினைத் திருக்கலாம்: ஆதாமுக்குள் நாம் இழந்தது எதுவோ அதைவிட அதிகமான வற்றை நாம் கிறிஸ்துவுக்குள் மறுபடியும் ஆதாயப்படுத்தி கொண்டோம். இது ஒரு முக்கியமான சிந்தனையாக, ஆழ்ந்தறிவுள்ள சிந்தனையாகக்கூட இருக்கிறது, ஆனால் இன்னமும் இது நேர்ப்போக்கானதாகவே உள்ளது. அவர் தமது வார்த்தைகள் பெற்றுக் கொண்டுள்ள நுட்பமான சோதித்தறிதலைக் காணும்போது திகைப்படைந்திருப்பார் என்பதில் சந்தேகமேயில்லை. இருந்த போதிலும், நாம் இவ்வசனப்பகுதியை ஆராய்ந்து பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம். இதை நாம் அடுத்த பாடத்தில் செய்யத் துவங்குவோம். ஒவ்வொரு வசனத்திலும் பவுல் கூறியது என்ன என்பது பற்றி நீங்கள் உங்கள் தனிப்பட்ட வகையில் தகவல்

பெற்ற முடிவுகளை மேற்கொள்ள முடியுமளவுக்குப் போதிய கருத்துக்களை முன்வைக்க நான் முயற்சிசெய்வேன்.

முடிவுரை

ஆதாமின் பாவத்தினுடைய செயல்விளைவுகளைப் பற்றி ஒரு வகுப்பு கலந்துரையாடும்போது, பின்வரும் கேள்வி அடிக்கடி கேட்கப்படுகிறது: "ஆதாம் பாவம்செய்யாதிருந்தால் என்ன நடந்திருக்கும்?" *ஆதாம்* பாவம் செய்யாது இருந்திருந்தால், ஆதாமுக்கு என்ன நடந்திருக்கும் என்பது அந்தக் கேள்வியினுடைய ஒரு அம்சமாக இருக்கிறது. அந்தக்காட்சிபற்றிப் பல நூற்றாண்டுகளாக விவாதிக்கப்பட்டும் உள்ளது. ஏனோக்கு மற்றும் எலியா ஆகியோரைப் போலவே ஆதாமும் மரணமின்றி பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பான் என்பது பிரபலமான ஒரு கருத்தாக உள்ளது. இருப்பினும், பெரும்பான்மை யான மக்கள் அந்தக் கேள்வியின் பின்வரும் இன்னொரு அம்சத்தின்மீது ஆர்வம் உள்ளவர்களாக இருக்கின்றனர்: "ஆதாம் பாவம் செய்யாதிருந்தால் *உலகம்* இப்போதுள்ள சூழ்நிலையில் இருக்குமா?" "என்னவாகியிருக்கும்" என்ற பொதுவான கேள்விகளைப்போலவே, இதுவும் பதில் அளிக்க இயலாததாகவே உள்ளது, ஏனென்றால் ஆதாம் பாவம் *செய்தான்.* ஆதாம் பாவம்செய்யாது இருந்து உலகத்தைக் குழப்பாதிருந்தால் … மற்றும் அவரது பிள்ளைகள் பாவம் செய்யாதிருந்தால், மற்றும் அவரது பிள்ளைகளின் பிள்ளைகள் பாவம் செய்யா திருந்தால் … கடைசியில், அது என் விஷயத்திற்கு வரும்போது, *நான்* பாவம் செய்திருப்பேன் - கடைசியில், விளைவு என்பது ஒன்றுபோலவே இருந்திருக்கும் என்றே நான் எப்போதும் யூகிக்கிறேன்.

ஆதாமின்மீது ஒரு விரலைச் சுட்டிக்காட்டி, "பாவம் செய்து உலகத்திற்கு எல்லாவிதமான இடர்ப்பாட்டையும் கொண்டுவந்தது உனக்கு வெட்கக்கேடு" என்று கூறுதல் இந்தப்பாடத்தின் நோக்கமாக இருப்பதில்லை. நாம் யாவரும் ஆதாமின் அடிச்சுவடுகளில் நடந்திருக்கிறோம் என்பதே உண்மையாகும். நாம் எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்கள் ஆனோம் (ரோமர் 3:23). இதன் விளைவானது சரீரப்பிரகாரமான மரணத்தைக் காட்டிலும் மிகவும் மோச மானதாக இருக்கிறது: நாம் ஆவிக்குரிய வகையில் மரிக்கிறோம் (6:23) மற்றும் நமது ஆத்துமாவை "அக்கினிக்கடலில் தள்ளப்படும் இரண்டாம் மரணத்தின்" அபாயத்திற்கு உள்ளாக்குகிறோம் (வெளிப்படுத்தின விசேஷம் 20:13, 14). 5:12-21 பற்றிய நமது படிப்பு தொடருகையில், இயேசுவே நமது ஒரே நம்பிக்கையாக இருக்கிறார் என்பது மீண்டும் மறு உறுதிப்படுத்தப்படும். "ஒரே மனுஷனாலே [ஆதாமினாலே] பாவம் உலகத்தில் பிரவேசித்தது" (வசனம் 12), ஆனால் இன்னொரு மனுஷராலே [இயேசுவினாலே] கிருபை உலகத்தில் பிரவேசித்தது. நீங்கள் ஆதாமின் உதாரணத்தைப் பின்பற்றத் தேர்ந்துகொள்ளலாம், அல்லது நீங்கள் இயேசுவைப் பின்பற்றுவதை இன்றே தேர்ந்துகொள்ளலாம். எதை நீங்கள் தேர்ந்துகொள்வீர்கள்?

பிரசங்கியார்களுக்கும் போதகர்களுக்கும் குறிப்புகள்

நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, உங்கள் உரையைக்

கேட்பவர்கள் இயேசுவைப் பின்பற்றுவதை எவ்வாறு தேர்ந்து கொள்ளக்கூடும் என்று அவர்களுக்குக் கூற விரும்பலாம் - அதாவது, அவர்கள் சுவிசேஷ செய்தியை விசுவாசித்து (1:16), தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி (2:4), கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என்ற தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு (10:9, 10), தங்கள் பாவங்களிலிருந்து மீட்படைய ஞானஸ்நானம் பெற்று (6:3-6), கிறிஸ்தவ வாழ்வை வாழுதல் (12:1).

இந்தப் பாடம் மூன்றுபாக எடுத்துரைப்பின் முதல்பாகமாக உள்ளது. நீங்கள் இவற்றிலுள்ள முக்கிய கருத்துக்களை மாத்திரம் சுட்டிக்காண்பித்து மூன்று பாடங்களையும் "இரண்டு ஆதாம்கள்" என்ற தலைப்பில் ஒன்றிணைக்க விரும்பலாம். இந்தப்பாடத்தில் உள்ள தகவல்கள் உங்கள் முன்னுரையாகப் பயன்படக்கூடும். உங்கள் மூன்று முக்கிய கருத்துக்கள், "இரண்டு 'ஆதாம்கள்' அறிமுகப்படுத்தப்படுதல்," "இரண்டு 'ஆதாம்கள்' நேரெதிராக ஒப்பிடப்படுதல்," மற்றும் "இரண்டு 'ஆதாம்கள்' ஒப்பிடப்படுதல்" என்பவையாக இருக்கக்கூடும். மூன்றாம் பாடத்தில் உள்ள நடைமுறைப்பயன்பாடுகள் ("தெளிவான சத்தியங்கள்") உங்கள் முடிவுரையின் பகுதியாக இருக்கக்கூடும்.

5:12-21ஐ ஒரே பாடமாக எடுத்துரைக்கப் பலவழிகள் உள்ளன. சார்லஸ் ஸ்வின்டால் என்பவர், "இருமனிதர்களின் கதை" என்ற கருத்தைப் பயன்படுத்தி, சார்லஸ் டிக்கன்ஸ் என்பவரின் புகழ்பெற்ற கதையான "இருநகரங்களின் கதை" என்ற புத்தகத்தில் இருந்து விவரிப்புகளைத் தரவழைத்தார்.[24] வில்லியம் பார்க்ளே என்பவர் நமது வேதவசனப்பகுதிபற்றிய தமது படிப்புக்கு "அழிவு மற்றும் மீட்பு" என்று பேரிட்டு, நாம் "பாவத்தினால் அழிக்கப்பட்டோம்" ஆனால் "கிறிஸ்துவினால் மீட்கப் பட்டோம்" என்பதை வலியுறுத்தினார்.[25] பல எழுத்தாளர்கள், ஜான் மில்ட்டன் என்பவரின் புகழ்பெற்ற இலக்கியமான "Paradise Lost - and Regained" என்ற புத்தகத்தின் தலைப்பைக் கடன்பெற்றுள்ளனர். நமது வேதவசனப்பகுதியில் [ஆங்கில வேதாகமத்தில்] "reign" மற்றும் "reigned" என்ற வார்த்தைகள் பலமுறை பயன்படுத்தப்பட்டுள்ளதால் (வசனங்கள் 14, 17, 21), D. ஸ்டுவார்ட் பிரிஸ்கோ என்பவர் தமது விளக்கவுரைகளுக்கு "நான்கு ஆட்சியாளர்கள்" என்று தலைப்பிட்டார்.[26] நீங்கள் இவ்வசனப்பகுதியின் "அதிகமானவைகள்" பற்றிய குறிப்புகள்மீதும்கூட மையங்கொள்ள முடியும் (வசனங்கள் 15, 17; வசனம் 20ஐக் காணவும்).[27]

குறிப்புகள்

[1]Adapted from J. D. Thomas, *Romans*, The Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1965), 40. [2]Moses E. Lard, *Commentary on Paul's Letter to Romans* (Lexington, Ky.: N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 162. [3]Richard Rogers, *Paid in Full: A Commentary on Romans* (Lubbock, Tex.: Sunset Institute Press, 2002), 83. [4]Douglas J. Moo, *Romans*, The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 181. [5]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 149. [6]R. St John Parry, *The Epistle of Paul the Apostle to the Romans* (Cambridge: University Press, 1921), 84. [7]Jim McGuiggan, *The Book of Romans,* Looking Into The Bible Series (Lubbock, Tex.: Montex Publishing Co., 1982), 178. [8]Larry Deason, *"The Righteousness of God": An In-depth Study of*

Romans, rev. (Clifton Park, N.Y.: Life Communications, 1989), 142. [9]Ibid., 156. [10]Quoted in Morris, 231.

[11]*கத்தோலிக்கப் போதனையின்படி, "இருட்டுஸ்தலம்" என்பது சிலுவையில் இயேசுவின் பலிக்கு முன்பு மரித்த நீதிமான்களுக்கான இடமாகவும் உள்ளது.* (Charles G. Herbermann, et. al., eds., "Limbo," in *The Catholic Encyclopedia* [New York: Encyclopedia Press, 1913], 9:256-59.) [12]*இப்படிப்பட்ட வசனப்பகுதிகளை, துன்மார்க்கர் கர்ப்பத்திலிருந்தே பொய்யர்களாக உள்ளனர் என்று மறைமுகமாக உணர்த்தும் சங்கீதம் 58:3 உடன் ஒப்பிட்டுப் பாருங்கள். நேர்ப்பொருளில் எடுத்துக்கொள்வதென்றால் இது இயலாத காரியமாக உள்ளது.* [13]James R. Edwards, *Romans*, New International Biblical Commentary (Peaboby, Mass.: Hendrickson Publishers, 1992), 147. [14]Moo, 189. [15]Edwards, 148. [16]Morris, 231. [17]Deason, 151. [18]*சிலர், ஆதாம் பாவம் செய்வதற்கு முன்னர் உடல்ரீதியான மரணமே இருக்கவில்லை என்று நம்புகின்றனர். மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் உண்பதற்குத் தாவர வகைகளே தரப்பட்டிருந்தன (ஆதியாகமம் 1:29, 30). ஆதாம் பாவம் செய்தபின்புதான், ஆதாமுக்கும் ஏவாளுக்கும் உடைகள் தயாரிக்க மிருகங்கள் கொல்லப்பட்டபோது முதல் மரணம் நிகழ்ந்தது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஆதியாகமம் 3:21).* [19]*ரோமர் 1:32ல் "மரணம்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது பற்றிய விளக்கங்களைக் காணவும் (ரோமருக்கு எழுதிய நிருபம் பற்றிய இப்பாட வரிசையின் முதல் புத்தகத்தில் " 'உலகத்தின் நிலை பற்றிய பவுலின் செய்தி' " என்ற பாடத்தில் காணவும்).* [20]James D. G. Dunn, *Romans 1-8*, Word Biblical Commentary, vol. 38 (Dallas: Word Books, 1988), 273.

[21]Morris, 230. [22]Rogers, 84. [23]Edwards, 146. [24]Charles R. Swindoll, *Coming to Terms with Sin: A Study of Romans 1-5* (Anaheim, Calif.: Insight for Living, 1999), 87-88. Swindoll called the two men "Man of Guilt" and "Man of Grace." [25]William Barclay, *The Letter to the Romans*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 77, 82. [26]D. Stuart Briscoe, *Mastering the New Testament: Romans,* The Communicator's Commentary Series (Dallas: Word Publishing, 1982). 119. [27]James Burton Coffman, *Commentary on Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1973), 208. *உங்கள் முன்னுரையில், நீங்கள் முந்திய பாடத்திலிருந்து "அதிகமானவைகள்" பற்றியும் குறிப்பிடமுடியும் (5:9, 10).*

23

[ரோமர் 5:12-17ஐப் பற்றிய] ஒரு படிப்பு: இரண்டு "ஆதாம்கள்"[1]

ரோமர் 5:12-21ல், பவுல் ஆதாமையும் கிறிஸ்துவையும் ஒப்பிட்டு நேரெதிராக ஒப்பிட்டார். முன்னதாக, அவர் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் இதேபோன்ற ஒரு ஒப்பீட்டை/நேரெதிர் ஒப்பீட்டை ஏற்படுத்தியிருந்தார்:

> *மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (1 கொரிந்தியர் 15:21, 22).*
>
> *அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது, பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார் (1 கொரிந்தியர் 15:45).*
>
> *முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர் (1 கொரிந்தியர் 15:47).*
>
> *மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம் (1 கொரிந்தியர் 15:49).*

முதல் ஆதாம், மரிப்பதற்கென்றே அழிவை நோக்கிச்சென்ற பூமிக்குரிய குடும்பத்தின் தலைவனாக இருக்கையில், "கடைசி ஆதாம்" (கிறிஸ்து) ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்ட குடும்பத்தின் (சபையின்) தலைவராக இருக்கிறார் என்று பவுல் சித்தரித்தார்.

இந்தப்பாடத்தில், நாம் ரோமர் 5ல் ஆதாமுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையிலான பவுலின் ஒப்பீடு/நேரெதிரான ஒப்பீடு பற்றிய விவரமான படிப்பைத் தொடங்குகிறோம். முதல் ஆதாம் மற்றும் "கடைசி ஆதாம்" என்ற 1 கொரிந்தியர் 15ல் உள்ள பவுலின் சொற்றொடராக்கத்தை நாம் கடன்பெறுவோம். முந்திய பாடத்தில் குறிப்பிடப்பட்டதுபோல், முரண்பாடான இவ்வசனப்பகுதியின் வசனங்களில் பவுலின் கருத்துக்களைப் புரிந்துகொள்ளுதல் என்பது எப்போதுமே சுலபமானதாக இருப்பதில்லை. இவ்வசனப்பகுதிக்குச் சாத்தியமான விளக்கங்களை நான் ஆலோசனையாக எடுத்துரைப்பேன். நீங்கள்

இவ்வசனப்பகுதியை ஜெபத்துடன் படித்து உங்கள் சொந்த முடிவுகளைப் பெற்றடைய வேண்டும்.

இரண்டு "ஆதாம்கள்" அறிமுகப்படுத்தப்படுகின்றனர் (5:12-14)

இவ்வசனப்பகுதியின் நேரெதிர்க்கருத்து, முதல் வார்த்தையுடன் தொடங்குகிறது: ''இப்படியாக'' (வசனம் 12அ). ''இப்படியாக'' என்பது இப்பகுதியை இதற்குமுன் நடந்துள்ளவற்றுடன் இணைக்கிறது - ஆனால் அந்த இணைப்பு என்னவாக உள்ளது? சிலர் இவ்வசனப்பகுதியை முந்திய வசனத்துடன் (வசனம் 11) அல்லது முந்திய பாகத்துடன் (வசனங்கள் 1-11) பிணைக்கின்றனர். மற்றவர்கள், நமது வசனப்பகுதியானது ஏதோ ஒருவகையில் முந்திய நான்கு அதிகாரங்களைத் தொகுத்துரைக்கிறது என்று நம்புகின்றனர். எடுத்துக்காட்டாக, "ஆக்கினைத்தீர்ப்பு" (1:18-3:20) மற்றும் "நீதிமானாக்கப்படுதல்" (3:21-5:21) ஆகியவை இந்த நிருபத்தின் முதல் இரண்டு தலைப்புகளாக உள்ளன என்று சிலர் குறிப்பிட்டுள்ளனர். பின்பு, அவர்கள் 5:12-21 வசனப்பகுதியானது இவ்விரண்டின் ஆதாரமூலத்தை விவரிக்கிறது என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். 16ம் வசனத்தில், நாம் "அந்தத் தீர்ப்பு ஆதாமின் ஒரே குற்றத்தினிமித்தம் ஆக்கினைக்கு ஏதுவாயிருந்தது; கிருபை வரமோ அநேக குற்றங்களை நீக்கி, [இயேசுவால்] நீதிவிளங்கும் தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறது" என்று வாசிக்கிறோம்.

12 முதல் 21 வரையுள்ள வசனப்பகுதியானது அதற்கு முன் கூறப்பட்டவற்றுடன் எவ்வாறு பொருந்துகிறது என்பதைப்பற்றி எனக்கு மிகவும் பிரியமான விளக்கமானது, நீண்டகாலத்திற்கு முன்பு தொடக்ககாலக் கிறிஸ்தவர்களில் ஒருவரான கிறிசோஸ்தோம் (கி.பி. 347-407) என்பவரால் எழுதப்பட்டது. பவுல் மீண்டுமாக, ஒரு யூதத்துவ மறுப்பை எதிர்நோக்கியிருந்தார் - இம்முறை, அது யூதராயினும் புறஜாதியாராயினும் இயேசு அளிக்கும் இரட்சிப்பு எல்லாருக்கும் கிடைக்கும்படியானது என்ற அவரது போதனைக்கு இந்த எதிர்ப்பு ஏற்படலாம் என்று அவர் நினைத்தார் என்று கிறிசோஸ்தோம் கருத்துத் தெரிவித்தார் (3:22ஐக் காணவும்). செயல்விளைவில் கிறிசோஸ்தோம், "யூதர் உங்களிடத்தில், 'கிறிஸ்து என்ற ஒருவரால் செய்யப்பட்ட நன்மை உலகத்தை எவ்வாறு இரட்சிக்கும்?' என்று கேட்கும்போது, நீங்கள் அவரிடத்தில், 'ஆதாம் என்ற ஒரு நபரால் உலகம் எவ்வாறு ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டது?' என்று கேட்கலாம்" என்று எழுதினார்.[2] யூதர்கள், ஒரே மனுஷனின் (ஆதாமின்) ஒரு செயலினால் இந்த உலகிற்கு துன்பம் கொண்டுவரப்பட்டது என்ற உண்மையை ஏற்றுக்கொண்டனர்; அதைச் சுட்டிக்காண்பித்த பவுல், அதுபோன்றே ஒரே மனுஷனின் (இயேசுவின்) ஒரு செயலினால் வெற்றி கொண்டுவரப்பட்டது என்று குறிப்பிட்டார்.

முதலாம் ஆதாம் அறிமுகப்படுத்தப்படுதல்

பவுலின் உரையாடல் அவரது முந்திய குறிப்புரைகளுடன் கொண்டுள்ள தொடர்பு என்னவாக இருந்தாலும், அவர் தமது உரையாடலைப் பின்வரும் கூற்றுடன் தொடங்கினார்: "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் ...

உலகத்திலே பிரவேசித்துபோலவும்” (வசனம் 12அ). “ஒரே மனுஷன்” என்பது ஆதாம் என்பவராக இருந்தார் (வசனம் 14ஐக் காணவும்).[3] விலக்கப்பட்ட மரத்தின் கனியை முதலில் ஏவாள் உண்டிருந்தாள் என்பதையும் இரண்டாவதாகவே ஆதாம் அவ்வாறு செய்தார் என்பதையும் பவுல் அறிந்திருந்தார் என்பதில் சந்தேகம் இல்லை (ஆதியாகமம் 3:6). இருப்பினும், ஆதாம் தமது குடும்பத்தின் தலைவன் என்ற வகையில் (எபேசியர் 5:23அவைக் காணவும்), அந்தப்பாவத்திற்குக் கணக்கொப்புவிக்க வேண்டியவராயிருந்தார். உண்ணக்கூடாது என்ற கட்டளை முதலில் அவருக்குத்தான் தரப்பட்டிருந்தது (ஆதியாகமம் 2:15-17). மேலும், ஏவாளைப்போல், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை; அவர் விளைவுகளின் தெளிவான புரிந்துகொள்ளுதலோடு செயல்பட்டார் (1 தீமோத்தேயு 2:14).

“பாவம் உலகத்தில் பிரவேசித்தது” என்பது ஆதாமின் கீழ்ப்படியாமையினுடைய ஒரு விளைவாக இருந்தது. ஆதாமின் பாவத்திற்கு முன்னதாகவே பாவம் நிலவியிருந்தது - பாவம் செய்த தூதர்களைப் பற்றிப் பேதுரு எழுதினார் (2 பேதுரு 2:4) - ஆனால் ஆதாமின் மீறுதலானது, “பூமி” என்று நாம் அழைக்கும், புதிதாய்ப்படைக்கப்பட்ட உலகத்தில் பாவத்தை அறிமுகப்படுத்திற்று.

‘‘பாவத்தினுடைய மரணம் உலகத்திலே பிரவேசித்தது’’ என்பது இரண்டாவது விளைவாக இருந்தது (வசனம் 12ஆ). “மரணம்” என்று மொழி பெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை *thanatos* என்பதாகும். ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இவ்வார்த்தையின் வடிவங்களைப் பவுல் சுமார் முப்பது முறைகள் பயன்படுத்தினார். *Thanatos* என்ற வார்த்தையினுள் ‘‘பிரிதல்’’ என்ற கருத்து இயல்பாய் அமைந்துள்ளது. உடல்ரீதியான மரணம் என்பது “உடலில் இருந்து ஆத்துமா பிரிதல்” ஆகும் (யாக்கோபு 2:26அவைக் காணவும்). ஆவிக்குரிய மரணம் என்பது “தேவனிடத்தில் இருந்து மனிதன் பிரிதல்” ஆகும்[4] (ஏசாயா 59:1, 2; எபேசியர் 2:1; 1 தீமோத்தேயு 5:6ஐக் காணவும்). துன்மார்க்கர் “கர்த்தருடைய பிரசன்னத்தில் இருந்து” நித்தியத்திற்கும் பிரிக்கப்படும்போது (2 தெசலோனிக்கேயர் 1:9), அது ‘‘இரண்டாம் மரணமாக’’ இருக்கும் (வெளிப்படுத்தின விசேஷம் 20:6, 14). (பவுல் ரோமருக்குத் தமது நிருபத்தை எழுதியதில், “மரணம்” என்ற வார்த்தையின் வடிவங்களை அதன் தொடர்புக் கருத்துக்களிலும் பயன்படுத்தினார். உதாரணமாக, அவர் பாவத்திற்கு மரித்தல் [6:2] மற்றும் பிரமாணத்திற்கு மரித்தல் [7:4-6] பற்றிப் பேசினார்.)

முந்திய பாடத்தில் கலந்துரையாடப்பட்டதுபோல, 12ம் வசனத்தில் உள்ள ‘‘மரணம்’’ என்ற வார்த்தையை, நாம் ஆதாமின் பாவம் மனிதகுலத்திற்கு - உடல்ரீதியான மரணத்தில் தொடங்கி - கொண்டுவந்த எல்லாத் துன்பங்களையும் அது குறிப்பிடுகிறது என்ற வகையில் எடுத்துக்கொள்வோம். தேவன் ஆதாமிடத்தில், அவன் நன்மைதீமை அறியத்தக்க மரத்தின் கனியை உண்டால், அவன் மரித்துவிடுவான் என்று கூறினார் (ஆதியாகமம் 2:17; 3:19ஐக் காணவும்) - மற்றும் அவன் மரித்தான் (5:5). உடல்ரீதியான மரணம் என்ற இந்த சாபம் ஆதாமுடன் மட்டுப்படவில்லை. நமது வேதவசனப்பகுதி தொடர்ந்து, “மரணம் எல்லாருக்கும் வந்தது ...” என்று கூறுகிறது (வசனம் 12இ). LB வேதாகமத்தின் பொழிப்புரையில், ‘‘so everything began to grow old and die” (“எனவே எல்லா உயிர்களும் முதிர்வயதை அடையவும் மரணம் அடையவும் தொடங்கின”) என்றுள்ளது. ஒருமுறை ஒரு அறுவைச்சிகிச்சை நிபுணர், நவீன மருத்துவம் ஏற்படுத்தியுள்ள மாபெரும் வளர்ச்சியைப் பற்றி விரிவுரையாற்றினார்.

அத்துடன் கூடுதலாக அவர், "ஆனால் திகைப்புக்குரிய இந்த வளர்ச்சி இருந்தும் கூட, இறப்புவிகிதம் 100% ஆக நிலைத்திருக்கிறது" என்று கூறினார்.[5]

மேலும், ஆதாமினால் வருவிக்கப்பட்ட மரணம் உடல்ரீதியான மரணத்துடன் மாத்திரம் மட்டுப்படவில்லை. அவனது பாவம் அவனைத் தேவனிடத்தில் இருந்து பிரித்தது (ஏசாயா 59:1, 2); இவ்வாறு அவன் ஆவிக்குரிய வகையிலும் மரித்தான். பவுல் தமது சிந்தனைகளில் ஆவிக்குரிய மரணத்தையும் உள்ளடக்கினார் என்பது தெளிவு: "எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது" (வசனம் 12இ). "எல்லாமனுஷரும் பாவம்செய்த" என்பது 3:23ல் "எல்லாரும் பாவஞ்செய்து" என்று மொழிபெயர்க்கப்பட்ட அதே கிரேக்க வார்த்தைகளாகவே உள்ளன (*pantes hemarton*). பவுல் இவ்வார்த்தைகளை அதே கருத்துடன் இவ்விடத்தில் பயன்படுத்தியுள்ளார் என்ற யூகத்தில், 12ம் வசனமானது இந்த வரிகளுடன் சிலவற்றைப் போதிக்கிறது: "ஆதாம் பாவம் செய்தபோது, உடல்ரீதியான மற்றும் ஆவிக்குரிய மரணம் இவ்வுலகத்திற்குள் வந்தது.[6] உடல்ரீதியான மரணம் எல்லா மக்களுக்கும் பரவியது போலவே, ஆவிக்குரிய மரணமும் எல்லா மக்களுக்கும் பரவியது, ஏனென்றால் எல்லாரும்[7] ஆதாம் என்ற தகப்பனின் உதாரணத்தைப் பின்பற்றிப் பாவம் செய்தோம்."

12ம் வசனத்தில் தொடங்கிய வாக்கியத்தைப் பவுல் முடிக்கவில்லை. இது NASB வேதாகமத்தில், "sinned" என்ற வார்த்தைக்குப் பின்னால் ஒரு கோட்டுக்குறியை (-) கொண்டு சுட்டிக்காண்பிக்கப்படுகிறது. மற்ற மொழி பெயர்ப்புகள் இதை வெவ்வேறு வழிகளில் சுட்டிக்காண்பிக்கின்றன. ASV வேதாகமத்தில் 12ம் வசனத்திற்குப் பின்பு ஒரு அரைப்புள்ளி (:) உள்ளது, அதேவேளையில் KJV வேதாகமத்தில் 12ம் வசனத்திற்குப்பின்பு, 13 முதல் 17 வரை உள்ள வசனங்கள் அடைப்புக்குறிக்குள் இடப்பட்டுள்ளன. 12ம் வசனத்தின் சிந்தனையானது 18ம் வசனத்தில் மீண்டும் தொடரப்படும்.

13ம் வசனம், ''நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது'' என்று தொடங்குகிறது. கிரேக்க மொழியில் நியாயப்பிரமாணம் என்ற வார்த்தைக்கு முன்னதாக திட்டவட்டச் சுட்டுச்சொல் எதுவும் இருப்பதில்லை, ஆனால் பவுல் மோசேயின் நியாயப்பிரமாணத்தையே தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பது தெளிவு (வசனம் 14ஐக் காணவும்). முந்திய பாடங்களில் குறிப்பிடப்பட்டதுபோல, மக்கள் எப்போதுமே நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருந்தனர், ஆனால் மோசேயின் நியாயப்பிரமாணம் வரும்வரைக்கும் அவர்கள் *எழுதப்பட்ட* பிரமாணத்தைக் கொண்டிருந்ததில்லை. மக்கள் தாங்கள் கொண்டிருந்த எழுதப்படாத பிரமாணங்களை முறித்துப்போட்டதால், மே ாசேயின் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும்கூட "பாவம் உலகத்திலிருந்தது."

தொடர்ந்து 13ம் வசனம், "நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது" என்று கூறுகிறது. "எண்ணப்படுதல்" என்ற வார்த்தையானது, 4ம் அதிகாரத்தில் "எண்ணப்பட்டது" என்று மொழி பெயர்க்கப்பட்ட அதே வேர்வார்த்தையிலிருந்து வந்துள்ளது. இவ்வாறு HCSB வேதாகமத்தில், "sin is not charged to one's account when there is no law" ("நியாயப்பிரமாணம் இல்லாதபோது பாவம் ஒருவரின் கணக்கில் ஏற்றபடாது") என்றுள்ளது. மேம்போக்காகப் பார்க்கையில், இவ்வசனமானது,

மக்கள் எழுதப்பட்ட பிரமாணம் இருப்பதற்கு முன்னர் பாவம் செய்தனர், ஆனால் மோசேயினுடைய நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும் வரைக்கும் அவர்கள் பாவிகள் என்று *எண்ணப்படவில்லை* என்று கூறுவதுபோல் காணப்படுகிறது. இருப்பினும், பவுல் எழுதப்பட்ட பிரமாணத்தைக் கொண்டிருப்பதற்கு முன்னரேகூட மக்கள் பாவம் செய்தனர் - மற்றும் அவர்கள் தங்கள் பாவங்களுக்குக் *கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாயிருந்தனர்* - என்ற கருத்தைக் கவனமாக நிலைநாட்டினார் (3:9ஆவைக் காணவும்). மீண்டும் ஒருமுறை, பவுலின் சிந்தனை விரித்துரைக்கப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது. அதைச் செய்வதற்கான ஒரு வழி பின்வருமாறு: "நியாயப்பிரமாணம் இல்லாதபோது பாவம் எண்ணப்படவில்லை [ஆனால் ஒவ்வொருவரும் ஒரு பிரமாணத்தை - எழுதப்படாத பிரமாணத்தைக் - *கொண்டிருந்தனர்*]."[8]

படைப்பு மற்றும் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுதல் ஆகியவற்றிற்கு இடையில் பல நூற்றாண்டுகளாக மனிதகுலம் எழுதப்பட்ட நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருக்கவில்லை என்ற உண்மைநிலையிலும், அவர்கள் யாவரும் மரித்தனர்: "அப்படியிருந்தும், மரணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும் ... ஆண்டுகொண்டது" (வசனம் 14அ). மரணம் என்பது தனது குடிமக்களை மரிக்கும்படி கட்டளையிடும் கொடுங்கோல் அரசனாக நபர்த்துவப்படுத்தப்பட்டுள்ளது.



ஏற்படுத்தப்பட்ட கூற்றானது உடல்ரீதியான மற்றும் ஆவிக்குரிய மரணம் என்ற இருவிஷயங்களுக்கும் உண்மையாக உள்ளது. நாம் அறிந்துள்ள வரையில், ஆதாமுக்கும் மோசேக்கும் இடையில் ஒரே ஒரு நபர் மாத்திரமே உடல்ரீதியான மரணம் அடையாதிருந்தார்: ஏனோக்கு (ஆதியாகமம் 5:24). ஆவிக்குரிய மரணத்தைப் பொறுத்தவரையில் விதிவிலக்கு எதுவும் இல்லை. பொறுப்புள்ள எல்லா மக்களும் தங்கள் சொந்தப் பாவத்தினால் ஆவிக்குரிய வகையில் மரித்தனர். மரணத்தின் ஆளுகை உலகளாவியதாக மனிதகுலம் முழுவதையும் பாதிப்பதாக இருந்தது.

மரணத்தின் ஆளுகையானது, "ஆதாமின்[9] மீறுதலுக்[10] கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது" என்னுமளவுக்கு விரிவானது (வசனம் 14ஆ). மக்கள் பாவஞ்செய்திருந்தனர், ஆனால் "அவர்கள் ஆதாம் செய்ததுபோல ஒரு திட்டமான தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாதிருக்கவில்லை" (NLT). ஆதாமுக்குப்போலவே அவர்களுக்கு, "[நீ சரியானதைச் செய்யத்தவறினால்] சாகவே சாவாய்" என்று கூறப்படவில்லை (ஆதியாகமம் 2:17).[11] இருந்தபோதிலும், அவர்கள் - உடல்ரீதியாகவும் ஆவிக்குரிய வகையிலும் - *மரித்தனர்*.

“பிந்தின ஆதாம்” அறிமுகப்படுத்தப்படுதல்

இந்த இடம் வரையில், வசனப்பகுதியானது ஒரு மங்கலான சித்திரத்தையே வரைந்துள்ளது. முதல் ஆதாமின் பாவம் மனிதகுலத்திற்குப் பேரழிவைக் கொண்டுவந்தது - ஆனால் பவுல் நம்பிக்கையின் குறிப்பு ஒன்றை உட்செருகத் தயாரானார். வசனம் 14இயில் அவர் “பிந்தின ஆதாமை” அறிமுகப்படுத்தினார்: முந்தின ஆதாம், “வரவிருந்தவருக்கு முன்னடையாளமாயிருந்தான்.” வரவிருந்தவர் கிறிஸ்துவே. ஆதாம் ஒருவன்தான் பழைய ஏற்பாட்டுப் பாத்திரங்களில் கிறிஸ்துவுக்கு “முன்னடையாளமாக” குறிப்பிடப்பட்டவனாக இருக்கிறான்.[12]

இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள “type” *என்ற ஆங்கில வார்த்தை, tupos என்ற கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாகும். Tupos (இது, “ஒரு வீச்சு” அல்லது “ஒரு அடி” என்பதைக் குறிக்கிறது) என்பது அடித்தல் அல்லது இடித்தலினால் ஒரு பதிவை ஏற்படுத்துதலைக் குறிக்கிறது. ஒருவேளை, நீங்கள் அரசு அலுவலர் ஒருவர் ஒரு பத்திரத்தின்மீது முத்திரை பதிப்பதைக் கண்டிருக்கலாம்.[14] அந்த முத்திரையை ஒரு “முன்னடையாளம்” என்றும் தாளின்மீது படிந்த அதன் சாயையை “எதிர்-முன்னடையாளம்” என்றும் நினைத்துக்கொள்ளுங்கள். பவுலின் ஒப்பீட்டு/நேரெதிர் ஒப்பீட்டில், ஆதாம் “முன்னடையாளமாக” இருக்கிறான். கிறிஸ்து “எதிர்-முன்னடையாளமாக” இருக்கிறார்.*

அலுவலரின் கைப்பொறிப்பு முத்திரையையும் அது பதிப்பிக்கும் சாயையையும் ஆழ்ந்து சிந்தித்துப்பாருங்கள். சிலவழிகளில், முன்னடையாளமும் எதிர்-முன்னடையாளமும் ஒன்றுபோலிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, பின்வருவதுபோன்றதை கூறுவதற்கென்று ஒரு அலுவலர் ஒரு கைப்பொறிப்பு முத்திரையை வடிவமைப்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள்:

மறுக்கப்பட்டது!

அந்தக் கைப்பொறிப்பு முத்திரை பின்வருவது போன்ற ஒரு பதிவை விட்டுச்செல்லாது:

அங்கீகரிக்கப்பட்டது!

ஒரு கைப்பொறிப்பு முத்திரையும் அதன் பதிவும் ஒன்றுபோலிருப்பதைப் போன்றே, சிலவழிகளில், ஆதாமும் கிறிஸ்துவும் ஒன்றுபோலிருக்கின்றனர். இவ்விருவருமே “தலைவர்கள்” என்று நினைக்கப்படலாம்: ஆதாம், மனிதக்குலத்திற்கு உடல்ரீதியான தலைவனாக இருந்தான், கிறிஸ்து தேவனுடைய குடும்பத்திற்கு (சபைக்கு; 1 தீமோத்தேயு 3:15) ஆவிக்குரிய தலைவராக இருக்கிறார். இவ்விருவருமே முழு மனிதகுலத்தின்மீதும் செயல்தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு செயலைச் செய்தனர்: அது தோட்டத்தில் ஆதாமுடைய பாவமும், சிலுவையில் கிறிஸ்துவின் மரணமுமே.

இருப்பினும், மற்ற வழிகளில், ஒரு முன்னடையாளமும் எதிர்-முன்னடையாளமும் ஒன்றுபோல இருப்பதில்லை; எதிர்-முன்னடையாளம் என்பது முன்னடையாளத்தின் திருப்புகையாக இருக்கக்கூடும். அரசு அலுவலரின் கைப்பொறிப்புச் சின்னத்திற்குத் திரும்பி, தாளின்மீது பொறிக்கப்பட்ட

முத்திரை பின்வருமாறு வாசிக்கப்படுவதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள்:

மறுக்கப்பட்டது!

அது விடப்பட்ட பதிவாக இருக்குமென்றால், கைப்பொறிப்பு முத்திரையானது தனது முகப்பில் பின்வருவதையே கொண்டிருக்கும்:

!துட்டப்பக்றும

நமது வசனப்பகுதியில் நாம் மேற்கொண்டு படிக்கையில் இந்த விவரிப்பைச் சிந்தையில் வைத்துக்கொள்ளுங்கள். ஆதாமும் கிறிஸ்துவும் எப்படி ஒன்றுபோலிருந்தனர் *என்பதை மட்டுமின்றி, அவர்கள் எப்படி* வேறுபட்டிருந்தனர் *என்பதையும் பவுல் சுட்டிக்காண்பித்தார்.*

Tupos *என்பதன் கருத்தை எடுத்துரைக்க* "pattern" (NIV) [*"வடிவமைப்பு"*], "example" [*"உதாரணம்"*], "figure" [*"உருவகம்"*] (KJV) *மற்றும்* "foreshadowing" [*"முன்நிழலிடுதல்"*] (NEB *யைக் காணவும்) போன்ற பல்வேறு வார்த்தைகள் பயன்படுத்தப்பட முடியும். யூஜின் பீட்டர்ஸன் என்பவர், 14ம் வசனத்தின் முடிவில் பின்வரும் பொழிப்புரையை/விளக்கவுரையை எழுதினார்: "இதற்குள் நம்மைக் கொண்டுவந்த ஆதாம் ... இதிலிருந்து நம்மை வெளியே கொண்டுவரும் ஒருவரை முன்னதாகச் சுட்டிக்காண்பித்தார்"* (MSG).

இரண்டு "ஆதாம்களும்" நேரெதிராக ஒப்பிடப்படுதல் (5:15-17)

ஆதாமும் கிறிஸ்துவும் எப்படி ஒன்றுபோலிருந்தனர் என்று பவுல் முதலில் கூறவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கலாம், ஆனால் முதலில் அவர் எவ்வாறு அவர்கள் வேறுபட்டிருந்தனர் *என்று விளக்கப்படுத்தினார். அடுத்த மூன்று வசனங்களைக் கண்ணோக்கிப்பார்த்து, பவுல் எப்படி "ஒப்பானதல்ல," "அதிக நிச்சயமாமே," மற்றும் "அல்லாமலும்" போன்ற நேரிதிரடையின் சொற்றொடர்களைப் பயன்படுத்தினார் என்பதைக் காணுங்கள். இது பவுல் - ஆதாம் "இனி வரவிருந்தவருக்கு முன்னடையாளமாக இருந்தான்" என்று கூறிய உடனே - தமது வாசகர்கள், இவ்விருவரும் எல்லா அம்சங்களிலும் ஒன்றுபோல் இருக்கின்றனர் என்று நினைத்து விடுவார்கள் என்று பயந்து, விஷயம் அதுவல்ல என்று அவசரமாகச் சுட்டிக்காண்பித்தார் என்பது போன்றுள்ளது.*

இரு செயல்களும் வேறுபட்டவையாக இருந்தன

நேர்மாறான ஒப்பீடானது ஆதாம் மற்றும் கிறிஸ்து ஆகியோரின் செயல்களின் விளக்கங்கள்மீது கவனம் குவிக்கிறது: ஆதாமின் பாவம் மற்றும் கிறிஸ்துவின் பலி. முதலாவது சுயபோகத்தின் செயலாக இருந்தது, இரண்டாவது சுயத்தை மறத்தலின் செயலாக இருந்தது.

பவுல், "ஆனாலும் மீறுதலின்[15] *பலன் கிருபைவரத்தின் பலனுக்கு*

ஒப்பானதல்ல" என்று தொடங்கினார் (வசனம் 15அ). "கிருபை வரம்" என்பது *charisma* என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது "கொடை" என்பதற்கான வார்த்தையாகவும் "கிருபை" (*charis*) என்ற வார்த்தையுடன் தொடர்புடையதாகவும் உள்ளது. "கிருபைவரம்" என்பது தேவைக்கு மிகுதியாகக் கூறப்படுவதாக உள்ளது, ஏனெனில் ஒரு வரம் என்பது அதைப்பெறுவர் ஈட்டியிராதது என்று அர்த்தப்படுகிறது. தேவனுடைய வரம் (இது சிலுவையில் மையங்கொண்டுள்ளது) ஆதாமின் "மீறுதலுக்கு" *ஒப்பானதல்ல* என்பது பவுலின் வலியுறுத்தமாக இருந்தது. NEB வேதாகமத்தில், "God's act of grace is out of all proportion to Adam's wrongdoing" ["தேவனுடைய கிருபையின் செயலானது ஆதாமின் தவறான செய்கையின் எல்லாவிகிதத்திற்கும் மேலானதாக உள்ளது"] என்று கூறப்பட்டுள்ளது.

அடுத்ததாகப், பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தது பற்றிய உதாரணம் ஒன்றைக் கொடுத்தார். ஒருபுறத்தில், "ஒருவனுடைய [ஆதாமினுடைய] மீறுதலினாலே அநேகர் மரித்திருக்க" (வசனம் 15ஆ). "அநேகர்" என்பதற்கான (*polus* என்ற) கிரேக்க வார்த்தை "பெரிய எண்ணிக்கையிலான" என்று அர்த்தப்படுகிறது. எவ்வளவு பெரியது என்பது சந்தர்ப்பப்பொருளைச் சார்ந்ததாக உள்ளது. இவ்வசனப்பகுதியில், "அநேகர்" என்பது "எல்லாரும்" என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (வசனம் 18ஐக் காணவும்). *எல்லாரும்* உடல்ரீதியாக மரித்தல் என்பது ஆதாமின் பாவத்தினுடைய ஒரு விளைவாக உள்ளது. "இயற்கை நிகழ்வாக மரித்தல் என்பது எல்லா மனிதர்களுக்கும் பொதுவானதாயிற்று" (Phillips). பாவம் என்பது அதன் துன்பவிளைவுகள் எல்லாவற்றுடனும் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது என்பது இன்னொரு விளைவாக இருந்தது.

இன்னொருபுறத்தில், "தேவனுடைய கிருபையும் இயேசுகிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவும் அநேகர்மேல் அதிகமாய்ப் பெருகியது" (வசனம் 15இ). இயேசுவினால் வரும் தேவனுடைய "கிருபை"யானது ஆதாமினுடைய பாவத்தின் செயல்விளைவைத் திருப்பிப் போட்டது. எல்லா மக்களும் ("அனைவரும்") மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவார்கள் (யோவான் 5:28, 29). இருப்பினும், தேவனுடைய "கிருபை" அதைக்காட்டிலும் "மிகவும் அதிகமானவற்றை" செய்கிறது. எல்லா மக்களும் மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவது மாத்திரமின்றி, அவர்களுக்கு ஆவிக்குரிய உடல்களும் தரப்படும் (1 கொரிந்தியர் 15:44ஐக் காணவும்). மற்றும், நீதிமான்கள் "நித்தியஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்" (மத்தேயு 19:29). மேலும், இரட்சிக்கப்பட்டவர்கள், ஆதாமினால் இழக்கப்பட்டதைக் காட்டிலும் மேன்மையானதொரு பரதீசில் குடியிருப்பார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 21; 22ஐக் காணவும்). J. W. மெக்கார்வீ என்பவர், "உலகத்தின் நம்பிக்கையானது … 'அதிகமாய்ப் பெருகியிருக்கிறது' என்பதன்மீது அமைந்து கிடக்கிறது" என்று எழுதினார்.[16]

இவையாவும் கிருபையின் வரமாக இருந்தது; ஆதாம் செய்திருந்தவற்றை நீக்கிப்போடுவதற்குக் கர்த்தர் கடன்பட்டிருந்ததில்லை. இவ்வாறு பவுல், "தேவனுடைய *கிருபையும்* இயேசுகிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய *கிருபையினாலே வரும் ஈவும்*" என்பது பற்றிப் பேசினார். "கிருபை" (இருமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது) என்பதற்கான வார்த்தை *charis* என்பதிலிருந்து

வருகிறது. "வரம்" என்பது முந்திய வசனத்தில்போல் *charisma* என்பதிலிருந்து வருவதில்லை, ஆனால் "இலவசமான கொடை" என்றும் அர்த்தப்படுகிற *dorea* என்ற வார்த்தையிலிருந்து வருகிறது.[17] நாம் கருத்தைத் தவறவிட்டுவிடாதபடிக்குப் பவுல் பல்வேறு வார்த்தைகளைப் பயன்படுத்தினார்: தேவன் நமக்குச் செய்கிறது ஒரு ஈவாக உள்ளது, இது அவரது கிருபையின் வெளிப்பாடாக உள்ளது.

இலக்கில் செயல்கள் மாறுபடுகின்றன

16ம் வசனத்தில் பவுல், ஆதாமின் ஒரு செயலையும் கிறிஸ்துவின் ஒரு செயலையும் நேரெதிர்ப்படுத்துவதை மேலும் முன்னேற்றினார்: "மேலும் ஒருவன் [ஆதாம்] பாவஞ்செய்ததினால் உண்டான தீர்ப்பு தேவன் அருளும் ஈவுக்கு [*dorea*] [of Jesus] ஒப்பானதல்ல" (வசனம் 16அ). அப்போஸ்தலர் இங்கு, தேவனுடைய ஈவானது ஆதாமின் பாவத்திற்கு எதிர்ச்செயல் செய்வதைக் காட்டிலும் "அதிக மானவற்றைச் செய்கிறது" என்று மீண்டும் சுட்டிக்காண்பித்தார்.

"அந்தத் தீர்ப்பு ஒரே குற்றத்தினிமித்தம் [ஆதாமின் பாவத்தினிமித்தம்] ஆக்கினைக்கு ஏதுவாயிருந்தது" என்று பவுல் கூறினார் (வசனம் 16ஆ). பவுல், ரோமருக்கு எழுதிய நிருபத்தில் அடிக்கடி செய்தது போல, இவ்விடத்தில் நீதிமன்ற அறையின் மொழிநடையைப் பயன்படுத்தினார். "தீர்ப்பு" ("judgment") என்பது *krima* என்பதிலிருந்து வருகிறது, இது "தீர்ப்பு" ("the verdict") என்பதைக் குறிக்கிறது (McCord) "ஆக்கினை" என்பது *katakrima* (இது *krima* என்பதன் வலுவூட்டப்பட்ட சொல்வடிவமாகும்) என்பதிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது மற்றும் இது தீர்ப்பின் விளைவாக கூறப்பட்ட "தண்டனையை"[18] குறிக்கிறது. *Katakrima* என்பது மனிதகுலத்தின்மீது வந்த எல்லாப்பொல்லாங்கையும் அடையாளப்படுத்துகிறது, இது உடல்ரீதியான மரணத்தின்மீது விசேஷித்த வலியுறுத்தம் கொண்டுள்ளது.[19] இதைப் பற்றிச் சிந்தித்துப்பாருங்கள்: ஒரு *தனி* பாவம் என்பது வாழ்ந்திருக்கும் *எல்லாருக்கும்* - ஆண்கள், பெண்கள் மற்றும் பிள்ளைகள் எல்லாருக்கும் - உடல்ரீதியான மரணத்தை விளைவித்தது![20]

"கிருபைவரமோ [*charisma*] அநேக குற்றங்களை நீக்கி நீதிவிளங்கும் தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறது" என்று பவுல் தொடர்ந்து கூறினார் (வசனம் 16இ). "அநேக குற்றங்கள்" என்ற சொற்றொடரின் மறைமுகமான கருத்துக்களை ஒருகணம் ஆழ்ந்து சிந்துத்துப் பாருங்கள். ஒரு மீறுதல் என்பது மனிதகுலம் முழுமையையும் பாதிக்கும் அளவுக்கு அவ்வளவு பயங்கரமாயிருந்தது என்றால், "அநேக குற்றங்கள்" என்பவற்றின் முற்றிலும் கொடூரமான பேரழிவைக் கணக்கிட முயற்சிசெய்துபாருங்கள்: முதல் பாவத்திலிருந்து செய்யப்பட்டுள்ள கோடானகோடிக்கணக்கான பாவங்கள். மோசஸ் E. லார்டு என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> ... மரணம் என்பது ... *ஒரு தனிப்பட்ட பாவத்திற்குப்* போதுமானதற்கும் அதிகமாக உள்ள தண்டனை என்று யூகித்தால் ... பாவத்தின் இயல்பு ... புரிந்துகொள்ளப்பட இயலாததாகிறது. ... எந்த மனிதப் பிறவியும் அதன் ஏராளத்தன்மையை எண்ணிப்பார்க்க இயலாது. இந்த வீதத்தில் சென்றால், ஒரு ஐம்பது ஆண்டுகள் காலம் வாழும் ஒரு தனிமனித வாழ்வில் அவர் செய்யும் பாவங்களுக்குப் போதுமான தண்டனை என்னவாக இருக்கும்?[21]

அந்த "தனிநபர் வாழ்வை" கடந்தகாலத்தில் வாழ்ந்திருந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் இன்றைய நாட்களில் வாழ்ந்து கொண்டுள்ள அறுநூறுகோடிப்பேர் என்ற எண்ணிக்கையினால் பெருக்கிக்கொள்ளுங்கள் - இதன் பெருக்குத்தொகை மனிதனின் புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. இவ்வாறு இந்தக் கேள்வி கேட்கப்பட்டாக வேண்டும்: தேவனின் ஈவானது, ஆதாமின் பாவத்தினுடைய பாதிப்பை மாத்திரமல்ல, ஆனால் "பல மீறுதல்களின்" பாதிப்பையும் நீக்கிப்போடப்போதுமானதாக உள்ளதா?

பவுலின் பதில் மறுபடியும் ஒலிக்கும் ஆம் என்ற உறுதிக்கூற்றாக இருந்தது. இலவசமான கொடையானது "நீதிவிளங்குதல்" என்பதை விளைவித்தது என்று அவர் கூறினார் (வசனம் 16ஈ). மீண்டுமாக, அவர் சட்ட மொழியைப் பயன்படுத்தினார். NEB வேதாகமத்தில் "the act of grace ... issued in a verdict of acquittal" என்றுள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், ஆதாமுக்கும் அவனது சந்ததியார் யாவருக்கும் கூறப்பட்ட தீர்ப்பானது இயேசுவின் மூலம் மாற்றப்பட்டது. உடல்ரீதியான மரணத்தைப் பொறுத்தமட்டில் இது உண்மை யானதாக உள்ளது. நாம் இன்னமும் மரிக்கிறோம் (எபிரெயர் 9:27); ஆனால், இயேசுவினிமித்தம் மரணம் என்பது ஒரு நிரந்தரமானநிலையாக இருப்பதில்லை (யோவான் 5:28, 29).

ஆவிக்குரிய மரணத்தைப் பொறுத்தமட்டிலும் இது உண்மையாக உள்ளது. தேவனுடைய கிருபையின் "அதிகமாய்ப் பெருகும்" தன்மையே இவ்வசனப் பகுதியில் பவுலின் வலியுறுத்தமாக உள்ளது என்பதைச் சிந்தையில் வையுங்கள். ரோமருக்கு எழுதிய நிருபத்தில் "நீதிமானாக்கப்படுதல்" என்பது (*dikaioma*) பொதுவாக தேவனுடைய பார்வையில் சரியானவர்களாக எண்ணப்படுதலையே குறிக்கிறது. இவ்வசனப்பகுதியில், *dikaioma* என்பது [தேவனுடைய] ஈவின் ஆவிக்குரிய பலன்களையே உள்ளடக்கியிருக்கிறது என்பது நிச்சயம்.[22] மெக்கார்வி பின்வருமாறு எழுதினார்,

> கிறிஸ்துவின் பலியானது எண்ணற்ற பாவிகளால், மனித வாழ்வின் மொத்த கணங்களிலும், செய்யப்பட்ட கணக்கற்ற பாவங்களின் [இந்தப் பாவம் ஒவ்வொன்றும் காலத்தின் எந்தப் பகுதியினாலும் தீர்த்துவைக்க இயலாத அழிவுசக்தியைக் கொண்டுள்ளது] ஒன்றுகுவிந்த வல்லமையை விசுவாசிகளுக்கு நீக்கிப்போட்டுள்ளபடியால், கிறிஸ்துவின் பலியினுடைய நீதிமானாக்கும் வல்லமையை யாரால் மதிப்பிடமுடியும்?[23]

செயல்விளைவில் செயல்கள் மாறுபடுகின்றன

பவுல் மீண்டும் 17ம் வசனத்தில் தேவனுடைய ஈவின் ஆவிக்குரிய செயல் விளைவை வலியுறுத்தினார். அவர், "ஒருவனுடைய மீறுதலினாலே,[24] அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க" [வசனம் 14ஐக் காணவும்] என்று கூறினார் (வசனம் 17அ). NEB வேதாகமத்தில், "death established its reign, through a single sinner" என்றுள்ளது. பின்பு பவுல் தனது நேர்மாறான ஒப்பீட்டை ஏற்படுத்தினார்: "கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே" (வசனம் 17ஆ).

17ம் வசனத்தில் குறைந்தபட்சம் மூன்று நேரெதிர் ஒப்பீட்டின் கருத்துக்கள்

விளக்கியுரைக்கப்பட்டுள்ளன அல்லது மறைமுகமாய்க் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலாவது, கிருபையின் பலன் மீறுதலின் பலனைவிட "அதிகமாய்ப் பெருகியிருக்கிறது." இந்த "அதிகமாய்ப் பெருகியிருக்கிறது" என்ற வார்த்தைகளின்மூலம் வலியுறுத்தும் திரும்பவும் வலுப்படுத்தப்பட்டுள்ளது ("the rich supply"; NIrV). இந்த "அதிகமாய் பெருகியிருக்கிறது" என்பதன் பலனானது "நீதியாகிய [*dikaiosune*] ஈவின் [*dorea* என்பதிலிருந்து வருகிறது]" என்ற வார்த்தைகளில் விளக்கியுரைக்கப்பட்டுள்ளது. "நீதி" என்பது "நீதிமானாக்கப்படுதல்" போன்ற வார்த்தைகளின் குடும்பத்தில் இருந்து வந்த அதே வார்த்தையாக உள்ளது. இது தேவனுடைய பார்வையில் சரியானவர்களாக எண்ணப்படுதலைக் குறிக்கிறது.

இரண்டாவது நேர்மாறு ஒப்பீடு மறைமுகமானதாக உள்ளது. ஆதாமின் மீறுதலினால் ஏற்பட்ட ஒரு விளைவைப் பொறுத்தமட்டில் நாம் தேர்ந்துகொள்வதற்கென்று ஒன்றுமில்லை: நாம் பிறந்தால், நாம் உடல்ரீதியாக மரிப்போம். (கிறிஸ்துவின் வருகையின்போது உயிருடன் இருப்பவர்கள் மாத்திரமே மரணத்திற்குத் தப்பிப்பார்கள் [1 தெசலோனிக்கேயர் 4:15-17ஐக் காணவும்].) இருப்பினும், நாம் தேவனுடைய ஈவின் மிக முக்கியமான விளைவைப் பொறுத்தமட்டில் தேர்வுசெய்தலைக் கொண்டுள்ளோம்: அது நீதிமானாக எண்ணப்படுதல். இவ்வாறு பவுல், "கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள்" பற்றிப் பேசினார். எந்த ஒரு கொடையும் ஏற்றுக்கொள்ளப்படலாம் அல்லது மறுக்கப்படலாம். தேவனுடைய கொடையை ("விசுவாசத்துடன் கீழ்ப்படிதல்" மூலம் [ரோமர் 1:5; 16:26]) ஏற்றுக்கொள்கிறவர்கள் ("பெற்றுக்கொள்கிறவர்கள்") மாத்திரமே அந்தக் கொடையின் முழு பலன்களையும் பெறுகின்றனர்.



நேர்மாறான ஒப்பீட்டின் மூன்றாவது கருத்து எதிர்பாராததாக உள்ளது. 17ம் வசனத்தின் முதல் பாகத்தில் பவுல், *மரணம்* ஆண்டு கொண்டிருத்தல் பற்றிப் பேசினார். நாம் முன்னோக்கிச் செல்கையில், கிறிஸ்துவின் மூலமாக இப்போது *ஜீவன்* ஆண்டுகொண்டிருக்கிறது என்று வாசிக்க எதிர்பார்க்கலாம். அதற்குப்பதிலாக, பவுல் அந்த ஈவைப் பெறுகிறவர்கள் "ஜீவனை அடைந்து ஆளுவார்கள்" என்று கூறினார். அடிமைகள் (பாவிகள்) ஆண்டுகொள்ளுபவரின் இடத்தில் (மரணத்திற்குப் பதிலாக) வைக்கப்படுகின்றனர்!

கிறிஸ்தவர்கள் இப்போது கிறிஸ்துவின் ராஜ்யத்தின் (சபையின்) ஒரு பகுதியினராக "ஆளுகின்றனர்." (வெளிப்படுத்தின விசேஷம் 1:6; 5:10ஐக் காணவும்) மற்றும் அவர்கள் நித்தியத்திற்கும் கிறிஸ்துவுடனேகூட ஆளுகை செய்வார்கள் (2 தீமோத்தேயு 2:12ஐக் காணவும்). "ஜீவனை அடைந்து ஆளுதல்" என்பதுபற்றி, நமக்கு இயேசுவின் பின்வரும் கூற்று நினைவுபடுத்தப்படுகிறது:

“நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்” (யோவான் 10:10). நாம் இப்போது கிறிஸ்துவுக்குள் “புதிய ஜீவன்” பெற்றவர்களாக இருக்கிறோம் (ரோமர் 6:4), மற்றும் ஒருநாளில் நாம் பரலோகத்தில் “நித்திய ஜீவனை” மகிழ்வுடன் அனுபவிப்போம் (ரோமர் 6:23; தீத்து 1:2ஐக் காணவும்).

மீண்டுமாக, ஒரு மனுஷன் (ஆதாம்) துக்கத்தைக் கொண்டுவந்தான், ஒரு மனுஷர் (கிறிஸ்து) மகிழ்ச்சியைக் கொண்டுவந்தார் என்று வலி யுறுத்தப்பட்டுள்ளது: “அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க,கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிகநிச்சயமாமே” (ரோமர் 5:17).

முடிவுரை

நமது அடுத்த பாடத்தில், நாம் இரண்டு “ஆதாம்களும்” ஒப்பிடப்படுதலைக் கண்ணோக்கி, ரோமர் 5:12-21ன் மீதான நமது படிப்பை முடிப்போம் (வசனங்கள் 18-21). பின்பு நாம் இந்தக் கடினமான வசனப்பகுதியிலிருந்து நடைமுறைப் பயன்பாடுகளைத் தரவழைப்பதன்மூலம் இந்தப் படிப்பை முடிப்போம்.

நாம் இப்பாடத்தை முடிக்கையில், மீண்டுமாக இரண்டு “ஆதாம்களையும்” கண்ணோக்குங்கள். முந்தின ஆதாம் (ஆதியாகமம் 5:1-5). ஒரு சாபத்தைக் கொண்டுவந்தான் (ஆதியாகமம் 3:17; மல்கியா 4:6 ஆகிய வசனங்களைக் காணவும்), “பிந்தின ஆதாமின்” வரலாறு (மத்தேயு 1:1; 1 கொரிந்தியர் 15:45ஐக் காணவும்) “இனி சாபமிராது” என்று முடிகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 22:3). முந்தின ஆதாம் உலகத்திற்குள் மரணத்தைக் கொண்டு வந்தான், “பிந்தின ஆதாம்” ஜீவனைக் கொண்டு வந்தார். நீங்கள் முந்தின ஆதாமைப் பின்பற்றி மரிக்கக் கூடும் - அல்லது “பிந்தின ஆதாமை” பின்பற்றி ஜீவன் பெறக்கூடும்.

“மரணமா அல்லது ஜீவனா? தேர்ந்துகொள்ளுதல் உங்களுடையதே” என்று இந்த வசனப்பகுதியின் ஆய்வுக்கருத்தை எடுத்துரைக்கக்கூடும். உங்கள் உடல்ரீதி யான மரணத்தைப் பொறுத்தமட்டில் நீங்கள் தேர்ந்துகொள்ளக்கூடியது எதுவுமில்லை, ‘‘அன்றியும் ஒரேதரம் மரிப்பதும் … மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிற[து]” (எபிரெயர் 9:27); ஆனால் ஆவிக்குரிய மரணத்தைப் பொறுத்தமட்டில் நீங்கள் தேர்ந்துகொள்ளக்கூடிய விஷயம் உள்ளது. நீங்கள், உங்கள் “அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாக” இருக்கக்கூடும் (எபேசியர் 2:1), அல்லது நீங்கள் ‘‘கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பிக்கப்பட” முடியும் (வசனம் 5). அவ்வாறே, உடல்ரீதியான வாழ்வைப் பொறுத்தமட்டில் நீங்கள் தேர்ந்துகொள்ளக்கூடியது என்று எதுவுமில்லை; பிறப்பதை நீங்கள் தேர்ந்துகொள்ள இயலாது. இருப்பினும், ஆவிக்குரிய வாழ்வைப் பொறுத்தமட்டில் நீங்கள் தேர்ந்துகொள்ளக்கூடிய விஷயம் உள்ளது. உங்களுக்கு “ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவுமே” இயேசு வந்தார் (யோவான் 10:10) - ஆனால் அவருடைய கிருபையின் அளிப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ளவோ அல்லது மறுக்கவோ முடியும். மரணமா அல்லது ஜீவனா? தேர்ந்துகொள்ளுதல் உங்களுடையதாக உள்ளது.

பிரசங்கியார்களுக்கும் போதகர்களுக்கும் குறிப்புகள்

இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்துவதில், நீங்கள் உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு, ''விசுவாசத்துடன் கீழ்ப்படிதல்'' மூலம் ஜீவனைத் தேர்ந்துகொள்வது எப்படி என்று கூற விரும்பலாம் (1:5; 16:26; 1:16; 10:9, 10; 6:3-6; 12:1) ஆகிய வசனங்களைக் காணவும்). "மரணமா அல்லது ஜீவனா? தேர்ந்துகொள்ளுதல் உங்களுடையதே" என்பது இந்தப் பாடத்திற்கான மாற்றுத் தலைப்பாக இருக்கிறது.

குறிப்புகள்

[1]*இந்தப்பாடத்திற்கான முதன்மைத் தலைப்புகள் பின்வரும் புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டன:* John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 149, 154, 156. [2]Chrysostom *Homilies on the Epistle to the Romans* Homily 10. [3]*இன்றைய நாட்களில் உள்ள தேவநம்பிக்கையற்ற "கல்வியாளர்கள்" சிலரைப் போலின்றி பவுல், ஆதாமின் வரலாற்றையும் ஆதியாகமத்தில் உள்ள வீழ்ச்சி பற்றிய வரலாற்றையும் வரலாற்றுப்பூர்வ மாக மிகச்சரியானவைகள் என்று நம்பினார்.* [4]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 149. [5]Adapted from David F. Burgess, comp., *Encylopedia of Sermon Illustrations* (St. Louis: Concordia Publishing House, 1988), 57-58. [6]*நமது வசனப்பகுதியில் "மரணம்" என்ற வார்த்தை உடல்ரீதியான மரணத்தை மாத்திரம் குறிக்கிறது என்று நம்புபவர்கள், ஒரே பாவம் (ஆதாமின் பாவம்) உலகத்தின்மீது கொண்டிருந்த செயல்விளைவு மீது பவுலின் வலியுறுத்தம் இருந்தது என்று சுட்டிக்காண்பிக்கின்றனர். அவர்கள், "எல்லாரும் பாவம் செய்து" என்ற வார்த்தைகள் சந்தர்ப்பப்பொருளில் பொருந்தி வருவதற்கு, ஆதாம் பாவம் செய்தபோது அது அவனது சந்ததிகள் எல்லாரும் பாவம்* செய்தது போலாயிற்று *என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். ஏவுதல்பெற்ற எழுத்தாளர்கள் சிலவேளைகளில் இவ்வகையான வாதத்தைப் பயன்படுத்தியுள்ளனர். எபிரெயர் 7:9, 10ஐக் காணவும், அங்கு மெல்கிசேதேக்குக்கு லேவி தான் பிறப்பதற்கு நீண்டகாலம் முன்பே தசமபாகம் செலுத்தினான் - ஏனென்றால் லேவியின் தாத்தாவுக்குத் தாத்தாவான ஆபிரகாம் மெல்கிசேதேக்குக்குத் தசமபாகம் செலுத்தியிருந்தார் என்று அந்த எழுத்தாளர் கூறினார்.* [7]*ரோமர் 3:23ல் போலவே,* பொறுப்புள்ள *தனிநபர்களைப் பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பது புரிந்துகொள்ளப்படுகிறது.* [8]*"மரணம்" என்பது நமது வசனப்பகுதி முழுவதிலும் உடல்ரீதியான மரணத்தையே குறிப்பதாக எடுத்துக்கொள்வதென்றால், 13ம் வசனத்தில் பவுலின் வார்த்தைகள் பின்வருமாறு இருந்திருக்கலாம்: உடல்ரீதியான மரணம் என்பது* தனிப்பட்ட *பாவத்திற்கான தண்டனையாக இருந்தால், மோசேயின் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னர் எவரொருவரும் மரித்திருக்க மாட்டார்கள்.* [9]*"ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்கள்" என்பது குழந்தைகளைப் பற்றிய குறிப்பாக இருக்கக்கூடும்.* [10]*''மீறுதல்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (parabasis என்ற) கிரேக்க வார்த்தை அடிக்கடி ஆங்கில மொழியில்* "transgression" *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும் "துன்பத்தில் இருந்து வெற்றிக்கு" என்ற பாடத்தில் இந்தக் கிரேக்க வார்த்தை கலந்துரையாடப்பட்டது.*

[11]*கொலைசெய்பவர்கள் கொல்லப்படவேண்டும் என்று தேவன் கட்டளையிட்டிருந்தார் (ஆதியாகமம் 9:6), "ஆனால் மரணதண்டனைக்கு உட்படும் எல்லா*

வற்றிற்கும் பொதுவான சட்டம் எதுவும் இருந்ததில்லை" (J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* [Cincinnati: Standard Publishing, n.d.], 335). [12]F. F. Bruce, *The Letter of Paul to the Romans*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 124. [13]Vine, 202; *The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 411. [14]*உங்கள் வாசகர்களுக்கு நன்கு பழக்கமான ஒரு விவரிப்பைப் பயன்படுத்துங்கள்.* [15]*சிலவேளைகளில் "மீறுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள ஒரு வார்த்தையைப்பற்றி "துன்பத்திலிருந்து வெற்றிக்கு" என்ற பாடத்தில் இந்தப் புத்தகத்தின் முன்பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இது அதே அடிப்படை அர்த்தம் கொண்ட வேறு வார்த்தையாக (paraptoma) உள்ளது. இதன் வினைச்சொல் வடிவமானது (parapipto) "புறம்பே [para] விழுதல் [pipto]" என்று அர்த்தப்படுகிறது.* [16]McGarvey and Pendleton, 336. [17]Vine, 264. [18]Ibid., 119. [19]*"உடல்ரீதியான மரணம்மட்டுமே" என்ற கண்ணோக்கில், "ஆக்கினைத்தீர்ப்பு" என்பது உடல்ரீதியாக மரிக்க ஆக்கினைத்தீர்ப்புப் பெற்றிருத்தலைமட்டுமே முற்றிலும் குறிக்கிறது.* [20]*முன்னரே குறிப்பிட்டபடி, ஏனோக்கு ஒரு விதிவிலக்காக இருந்தார். எலியா இன்னொரு விதிவிலக்காக இருந்தார். மேலும் கிறிஸ்துவின் மறுவருகையின்போது உயிருடன் இருப்பவர்கள் உடல்ரீதியாக மரிக்கமாட்டார்கள்.*

[21]Moses E. Lard, *Commentary on Paul's Letter to Romans* (Lexington, Ky.: N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 167. [22]*"உடல்ரீதியான மரணம் மாத்திரமே" என்ற கருத்தைப் பரிந்துரைப்பவர்களில் சிலர், "நீதிமானாக்கப்படுதல்" என்பது இவ்விடத்தில் உடல்ரீதியான மரணத்திற்கான தண்டனை மாற்றப்படுதலை மாத்திரம் குறிக்கிறது என்று வலியுறுத்துகின்றனர்.* [23]McGarvey and Pendleton, 338. [24]*கிரேக்க வார்த்தை "ஒரு மீறுதலினாலே" என்று மொழிபெயர்க்கப்பட முடியும்.*

24

தெளிவற்ற வேதவசனமும் "தெளிவான" சத்தியங்களும்

[ரோமர் 5:18-21 மற்றும் 5:12-21ன் முடிவுரை பற்றிய படிப்பு]

இது, "வேதாகமம் முழுவதிலும் மிகவும் கடினமான வேதவசனப்பகுதி" என்று அழைக்கப்படும் வசனங்களின்மீதான நமது மூன்றாவது பாடமாகும்:[1] *ரோமர் 5:12-21. இவ்வசனப்பகுதியில் பவுல், ஆதாமையும் கிறிஸ்துவையும் ஒப்பிட்டு நேர்மாறாக ஒப்பீடு செய்தார். ஆதாமும் கிறிஸ்துவும் அறிமுகப்படுத்தப்படுதல் (வசனங்கள் 12-14) மற்றும் அவர்கள் நேர்மாறாக ஒப்பிடப்படுதல் (வசனங்கள் 15-17) ஆகியவற்றை நாம் முன்னதாகக் கண்டிருக்கிறோம். இந்தப்பாடத்தில் நாம், அவர்கள் ஒப்பிடப்படுதலைக் காண்போம் (வசனங்கள் 18-21).*

இதுபோன்ற வசனப்பகுதிகளைக் கையாளுவதில் உள்ள ஒரு அபாயம் என்னவென்றால், வசனப்பகுதியின் தெளிவற்ற அம்சங்களை நாம் இறுகப் பற்றிக்கொள்ளும்போது, நாம் கற்றுக்கொள்ளும்படி தேவன் நோக்கங்கொண்டுள்ள தெளிவான சத்தியங்கள் பற்றிய கண்ணோக்கைத் தவறவிடுதல் என்பதே ஆகும். ரோமருக்கு எழுதிய நிருபத்தின் இப்பகுதி பற்றிய நமது படிப்பை நாம் முடிக்குமுன்னர், இவ்வசனப்பகுதியில் இருந்து வெளிவருகிற, ஏறக்குறைய தெளிவான சில சத்தியங்களை மறு கண்ணோட்டமிட நான் விரும்புகிறேன்.

தெளிவற்ற வேதவசனம் (5:18-21)

நமது வேத வசனப்பகுதியின் முந்திய பாகத்தில் (வசனங்கள் 15-17), ஆதாமுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையில் *நேரெதிர் ஒப்பீடு* என்பது வலியுறுத்தம் பெற்றிருந்தது: "தேவனுடைய கிருபைவரம் மீறுதலுக்கு ஒப்பானதல்ல" என்று பவுல் கூறினார் (வசனம் 15). இந்தப்பகுதியில் (வசனங்கள் 18-21) ஆதாம் மற்றும் கிறிஸ்து ஆகியோருக்கிடையில் *ஒப்பீடுமீது* கவனக்குவிப்பு உள்ளது. ஒப்பீட்டின் சொற்றொடராக்கத்தைக் கவனியுங்கள்: "உண்டானதுபோல ..." (வசனம் 18); "... ஆக்கப்பட்டது போல ..." (வசனம் 19); "... கொண்டதுபோல ..." (வசனம் 21).

பவுலின் நேர்மாறான ஒப்பீடுகளும், ஒப்பீடுகளும் ஒன்றின்மீதொன்று கவிகின்றன - இது அடிக்கடி இவ்விரண்டிற்கும் இடையில் மிகச்சிறிய வித்தியாசத்துடன் உள்ளது. இருந்தபோதிலும், இவ்வசனப்பகுதியின் முடிவு வசனங்களில், ஆதாமும் கிறிஸ்துவும் எவ்வாறு ஒன்றுபோலிருந்தனர் - அல்லது, மிகக்குறிப்பாகக்

கூறுவதென்றால், அவர்களின் *செயல்கள்* எவ்வாறு ஒன்றுபோலிருந்தன - என்பதை அப்போஸ்தலர் வலியுறுத்தினார்.

இரண்டு செயல்களுமே உலகளாவிய பின்விளைவுகளைக் கொண்டிருந்தன (வசனம் 18)

முன்பே குறிப்பிட்டதுபோல, பவுல் 12ம் வசனத்தில் தொடங்கிய வாக்கியத்தை முடிக்காதிருந்தார்: "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று -" நான் ஒரு வாக்கியத்தை முடிக்காமல் அடுத்த சிந்தனைக்குக் கடந்து செல்லும்போது, எனது தொடக்கச் சிந்தனையின் தடத்தை நான் அடிக்கடி இழந்துபோவதுண்டு, ஆனால் பவுல் அவ்வாறு இழக்காதிருந்தார். 18ம் வசனத்தில், அவர் 12ம் வசனத்தின் சிந்தனையைத் திரும்பத் தொடர்ந்தார்: "ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே[2] எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று." "ஒரே மீறுதல்" என்பது தோட்டத்தில் ஆதாம் செய்ததாக இருந்தது, "ஒரே நீதி" என்பது சிலுவையில் இயேசுவின் மரணமாக இருந்தது.

ரோமர் 5:12-21 எதைப் *போதிப்பதில்லை* என்பதைப்பற்றி ("ஒரே மனுஷனாலே" என்ற பாடத்தில்) நாம் கலந்துரையாடுகையில், சிலர் 18ம் வசனத்தை "உலகளாவியதன்மை" - எல்லா மக்களும் கடைசியில் இரட்சிக்கப்படுவார்கள் என்ற கருத்து - பற்றிப் போதிக்கப் பயன்படுத்த முயற்சிசெய்கின்றனர் என்று குறிப்பிட்டோம். அந்த நிலைப்பாடு வேதாகமத்தின் வேறிடத்தில் உள்ள தெளிவான போதனைக்கு நேர்மாறாகிறது (மத்தேயு 7:13, 14; 25:41, 46; ரோமர் 2:5-9). இவ்வசனப்பகுதி உலகளாவிய தன்மையைப் போதிப்பதில்லை என்றால், இது எதைப் போதிக்கிறது?

ஆதாமின் பாவம், எல்லா மக்களையும் சோதனைகளும் பாவம்செய்யத் தூண்டுதல்களும் நிறைந்த உலகத்தில் வாழும்படி "ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து" கடைசியில் உடல்ரீதியான மரணத்தை அனுபவிக்கும்படி செய்தது என்பதே இவ்வசனப்பகுதி முழுவதிலும் உள்ள முதன்மை வலியுறுத்தமாகும். இந்த மரணதண்டனையானது இயேசுவின் "ஒரே செயலினால்" திருப்பிப் போடப்பட்டது. இப்போது கர்த்தருடைய உதவியுடன், நாம் பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின்மீது வெற்றிகொள்ள முடியும் (ரோமர் 8:11, 13, 35-39).

"ஆக்கினைத்தீர்ப்பு" மற்றும் "நீதிமானாக்கப்படுதல்" ஆகியவற்றின் அர்த்தத்தை நீங்கள் ஆவிக்குரிய வட்டாரத்துடன் சுருக்கிக்கொள்வதைத் தேர்ந்துகொள்கிறீர்களா? விஷயம் அதுவாக இருந்தால், 18ம் வசனம் ஒரு *நிபந்தனைக் கூற்றாகக்* கண்ணோக்கப்படலாம் - இது கூறப்படாத ஆனால் புரிந்துகொள்ளக்கூடிய நிபந்தனைகளைக் கொண்டுள்ளது. இது 18ம் வசனத்தைப் பின்வருமாறு வாசிக்கப்படும்படிக்கு செய்யும்: "ஆகையால் ஒரே மீறுதலினாலே [பாவம் செய்த] எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரேநீதியினாலே [விசுவாசிக்கிற] எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று."[3]

18ம் வசனத்தை ஒருவர் எவ்வாறு விளக்கியுரைத்தாலும் சரி, பின்வரும்

உண்மை தெளிவாக உள்ளது: ஆதாமின் செயலும் கிறிஸ்துவின் செயலும் ஆகிய இரண்டுமே உலகளாவிய பின்விளைவுகளைக் கொண்டிருந்தன என்ற வகையில் இவையிரண்டும் ஒன்றுபோல் இருந்தன என்பது ஒரு வழியாயிருக்கிறது.

இரண்டு செயல்களும் கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியாதிருத்தல் என்ற விருப்பத்தேர்வை உள்ளடக்கியிருந்தன (வசனம் 19)

ஆதாமின் செயலும் கிறிஸ்துவின் செயலும் என்ற இவ்விரு செயல்களும், கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியாதிருத்தல் என்ற விருப்பத் தேர்வை உள்ளடக்கியிருந்தன என்ற உண்மையில், இவை இரண்டும் ஒன்றுபோலிருந்தன என்பது, இன்னொரு வழியாயிருக்கிறது. 19ம் வசனம், ''அன்றியும் ஒரே மனுஷனுடைய *கீழ்ப்படியாமையினாலே* அநேகர் [எல்லாரும்] பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் [எல்லாரும்] நீதிமான்களாக்கப்படுவார்கள்.''

ஏதேன் தோட்டத்தில், ஆதாம் தேவனுக்குக் கீழ்ப்படியவோ அல்லது அவருக்குக் கீழ்ப்படியாமல் இருக்கவோ முடிந்திருந்தது - ஆதாம் கீழ்ப்படியாதிருக்கத் தேர்ந்துகொண்டான். கெத்செமெனே தோட்டத்தில், இயேசு அதே போன்றதொரு தெரிவைக் கொண்டிருந்தார்; ஆனால் செயல்விளைவில் ஆதாம், "எனது சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று கூறியிருந்த இடத்தில் இயேசு, "உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று கூறினார் (மத்தேயு 26:42).[4] கிறிஸ்து தமது பிதாவுக்குக் கீழ்ப்படிவதற்கான அவரது மனவிருப்பமானது பின்வருவன போன்ற வசனப்பகுதிகளில் வலியுறுத்தப்படுகிறது:

> அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி (எபிரெயர் 5:8, 9).

> அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலிப்பியர் 2:8).

பவுல், 19ம் வசனத்தில், எல்லா மனுஷரும் "பாவிகளாக்கப்பட்டனர்" என்பது, ஆதாமின் கீழ்ப்படியாமையினால் ஏற்பட்ட ஒரு விளைவு என்று குறிப்பிட்டார். ஆதாமின் பாவம் ஒவ்வொருவரையும் பாதித்தது என்பது இதைப் புரிந்துகொள்வதற்கு மிகவும் சுலபமான ஒரு வழியாக உள்ளது. நாம் எல்லாரும் அவனது பாவத்தின் விளைவுகளினால் துன்புறுவதால், அது நாமே பாவம் செய்திருந்தது *போன்றுள்ளது.*

''அதுபோலவே,'' இயேசுவின் கீழ்ப்படிதல் மூலமாக எல்லாரும் ''நீதிமான்களாக்கப்படுவார்கள்.'' மீண்டுமாகத், தண்டனை திருப்பப்படுதலின்மீது வலியுறுத்தம் வைக்கப்படுகிறது. மெக்கார்டு என்பவரின் மொழிபெயர்ப்பு வேதாகமத்தில், "... even so the gift of acquittal that brings life came upon all men through one righteous act" என்றுள்ளது. J. D. தாமஸ் என்பவர் 19ம் வசனத்தின் மையக்கருத்தைப் பின்வருவது போன்று தொகுத்துரைத்தார்: "[தங்கள் சொந்தத்தவறில்லாதிருந்தும்]பலர் பாவிகளாக்கப்பட்டனர், அதுபோன்றே ஒருவரின் கீழ்ப்படிதலின் மூலமாக, [தங்களிடத்தில் சொந்த நீதி

யில்லாதிருந்தும்கூட] பலர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.''[5]

19ம் வசனம், எடுத்துரைக்கப்படாத ஆனால் புரிந்துகொள்ளப்படக் கூடிய நிபந்தனைகளுடன் இருத்தலை நீங்கள் விரும்பித் தேர்ந்துகொள்ள லாம்: ''அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் [அவர்களும் கீழ்ப்படியாதபோது] பாவிகளாக்கப்பட்டதுபோல், ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் [அவர்களும் கீழ்ப்படியும்போது] நீதிமான்களாக்கப்படுவார்கள்.''

இடையீடு: "ஆனால் நியாயப்பிரமாணம் உதவவில்லையா?" (வசனம் 20)

பவுல் தாம் கூறியதற்கு யூத வாசகர்கள் எவ்வாறு பதில்செயல் செய்வார்கள் என்பது பற்றி எப்போதுமே சிந்தைநிறைந்தவராக இருந்தார். இவ்வாறு, அவர் யூதர்களிடத்தில் இருந்து வரச் சாத்தியமாயிருக்கக்கூடிய பின்வரும் கேள்விக்குப் பதில் அளிக்கத் தமது சிந்தனைவரியில் இடையீட்டை ஏற்படுத்தினார்: "ஆனால் நியாயப்பிரமாணத்தைப் பற்றிய விஷயம் என்ன? ஆதாமின் பாவத்தினால் கொண்டுவரப்பட்ட எதிரான நிலைகளைத் திருத்துவதற்கு, அல்லது குறைந்தபட்சம் மேம்படுத்துவதற்கு நியாயப்பிரமாணம் ஒன்றும் செய்யவில் லையா?'' செயல்விளைவில் பவுலின் பதில் மறுபடியும் ஒலிக்கும் "இல்லை!'' என்பதாகவே இருந்தது.

அவர், ''மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம்[6] வந்தது'' என்று கூறினார் (வசனம் 20அ). ஒரு யூதர் அந்தக் கூற்றிற்கு எவ்வாறு பதில்செயல் செய்திருப்பார் என்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது: "இல்லை, இல்லை, மீறுதலையல்ல, ஆனால் நீதியைப் பெருக்குதல் என்பதே நியாயப்பிர மாணத்தின் நோக்கமாகும்'' - மற்றும் அவர் கூறியது சரியானதாகவே இருக்கும். கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல், "... அது [நியாயப்பிர மாணம்] அக்கிரமங்களினிமித்தமாக [ஆபிரகாமுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையுடன்] கூட்டப்பட்டு'' என்று எழுதினார் (கலாத்தியர் 3:19). என்னிடத்தில் உள்ள NASB *வேதாகமத்தின் பிரதியில், "அக்கிரமங்களினிமித்த மாக'' என்பதன்மீதான குறிப்புக்குப் பின்வரும் மேற்கோள் குறிப்புள்ளது:* "for the sake of defining [transgressions]". *மக்கள் பாவத்தை உணர்ந்தறிந்து, அவர்கள் பாவம் செய்யாதிருக்க ஊக்குவிக்கப்படும்படிக்கு நியாயப்பிரமாணம் தரப்பட்டது.*

இருந்தபோதிலும், நியாயப்பிரமாணம் பாவத்தைக் குறைப்பதற்குப் பதிலாக அது பெருகுவதற்குக் காரணமாயிற்று என்பது, நியாயப்பிரமாணம் தரப் பட்டதின் ஒரு விளைவாக உள்ளது. இதற்கான காரணம், நாம் 7ம் அதிகா ரத்திற்குச் செல்லும்போது விளக்கியுரைக்கப்படும். AB *வேதாகமம் தனது விரித்துரைக்கப்பட்ட வசனப்பகுதியில் இரண்டு காரணங்களை உள்ளடக்குகிறது: "ஆனால் நியாயப்பிரமாணம், மீறுதலை விரிவாக்கவும் அதிகரிக்கவும் மாத்திரமே வந்தது [இது அக்கிரமத்தை மிகவும் உறுதியானதாகவும் மன எழுச்சிமிக்க எதிர்ப்பாகவும் ஆக்கிற்று].''*

நியாயப்பிரமாணம் தரப்பட்டது சூழ்நிலையில் நிம்மதியை ஏற்படுத்த வில்லை, ஆனால் அதை மிகவும் மோசமாக்கிற்று என்பதே பவுலின் கருத்தாயிருந்தது. லியோன் மோரீஸ் என்பவர், நியாயப்பிரமாணம் "பாவத்தைத் தடுத்தல் பற்றி அக்கறை கொள்ளவில்லை (அதைச்செய்தல் மிகவும் தாமத

மாகியிருந்தது). அல்லது அது [நியாயப்பிரமாணம்] இரட்சிப்பைப்பற்றி அக்கறை கொள்ளவுமில்லை [அதைச் செய்யக்கூடாதபடி நியாயப்பிரமாணம் மிகவும் பலவீனமாக இருந்தது]" என்று எழுதினார்.[7] F. F. புரூஸ் என்பவர், மோசேயின் நியாயப்பிரமாணம் "நடைமுறை நோக்கத்திற்காகத் தற்காலிக அளவையாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது, ஆனால் அது மீட்பின் வரலாற்றில் நிரந்தரமான தனிச்சிறப்பு எதையும் கொண்டிருந்ததில்லை" என்று விளக்கியுரைத்தார்.[8]

பாவம் பெருகுவதற்கு நியாயப்பிரமாணம் காரணமாக இருந்தது என்று அறிவித்துவிட்டுப், பவுல் பின்வரும் நினைவுகூரத்தக்க கூற்றை ஏற்படுத்தக் கடந்து சென்றார்: "அப்படியிருந்தும், பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிக மாய்ப் பெருகிற்று" (ரோமர் 5:20ஆ). இந்த உறுதிப்பாட்டில், பவுல் வார்த்தைகளில் விளையாட்டு ஒன்றைப் பயன்படுத்தினார். "அதிகமாய்ப் பெருகிற்று" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்கவார்த்தையானது, *huper* என்ற முன்னிடைச் சொல்லுடன் உள்ள "அதிகமாய்" என்பதற்கான வார்த்தையாக உள்ளது. இந்த *huper* என்ற முன்னிடைச் சொல்லில் இருந்துதான் நாம் hyper என்ற வார்த்தையைப் பெறுகிறோம். "Super" என்பது லத்தீன் மொழியில் இதற்கான இணைச்சொல் ஆகும். 20ம் வசனத்தின் கடைசிப்பகுதி "பாவம் பெருகின (abounded)[9] இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று (*super*-abounded)" என்று மொழிபெயர்க்கப்படக்கூடும். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், தேவனு டைய கிருபையானது, எழக்கூடிய எந்தப் பாவப்பிரச்சனை பற்றியும் அக்கறை எடுத்துக்கொள்ளப் போதுமானதற்கும் *அதிகமானதாகவே* உள்ளது. பிலிப்ஸ் என்பவர் பின்வரும் பொழிப்புரையைக் கொடுத்தார்: "பாவம் பரந்ததாகவும் ஆழமானதாகவும் காண்பிக்கப்பட்டிருப்பினும், தேவனின் கிருபை அதைவிடப் பரந்ததாகவும் ஆழமானதாகவும் இருப்பதற்காகத் தேவனுக்கு நன்றி!"

இரு செயல்களும் ஆளுகைகளை நிலைநாட்டின (வசனம் 21)

"பாவம்" மற்றும் "கிருபை" ஆகியவற்றிற்கான குறிப்பானது பவுலை அவரது சிந்தனையின் பிரதான வரிக்கு - மற்றும் ஆதாமின் செயலுக்கும் கிறிஸ்துவின் செயலுக்கும் இடையில் உள்ள அவரது மூன்றாம் ஒப்பீட்டிற்கு - திரும்பக் கொண்டுவந்தது. வசனம் 21அ, "ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல" என்று கூறுகிறது. முன்னதாகப், பவுல் மரணம் ஆளுகை செய்வதாகச் சித்தரித்திருந்தார் (வசனங்கள் 14, 17). இப்போது அவர் அந்தச் சித்தரிப்பைச் சற்றே மாற்றி பாவத்தை, கொடூரம் வாய்ந்த ஆட்சியாளனாக அது தனது குடிகளைக் கட்டுப்படுத்த மரணத்தின் அச்சுறுத்தலைப் பயன்படுத்துவதாக சித்தரித்தார், NCV வேதாகமத்தில், "Sin once used death to rule us" ("ஒருகாலத்தில் பாவம் நம்மை ஆளுகைசெய்ய மரணத்தைப் பயன்படுத்திற்று") என்றுள்ளது.

இருப்பினும், பவுல் கிருபையானது பாவத்திற்கு மேலானதாக இருப் பதைத் திரும்பவும் வலியுறுத்தினார்: "கிருபையானது ... நீதியினாலே ... ஆண்டுகொண்டது" (வசனம் 21ஆ, இ). பாவம் மனிதகுலத்தை ஆளப் பயத்தைப் பயன்படுத்துகிறது, அதேவேளையில் கிருபை அன்பைப் பயன்படுத்துகிறது. "பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்" (1 யோவான் 4:18). விசுவாசத்தின் மூலமாகத் தேவனுடைய கிருபையை *ஏற்றுக்கொண்டவர்கள்* இருதயங்களில் மாத்திரமே கிருபை ஆளுகிறது என்பது உண்மையே. இவ்வாறு NIrV வேதாகமம்

இவ்வசனத்தின் இப்பகுதியை, "So also grace rules in the lives of those who are right wih God" ("அதுபோன்றே கிருபையும் தேவனுடன் நேராயிருப்பவர்களின் வாழ்வுகளில் ஆளுகை செய்கிறது") என்று மொழிபெயர்த்திருக்கிறது.

பவுல் தமது சிந்தனை வரிசை முடிக்கையில், அவர் தேவனுடைய கிருபையின் ஈவினுடைய நிறைவான "அதிகம் ஏராளமான" பகுதிக்குத் திரும்பினார்: "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது" (வசனம் 21இ). உண்மையான "ஜீவன்" என்பது தேவனுடைய பிரசன்னத்தில் இருப்பதாகவும், "நித்திய ஜீவன்" என்பது நித்தியத்திற்கும் அவரது பிரசன்னத்தில் இருத்தலாகவும் உள்ளது (வெளிப்படுத்தின விசேஷம் 21:22, 23; 22:3-5ஐக் காணவும்). மீண்டும் ஒருமுறை, பவுல் இது "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக" மாத்திரமே சாத்தியமாகும் என்று வலியுறுத்தினார்!

"தெளிவான" சத்தியங்கள் (5:12-21)

நாம் ரோமர் 5:12-21ன் ஊடே நமது வழியைக் கடந்து வந்திருக்கிறோம். இது நான் எழுதியிருக்கும் ஒவ்வொரு வார்த்தையைக் கொண்டும் நான் திருப்தியடைந்தேன் என்று அர்த்தப்படுகிறதா? இல்லை. இது, நான் இவ்வசனப்பகுதியின் ஒவ்வொரு விவரத்தையும் புரிந்திருக்கிறேன் என்று நான் தைரியமாக இருப்பதாக அர்த்தப்படுகிறதா? இல்லை, இல்லை, இல்லை. மோசஸ் E. லார்டு என்பவர், "பின்பு, வாசகர் [ஆய்வில் உள்ள வசனப்பகுதியை] படித்திருக்கும்போது, நான் கொண்டதுபோன்றே, அவர் தான் நிபுணத்துவம் பெற்றுள்ளது பற்றி உணர்வில் திருப்தியை அடைவார், நான் உரிமைகோர அஞ்சும் உணர்வுநிலையை அவர் உடையவராக இருப்பார்"[10] என்று எழுதியபோது, என்னுடையது போன்ற உணர்வையே வெளிப்படுத்தினார். பலவிவரங்களைப் பற்றி நாம் கேள்விகளைக் கொண்டிருப்பினும், நமது வசனப்பகுதியில் (உரைக்கப்பட்ட அல்லது மறைமுகமாக உணர்த்தப்பட்ட) சத்தியங்கள் உள்ளன, அவற்றை நாம் தவறவிடுவதைத் தேவன் விரும்பமாட்டார். நாம் அந்தப் பலவற்றைக் கண்ணோக்குவோமாக.[11]

"ஒன்று" முக்கியமானதாக உள்ளது

நீங்கள் "ஒரே ஒருவராக" இருக்கிறீர்கள். எனவே நீங்கள் முக்கியமற்றவர் என்று நீங்கள் நினைக்கலாம். நமது வசனப்பகுதி முழுவதையும் கண்ணோக்கிப் பார்த்து, "ஒரே" என்ற வார்த்தை எத்தனை முறை தோன்றுகிறது என்பதைக் கவனியுங்கள். *ஒரே* மனுஷனாலே உலகத்திற்கு அழிவு வந்தது; பின்பு *ஒரே* மனுஷன் இவ்வுலகத்தை மீட்க வந்தார். ஒரே ஜீவனின் வல்லமையை ஒருபோதும், விசேஷமாக அந்த ஒரே ஜீவன் கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கப்படுகையில் அதைக் குறைத்து மதிப்பிட்டு விடாதீர்கள். நீண்டகாலத்திற்கு முன்பு நான் கேள்விப்பட்ட குறிக்கோள் ஒன்று என் நினைவுக்கு வருகிறது: "நான் ஒரே ஒருவனாக மாத்திரம் இருக்கிறேன், ஆனால் நான் ஒருவனாக இருக்கிறேன். என்னால் எல்லாவற்றையும் செய்யமுடியாது, ஆனால் என்னால் சிலவற்றைச் செய்ய முடியும். என்னால் செய்ய முடிந்ததைத் தேவனுடைய உதவியோடு நான் *செய்வேன்.*"

பாவம் பயங்கரமானதாக உள்ளது

பாவம் என்பதன் கருத்து இன்றைய நாட்களில் சமூகத்தின் பல பிரிவுகளில் குறைத்து மதிப்பிடப்படுகிறது/அதாவது பாவம் என்பது அவ்வளவு மோசமானதல்ல என்று கருதப்படுகிறது. பாவம் நிலவுகிறது என்பதையே சிலர் மறுக்கின்றனர், அதே வேளையில் மற்றவர்கள், "பாவம்" என்று வேதாகமம் குறிப்பிடுவது மோசமானதே அல்ல என்று வலியுறுத்துகின்றனர். இதற்கு நேர்மாறாக, நாம் ஆதாமின் பாவத்தையும் அதன் விளைவுகளையும் கண்ணோக்குகையில், பாவம் உண்மையானது, அது பயங்கரமானது மற்றும் அதன் விளைவு அச்சுறுத்தக்கூடியது என்பதை நாம் காண்கிறோம். ஆதாம் பாவம் செய்து உலகத்திற்குள் மரணம் பிரவேசித்தபோது, "நிலப்பகுதியின் குறுக்கில் மிகநீண்ட மற்றும் மிகக்கறுமையான நிழல் படியவைக்கப்பட்டது!"[12]

கிருபை வியப்புக்குரியதாக உள்ளது

தேவன் மனிதகுலத்திற்கு உதவிசெய்யக் கடப்பாடு உடையவரல்ல, ஆனால் - ஆச்சரியங்களுக்கெல்லாம் ஆச்சரியமானது! - அவர் நம்மீது அன்புகூர்ந்தார் (யோவான் 3:16) மற்றும் தமது கிருபையை அவர் நம்மீது பொழிந்தார். "பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று" என்று பவுல் எழுதினார் (ரோமர் 5:20). Pilgrim's Progress ("மோட்சப் பிரயாணம்") என்ற புத்தகத்தை எழுதிய ஜான் பன்யன் (1628-1688) என்பவர், தமது சுயவரலாற்றின் தலைப்பை ரோமர் 5:20ன் அடிப்படையில் அமைத்தார்: Grace Abounding. (பொங்கிப் பெருகும் கிருபை).[13]

சிலுவை இன்றியமையாததாக உள்ளது

ஆதாம் செய்திருந்த பாவத்தை நீக்கிப்போடக் கிறிஸ்து வராதிருந்தார் என்றால் - அது எவ்வளவு பயங்கரமாக இருந்திருக்கும் என்பதை வார்த்தைகளால் விளக்க இயலாது. உண்மையில், அவர் வந்தார், மற்றும் அவர் உங்களுக்காகவும் எனக்காகவும் ஒரு சிலுவையில் மரித்தார்! இரண்டாம் உலகப்போரின் முடிவின்போது, வின்ஸ்ட்டன் சர்ச்சில், பின்வரும் மறக்க இயலாத வார்த்தைகளுடன் ராயல் விமானப்படையில் பணியாற்றி இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்: "இவ்வளவு மிகக் குறைவானவர்களுக்கு இவ்வளவு மிக அதிகமானவர்கள் ஒருக்காலும் கடன்பட்டிருந்தது இல்லை." சிலுவையின்மீது கிறிஸ்துவை நாம் கண்ணோக்குகையில், "ஒரே ஒருவருக்கு இவ்வளவு அதிகமானவர்கள் ஒருக்காலும் கடன்பட்டிருந்ததில்லை!" என்று நாம் அறிக்கையிட்டாக வேண்டும்.[14]

மரணம் தவிர்க்க இயலாததாக உள்ளது

"மரணம் எல்லாருக்கும் வந்தது" என்பது ஆதாமின் பாவத்தினுடைய ஒரு விளைவாக இருந்தது (வசனம் 12). "அன்றியும் ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே" (எபிரெயர் 9:27). நம்மில் பலர் மரணத்தைப் பற்றி நினைக்க விரும்புவதில்லை, ஆனால் அது தவிர்க்க இயலாததாக உள்ளது - மற்றும் அதைத் தொடர்ந்து நியாயத்தீர்ப்பு வரும் என்பது நிச்சயமானதாக உள்ளது. ஞானவான் வாழ்வுக்காக மாத்திரமல்ல, ஆனால் மரணத்திற்காகவும் ஆயத்தமாகின்றான்.

உயிர்த்தெழுதல் நிச்சயமானதாக உள்ளது

ஆதாமின் பாவத்தினுடைய செயல்விளைவுகளை திருப்புவதற்காக/நீக்குவதற்காக கிறிஸ்து வந்தார். ஆதாமின் பாவத்தின் விளைவாக, உடல்ரீதியான மரணம் ஒவ்வொரு நபருக்கும் வந்தது; ஆனால், கிறிஸ்துவின் மூலமாக, நாம் ஒருநாளில் உயிர்ப்பிக்கப்படுவோம். இயேசு மறுபடியும் வரும்போது, "பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்[பார்கள்]; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவான் 5:28, 29).

பொறுப்பு [அவரவருக்கு] சொந்தமானதாக உள்ளது

நம்மில் ஒவ்வொருவரும் தத்தமது சொந்த முடிவிற்குத் தாமே பொறுப்பாளிகளாக இருக்கிறோம். ஆதாமின் பாவத்தினிமித்தமாக, நாம் உடல்ரீதியாக மரிக்கிறோம்; மற்றும் தேவனுடைய கிருபையினிமித்தமாக, நாம் ஒருநாளிலே உடல்ரீதியாக வாழ்வோம். இருப்பினும், நமது *சொந்தப்* பாவங்களினிமித்தமாகவே நாம் ஆவிக்குரிய முறையில் மரிக்கிறோம், கிறிஸ்துவின் பலியின்மீதுள்ள விசுவாசத்தின்மூலமாக மாத்திரமே நாம் நித்தியத்திற்கும் வாழமுடியும்.[15] நமது மாம்சத்தைப் பொறுத்தமட்டில் நாம் தேர்ந்துகொள்ளுதல் எதையும் கொண்டிருப்பதில்லை, ஆனால் நமது விசுவாசத்தைப் பொறுத்த மட்டில் நாம் தேர்ந்துகொள்ளுதலைக் கொண்டிருக்கிறோம். ஒருமுறை, முதிர் வயதான ஒரு பிரசங்கியாரிடத்தில், இரட்சிப்பு எல்லாருக்குமானது என்றால், ஏன் எல்லாரும் இரட்சிக்கப்படுவதில்லை? என்று கேட்கப்பட்டது. அந்த முதிர் வயதான மனிதர் அதற்கு, "பளிங்குபோலத் தெளிவான தண்ணீரானது பல ஆயிரக்கணக்கான வருடங்களாக பனிமூடிய மலைகளின் உச்சிகளிலிருந்து பாய்ந்தோடி வந்துகொண்டிருந்தபோதிலும், இன்னமும் ஏன் அழுக்கான மக்கள் இருக்கின்றனர்?" என்று பதில்கேள்வி கேட்டார்.[16] சிலர் கழுவிக்கொள்ள மறுக்கின்றனர் என்பதே உண்மையாக உள்ளது. அதுபோன்றே, சிலர் இயேசு என்ற தேவனுடைய கொடையை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்.

ஒரு (முடிவெடுப்பது) என்பது தப்பிக்க இயலாததாக உள்ளது

ஜேம்ஸ் R. எட்வர்ட்ஸ் என்பவர், "தேர்வுசெய்தல் என்பதன் குறுக்குச் சாலையில் நிற்றலென்பதே மனிதராக இருத்தல் என்பதாக உள்ளது" என்று எழுதினார்.[17] நீங்கள் உங்கள் பாவங்களில் நிலைத்து நின்று அந்தப் பாவத்தின் நொறுக்கும் விளைவுகளைப் பட்டு அனுபவிக்கத் தேர்ந்துகொள்ள முடியும், அல்லது நீங்கள் இயேசுவை விசுவாசிக்கவும் அவரை உங்கள் வாழ்வின் அரசராக முடிசூட்டவும் தீர்மானிப்பதைத் தேர்ந்துகொள்ள முடியும். கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதல் என்பது உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுதலாகவும் தேவன் உங்களுக்கென்று ஆயத்தம் பண்ணியுள்ள ஆசீர்வாதங்களைப் பெறுதலாகவும் உள்ளது. சிலர், ஒரு முடிவெடுப்பதைத் தாங்கள் மறுக்க முடியும், அல்லது குறைந்தபட்சம் அதைத் தள்ளிப்போட முடியும் என்று நினைக்கின்றனர்; ஆனால் அவர்கள் கிறிஸ்துவுக்கென்று முடிவெடுக்கத் தவறும் ஒவ்வொரு வேளையிலும், அவர்கள் அவருக்கெதிராக முடிவெடுப்பவர்களாக உள்ளனர் (லூக்கா 11:23ஐக் காணவும்). நீண்ட காலத்திற்கு முன்பு, யோசுவா பின்வரும் அறைகூவலை

விடுத்தார்: "... யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; ... நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்" (யோசுவா 24:15).

முடிவுரை

நாம் இந்தப் பாடத்தை முடிக்கும் வேளையில், நாம் இப்போதுதான் படித்துள்ள இவ்வசனப்பகுதியின் முதன்மைச் சிந்தனைக்குத் திரும்ப விரும்புகிறேன்: மனிதகுலத்திற்குள் ஆதாம் அறிமுகப்படுத்திய எந்தப் பிரச்சனையையும் - மற்றும் அதைவிட அதிகமான பிரச்சனைகளையும் கிறிஸ்து எடுத்துப் போட்டிருக்கிறார். இது ஒரு இறையியல் கூற்றாக மாத்திரம் உள்ளதா? இல்லை, இது நடைமுறைக்கு உகந்த மற்றும் தனிப்பட்ட சத்தியமாக உள்ளது. ரோமர் 5:12-21 வசனப்பகுதியை ஆதாம் மற்றும் கிறிஸ்து ஆகியோரின் வரலாறாக மாத்திரம் நினைக்க வேண்டாம்; அது *உங்கள்* வரலாறாகவும் உள்ளது.

பரிசுத்த ஆவியானவர் இவ்வசனப்பகுதியை தீர்க்கப்பட வேண்டிய புதிராக உள்ளடக்கவில்லை, ஆனால் ஏற்புடையவைகளாக்கப்பட வேண்டிய சத்தி யங்களின் எடுத்துரைப்பாக இதை அவர் உள்ளடக்கினார். நீங்கள் ஆதாமின் பாவத்தினால் அன்றாடம் துன்புறுகிறீர்கள் மற்றும் ஒருநாளில் நீங்கள் அந்தப் பாவத்தினிமித்தம் மரணத்தின் ஆட்சிக்கோலை எதிர்கொள்வீர்கள் என்பது ஒரு சத்தியமாக உள்ளது. உங்கள் தனிப்பட்ட பாவத்தினிமித்தம், நீங்கள் இங்கும் மற்றும் நித்தியத்திற்கும் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட முடியும் என்பது இன்னொரு சத்தியமாக உள்ளது. ஆதாமின் மற்றும் உங்களின் பாவங்களுக்கான தண்டனைகளை நீக்கிப் போட இயேசு வந்தார் என்பது அதிகம் மன எழுச்சியூட்டும் சத்தியமாக உள்ளது. அவர் *உங்களுக்காக* மரித்தார், மற்றும் நீங்கள் அவரில் விசுவாசம் கொண்டு அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று அவர் ஆவலுடன் விரும்புகிறார் (ரோமர் 6:3-6). ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இந்தப் பகுதியானது உங்கள் சிந்தைக்கு வேலை வைத்திருக்கலாம், ஆனால் நீங்கள் இப்போது அது உங்கள் இருதயத்தைத் தொடவும் உங்கள் விருப்பத்தைத் தூண்டவும் அனுமதிக்க வேண்டும்!

பிரசங்கியார்களுக்கும் போதகர்களுக்கும் ஒரு குறிப்பு

5:18-21ன் மீதான பாடத்திற்கு, "புதிரான வசனப்பகுதியிலிருந்து தெளிவான சத்தியங்கள்" அல்லது, "கடினமான வசனப்பகுதியிலிருந்து மகிழ்ச்சி பொங்கும் சத்தியங்கள்'' என்பது ஒரு மாற்றுத் தலைப்பாக இருக்கலாம். "நேர்மாறும் முடிவுகளும்" என்பது சாத்தியமான இன்னொரு தலைப்பாகும்.

குறிப்புகள்

[1]Richard Rogers, *Paid in Full: A Commentary on Romans* (Lubbock, Tex.: Sunset Institute Press, 2002), 83. [2]இது "ஒரு நீதியான செய்கையினாலே" என்று மொழிபெயர்க்கப்படக் கூடும். [3]''உடல்ரீதியான மரணம் மாத்திரமே'' என்ற அணுகுமுறையை மேற் கொள்பவர்கள், "எல்லா மனுஷருக்கும் ஆக்கினைத்தீர்ப்பு வந்தது" என்பதை, ஆதாமின் பாவத்தின் மூலமாக உடல்ரீதியான மரணம் வந்தது என்ற வகையில் விளக்குவார்கள்.

18ம் வசனத்தில் உள்ள "ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு" என்பது ஒவ்வொருவரையும் மரித்தோரிலிருந்த உயிர்ப்பித்தலினால் அந்தத்தண்டனையை இயேசு திருப்பிப்போடுதலை முதன்மையாகக் குறிப்பிடுவதாக இருக்கும் (யோவான் 5:28, 29). [4]Bruce Barton, David Veerman, and Neil Wilson, *Romans,* Life Application Bible Commentary (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1992), 110. [5]J. D. Thomas, Class Notes, *Romans,* Abilene Christian College (1955). [6]*கிரேக்க வசனத்தில், "நியாயப்பிரமாணம்" என்ற வார்த்தைக்கு முன்பு (ஆங்கிலத்தில் உள்ளதுபோன்று,* "the" *என்ற) திட்டவட்டச் சுட்டுச்சொல் எதுவும் இல்லை, ஆனால் பவுல் மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் பற்றியே பேசினார் என்பதைச் சந்தர்ப்பப்பொருள் சுட்டிக்காண்பிக்கிறது.* [7]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 241. [8]F. F. Bruce, *The Letter of Paul to the Romans,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 121. [9]*ரோமர் 5:20ல் "பெருகினது"* ("increased") *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (pleonazo என்பதிலிருந்து வருகிற) கிரேக்க வார்த்தை மாறுபட்ட வடிவமாக, ஆனால்* "abounded" *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (perisseuō என்ற) வார்த்தையின் வேர்வார்த்தைக்கு சரியானதாக உள்ளது.* (W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 6.) [10]Moses E. Lard, *Commentary on Paul's Letter to Romans* (Lexington, Ky.: N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 193.

[11]*இங்கு கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைப் பயன்பாடுகளை நீங்கள் விரித்துரைக்க விரும்பலாம்.* [12]Jim Hylton, *Just Dying to Live* (Kalamazoo, Mich.: Master's Press, 1976), 46. [13]James R. Edwards, *Romans*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1992), 154. [14]Adapted from David F. Burgess, comp., *Encyclopedia of Sermon Illustrations* (St. Louis: Concordia Publishing House, 1988), 176. [15]Jim McGuiggan, *The Book of Romans,* Looking Into The Bible Series (Lubbock, Tex.: Montex Publishing Co., 1982), 170. [16]Adapted from James Burton Coffman, *Commentary on Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1973), 210. [17]Edwards, 151.

25

“தேவனுடைய இரங்கல் பத்தி”

(6:1–4)

நமது படிப்பின் புதியதொரு பகுதியை நாம் தொடங்குகிறோம். நாம் “ஆக்கினைத்தீர்ப்பை” படித்து, எல்லாரும் பாவம்செய்து தேவனுடைய நீதி தேவைப்படும் நிலையில் இருப்பதைக் கண்டோம். “நீதிமான்களாக்குதல்” என்று நாம் அழைத்த அடுத்த பகுதியில், மக்களை நீதிமான்களென்று எண்ணுவதற்குத் தேவனுடைய ஏற்பாட்டைப் பவுல் விளக்கப்படுத்தினார். நாம் “பரிசுத்தமாக்கப் படுதல்” என்ற பகுதிக்குக் கடந்துசெல்லத் தயாராகிறோம்.

பவுல், ரோமருக்கு நிருபத்தை எழுதுவதற்குக் கூறும்போது அவருக்கு முன்னால் வரைகுறிப்பு இருக்கவில்லை. நிருபத்தில் தீர்க்கமான பிரிவுகள் இல்லை. அவர் சிந்தனையில் இருந்து சிந்தனைக்குக் கடந்தார், சிலவேளைகளில் புதிய ஒரு கலந்துரையாடலைத் தொடங்குமுன்னர் முந்திய கலந்துரையாடலுக்குத் திரும்பினார். இந்தக் காரணத்தினால், பிரிவுகள் ஒன்றின்மேல் ஒன்று கவிந்திருப் பதை நாம் காண்கிறோம். இருந்தபோதிலும், இந்த நிருபத்தின் பல்வேறு பகுதி களில் பவுலின் வலியுறுத்தத்தை உற்று நோக்குவதில் மதிப்புள்ளது.

புதிய தலைப்பின்மீது குறிப்புகள்

நாம் 6 மற்றும் 7ம் அதிகாரங்களை, “பரிசுத்தமாகுதல்” மீதான பவுலின் போதனை என்று வகைப்படுத்தியுள்ளோம். NASB வேதாகமத்தில் “பரிசுத்த மாகுதல்” என்ற வார்த்தை இந்த அதிகாரங்களில் இருமுறை காணப்படுகிறது:

> முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத் திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்த மானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள் (6:19).

> இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன் (6:22).

“பரிசுத்தமாகுதல்” என்பது பொதுவான பயன்பாட்டில் உள்ள வார்த்தையல்ல. பல ஆண்டுகளுக்கு முன்னர், கிளென் வாலெஸ் என்பவர், டெக்ஸாஸில் உள்ள கிளெபர்ன் நகரின் மையப்பகுதி கிறிஸ்துவின் சபையில் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். அவர் தமது அறிமுகக் குறிப்புகளில், “இன்று நான் பரிசுத்தமாகுதல் பற்றிப் பிரசங்கிக்கப் போகிறேன். பரிசுத்தமாக்கப் பட்டவர்கள் ஒவ்வொருவரும் தயவுசெய்து எழுந்து நில்லுங்கள்” என்று கூறினார். நானூறுக்கும் மேற்பட்டவர்கள் அங்கிருந்தனர், ஆனால் ஒரே ஒரு

மூப்பரும் ஒரு பிரசங்கியாரும் மாத்திரமே எழுந்து நின்றனர்.[1] பெரும்பான்மையானவர்கள், தாங்கள் பரிசுத்தமாக்கப்பட்டார்களா இல்லையா என்பது பற்றி நிச்சயமற்று இருந்தனர்.

"பரிசுத்தமாகுதல்" என்பது, *hagios* என்பதிலிருந்து வருகிற *hagiasmos* என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது.[2] இவ்வார்த்தை "பரிசுத்தமாக்கப்படுதல்" அல்லது "பரிசுத்தம்" என்று மொழிபெயர்க்கப்படக்கூடும். 6:19, 22ல், "sanctification" என்பதற்குப் பதில், ஆங்கில வேதாகமத்தின் பல மொழிபெயர்ப்புகள் "holiness" என்ற வார்த்தையைக் கொண்டுள்ளன (KJV; NIV ஆகிய வேதாகமங்களில் காணவும்).

புறதெய்வ வணக்க மதங்களில், *hagios* என்பது "தேவர்களுக்கு" *அர்ப்பணிக்கப்பட்டிருந்தவற்றைக்* குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது. இது பின்வரும் பொதுவான அர்த்தம்கொள்ள வந்தது: "பிரித்து வைக்கப்பட்ட அல்லது ஒதுக்கி வைக்கப்பட்ட பொருள்/நபர்." இதைக் கிறிஸ்தவர்களுக்கு நடைமுறைப்படுத்தும்போது, இது தேவனால் அவரது பரிசுத்த நோக்கங்களுக்காக "ஒதுக்கி வைக்கப்"பட்டிருத்தலை குறிக்கிறது. இவ்வாறாக, ரோமர் 6:19, 22ல் CJB வேதாகமத்தில், "being made holy, set apart for God" ("பரிசுத்தமாக்கப்படுதல், தேவனுக்காக ஒதுக்கி வைக்கப்படுதல்") என்றுள்ளது.

"பரிசுத்தமாகுதல்" (*hagiasmos*) என்பது புதிய ஏற்பாட்டில் இரண்டு முதன்மை வழிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாவது, இது தேவன் நம்மைத் தமது பிள்ளைகளாக்கி, உலகத்திலிருந்து பிரித்து வைத்தலைக் குறிக்கிறது (கொலோசெயர் 1:13, 14ஐக் காணவும்). எனவே இரட்சிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவரும், "பரிசுத்தமாக்கப்பட்டுள்ளனர்"; ஒவ்வொருவரும் "பரிசுத்தவானாக" உள்ளனர் (ரோமர் 1:2; 1 கொரிந்தியர் 1:2 ஆகிய வசனங்களைக் காணவும்). சகோதரர் வாலெஸ் அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டிருந்தவர்களை எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொண்டபோது, அங்கிருந்த எல்லாக் கிறிஸ்தவர்களும் எழுந்து நிற்க உரிமை கொண்டிருந்தனர்.

இருப்பினும், "பரிசுத்தமாகுதல்" என்ற வார்த்தை, புதிய ஏற்பாட்டில் இன்னொரு கருத்திலும் பயன்படுத்தப்படுகிறது. இது மனமாற்றத்தின்போது நிகழ்த்தப்படுகிற *தெய்வீக செயல்முறையை* மாத்திரம் அல்ல, ஆனால் வாழ்நாள் முழுவதிலும் நடைபெறும் ஒரு *அன்றாட செயல்முறையையும்* குறிக்கக்கூடும் எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர். தமது வாசகர்களை, "... பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" என்று வற்புறுத்தி வேண்டினார் (எபிரெயர் 12:14). கிறிஸ்தவர்களாகிய வேளையில், பவுலின் வாசகர்கள் தேவனால் "பிரித்து வைக்கப்"பட்டிருந்தனர். இப்போது அவர்கள் பிரித்து வைக்கப்பட்ட தனிநபர்களாக *வாழ்தல்* தேவையாயிருந்தது.

இந்த இரண்டாவது கருத்தில்தான் நமது வரைகுறிப்பில், நாம் "பரிசுத்தமாகுதல்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறோம். ரிச்சர்டு ரோஜர்ஸ் என்பவர், நீதிமானாக்கப்படுதல் என்பது *சரியாக்கப்பட்டிருத்தலைப் பற்றியதாக* உள்ளது, அதே வேளையில் பரிசுத்தமாகுதல் என்பது *சரியாக வாழ்தலைப்* பற்றியதாக உள்ளது என்று கூறினார்.[3] R. C. பெல் என்பவர் இதை வேறொரு வகையில் உரைத்தார். அவர் நீதிமானாக்கப்படுதல் என்பது "*நமக்காக* ஒரு தெய்வீகக் கிரியையாக" உள்ளது, அதே வேளையில் பரிசுத்தமாகுதல் என்பது

"*நமக்குள்* ஒரு தெய்வீகக் கிரியையாக" உள்ளது என்று கூறினார்.[4]

ரோமர் 6 மற்றும் 7ம் அதிகாரங்கள், பரிசுத்தமாகுதலின் *கொள்கை விதியை* நிலைநாட்டுகின்றன. இந்த அதிகாரங்கள் பரிசுத்தமாகுதல் "ஏன்" என்பதுபற்றிக் கவனத்தை ஒருமுகப்படுத்துகின்றன: கிறிஸ்தவர்கள் பரிசுத்த மான மற்றும் பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்வை வாழ வேண்டியது ஏன்? இந்த நிருபத்தின் பிற்பகுதியில் 12 முதல் 16ம் அதிகாரம் வரையில், பவுல் பரிசுத்த மாகுதலின் *நடைமுறைகள் பற்றிக்* கவனம் குவித்து, பரிசுத்தமாக்கப்பட்ட நபர் *எவ்வாறு* வாழ்கிறார் என்பதற்கு நடைமுறை உதாரணங்களைக் கொடுத்தார். நிருபத்தின் அந்தக் கடைசிப்பகுதியானது பின்வருவதுபோன்று தொடங்குகிறது: "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் *பரிசுத்தமும்* [பரிசுத்தமாக்கப்பட்டதும்] தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; ..." (12:1).

இந்தப் பாடத்தின்மீதான குறிப்புகள்

இந்தப்பாடம், 6:1-4 வசனப்பகுதியை விளக்கியுரைத்து பரிசுத்தமாகுதல் என்ற பாடக்கருத்திற்கு முன்னுரையாகப் பணியாற்றும். இந்த அதிகாரத்தின் முதல் பகுதியில் மரணத்தின்மீது பவுலின் வலியுறுத்தத்தின் காரணமாக, நான் இந்த எடுத்துரைப்பை, "தேவனுடைய இரங்கல் பத்தி" என்று அழைக்கிறேன்.[5] 6ம் அதிகாரத்தின் முதல் பதினோரு வசனங்களை முழுவதும் வாசித்து, "மரித்து," "மரித்தோர்," மற்றும் "மரணம்" என்ற வார்த்தைகளை அப்போஸ்தலர் எவ்வளவு அடிக்கடி பயன்படுத்தினார் என்பதைக் கவனியுங்கள்.

அமெரிக்க நாட்டில், உள்ளூர் செய்தித்தாளில் பொதுவாக, சமூகத்தில் சமீபத்தில் நடந்த இறப்புகள் பற்றி அறிவிக்கும் பகுதியான, இரங்கல் பத்தி இடம் பெறுவது வழக்கமாகும்.[6] எனது மனைவி, செய்தித்தாளில் முதலில் வாசிக்கும் பகுதிகளில் ஒன்றாக இது உள்ளது. நாங்கள் டெக்ஸாஸின் கிளெபர்ன் என்ற நகரில் வாழ்ந்தபோது, ஒருநாள் காலைப்பொழுதில் அவர்கள், டேவிட் ரோப்பர் மரித்தார் மற்றும் அவரது சவ அடக்கம் உள்ளூர் கிறிஸ்துவின் சபையின் கூடுகை இடத்தில் நடைபெறும் என்று செய்தித்தாளில் வாசித்துத் திகைப்படைந்தார். அது இன்னொரு டேவிட் ரோப்பர் என்பது தெரியவந்தது; ஆனால் இறந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் பத்தியில் அவர்கள் என் பெயரைக் காண்பித்தவேளை என்பது இன்னமும் மன உளைச்சல் தருவதாகவே இருந்தது.

இருப்பினும், பவுல் தமது பெயர் "தேவனுடைய இரங்கல் பத்தியில்" காணப்பட்டதுபற்றி மகிழ்ச்சி கொண்டார். மேலும், அவர் *உங்கள்* பெயரும் என் பெயரும் அந்த "இரங்கல் பத்தியில்" காணப்பட வேண்டும் என்று விரும்பினார் - ஏனென்றால் *பாவத்திற்கு மரித்தல்* என்பதே அவரது வலியுறுத்தமாக இருந்தது. நமது பாடத்தைத் தொடர்ந்து படிக்கையில், நான் அர்த்தப்படுத்துவது என்ன என்பதை நீங்கள் காண்பீர்கள்.

ஒரு கேள்வியும் ஒரு பதிலும் (6:1, 2)

ரோமருக்கு நிருபத்தை எழுதியதில், பவுல் அடிக்கடி மறுப்புகளை, பொதுவாக யூதர்களிடமிருந்து மறுப்புகளை முன்னெதிர்நோக்கினார். இந்த அதிகாரத்தில் அவர் திரும்பவும் மறுப்புகளை முன்னெதிர் நோக்கினார்,

மற்றும் அவரது "மறுப்பாளர்கள்" அனேகமாக ஒரு யூதப் பிண்ணனியைக் கொண்டிருக்கக்கூடும் (6:15; 7:7ஐக் காணவும்) - ஆனால், அவர் ஞானஸ்நானம் பெற்றிருந்த விசுவாசிகளுக்குத் தமது குறிப்புரைகளை உரைத்தார் (வசனங்கள 4-11ஐக் காணவும்).

ஒரு கேள்வி

இந்த அதிகாரம், "ஆகையால் என்னசொல்லுவோம்?" என்று தொடங்குகிறது (வசனம் 1அ). அதாவது, "முன்பு கூறப்பட்டவை குறித்து நாம் என்ன சொல்லு வோம்?" அவர் அப்போதுதான் "பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிக மாய்ப் பெருகிற்று" என்று அறிவித்திருந்தார் (5:20). இப்போது அவர் ஒரு பதிலை எதிர்நோக்கினர்: "கிருபை அதிகமாய்ப் பெருகும்படிக்கு நாம் தொடர்ந்து பாவத்தில் நிலைத்திருக்க வேண்டுமா?" (6:1ஆ). இந்தக் கேள்வியில் ஒரு பிறழ்வுநிலை தர்க்கம் உள்ளது: "பாவம் கிருபையைப் பெருகச் செய்வதால், அதிக பாவம் என்றால் அதிக கிருபை என்று அர்த்தமாகிறது. அதிக கிருபை நல்ல தாக உள்ளது என்பதால், அதிக பாவமும் நல்லதாகவே இருக்க வேண்டும்."

மக்கள் இதுபோல் விவாதம் செய்கின்றனரா? அப்படியே செய்கின்றனர் என்பது உறுதி. குறிப்பிடத்தக்க வரலாற்று உதாரணமாக, ருஷ்யாவின் சரீனா அலெக்சான்டிராவின்மீது மிகவும் நம்பிக்கையாக இருந்த ருஷ்யநாட்டுத் துறவியான கிரிகோரி ரஸ்புட்டின் (கி.பி. 1872-1916) என்பவரைக் கூறலாம்.[7] ரஸ்புட்டின் தனது தேவபக்தியற்ற வாழ்வையும் அவகேடான நடக்கையையும் பின்வருமாறு நியாயப்படுத்தினான்:

(1) பாவம் செய்கிறவர்களுக்கு அதிகம் மன்னிப்பு தேவைப்படுகிறது.
(2) மக்கள் மனந்திரும்புகிறபோது அவர்களைத் தேவன் மன்னிக்கிறார்.
(3) இவ்வாறு, அதிகமாய்ப் பாவம் செய்து, பின்பு மனந்திரும்புகிறவர் மற்ற பாவிகளைக் காட்டிலும் அதிகமாகத் தேவனுடைய மன்னிக்கும் கிருபையை மகிழ்வுடன் அனுபவிக்கிறார்.

இருப்பினும், வரலாற்றில் ஒரு உதாரணத்தைக் காணுதல் என்பது தேவையற்றதாக உள்ளது. கிளென் பேஸ் என்பவர், தம்மிடத்தில் மன எழுச்சியுடன், "நான் இப்போது கிருபையைக் கண்டுபிடித்துள்ளேன்!" என்று கூறிய ஒரு நண்பரைப் பற்றிக் கூறினார். அந்த மனிதர் பிற்பாடு தமது மனைவியைக் கைவிட்டுவிட்டார். அவர் கிளென்னிடத்தில், "ஆம், இது பாவம் என்று வேதாகமம் கூறுவதை நான் அறிவேன், ஆனால் அதைக் கிருபையானது மூடிவிடும்" என்று கூறினார்.[8]

வேதாகமம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலங்களிலும் மக்கள் இதேபோல விவாதம் செய்து கொண்டிருந்தனர் என்பது தெளிவு. யூதா, "நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாக புரட்டிய"வர்களைக் குறித்து எழுதினார் (யூதா 4; கலாத்தியர் 5:13ஐக் காணவும்). டயட்ரிக் பான்ஹோஃபர் என்பவர் தேவனுடைய இரக்கத்தைக் குறித்து அற்பமான எண்ணப்போக்கை விவரிக்க "மலிவான கிருபை"[9] என்ற சொற்றொடரை உருவாக்கினார். அவர் கிருபை என்பது விலைமலிவானதாக இருப்பதற்குப் பதில் விலையேறப்பெற்றதாக உள்ளது என்று எழுதினார்: அது "நாம் பின்பற்றும்படி நம்மை அழைப்பதால்

விலையேறப்பெற்றதாக உள்ளது,'' ஆனால் அது "இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும்படி நம்மை அழைப்பதால்" கிருபையாக நிலைத்துள்ளது.[10]

பவுலின் "எதிர்ப்பார்ப்பாளர்'' தேவபக்தியற்ற வாழ்வை நியாயப்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்தாரா? ஒருவேளை அவ்வாறிருக்கலாம் - ஆனால் அப்படிப்பட்ட விவாதம் பயன்படுத்தப்பட்டது அந்த அப்போஸ்தலரின் மதிப்பைக் குலையச் செய்ய முயற்சித்ததாக இருக்கும். 3ம் அதிகாரத்தில் பவுல் பின்வருமாறு வெடிப்பதை நாம் கண்டோம்: "நன்மை வரும்படிக்குத் தீமை செய்யலாம் என்று சொல்லலாமல்லவா?'' (வசனம் 8) (இது நம்மைப்பற்றித் தவறாகச் செய்யப்படுகிற அறிக்கை யாக மற்றும் நாம் இவ்வாறு கூறுகிறோம் என்று சிலர் உரிமைகோருவதாக உள்ளது). சிலர் கிருபை பற்றிய பவுலின் போதனை மக்களைப் பாவம் செய்யத்தூண்டுகிறது என்று தீர்மானித்தனர். அப்படிப்பட்ட விவாதத்தினால் அவர்கள், பவுல் தவறைப் போதிப்பவராக இருந்திருக்க வேண்டும் என்று முடிவு செய்தனர்.

ஒரு பதில்

"கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல் லுவோமா?'' என்ற கேள்விக்குப் பவுல் எவ்வாறு பதில் அளித்தார்? (6:1ஆ). அப்படிப்பட்ட விசாரணையின் மறைவான கருத்து அவரை அதிர்ச்சியடையச் செய்தது. "கூடாதே'' (வசனம் 1இ). பிலிப்ஸ் வேதாகமத்தில், "what a ghastly thought!" ("என்ன ஒரு கோரமான சிந்தனை!") என்றுள்ளது.

ரோமர் 6ல், பவுல் கிறிஸ்தவர்கள் பாவத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதற்குப் பல காரணங்களை முன்வைத்தார். கிறிஸ்தவர்கள் "பாவத்திற்கு மரித்துள்ளனர்" என்பது அவற்றில் முதல் காரணமாக உள்ளது. பவுல், "பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?'' என்று கேட்டார் (வசனம் 2).

"இரண்டு ஆதாம்கள்'' என்ற பாடத்தில் நாம் "மரணம்'' (*thanatos*) என்ற வார்த்தையின் அர்த்தம் பற்றிக் கலந்துரையாடினோம். ரோமர் 6ல் பவுல் உடல்ரீதியான மரணத்தை மனமாற்றத்துடன் ஒப்பிட்டு, "மரணம்'' என்ற வார்த்தைக்கு ஒரு உருவகத்தைப் பயன்படுத்தினார். இறந்துபோன மிருகம் ஒன்றைப் பற்றி நினைத்துப் பாருங்கள். நீங்கள் அந்த மிருகத்திற்கு மிகவும் பிரிய மான உணவை அதன் முன்பாக வைக்கக்கூடும், ஆனால் அது பதில்செயல் செய்வ தில்லை. அதுதான் *இறந்துபோயிருக்கிறதே*. அதுபோலவே, ஒரு கருத்தமைவில், *நீங்கள்* மரித்திருக்கிறீர்கள் மற்றும் இதனால் பாவம் உங்களைத் தேவனிடத்தில் இருந்து புறம்பே வசீகரிக்க முயற்சிசெய்கிறபோது நீங்கள் அதற்குப் பதில்செயல் செய்யக்கூடாது.

எல்லா உருவகங்களைப் போலவே, இந்த உருவகமும் மிகவும் அதிகமாக வலியுறுத்தப்படக் கூடாது. இறந்துபோன ஒரு மிருகம் ஒரு தூண்டலுக்குப் பதில்செயல் செய்யத் *திராணியற்றதாக* உள்ளது, ஆனால் ஒரு கிறிஸ்தவர் சோதனைக்குப் பதில்செயல் செய்யத் திராணியற்றவராக இருக்கிறார் என்று கூற பவுல் நோக்கங்கொண்டிருக்க வில்லை. அதற்கு நேர்மாறாக, அவர் தமது கிறிஸ்தவ வாசகர்களுக்கு, அவர்கள் பாவத்திற்கு மரித்திருந்த*படியால்*, அவர்கள் சாவுக்கேதுவான தங்கள் சரீரங்களில் பாவம் ஆளுகை *செய்யும்படிக்கு* அதன் இச்சைகளுக்குக் கீழ்ப்படியக்கூடாது என்று கூறினார். அவர்கள் தங்கள் சரீரங்களின் அவயவங்களை அநீதியின் கருவிகளாக *முன்வைக்கக் கூடாது* (வசனங்கள் 11-13). இந்தச் சூழ்நிலையானது அடிக்கடி

பின்வருமாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது: “நாம் பாவத்திற்கு மரித்திருக்கிறோம், ஆனால் பாவம் நமக்கு மரித்திருக்கவில்லை.”

கிறிஸ்தவர்கள் பாவம் செய்ய *இயலாது* என்று பவுல் கூறவில்லை, ஆனால் அவர்கள் பாவம் *செய்யக்கூடாது* என்றே அவர் கூறினார். பாவம் நிறைந்த வாழ்வுநடையானது, பாவத்திற்கு மரித்துள்ள புதிய நிலைக்குச் *சீர்பொருத்த மற்றதாக* உள்ளது. ஜிம் ஹில்ட்டன் என்பவர், “பல கிறிஸ்தவர்கள் [பாவத்திற்கு] மரித்துள்ளனர், ஆனால் அதை அவர்கள் அறிந்திருப்பதில்லை. அதனால்தான் ... அவர்கள் அதைக் காண்பிப்பதில்லை” என்று எழுதினார்.[11]

இந்த சந்தர்ப்பப்பொருளில் பவுல் மரணம் என்ற உருவகத்தைப் பயன்படுத்தியது ஏன்? இயேசுவின் சிலுவைக்கு மனமாற்றத்தைப் பிணைப்பதே அவரது முதன்மை நோக்கமாக இருந்தது. கிறிஸ்து பாவிகளுக்*காக* மரித்தது போலவே (5:6-8), நாம் பாவ*த்திற்*கு மரிக்க வேண்டும். கிருபையினால் இரட்சிக்கப்பட்டவரின் நிலையில் ஏற்படும் நாடகத்துவமான மாற்றத்தை அடிக்கோடிட்டுக் காண்பிப்பதற்காகவும் பவுல் இந்த உருவகத்தைப் பயன்படுத்தி யிருக்கலாம். உடல்ரீதியான மரணத்தினால் செயல்விளைவு ஏற்படுத்துதல் என்பதைக் காட்டிலும் அதிகம் நாடகத்துவமான மற்றும் முற்றிலுமான ஒரு மாற்றம் பற்றி நினைத்துப் பார்த்தல் என்பது கடினமாயிருக்கும்.

ஒரு செயலும் ஒரு விளைவும் (6:3, 4)

அது நம்மை ஒரு முக்கியமான கேள்விக்குக் கொண்டு வருகிறது: நாம் *எவ்வாறு* மற்றும் *எப்போது* “பாவத்திற்கு மரிக்கிறோம்”? பல காரணிகள் குறிப்பிடப்படலாம். நமது பாவங்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்தன என்பதை நாம் உணர்ந்தறிகிறபோது பாவத்தைக் குறித்த நமது மாற்றம்பெற்ற எண்ணப்போக்கைப் பற்றி நாம் பேசமுடியும் (1 கொரிந்தியர் 15:3ஐக் காணவும்). விசுவாசமும் மனந்திரும்புதலும், தேவபக்தியுள்ள வாழ்வை வாழ்வதற்கான விருப்பத்தை எவ்வாறு உண்டாக்குகின்றன என்று நாம் கலந்துரையாடமுடியும் (நடபடிகள் 26:20ஐக் காணவும்). நிச்சயமாகவே, நாம் தேவனுடைய ஆவியானவர் எவ்வாறு, “சரீரத்தின் செய்கைகளை அழிப்பதில்” உதவுகிறார் என்பதைப் பற்றிக் குறிப்பிடமுடியும் மற்றும் அதைக் குறிப்பிட வேண்டும் (ரோமர் 8:13).

ஒரு செயல்

இருப்பினும், பவுல் தமது சிந்தையில் குறிப்பிட்ட சில விஷயத்தைக் கொண்டிருந்தார். அவர், “நாம் பாவத்திற்கு மரித்து” என்று கூறியபோது, தாம் எதை அர்த்தப்படுத்தினார் என்பது பற்றிச் சந்தேகத்திற்கு இடமாக அவர் எதையும் விட்டு வைக்கவில்லை. அவர் உடனடியாக சிலுவைக்கு நமது தொடக்கப் பதில் செயலின் உச்சநிலைக்குச் சென்றார்: அது ஞானஸ்நானம்.

> *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம் (6:3, 4).*

ஜான் R. W. ஸ்டாட் என்பவர், "நாம் பாவத்திற்கு மரித்துள்ள *வகையான* நமது ஞானஸ்நானமானது நம்மைக் கிறிஸ்துவின் மரணத்தில் அவருடன் ஒன்றிணைத்துள்ளது" என்று குறிப்பிட்டார்.[12]

இந்த நிருபத்தில் இவ்விடத்தில்தான் முதன்முறையாக "ஞானஸ்நானம்" என்ற வார்த்தையை நாம் காண்கிறோம், எனவே வார்த்தை பற்றிய ஒரு சுருக்கமான படிப்பு இங்கு முறையானதாக உள்ளது. "ஞானஸ்நானம்" என்பது *baptisma* அல்லது *baptismos* என்ற கிரேக்கச் சொற்றொடரிலிருந்து வருவதாக இருக்கையில், "ஞானஸ்நானப்படுத்துதல்" என்பது *baptizo* என்ற வார்த்தையிலிருந்து வருவதாக உள்ளது. இவை ஒவ்வொன்றிற்கும், "முழுக்காட்டுதல்" என்று அர்த்தப்படும் *bapto* என்பது வேர் வார்த்தையாக உள்ளது. *Baptizo* என்பது "முழுக்காட்ட அமிழ்த்த" என்று அர்த்தப்படுகிறது. *Baptisma* என்பது "முழுக்காட்டுதல்" என்று அர்த்தப்படுகிறது மற்றும் *baptismos* என்பது முழுக்காட்டும் *செயலைக்* குறிக்கிறது.[13] "வரலாற்றாளர்கள், தொடக்ககால சபையில் முழுக்காட்டப்படுதல் என்பதே ஞானஸ்நானத்தின் வகையாக இருந்தது என்பதில் கருத்து ஒருமைப்படுகின்றனர்."[14] இவ்வாறாக 6:3, 4ஐ CJB வேதாகமம் பின்வருமாறு மொழிபெயர்க்கிறது: "Don't you know that those of us who have been *immersed* into the Messiah [Jesus] have been *immersed* into his death? Through immersion into his death we were burried with him ..." ("மேசியா [இயேசு]வுக்குள்ளாக முழுக்காட்டப்பட்ட நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக முழுக்காட்டப் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? ... அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் முழுக்காட்டுதலினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்."

இது ஞானஸ்நானத்தின் தனிச்சிறப்புபற்றிய வல்லமைநிறைந்த வசனப்பகுதியாக இருப்பதால், ஒரு சில எழுத்தாளர்கள், "ஆவிக்குரிய" ஞானஸ்நானம், அல்லது ஒருவேளை "ஆவியானவருக்குள்ளாக" ஞானஸ்நானம் பெறுதல் என்பதை இவ்வசனங்கள் குறிப்பிடுவதாக ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். இருந்தபோதிலும், புகழ்பெற்ற கல்வியாளர்கள் பிரதான கட்டளையின் ஞானஸ்நானமாகிய *தண்ணீர்* ஞானஸ்நானத்தையே பவுல் தமது சிந்தனையில் கொண்டிருந்தார் என்று ஒப்புக்கொள்கின்றனர். எடுத்துக்காட்டாக, டக்ளஸ் J. மூ என்பவர், "கிறிஸ்தவத் தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிப்பதற்குப் பவுல் வழக்கமாக *baptizo* என்ற வினைச்சொல்லையே பயன்படுத்துகிறார். ... மேலும் 4ம் வசனத்தில் உள்ள 'baptism' (Gk. *baptisma*) என்ற பெயர்ச்சொல்லானது எப்போதுமே ஏறக்குறைய இந்த அர்த்தத்தையே கொண்டுள்ளது" என்று எழுதினார்.[15] ஸ்டாட் என்பவர் கூடுதலாக, "எப்போதெல்லாம், ஞானஸ்நானம் நடைபெறும் பொருள் பற்றிய குறிப்பிடுதலின்றி 'baptism' மற்றும் 'being baptized' என்ற வார்த்தைகள் வருகின்றனவோ, அப்போதெல்லாம் அது தண்ணீர் ஞானஸ்நானம் பற்றிய குறிப்பாகவே உள்ளது" என்று கூறினார்.[16] இவ்வாறாக, இவ்வசனப்பகுதியில், "baptized" என்பதை நாம் "முழுக்காட்டப்படுதல்" என்று மொழிபெயர்க்கக்கூடும் என்பது மாத்திரமல்ல, ஆனால் அத்துடன் நாம் "[தண்ணீருக்குள்]" என்ற வார்த்தையையும் சட்டப்பூர்வமாகக் கூட்ட முடியும்.

சில எழுத்தாளர்கள், இந்த இடத்தில் தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பவுல் அறிமுகப்படுத்தியது பற்றி வியப்படைகின்றனர். ஒருவர், "அவர், 'கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக *விசுவாசம் கொண்டுள்ள* நாமனைவரும் அவருடைய

மரணத்துக்குள்ளாக ஒன்றிணைக்கப்பட்டுள்ளோம்' என்றும் 'நமது *விசுவா சத்தின்* மூலமாக நாம் அவருடன் அடக்கம்பண்ணப்பட்டோம்' என்றும் கூறுவாரென எதிர்பார்த்திருக்கலாம்" என்று கூறினார்.[17] இருப்பினும், 1 முதல் 5 வரையிலான வசனங்களில் "விசுவாசம்" என்பதை "விசுவாசம் மாத்திரம்" என்று விளக்கம் அளித்திருப்பவர்களுக்கு மாத்திரமே, இவ்விடத்தில் ஞானஸ்நானத்தை அறிமுகம் செய்வித்தது வியப்பளிப்பதாக இருக்கும். இரட்சிக்கும் விசுவாசம் என்பது கீழ்ப்படிதலையும் உள்ளடக்குகிறது (ரோமர் 1:5; 16:26) என்பதைப் புரிந்துகொண்டிருப்பவர்களுக்கு, விசுவாசத்தினுடைய வெளிப்பாடாகப் பவுல் ஞானஸ்நானத்தைப் பற்றிப் பேசுவார் என்பது வியப்பளிப்பதாக இருக்காது. பிரதான கட்டளையைக் கொடுத்ததில், விசுவாசம், ஞானஸ்நானம் மற்றும் இரட்சிப்பு ஆகியவற்றை இயேசு ஒன்றிணைத்தார்: "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:16).

ஞானஸ்நானத்தைச் சுற்றிச்சூழ்ந்துள்ள நேர்மாறுகளில் மிக அதிக மானவை, தேவன் கொடுத்த இந்த கட்டளை குறித்து மக்கள் சென்றுள்ள மிக அதிகமான தூரத்தில் இருந்து கிளைத்துள்ளன. கத்தோலிக்கர்கள் ஒரு அதிக முனைக்குச் சென்று, ஞானஸ்நானத்தை "புனிதச்சடங்கு" - அதாவது இதில் பங்கேற்பவர்களுக்குக் கிருபையைக் கொண்டுவரும் ஒரு சடங்காச்சாரம், இது விசுவாசத்திலிருந்து பிரிக்கப்பட்டதாகவும் தனித்து நிற்பதாகவும் உள்ளது - என்றாக்கியுள்ளனர். அவர்கள் "குழந்தைகளை" ஞானஸ்நானப்படுத்தி அந்தக் குழந்தைகளின் ஆத்துமாக்களை "இருட்டுஸ்தலத்தில்" இருந்து இரட்சிக்க முடியும் என்று நம்புகின்றனர். புரொட்டஸ்டன்டுகள் இன்னொரு அதிக முனைக்குச் சென்று, ஞானஸ்நானம் என்பது ஒரு அடையாளம் என்பதைவிடச் சற்றே அதிகமானதாக மாத்திரம் உள்ளது என்று நினைக்கின்றனர். நான் ஒரு இளம் பையனாக இருந்தபோது, நாமகரணக்கூட்டப் பிரசங்கியார்கள், ஞானஸ்நானத்தை "உள்ளான சுத்திகரிப்புக்கான புறம்பான ஒரு அடையாளம்" என்று அடிக்கடி குறிப்பிட்டனர். இந்த இரு அதிக முனைத் தூரங்களுக்கு இடையில், ஞானஸ்நானம் பற்றி வேதாகமத்தின் நிலைப்பாடு பின்வரு மாறு உள்ளது: இது *விசுவாசத்தின்* வெளிப்பாடாக உள்ளது (அந்த விசுவாசம் இல்லாத நிலையில் இதற்கு மதிப்பு இல்லை) மற்றும் இது இரட்சிப்புக்குத் தேவனால் தரப்பட்ட *நிபந்தனையாக* உள்ளது. 6:3, 4ஐக் காட்டிலும் அதிகமாக வேதாகம ஞானஸ்நானம்பற்றி மிகச்சிறந்த விளக்கம்தரும் வேதவசனம் வேறு எதுவும் இருப்பதில்லை.

ஒரு விளைவு

இவ்வசனப்பகுதி, "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் ..." என்று தொடங்குகிறது (வசனம் 3அ). பவுல் (இந்த நிருபத்தை எழுதிய வேளையில்) ஒருக்காலும் ரோமாபுரிக்குச் சென்றிருந்த தில்லை (1:13), ஆனால், அவர் ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றிருந்ததாக கணக்கிட்டார். இது, இயேசுவில் விசுவாசம் கொண்டிருப்பவர்களுக்கு ஞானஸ்நானம் என்பது பொதுவான பதில்செயலாக இருந்தது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. F. F. புரூஸ் என்பவர், "பவுலின் எழுத்துக்களில், ஞானஸ்நானம் பற்றிய இந்த மற்றும் பிறகுறிப்புகளிலிருந்து,

அவர் ஞானஸ்நானத்தைக் கிறிஸ்தவ வாழ்வின் 'விருப்பத்தேர்வான ஒரு உபரி' என்று மதிக்கவில்லை என்பது தெளிவாகிறது" என்று எழுதினார்.[18] புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில், "ஞானஸ்நானம் பெற்றிராத கிறிஸ்தவர்" என்பது போன்ற விஷயம் இருந்ததில்லை.

பவுல், "ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும்" என்று குறிப்பிட்ட போது, தம்மையும் அவர் ஞானஸ்நானம் பெற்றிருந்தவர்களுடைய எண்ணிக்கையில் உள்ளடக்கினார் என்பதைக் கவனியுங்கள். முப்பது அல்லது அதற்குச் சற்றேறக்குறையலான வருடங்களுக்கு முன்பு, ஏவுதல் பெற்றிருந்த ஒரு பிரசங்கியார் அவரிடத்தில், "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம்பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்று கூறியிருந்தார் (நடபடிகள் 22:16). அந்த வேளையில், "அவர் எழுந்திருந்து ஞானஸ்நானம் பெற்றார்" (நடபடிகள் 9:18).

ஞானஸ்நானம் பெற்றிருந்த தம்மையும் மற்றவர்களையும் குறிப்பிட்ட அவர், "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் ..." என்று கூறினார் (ரோமர் 6:3).[19] "கிறிஸ்துவுக்குள்" இருத்தல் என்பது இயேசுவுடன் தனிப்பட்ட உறவைக் கொண்டிருத்தல் என்று அர்த்தப்படுகிறது (யோவான் 15:5ஐக் காணவும்). கலாத்தியாவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல், "ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" என்று கூறினார் (கலாத்தியர் 3:27). இயேசுவுடனான இந்த தனிப்பட்ட, இரட்சிக்கும் உறவு ரோமர் 6ம் அதிகாரம் முழுவதிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது:

> வசனம் 3 - "கிறிஸ்து இயேசு*வுக்குள்ளாக* ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை ... ."
> வசனம் 4 - "... ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்து*வுடனேகூட* அடக்கம் பண்ணப்பட்டோம்."
> வசனம் 5 - "... *அவருடன்* இணைக்கப்பட்டிருக்கிறோம்."
> வசனம் 6 - "... *அவரோடுகூடச்* சிலுவையிலறையப்பட்டது. ..."
> வசனம் 8 - "... கிறிஸ்து*வுடனேகூட* நாம் மரித்தோமானால், அவரு*டனேகூடப்* பிழைத்தும் இருப்போம்."

வில்லியம் பார்க்ளே என்பவர், "நாம் காற்றினுள்ளும், காற்று நம்முள்ளுமிருந்தால் ஒழிய, நமது உடல்ரீதியான வாழ்வை வாழ இயலாது; [அதுபோலவே] நாம் கிறிஸ்துவுக்குள்ளும் கிறிஸ்து நமக்குள்ளுமிருந்தால் ஒழிய [கொலோசெயர் 1:27ஐக் காணவும்], நாம் தேவனுடைய வாழ்வை வாழ இயலாது" என்று எழுதினார்.[20]

3ம் வசனத்தின் இந்த இடம்வரையில், பவுல் தமது வாசகர்கள் ஏற்கனவே அறிந்திருந்ததையே கூறியிருந்தார். அவர் இந்த வாக்கியத்தை முடிக்கையில், அவர்கள் சிந்தித்திராத சிலவற்றை அவர்களுக்கு அவர் கூறினார்: அதாவது, கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற அனைவரும், "அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருந்தனர்" (வசனம் 3இ). இவ்வாறு பவுல், இந்தக் கிறிஸ்தவர்கள் எவ்வாறு மற்றும் எப்போது "பாவத்திற்கு

மரித்தனர்" என்பது பற்றிய தமது கலந்துரையாடலைத் துவக்கினார். அவர்கள் ஞானஸ்நானம் பெற்றபோது, அவர்கள் இயேசுவின் மரணத்திலும் அதன் விளைவுகளிலும் பங்கேற்றனர்.

பவுல், 1 கொரிந்தியர் 15ல், கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவையே சுவிசேஷத்தின் இருதயம்போன்ற மையப் பகுதி யாக உள்ளது என்று எழுதினார்:

> *அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறு படியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; ...*
>
> *நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங் களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து (1 கொரிந்தியர் 15:1-4).*

சுவிசேஷச் செய்தியின் கூறுகள் பின்வரும் வரைபடத்தில் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றன. "ம" என்பது "மரணம்" என்பதற்கானதாகவும், "அ" என்பது "அடக்கம்" மற்றும் "உ" என்பது "உயிர்த்தெழுதல்" என்பவற்றிற் கானவைகளாகவும் உள்ளன.



ரோமர் 6ல், பவுல் நமது ஞானஸ்நானம் செயல்விளைவில் எவ்வாறு கணநேர நிகழ்ச்சிகளின் மறுஜென்மமாக உள்ளது என்று காண்பித்தார். முதலாவது, நாம் கீழே கருத்தாகத் தெரிவித்துள்ளபடி, இயேசுவின் மரணத்தில் பங்கேற்கிறோம்:



நாம் பாவத்தில் மரித்திருந்தோம் (எபேசியர் 2:1), ஆனால் ஞானஸ்நானத்தில், நாம் பாவத்திற்கு மரிக்கிறோம். 6ம் வசனத்தில் பவுல், "நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டது" என்று கூறினார்.

இயேசு மரித்தபின்பு, அவர் அடக்கம்பண்ணப்பட்டார். பவுல் பின்வரும்

இணைவைத் தரவழைத்தார்: "அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (வசனம் 4இ). பெரும்பான்மையான எழுத்தாளர்கள், அடக்கம் பற்றிய உருவகமானது தண்ணீருக்குள் நாம் அமிழ்த்தப்படுதலுக்கு இணையாக உள்ளது என்று ஒப்புக்கொள்கின்றனர். ஜேம்ஸ் மெக்நைட் என்பவர், "ஞானஸ்நானத்தில் … ஞானஸ்நானம் பெறுபவர் தண்ணீருக்குக் கீழே அடக்கம்பண்ணப்படுகிறார்" என்று எழுதினார்.[21] தெளித்தலை நடைமுறைப்படுத்துபவர்களும்கூட, "தெளித்தல் என்பது அடக்கத்தின் அடையாளத்துவத்திற்குத் தன்னைக் கொடுப்பதில்லை"[22] என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும்.

நாம் ஞானஸ்நானத்தின் தண்ணீரில் அடக்கம்பண்ணப்படும்போது, பாவத்திற்கு மரித்தல் என்ற செயல்முறை நிறைவுபடுத்தப்படுகிறது:



தண்ணீருக்குள்ளான இந்த அடக்கம்பண்ணப்படுதலானது "மரணத்திற்குள்ளானதாக" உள்ளது என்று பவுல் வலியுறுத்தினார் (வசனம் 4ஆ), இது நாம் செய்யும் விஷயம் மற்றும் கிறிஸ்து செய்த விஷயம் ஆகியவற்றிற்கு இடையிலான நெருங்கிய தொடர்பைத் திரும்பவும் முக்கியத்துவப்படுத்துகிறது. "அவருக்கு நடந்த எல்லாம் நமக்கு நடக்கிறது என்று கருதப்படலாம்."[23]

மூன்றாம் நாளில், கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தார். இவ்வாறாகப் பவுல், "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு," என்று தொடர்ந்தார் (வசனம் 4அ, ஆ). கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டதுபோல, நாமும் ஞானஸ்நானத்தின் "தண்ணீர்க் கல்லறையில்" இருந்து உயிர்ப்பிக்கப்படுகிறோம். கொலோசெயருக்குப் பவுல், "ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" என்று கூறினார் (கொலோசெயர் 2:12).

இந்த மறுசெயல் விளக்கப்படுத்தலின் நிறைவானது பின்வருமாறு சித்தரிக்கப்பட்டுள்ளது:



ஞானஸ்நானம் பற்றிப் பவுல் ரோமர் 6ல் போதித்ததன்மீது ஆண்டர்ஸ் நைக்ரென் என்பவர் பின்வருமாறு விளக்கம் அளித்தார்:

> ஞானஸ்நானம் பெறுபவர் தண்ணீருக்குள் முழுக்காட்டப்படும்போது, அந்த செயலானது "கிறிஸ்துவுடன்" அடக்கம்பண்ணப்படுதலை அடையாளப்படுத்துகிறது; மற்றும் அவர் தண்ணீல் இருந்து வெளியே வரும்போது, அது "கிறிஸ்துவுடன்" உயிர்த்தெழுதலை அடையாளப்படுத்துகிறது. ஆனால் ஒருவர் அந்தக் காரணத்திற்காக, ஞானஸ்நானம் பற்றிய பவுலின் கண்ணோட்டத்தை, அவ்வார்த்தை பொதுவாகப் பயன்படுத்தப்படுகிற கருத்தில் "அடையாளத்துவம்" என்ற வகையில் பண்புபடுத்தினால், அது முற்றிலும் தவறான பிரதிநிதித்துவப்படுத்துதலாக இருக்கும். ஏனெனில் பவுலின் கூற்றுப்படி, ஞானஸ்நானத்தில் நாம் அடையாளத்துவப் பிரதி நிதித்துவப்படுத்துதல்களுடன் மாத்திரமின்றி, உண்மை நிலைகளுடனும் செயல்பட வேண்டியுள்ளது. ஞானஸ்நானம் அடையாளத்துவப்படுத்தும் விஷயம் உண்மையிலேயே *நடைபெறுகிறது,* மற்றும் ஞானஸ்நானத்தின் மூலம் மிகச்சரியாக நடைபெறுகிறது. … [நாம்] கிறிஸ்துவின் சரீரத்தில் முறைப்படியான உறுப்பினர்களாக இதற்கு முன்பு இருந்ததில்லை; ஆனால் ஞானஸ்நானத்தின் மூலம் நாம் அவ்வாறு ஆனோம் மற்றும் இனிநாம் பிரிக்க இயலாத அளவுக்கு தலையுடன் உறவுகொண்டுள்ளோம்.[24]

நான் முன்பே கூறியபடி, 6:3, 4 ஞானஸ்நானம் மற்றும் நமது இரட்சிப் பிற்குத் தேவனுடைய ஏற்பாட்டில் அதன் இடம் ஆகியவற்றைப் பற்றிய வல்லமைநிறைந்த வசனப்பகுதியாக உள்ளது. பெரும்பான்மையான விளக்கவுரையாளர்கள் அவ்வசனப்பகுதியின் வல்லமையை மறுக்க முடிவ தில்லை. அவர்கள் ஞானஸ்நானம் விசுவாசத்தின் பதில்செயலில் ஒரு *அத்தியா வசியமான* பாகமாக உள்ளது என்று கூறத்தயங்குகின்றனர், ஆனால் பலர் அப்படிப்பட்ட விஷயம் உண்மையானது என்று ஒப்புக்கொள்வதற்கு வெகு அருகாமையில் உள்ளனர்:

- "புதிய ஏற்பாடானது தண்ணீர் ஞானஸ்நானத்தை, பெரிய அனுபவத்தின் ஒரு கூறாக முன்னிறுத்துகிறது, இதை [ஜேம்ஸ்] டன் என்பவர் 'மனமாற்றத்திற்கான தொடக்கநிலை' என்று அழைக்கிறார்" (டக்ளஸ் J. மூ).[25]
- "கிறிஸ்துவுக்குள் விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் என்பவை, முழுமையானதின் பகுதிகளே தவிர, அவை இரண்டு தனித்தனி அனுபவங்கள் அல்ல" (F. F. புரூஸ்).[26]
- "[புதிய ஏற்பாட்டு எழுதப்பட்டுக்கொண்டிருந்த] காலத்தில் ஞானஸ்நானமும் மனமாற்றமும் ஒரு நிகழ்வின் இருபாகங்கள் என்று கருதப்படும் அளவுக்கு, மனமாற்றத்தை ஞானஸ்நானம் மிகநெருக்கமாகப் பின்தொடர்ந்தது ..." (வால்ட்டர் W. வெஸ்ஸெல்).[27]

இருப்பினும், ஞானஸ்நானத்தின் அத்தியாவசியத்தை நிரூபித்தல் என்பது நமது வேதவசனப்பகுதியில் பவுலின் நோக்கமாக இருக்கவில்லை; அவரது நிருபத்தின் தொடக்ககால வாசகர்களில் எவரும் ஞானஸ்நானத்தின் நோக்கம் பற்றிக் கேள்வி கேட்கவில்லை. நமது பாவங்கள் கழுவப்பட்டன என்று நாம் அறிந்து கொண்டதானது, நாம் தேவபக்தியுள்ள வாழ்வை வாழும்படி நம்மை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதே பவுலின் கருத்தாக இருந்தது. நாம் "புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்து[28] கொள்ளும்படிக்கு" நாம் ஞானஸ்நானத் தண்ணீரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டோம் என்று அவர் கூறினார் (வசனம் 4ஆ).

நாம் "கிறிஸ்துவுக்குள்" ஞானஸ்நானப்படுத்தப்பட்டோம் (வசனம் 3அ). "கிறிஸ்துவுக்குள்" நாம் "புதுசிருஷ்டியாயிருக்கி[றோம்]; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2 கொரிந்தியர் 5:17). நாம் தேவனுடன் புதிய உறவுகொண்டிருக்கிறோம்; நாம் புதிய ஆசீர்வாதங்களைக் கொண்டிருக்கிறோம்; நாம் புதிய வல்லமையைக் கொண்டிருக்கிறோம். "எல்லாம் புதிதாயின" (2 கொரிந்தியர் 5:17)! எத்தியோப்பிய மந்திரி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபின்பு, "சந்தோஷத்தோடே தன் வழியே போ[னதில்]" வியப்பு எதுவுமில்லை (நடபடிகள் 8:39).

நாம் "புதிய ஜீவனை" கொண்டுள்ளதால், நாம் அதைப்போல் *செயல்பட* வேண்டும். உறவுமுறையில் மாற்றம் என்பது நமது வாழ்வில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். NEB வேதாகமம், நாம் "நமது பாதங்களை வாழ்வின் புதிய பாதையில் அமைத்தல்" அவசியம் என்று குறிப்பிடுகிறது (வசனம் 4ஆ). கொலோசெயர்களின் ஞானஸ்நானம் குறித்துப் பவுல் அவர்களுக்குப் பின்வருமாறு எழுதினார்,

> நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது (கொலோசெயர் 3:1-3).

கிளென் பேஸ் என்பவர் குறிப்பிட்ட ஒரு பெண்ணின் ஞானஸ்நானம் பற்றிக்கூறினார். அவளை அவர் தண்ணீரிலிருந்து எழுப்பியபோது, அவள் தனது

கைகளை வானத்தை நோக்கி உயர்த்தி, "தேவனே, எனது எஞ்சிய நாட்களில் நான் விசுவாசத்தில் நிலைத்திருக்க உதவிசெய்யும்!" என்று கூறினாள்.[29] அது நாம் ஒவ்வொருவரும் ஜெபிக்க வேண்டிய ஜெபமாக உள்ளது.

முடிவுரை

நமது அடுத்த பாடத்தில், நாம் நமது ஞானஸ்நானத்தின்போது என்ன நடைபெறுகிறது என்பது பற்றியும் இது நமது வாழ்வில் கொண்டிருக்க வேண்டிய செயல்விளைவுகள் பற்றியுமான நமது கலந்துரையாடலை விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடங்குவோம். இப்போதைக்கு, நாம் 6ம் வசனத்தை முன்னதாகக் கண்ணோட்டமிடுவோமாக: "... நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்." அவ்வசனத்தின் உணர்வுகள், கலாத்தியர் 2:20ல் பவுலின் வார்த்தைகளில் பிரதிபலிக்கிறது: "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக் கிறார். ..."

தேவபக்தியற்ற ஒழுக்கக்கேடான வாழ்வை வாழ்ந்துகொண்டிருந்த ஒரு மனிதர் இயேசுவில் விசுவாசம் கொள்ள வந்தார். அதன் விளைவாக, அவரது வாழ்வு மாறிற்று. ஒருநாள், அவர் தெருவில் நடந்து கொண்டிருந்தபோது, கடந்தகாலத்தில் தான் வேசித்தனம் செய்திருந்த ஒரு பெண்ணைச் சந்தித்தார். அந்தப்பெண் அவரைநோக்கிக் கவர்ந்திழுக்கும் வகையில் புன்னகைத்தாள். அதற்கு அவர் பதில்செயல் செய்யத் தவறியபோது, அவள் "என்னை உங்களுக்குத் தெரியவில்லையா? அது *நான்தான்*" என்று சொன்னாள். அவரோ புறம்பே நடந்துகொண்டே, "ஆம், ஆனால் இனி *நானல்ல*" என்று கூறினார்.[30]

"தேவனுடைய இரங்கல் பத்தி" என்ற நமது இந்தப்பாடத்தை, நாம் ஒரு கேள்வியுடன் முடிப்போம்: "*உங்கள்* பெயர் 'தேவனுடைய இரங்கல் பத்தியில்' இடம்பெற்றுள்ளதா?" நீங்கள் மனஸ்தாபப்பட்ட விசுவாசி என்ற வகையில் ஞானஸ்நானம் பெற்று உங்கள் பாவத்திற்கு மரித்திருக்கிறீர்களா? நீங்கள் வேதவசனத்தின்படியான ஞானஸ்நானம் பெற்றிருந்தால், தேவன் புதிதான ஜீவனைக் கொடுத்துள்ள வகையில் *வாழ்ந்திருக்கிறீர்களா?* உங்கள் பெயர் "தேவனுடைய இரங்கல் பத்தியில்" இல்லையென்றால், நீங்கள் இன்றே கர்த்தரிடம் வரும்படி - அல்லது அவரிடத்தில் திரும்பும்படி - நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

பிரசங்கியார்களுக்கும் போதகர்களுக்கும் குறிப்புகள்

இந்தப் பாடமும் இதைத்தொடர்ந்து வரும் இரண்டு பாடங்களும் ஒரு பாடமாக ஒன்றிணைக்கப்பட முடியும், இதற்கு இந்தப் பாடத்தின் அல்லது இதைத் தொடர்ந்து வரும் பாடத்தின் தலைப்பு மற்றும் ஆய்வுக்கருத்துக்களைப் பயன்படுத்தலாம். ரோமர் 6 முழுவதும் அல்லது பகுதிகளும் முழுமையாகப் படிக்கப்படுவதற்குக் கூடுதலான வழிகளும் உள்ளன. "நீங்கள் பாவம் செய்யக்கூடாது என்பதற்கான காரணங்கள்" என்ற தலைப்பில் நீங்கள் போதிக்க அல்லது பிரசங்கிக்க முடியும். காய் ரோப்பர் என்பவர், இந்த அதிகாரத்தின் மீதான தமது பிரசங்கத்திற்கு "மாபெரும் மாற்றம்"[31]

என்று தலைப்புக்கொடுத்தார். சில எழுத்தாளர்கள் "அறிதல்" என்ற வார்த்தைக்கு வலியுறுத்தம் அளிக்கின்றனர்: "நீங்கள் அறியவேண்டிய நான்கு விஷயங்கள்" (6:3, 6, 9, 16 ஆகியவற்றைக் காணவும்). "இல்லாத மற்றும் ஒருக்காலும் இருக்கக்கூடாத மூன்று விஷயங்கள்" (6:1, 2, 15; 7:7 ஆகியவற்றைக் காணவும்) என்பது பற்றிப் பேசுதல் இன்னொரு அணுகுமுறையாக இருக்கலாம்.

சில எழுத்தாளர்கள், கிறிஸ்தவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஞானஸ்நானம் என்ற வழக்கமானது, மாயா வாத மதங்கள் மற்றும்/அல்லது யூதத்துவச் சடங்காச்சாரக் கழுவுதல்கள் என்பவற்றிலிருந்து "கடனாக" பெறப்பட்டுள்ளது என்று கூறி, ஞானஸ்நானம் பற்றிய பவுலின் போதனைக்கு கனக்குறைவை ஏற்படுத்துகின்றனர். புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம் மற்றும் யூதர்கள் அல்லது விக்கிரக ஆராதனை செய்பவர்கள் ஆகியோரின் சடங்குகள் ஆகியவற்றிற்கு இடையில் பல வேறுபாடுகள் உள்ளன - ஆனால், இதைப் பட்டியலிடுதல் என்பது விசுவாசிப்பவருக்குத் தேவையற்றதாக உள்ளது. ரோமர் 6ஐப் பவுல் எழுதும்படிக்கு அவரைப் பரிசுத்த ஆவியானவரே ஏவினார் என்று அறிதல் போதுமானதாக உள்ளது. வேதாகமத்தில் நாம் வாசிக்கும் ஞானஸ்நானம் மனிதரிடத்தில் இருந்தல்ல, ஆனால் தேவனிடத்தில் இருந்து வந்துள்ளது.

குறிப்புகள்

[1]*அங்கு எழுந்து நின்றிருந்த* Melvin Daniels *என்ற பிரசங்கியாரால், இந்த வரலாறு எனக்கு 1989ம் ஆண்டுவாக்கில் எடுத்து உரைக்கப்பட்டது.* [2]The information on *hagiasmos* and *hagios* is based on *The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 3; W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 307, 544-45. [3]Richard Rogers, *Paid in Full: A Commentary on Romans* (Lubbock, Tex.: Sunset Institute Press, 2002), 86. [4]R. C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 49. [5]This idea was taken from Jim Hylton, *Just Dying to Live* (Kalamazoo, Mich.: Master's Press, 1976), 49. [6]*பெரும்பாலான சமுதாயங்களில், அந்தப் பகுதியின் மரணங்களை சமூகத்தினருக்கு அறிவிப்பிதற்கு சில வழிமுறைகள் உள்ளன. இந்தப் பாடத்தை அறிமுகப்படுத்த, நீங்கள் வாழும் பகுதியிலுள்ள வழிமுறையை உங்கள் உருவகமாக பயன்படுத்துங்கள்.* [7]D. Stuart Briscoe, *Mastering the New Testament: Romans,* The Communicator's Commentary Series (Dallas: Word Publishing, 1982), 131; F. F. Bruce, *The Letter of Paul to the Romans,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 127. [8]Sermon preached by Glen Pace at Judsonia church of Christ, Judsonia, Arkansas, n.d. (c. 2001). [9]Briscoe, 130. [10]Quoted in Bruce Barton, David Veerman, and Neil Wilson, *Romans,* Life Application Bible Commentary (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1992), 114.

[11]Hylton, 49. [12]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World*, The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 168. [13]*The Analytical Greek Lexicon*, 65. [14]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 531. [15]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 196. [16]Stott, 173. [17]Moo, 196. [18]Bruce, 128. [19]Blessings found "in Christ" are listed in Jimmy Allen, *Survey of Romans,* 4th ed., rev. (Searcy, Ark.: By the author, 1973), 64. [20]William Barclay, *The Letter to the Romans*, rev. ed., The

Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 86.

[21]James Macknight, *A New Literal Translation, from the Original Greek of All the Apostolical Epistles with a Commentary and Notes* (N.p.: n.d.; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1984), 84. [22]Barclay, 84. [23]Macknight, 85. [24]Anders Nygren, *Commentary on Romans* (Philadelphia: Fortress Press, 1949), 233-34. [25]Moo, 204; James D. G. Dunn, *Baptism in the Holy Spirit* (London: SCM, 1970), 145. [26]Bruce, 129. [27]Walter W. Wessel, notes on Romans, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1713. [28]*"நடத்தல் என்பது கிறிஸ்தவ வாழ்வைப் பண்புபடுத்தும் உறுதியான காட்சிப்படுத்தலாகாத வளர்ச்சிக்கு உருவகமாக" உள்ளது* (Morris, 249). [29]Adapted from Glen Pace, sermon preached at Judsonia church of Christ, Judsonia, Arkansas, n.d. (c. 2000). [30]*இது பல ஆதாரமூலங்களில் லத்தீன் சபைப் பிதாக்களில் குறிப்பிடத்தக்கவரால் அகுஸ்தீன் (கி.பி. 354-430) என்பவரைப் பற்றிய வரலாறாக மறுபடியும் கூறப்பட்டதாக உள்ளது.*

[31]Coy Roper, "The Great Transformation," *Truth for Today* (August 1988): 3.

26

கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனை வாழ்வது எவ்வாறு? (6:5-14)

"பரிசுத்தமாகுதல்" பற்றி நமது படிப்பு தொடருகிறது. முந்திய பாடத்தில், நாம் "பிரித்துவைக்கப்படுதல்" என்பதே "பரிசுத்தமாகுதல்" என்பதன் வேர்க்கருத்தாக உள்ளது என்று குறிப்பிட்டோம். ரோமர் 6 மற்றும் 7ல், பரிசுத்தமாகுதல் என்பது தேவனுடைய பரிசுத்த நோக்கங்களுக்காக அவரால் பிரித்தெடுக்கப்படுதல் என்பதுடன் - மற்றும் அதன்பின்பு அதற்கொப்ப வாழுதல் என்பது - சேர்ந்துள்ளது. நமது வாழ்வில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தக் கிறிஸ்துவை நாம் அனுமதிக்க வேண்டும்.[1]

1 முதல் 4 வரையிலான வசனங்களில் பவுல், நாம் ஞானஸ்நானம் பெறுகிறபோது, நாம் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் பங்குபெறுவதாக வலியுறுத்தினார்:

> *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனை வரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாம லிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்தெழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர் களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம் (வசனங்கள் 3, 4).*

இந்தப்பாடத்தில், நாம் ஞானஸ்நானம் மற்றும் அது தொடர்பான பிறவிஷயங்கள் பற்றிப் பவுல் இன்னும் என்ன கூறினார் என்று காண்போம். நாம் கர்த்தருக்குள் புதிய வாழ்வை வாழ என்ன நமக்கு அவசியப்படுகிறது என்றும் நாம் கற்றுக்கொள்வோம்.

நாம் சிலவற்றை *அறிதல்* அவசியமாகிறது[2] (6:5-7)

கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய வாழ்வை வாழ்வதற்கு, நாம் சிலவற்றை அறிதல் அவசியமாக உள்ளது. 6ம் அதிகாரம் முழுவதிலும், அறிவின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது:[3]

> *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாம லிருக்கிறீர்களா? (வசனம் 3).*

நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம் (வசனம் 6).

மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக் கிறோம், மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை (வசனம் 9).

மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும் நீதிக்கேதுவான கீழ்ப் படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமை களாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளா யிருக்கிறீர்களென்று அறியீர்களா? (வசனம் 16).

"உபதேசத்தை" விரும்புவதில்லை என்று சிலர் வலியுறுத்துகின்றனர். "நமக்குத் தேவையானதெல்லாம் ஒழுக்கரீதியான போதனையே" என்று அவர்கள் கூறுகின்றனர். உபதேசம் இல்லாத ஒழுக்கரீதியான போதனை என்பது, வேர்கள் இல்லாத மரம் அல்லது எண்ணெய் இல்லாத விளக்கு போன்றது.[4] கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய ஜீவனை வாழ்வற்கு, நாம் சில விஷயங்களை அறிதல் அவசியமாகிறது. அறியாமையானது ஆற்றலின்மையை விளைவிக்கிறது.

நமது பாடத்திற்கான வேத வசனப்பகுதி 5ம் வசனத்துடன் தொடங்கு கிறது. பவுல் முன்னதாக, நாம் "அவருடைய [கிறிஸ்துவின்] மரணத்திற் குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம்" (வசனம் 3) என்றும், நாம் "ஞானஸ் நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்" என்றும் (வசனம் 4) கூறியிருந்தார். இங்கு அவர், "ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால்[5], அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்" என்று கூறினார் (வசனம் 5).

"இணைக்கப்படுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*sumphutos* என்ற) கிரேக்க வார்த்தை, *sun* ("உடன்") மற்றும் *phuo* ("வளர") என்ற சொற்கள் இணைந்த கூட்டுவார்த்தையாகும், இது "ஒன்றாக நடப்பட்ட" என்று அர்த்தப்பட முடியும்.[6] பவுல் தண்ணீருக்குள் முழுக்காட்டப்படுதலை, மண்ணிற்குள் ஒரு விதையை நட்டுவைத்தலுடன் ஒப்பிட்டார். ஒரு விதையிலிருந்து புதிய ஜீவன் வருவதற்கு அவ்விதை "மடிய வேண்டும்" (யோவான் 12:24ஐக் காணவும்).

"நாம் அவருடைய [கிறிஸ்துவினுடைய] மரணத்தின் சாயலில் அவருடன் இணைக்கப்பட்டு" இருப்பதால், நமது "நடப்படுதல்" மதிப்புடையதாக உள்ளது. விஷயம் அதுவாக இருப்பதால், "நிச்சயமாகவே நாம் அவரது உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்."[7] கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டபோது, அவரைப்பற்றிய சிலவிஷயங்கள் முன்பு இருந்தது போன்றே இருந்தன. அவர் தமது கரங்களில், ஆணிகளினால் உண்டான துளைகளையும், தமது விலாவில் ஈட்டியால் துளைத்த காயத்தையும் கொண்டிருந்தார் (யோவான் 20:27ஐக் காணவும்), ஆனால் சில விஷயங்கள் வேறுபட்டு இருந்தன: அவர் இனி மரணத்திற்கு உட்படாதிருக்கும் ஒரு புதிய ஜீவனுக்கென்று எழுப்பப்பட்டார் (ரோமர் 6:9). அதுபோலவே நம் ஞானஸ்நானக் கல்லறையிலிருந்து எழுப்பப்படும்போது, சில விஷயங்கள் முன்பு இருந்ததுபோன்றே இருக்கின்றன: எடுத்துக்காட்டாக, நாம் முன்பிருந்த அதே

நபர்களாக இருக்கிறோம். இருப்பினும், சில விஷயங்கள் வேறுபட்டுள்ளன: இப்போது நாம் கர்த்தருக்குள் புதிய ஜீவனைக் கொண்டுள்ளோம்!

பின்வரும் வார்த்தைகளுடன் பவுல் அந்தச் சிந்தனையைத் தொடர்ந்தார்: "நாம் இனிப்பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே" (வசனங்கள் 6, 7). இவ்வசனப்பகுதியில் நாம் அறிய வேண்டிய மூன்று விஷயங்களின் பட்டியலைக் காண்கிறோம்!

இதை அறியுங்கள்: பழைய மனுஷன் சிலுவையிலறையப்பட்டாயிற்று

"நம்முடைய பழைய மனுஷன் அவருடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று" நாம் புரிந்துகொள்ள வேண்டும் (வசனம் 6ஆ). ஆங்கிலத்தில் உள்ள "old self" என்ற வார்த்தைக்குப்பதிலாகக் கிரேக்க வசனப்பகுதி, "old man [*palaios* ... *anthropos*]" என்று அர்த்தப்படுகிறது. தமிழில் பழைய மனுஷன் என்றுள்ளது. விளக்கவுரையாளர்களில் சிலர், "old self [man]" என்பதன்மூலம் பவுல் எதை அர்த்தப்படுத்தினார் என்பது பற்றித் திகைப்படைகின்றனர்; ஆனால் அப்போஸ்தலர் செயல்விளைவில் இச்சொற்றொடரை 8ம் வசனத்தில் விளக்கியுரைத்தார். 6 மற்றும் 8 ஆகிய வசனங்களுக்கிடையில் உள்ள பின்வரும் இணையைக் கவனியுங்கள்:

> *"நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டது" (வசனம் 6).*
> "கிறிஸ்துவுடனேகூட *நாம்* மரித்தோம் ..." (வசனம் 8).

"நம்முடைய பழைய மனுஷன்" என்பது, நாம் கிறிஸ்தவர்கள் ஆகுமுன்பு *நமது* நிலையைக் குறிக்கிறது. NEB வேதாகமத்தில், "the man we once were" என்றுள்ளது. R. W. ஜான் ஸ்டாட் என்பவர், "நமது மனமாற்றத்திற்கு முந்திய நிலையிலிருந்த நமது முழு இயல்பும் கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டது" என்று எழுதினார்.[8] ஒரு தனிநபர் தமது வாழ்வில் நடந்த நிகழ்வுகளை, "கி.மு." (கிறிஸ்துவுக்கு முன்) அல்லது "கி.பி." (கிறிஸ்துவுக்குப் பின்) என்று குறிப்பிட்டார்.[9]

"பழைய மனுஷன்" கிறிஸ்துவோடுகூடச் *சிலுவையில் அறையப்பட்டது* - சிலுவையில் ஆணியறையப்பட்டது, மரணதண்டனை விதிக்கப்பட்டது, மரணத்திற்கு உட்படுத்தப்பட்டது! சிலர் தங்கள் கழுத்துக்களில் சங்கிலியை சிலுவையுடன் அணிவதில் அல்லது கட்டிடங்கள்மீது சிலுவைகளைக் கட்டியெழுப்புவதில் மகிழ்வடைகின்றனர். நகைகள்மீது அல்லது கட்டிடங்கள்மீது சிலுவையைக் காட்சிப்படுத்துதல் என்பதல்ல, ஆனால் இருதயத்தில் சிலுவையை நாட்டுதல் - பழைய பாவமனுஷனை மரணம் அடையச் செய்தல் - என்பதே தேவன் விரும்புகிற பதில்செயலாக உள்ளது![10]

இதை அறியுங்கள்: பாவ சரீரம் ஒழிக்கப்பட்டது

"[நம்முடைய] பாவசரீரம் ஒழிந்துபோகும்*பொருட்டாக*" நாம் அவரோடு சிலுவையில் அறையப்பட்டுள்ளோம் (வசனம் 6ஆ). "சரீரம்" (*soma*) என்ற

வார்த்தை, அடுத்த சில அதிகாரங்களில் முக்கியத்துவம் வாய்ந்துள்ளது (6:6, 12, 13; 7:5, 23, 24; 8:10, 13, 23 ஆகிய வசனங்களைக் காணவும்), எனவே வசனத்தை ஆராய்ந்து பார்க்க நாம் தாமதித்தல் அவசியமாகிறது.

பௌதீக உடலானது, தன்னில்தானே *நல்லதாகவோ அல்லது பொல்லாததாகவோ* இருப்பதில்லை; அது பயன்படுத்தப்படக்கூடிய ஒரு கருவியாக மாத்திரம் உள்ளது. அது, உளப்பதிவுகள் மற்றும் வெளிப்பாடுகள் ஆகியவற்றின் ஊடகம் என்று அழைக்கப்பட்டுள்ளது. உடலின் ஐம்புலன்கள் மூலமாகவே நாம் நம்மைச் சுற்றிலுமுள்ள உலகம் பற்றிய நமது உளப்பதிவுகளைப் பெறுகிறோம். பின்பு, நாம் எவ்வாறு உணருகிறோம் மற்றும்/அல்லது பிறர் எவற்றை அறியவேண்டும் என்று நாம் விரும்புகிறோம் என்பவற்றை (பேச்சு, சைகைகள் மற்றும் முகபாவனைகள் போன்ற) உடலின் பணிகள் மூலமாக நாம் வெளிப்படுத்துகிறோம்.

உடலானது *நன்மைக்கான* கருவியாகப் பயன்படுத்தப்பட முடியும். 13ம் வசனத்தில், பவுல் தமது வாசகர்களுக்கு, அவர்கள் தங்கள் அவயவங்களை "நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு" ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார். ரோமருக்கு எழுதிய நிருபத்தின் பிற்பகுதியில் இந்த அப்போஸ்தலர், "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று எழுதினார் (ரோமர் 12:1).

உடலானது *பொல்லாங்கிற்கான* கருவியாகவும் பயன்படுத்தப்பட முடியும். அதன் அவயவங்கள் "அநீதியின் ஆயுதங்களாக" பயன்படுத்தப்பட முடியும் (வசனம் 13). வேதவாக்கியங்கள், உடலானது (மாம்சம்) சோதனையைப் பொறுத்தமட்டில் எதிர்ப்புசக்தியின் மிகப்பலவீனமான இடமாக அடிக்கடி உள்ளது என்று ஒப்புக்கொள்கின்றன (7:5ஐக் காணவும்). இது மீண்டும் மீண்டும் சாத்தானுடைய பலத்த தாக்குதல்கள் சிலவற்றிற்கு உட்படுத்தப்படுகிறது. ஆகையால், ரோமருக்கு எழுதிய நிருபத்தில் "சரீரம்" என்ற வார்த்தையானது, பொல்லாங்கிற்கான அதன் பயன்பாட்டைப் பிரதிபலிக்கும் சொற்றொடர்களுடன் அடிக்கடி இணைக்கப்படுகிறது (7:24ஐக் காணவும்). "நம்முடைய பாவமனுஷன்" - அதாவது, நாம் பாவம் செய்ய மூல ஆதாரமாக உள்ள உடல் - என்பதைப் பற்றிப் பேசும் 6ம் வசனத்திலும் விஷயம் அப்படியாகவே உள்ளது.

8:13ல், பவுல் தேவனுடைய ஆவியானவரின் உதவியுடன், நாம் நமது சரீரத்தின் செய்கைகளை மரணத்திற்கு உட்படுத்த முடியும் என்று கூறினார். இருப்பினும், இப்போதைக்கு அவர் நமது பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டது என்பதை மாத்திரம் வலியுறுத்தினார் (6இ). "ஒழிந்துபோகும்பொருட்டாக" என்பது *katargeo* என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது *kata* என்பதுடன் "செயலற்ற" (என்பதற்கான *argos* என்ற) வார்த்தைக்குப் பலம் தருவதாக உள்ளது. *Katargeo* என்றால் "செயலற்றதன்மைக்குக் குறைக்கப்பட்டு" இருத்தல் என்று அர்த்தப்படுகிறது.[11] என்னிடமுள்ள NASB வேதாகமப்பிரதியில் பின்வரும் மாற்று வாசிப்பு இடம்பெற்றுள்ளது: "made powerless" ["வல்லமையற்ற

நிலை உண்டாக்கப்படுதல்”]. சிலர், தாங்கள் தங்கள் சரீர இச்சைகளின்மீது சிறிதளவே கட்டுப்பாடு கொண்டுள்ளதாகவோ அல்லது கட்டுப்பாடு எதையும் கொண்டிராததாகவோ நினைக்கின்றனர். அந்த உள்ளான விருப்பங்கள் யாவும் கிறிஸ்துவின் மூலமாக செயலற்றவைகளாக்கப்பட முடியும் என்பதையும் நம்மை மூழ்கடிக்கச்செய்யும் அவற்றின் வல்லமையை நீக்கிப்போடமுடியும் என்பதையும் நாம் அறியவேண்டும் என்று பவுல் விரும்பினார்.

இதை அறியுங்கள்: பாவத்திற்கு அடிமையாயிருந்தது முடிவுக்கு வந்துள்ளது

இயேசுவினிமித்தம், பாவத்திற்கு நாம் அடிமையாயிருந்தது முடிவுக்கு வந்துள்ளது. நமது பாவசரீரம் “நாம் இனிப் பாவத்திற்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு” (அடிமைகளாயிராதபடிக்கு) அசைவற்றுப் போகச் செய்யப்பட்டது (வசனம் 6அ). அமெரிக்க நாட்டில், 1863ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் தேதியன்று, சுதந்தர அறிக்கை அறிவிக்கப்பட்டது; பின்பு 1865ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் தேதி அமெரிக்க சட்டத்தின் பதிமூன்றாவது பிரிவு அலுவலகரீதியாக தழுவிக்கொள்ளப்பட்டு, அடிமைத்தளையை முற்றிலுமாக நீக்கிப்போட்டது. பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு, கிறிஸ்து செயல் விளைவில் நமது *ஆவிக்குரிய* “விடுதலை அறிவிப்பில்” தமது சொந்த இரத்தத்தைக் கொண்டு கையெழுத்திட்டார்.

பாவம் என்பது ஒரு அரசனைப் போன்று ஆளுகை செய்கிறது என்று பவுல் குறிப்பிட்டிருந்தாலும் (5:21), இனியும் பாவத்திற்கு மண்டியிட்டிருப்பதற்கான காரணம் எதுவும் இல்லை என்று அவர் கூறினார். கிறிஸ்தவர்கள் அதன் ஆணைக்குக் கீழ்ப்படியத் தேவையில்லை, “[ஏனெனில்] மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்[12]பட்டிருக்கிறானே” (6:7). புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், அடிமைகள் மிக அரிதாகவே விடுவிக்கப்பட்டனர். பல அடிமை களுக்கு, *மரித்தல்* என்பதே அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகக்கூடிய ஒரே வழியாக இருந்தது. நாம் ஞானஸ்நானம் பெறும்போது, நாம் பாவத் திற்கு மரிக்கிறோம் (வசனம் 2; வசனங்கள் 3, 4ஐக் காணவும்), இது நம்மைப் பாவத்திலிருந்து விடுதலையாக்குகிறது (வசனம் 7). “மரணமானது எல்லாக் கடன்களையும் நீக்கிப் போடுகிறது” என்று இரபீக்கள் போதித்தனர்.[13] நாம் பாவத்திற்கு மரிக்கும்போது, நாம் பாவத்திற்கு ஊழியம் செய்ய இனியும் கடன் எதுவும் கொண்டிருப்பதில்லை.

அமெரிக்க ஐக்கிய நாட்டில், அடிமைகள் விடுவிக்கப்பட்டபோது, அவர்களில் சிலர் தொடர்ந்து அடிமைகளாகவே வாழ்ந்தனர். “ஒன்று அவர்கள் தாங்கள் விடுவிக்கப்பட்டதை நம்ப இயலாதிருந்தனர், அல்லது அவர்கள் விடுதலையைக் கற்பனை செய்ய இயலாத அளவுக்கு அடிமைத்தனத்திற்குப் பழக்கப்பட்டுப் போயிருந்தனர்.”[14] பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டவர்களில் சிலர் இன்னமும் அந்த அடிமைத்தனத்திலேயே வாழ்ந்து வருகின்றனர் என்பது கவலைக்குரியதாகும். எல்லாக் கிறிஸ்தவர்களும் தாங்கள் இனிப் பாவத்திற்கு அடிமைகள் அல்ல என்றும், இனியும் “பாவத் திற்கு ஊழியம்” செய்தல் என்பது தேவையற்றது என்றும் அறிந்திருக்க வேண்டும் என்று பவுல் விரும்பினார் (6:6).

நாம் சிலவற்றை எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது (6:8-11)

கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனுள்ளவர்களாக நடந்துகொள்வதற்கு, அடுத்து நாம் சிலவற்றை *எண்ணிப்பார்க்க* வேண்டியுள்ளது. "எண்ணிப் பார்த்தல்" என்ற வார்த்தை 11ம் வசனத்தில் காணப்படுகிறது: "அப்படியே நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்." 5 முதல் 7 வரையுள்ள வசனங்களில் பாவத்திற்கு *மரித்தல்* என்பது வலியுறுத்தம் செய்யப்பட்டுள்ளது. 8 முதல் 11 வரையுள்ள வசனங்கள், நாம் பாவத்திற்கு மரித்துள்ளோம் என்பதைத் திரும்பவும் குறிப்பிடுகின்றன, ஆனால் தேவனுக் கென்று *பிழைத்திருத்தல்* என்பதே இங்கு வலியுறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

"ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனே கூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்" (வசனம் 8). நாம் "அவருடைய [கிறிஸ்துவினுடைய] மரணத்திற்குள் ஞானஸ்நானம்" பெற்றபோது நாம் "கிறிஸ்துவுடனே மரித்தோம்" (வசனம் 3). "நாம் புதிய ஜீவனுள்ளவர்களாக நடந்துகொள்ளும்படிக்கு" தண்ணீர்க்கல்லறையிலிருந்து எழுப்பப்பட்டுள்ளதால், "நாம் அவருடனேகூடப் பிழைப்போம் என்று நம்பியிருக்கிறோம்" (வசனம் 4).

அடுத்ததாகப் பவுல், "மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்ப தில்லையென்று அறிந்திருக்கிறோம்" என்று கூறினார் (வசனம் 9அ). நூற்றாண்டுகளினூடே பலர் மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டு இருந்தனர்; ஆனால் கிறிஸ்து மாத்திரமே "மீண்டும் ஒருக்காலும் மரியாதிருக்கும்படி" உயிர்த்தெழுந்தார். அவர் பூமியிலிருந்து நேரடியாகத் தேவனுடைய சிங்காசனத் திற்கு எழுந்தருளிச் சென்றார் (நடபடிகள் 1:9; 2:33, 34).

இதன் விளைவாக, "மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை" (வசனம் 9ஆ). கிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்தபோது, அவர் "மனுஷர் சாயலானார்" (பிலிப்பியர் 2:7). அவர் மாம்சமானார் (யோவான் 1:14). ஆகையால், மாம் சத்தின் பலவீனங்களுக்கும், எல்லைகளுக்கும் - மரணம் உட்பட கீழ்ப்பட்டிருந்தார். அவர் "மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும்" கொண்டு வந்தார். (2:8). இருப்பினும், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபோது, "அவரைத் தொடுவதற்கான மரணத்தின் வல்லமை முடிந்து போயிற்று" (ரோமர் 6:9ஆ).

10ம் வசனத்தில், நாம் இயேசுவின் மரணத்திற்கும் அவரது உயிர்த்தெழுந்த ஜீவனுக்குமிடையில் நேர்மாறு ஒன்றைக் கண்டறிகிறோம். இவ்வசனம் முதலாவதாக, "அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்" என்று கூறுகிறது. "ஒரேதரம்" என்பது *ephapax* என்பதன் மொழிபெயர்ப்பாகும், இது *epi* ("மீது") என்பதால் பலப்படுத்தப்பட்ட *hapax* ("ஒருதரம்") என்பதிலிருந்து வருவதாக உள்ளது. *Ephapax* என்பது, "ஒரேதரமாக" செய்யப்பட்ட ஒரு செயலை அதாவது, "முழுமையான மதிப்புடைய திரும்பச் செய்தல் அவசியப்படாத ஒரு செயலை" குறிக்கிறது.[15] இவ்வார்த்தையானது, கர்த்தர் திரும்பவும் மரிக்கத் தேவையில்லை என்பதை மாத்திரம் வலியுறுத்துவதாக இருக்க முடியும். இதே கருத்தில்தான் இவ்வார்த்தை எபிரெயர் 7:27லும் பயன்படுத்தப்பட்டுள்ளது எனலாம். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், மிருகபலிகள் திரும்பத் திரும்ப செலுத்தப்பட வேண்டியிருந்தன, ஆனால் இயேசுவின் பலியானது ஒரேதரம்

செலுத்தப்பட்டதாக இருந்தது என்று சுட்டிக்காண்பித்தார். அது எல்லா மக்களுக்காகவும் எல்லாக் காலத்திற்காகவும் ஆனதாக இருந்தது (எபிரெயர் 9:24-28ஐக் காணவும்).

பவுல் கூடுதலாக, "அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக் கிறார்" என்றும் கூறினார் (வசனம் 10ஆ). பிரிவு என்பது "மரணம்" என்பதன் வேர்க்கருத்தாக இருப்பதால், "ஜீவன்" என்பதை நாம் ஐக்கியம் என்பதாக நினைக்கலாம்: ஆவிக்குரிய ஜீவன் கொண்டிருத்தல் என்பது தேவனுடன் நெருக்கமாயிருத்தல் என்பதாக உள்ளது (யோவான் 17:3ஐக் காணவும்). இவ்வாறு AB *வேதாகமமானது 10ம் வசனத்தின் பிற்பகுதியைப் பின்வருமாறு விரித்துரைக்கிறது:* "He is living to God [in unbroken fellowship with Him]" {*"அவர் தேவனுக்கென்று [முறிக்கப்பட இயலாத ஐக்கியத்தில் அவருடன்] வாழ்கிறார்"*}. *இயேசு மனிதர்களின் பயனுக்காக மரித்தார், ஆனால் இப்போது அவர் தமது பிதாவுடன் அவரை மகிமைப்படுத்துவதற்கென்றே ஜீவிக்கிறார்.*

இதைப்பற்றி எண்ணிப்பாருங்கள்: நீங்கள் மரித்திருக்கிறீர்கள்

அது நம்மை, கிறிஸ்தவர்கள் "எண்ணிப்பார்க்க" தேவையான ஒரு விஷயத்தி னிடம் கொண்டு வருகிறது. பவுல், இயேசுவின் உதாரணத்தைச் சிந்தையில் கொண்டவராக, "நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும் ... எண்ணிக்கொள்ளுங்கள்" என்று கூறினார் (வசனம் 11அ). "எண்ணிக்கொள்ளுதல்" என்பது logizomai *என்ற வார்த்தையிலிருந்து வருவதாக உள்ளது, இது 4ம் அதிகா ரத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்த கணக்கியல் சொற்றொடராகும். பவுல் தமது வாசகர்கள், தங்கள் சிந்தைகளில் குறிப்பிட்ட சில சத்தியங்களை "குறித்து வைத்துக்"கொள்ள வேண்டும் என்று கூறினார். குறிப்பிட்ட சில உண்மைகளை வெறுமனே* அறிந்திருத்தல் *மாத்திரம் போதுமானதல்ல; அவர்கள் அந்த உண்மைகளை* எண்ணிப்பார்த்து, *அவற்றின் முழு மறைகருத்துக்கள் பற்றிக் கவனமாய் நினைத்துப்பார்த்தல் அவசியமாயிருந்தது.*

பவுல் தமது வாசகர்கள் இரண்டு வலிவார்ந்த உண்மைகளைப் பற்றி நினைத்துப் பார்க்க வேண்டும் என்று விரும்பினார். முதலாவது, அவர்கள் உண்மையிலேயே "பாவத்திற்கு மரித்திருந்தனர்" என்பதாக இருந்தது. அவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது பாவத்திற்கு மரித்திருந்தார்கள் (வசனங்கள் 2-5), ஆனால் அந்த உண்மைநிலையின் எல்லா அர்த்தங்களையும் அவர்கள் புரிந்துகொள்ளாதிருக்கலாம்.

இதைப்பற்றி எண்ணிப்பாருங்கள்: நீங்கள் பிழைத்திருக்கிறீர்கள்

இருப்பினும், அவர்கள் தங்களை மரித்தவர்களாக மாத்திரமல்ல, ஆனால் "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும்*" எண்ணிக்கொள்ள வேண்டியிருந்தது (வசனம் 11ஆ). அமெரிக்க நாட்டின் பழைய மேற்குப்பகுதியில், "தேடப்படுகிறவர்கள்" பற்றிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன, அவை சட்டத்திற்கு விரோதமான அபாயமானவர்களைப் பிடித்துக்கொடுத்தால் வெகுமதி கிடைக்கும் என்று கூறின. சிலவேளைகளில் அந்த சுவரொட்டிகளில், "தேவை: உயிருடனோ அல்லது பிணமாகவோ" என்று கூறப்பட்டிருந்தது. ரோமருக்கு எழுதிய நிருபத்திற்கு ஜிம் டவுன்சென்ட் என்பவர் எழுதிய விளக்கவுரையில், நாம் படித்துக்கொண்டிருக்கும் இப்பகுதிக்கு அவர்*

"தேவை: மரித்த நிலையில் *மற்றும்* உயிருடன்" என்று தலைப்பிட்டிருந்தார்.[16] தேவன் நம்மை "மரித்தவர்களாக" மாத்திரம் விரும்புவதில்லை; அவர் நம்மை "பிழைத்திருக்கிறவர்களாக" இருக்கும்படிக்கும் விரும்புகிறார். நாம் "பாவத்திற்கு மரித்தவர்களாக" மாத்திரமல்ல, ஆனால் "தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும்" இருக்க வேண்டும்.

பழைய மனுஷன்	புதிய மனுஷன்
பாவத்திற்குப் பிழைத்திருத்தல்	தேவனுக்கென்று பிழைத்திருத்தல்
தேவனுக்கு மரித்திருத்தல்	பாவத்திற்கு மரித்திருத்தல்

"தேவனுக்கென்று பிழைத்திருத்தல்" என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்பது பற்றி ஆழ்ந்து சிந்தித்துப்பாருங்கள். நமது சிருஷ்டிகருடன் இப்படிப்பட்ட நெருங்கிய பிணைப்பைக் கொண்டிருத்தல் என்பது மாபெரும் ஆசீர்வாதமாக உள்ளது! அதேவேளையில், இது ஒரு மும்முரமான பொறுப்பையும் நமக்கு அளிக்கிறது. "அவருடன் முறிபடாத ஐக்கியத்தில்" வாழ்வதற்கு (ரோமர் 6:11), நாம் நமது மிகச்சிறந்த திறமையுடன் அவரது சித்தத்தைச் செய்வதற்கு நம்மையே அர்ப்பணிக்க வேண்டும்!

நாம் சிலவற்றை முன்வைத்தல் அவசியமாயிருக்கிறது (6:12, 13)

நமது வசனப்பகுதியின் மூன்றாவது பிரிவு, ''ஆகையால்'' என்ற வார்த்தையுடன் தொடங்குகிறது (வசனம் 12அ). பவுல் தாம் கூறியிருந்தவற்றிலிருந்து நடைமுறை முடிவுகளைத் தரவழைக்கத் தயாராக இருந்தார், அவரது வாசகர்கள் பாவத்திற்கு மரித்*திருந்தபடியால்,* மற்றும் அவர்கள் கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனுக்கென்று எழுப்பப்பட்டிருந்த*படியால்,* அவர்கள் குறிப்பிட்ட ஒருவழியில் நடந்துகொள்ள வேண்டியிருந்தது.

"ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத் தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக" (வசனம் 12). ஜேம்ஸ் R. எட்வர்ட்ஸ் என்பவரின் கருத்துப்படி இது "ரோமருக்கு எழுதிய நிருபத்தில் ஒழுக்கரீதியான முதலாவது புத்திகூறுதலாக" உள்ளது.[17] விசுவாசிகள் தேவபக்தியுள்ள வாழ்வை வாழ வேண்டும் என்பதற்குப் பலத்த மறைமுகக்கருத்துக்களைத் நாம் கண்டிருக்கிறோம் (எடுத்துக்காட்டாக, 2:6-8, 10ஐக் காணவும்), ஆனால் இது தேவன் தம்மைப் பின்பற்றுபவர்களிடத்தில் எதிர்பார்ப்பது என்ன என்பது பற்றிய முதலாவது நேரடியான அறிவுறுத்துதல்களாக உள்ளன.

ரோமர் 6ன் முதல் பகுதியில், பவுல் ("சுட்டிக்காட்டும் உணர்வை" பயன்படுத்தி) கூற்றுக்களை ஏற்படுத்தினார்; இப்போது அவர் ("கட்டளை உணர்வை" பயன்படுத்தி) கட்டளைகளை வெளியிடத் தொடங்கினார். அவர் தன்மையில் ("நாம்" மற்றும் "நமது") பேசியிருந்தார்; இப்போது அவர் முன்னிலைக்கு ("நீங்கள்") மாறினார். இங்கு தகவல் தருவதில் அல்ல ஆனால் புத்திகூறுவதிலேயே அவரது வலியுறுத்தமிருந்தது.

"நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக" என்பது முதலாவது புத்திகூறுதலாக உள்ளது (வசனங்கள் 12ஆ, இ). கிறிஸ்தவர்கள் "பாவத்தி லிருந்து விடுதலையாகியுள்ளனர்" (வசனம் 7), அதாவது அவர்கள் "இனியும் பாவத்திற்கு அடிமைகள் அல்ல" (வசனம் 6) என்ற உண்மையைக் கவனத் திற்குக் கொண்டுவந்திருந்தார். இது, பாவம் இனியும் அச்சுறுத்தல் செலுத்துவ தில்லை என்ற மனப்பதிவை விட்டுச்சென்றிருக்கலாம் - ஆனால் விஷயம் அப்படியிருக்கவில்லை. விடுதலைபெற்ற அடிமையொருவர் ஒரு அடிமை யாகத் தொடர்ந்து எவ்வாறு நிலைத்திருக்க முடியுமோ, அவ்வாறே, பாவத்தின் தளையிலிருந்து விடுதலையாகியுள்ள ஒருவர் இன்னமும் பாவத்திற்கு ஊழியம் செய்ய முடியும். செயல்விளைவில், பவுல் தமது வாசகர்களிடத்தில், "அது நடக்க அனுமதிக்காதீர்கள்!" என்று வேண்டிக்கேட்டுக்கொண்டார்.

தேவனுக்கோ அல்லது பாவத்திற்கோ ஊழியம் செய்யும்படி நமது சரீரங்களைப் பயன்படுத்துதல் என்ற கருத்தின்மீது பவுல் கவனம்குவித்தார்: "சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக" (வசனம் 12ஆ). "சாவுக்கேதுவான" என்பது, "சாவுக்குரிய" என்று அர்த்தப்படும் *thnetos* என்ற வார்த்தையிலிருந்து வருகிறது. "நாம் பிறந்த நேரத்திலிருந்தே மரிக்கத் தொடங்கிவிடுகிறோம்."

அடுத்ததாக அவர், "நீங்கள் *சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக,* சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்ப தாக" என்று கூறினார் (வசனம் 12ஆ, இ). "இச்சைகள்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது (இது *epithumia* என்பதன் பன்மைப் பதமாகும்) "இருதயம் எதன்மீது அமைவுபெற்றுள்ளதோ அதை" குறிக்கிறது (*epi* ["மீது"] இருந்து கூட்டல் *thumos* ["ஆத்துமா" அல்லது "சிந்தை"]).[19] இவ்வார்த்தையானது நல்ல அல்லது தீய என்ற எவ்வகையிலான விஷயத்தின் மீதான பலத்த விருப்பங்களைக் குறிக்கிறது, ஆனால் இது வழக்கமாகத் தீய விருப்பங்களை ("இச்சைகளை") குறிப்பிடுகிறது.[20]

உணவிற்கான விருப்பம் போன்ற விருப்பங்களைக் கொண்டிருக்கும் வகையிலேயே தேவன் நமது சரீரங்களைப் படைத்தார். நமது நன்மைக்காகவும் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவும் அவர் இந்த விருப்பங்களை நமக்குள் வைத்தார். இருப்பினும் தேவனுடைய மற்ற எல்லாக் கொடைகளையும்போலவே, இந்த விருப்பங்களும் தவறாகவும் வீணாகவும் பயன்படுத்தப்பட முடியும். சாத்தான் நமது விருப்பங்களைச் சீர்கேடான வழிகளில், தேவனை வருத்தப்படுத்தும் வழிகளில் திருப்திசெய்துகொள்ளும்படி நம்மை வற்புறுத்துகின்றான். யாக்கோபு, "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்" என்று எழுதினார் (யாக்கோபு 1:14).

சிலர் தங்களின் சரீரப்பிரகாரமான தூண்டுதல்கள் தங்களால் எதிர்த்து நிற்க இயலாத அளவுக்கு மிகப்பலத்தவைகளாக உள்ளன என்று நம்புகின்றனர், ஆனால் விஷயம் அதுவல்ல என்று பவுல் கூறினார். விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றின் மூலமாக நீங்கள் பாவத்தின் கட்டிலிருந்து விடுவிக்கப்பட்டீர்கள். இப்போது, தேவனுடைய உதவியுடன் (ரோமர் 8:13ஐக் காணவும்) நீங்கள் பாவத்திற்கு "இல்லை" என்று கூறமுடியும். இனியும் "நீங்கள்

சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆள அனுமதிக்கக்கூடாது." நாம் ஒவ்வொருவரும் நமது சொந்த பலவீனத்தைக் கொண்டிருக்கிறோம். சிலருக்கு இது மதுபானம் அல்லது போதைப்பொருட்கள் பயன்படுத்தும் பலவீனமாக இருக்கலாம். மற்றவர்களுக்கு இது சட்டவிரோதமான பாலுறவுக்கான பலவீனமாக இருக்கலாம். இது வீண் அலப்புதலின் பலவீனமாக இருக்கலாம். நான் அதிகமான உணவு உண்ணும் பலவீனத்தைக் கொண்டிருக்கிறேன். உங்கள் பலவீனம் எதுவாக இருந்தாலும், அந்த பலவீனத்தில் நீங்கள் உங்களை ஒப்புக்*கொடுத்துவிட வேண்டிய தில்லை* என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்; நீங்கள் "அதன் இச்சைகளுக்கு" கீழ்ப்படிய *வேண்டியதில்லை.* நீங்கள் சோதிக்கப்படும்போது, "சோதனையைத் தாங்கத்தக்கதாக, ... அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும்" தேவன் உங்களுக்கு எப்போதும் கொடுக்கிறார் (1 கொரிந்தியர் 10:13).

ஒப்புக்*கொடா*தீர்கள் ...

வசனம் 13அ வில் பவுல் தமது புத்திகூறுதலுடன் பின்வருவதைச் சேர்த்தார்: "நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல்." "ஒப்புக்கொடாமல்" என்பது *paristemi* (*para* ["பக்கத்தில்"] கூட்டல் *histemi* ["நிற்குதல்"]) என்பதன் ஒரு மாற்று வார்த்தையான *paristano* என்பதிலிருந்து வருகிறது. இது, "முன்வைத்தல் ... , அர்ப்பணித்தல், ... ஒப்புவித்தல்" என்று அர்த்தப்படுகிறது.[21] "உங்கள் சரீரத்தின் அவயவங்கள்" என்பவை கண்கள், காதுகள், வாய், கைகள் மற்றும் பாதங்கள் போன்ற பௌதீக உடலின் பாகங்களேயாகும். இவை ஒவ்வொன்றும் துன்மார்க்கத்திற்கு ஒப்புவிக்கப்படக்கூடும்.[22]

இருப்பினும், நமது உடலைக் கொண்டு மாத்திரமே நாம் பாவம் செய்கிறோம் என்று நினைத்துவிடக்கூடாது; பாவம் நிறைந்த செயல்கள் நமது *இருதயங்களில்தான்* தோன்றுகின்றன (லூக்கா 6:45ஐக் காணவும்). ஆகையால் எட்வர்ட்ஸ் என்பவர், "இந்தக் குறிப்புரையானது ... பௌதீக உடலுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படத் தேவையில்லை, ஏனெனில் இது நிச்சயமாகவே உருவக நடையில், மனித திறமைகள் மற்றும் திறன்கள் யாவற்றையும் உள்ளடக்குகிறது" என்று கருத்துத் தெரிவித்தார்.[23] AB வேதாகமத்தில் 13ம் வசனத்தில், "bodily members [and faculties]" ("உடல் உறுப்புகள் [மற்றும் இயல்புகள்"]) என்றுள்ளது. CJB வேதாகமம், "Do not offer *any part of yourselves* to sin as an instrument for wickedness" ["*உங்களின் எந்த ஒரு பகுதியையும்* துன்மார்க்கத்தின் கருவிகளாகப் பாவத்திற்குக் கையளித்துவிடாதீர்கள்"] என்றுள்ளது.

"ஆயுதங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*hoplon* என்ற) வார்த்தை "கருவி" என்று அர்த்தப்படமுடியும், ஆனால் இந்த சந்தர்ப்பப்பொருளில் இது "அனேகமாக இராணுத்தில் பயன்படும் ஒப்புவமை" என்பதாக உள்ளது என்று W. E. வைன் என்பவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.[24] என்னிடத்தில் உள்ள NASB வேதாகமப் பிரதியில், "ஆயுதங்கள்" என்பதற்குப் பின்வரும் மாற்று வாசிப்பு தரப்பட்டுள்ளது: "Or *weapons*." வேறொரு இடத்தில், பவுல் நாம் ஒரு ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம் என்று வலியுறுத்தினார் (எபேசியர் 6:10-17ஐக் காணவும்). அந்த யுத்தத்தில், ஒன்று நாம் கர்த்தரின் பக்கமாய் இருக்கிறோம் அல்லது நாம் சாத்தானின் பக்கமாய் இருக்கிறோம். நாம் நமது சரீரங்களை

(மற்றும் நமது எல்லா இயல்புகளையும்) துன்மார்க்கத்தினிமித்தம் ஒப்புக்கொடுத்த ஆயுதங்களாகவோ அல்லது நன்மைக்கு ஒப்புக்கொடுத்த ஆயுதங்களாகவோ பயன்படுத்த முடியும்.

ஒப்புக் கொடுங்கள் ...

பொல்லாங்கு செய்வதிலிருந்து விலகியிருந்தால் மாத்திரம் போதாது; நாம் நன்மையைச் செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். "தோட்டத்தில் களைகளைப் பறித்தால் மாத்திரம் போதாது; நாம் மலர் அல்லது காய்ச்செடிகளை நடவும் வேண்டும்." இவ்வாறாகப் பவுல், "உங்களை மரித்தோரிலிருந்து பிழைத் திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்" என்று கூறினார் (வசனம் 13ஆ). TEV *வேதாகமத்தில்,* "Surrender your whole being to him to be used for righteous purposes" *("உங்கள் முழுமையையும் நீதியின் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படும்படி அவருக்கு அர்ப்பணியுங்கள்") என்றுள்ளது.*

தேவன் இந்தப்பூமியில் தமது சித்தத்தை நிறைவேற்ற மனிதர்களின் சரீரங்களைப் பயன்படுத்துகின்றார் என்று வில்லியம் பார்க்ளே[25] *என்பவர் உற்றுக்கவனித்துள்ளார். அவர் ஒரு வார்த்தை பேசப்பட வேண்டும் என்று விரும்பினால், அதைப்பேச ஒரு மனிதரை அவர் பயன்படுத்துகிறார். அவர் ஒரு செயல் செய்யப்பட வேண்டும் என்று விரும்பினால், அதைச் செய்ய ஒரு தனிநபரை அவர் பயன்படுத்துகிறார். அவர் யாரையேனும் உயர்த்த வேண்டும் என்று விரும்பினால், அவரை ஊக்குவிப்பதற்கு ஒரு நபரை அவர் [தேவன்] பயன்படுத்துகிறார். பவுல் தமது வாசகர்கள் (மற்றும் நாம்), தேவன் இந்தப் பூமியில் தமது நோக்கத்தை நிறைவேற்றப் பயன்படுத்தக்கூடிய வகையிலான மக்களாயிருக்கும்படி வேண்டிக்கொண்டார்.*

இந்த அப்போஸ்தலர் தமது வாசகர்களை "மரித்தோரிலிருந்து பிழைத் திருக்கிறவர்கள்" என்று குறிப்பிட்டபோது, ஒரு பலத்த ஊக்குவிப்பை உள்ளடக்கினார். பிலிப்ஸ் என்பவரின் மொழிபெயர்ப்பு வேதாகமத்தில், "like men rescued from certain death" *("ஒரு குறிப்பிட்ட மரணத்திலிருந்து மீட்கப்பட்ட மக்களைப்போல") என்றுள்ளது. நீங்கள் குறிப்பிட்ட மரணத்திலிருந்து மீட்கப்பட்டிருந்தால், உங்கள் பாராட்டுதலை வெளிப்படுத்த நீங்கள் என்ன செய்வதற்கு மனதாயிருப்பீர்கள்? உங்களைக் குறிப்பிட்ட ஆவிக்குரிய மரணத்தி லிருந்து மீட்பதற்குத் தேவன் உங்களுக்காக என்ன செய்தார் என்பதை "அறிந்து" அதைப்பற்றி "எண்ணிப்பாருங்கள்." உங்களையே "ஒப்புக்கொடுக்கும்படி [அர்ப்பணிக்கும்படி]" மற்றும் நீங்கள் முற்றிலும் அவருடைய ஊழியத்திற்கென்று இருக்கும்படி கேட்டுக் கொள்ளுதல் மிக அதிகமானதாக உள்ளதா?*

முடிவுரை (6:14)

இந்தப் பகுதியைப் பவுல், 1 முதல் 13 வரையிலான வசனங்களின் கலந் துரையாடலுடைய தொகுப்புரைக்கூற்றுடன், 1ம் வசனத்தின் கேள்விக்குப் பதிலுடன் மற்றும் 6:15-23ல் காணப்படும் விளக்கங்களுக்கு மாறிச்செல் லுதல் ஒன்றுடன் முடித்தார். அந்தக்கூற்று பின்வரும் வார்த்தைகளைக் கொண்டுள்ளது: "பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது" (வசனம் 14ஆ). "மாட்டாது" என்பது, கிறிஸ்தவரின் வாழ்வில் பாவம் கட்டுப்பாடு செலுத்துதல்

இயலாதவிஷயமாக உள்ளது என்று அர்த்தப்படுவதில்லை. அப்படிப்பட்ட விளக்கமானது, பாவம் *செய்யாதிருக்கும்படி* தேவனுடைய பிள்ளைகளை ஊக்குவிப்பதற்கென்று எழுதப்பட்டுள்ள இவ்வசனப்பகுதியின் வலியுறுத்தத்தை அழித்துப்போடுவதாக இருக்கும்.

ஒரு கட்டளையைக் கொடுப்பதற்கு எதிர்கால வினைச்சொல் பயன்படுத்தப்படக்கூடும்.[26] வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "நீங்கள் அதைச்செய்ய *முடியும்,* ஆனால் அதை நீங்கள் செய்தால் *இடர்ப்பாட்டில் அகப்படுவீர்கள்!*" என்று அர்த்தப்படுத்தும்போது, "நீங்கள் அதைச் *செய்யக்கூடாது*" என்று நீங்கள் யாருக்கேனும் கூறலாம். எடுத்துக்காட்டாக, தேவன் ஆதாமினிடத்தில், "ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்" என்று கூறினார் (ஆதியாகமம் 2:17அ). அந்த மரத்தின் கனியை ஆதாம் புசிக்க முடிந்திருந்தது மற்றும் அவன் அவ்வாறே புசித்தான் - மற்றும் அவன் அதன் விளைவுகளை அனுபவிக்க வேண்டியதாயிற்று.

பவுல், "உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக" என்று கூறியபோது, அவர் தமது வாசகர்களுக்குப் பாவத்தின்மீது வெற்றி தரப்பட்டிருந்த காரணத்தால், அவர்கள் தங்களைப் பாவம் ஆளும்படி விடுதல் *தேவையற்றது* என்று உறுதிப்படுத்தினார். அவர், பாவம் அவர்களின் வாழ்வில் ஆதிக்கம் செலுத்த ஒருக்காலும் அனுமதிக்காதிருக்கும்படியும் அவர்களை ஊக்கப்படுத்திக்கொண்டிருந்தார். ஜிம் மெக்கைன் என்பவர், "பாவம் உங்கள் கர்த்தாவாக இராது என்பது உறுதிப்பாடாக மாத்திரமல்ல, ஆனால் அது ஆயுதமேந்துவதற்கான ஒரு அழைப்பாகவும் உள்ளது" என்று எழுதினார்.[27] CEV வேதாகமத்தில், "Don't let sin keep ruling your lives" ["பாவம் உங்கள் வாழ்வில் ஆட்சிசெய்ய அனுமதிக்காதீர்கள்"] என்றுள்ளது.

இந்தப் பகுதியின் கடைசி பாகத்தில், பவுல் தமது வாசகர்களுக்கு, பாவம் *ஏன்* அவர்களின் எஜமானாக இருக்கக்கூடாது என்பது பற்றிக்கூறினார்: "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப் பட்டிருக்கிறபடியால்" (வசனம் 14அ). சிலர் இந்த வார்த்தைகளைச் சந்தர்ப்பப்பொருளிலிருந்து எடுத்துப்போட்டு இவற்றைத் தங்கள் வாழ்விற்கு சுலோகமாக ஏற்படுத்தியுள்ளனர்: "நாம் நியாயப்பிரமாணத்தின்கீழ் அல்ல, ஆனால் கிருபையின்கீழ் இருக்கிறோம்!" டக்ளஸ் J. மூ என்பவர், பவுல் நாம் "நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருப்பதில்லை" என்று கூறியபோது, அவர் "கிறிஸ்தவர்கள் தாங்கள் பொறுப்புக் கொண்டுள்ள கட்டளைகள் எதையும் கொண்டிருப்பதில்லை என்று கூறவில்லை" என்று சுட்டிக்காண்பித்தார்.[28] மாறாக, "நியாயப்பிரமாணம்" என்பது அங்கு "நியாயப்பிரமாண முறைமை" என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுபோலவே இவ்வசனத்தில், "கிருபை" என்பது "கிருபையின் முறைமை" ஒன்றைக் குறிக்கிறது.

நியாயப்பிரமாண முறைமையின்கீழ், பாவத்தினால் ஆதிக்கம் செலுத்தப்படாது இருத்தல் என்பது கடினமானதாக இருந்தது, ஏனென்றால் [பாவத்திலிருந்து] விடுதலை பெற வழியில்லாதிருந்தது. R. C. பெல் என்பவர், "நியாயப்பிரமாணம் கீழ்ப்பட்டிருப்பவர்களையும் அடிமைகளையும் உண்டாகக்கூடியதாக இருந்தது, ஆனால் அது கடின இருதயங்களை மென்மை யாக்கவோ, முரட்டு சுபாவங்களை முறிக்கவோ மற்றும் நன்றியுணர்வையும்

அன்பையும் உருவாக்கவோ கூடாததாக இருந்தது" என்று எழுதினார்.[29] மிகமுக்கியமாக, நியாயப்பிரமாணம் பாவியை நீதிமானாக்க முடியாததாக இருந்தது. நியாயப்பிரமாணம் செய்ய இயலாத எல்லாவற்றையும் கிருபை செய்யக்கூடும். கிருபையின் முறைமையின்கீழ் ஒருவர் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்க முடியும். கிருபையானது, நியாயப்பிரமாணத்தினால் ஒருக்காலும் செய்யப்பட்டிராததான, பாவத்தின் பிடியை முறித்தல் என்ற செயலைச் செய்கிறது. இவ்வாறு, நாம் 1ம் வசனத்தில் மறைமுகமாய் உணர்த்தப்பட்ட குற்றச்சாட்டிற்குப் பதில் ஒன்றைப் பெறுகிறோம்: கிருபையானது பாவம் செய்வதை *ஊக்குவிப்பதற்குப்* பதிலாக, உண்மையில் அதை *ஊக்கமிழக்கச் செய்கிறது.*

நாம் இந்தப் பாடத்தை முடிக்கும் இவ்வேளையில், பின்வரும் கேள்வியைச் சிந்தித்துப் பாருங்கள்: உங்கள்மீது ஆளுகை செலுத்துவது யார் - பாவமா அல்லது தேவனா? இந்தக் கேள்விக்குப் பதில் உங்களுக்குத் தெரியவில்லை என்றால், உங்கள் வாழ்வுப்பாணியை உற்றுக்கவனித்துள்ள யாரேனும் ஒருவரிடத்தில் இதைக் கேட்டு அறியுங்கள். நீங்கள் *வாழும்* வழிமுறையானது, உங்கள் இருதயத்தில் அரியணையிட்டு அமர்ந்திருப்பது யார் அல்லது எது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. உங்கள் வாழ்வில் பாவம் ஆளுகை செய்துகொண்டிருந்தால், உங்களை விடுவிக்கக்கூடியவருக்கு உடனடியாக உங்களை ஒப்புவிக்கும்படி நான் உங்களை வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்!

பிரசங்கியார்களுக்கும் போதகர்களுக்கும் குறிப்புகள்

இந்த எடுத்துரைப்பைப் பயன்படுத்தும்போது, கிறிஸ்தரல்லாதவர்கள் எவ்வாறு தங்களைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்க முடியும் என்று விளக்கியுரைக்க நீங்கள் விரும்பலாம் (மாற்கு 16:15, 16; நடபடிகள் 2:38). தவறிப்போயுள்ள கிறிஸ்தவர்கள் யாரேனும் கூட்டத்திலிருந்தால், அவர்கள் தங்கள் கலகத்தின் கைகளை எவ்வாறு தாழ்த்த முடியும் என்பதையும் கூறுங்கள் (நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9).

குறிப்புகள்

[1]Fritz Ridenour, ed., *How to Be a Christian Without Being Religious* (Glendale, Calif.: Regal Books, G/L Publications, 1967), 51. [2]பல எழுத்தாளர்கள், ரோமர் 6ன் மீதான தங்கள் சிந்தனைகளை, "அறிதல்," "கருதுதல்," மற்றும் "முன்வைத்தல்" என்று மூன்று வார்த்தைகளில் மையப்படுத்தி இருக்கின்றனர். [3]இந்த வலியுறுத்தம் 7ம் அதிகாரத்திற்குள் தொடர்கிறது. அவ்வதிகாரத்தின் 1, 14 மற்றும் 18 ஆகிய வசனங்களைக் காணவும். [4]Adapted from David F. Burgess, comp., *Encyclopedia of Sermon Illustrations* (St. Louis: Concordia Publishing House, 1988), 144. [5]இவ்வாக்கியத்தில் "ஆல்" என்பது "ஆகையால்" என்று அர்த்தப்படுகிறது. [6]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 384, 431; W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 474, 284. [7]இவ்விடத்தில் எதிர்கால வினைச்சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதால் கிறிஸ்துவின் மறுவருகையின்போது நமது உயிர்த்தெழுதல் என்ற விஷயத்தைப் பவுல்

தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று பல எழுத்தாளர்கள் நம்புகின்றனர்; ஆனால் சந்தர்ப்பப்பொருளானது, நாம் ஞானஸ்நானத் தண்ணீரிலிருந்து எழுப்பப்படுதல் என்ற கருத்திற்கே ஆதரவாக உள்ளது. ஒருவேளை இவ்வார்த்தையானது, நாம் ஞானஸ்நானம் பெறும்போது, புதிய ஜீவனுள்ளவர்களாக நடந்துகொள்ளும்படிக்கு உயிர்ப்பிக்கப்படுதலின் நிச்சயத்தை வலியுறுத்துவதாக இருக்கலாம். [8]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 176. [9]D. Stuart Briscoe, *Mastering the New Testament: Romans,* The Communicator's Commentary Series (Dallas: Word Publishing, 1982), 135. "A.D." stands for the Latin phrase Anno Domini ("in the year of [our] Lord"). [10]Adapted from Burgess, 55.

[11]Vine, 3. [12]*"விடுதலையாக்கப்பட்டிருத்தல்" என்பது "நீதிமானாக்கப்படுதல்" என்பதற்கான கிரேக்க வார்த்தையிலிருந்து வந்துள்ளது. நீதிமன்றத்தில் "நீதிமானாக்கப் பட்ட" ஒருவர் ("குற்றமற்றவர்" என்று கண்டறியப்பட்டவர்) விடுதலையாக்கப்படுகிறார்.* [13]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 252, n. 43. [14]Bruce Barton, David Veerman, and Neil Wilson, *Romans,* Life Application Bible Commentary (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1992), 118. [15]Vine, 445. [16]Jim Townsend, *Romans: Let Justice Roll* (Elgin, Ill.: David C. Cook Publishing Co., 1988), 44. [17]James R. Edwards, *Romans,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1992), 164. [18]Vine, 417. *"சாவுக்கேதுவான" என்ற வார்த்தையில் பின்வரும் மறைபொருள் இருக்கலாம்: "சரீரமானது எப்படியும் மரிக்கத்தான் போகிறது, அப்படி யிருக்கும்போது சரீரத்தையும் அதன் இச்சைகளையும் பூர்த்திசெய்வது ஏன்?"* [19]*The Analytical Greek Lexicon,* 156, 197. [20]Vine, 384.

[21]*The Analytical Greek Lexicon,* 310. [22]*உடலின் பல்வேறு உறுப்புகள் பாவம் செய்வதில் எவ்வாறு பயன்படுத்தப்படக்கூடும் என்பதற்கு உதாரணங்களைக் கொடுக்க நீங்கள் விரும்பலாம்.* [23]Edwards, 165. [24]Vine, 329, *பிற்பாடுள்ள ரோமர் 6:23ன் "கூலி" என்ற வார்த்தையின்மீதான விளக்கங்களைக் காண்க.* [25]William Barclay, *The Letter to the Romans*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 87. [26]J. D. Thomas, *Romans,* The Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1965), 44. [27]Jim McGuiggan, *The Book of Romans*, Looking Into The Bible Series (Lubbock, Tex.: Montex Publishing Co., 1982), 201. [28]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 200. [29]R. C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 56.